# பண்டைய மட்டக்களப்பு வரலாற்றில் அக்கரைப்பற்றும் தமிழரும் [ ஆய்வு ]

[ கி.மு. 900 - கி.பி. 1946 வரை ]

கலாபூஷணம், ஆய்வார்வலர்
நா. நவநாயகமூர்த்தி
( தொல்லியலாளர், இந்துசமய நூலாசிரியர் )

ஜீவாதார சித்த வித்தியா அறக்கட்டளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டைய மட்டக்களப்பு வரலாற்றில் அக்கரைப்பற்றும் தமிழரும் (ஆய்வு)

## (கி.மு. 900 - கி.பி. 1946 வரை)

## பாகம் I, பாகம் II


'கலாபூஷணம்' 'ஆய்வார்வலர்'

நா. நவநாயகமூர்த்தி

(தொல்லியலாளர். இந்து சமய நூலாசிரியர்)



வெளியீடு:

2022





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதிப்புத் தரவுகள்


| | |
|---|---|
| **நூலின் பெயர்** | : பண்டைய மட்டக்களப்பு வரலாற்றில் அக்கரைப்பற்றும் தமிழரும் |
| **வகை** | : வரலாறு (ஆய்வு இலக்கியம்) |
| **உரிமை** | : நூலாசிரியருக்கே |
| **ஆசிரியர்** | : 'ஆய்வார்வலர்' நா.நவநாயகமூர்த்தி 0772729641 |
| **மொழி** | : தமிழ் |
| **பிரதிகள்** | : 500 |
| **பக்கங்கள்** | : xxiii + 336 |
| **கணனி வடிவமைப்பு, அச்சுப் பதிப்பு, அட்டை வடிவமைப்பு** | : துர்க்கா அச்சகம், கொக்குவில், மட்டக்களப்பு. 065 205 3060 |
| **சரவை நோக்கு** | : திரு.எஸ்.புண்ணியமூர்த்தி |
| **வெளியிட்ட நாள்** | : ஐப்பசி 2022 |
| **விலை** | : 1300/= |
| **வெளியீடு** | : ஜீவாதார சித்த வித்தியா அறக்கட்டளை அக்கரைப்பற்று, இலங்கை |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம் பக்

### பாகம் -I

1. ஆசிச்செய்தி.....................................................................................
2. வாழ்த்துரை.....................................................................................
3. மதிப்புரை .....................................................................................
4. அணிந்துரை.....................................................................................
5. என்னுரை.....................................................................................
6. வெளியீட்டுரை.....................................................................................
7. பண்டைய கருங்கொடித்தீவும் பூர்வகுடியினரும்.............................. 03
8. அனுராதபுரி தமிழ் அரசர்கள் ஆட்சிக் காலத்தில்............................ 27
9. கி.பி 9ம் ஆண்டு சோரநாகன் காலம் தொடக்கம் கி.பி 325ல் மகாசேனன் ஆட்சிக்கு வந்த காலம் வரை மட்டக்களப்பு தமிழ்ச் சிற்றரசர் ஆட்சியில் அக்கரைப்பற்று..................................................................................... 34
10. மகாசேனன் ஆட்சிக் காலத்தில் நிகழ்ந்த மதரீதியான வன்முறைகளும் அக்கரைப்பற்று பிரதேசமும்.................................... 51
11. கி.பி நாலாம் நூற்றாண்டு தொடக்கம் கி.பி 1215ம் ஆண்டு வரையுள்ள காலத்தில்.......................................................... 62
12. கலிங்க மாகனின் படையெடுப்பும், இடப்பெயர்வும்............................ 83
13. கி.பி1310 - 1450 வரையுள்ள யாழ்ப்பாண மன்னர் காலத்தில் வன்னியர் ஆட்சியில் அக்கரைப்பற்று............................ 105
14. கி.பி 1450ம் ஆண்டு தொடக்கம் 1500 வரையுள்ள காலத்தில் அக்கரைப்பற்று........................................................... 121
15. கி.பி பதினாறாம் நூற்றாண்டில் (கி.பி1500 - 1600) வரை)................ 130

### பாகம் -II

1. அக்கரைப்பற்று தோற்றப் பின்னணி................................................ 151
2. கண்டி மன்னன் இரண்டாம் இராசசிங்கன் காலம் (கி.பி1638 - 1660 வரை)................................................................ 163
3. ஒல்லாந்தரின் மேலாதிக்கமும் கண்டி மன்னனின் செல்வாக்கும் (கி.பி 1660- 1687)............................................. 172
4. ஒல்லாந்தர் மேலாதிக்கத்தின் கீழ் வன்னியர் ஆட்சி (கி.பி 1688 - 1765)........................................................................ 183
5. ஒல்லாந்தரது ஆட்சிக் காலத்தில் (கி.பி 1766 - 1795 வரை)........................................................................ 209
6. ஆங்கிலேயர் ஆட்சியில் (கி.பி 1796 - 1830)......................................... 224
7. ஒற்றையாட்சியின் கீழ் அக்கரைப்பற்று மாகாணம்................................ 236
8. கி.பி 1900ம் ஆண்டு தொடக்கம் 1925ஆம் ஆண்டு வரை அக்கரைப்பற்று மாகாணம்.......................................................... 259
9. கி.பி 1925ம் ஆண்டு தொடக்கம் 1946ஆம் ஆண்டு வரை அக்கரைப்பற்று........................................................................ 277
10. கருங்கொடித்தீவு என்ற அக்கரைப்பற்று நகரும் தமிழர் நாகரீகம் செழித்திருந்த அக்கரைப்பற்று பகுதியும் கி.பி 1930 - 45,46 களில்..................................................................... 297
11. ஊர்ப்போடியார்................................................................................ 327
பின்னிணைப்பு................................................................................ 334
நன்றிக்குரியவர்கள்................................................................................ 335



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"In the fragrance of the gentleness of Christ"*

**RT. REV. DR. JOSEPH PONNIAH - BISHOP OF BATTICALOA**

**BATTICALOA DIOCESE**

# ஆசிச்செய்தி

புதிய புதிய நூல்களைப் படைப்பதிலே பலருக்கும் ஆர்வம் குறைந்து வரும் இக்கால கட்டத்திலே ஈழத்தமிழர் வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு, அதுவும் கிழக்கிலங்கைத் தமிழரின் வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு கிழக்கு மாகாணத்தின் மிகச்சிறந்த வரலாற்றாசிரியர்களுள் ஒருவராக முத்திரை பதித்துள்ள ''ஆய்வார்வலர்'', ''கலாபூஷணம்'' திரு.நா.நவநாயகமூர்த்தி அவர்களின் கைவண்ணத்தில் உருவான மற்றுமொரு நூலான ''பண்டைய மட்டக்களப்பு வரலாற்றில் அக்கரைப்பற்றும் தமிழரும்'' (ஆய்வு) என்ற நூலை இரு பாகங்களாகப் படைத்து வழங்குவதற்கு ஆசியுரை கூறி வாழ்த்துவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

ஆசிரியர் இது போன்ற பல வரலாற்று நூல்களை படைத்து கிழக்கு மாகாணத்தின் பழம்பெருமையை அறியாதவர்களை விழித்தெழச் செய்திருக்கின்றார். கிழக்கு மண்ணில் பிறந்திருந்தாலும், பல நூற்றாண்டுகள் வாழ்ந்து சென்றிருந்தாலும் இம்மண்ணின் அருமை பெருமை அறியாது கிணற்றுத் தவளைகள் போல் வாழ்பவர்கள், வாழ்ந்தும் மண்ணில் அக்கறை அற்று வாழ்பவர்களை என்ன சொல்லி அழைப்பது? கிழக்கு மண்ணின் பெருமையை மூடி மறைக்கும், வரலாற்றையே மாற்றியமைக்கும் பல துரோகிகள் உயிர்த்துடிப்புடன் செயல்படும் இக்காலகட்டத்தில் துணிவுடன் செயல்பட பல சவால்களை முன் வைக்கும் திரு.நா.நவநாயகமூர்த்தி அவர்களின் இவ்வரிய படைப்பானது எம் எதிர்காலச் சந்ததியினருக்கு ஒரு களம் படைக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னாரின் படைப்பானது கிழக்கு வாழ் தமிழர் மட்டுமல்ல, உலகம் முழுவதும் பரந்து வாழும் தமிழர் அனைவரும் வாசித்து அறிய வேண்டிய ஒரு நூலாக, தமிழினத்தின் வரலாற்றை மூடி மறைக்க முயன்று கொண்டிருக்கும் ஒற்றர்களின் மறைமுகமான செயற்பாடுகளை வெளிச்சத்துக்குக் கொண்டு வரும் நூலாக இப்படைப்பு பலருக்கும் புத்தெழுச்சியூட்டும் ஒளி விளக்காக அமையும் என்பதில் ஐயமில்லை. ஆசிரியரின் நற்பணியை பாராட்டுவதோடு மேலும் அவரின் நற்பணி தொடரவும் இறையாசிர் வேண்டி விடைபெறுகின்றேன்.

P. Joseph

**பேருட்தந்தை யோசப் பொன்னையா**
**மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர்**
**15.10.2022**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வை.இ.எஸ் காந்தன் குருக்கள்

# வாழ்த்துரை

நவநாயகமூர்த்தி எனும் - அன்பர்
நல்லதொரு பண்பாளர்
எத்துறையிலும் ஆழமானவர் அகலமானவர்
ஆழ்ந்த அன்புள்ளவர்
அனைவரையும் நேசிக்கும்
நெஞ்சமுடையவர்
அக்கரைப்பற்று மண்ணின்
ஆழம் பார்த்தவர்
அதன் நோக்கங்களைத் தேடி
அலைந்து சேகரித்தவர்
தம்பிலுவில் மண்ணின் மைந்தனாக
பனங்காடு உறையும் இல்லத்தவராக
வாழ்ந்து கொண்டிருப்பவர் - ஆனால்
அவரின் மனத்தாகம்
கிழக்கிலங்கைத் தமிழையும்
தமிழகத்தையும்
வெளிக்கொணர்வதில் - பெரு
விருப்பமும் பேரவாவும் கொண்டவர்

மட்டக்களப்புத் தமிழகம்
பெருவரலாற்றைத் தனக்குள் கொண்டது
வெருகல் கங்கை தொடக்கம்
மாணிக்க கங்கை வரை
பரந்துபட்ட பெரும் பூமி
தமிழகத்தைப் போல்
மட்டக்களப்புத் தமிழகத்திலும்
ஆறுபடை வீடுகளுண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெருகலம்பதி, சித்தாண்டி, கோயிலூர் சித்திரவேலாயுதர்
தில்லை மண்டூர், திருக்கோவில், உகந்தை என்பன அவை.
இத்தகைய முருகப் பெருமானின்
தனித்தமிழ் வழிபாடுடைய
வேல் வழிபாடு நிறைந்திருக்கும் பூமி

இத்தகைய நீண்ட - பக்தி
வணக்கத்தையும் - வடமொழி
அற்ற தனித்தமிழ் வழிபாட்டையும்
தன்னகத்தே கொண்ட
ஆறுபடை வீடுகளும்
அம்மன் சடங்கு வழிபாடும்
தன்னகத்தே கொண்ட நிலம்
மட்டக்களப்புத் தமிழகம்

இந்த மண்ணின் அடிவேர்களை
தோண்டி ஆராய்ந்து
தொன்மங்களைத் தேடிப்பார்த்த
அன்பர் நவநாயகமூர்த்தி அவர்களின்
தனித்துவம், ஆத்மார்த்த ஆசை
இப்படைப்பு
பெரும் பேராசிரியர்கள் பல்கலைக்கழக மட்டத்தில்
ஆராய்ந்து வெளிப்படுத்த வேண்டிய
விடயங்களை
திருக்கோவில் கந்தவேளின்
திருவருள் துணையாலும்
தம்பிலுவில் சிலம்பரசியின் கருணையாலும்
பனங்காட்டூரான் பாசுபதேசுவரரின் பேரருள் ஆசியாலும்
நவநாயகமூர்த்தி எனும்
இந்த மூர்த்தத்திற்குள்
''நவம்'' என்றால் புதுமை
இந்த நவத்துள் ஆயிரம் புதுமைகளை
இத்தெய்வங்களின் திருவருள் - பழுதின்றி
இவரைப் பயன்படுத்துகின்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவரை எத்தனையோ கஷ்ட மத்தியிலும்
பதினொரு நூல்களை வெளிக் கொணர்ந்திருக்கின்றார்
இது நூல்களைப் படிப்போருக்கு
இலகுவாகவும் தெளிவாகவும் தெரியும் - ஆனால்
இவரின் தேடலும் பட்ட கஷ்டமும்
இவரைச் சார்ந்தோருக்கும் - இவரின்
குடும்ப உறவுகளுக்கும் மட்டுமே இரகசியம்
ஆனால் அடியேன்
இவரைப் பார்த்த போது கண்ட உண்மை
இவருக்கு ஓர் ஆத்ம சக்தி
உள்ளிருந்து வழிகாட்டுகின்றது.
ஒரு பெரிய வரலாற்று ஆசிரியரை
தனக்குள் இவர் வைத்திருக்கின்றார் - எல்லாம்
முருகன் வழிகாட்டுவான் என்ற முனைப்போடு
தன் பணியைத்தானே செய்து கொண்டிருக்கின்றார்

''அறிவு என்பது ஆளுமையின்றி அறியாமைக்கு
கீழ்ப்படிந்து அடங்கப்படாதது'' என்பதற்கொப்ப
இவரின் அறிவு படித்த சமூகத்தையும்
பண்பாடுள்ள சமூகத்தையும் ஆள்கின்றது - ஆனால்
போலித்தனமான அறியாமைக்கு
கீழ்ப்படிந்து அடங்கப்படுவதல்ல
அத்தகைய உயர்வான
உண்மை கலந்த உணர்வு கொண்ட
நிறைவாளர் அன்பர் நவநாயகமூர்த்திக்கு
பெருஞ்செல்வத்தை தர வேண்டும் - அதுதான்
தேடலும் தேட்டமும் என நினைக்காமல்
தமிழர்கள் தற்காலம்
மறந்தும், மறைந்தும் போகின்ற
வரலாற்றுப் பெருமைகளை
கவனமாக எழுதி
ஆவணப்படுத்துகின்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு ஸ்தாபனம் செய்ய வேண்டிய - பெரும்
ஆவணப்பணியை
தனிநபராக இருந்து அன்பர்
நவநாயகமூர்த்தி அவர்கள்
செய்கின்றார் - இதைப்
பார்க்கின்ற நம்மவர்களின்
தெளிவற்றோர்
புரிந்தும் புரியாமலும் புலம்புவார்கள்
தெரிந்தும், தெரியாமலும் சொல்லித்திரிவார்கள்
அவர்களின் பேச்சு
செப்படி வித்தை போல் சிதைந்து போகும் - ஆனால்
அன்பர் கலாபூஷணம் நவநாயகமூர்த்தி - செய்த
இந்தப்பணி காலத்தால் அழியாது
சூரியன் பிரகாசிப்பது போல்
நவநாயகமாக துலங்கிப் பிரகாசிக்கும் - என்பது
அடியேனின் எண்ணம் நிறைந்த உறுதியாகும் - என்பதை
கூறிக்கொள்ள விரும்புகிறேன்

தற்பொழுது இந்த வடமொழி மாயை
எல்லா வகையிலும் எம்மை ஆட்டி வைக்கின்றது
அந்த வகையில் ஆசியுரையின்
சரியான தமிழ் வடிவம்
வாழ்த்துரை ஆகும்
ஆசீர்வாதம், ஆசிவழங்குதல் என்பதெல்லாம்
வடமொழி சார்ந்த சொற்களே - ஆ
அடியேனுரையை வாழ்த்துரையாகவே
எழுதி மகிழ்கின்றேன்
அன்பர் நவநாயகமூர்த்தி அவர்கள்
நீண்ட ஆயுளோடும் - நிறைபெரும்
செல்வமாகிய அறிவுச் செல்வத்தோடும்
பிள்ளைகளின் பெருவளர்ச்சியோடும்
பேராதரவோடும்
''மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம் - ஆனால்
மனைவி அமைவதெல்லாம் இயமன் கொடுத்த வரம்''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதற்கொப்ப - ஒரு கவிஞனை எழுத்தாளனை
வாழ்க்கைச் சுமையாகப் பார்க்காமல் - அவ்
எழுத்தாளனை அன்புச் சுமையாக, அறிவுச் சுமையாக
தன்னிதயத்தில் ஏற்ற அன்னாரின்
அன்புத்துணைவியார் அவர்களும் பிள்ளைகளும்
பேரக்குழந்தைகளும் அன்பர் அவர்கட்கு
எப்போதும் எல்லா வகையிலும்
உதவியாகவும், உறுதுணையாகவும்
இருந்து பணி செய்கின்ற நிறைந்த
அன்புள்ளங்களுக்கும் - என்
மனப்பூர்வமான வாழ்த்துகள்
அன்பர் நவநாயகமூர்த்தி அவர்களின்
எழுத்துப்பணி, வரலாற்று ஆவணப்பணி
பேராறு போல் பெருக்கெடுத்து பீறிட்டுப் பாயட்டும்
என்று அடியேனை வழி நடத்துகின்ற என்தாய்
அன்னை கண்மணியையும், அன்னை காளிகாம்பாளையும்
மனம், மொழி, மெய்யால்
வணங்கித் துதிக்கின்றேன்
இறையருள் துணை புரிக.

**அருட்கவியரசு பண்டிட்**
**ஆச்சார்ய விஷ்வப் பிரம்மம்**
**வை.இ.எஸ்.காந்தன் குருக்கள்**
**ஸ்ரீ காளிபுரம், பெரியபோரதீவு**
**15.10.2022**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதிப்புரை

தமிழர், இலங்கையின் பூர்வீக குடியினர். ஒரு காலத்தில் அவர்கள் இலங்கை முழுவதிலும் பரந்திருந்தார்கள் என்பதற்கு 'மகாவம்சம்' முதலான நூல்களிலே சான்றுகள் உண்டு. இலங்கை தென்னிந்தியாவின் ஓரத்திலே அமைந்த ஒரு தீவு ஆகையால் காலத்துக்குக் காலம் தமிழர் குடியேற்றங்கள் இங்கு நிகழ்ந்தமை இயல்பானதே.

இந்தியாவின் வடபிரதேசம் ஒன்றிலிருந்து நாடுகடத்தப்பட்டு நெடுங்கடல் கடந்து இலங்கைக்கு வந்த விஜயனும் அவனது நூற்றுக்கணக்கான நண்பர்களும் தென்னிந்தியாவில் பாண்டியர் குலத்துப் பெண்களையே மிக நயந்து வேண்டித் திருமணம் செய்தார்கள் என்றும் அப்பெண்களோடு கூடவே பதினெட்டு வகைத்தொழில் புரியும் குடிகள் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டன என்றும் 'மகாவம்சம்' கூறுகிறது.

காலத்துக்குக் காலம் தமிழ்நாட்டுப் பேரரசர்கள் படையெடுத்து வந்து இலங்கையில் தமது குடியேற்றங்களை நிறுவினார்கள். மீன்பிடி, முத்துக்குளிப்பு, கைத்தொழில், கல்வி முதலானவற்றின் நிமித்தமும் காலத்துக் காலம் இலங்கை சுதந்திரம் அடையும்வரை தமிழ்நாட்டிலிருந்தும் மலையாளத்திலிருந்தும் கணிசமானவவர்கள் இலங்கையில் குடியேறினார்கள்.

இலங்கையின் வடக்கு, கிழக்கு, மேற்கு கரையோரங்கள் தென்னிந்தியாவுக்கு நெருக்கமானவையாக விளங்கியதால் அப்பிராந்தியங்களிலே தமிழர் குடியிருப்புக்கள் செறிந்து காணப்பட்டன. அவ்வாறாக தமிழர் செறிந்து வாழ்ந்த பிரதேசங்களுள் ஒன்றாகவே கிழக்கிலங்கையின் தென் பகுதியை ஒட்டியதாக அமையப்பெற்ற அக்கரைப்பற்று விளங்குகிறது.

பண்டைக்காலம் முதலாக சமய நோக்கிலும் அக்கரைப்பற்று கிழக்கிலங்கைத் தமிழர்கள் மாத்திரமன்றி வடஇலங்கைத் தமிழர்களும் ஊடாடுகின்ற பிரதேசமாக விளங்கியது. அக்கரைப்பற்றை அடையாது முருக பக்தர்களின் கதிர்காம யாத்திரை முற்றுப்பெறுவதில்லை. அங்கணாமக்கடவையூடாக வந்தடைந்த கண்ணகி வழிபாடு அக்கரைப்பற்று ஊடாகவே இலங்கை எங்கணும் பரவியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையைக் கைப்பற்றி ஆண்ட ஐரோப்பியரும் பிறநாட்டுப் பயணிகளும் எழுதிவைத்த குறிப்புகளும் இலங்கையில் தமிழரின் வியாபகம்பற்றி விவரிக்கின்றன. ஆங்கிலேயர் ஆட்சிக்கால முடிவு வரையில் கிழக்கே பொத்துவில் தொடக்கம் வடக்கு ஊடாக மேற்கே நீர்கொழும்பு வரையிலான கரையோரப் பிராந்தியங்களும் அவற்றை ஒட்டிய உட்பகுதிகளும் தமிழர் வியாபித்திருந்த பிராந்தியங்கள் என்பதற்குச் சான்று கூறும் புள்ளிவிபரங்களை அவற்றிற் காணக்கூடியதாய் உள்ளது.

தமிழ்ச் சமுதாயத்தின் விழிப்புணர்வில்லாத் தன்மையும் தீர்க்கதரிசனமின்மையும் சார்ந்ததன் வண்ணமாகும் இயல்பும் காரணமாக தமிழர் தொகை இந்நாட்டில் கணிசமான அளவில் குறைந்து வந்துள்ளது. நீர்கொழும்பில் இருந்த தமிழ் பேசும் இந்துப் பரதவர்கள் மிகக் குறுகிய காலத்துக்குள் சிங்களம் பேசும் கத்தோலிக்கர்களாகத் திட்டமிட்டு மாற்றப்பட்டார்கள். மிதமிஞ்சின குடிப்பழக்கம், வறுமை, கலப்பு மணம் முதலானவை காரணமாகவும் கணிசமான அளவில் வேறுவேறு சமூகத்தவர்களாக மாறும் நிர்ப்பந்தத்துக்கு அவர்கள் ஆளானார்கள்.

காலகதியில் உள்நாட்டு யுத்தமும் பெருந் தொகையானவர்களைப் புலம்பெயரச் செய்து உள்நாட்டில் பலங்குன்றிய ஒரு சமூகமாக தமிழ்ச் சமூகத்தை மாற்றிவிட்டது. கடும் வீறாப்பு, விலைபோதல், காட்டிக்கொடுப்பு முதலானவையும் தமிழர் பலத்தை பாரிய அளவில் வலிகுன்றச் செய்தது. இவ்வாறான நிலையில் 'முந்திவந்த காதை பிந்திவந்த கொம்பு மறைக்கும் நிலமை' ஏற்பட்டுவிட்டது. இப்போதுதான் நாம் ஓடி விழித்துள்ளோம்.

வரலாற்றாய்வாளரும் இனவுணர்வாளரும், நியாயஸ்தருமான திரு.நா.நவநாயகமூர்த்தி போன்றவர்கள் காலத்துக் காலம் தமிழர் இருப்புத் தொடர்பில் குரல்கொடுத்தே வந்தார்கள். ஆனால் தமிழர்கள் தத்தமது அன்றன்றைய பிரச்சினைக்குத் தீர்வு காண்பதிலே கரிசனை காட்டினார்களே அல்லாமல் சமுதாய ரீதியில் தீர்க்கதரிசனத்தோடு சிந்தித்துச் செயற்படவில்லை. உள் நாட்டில் வாழமுடியாது என்று சொல்லி உலகெங்கும் சென்று தனிமனிதர்களாக உழைத்துப் பணம் தேடுவதிலே காட்டிய அக்கறையை உள்நாட்டிலே இருந்தபடி உத்வேகத்தோடு போராடுவதிலே காட்டவில்லை. அவர்களுடைய சந்ததியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருங்காலத்தில் தமிழ் அறியாதவர்களாகி தமிழர் என்ற உணர்வுமற்றவர்களாகி விடுவார்களோ என்ற அச்சமே தலை தூக்கியுள்ளது. பெரும்பாலான தமிழர்கள் வரலாற்றுணர்ச்சி அரசியல் அறிவு, சமுதாய நோக்கு உடையவர்களாக தங்கள் சந்ததியை வளர்க்கக் கரிசனை கொள்ளவில்லை.

அதிர்ஷ்டவசமாக, வரலாற்றாய்வாளர் நா.நவநாயகமூர்த்தி போன்ற ஒரு சிலராவது நம்மத்தியில் இருக்கிறார்கள். நவநாயகமூர்த்தியவர்கள் பல நூல்களையும் ஆராய்ந்து சான்றுகளைத் தேடி, மிகுந்த முயற்சியோடு 'பண்டைய மட்டக்களப்பு வரலாற்றில் அக்கரைப்பற்றும் தமிழரும்' என்ற இந்த நூலை ஆக்கியுள்ளார். தமிழ்ச் சமுதாயத்திற்கு அதன் உண்மை வரலாற்றை உணர்த்தும் விடயத்தில் ஆசிரியர் எவ்வளவு அக்கறை கொண்டாரோ அதைவிட மேம்பட்டதாக, அக்கரைப்பற்றுத்தமிழர்கள் அக்கறை கொண்டுள்ளமை மகிழ்ச்சியையும் எதிர்காலம் பற்றிய நம்பிக்கையையும் தருவதாகும்.

நூல் வெளியீடு என்பது 'முயற்கொம்பு' ஆகிவிட்ட இன்றைய பொருளாதார நெருக்கடிக்குள்ளும் அவர்கள் முன்னெடுக்கின்ற இந்த முயற்சி அவர்களது சமூக நோக்கைக் காட்டுவதாகும். அதே அளவு அக்கறை இத்தகு நூல்களைப் படிக்கவேண்டும், இத்தகு முயற்சிகளுக்கு ஆதரவு நல்கவேண்டும் என்னும் விடயங்கள் பிறருக்கும் ஏற்படும் போதே நம் சமுதாயத்தின் எதிர்காலம் தொடர்பில் பூரண நம்பிக்கை கொள்ளமுடியும்.

சலசலப்புக்கு அஞ்சாத பனங்காட்டவரான அறிஞர் நா.நவநாயகமூர்த்தியவர்களுக்கு அமையும் ஆரோக்கியமான நீண்ட வாழ்வு உலகுக்குப் பயன்செய்வதாக!

**கலாநிதி. க.இரகுபரன்**

**மொழித்துறை**

**தென்கிழக்குப் பல்கலைக்கழகம்**

**15.10.2022**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

## அரியதொரு வரலாற்று ஆவணம்

கடந்த முப்பது ஆண்டுகால தனது வாழ்க்கைப் பயணத்தில் வரலாற்று ஆய்வாளர், நூலாசிரியர், பாடலாசிரியர், கவிஞர் என அகலக் கால்பதித்து தமிழர்கள் மத்தியில் தனக்கென தனி முகவரி தேடிக் கொண்டிருக்கும் கலாபூஷணம் நா.நவநாயகமூர்த்தி அவர்கள் தனது பதினொராவது படைப்பாக வெளியிட்டிருக்கும் ''பண்டைய மட்டக்களப்பு வரலாற்றில் அக்கரைப்பற்றும் தமிழரும்'' என்ற நூலுக்கு அறிமுகவுரை வழங்குவதையிட்டு மிக்க மனமகிழ்வடைகின்றேன். இலங்கையின் நீண்டகாலத் தொல்லியல் வரலாற்று ஆய்வில் அதிகம் கவனத்திற் கொள்ளப்படாத பிராந்தியமாக மட்டக்களப்புத் தேசம் காணப்பட்டிருந்தாலும், அம்மண்ணையும், மக்களையும் அவர்களின் தனித்துவமான வாழ்வியற் கோலங்களையும் அடையாளம் கண்டு, ஆராய்ந்து ஆவணப்படுத்துவதில் ஈடுபட்ட பலரின் பங்களிப்பினை நாம் மறப்பதற்கில்லை. அவர்களில் ஒருவராகப் பார்க்கப்படும் இந்நூலாசிரியர் திரு.நா.நவநாயகமூர்த்தி அவர்கள் இந்நூலை ஆக்குவதில் வட்டார வழக்கில் உள்ள வாய்மொழி வரலாற்றுக் கதைகள், செவிவழிச் செய்திகள், நம்பிக்கைகள், பாளி, சிங்கள இலக்கியங்கள், மட்டக்களப்பு தேசத்தை மையப்படுத்தி எழுந்த வரலாற்று நூல்கள், ஐரோப்பியர் கால ஆவணங்கள், வரலாற்றுக் குறிப்புகள், தொல்பொருட் சின்னங்கள், களவாய்வு என்பவற்றைப் பயன்படுத்தி இந்நூலைப் படைத்திருப்பதை இந்நூலுக்குரிய சிறப்பம்சமாகப் பார்க்கின்றேன்.

ஒரு நாட்டின் அல்லது ஒரு பரந்த பிரதேசத்தின் வரலாற்றை முழுமையாகப் பார்க்கப்படுவதைவிட அவற்றை வட்டார அடிப்படையில் பார்க்கப்படும் ஆழமான ஆய்வுகள் அண்மைக்காலங்களில் பலரின் பாராட்டைப் பெற்று வருவதைக் காண முடிகின்றது. இதற்கு பரந்த அளவிலான வரலாற்று ஆய்வுகளில் சொல்லப்படாத வரலாற்று உண்மைகள் வட்டார அடிப்படையிலான ஆழமான ஆய்வுகளில் இருந்து வெளி வருவதே காரணமாகும். இதற்கு இந்நூலும் சிறந்த சான்றாக அமையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது எனது நம்பிக்கையாகும். மட்டக்களப்பு தேசத்து தமிழ் மக்களுக்கு 2500 ஆண்டுகளுக்குக் குறையாத தொன்மையான தொடர்ச்சியான வரலாறு இருப்பதை 1981 இல் கிழக்கிழங்கைப் பல்கலைக்கழகம் உருவாக்கப்படுவதற்கு முன்னரும், பின்னரும் அமரர் தங்கேஸ்வரி, பேராசிரியர் சி.பத்மநாதனும் இப்பல்கலைக்கழக வரலாற்றுத்துறை ஆசிரியர்களும், மாணவர்களும், பிறதுறை வரலாற்று மாணவர்களும் மேற்கொண்ட தொல்லியல் ஆய்வுகளில் இருந்து தெரியவருகின்றது.

அண்மையில் கிழக்கிலங்கைப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி.கௌரி லக்சுமிகாந்தன் தனது பட்ட மேற்படிப்பிற்காக மேற்கொள்ளப்பட்ட கிழக்கிலங்கைப் பிராமிச் சாசனங்கள் பற்றிய ஆய்வின் மூலம் இற்றைக்கு 2300ஆண்டுகளுக்கு முன்னரே மட்டக்களப்பில் வழக்கிலிருந்த தமிழ்மொழி, தமிழ் எழுத்து, தனிநபர் பெயர்கள் உறவுமுறைகள், சிற்றரசுகள், அரசபட்டப் பெயர்கள், சமூகப் பிரிவுகள், தொழிற்பிரிவுகள், சமய நம்பிக்கைகள், இடப்பெயர்கள் முதலியன தமிழருக்குரியதென்பதை ஆதாரங்களுடன் உறுதிப்படுத்தியுள்ளார்.

வரலாற்று நம்பகத்தன்மையுடைய கல்வெட்டுக்களால் அறியப்பட்ட இந்த செய்திகள் பல உண்மையென்பதை அவ்வரலாற்றுத்துறையின் இன்னொரு சிரேஷ்ட விரிவுரையாளரும், அத்துறையின் தலைவருமான திரு.கி.சிவகணேசன் தனது பட்ட மேற்படிப்பிற்காக மேய்கொண்ட மட்டக்களப்பு பூர்வசரித்திரம் பற்றிய ஆய்விலும் உறுதிப்படுத்தியிருப்பது இங்கு சிறப்பாக சுட்டிக்காட்டத்தக்கது. இப்பின்னணியில் நோக்கும்போது தற்போது நூலாசிரியர் கலாபூஷணம் நா.நவநாயகமூர்த்தி அவர்கள் எழுதிய வரலாற்று ஆய்வு நூல் எதிர்காலத்தில் மட்டக்களப்பு தேசம் பற்றிய ஆய்வுகளுக்கெல்லாம் முக்கிய மூலாதாரமாக இருக்கும் என நம்பலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி.மு.ஒன்பதாம் நூற்றாண்டு முதல் 1946ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியை உள்ளடக்கிய இந்நூல் பொதுப்பட மட்டக்களப்பு வரலாற்றையும், அக்கரைப்பற்றைச் சிறப்பாகவும் கொண்டு இரண்டு பாகங்களாக 26 இயலில் கூறப்பட்டுள்ளது. வன்னிச் சிற்றரசர்களின் ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்த மட்டக்களப்பு அல்லது மட்டக்களப்பு தேசம் என அழைக்கப்படும் இப்பிராந்தியம் 1961 வரை வடக்கே வெருகல் தொட்டு தெற்கே குமுக்கன் ஆறு வரையான பரந்த பிராந்தியத்தை உள்ளடக்கியிருந்த வரலாற்றைத் தெளிவாகக் கூறியிருக்கும் இந்நூலாசிரியர் பின்னர் அக்கரைப்பற்று தனியொரு நிருவாகப் பிரிவாகவும் அதற்குள் உருவான நிர்வாக அலகுகளையும் ஆழமாக ஆராய்ந்துள்ளார். அவற்றுள் அக்கரைப்பற்றின் பூர்வீக மக்கள், தமிழ்ச் சிற்றரசுகள், அனுராதபுரகால, பொலநறுவைகால, கலிங்கமாகன் கால, கண்டி அரசுகால, ஐரோப்பியர் கால அரசியல் வரலாற்றிற்கும் அக்கரைப்பற்று பிரதேசத்திற்கும் இடையிலான அரசியல் பொருளாதார, பண்பாட்டு உறவுநிலை பற்றியும் கூறியிருக்கும் வரலாற்றுச் செய்திகள் வரலாற்று ஆர்வலர்கள் பலருக்குப் புதிய செய்திகளாகக் காணப்படுகின்றன.

இவ் வரலாற்று செய்திகளுடன் அக்கரைப்பற்று மக்களிடையே மறக்கப்பட்டு வரும் மற்றும் மறைந்து வரும் அப்பிரதேச மக்களுக்குரிய தனித்துவமான பாரம்பரிய பண்பாட்டு அம்சங்கள் ஒவ்வொன்றையும் தனித்தனியாகக் குறிப்பிட்டு அவற்றின் வரலாற்றுத் தொன்மையையும் தொடர்ச்சியையும், தற்கால நிலை பற்றியும் எடுத்துக்காட்டியிருக்கும் வரலாற்று அணுகுமுறையும் வரலாற்றுப் பார்வையும் இந்நூலை மேலும் மெருகூட்டுவதாக உள்ளது.

இந்நூல் பலதரப்பட்ட வரலாற்று ஆர்வலர்களையும் கவரும் வகையில் வரலாற்று நெறிமுறைக்கு உட்பட்டு இலகு தமிழில் அழகாக எழுதப்பட்டிருப்பது இந்நூலுக்குரிய சிறப்பம்சமாகும். இத்தனைக்கும் இந்நூலாசிரியர் பல்கலைக்கல்வியில் பட்டம் பெற்றவரில்லை. ஆயினும் முப்பது ஆண்டுகால ஆய்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுபவத்தின் மொத்த வடிவமாக இந்நூல் வெளிவருவது பாராட்டுக்குரியது. இந்நிலையில் இந்நூலை எழுதுவதற்கு பின்புலமாக இருந்து அவரை ஊக்கப்படுத்திய அக்கரைப்பற்று வாழ் தமிழ் மக்களும், அழகாக இந்நூலை வெளியீடு செய்த ஜீவாதார அறக்கட்டளை அக்கரைப்பற்று அமைப்பும் அனைவரின் பாராட்டுக்கும் உரியவர்கள். இந்நூலாசிரியர் தேக ஆரோக்கியத்துடன் இருந்து மேலும் அவரது ஆய்வுப் பணி தொடர எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**ப.புஷ்பரட்ணம்**
**சிரேஷ்ட பேராசிரியர்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**
**15.10.2022**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

அம்பாரையை உள்ளடக்கியிருந்த பண்டைய மட்டக்களப்பு வரலாற்றினைத் திரிபுபடுத்தும் வகையில் அண்மைக்காலமாக சில ஆய்வாளர்கள் ஆக்கங்கள் எழுதி வருகின்றனர். இந்நிலையில் ''பண்டைய மட்டக்களப்பு வரலாற்றில் அக்கரைப்பற்றும் தமிழரும் என்ற எனது நூல் வெளிவருவது இக்கால இளந்தலை முறையினருக்கு மட்டுமன்றி வருங்காலத் தமிழ்பேசும் இளந்தலை முறையினரும் எமது பூர்வீக உண்மை வரலாற்றினை அறிய இந்நூல் பேருதவியாக அமையும் என்பது எனது நம்பிக்கையாகும்.

இந்நூலில், காலத்தால் மறைந்துபோன வரலாற்று உண்மைகள், இழந்துபோன தமிழர் பூர்வீக வாழ்விடங்கள், வயல்நிலங்கள், காணிகள், தோட்டங்கள், தொலைந்து போன கைமாறிய ஆட்சி அதிகாரங்கள், உரிமைகள் என்பன மட்டுமன்றி எம்மிடையே நிலவி வந்த சமூக கலாசார விழுமியங்கள், சடங்கு சம்பிரதாயங்களான பண்பாட்டுக் கோலங்கள் மற்றும் இலக்கியப் பாரம்பரியம் ஆகியன பற்றியெல்லாம் எனது காத்திரமான ஆய்வுத் தேடல்கள் வாயிலாகப் பெற்றுக் கொண்ட ஆதாரங்களின் அடிப்படையில் பதிவு செய்துள்ளேன்.

கி.மு. ஒன்பதாம் நூற்றாண்டு தொடக்கம் 1946ம் ஆண்டு வரையுள்ள கால பண்டைய மட்டக்களப்பு வரலாற்றினை சான்றுகளுடன் குறிப்பிடும் இந்நூல் பண்டைய இலங்கை வரலாற்றில் மட்டக்களப்பு பெற்றிருந்த முக்கியத்துவம் பற்றியும் அக்காலகட்ட அக்கரைப்பற்று பிரதேசத்தின் சமூக, சமய, அரசியல் நிலை பற்றியும், மக்கள் வாழ்வியல் பற்றியும் விபரமாக குறிப்பிடுகின்றது.

இதே வேளை, இந்நூலின் தோற்றப் பின்னணி பற்றிக் குறிப்பிடுமிடத்து குறிப்பாக அக்கரைப்பற்று பண்டைய வரலாறு பற்றிய நூல் ஒன்றை எழுதுமாறு கடந்த காலத்தில் சமூக ஆர்வலர் சிலர் என்னைக்கேட்டு வந்தனர். ஆயினும் நல்லெண்ணம் கொண்ட அவர்களது கோரிக்கையை ஏற்க என் மனம் தயங்கி வந்தது. இதற்கான காரணம் இப்பிரதேசத்தைச் சேர்ந்த ஒரு சிலரது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனங்களில் ஆழமாகப் பதிந்திருந்த உண்மை வரலாறு பற்றிய தெளிவின்மையும் அவர்கள் என்மீது கொண்ட நம்பிக்கையின்மையும் ஆகும். இதனால் சமூக ஆர்வலர்களின் விருப்பினை கருத்தில் கொள்ளாமல் தவிர்த்து வந்தேன்.

இந்நிலையில் கடந்த 2019ம் ஆண்டு பங்குனி மாதம் என்னை வந்து எங்கள் இல்லத்தில் சந்தித்த திரு.க.இரத்தினவேல் (ஓய்வுநிலைஅதிபர்), திரு.த.கைலாயபிள்ளை (இறைபணிச்செம்மல்), திரு.க.பேரின்பம் (முன்னாள் தவிசாளர்), திரு.வே.பாக்கியராசா (ஓய்வுநிலை தபால் அதிபர்) ஆகியோர், அக்கரைப்பற்று குறிப்பாக கருங்கொடித்தீவு, கோளாவில், ஆலையடிவேம்பு, பனங்காடு, கண்ணகிபுரம், அளிக்கம்பை உள்ளிட்ட அக்கரைப்பற்று பிரதேச வரலாற்றை எழுதுமாறு அன்பு கலந்த உரிமையுடன் கேட்டுக்கொண்டதுடன், இவ்வாறானதொரு பதிவு காலத்தின் கட்டாயம் எனவும் குறிப்பிட்டனர்.

இதனைத் தொடர்ந்து இவர்களது வேண்டுதலின் காரணமாக தற்போதைய அக்கரைப்பற்று பிரதேச பண்டைய வரலாறு பற்றி 2019ல் எழுதத் தொடங்கிய வேளை விரிவான முறையில் இதனை எழுதினால் தமிழ்பேசும் உறவுகள் அனைவருக்கும் பயனளிக்கும் என்ற நோக்கில் அம்பாரையை உள்ளடக்கியிருந்த பண்டைய மட்டக்களப்பு பற்றியும், இதில் உள்ளடங்கி நிலவியிருந்த தெற்கே சங்கமன்கண்டி முதல் வடக்கே காளியோடை வரை பரந்திருந்த பண்டைய அக்கரைப்பற்று பற்றியும் குறிப்பிட்டு 2021ம் ஆண்டு ஜனவரியில் இந்நூலினை எழுதி முடித்தேன்.

இதன் அடிப்படையில் இந்நூலில் மட்டக்களப்பு என்று குறிப்பிடப்படுவது 1961ம் ஆண்டு வரை கிழக்கிலங்கையில் நிலவி வந்த வடக்கே வெருகல் தொடக்கம் தெற்கே குமுக்கன் ஓயா வரையுள்ள கரையோரப் பிரதேசத்தையும் இதனை அண்டியுள்ள உட்பகுதிகளையும் உள்ளடக்கியிருந்த பண்டைய மட்டக்களப்பு மாவட்டத்தையாகும். இதே வேளை இந்நூலில் மட்டக்களப்பு நகர் மட்டக்களப்பு இராஜதானி (அரசு) என்றெல்லாம் குறிப்பிடும் இடம் தற்போதைய சம்மாந்துறைப் பிரதேசமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி.பி 1658ம் ஆண்டு வரையும், வாவியின் தென்பிரதேசமே மட்டக்களப்பு என்ற பெயரைப் பெற்றிருந்தது. மட்டக்களப்பு பழந்தமிழ் இலக்கியங்கள் இதனை உணர்த்தும். இப்பண்டைய மட்டக்களப்பு நகரினையே போர்த்துக்கீச வரலாற்றாசிரியர் குயிரோசு பாதிரியார் அக்காலத்தில் கிழக்கிலங்கையில் நிலவியிருந்த வன்னிச் சிற்றரசுகளில் பழுகாமம், திருமலை, கொட்டியார், பாணகை என்பனவற்றுடன் மட்டக்களப்பும் அடங்கும் என்று தனது 'இலங்கையின் சுருக்க வரலாறு' என்ற தனது நூலில் குறிப்பிடுகின்றார்.

இதேவேளை அக்கரைப்பற்று பிரதேசம் என்று இந்நூல் குறிப்பிடுவது அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று, ஆலையடிவேம்பு, திருக்கோவில் ஆகிய இன்றைய பிரதேச செயலகப் பிரிவுகளை உள்ளடக்கியதாக ஆங்கிலேயரது ஆட்சிக்காலத்தில் 1833ம் ஆண்டு தொடக்கம் 1941ம் ஆண்டு வரை வரையறுக்கப்பட்ட மாகாணமாக விளங்கி வந்த அக்கரைப்பற்று வன்னிமைப் பிரதேசமாகும்.

பண்டைய அக்கரைப்பற்று என்ற பெயர் கி.பி.1630ம் ஆண்டளவில் தோற்றம் பெற்று வன்னிச் சிற்றாட்சிப் பெயராக 1796ம் ஆண்டு வரை நிலவி வந்தது. இதனை போர்த்துக்கீச ஒல்லாந்த ஆவணங்கள் உறுதி செய்கின்றன. மேலும் மரபுரைகளும் இலக்கியச் சான்றுகளும் பரவணிக்கல்வெட்டும் இதனை உணர்த்தும். தெற்கே சங்கமன்கண்டி வரை வடக்கே காளியோடை வரை பரந்திருந்த இப்பிரதேசம் 1833ம் ஆண்டு தொடக்கம் 1941ம் ஆண்டு வரை ஆங்கிலேயரது ஆட்சிக்காலத்தில் அக்கரைப்பற்று வன்னிமைப் பிரிவாக நிலவி வந்தது.

1941ம் ஆண்டு தொடக்கம் இப்பண்டைய அக்கரைப்பற்று பிரதேசம், அக்கரைப்பற்று மத்தி, அக்கரைப்பற்று வடக்கு, அக்கரைப்பற்று தெற்கு என மூன்று உள்ளூராட்சி அலகுகளாக நிலவத்தொடங்கியிருந்தது. இம்மூன்று கிராமாட்சி அலகுகளை உள்ளடக்கியிருந்த பண்டைய அக்கரைப்பற்று பிரதேச வரலாற்றையே இந்நூல் விபரிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதே வேளை தேடல், சிந்தனை, பதிவு என்ற ஆய்வு ரீதியில் எழுதப்பட்ட இந்நூலானது பண்டைய அக்கரைப்பற்று பிரதேச வரலாற்றினை கூறும் முழுமையான நூல் என்று குறிப்பிடமுடியாது. எனது கல்வித் தகுதிக்குட்பட்ட தேடல்கள் வாயிலாகப் பெற்றுக்கொண்ட தகவல்கள், கைகளில் கிடைத்த எழுத்தாவணங்கள் ஆகியனவற்றை ஆதாரங்களாகக் கொண்டு சுருக்கமான முறையில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. இதனை உளந்திறந்து குறிப்பிடுகின்றேன்.

இந்நூலில் சில செய்திகள், சான்றுகள், ஆதாரங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் இடம்பெற்றுள்ளன. ஒரு விடயத்தின் தொடர்ச்சியான வரலாற்றை ஆய்வு என்ற வரையறைக்குள் எழுத்தாவணமாகப் பதிவு செய்யும் வேளை இவ்வாறு இடம்பெறுவது என்பது தவிர்க்கமுடியாததொன்றாகும். மேலும் சமத்துவம், சகோதரத்துவம் என்ற கொள்கை வரையறைக்குள் வாழ்ந்து வரும் நான் இனம், மொழி, சாதி என்ற வேறுபாடுகளுக்கப்பால் உள்ளதை உள்ளபடி உண்மைகளைப் பதிவு செய்யவேண்டும் என்ற இலக்கிலேயே இந்நூலை எழுதியுள்ளேன்.

ஆதலால் இப்பிரதேசத்தில் வாழ்ந்து வரும் மக்களுக்கு மட்டுமன்றி தேசியரீதியிலும் சர்வதேச ரீதியிலும், வாழ்ந்து வரும் தமிழ் பேசும் மக்கள் அனைவருக்கும் இந்நூல் சிறந்த பயனளிக்கும் என்பதில் ஐயமில்லை. நிறைவாக 'யானைக்கும் அடி சறுக்கும்' என்பார்கள். தவறுகள் இருப்பின் அறிஞர்கள் பொறுத் தருளுவது கடனாகும்.

வணக்கம்.

**ஆய்வார்வலர்**

**நா.நவநாயகமூர்த்தி**
**"வானதி பவனம்"**
**பனங்காடு**
**அக்கரைப்பற்று**
**15.10.2022**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டுரை

அன்பர் திரு.நா.நவநாயகமூர்த்தியவர்கள் நாடறிந்த எழுத்தாளர். நல்ல தமிழ்ப் பண்பாளர். பொறுமை, அன்பு, அடக்கம், பணிவு, எளிமை, இரக்கம் ஆகியன இவருடன் பிறந்தவைகள். இதனை இவருடன் நெருங்கிப் பழகியவர்கள் குறிப்பிடுகின்றனர். ஆய்வாளர், நூலாசிரியர், பாடலாசிரியர், கட்டுரையாளர், கவிஞர் எனப் பல பரிணாமங்களில் இவர் பரிமளித்து வருகின்றார்.

திருக்கோவில், தம்பிலுவில் பழம்பதியைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் ஆலையடிவேம்பு பிரதேசம் பனங்காடு கிராமத்தை வதிவிடமாகக் கொண்டவராவார்.

கடந்த முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக எழுதி வரும் இவர் இதனையே தனது தவமாக மேற்கொண்டு வருகின்றார். பல்கலைக்கழகம் செல்லாத பட்டம் பெறாத அவரது எழுத்தாளுமை தனித்துவமானது. மொழி, சமயம், கலை, பண்பாடு, கலாசாரம், வரலாறு ஆகிய துறைகளில் இவரால் எழுதப்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் கடந்த காலங்களில் தேசிய நாளேடுகளிலும், மாகாண, மாவட்ட மற்றும் பிரதேச விசேட மலர்களிலும் வெளிவந்துள்ளன.

அத்துடன் இவை, ஆய்வாளர்கள், அறிஞர்கள் என்போரது கவனத்தையும் ஈர்த்து வந்துள்ளன.

தமிழ் மொழி மீது ஆழ்ந்த பற்றுக்கொண்ட இவர் எழுதிய பத்து ஆய்வு நூல்கள் இதுவரை வெளிவந்துள்ளன. காத்திரமான ஆய்வுத் தேடல்கள் மூலமாகப் பெற்றுக்கொண்ட சான்றுகளைக்கொண்டு வரலாற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்து உருவாக்கப்பட்டு வெளிவந்து நிலவி வரும் இந்நூல்கள் இனம் சார்ந்த வகையில் மட்டுமன்றிக் கல்விச் சமூகத்தினருக்கும் குறிப்பாக உயர்தர மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கு (கலைத்துறை) சிறந்த பயனை அளித்து வருகின்றன என்றால் மிகையாகாது.

இதேவேளை, அம்பாரையை உள்ளடக்கியிருந்த பண்டைய மட்டக்களப்புத் தமிழக வரலாற்றினை திரிபுபடுத்தும் வகையில் அண்மைக் காலமாக சிலர் எழுதி வருவதைக் காணமுடிகிறது. மாகாண, மாவட்ட, பிரதேச மட்டங்களில் வெளிவந்து கொண்டிருக்கும் சில விசேட மலர்களில் இவ்வாறான கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன் நூல்களிலும் உண்மை வரலாற்றினைத் திரிபுபடுத்தும் வகையில் சிலர் எழுதி வருகின்றனர்.

இந்நிலையானது பெரும் விளைவுகளைத் தோற்றுவிக்கலாம். எல்லாவற்றிற்கும் மேலாக இவற்றை ஆதாரங்களாகக் கொண்டு எதிர்காலத்தில் வரலாற்று நூல்கள் உருவாகும் நிலை ஏற்படலாம்.

இந்நிலையில், தனது பகீரத ஆய்வுத் தேடல்கள் வாயிலாகப் பெற்றுக்கொண்ட சான்றுகளைக் கொண்டு ஆய்வார்வலர் நா.நவநாயகமூர்த்தியவர்கள் ''பண்டைய மட்டக்களப்பு வரலாற்றில் அக்கரைப்பற்றும் தமிழரும்'' என்ற இந்நூலை எழுதியுள்ளார். காலச் சேற்றில் புதைந்துபோன மேலும் சில தரப்பினரால் வேண்டுமென்றே மறைக்கப்பட்ட வரலாற்றுண்மைகள் பல இந்நூலில் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஆதலால், காத்திரமானதொரு வரலாற்று நூலாக இது பரிமளிக்கப்படுகிறது.

இதேவேளை, எல்லோரும் படித்துப் பயன் பெறும் நோக்கில் இலகு தமிழில் உருவாக்கப்பட்டுள்ள இந்நூல் குறிப்பாகக் கல்விச் சமூகத்தினருக்கும், ஆய்வாளர்களுக்கும் பெரும் பயனளிக்கும். அத்துடன் நமது எதிர்காலச் சந்ததியினருக்கும் வரப்பிரசாதமாக அமையும் என்பதில் ஐயமில்லை.

இன்றைய தமிழ்ச் சூழலில் இவ்வாறான நூல்கள் உருவாகி வெளிவருவது காலத்தின் கட்டாயம் எனலாம். இதனை யாரும் மறுதலிக்க முடியாது. ஆதலால், இந்நூலை வெளியிடுவதில் உளம் நிறைவடைகின்றோம்.

நன்றி

''தமிழர்களுக்குத் தமிழே துணை''

15.10.2022

வெளியிடுவோர்
ஜீவாதார அறக்கட்டளை
அக்கரைப்பற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டைய மட்டக்களப்பு வரலாற்றில் அக்கரைப்பற்றும் தமிழரும் (ஆய்வு)

## (கி.மு. 900 - கி.பி. 1600ம் ஆண்டு வரை)

## பாகம் I

"ஆய்வார்வலர் கலாபூஷணம்"
நா. நவநாயகமூர்த்தி
(தொல்லியலாளர். இந்து சமய நூலாசிரியர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டைய கருங்கொடித்தீவும் பூர்வகுடியினரும்

கிழக்கிலங்கை அம்பாரை மாவட்டத்தில் தமிழ்பேசும் மக்களான தமிழ், முஸ்லீம் மக்களைப் பெரும்பான்மையினராகக் கொண்டு செழிப்புடன் மிளிர்ந்து வரும் அக்கரைப்பற்று என்ற பண்டைய கருங்கொடித்தீவு நகரின் பூர்வீகக் குடியினரான தமிழர்கள் பற்றிக் கூறுமிடத்து இவர்கள் பண்டைய மட்டக்களப்பு தேசத்தில் (அம்பாரை உள்ளிட்ட) நாகரீகச் சிறப்புடன் வாழ்ந்திருந்த பழந்தமிழரின் வழித்தோன்றல்களாவர் எனலாம். இதனை வரலாற்றாய்வுகள் தெளிவுறுத்தும்.

பண்டைய கருங்கொடித்தீவு நகரானது இன்று இரு நிர்வாகப் பிரிவின் கீழ் நிலவி வருகின்றது. இதனடிப்படையில் கருங்கொடித்தீவின் வடபகுதியில் முஸ்லீம் மக்களும் தென்பகுதியில் தமிழர்களும் வாழ்ந்து வருகின்றனர். முஸ்லிம் மக்கள் வாழ்ந்து வரும் பகுதி அக்கரைப்பற்று பிரதேசசெயலகப் பிரிவின் கீழும், தமிழ் மக்கள் வாழ்ந்து வரும் கருங்கொடித்தீவின் தென்பகுதி ஆலையடிவேம்பு பிரதேச செயலகப் பிரிவின் கீழும் இருந்து வருகின்றன. ஆயினும் பண்டைய கருங்கொடித்தீவு நகர் பகுதி முழுவதும் இன்றும் அக்கரைப்பற்று என்ற பெயருடன் நிலவி வருகின்றது.

கருங்கொடித்தீவு நகரின் தென்பகுதியானது 1985.08.28ம் திகதி தொடக்கம் ஆலையடிவேம்பு மேலதிக அரசாங்க அதிபர் பிரிவின் கீழும் இதனைத் தொடர்ந்து 1988.01.28ம் திகதி தொடக்கம் ஆலையடிவேம்பு உதவி அரசாங்க அதிபர் பிரிவின் கீழும் இருந்து வந்தது. 1993ல் ஆலையடிவேம்பு உதவி அரசாங்க அதிபர் பணிமனை பிரதேச செயலகமாகத் தரமுயர்த்தப் பட்டதைத் தொடர்ந்து பல்துறைகளிலும் கருங்கொடித்தீவு தென்பகுதி பெருவளர்ச்சி கண்டு வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கருங்கொடித்தீவு என்ற அக்கரைப்பற்றின் பூர்வகுடியினர் வரலாற்றுப் பின்னணி

தமிழ், முஸ்லீம் மக்கள் வாழ்ந்து வரும் இன்றைய அக்கரைப்பற்று என்ற கருங்கொடித்தீவு மற்றும் கோளாவில் பனங்காடு, பட்டிநகர் ஆகிய பண்டைய இடங்களை உள்ளடக்கிய அக்கரைப்பற்று பிரதேசத்தின் வரலாறானது இப்பிரதேசத்தின் மேற்குப் பகுதிகளிலிருந்தே தொடங்குகின்றதென்பதை இப்பகுதிகளில் இன்று காணக்கிடைக்கும் தொல்லியல் சான்றுகள், மற்றும் இலக்கிய வடிவங்கள், வரலாற்றாய்வுகள் என்பன தெளிவுறுத்துகின்றன.

மேலும் இவற்றின் வாயிலாக ஆதிகாலத்தில் இப்பிரதேசத்தில் பெரும்பான்மையினராக வாழ்ந்து வந்தவர்கள் தமிழர்கள் என்பதையும் இவர்களில் ஒரு சாரார் தமிழ்ப் பௌத்தர்களாக வாழ்ந்திருந்திருந்ததையும் அறிய முடிகின்றது. இவர்களுடன் கணிசமான தொகையினராகப் பௌத்த சிங்கள மக்களும் வாழ்ந்திருந்தனர்.

ஈழத்தில் பெருங்கற்கால பண்பாடு நிலவியிருந்த காலத்தில் (கி.மு.900 - 200) குறிப்பாக கி.மு.900ம் ஆண்டு தொடக்கம் 500ஆம் ஆண்டு வரையுள்ள காலகட்டத்தில் அக்கரைப்பற்று பிரதேசத்தின் மேற்குப் பகுதிகளில் திராவிடக் குடியினரான நாகர்குலத்தினர் பெருமளவில் வாழ்ந்திருந்தனர். இவர்களுடன் சிறுதொகையினராக இயக்கர் என்ற திராவிடக் குடியினரும் வாழ்ந்திருந்தனர். இதேவேளை இப்பிரதேசத்தின் கிழக்கு கரையோரப் பகுதிகளில் ஆதித்திராவிடரான வேடர் குடும்பங்கள் வாழ்ந்திருந்தனர். வேட்டையாடுதலை பிரதான தொழிலாகக் கொண்டிருந்த இவர்களிடையே தென்புலத்தார் வழிபாடு நிலவியிருந்தது. [1]

---

1. வேடர் என்ற இவர்கள் தென்னிந்தியாவிலிருந்து வாழ்ந்து இங்கு குடியேறிய மக்களாவர். இலங்கை தென்னிந்தியாவுடன் இணைக்கப்பட்டிருந்த நிலப்பரப்பாக விருந்த காலத்தில் தோணி, மரக்கலம் முதலியவற்றின் துணையின்றி தென்னிந்தியாவிலிருந்து நிலப்பாதை வழியாக இலங்கைக்கு நடந்து வந்து குடியேறியவர்களின் சந்ததியர் இவர்கள் ஆவர். ( நம்முன்னோரளித்த அருஞ்செல்வம் பாகம் 1 - பக்3,4 கி.மு மெண்டிஸ் - 1962)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பிரதேசத்தில் நாகர்குடியினரின் அரசியல் செல்வாக்கு நிலைத்திருந்த அக்காலத்தில் (கிமு. 9ம் நூற் - 5ம் நூற்றாண்டு) கி.மு.ஏழாம் நூற்றாண்டு தொடக்கம் கி.மு ஐந்தாம் நூற்றாண்டு வரை சங்குமன்கண்டியை இராஜதானியாகக் கொண்டு நாகர்குல முதல்வர்கள் ஆட்சி புரிந்து வந்தனர். கி.மு ஏழாம் நூற்றாண்டளவில் பண்டைய சங்குமன்கண்டி நகரினைத் தோற்றுவித்தவன் 'சங்குமன்' என்ற நாகர்குல முதல்வனாவான். ஆதலால் சங்குமன்கண்டி என்ற பெயரை இந்நகர் பெற்றிருந்தது. அக்காலந்தொட்டு சங்குமன்கண்டியை தலைநகராகக் கொண்டு நாகர்முனை என்று பெயர் வழங்கிவந்த சங்குமன்கண்டி தொடக்கம் சாகாமம் வரை பரந்திருந்த பிரதேசத்தை நாகர்குல முதல்வர்கள் (சிற்றரசர்) பரிபாலித்து வந்தனர்.[2]

அக்காலத்தில் இன்றைய ஒலுவில் தொடக்கம் நிந்தவூர் வரையான கரையோரப்பிரதேசம் 'நாகர்மேடு' என பெயர் வழங்கியிருந்தது. நாகர் குடியினர் இப்பிரதேசத்தில் வாழ்ந்திருந்தனர். காளியோடையை அண்மித்த பகுதியில் இயக்கர் குடியினர் சிறு தொகையினராக வாழ்ந்திருந்தனர். இவர்களிடையே இயக்கி என்ற பெண் தெய்வ வழிபாடும் நிலவி வந்தது.

தென்கிழக்கிலங்கையில் நாகர் குடியினரின் அரசியல் செல்வாக்கு (ஆட்சி) நிலைத்திருந்த அக்காலத்தில் (கி.மு.700 - 500) நாகர் குடியினர் பெருமளவில் வாழ்ந்திருந்த சாகாமம் தொடக்கம் வடக்கே முள்ளிக்குளமலைப் பிரதேசம் வரை (அட்டாளைச்சேனை மேற்கு) நாகர்குலத்தவரின் அரசியல் செல்வாக்கே நிலைத்திருந்தது. அக்காலத்தில் ஈழத்தில் வாழ்ந்திருந்த பெருங்கற்கால மக்களான நாகர் என்போர் தமிழ் மொழியையும், இயக்கர் என்ற திராவிடக் குடியினர் தமிழின் கிளை மொழியான கொச்சைத்தமிழ் என்ற எலு (ஈளு) மொழியையும் பேச்சு மொழிகளாகக் கொண்டிருந்தனர்.

---

2. நாகர்கள் நகர நாகரீகமொன்றை வளர்த்தமைத்த தலைவர்கள் ஆவர். (சங்க கால இலக்கியச் சிறப்புப் பெயர்கள். பக். 84 மொ. அ. துரை அரங்கசாமி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகர் என்போர் திராவிடரான தமிழர்கள் ஆவார். நாகர், இயக்கர், சேரர், சோழர், பாண்டியர் என்பன குலப் பெயர்கள். திராவிடர் என்பது தமிழரையே குறிப்பதாகும்[3] இந்து சமய நம்பிக்கைகளைக் கொண்டிருந்த இவர்களிடையே (நாகர்) குறிப்பாக 'வேல்' வழிபாடும் 'சிவ' (நாக) வழிபாடும் செழித்திருந்தன. சிவலிங்க வழிபாட்டைக் கொண்டிருந்தவர்களும் சிவலிங்கத்தைத் தரித்தவர்களும் நாகர்கள் ஆவார்.[4]

தமிழகத்தையொத்த திராவிடவியல் சார்ந்த பெருங்கற் பண்பாடு ஈழத்தில் நிலைத்திருந்த அக்காலத்தில் மண்டூர் திருக்கோவில் செயலகப்பிரிவு (நாகர்முனை) நாகமேடு (நிந்தவூர் கிழக்குப் பிரதேசம் காளியோடை) உகந்தை ஆகிய இடங்கள் நாகர் குடியினரின் வாழ்விடங்களாகவும் ஆட்சிப் பிரதேசங்களாகவும் (குறுநில அரசுகள்) மிளிர்ந்து வந்தன. இவ்வேளை லகுகலை, சம்மாந்துறை, போரதீவு ஆகிய இடங்கள் இயக்கர் குடியினரின் வாழ்விடங்களாக இருந்து வந்தன.[5]

இதே வேளை கிடைக்கக் கூடிய இலக்கிய, பண்டைய தேசப்பட (தொலமி) ஆதாரங்களிலிருந்து இலங்கையின் பல பகுதிகளிலும் நாகர் குடியிருப்புக்கள் இருந்துள்ளதென அறிய முடிகின்றது. இவற்றில் சங்கமன்கண்டி, சாகாமம் உள்ளிட்ட திருக்கோவில் பிரதேசமும் தென்கிழக்கில் நாகர் குடியிருப்பாக விளங்கியுள்ளது.[6]

---

3. திருக்கோவில் பிரதேச இலக்கிய வரலாறு பக் 3 நா.நவநாயகமூர்த்தி 2014
4. இந்தியப் பண்பாடும், தமிழரும் - பக் 20 எஸ். இராமகிருஷ்ணன்
5. ஈழத்தமிழர் வரலாற்றுச் சுவடுகள் - பக் 22,23 நா. நவநாயகமூர்த்தி 2002

* அக்காலத்தில் சம்மாந்துறை போரதீவு ஆகிய இடங்களில் இயக்கர் குடியினரிடையே நிலவியிருந்த 'இயக்கி' என்ற பெண் தெய்வ வழிபாடே பிற்காலத்தில் காளி வழிபாடாக மலர்ந்தது.

6. குவேனி - பக் 131. கலாநிதி க. குணராசா 1999



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த ஆதிக்குடியிருப்புக்கள் ஒவ்வொன்றிற்கும் தந்தை வழி சமூக அமைப்பின் வழிமுறைப்படி ஒவ்வொரு தலைவன் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருந்தான்.[7] இவற்றின் வாயிலாக அக்காலத்தில் சங்குமன்கண்டியை இராஜதானியாகக் கொண்டு நாகர்முனை என்ற திருக்கோயில் பிரதேசத்தை ஆட்சி புரிந்து வந்த நாகர்குல முதல்வர்களின் ஆட்சி சாகாம நகரின் வடக்கு புறநகர் பகுதியான அக்கரைப்பற்று பிரதேசத்தின் மேற்குப் பகுதியில் முள்ளிக்குள மலைப்பிரதேசம் வரை பரந்திருந்ததெனலாம்.

நாகர், இயக்கர் என்போர் ஈழத்தில் நாகரீகச் சிறப்புடன் வாழ்ந்து வந்ததுடன் நீதிநெறிகள் நிறைந்த ஒழுங்கான அரசமைப்பைக் கொண்டிருந்தனர். மேலும் இவர்கள் இந்து மத வழிபாட்டு நெறிகளையும் கொண்டிருந்தனர். இதனை சேர் வில்லியம் ஜோன்ஸ்கிளப், பெக்கலோச்சி பென்னற் ஆகிய வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர் இவர்கள் இந்தியாவிலிருந்து இதற்கு முன்னர் இத்தீவில் குடியேறிய மக்கள் என்றும் இவர்கள் மேலும் குறிப்பிடுவர்.[8]

இலங்கையில் தென்னிந்தியாவையொத்த குறிப்பாகத் தமிழகத்தையொத்த திராவிடவியல் சார்ந்த இரும்புக்கால என்ற பெருங்கற்பண்பாடு நிலவியிருந்த ஒரு பிரதேசமாக மட்டக்களப்பு (அம்பாரை உள்ளிட்ட) காணப்படுகின்றது. அம்பாரை மாவட்டத்தில் குமுக்கன் ஓயாவுக்கு வடக்கே இப்பண்பாட்டுத்தடயங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. ஆதி பெருங்கால சவ அடக்கங்கள் காணப்படும் பாணமைக்குத் தெற்கே உகந்தையிலும் இத்தடயங்கள் இருப்பதாக 1920ல் தெரிய வந்துள்ளது.

---

7. Navaratnam C.S. Tamils and Ceylon Jaffna - 1958
8. தமிழர் வரலாறும்,இலங்கை இடப்பெயர் ஆய்வும் -பக் 5 கதிர் தணிகாசலம் - 1992



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதேபோன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் காணப்படும் ஆதி இரும்புக் கால (பெருங்கற்கால) தடயங்களும் இப்பிரதேசத்திலுள்ள கதிரவெளியில் கிடைத்த தொல்பொருட்களும் கிழக்கிலங்கையில் பெருங்கற் பண்பாட்டை அதாவது பெருங்கற் பண்பாட்டு அம்சங்களை உள்வாங்கிய ஒரு பிரதேசமாகக் காணப்படுகின்றது. (கலாநிதி முருகர் குணசிங்கம் - 2008)

## பெருங்கற்கால முதிர்ச்சி நிலையில் (கி.மு.500 - 200) பாண்டியர் ஆட்சியில் அக்கரைப்பற்று

பெருங்கற்கால முதிர்ச்சி நிலையில் கி.மு. ஐந்தாம் நூற்றாண்டளவில் திருக்கோவில் மற்றும் அக்கரைப்பற்று பிரதேசங்கள் உள்ளிட்ட உரோகண மண்டலம் முழுவதிலும் நாகர் இயக்கர், குலங்களுடன் ஆதிக்குடியினரான வேடர்களும் வாழ்ந்திருந்தனர்.

உரோகணம் முழுவதிலும் நாகர் குடியினரின் அரசியல் செல்வாக்கு (ஆட்சி) நிலைத்திருந்த இக்காலத்தில் பாண்டிய குலத்துத் தமிழர்கள் குடியேறி வாழ்ந்து வந்தனர். இவர்கள் கி.மு நாலாம் நூற்றாண்டில் அம்பாந்தோட்டை மட்டக்களப்பு, அம்பாரை மாவட்டங்களை உள்ளடக்கியிருந்த பண்டைய உரோகண மண்டல அரசியலிலும் செல்வாக்குப் பெற்றிருந்தனர் என்பதை வரலாற்றாய்வுகள் உணர்த்தும்.[9]

இப்பாண்டிய குலத்துத் தமிழர்களில், பாண்டிய அரசமரபைச் சேர்ந்த 'மச்சராசா' என்போர் கி.மு. நாலாம் நூற்றாண்டு தொடக்கம் கி.மு இரண்டாம் நூற்றாண்டு வரை உறுகுணையில் ஆட்சி புரிந்தனர். உரோகண மண்டலத்தில் இன்றைய அம்பாந்தோட்டை மட்க்களப்பு , அம்பாரை மாவட்டங்களை உள்ளடக்கிய பெரும் பிரதேசத்தை பாண்டியர் குலத்து மூத்தோர் வம்சம் கதிர்காமத்திலிருந்தும் இளையோர் வம்சம் சந்தணகாமத்திலிருந்தும் ஆட்சி புரிந்து வந்தனர். [10]

---

9. பண்டைய ஈழத்தமிழர் - பக் 43 நா. நவநாயகமூர்த்தி 1998
10. பண்டைய மட்டக்களப்பும் சங்கமன்கண்டி இறக்காவில் சிவாலயமும் பக் - 27 நா. நவநாயகமூர்த்தி - 2017



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாகாமம், ''மொட்டையாகல்லு'' என்ற இடத்திலுள்ள பிராமிக் கல்வெட்டு கதிர்காமச் சத்திரியர்களின் இளையோனாகிய மகாநாகாவின் ஆட்சி மட்டக்களப்பு, அம்பாரை மாவட்டங்களில் பரந்திருந்ததை உணர்த்துகின்றது.[11] அனுராதபுரி மன்னரின் மேலாதிக்கத்தை ஏற்றிராத சுதந்திர அரசர்களான இவர்களையே கதிர்காம சந்தணகாம சத்திரியர்கள் என்று மகாவம்சம் கூறும்.

தென்கிழக்கிலங்கையில் கண்டுபிடிக்கப்பட்ட பதினைந்து மீன் சின்னம் பொறிக்கப்பட்ட பிராமிச் சாசனங்கள் உறுகுணையில் பாண்டிய குலத்து தமிழ்ச்சிற்றரசர் கூட்டாட்சி நிலவியிருந்ததை உறுதி செய்கின்றன. பாண்டியரின் இலச்சினை மீன் உருவம் என்பது அறிந்ததே ஆகும். மீன் இலச்சினை பொறிக்கப்பட்ட பிராமிச் சாசனங்கள் பேராசிரியர் பரணவிதான அவர்களால் வெளியிடப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது.[12] சகோதரர்கள் கூடி ஆளும் முறை பாண்டிய அரசகுலத்தினரின் சிறப்பியல்பாக நீண்டகாலம் இருந்து வந்தது.

பாண்டிய குலத்தினரான கதிர்காமசத்திரியர்கள் பற்றிய இரண்டு பிராமிக் கல்வெட்டுக்கள் சங்கமன்கண்டி மலைப்பாறைக் குகையில் பொறிக்கப்பட்டுள்ளன. இக்கல்வெட்டுக்களிலொன்றில் 'பருமக' என்னும் தமிழ்ப் பிராமிக்குரிய சொல் காணப்படுகின்றது. இதில் 'பருமகவரளி புதக(ஹ) உபசக உதியலேன' எனப் பொறிக்கப்பட்டுள்ளது. இது பெருமகன் வரளியின் மகன் பக்தன் உதியனின்குகை எனப் பொருள் படுகிறது. உதியன் என்பவன் கதிர்காமராச்சியத்தை ஆட்சி புரிந்த பத்து பாண்டிய சத்திரிய வம்சத்து மன்னர்களிலொருவனாவான்.

---

11. ஈழத்து இந்து சமய வரலாறு பாகம் 1 - பக் 125, பேராசிரியர் சி.க. சிற்றம்பலம் - 1996

12. தமிழர் சமய வரலாறு - பக் 224, 225 டாக்டர் ஆ. வேலுப்பிள்ளை 1980



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாவது கல்வெட்டின் முற்பகுதி அழிந்த நிலையில் இறுதிப் பகுதியில் மட்டும் குசேலன் அதாவது 'குசனின்குகை' எனப் பொறிக்கப்பட்டுள்ளது. குசன் என்பவனும் பத்துக் கதிர்காமச் சத்திரியர்களிலொருவனாவான்.[13] இதே வேளை கதிர்காமச் சத்திரியர்களின் இளைய வம்சத்தினரின் சந்தணகாம இராச்சியமானது குறிப்பாக சாகாம நகரின் வடக்குப் புற நகரான பட்டிநகரிலிருந்து வடக்கே மகாவலி கங்கை வரையும் பரந்திருந்தது.

சந்தணகாமம் என்பது கல்லோயா பிரதேசம் என வரலாற்றாசிரியர் கலாநிதி க. சிற்றம்பலம் அவர்களும் இனம் காண்பர்.[14] இவர்களது ஆட்சிக்காலத்தில் (சந்தணகாமத்துச் சத்திரியர்) இப்பிரதேசத்தில் செழித்திருந்த திராவிட நாகரீகத்தையே பட்டிப்பளை நாகரீகம் என ஆய்வாளர்கள் குறிப்பிடுவர். இலங்கை வரலாற்றினை நோக்குமிடத்து கி.மு. நாலாம் மூன்றாம் நூற்றாண்டுகளில் சந்தணகாமத்துத் தமிழரசு (கூட்டாட்சி அலகு) உன்னத நிலையில் இருந்ததென்பதை அறிய முடிகின்றது. இக்காலத்தில் தென்கிழக்கிலங்கையில் தமிழர் நாகரீகம் சிறப்புடன் விளங்கியது. இக்காலத்திலேயே கி.மு. 247ல் இலங்கையில் பௌத்தம் அறிமுகமானது.

அக்காலத்தில் அனுராதபுரியில் நடந்தபோதி மர நடுகை விழாவில் சந்தணகாமத்துத் தமிழ் அரசர்கள் தமது ஆட்சிப் பகுதியிலும் அரசமரக் கிளைகளை நாட்டியுள்ளனர். இதனை மகாவம்சம் கூறும்.[15]

---

13. பாரம்பரியம் மிக்க கதிர்காம பாத யாத்திரையும், கந்த சுவாமிக் கடவுளின் புனித பூமியும், பக் 148, என்.கே.எஸ். திருச்செல்வம், 2013
14. தமிழ் மக்களின் பாரம்பரியப் பிரதேசம் கட்டுரை சி.க. சிற்றம்பலம் முத்தமிழ் விழா மலர் பக் 15 - 1991
15. ஆலையடிவேம்பு பிரதேச வரலாற்றுப் பின்னணி - கட்டுரை நா. நவநாயகமூர்த்தி ஏர்முனை கலாசார விழா மலர் 1997



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உறுகுணையில் பௌத்தம் அறிமுகம்

தேவநம்பிய தீசன் காலத்தில் (கி.மு. 247 - 207) அனுராதபுரியில் இடம் பெற்ற புனித அரச மரக்கிளை நடும் வைபவத்தில் விசேட அதிதிகளாக கதிர்காம, சந்தணகாம சத்திரியர்களான உரோகண அரசர்களும் தேவநம்பிய தீசனின் அழைப்பின் பேரில் கலந்து கொண்டனர். அரச மரக்கிளையையும் பெற்று வந்து கதிர்காமம் உள்ளிட்ட தமது அரசுகளிலும் நாட்டியுள்ளனர்.[16] இவ்வேளை கதிர்காமச் சந்தணகாமத் தமிழ் அரசர்களால் வெள்ளரசுக்கிளைகள் நாட்டப்பட்டு பௌத்த வழிபாட்டுத் தலங்கள் தோற்றுவிக்கப்பட்டன. குடும்பிகல, தீகவாபி போன்ற பண்டைய பௌத்த தலங்கள் இவற்றில் அடங்கும்.[17]

அக்காலத்தில் சந்தண காமத்து தமிழ் அரசர்களால் அரசமரக்கிளை நட்டு தீகவாவி பௌத்த தலம் தோற்றுவிக்கப்பட்டதைத் தொடர்ந்து அக்கரைப்பற்று மேற்கு பிரதேசத்தில் நாகரீகம் நிலவியிருந்த சாகாமம் வடக்கு, வடமேற்குப் புறநகர்ப்பகுதிகளான பொத்தானை, கிழவியூர் மலை, பட்டி நகர் பகுதி தொடக்கம் வடக்கே முள்ளிக்குளம் மலைப்பிரதேசம் காளியோடை வரை வாழ்ந்திருந்த இந்துசமய நம்பிக்கைகளைக் கொண்டிருந்த பெருங்கற்கால மக்களின் சந்ததியினரான நாகர் இயக்கர், பாண்டியர் என்ற திராவிடக் குடியினரிடையே பௌத்தம் அறிமுகமாகியது.

இவர்களில் கணிசமானோர் பௌத்தத்தைத் தழுவிப் பௌத்தர்களாக அதாவது தமிழ்ப் பௌத்தர்களாக வாழ்ந்திருந்தனர். இதனைத் தொடர்ந்து சாகாமம் வடக்குப் புறநகர்ப்பகுதிகளிலும் முள்ளிக்குள மலைப் பிரதேசம் காளியோடை வரையான பண்டைய அக்கரைப்பற்றின் மேற்குப் பிரதேசத்திலும் பௌத்த தலங்கள் தோற்றம் பெற்று நிலவியிருந்தன. ஆயினும் இப்பகுதிகளில் வாழ்ந்திருந்த திராவிட தமிழர்கள் தாங்கள் முன்னர் கடைப்பிடித்து வந்த பழைய சைவ சமயசம்பிரதாயங்களையும் நம்பிக்கைகளையும் பேணி வந்தனர்.

---

16. The Mahawamsam - W.Geiger அதிகாரம் XIX : 61 - 63 Colombo - 1950

17. கிழக்கு இலங்கையில் தமிழ்ப் பௌத்தர்கள் - கட்டுரை ஞாயிறு தினக்குரல் 2004 ஏப்ரல் 25 நா. நவநாயகமூர்த்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனடிப்படையில் சிவாலயமும், பௌத்த வழிபாட்டு இடமும் அருகருகாய் அமைந்து இரு சமய நெறிகளையும் பேணி வந்த தமிழர்களின் வாழ்விடமாக அக்காலத்தில் இப்பகுதி விளங்கி வந்துள்ளது. கல்லோயா பிரதேசத்தில் கடந்த நூற்றாண்டில் கண்டெடுக்கப்பட்ட தொல்லியல் சான்றுகள் இதனை நன்கு உணர்த்தும்.

இலங்கையில் பௌத்தம் அறிமுகமான காலத்தில் (கி.மு.247) தென்கிழக்கிலங்கையில் (மட்டக்களப்பு) பெருங்கற் பண்பாட்டுக்குரிய திராவிடவியல் சார்ந்த மக்கள் வாழ்ந்திருந்த இடங்கள் கதிரவெளி, நவகிரி, தீகவாபி, உகந்தை, வாகரை சங்கமன்கண்டி, சாகாமம், தமண, கல்லோடை, மல்வத்தை ஆகியனவாகும். இந்த இடங்களில் பெருங்கற்கால சின்னங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இச்சான்றுகள் மூலம் அக்காலகட்டத்தில் கி.மு.900 - 300) இந்த இடங்களில் திராவிடக் குடியினரே வாழ்ந்திருந்தனர் என்பதை அறிய முடிகிறது. மேலும் பௌத்தம் அறிமுகமான காலத்தில் அதாவது பெருங்கற்கால முதிர்ச்சி நிலையில் கி.மு மூன்றாம் நூற்றாண்டில் தேவநம்பிய தீசன் காலத்தில் இந்த இடங்களில் தமிழர் நாகரீகமும் தமிழர் சமயமான சைவமும் செழிப்புடன் விளங்கியிருந்தன. பாண்டிய குலத்துத் தமிழ் அரசர்களது ஆட்சி உன்னத நிலையில் விளங்கியிருந்தது. இவ்வாறானதொரு சமூக, அரசியல், சமயச் சூழலிலேயே தென்கிழக்கிலங்கையில் (அம்பாரை உள்ளிட்ட மட்டக்களப்பு) பௌத்தம் அறிமுகமானது.

உரோகணத்தில் பாண்டிய குலத்துத் தமிழ் அரசர்கள் ஆட்சி உன்னத நிலையிலிருந்த இக்காலத்தில் இத்தமிழ் மன்னர்களது ஆதரவுடன் தேவநம்பிய தீசனின் தம்பியான மகாநாகன் என்பவன் உருகுணையில் மகா சிற்றரசைத் தோற்று வித்தான். மகாநாகனின் மகனான கோதபாயன் கதிர்காம மன்னன் காமணி அபயனின் மக்களான பத்து அரசகுமாரர்களைக் கொன்று உறுகுணையின் இராஜதானியை தனதாக்கிக் கொண்டான்.[18]

18 . History of Ceylon - Page 60 C.W. Nicholas and S. Paranavidana Colombo - 1961



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவன் தமிழ் அரசர்கள் பத்துப்பேரையும் அழித்த பொழுதிலும் கதிர்காமப் பகுதியில் தமிழ் அரசர்களது ஆதிக்கம் ஓரளவு இருந்து வந்தது.

கூமுனைக்கு மூன்றுமைல் மேற்கிலுள்ள 'வோவத்தகல்' 'கொட்டதாமுவேலக' ஆகிய இடங்களிலுள்ள மீன் சின்னம் பொறிக்கப்பட்ட குகைக் கல்வெட்டுக்கள், கதிர்காமத் தமிழ் அரசர்கள் கோதபாயனால் அழிக்கப்பட்டது பற்றிக் குறிப்பிடுகின்றன. இக் கல்வெட்டுக்கள் மூலம் கதிர்காமச் சத்திரியர் குடும்பம் ஒன்றின் ஐந்து பரம்பரை பற்றி அறியமுடிகின்றது. கிழக்கு, தென் கிழக்கில் மிகநீண்டகாலம் ஆட்சிசெலுத்திய பெருங்கற்கால குறுநில மன்னர்கள் பரம்பரையினரே இவர்களாவர்.[19] குறிப்பாக கி.மு நாலாம் நூற்றாண்டு தொடக்கம் கி.மு 2ம் நூற்றாண்டு வரை உறுகுணையில் இவர்களது ஆட்சி நிலைத்திருந்தது.

மாகம சிற்றரசன் கோதபாயன் கதிர்காமத்து பத்து அரசகுமாரர்களை கொன்று அழித்தபோதும் காமணி அபயனின் மக்களான பத்து அரசகுமாரர்களில் மூத்தவனான தர்மராசா என்பவனின் மகன் மகாதீசன் என்பவன் தென்னிலங்கையில் ஆதிக்கம் பெற்றிருந்தான்.[20] அதாவது கோதபாயன் கதிர்காமத்து இளவரசர்கள் பத்துப்பேரைக் கொன்று தனது ஆட்சியை உருகுணையின் தென்பகுதியில் பலப்படுத்தியிருந்த போதும் உரோகணத்தின் வடபகுதியில் (அம்பாறை உள்ளிட்ட மட்டக்களப்பு) தமிழ் மன்னர்களின் ஆதிக்கம் தொடர்ந்து இருந்து வந்தது. பாண்டியரின் ஆட்சியை மகாதீசன் நிலைநிறுத்தியிருந்தான்.

கிமு நாலாம் நூற்றாண்டு தொடக்கம் கி.மு இரண்டாம் நூற்றாண்டு வரையும் உறுகுணையை ஆட்சி புரிந்த பாண்டிய அரசர்கள் பற்றிய வரலாற்றை தீபவம்சமும் மகாவம்சமும் கூறவில்லை. இவர்களும் பிற்காலத்தில் இவர்களது சந்ததியினரும் எழுதிவைத்த பிராமி எழுத்து சாசனங்களிலிருந்து இவர்களைப் பற்றி ஒருவாறு

19. கிழக்கிலங்கை பூர்வீக வரலாறு - பக் 102, 103 க.தங்கேஸ்வரி - 2007
20. ஈழத்தவர் வரலாறு - பக், 39 கலாநிதி க. குணராசா - 1996



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறியமுடிகின்றது. பாண்டிய குலத்து மன்னர்கள் எழுதிய பதினாறு பிராமிச் சாசனங்கள் வெவ்வேறு இடங்களில் காணப்படுகின்றன. இவை மீன் சின்னங்கள் பொறிக்கப்பட்டவையாகும் .

மகாவம்சம் போதிமரக்கிளை நடும் வைபவத்தில் கதிர்காம சந்தணகாம பெருமக்களும் வந்திருந்தனர் என்று கூறுகின்றது. அவர்கள் பெயர்களைக் கூறாமல் மறைத்து விட்டது. உரோகண நாட்டில் தேவநம்பியதீசனின் தம்பியாகிய மகாநாகன் புகழ் அடைந்ததையும் அவனுக்கு உரோகண நாட்டு அரசனான காமணிதிஸ்ஸன் அடைக்கலம் கொடுத்து ஆதரித்ததையும் காமணிதிஸ்ஸன் இறந்த பிறகு அவனது ஆட்சியைக் கைப்பற்றிக்கொண்ட துரோகச் செயலையும் மகாநாகனுடைய மகன் காமணி திஸ்ஸனுடைய மக்கள் பத்துப்பேரைக் கொன்றுதானே உறுகுணையை அபகரித்ததையும் அடியோடு மறைத்து விட்டது. ஆனால் மகாவம்சம் மறைத்துவிட்ட வரலாற்றை தாதுவம்சம் என்னும் நூல் கூறுகின்றது.[21]

தேவநம்பிய தீசனுக்குப்பின் அவனுடைய இரண்டாவது தம்பியான உத்தியன் (207 - 197) என்பவனும் இவனுக்குப்பின் அவனுடைய தம்பியான மகாசிவன் (கிமு 197 - 187) என்பவனும் அநுராதபுர இராச்சியத்தை ஆட்சி புரிந்தனர். இதனைத் தொடர்ந்து மகாசிவனின் தம்பியான சூரத்திஸ்ஸ (கிமு 187 - 177) என்பவன் பத்து ஆண்டுகள் ஆட்சி புரிந்தான். இவர்களது ஆட்சிக்காலத்தில் பௌத்தம் இலங்கையில் பரவியது.

சங்ககாலத்துக்குச் சமமான இக்காலத்தில் தமிழகத்தில் தமிழரிடையே பௌத்தம் செல்வாக்குப் பெற்றிருந்ததும் குறிப்பிடத்தக்கது. இக்காலத்தில் (கி.மு 207 - 177) தமிழர்களே தனிப் பெரும்பான்மையினராக வாழ்ந்திருந்த பண்டைய சந்தணகாம இராச்சியம் என்ற கல்லோயா பிரதேசத்திலும் இந்நிலையே நிலைத்திருந்தது. தீகவாபியிலும் அதனைச் சூழவுள்ள இடங்களிலும் வாழ்ந்து வந்த பௌத்த தமிழர்களின் வழிபாட்டு இடமாக தீகவாபி தலம் விளங்கி வந்தது.

---

21. இலங்கையில் தமிழர் கட்டுரை தமிழ் நாட்டு வரலாறு - சங்ககால அரசியல் பக், 614 தமிழ் நாட்டு அரசு வெளியீடு - 1983



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாகாமம் தொடக்கம் வடக்கே முள்ளிக்குளமலைப் பிரதேசம் காளியோடை வரை (அட்டாளைச்சேனை மேற்கு) வாழ்ந்திருந்த மக்களிடையே பௌத்தமும் சைவமும் நிலவியிருந்ததுடன் சைவ ஆலயமும் பௌத்த வழிபாட்டுத்தலமும் அருகருகாய் அமைந்திருந்தன.

## தமிழ் மன்னன் கூத்திகனால் தோற்றுவிக்கப்பட்ட தமிழரசு

சூரத்தீசன் அனுரதபுரி இராச்சியத்தை ஆட்சிபுரிந்தவேளை கிமு 177ல் இரண்டு தமிழர்கள் படையெடுத்து வந்த சூரத்தீசனை வெற்றிகொண்டு அரசாட்சியைக் கைப்பற்றி இருபத்திரண்டு வருடங்கள் இலங்கையை ஆட்சி புரிந்தனர். இலங்கை நூல்களான மகாவம்சம், தீபவம்சம், பூஜாவளி, ராஜாவளி ஆகிய நூல்கள் இத்தமிழர்கள் இலங்கையை ஆட்சி புரிந்ததாகக் குறிப்பிடுகின்றன. இத்தமிழ் மன்னர்களது ஆட்சி இலங்கை முழுவதிலும் நிலவியிருந்தது.[22]

இத்தமிழ் மன்னர்களது ஆட்சிக் காலத்தில் தீகவாபியை உள்ளடக்கிய பட்டிப்பளை என்ற பிரதேசம் முழுவதிலும் தமிழர் செல்வாக்கே நிலைத்திருந்தது. இக்காலத்தில் தமிழர்கள் நிறைந்திருந்த அதாவது பெருங்கற்கால மக்களின் சந்ததியினரான நாகர், பாண்டியர், இயக்கர், வேடர் என்ற திராவிடக் குலங்கள் நிறைந்திருந்த தென்கிழக்கிலங்கை தமிழ் மன்னன் கூத்திகனால் நன்கு அபிவிருத்தி செய்யப்பட்டது.

சேனன், கூத்திகன் ஆகிய மன்னர்கள் இருவரும் கலிங்க குலத்தவர்கள் ஆவர். இதனை மட்டக்களப்பு மான்மியம் என்ற மட்டக்களப்பு பூர்வசரித்திரம் கூறும் கலிங்க குலத்துத்தமிழ்ச் சைவர்களான இவர்களை கலிங்க குலத்தவர்கள் என்று ஆய்வாளர் திருமதி.தனபாக்கியம் குணபாலசிங்கம் அவர்களும்

22. சேனன், கூத்திகன் (கி.மு. 177- 155) ஆகிய தமிழ் மன்னர்கள் இருபத்திரண்டு ஆண்டுகள் நீதி வழுவாது ஆட்சி புரிந்தனர். இதனை தீப வம்சம் (அதி.18 : சொல் 47) குறிப்பிடப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடுகின்றார். (மட்டக்களப்பு மான்மியம் - ஓர் ஆராய்ச்சி, பக் - 65) பண்டைய ஈழவரலாற்றில் கலிங்கர் என்பது தமிழ்ச் சைவரையே குறிக்கும்.

இத்தமிழ் மன்னர்களது ஆட்சிக்காலத்தில் ( கி.மு. 177 - 155) மன்னன் கூத்திகனால் தென்கிழக்கிலங்கை (அம்பாரை உள்ளிட்ட மட்டக்களப்பு) சமூக, சமய, பொருளாதார விவசாய துறைகளில் நன்கு அபிவிருத்தி செய்யப்பட்டதுடன் இலங்கை அரசியலிலும் முக்கியத்துவம் பெற்றிருந்தது. சம்மாந்துறை, வீரமுனை ஆகிய இடங்களை உள்ளடக்கிய இன்றைய சம்மாந்துறை பிரதேசத்தை இம்மன்னன் அபிவிருத்தி செய்ததுடன், இங்கு மட்டக்களப்பு என்ற நகரினையும் நிர்மாணித்து இங்கு தமிழருக்கெனத் தனியான அரசொன்றையும் நிறுவினான்.[23]

இந்த ராஜதானி அமைந்திருந்த இடம் வீரமுனைக்கும் மலுக்கம்பிட்டிக்கும் அருகாமையில் அமைந்திருந்தது.[24] இப்பண்டைய மட்டக்களப்பு நகரினைத் தனது இராஜதானியாகக் கொண்டு உரோகண மண்டலத்தின் வடகிழக்குப் பகுதியான தென்கிழக்கிலங்கையை (அம்பாறை உள்ளிட்ட மட்டக்களப்பு) ஆட்சி புரிந்த மன்னன் கூத்திகன் இப்பிரதேசத்தில் தமிழும் சைவமும் நிலை பெற வேண்டி தென்னிந்தியாவிலிருந்து கலிங்க குலத்துத் தமிழ்க் குடியினரை வரவழைத்து இப்பிரதேசத்தில் குடியேற்றினான். இவனால் புதிய கிராமங்கள் உருவாக்கப்பட்டன.

---

23. மட்டக்களப்பு மான்மியம் - பக் 20, 21 பதிப்பாசிரியர் எப்.எக்ஸி - நடராசா - 1962
பண்டைத்தமிழ் பண்பாட்டுக் கோலங்கள் - பக் 3 - 5 நா. நவநாயகமூர்த்தி 1996

24. மட்டக்களப்பு மான்மியம் ஓர் ஆராய்ச்சி - பக் 98,99 திருமதி தனபாக்கியம் தொல்லியல் எம்.ஏ. 1993



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்காலத்தில் தமிழ் மன்னன் கூத்திகனால் வரவழைக்கப்பட்ட தமிழ்க்குடும்பங்களில் ஒரு பிரிவினர் கூத்திகனால் நிர்மாணிக்கப்பட்ட மட்டக்களப்பு நகரப் பகுதியிலும் மற்றும் நிந்தவூர், அட்டப்பள்ளம் ஆகிய இடங்களிலும் குடியேற்றப்பட்டனர்.[25] என்பதை அறியமுடிகிறது. மேலும் கூத்திகன் காலத்தில் (கி.மு 177 - 155) தெற்கே பூமுனை (கூமுனை) தொடக்கம் வடக்கே தமிழர்கள் நிறைந்திருந்த தீகவாபி வரையிலான நிலப்பரப்பில் தென்னிந்திய குடியேற்றம் இடம் பெற்றது. இதனை ஆய்வுகள் உறுதி செய்கின்றன.

சேனன், கூத்திகன் ஆகிய தமிழ் மன்னர்களது காலத்தில் நாகர்முனை என்ற இன்றைய திருக்கோவில் பிரதேசத்திலும் (செயலகப் பிரிவு) சாகாமம் வடக்குப் புற நகர் பகுதிகளான பட்டிநகர், கிழவியூர் மலை, பொத்தானை ஆகிய இடங்கள் தொடக்கம் வடக்கே முள்ளிக்குளமலைப் பிரதேசம், காளியோடை வரை தீகவாபி உள்ளிட்ட பண்டைய அக்கரைப்பற்று பிரதேசத்தின் மேற்குப் பகுதிகளிலும் தென்னிந்தியக் குடியேற்றங்கள் இடம் பெற்றன.

கலிங்க குலத்துத் தமிழ்ச் சைவர்களான இவர்கள் இந்த இடங்களில் வாழ்ந்திருந்த நாகர், பாண்டியர் மற்றும் இயக்கர் குடியினருடன் சேர்ந்து ஒற்றுமையாக வாழ்ந்திருந்தனர். இத்தமிழ் மன்னர்களது ஆட்சிக்காலத்தில் தீகவாபியை உள்ளடக்கிய பட்டிப்பளை என்ற கல்லோயா பிரதேசம் முழுவதிலும் தமிழர் செல்வாக்கே நிலைத்திருந்தது. மேலும் அம்பாரை மாவட்டத்தில் வணிகத்துறையில் தமிழ் வணிகர் செல்வாக்குப் பெற்றிருந்தனர். இதனைப் பிராமிக் கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன. (1970 - S. PARANAVITHANA)

---

25. பண்டைய மட்டக்களப்பும் சங்கமன் கண்டி இறக்காவில் சிவாலயமும் - பக் 46 நா. நவநாயகமூர்த்தி - 2017



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீகவாபியைச் சேர்ந்த குடுவில் என்னும் இடத்திலுள்ள மலைக்குகையில் பொறிக்கப்பட்டுள்ள பிராமிக் கல்வெட்டொன்று சேனன், கூத்திகன் காலத்தில் தீகவாபியில் வாழ்ந்து வந்த தமிழ் வணிகர் பற்றியும் அவர்கள் பௌத்த துறவிக்கு அளித்த தானம் பற்றியும் குறிப்பிடுகின்றது. இவ்வாறு தமிழர் செல்வாக்கும், தமிழ் மன்னரது ஆட்சியும் நிலைத்திருந்த அக்காலத்தில் அக்கரைப்பற்று மேற்கு பகுதிகளிலும், வடமேற்குப் பிரதேசத்திலும் வாழ்ந்திருந்த பௌத்த தமிழர்களின் பௌத்த வழிபாட்டுத் தலமாக தீகவாபி விளங்கியிருந்ததுடன் தமிழ் மன்னர்களான சேனன், கூத்திகன் என்போரால் ஆதரிக்கப்பட்டும் வந்துள்ளது. இது மறைக்கப்பட்ட வரலாற்றுண்மையாகும். ( நா. நவநாயகமூர்த்தி - 2002)

## ஈழுராஜா என்ற தமிழ் மன்னன் எல்லாளன் காலத்தில்

அனுராதபுரியிலிருந்து இலங்கை முழுவதையும் ஆட்சி புரிந்த சேனன், கூத்திகன் (கி.மு. 177 - 155) ஆகிய தமிழ் மன்னர்களை சிங்கள அரச பரம்பரையில் வந்த அசேலன் என்பவன் வெற்றி கொண்டு அனுராதபுரியைக் கைப்பற்றிப் பத்து ஆண்டுகள் (கி.மு. 155 - 145) ஆட்சி புரிந்தான். இவ்வேளை தமிழனான எல்லாளன் என்பவன் அனுராதபுரிமீது படையெடுத்து வந்து அசேலனை வெற்றி கொண்டு இலங்கையைக் கைப்பற்றி நாற்பத்தி நாலு வருடங்கள் ஆட்சி புரிந்தான்.[26]

இவன் இலங்கை முழுவதையும் ஆட்சி புரிந்த மன்னனாவான். இவனது மேலாதிக்கத்தை கல்யாணி, மாகம ஆகிய தென்னிலங்கைச் சிற்றரசுகள் ஏற்றிருந்தன. 'மாகமை' மன்னன் கவந்தீசன் இவனது மேலாதிக்கத்தை ஏற்றுத் திறை செலுத்தி வந்தான்.[27] இக்காலத்தில் உரோகணத்தின் வடபகுதியில் தமிழ்ச் சிற்றரசர்கள் பலர் ஆட்சி புரிந்து வந்தனர். இதனை மகாவம்சம் (அத் 25 : செய்யுள் 75) குறிப்பிடும்.

---

26. மகாவம்சம் (தமிழாக்கம்) - அத் 21 :செய் 13 - 14 எஸ்.சங்கரன் - மல்லிகை பதிப்பகம். சென்னை.

27. ஈழத்தவர் வரலாறு - பக் 39 கலாநிதி க. குணராசா 1996



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாளி இலக்கியங்களில் 'எலாரா' என்று அழைக்கப்படும் தமிழ் மன்னனே ஏலேலன், எல்லாளன் எனத் தமிழில் அழைக்கப்படுகின்றான். உண்மையில் ஈழராஜா என்ற பெயரே பாளியில் ஏலாறா (எல்லாளன்) என மருவியது.[28] இதே வேளை சைவ மரபுகள் குறிப்பிடும் மனு மன்னன் என்ற எல்லாளன் பற்றியும் இவனது ஆட்சி மற்றும் சமூக, சமயப் பணிகள் பற்றியும் "ஈழத்தமிழர் வரலாற்றுச் சுவடுகள்" (பக் 48,49, 37 - 42) "பண்டைய மட்டக்களப்பும் சங்கமன் கண்டி இறக்காவில் சிவாலயமும்" (பக் 49 - 53) ஆகிய நூல்கள் விபரமாகக் குறிப்பிடுகின்றன.

எல்லாளனது காலத்தில் (கிமு. 145 - 101) தென்கிழக்கிலங்கையை தமிழ் மன்னன் கூத்திகனால் நிர்மாணிக்கப்பட்ட மட்டக்களப்பு நகரிலிருந்து தமிழ் அரசன் ஆட்சி புரிந்து வந்தான் என மட்டக்களப்பு மான்மியம் (பக்21) குறிப்பிடுகின்றது. இவன் தனது தம்பிமார் இருவரை மந்திரிகளாக நியமித்து மட்டக்களப்பு நகரை தனது இராஜதானியாகக் கொண்டு மனுநீதியின் படி ஆட்சி புரிந்து வந்ததாக மேலும் இந்நூல் கூறும்.

இதேவேளை தீகவாபியில் எல்லாளனின் சிற்றரசர் இருவர் ஆட்சி செய்ததாகவும், அனுராதபுரிமீது துட்டகாமினி படையெடுத்த வேளை தமிழ் அரசர்களான அவ்விருவரையும் துட்டகாமினியின் படைகள் வெற்றி கொண்டதாகவும் பாளி நூல்கள் கூறுகின்றன. (என்.கே.எஸ். திருச்செல்வம் - 2013) எல்லாளனது காலத்தில் சாகாமம் நகரிலும், மட்டக்களப்பு நகரிலும் (சம்மாந்துறை) இருந்து இரு தமிழ்சிற்றரசர்கள் ஆட்சிபுரிந்து வந்தனர். இவர்கள் மன்னன் கூத்திகனின் சந்ததியினர் என அறியமுடிகின்றது.

மரபுரைகளும் இதனை உறுதிசெய்கின்றன. (நா.நவநாயகமூர்த்தி - 2017) இச்சிற்றரசர்களையே துட்டகாமினியின் படைகள் வெற்றி கொண்டன. எல்லாளனது காலத்தில் தமிழ்ச்சைவனான எல்லாளனது சைவப் பணிகள் தமிழரது அரசியல் செல்வாக்கு உன்னத நிலையிலிருந்த உரோகணத்தின் வடக்கு, கிழக்கு பகுதியான மட்டக்களப்பின் திருக்கோவில் பிரதேசம் வரை பரவியிருந்தது.

---

28. தொடக்க கால ஈழத்து இலங்கியங்களும் அவற்றின் வரலாற்றுப் பின்னணியும் - கலாநிதி ஆ. வேலுப்பிள்ளை - யாழ்ப்பாணம் 1986



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்காலத்தில் மண்ணாலும், மரத்தாலும் கொண்டு நிர்மாணிக்கப்பட்டு நிலவி வந்த திருக்கோவில் கந்தப் பாணந்துறை (துங்ககோள) முருகன் ஆலயத்தை (சிறியதொரு) முதன் முதலாகச் சிறியதொரு கற்கோயிலாக நிர்மாணித்த மனுமன்னன் என்று மரபுரைகள் கூறும் மன்னன் ஈழராஜா என்ற எல்லாளனேயாவான். தமிழ்ச் சைவனான இவனையே மனுநீதி தவறாத மன்னன் என்று பௌத்த இலக்கியங்கள் புகழ்ந்துரைக்கின்றன[29]. தமிழ்ச் சைவனான எல்லாளன் பௌத்த சமய வளர்ச்சிக்கு அருந்தொண்டுகள் புரிந்துள்ளான். இதனை மகாவம்சம் கூறும்.

இவனது காலத்தில் தீகவாபி தலம் சிறப்புடன் விளங்கியிருந்ததென அறிய முடிகின்றது. (நா. நவநாயகமூர்த்தி - 2017, பக்51) தமிழ் மன்னன் எல்லாளனின் மேலாதிக்கத்தை ஏற்று உறுகுணையின் தென்பகுதியை மாகமையிலிருந்து ஆட்சி புரிந்து வந்த கவந்தீசன் என்னும் சிற்றரசனது காலத்திலேயே இலங்கை வரலாற்றில் தீகவாபி முக்கியத்துவம் பெறத் தொடங்குகின்றது. (நா. நவநாயகமூர்த்தி 2002, பக் 48,49) மேலும் இலங்கை வரலாற்றினை நோக்குமிடத்து சிங்கள மன்னர்களுக்கு அக்கரைப்பற்று பிரதேசம் தீகவாபியுடனான தொடர்பு கவந்தீசன் காலத்திலேயே ஏற்படுகின்றது என்பதை அறிய முடிகின்றது.

எல்லாளனது காலத்தில் மாகமையிலிருந்து ஆட்சிபுரிந்த கவந்தீசன் தனது இளைய மகனான சதாதீசனை தீகவாவியின் அபிவிருத்திக்காக அனுப்பி வைத்தான். இவன் தீகவாபியை (பிரதேசம்) அபிவிருத்தி செய்ததுடன் வளங்கள் நிரம்பப் பெற்ற இப்பிரதேசத்தில் நெல்விளைச்சலைப் பெருக்கினான் என்று வரலாற்று நூல்கள் குறிப்பிடுகின்றன.[30] தமிழர்கள் நிறைந்திருந்த (பௌத்த தமிழர், தமிழ்ச் சைவர்) தீகவாபியில் சதாதீசன் தங்கியிருந்த அவ்வேளை இலுக்குச்சேனைக்குளம், இறக்காமக்குளம் சாகாமக்குளம் ஆகியன சதாதீசனால் புனரமைக்கப்பட்டன.[31]

---

29. ஈழத்தமிழர் வரலாற்றுச் சுவடுகள் பக் 41 நா. நவநாயகமூர்த்தி 2002
30. பண்டைய ஈழம், பாகம் 1 - பக் 72 வே.க. நடராசா 1970
31. இக்காலத்தில் பனங்காடு கிராமம் முக்கியத்துவம் பெற்றிருந்தது. இதுபற்றி பிறிதொரு சந்தர்ப்பத்தில் விரிவாக (நூல்) நோக்கலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவந்தீசனின் இளைய மகனான சதாதீசன் தீகவாபியில் தங்கியிருந்தவேளை தனது தந்தை இறந்த செய்தியைக் கேள்வியுற்று மாகமை நகர் சென்று தந்தையின் ஈமக்கிரியைகளைச் செய்து விட்டுத் தன் தாயுடன் தீகவாவியிலேயே வந்து தங்கியிருந்தான். இதனை மகாவம்சம் (அத் 24 செய் 14 - 15) கூறும். இக்காலம் தொட்டு கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டுவரை (கி.பி. 1215) சாகாமம் தொடக்கம் வடக்கே முள்ளிக்குள மலைப்பிரதேசம் தீகவாபி உள்ளிட்ட காளியோடை வரையான அக்கரைப்பற்று மேற்கு பிரதேசம் ஈழவரலாற்றில் முக்கியத்துவம் பெற்றிருந்தது.

## துட்டகாமினி காலத்தில் :

உறுகுணை சிற்றரசன் கவந்தீசனின் மறைவையடுத்து, இவனது மூத்த மகனான துட்டகாமினி என்பவன் ஆட்சிக்கு வந்தான். இவ்வேளை அதாவது எல்லாளனது இறுதிக்காலத்தில் துட்ட காமினி உரோகண அரசின் வடபால் ஆட்சிபுரிந்த முப்பத்திரண்டு தமிழ்ச் சிற்றரசர்கள் பற்றி மகாவம்சம் குறிப்பிடுகின்றது.[32] இந்த முப்பத்திரண்டு அரசர்களுள் இயக்கர் குலத்து அரசர்களும் நாகர் குலத்து அரசர்களும் அடங்குவர். திராவிடரான இவர்களைத் தமிழர்கள் என்றே மகாவம்சம் குறிப்பிடுகின்றது. இவர்களுள் பலர் இந்துக்களாகவும் இருக்கலாம்.

இம்மன்னர்களில் தென்கிழக்கிலங்கையில் (அம்பாறை உள்ளிட்ட மட்டக்களப்பு) ஆட்சி செலுத்தி வந்த கலிங்க குலத்துத் தமிழ்ச்சைவர்களான சிற்றரசர்களும் அடங்குவர். இவர்களையே தீகவாபியிலிருந்து ஆட்சி புரிந்தவர்கள் என்றும் இவர்களை துட்ட காமினியின் படைகள் வெற்றி கொண்டன என்றும் பாளி நூல்கள் கூறுகின்றன. பண்டைய மட்டக்களப்பு நகரிலிருந்தும் (சம்மாந்துறை) சாகாமம் நகரிலிருந்தும் ஆட்சி புரிந்து வந்த தமிழ்ச் சிற்றரசர்கள் இவர்களாவர்.

---

32. மகாவம்சம் - அத்தியாயம் XXV : செய் 75 கைர் பதிப்பு 1986



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் மன்னன் எல்லாளனுக்குப் பின்னர் அனுராதபுரியிலிருந்து இலங்கை முழுவதையும் துட்டகாமினி ஆட்சி புரிந்த காலத்தில் (கி.மு. 101 - 77) உரோகண மண்டலத்தை பரிபாலிக்கும் பொறுப்பு யுவராஜாவிடம் விடப்பட்டது. இக்காலத்தில் துட்டகாமினியின் தம்பியான சதாதீசன் தீகவாபியைத் தலைநகராகக் கொண்டு தென்கிழக்கிலங்கையைப் பரிபாலித்து வந்தான். (மகாவம்சம், அத் 32 : செய் 2) இவ்வேளை சதாதீசனுக்குக் கீழ் தமிழ்த் தலைவர்கள் குறுநில மன்னர்களாகவிருந்து மட்டக்களப்பை (அம்பாரை உள்ளிட்ட) ஆட்சி புரிந்து வந்தனர் (நா. நவநாயகமூர்த்தி- 2002, பக் 91)

இக்காலத்தில் தமிழ்க் குடியினராக நாகர், இயக்கர் பாண்டியர், கலிங்கர் என்போர் வாழ்ந்திருந்த உறுகுணையின் வடக்கு கிழக்குப் பகுதியான தென்கிழக்கிலங்கையின் ஆளுநராகவே இந்து பௌத்த தமிழர்கள் நிறைந்திருந்த தீகவாபியிலிருந்து சதாதீசன் கடமை புரிந்து வந்தான். தமிழ் மக்களுடன் இவன் நற்லுறவுகள் கொண்டிருந்ததுடன் சைவசமய வளர்ச்சிக்கும் ஆதரவு நல்கி வந்துள்ளதையும் அறிய முடிகின்றது.

இதே வேளை இக்காலத்தில் குறிப்பாக தீகவாபி இறக்காமம், அம்பாரை சாகாமம் ஆகிய பிரதேசங்களில் குளங்கள் பல நிர்மாணிக்கப்பட்டும் புனரமைக்கப்பட்டும் நெற்செய்கை அபிவிருத்தி செய்யப்பட்டதாக அறிய முடிகின்றது. மேலும் சதாதீசனால் சிங்கள பௌத்தர்களும் இப்பிரதேசங்களில் குடியேற்றப்பட்டனரென்பதையும் ஆய்வுகள் உணர்த்துகின்றன.[33] இக்காலத்தில் சாகாமம் தொடக்கம் தீகவாபி முள்ளிக்குள மலை பிரதேசம் உள்ளிட்ட காளியோடை வரையான அக்கரைப்பற்று பிரதேசம் சமூக, சமய, அரசியல் மற்றும் பொருளாதாரம் ஆகியனவற்றில் செழிப்புடன் விளங்கியிருந்தது.

---

33. பண்டைய மட்டக்களப்பும் சங்கமன் கண்டி இறக்காவில் சிவாலயமும் பக் 57 நா.நவநாயகமூர்த்தி 2017



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூர்வ குடியினரிடையே எழுத்து வழக்கு (வரிவடிவம்)

அக்காலத்தில் (கி.மு 5 நூற் - கி.மு.1ம் நூற்றாண்டு வரை) இன்றைய திருக்கோவில் பிரதேசம் உள்ளிட்ட பண்டைய அக்கரைப்பற்று பிரதேசத்தில் எழுதும் வழக்கு நிலவியிருந்தது. பெருங்கற்கால முதிர்ச்சி நிலையில் கி.மு. ஐந்தாம் நூற்றாண்டளவில் தமிழகத்தில் தோன்றி நிலவி வந்த பிராமி எழுத்துக்கள் இலங்கையிலும் அறிமுகமாகி நிலவியிருந்தன. தமிழ்பிராமி அல்லது தமிழி என்ற இப்பழந்தமிழ் எழுத்துக்கள் இப்பிரதேசத்தில் வாழ்ந்திருந்த திராவிடக் குலங்களான நாகர், இயக்கர், பாண்டியர், கலிங்கர் என்போரிடையே வழக்கில் இருந்து வந்ததை இப்பிரதேசத்தில் காணக்கிடைக்கும் பிராமிக் கல்வெட்டுக்கள் உணர்த்துகின்றன.[34]

கி.மு. ஐந்தாம் நூற்றாண்டளவில் தமிழகத்தின் மையப் பகுதிகளில் வழங்கி வந்த உருவ எழுத்தின்றும் செம்மைப் படுத்தப்பட்ட எழுத்துக்கள் (வரிவடிவம்) தமிழில் தோன்றி வழங்கி வந்தன. அதனைத் தொடர்ந்து இவ்வெழுத்துக்கள் அக்காலத்தில் ஈழத்திலும் வாழ்ந்திருந்த தென்னிந்திய வழித்தோன்றல்களும் பெருங்கற்கால மக்களுமான நாகர், இயக்கர் ஆகிய திராவிடக் குடியினரிடையேயும் அறிமுகமாகி வழங்கி வந்தன. இவ்வரி வடிவத்தையே தமிழ்ப்பிராமி என்றும் திராவிடி என்றும் 'தமிழி' என்றும் குறிக்கின்றனர். (நா. நவநாயகமூர்த்தி - 2014, பக் 10,11)

இதேவேளை கி.மு. ஐந்தாம் நூற்றாண்டிலேயே பெருங்கற்கால முதிர்ச்சி நிலையில் அக்கரைப்பற்றுப் பிரதேசம் உள்ளிட்ட உரோணத்தில் அரசியல் செல்வாக்குப் பெற்றிருந்த நாகர் குடியினரிடையே 'தமிழி' எழுத்துக்கள் அறிமுகமாகி நிலவியிருந்தன.[35]

---

34. தமிழ்ப் பிராமி அல்லது தமிழி அல்லது திராவிடி என்ற இவ்வரிவடிவத்தின் தோற்றம் பற்றி 'பழந்தமிழர் நடுகற்பண்பாடு' (பக் 46-53நா. நவநாயகமூர்த்தி - 2011) விபரமாகக் குறிப்பிடுகின்றது.

35. பௌத்தம் இலங்கையில் அறிமுகமாகாத அக்காலத்தில் (கி.மு. ஐந்தாம் நூற்றாண்டு) இலங்கையில் நாகர் ஆட்சியும் தமிழி எழுத்தும் இருந்தன. (மட்டக்களப்பின் பூர்வீக வரலாற்றுச் சான்றுகள் - கட்டுரை செல்வி க. தங்கேஸ்வரி 'பொன்விழாமலர்' இலங்கை வங்கி சிறப்பு மலர் - 1999)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி.மு. ஐந்தாம் நூற்றாண்டிலிருந்து இலங்கையின் கரையோரப் பிராந்தியங்களிலே முதன்முதலாக வரிவடிவத்திற்கான தேவை முதலில் உணரப்பட்டது. நாகவம்சத்தினரைச் சேர்ந்த பெருங்கற்கால மக்கள் கூட்டத்தினரே இலங்கையில் முதன்முதலாக வரிவடிவ வழக்கத்தினை ஆரம்பித்து வைத்தனர்.[36]

அக்காலத்தில் (கி.மு. 5ம்நூற்) தற்போதைய மட்டக்களப்பு அம்பாரை, அம்பாந்தோட்டை மாவட்டங்களின் கரையோரப் பிராந்தியங்களில் அரசியல் அதிகாரம் பெற்றிருந்த (குறுநில அரசுகள்) நாகர் குடியினரிடையே தமிழகத்திலிருந்து பழந்தமிழ் எழுத்துக்கள் (தமிழி) அறிமுகமாகி நிலவியிருந்தன. திஸ்ஸமாறகம உகந்தை, சங்குமன்கண்டி, மண்டூர்,ஏறாவூர், ஆகிய இடங்களில் நாக வம்வத்தினரின் குறுநில அரசுகள் நிலவியிருந்ததுடன் நாகர்முனை, நாகமேடு, நாகஞ்சோலை, கதிரவெளி, நவகிரி தீகவாபி, வாகரை, சாகாமம், தமண, கல்லோடை, மல்வத்தை முதலான இடங்கள் நாகர் குடியினரின் வாழ்விடங்களாக இருந்துவந்தன.[37]

பண்டைய மட்டக்களப்பின் (அம்பாரை உள்ளிட்ட) தென்பகுதியில் அமைந்துள்ள சங்கமன் கண்டி தொடக்கம் வடக்கே முள்ளிக்குள மலைப்பிரதேசம் தீகவாவிப் பகுதி உள்ளிட்ட காளியோடை வரையான அக்கரைப்பற்று மேற்குப் பிரதேசத்தில் நாகரீக மையங்களில் இக்கால கட்டத்தைச் சேர்ந்த குறிப்பாக கி.மு. நாலாம் நூற்றாண்டு தொடக்கம் கி.மு. முதலாம் நூற்றாண்டு வரையான காலத்தில் பொறிக்கப்பட்ட தமிழிக் கல்வெட்டுக்கள் (தமிழ்பிராமி) காணக்கிடைக்கின்றன.

---

36. இலங்கை வரலாறு, பாகம் I பக் - 70 செ. கிருஷ்ணராஜா MA. வரலாற்றுத்துறை- 2005

37. இந்த இடங்களில் பெருங்கற்கால சின்னங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்குமன்கண்டி மற்றும் சாகாமம் மொட்டையாகல்லு பிராமிக் கல்வெட்டுக்கள் என்பன பாண்டியர் குலத்துத் தமிழ் அரசர்கள் பற்றிக் குறிப்பிடுகின்றன. அண்மைக் காலத்தில் கஞ்சிகுடியாறு (காஞ்சிரங்குடாமேற்கு) பகுதியில் பருமக என்ற வாசகம் பொறிக்கப்பட்ட தமிழ்க் கல்வெட்டொன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இதே போன்று சாகாமம் புறநகர் பகுதி பொத்தானை மலைப்பாறையொன்றில் தமிழி எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட கல்வெட்டொன்று காணக்கிடைக்கின்றது.

இக்கல்வெட்டில் பருமக என்ற வாசகம் அடங்கியுள்ளது. கி.மு. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த பொத்தானைப் பாறைக் கல்வெட்டு இப்பகுதியில் அக்காலத்தில் அதிகாரம் செலுத்தி வந்த பருமகன் (பெருமகன்) பற்றிக் குறிப்பிடப்படுகின்றது.

அக்காலத்தில் வணிகத் துறையில் அம்பாரை மாவட்டத்தில் தமிழ் வணிகர் செல்வாக்குப் பெற்றிருந்தனர். இதனைப் பிராமிக் கல்வெட்டொன்று குறிப்பிடுகின்றது. (S.PARANAVITANA - 1970) தீகவாபியைச் சேர்ந்த குடுவில் என்னுமிடத்திலுள்ள மலைக்குகையில் பொறிக்கப்பட்டுள்ளதொரு பிராமிக் கல்வெட்டு சேனன், கூத்திகன் காலத்தில் (கி.மு.இரண்டாம் நூற்) வாழ்ந்து வந்த வணிகர் பற்றியும் அவர்கள் பௌத்த துறவிக்கு அளித்த தானம் பற்றியும் குறிப்பிடுகின்றது.[38]

அக்கரைப்பற்று முள்ளிக்குள மலை( அட்டாளைச்சேனை மேற்கு) பிரதான மலைக் குன்றிலிருந்து சிறிய மலைக் குன்றிற்குச் செல்லும் பாதையின் அருகில் காணப்படும் கற்குகைகளில் பிராமி எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. இவை கி.மு. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தவைகளாகும். இதில் ஹகபதி என்னும் தமிழ் சொல் காணப்படுகின்றது. மேலும் மலைக்குகைகளில் உள்ள கல்வெட்டொன்றில் 'நதிகிரிய' என்னும் சொல் பொறிக்கப்பட்டுள்ளது.

---

38. ஈழத்தமிழர் வரலாற்றுச்சுவடுகள் - பக் 48 நா நவநாயகமூர்த்தி 2002



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது 'நந்திகிரி' என்று பொருள் படுவதாக தொல் பொருளாய் வாளரான எல்லாவெல மேதானந்ததேரர் குறிப்பிட்டுள்ளார். இதன் மூலம் அக்காலத்தில் முள்ளிக்குளம் மலை நந்திகிரி என்ற பெயரைப் பெற்று விளங்கியமை தெரிகின்றது. இம்மலையில் அல்லது மலைக்குகையில் நந்திதேவர் வழிபாடு அல்லது சிவவழிபாடு நிலவிய ஆலயம் எனக் கொள்ளலாம். இம்மலை நந்திகிரி எனப் பெயர் பெற்றுள்ளதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர். (என்.கே.எஸ். திருச்செல்வம் - 2013, பக் 97, 98)

மேலும் தீகவாபியை சேர்ந்த குடுவில் என்ற இடத்தில் கண்டெடுக்கப்பட்டதொரு பிராமிக் கல்வெட்டில் தமிழ்ப் பெண் பற்றிய குறிப்பொன்று உள்ளது. இக்கல்வெட்டு பிராகிருத மொழியில் 'தமெட' என்றழைக்கப்பட்ட தமிழ் மக்கள் அக்கரைப்பற்று பகுதியில் இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் இருந்தமைக்கு சான்றாக உள்ளது. (கலாநிதி சி. பத்மநாதன் - 2006 P.51)[39]

இதேவேளை தற்போதைய அம்பாறை மாவட்டமும் சேர்ந்த பண்டைய மட்டக்களப்பில் தமிழ்பிராமிக் (தமிழி) கல்வெட்டுக்கள் இலங்கையின் ஏனைய பிரதேசங்களை விட அதிகம் காணப்படுகின்றன. இக்கல்வெட்டுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள பெயர்கள், குறியீடுகள் எல்லாம் பெருங்கற்காலக் குறியீடுகளையே ஒத்துக் காணப்படுகின்றன.

கிழக்கிலே காணப்பட்ட பிராமிக் கல்வெட்டுக்களை ஆராய்ந்த பேராசிரியர் பெர்ணாண்டோ, ஐராவதம் மகாதேவன் போன்றோர் இவ்வெழுத்துக்கள் பௌத்தத்திற்கு முந்திய தமிழ்பிராமி (தமிழி) வடிவங்கள் எனக் கூறியுள்ளனர். அ,இ,ம,ள,ழ,ன போன்ற எழுத்துக்கள் தமிழ்ப் பிராமியிலிருந்து கிடைக்கின்றன. இப்பழைய தமிழி எழுத்துக்கள் கிழக்கிலங்கைக் கல்வெட்டுக்களில் காணப்படுகின்றன.[40] என்பது குறிப்பிடத்தக்கது.

---

39. இலங்கையில் தமிழர் - பக் 37, 38, கலாநிதி முருகர் குணசிங்கம் - 2008

40. பண்டைய மட்டக்களப்பு பிரதேசத்தில் பெருங்கற்கால கலாசாரம் - கட்டுரை க. தங்கேஸ்வரி (தொல்லியல் சிறப்பு ) தொண்டன் - 2003, சிறப்பு மலர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுராதபுரி தமிழ் அரசர்கள் ஆட்சிக் காலத்தில்

மாமன்னன் துட்டகாமினியின் மறைவையடுத்து அவனது தம்பியான சதாதீசன் (கி.மு.77 -59) அனுராதபுரியில் மன்னனானான். இவனது காலத்தில் அக்கரைப்பற்று பிரதேசத்தில் அக்காலத்தில் பிரதான பௌத்த தலமாக விளங்கி வந்த தீகவாபி விகாரையை சேதியத்துடன் கட்டுவித்தான். ரத்தினங்கள் பதித்த வலை போன்ற அமைப்பினால் சேதியத்தைப் போர்த்தினான் இதனை மகாவம்சம் குறிப்பிடுகின்றது.[1]

சதாதீசன் இறந்ததும் அவனது பிள்ளைகள் அரசுரிமைக்காகச் சச்சரவுப்பட்டனர். சதாதீசனின் மூன்று மக்கள் ஒருவர் பின் ஒருவராக ஆட்சி புரிந்தனர். பின்னர் வட்டகாமினி என்னும் பெயருடைய நாலாவது மகன் அரசுக்கு வந்தான்.[2] இதுபற்றி விளக்கமாகக் குறிப்பிடுமிடத்து சதாதீசன் மரணம் எய்தியதைத் தொடர்ந்து அவனது மக்களிடையே அரசுரிமைப் போட்டி ஏற்பட்டது.

இதனைத் தொடர்ந்து தூபராம பிக்குகள் ஒன்று கூடி இரண்டாவது மகன் துலத்தனன் என்பவனை அரசனாக்கியதும் மூத்தவன் லஞ்சதீசன் படையுடன் வந்து தனக்குரித்தான சிம்மாசனத்தைப் பெற்றுக் கொண்டான். துலத்தனன் ஆக நாற்பது நாட்களே அரசிருக்கையில் அமர்ந்தான். லஞ்சதீசன் ஒன்பது ஆண்டுகள் அரசனாக விளங்கினான்.

---

1. மகாவம்வம் - அத் 33: செய்.9 தமிழாக்கம் எஸ் சங்கரன் மல்லிகை பதிப்பகம், சென்னை 1962

2. இலங்கையின் சுருக்க வரலாறு பக்19 எச்.டபிள்யு கொமறின்றன் 1960



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவன் மரணமடைய அவனுடைய மற்றொரு தம்பி கல்லாட நாகன் முடி தரித்தான். கம்மகாரத்தகன் என்ற படைத்தளபதி மன்னனைக் கொன்று விட்டு ஆட்சியைக் கைப்பற்றியபோது மன்னனின் இளைய சகோதரனான வட்டகாமினி மீண்டும் அரசுரிமையைக் கைப்பற்றிக் கொண்டான். கம்மகாரத்தகன் கொல்லப்பட்டான் (மகாவம்சம் அத் 33 : செய் 17 - 34)

இக்காலகட்டத்தில் அதாவது சதாதீசன் (கி.மு.77 - 59) துலத்தனன் (கி.மு.59) லஞ்சதீசன் (கி.மு. 59 -50) கல்லாட நாகன் (கி.மு. 50 - 44 ) ஆகிய மன்னர்கள் அனுராதபுரியிலிருந்து ஆட்சி புரிந்த காலத்தில் உறுகுணையில் தமிழரது அரசியல் செல்வாக்கு நலிவுற்றிருந்ததுடன் பௌத்த சிங்களவரும் இங்கு வந்து குடியேறி இங்கு வாழ்ந்திருந்த நாகர், இயக்கர், பாண்டியர் கலிங்கர் என்ற தமிழ்க்குடியினருடன் இணைந்து வாழ்ந்திருந்தனர். உறுகுணையின் தென்பகுதியில் பௌத்தம் மேலோங்கியிருந்தது.

இதேவேளை, உறுகுணையில் வடக்கு, கிழக்குப் பகுதியான அக்கரைப்பற்றுப்பிரதேசம் உள்ளிட்ட தென்கிழக்கிலங்கையில் (அம்பாரை உள்ளிட்ட மட்டக்களப்பு) தமிழ்க் குறுநில மன்னர்களாக தமிழ்பிரதானிகள் ( ஆட்சித்தலைவர்கள்) செயற்பட்டு வந்தபோதும் அரசியலில் நலிவுற்ற நிலையே நிலவி வந்தது. பௌத்த தமிழர்கள் சிங்கள பௌத்தர் என்போர் இங்கு வாழ்ந்திருந்ததுடன் பௌத்த வழிபாட்டுத் தலங்களும் சிறப்புடன் நிலவியிருந்தன.

தென்கிழக்கிலங்கையில் தமிழ்குறுநில மன்னர்களால் சைவம் பேணப்பட்டு வந்தது. அக்கரைப்பற்று பிரதேசத்தில் நிலவி வந்த திருக்கோவில் முருகன் ஆலயம், சிவாலயம், இறக்காவில் சிவாலயம், சங்குமன் கண்டி சிவாலயம், நந்திகிரி சிவாலயம் சங்குமன்கண்டி குகை சிவாலயம் போன்றவை இக்குறுநில மன்னர்களது (பிரதானிகள்) ஆதரவைப் பெற்றிருந்தன. இவ்வேளையிலேயே கி.மு.44 ல் வட்டகாமினி அனுராதபுரியில் மன்னனாக முடிசூடிக் கொண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வேளை தீசன் என்ற தமிழ் சிற்றரசன் உரோகணத்தில் தனது ஆதிக்கத்தை நிலை பெறச் செய்திருந்தான். பிராமணனான இவன் அனுராதபுரத்தில் ஆட்சி புரிந்து வந்த வட்டகாமினிக்கெதிராக ஆட்சியுரிமை வேண்டிக் கலகம் செய்து வந்தான். இதனை மகாவம்சம் குறிப்பிடுகின்றது. பிராமணனான இவனை நேரடியாகச் சந்திப்பதற்கு ஆரம்பத்தில் வட்டகாமினி மன்னன் தயங்கினான் என மகாவம்சம் மேலும் குறிப்பிடும்.

இலங்கையில் வாழ்ந்திருந்த திராவிடக் குடியினரிடையே (குலங்கள்) பௌத்தம் பரவிப் பௌத்த தமிழர்கள் உருவாகியிருந்த அக்காலத்தில், உரோகணத்தில் மட்டுமன்றி அனுராதபுர ஆட்சியிலும் இந்து சமயத்தையும், தமிழர் ஆட்சியையும் முன்னிலைப்படுத்த வேண்டும் என்ற நோக்கிலேயே பிராமணனான தீசனின் அனுராதபுரி ஆட்சிக்கெதிராக அரசியல் கிளர்ச்சிகள் அமைந்திருந்தன.

இலங்கையில் பிராமணர் பெற்றிருந்த செல்வாக்குப்பற்றி மகாவம்சம் கூறும் உபதீசன் (உபதிஸ்ஸ) என்னும் பிராமணனை இந்நூல் விஜயனோடு தொடர்புபடுத்திக் கூறுகின்றது. உபதிஸ்ஸ விஜயனின் புரோகிதராக விளங்கினான் என்றும் அவன் உபதிஸ்ஸ காமம் என்னும் ஊரைக் கொண்டிருந்தான் என்றும் கூறப்படுகின்றது. மன்னன் விஜயன் இறந்தபின் சிலகாலம் இராச்சியபரிபாலனம் புரோகிதர் வசம் இருந்ததென்றும் மகாவம்சம் கூறும்.[3] பிராமணர்களுக்கே பிரத்தியேகமாகவிருந்த வசிப்பிடத்தை மகாவம்சம் (MV.X:102) உரைக்கின்றது.

---

3. இலங்கையில் இந்து கலாசாரம் பகுதி 1 - பக் 35 வரலாற்று பேராசிரியர் கலாநிதி சி.பத்மநாதன் - 2000



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் பௌத்தம் இங்கு அறிமுகமான பின்பும் பிராமணர்கள் அரசர்களால் ஆதரிக்கப்பட்டு வந்ததுடன் செல்வாக்குடனும் விளங்கினர். கி.மு. 1ம் நூற்றாண்டில் பௌத்தம் அரச ஆதரவு பெற்றிருந்த வேளையில் இந்து சமயத்தை முன்னிலைக்கு இட்டுச் செல்ல அரசியல் ஆதிக்கத்தைப் பெற பிராமணன் தீசன் முயன்றான். அதன் விளைவே தீசனின் அனுராதபுரி அரசுக்கெதிராக மேற்கொண்ட கிளர்ச்சி எனலாம். இது வட்ட காமினி அரசுக்கு வந்து சில மாதங்களில் நிகழ்ந்திருந்தது. இவனது கிளர்ச்சியால் பௌத்த பிக்குமார் நாட்டை விட்டுச் செல்லவும் நேரிட்டது.[4]

உரோகணச் சிற்றரசனான தீசன் அனுராதபுரி அரசுக் கெதிராகக் கிளர்ச்சி செய்து கொண்டிருந்த இவ்வேளையில் ஏழு தமிழர்களது படையெடுப்பொன்று ஈழத்தில் நிகழ்ந்தது. இவர்கள் மாதோட்டத்தில் வந்து இறங்கினர். இவர்களைச் சந்தித்த உறுகுணைத் தீசனும், தமிழ் இளவரசர்கள் எழுவரும் சேர்ந்து ஆட்சியை ஒப்படைக்குமாறு வட்டகாமினிக்குச் செய்தி அனுப்பினர்.

இதேவேளை கூர்த்தமதிபடைத்த மன்னன் தனியே தீசனுக்குச் செய்தியொன்று எழுதி அனுப்பினான். இந்த அரசு உன்னுடையது. அவர்களைப்போரிட்டு வெல்வாயாக என்று வட்டகாமினி கேட்டுக் கொண்டான். அப்படியே ஆகட்டும் என்று பதிலளித்த தீசன் தமிழ் அரசர்களுடன் போரிட்டான், ஆனால் அவர்கள் தீசனை வெற்றி கொண்டனர்.[5] என அறிய முடிகின்றது.

4. ஈழமும் இந்து மதமும் - அனுராதபுரகாலம் - கட்டுரை கலாநிதி சி.க.சிற்றம்பலம் சிந்தனை தொகுதி 11, இதழ் 1 பங்குனி - 1984

5. மகாவம்சம் - அத் 33, செய் 39 - 41 தமிழாக்கம் எஸ். சங்கரன் சென்னை - 1960



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரோகணத்து சிற்றரசனான தீசனின் படையை வெற்றி கொண்ட ஏழு தமிழ் மன்னரின் படை அனுராதபுரத்தை நோக்கி விரைந்தது. கொலம்பகாலத் என்னுமிடத்தில் வட்டகாமினிக்கும் தமிழ் அரசர்களுக்குமிடையில் நடந்த சண்டையில் வட்டகாமினி தோல்வியுற்றான். வட்டகாமினியின் மனைவியான சோமாவதி என்பவள் தமிழ் அரசன் ஒருவனிடம் சிக்கினாள். மற்றொருவன் சக்தி வாய்ந்த புத்தரின் ஐயக்கலத்தை (பிச்சாப்பாத்திரம்) அபகரித்துக் கொண்டான். இவர்கள் இருவரும் இந்தியா மீண்டனர்.[6]

வட்டகாமினியைத் தோற்கடித்த ஐந்து தமிழ் அரசர்கள் ஆட்சி பற்றி மகாவம்சம் குறிப்பிடுகின்றது. புலகத்தன், பாகியன் பணையமாறன், தத்திகன், பிலயமாறன் ஆகிய இவர்கள் ஒருவர் பின் ஒருவராக பதினாலு வருடங்கள் ஏழு மாதங்கள் அனுராதபுரியிலிருந்து ஆட்சி செலுத்தினர் என மகாவம்சம் (அத் 33 செய் 56 - 61) கூறும். இக்காலகட்டத்தில் வட்டகாமினி மன்னன் மலைநாட்டில் மறைந்து வாழ்ந்து வந்தான்.[7] இத்தமிழ் அரசர்களது ஆட்சிக் காலத்தில் இவர்களது அரசியல் செல்வாக்கு (ஆதிக்கம்) தெற்கே உறுகுணை வரை நிலவியிருந்தது.

இதனை விளக்கமாகக் குறிப்பிடுமிடத்து அக்கரைப்பற்று பிரதேசம் உள்ளிட்ட உரோகணமண்டலத்தின் சங்கமன்கண்டி வரை இவர்களது ஆதிக்கம் பரந்திருந்ததை ஆய்வுகள் உணர்த்துகின்றன. இத்தமிழ் மன்னர்களது ஆட்சிக்காலத்தில் இந்துமத வளர்ச்சிக்கு ஆற்றிய பணிகள் பற்றி மகாவம்சம் குறிப்பிடவில்லை. ஆயினும் தமிழ் மன்னர்களது ஆட்சி இக்கால கட்டத்தில் தூண்டுகோலாக அமைந்திருந்தது எனக் கொள்ளலாம். (கலாநிதி சி.க. சிற்றம்பலம் - 1984) இவர்களது ஆட்சிக் காலத்தில் இந்து சமய வளர்ச்சியிலும் கவனம் செலுத்தி வந்துள்ளனர் என்பதை வரலாற்றுச் செய்தியொன்று உணர்த்துகின்றது.

6. பண்டைய ஈழம் பகுதி I - பக். 86, 87 வே.க.நடராசா - 1970

7. இலங்கையின் சுருக்க வரலாறு - பக் 19 எச்.டபிள்யு கொடிறின்றன் 1960



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன்வாயிலாக இவர்களது சைவப்பணிகள் தெற்கே அக்கரைப்பற்று பிரதேசத்தின் சங்குமன்கண்டி வரை பரந்திருந்தது என்பதை அறிய முடிகின்றது. இத்தமிழ் அரசர்களால் திருக்கோவில் சித்திரவேலாயுதர் ஆலயம் திருப்பணி செய்யப்பட்டதாக செய்தி (மரபுரை) கூறும். இதனை இவ்வாலயப் பதிகமும் உறுதி செய்கின்றது.

தமிழரின் இரண்டாம் படையெழுச்சிக் காலத்தில் வந்த சோழநாட்டு மன்னர் எழுவர் திருக்கோவிலைக் கட்டிமுடிப்பதற்கு இந்தியாவிலிருந்து கல் முதலியன கொணர்ந்து கட்டிமுடித்துத் திருப்பணியைப் பூர்த்தி செய்தார்கள் என்று கோயிற் பதிகமொன்றினால் உணரக்கிடக்கின்றது.[8] கோயிற் பதிகம் குறிப்பிடும் இவ்வரலாற்றுச் செய்தியானது ஏற்கனவே தொடங்கப் பெற்றுப் பூர்த்தி செய்யப்படாதிருந்த ஆலயத்திருப்பணியினை இத்தமிழ் மன்னர்கள் கட்டிமுடித்துத் திருப்பணியினைப் பூர்த்தி செய்தனர் என்பதையே குறிக்கின்றது.

இத்தமிழ் மன்னர்களது ஆட்சிக்காலத்தில் (கி.மு. 44 - 29) மட்டக்களப்பில் அதிகாரம் செலுத்தி வந்த குறுநில மன்னர்களான தமிழ்ப் பிரதானிகள் என்போர் சுதந்திரமாகச் செயற்பட்டு வந்ததுடன் சைவ ஆலயங்களுக்கும் பௌத்த ஆலயங்களுக்கும் ஆதரவளித்து வந்தனர்.இக்காலத்தில் சங்கமன் கண்டி தொடக்கம் காளியோடை வரை பரந்திருந்த அக்கரைப்பற்று பிரதேசத்தில் வாழ்ந்திருந்த பௌத்த தமிழர், தமிழ் சைவர், பௌத்த சிங்களவர் என்போர் ஒற்றுமையாக வாழ்ந்திருந்ததுடன் தீகவாபி, முள்ளிக்குளமலை (நந்திகிரி) கண்ணகிபுரம் (சாகாமம் வடக்கு புறநகர்) சாகாமம், பொத்தானை (கிழவியூர்மலை பகுதி) றூபஸ், கஞ்சிகுடி ஆறு, வில்காமம், இறக்காவில், நாகர்முனை துறை (துங்ககோளா) ஆகிய இடங்களில் அமைந்திருந்த சைவ பௌத்த ஆலயங்கள் செழிப்புடன் விளங்கியிருந்தன.

தமிழ் மன்னர்கள் எழுவரின் படையெடுப்பின் போது போரில் தோல்வியுற்று ஓடிப்போன சிங்கள மன்னன் வட்டகாமினி பதினாலு வருடங்களுக்குப் பின் படைதிரட்டி வந்து அவ்வேளை அனுராதபுரியில் ஆட்சி புரிந்து வந்த தாட்டிகன் என்ற தமிழ் மன்னனை வெற்றி கொண்டு அனுராதபுரியில் மன்னனான இவன்

8. மட்டக்களப்பு மான்மியம் - பக்5 எப் எக்ஸி நடராசா பதிப்பாசிரியர் 1962



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி.மு. 29ம் ஆண்டு முதல் 17 வரையும் பன்னிரண்டு ஆண்டுகள் ஆட்சி புரிந்தான். (மகாவம்சம் அத் 33 செய் 95 - 102) இவனுக்குப் பின் இவனது தமையனின் மகனான மகாசூலிக மகாதிஸ்ஸன் பதினான்கு ஆண்டுகள் ஆட்சி புரிந்தான்.

இவனது ஆட்சிக் காலத்தில் வட்டகாமினியின் மகனான மகாநாகன் என்பவன் தான் ஆட்சியைப் பெறுவதற்காக கலகம் செய்து கொண்டிருந்தான். ஆதலால் அவன் சோரநாகன் என்று பெயர்பெற்றான். மகாசூலிக மகாதிஸ்ஸன் மரணமடைந்ததைத் தொடர்ந்து சோரநாகன் முடிசூடிக் கொண்டு பன்னிரண்டு ஆண்டுகள் (கி.மு. 3 - கி.பி.9) ஆட்சி புரிந்தான் என (மகாவம்சம் அத் 34 : செய் 11,12,13) அறியமுடிகின்றது.

இக்காலகட்டத்தில் அதாவது 'சோரநாகன்' முடிசூடியகாலம் வரை (கி.மு 29 - கி.மு.3) உறுகுணையின் வடக்கு, கிழக்குப் பகுதியான மட்டக்களப்பில் தமிழரது அரசியல் செல்வாக்கு நலிவுற்றிருந்ததுடன் சைவசமயமும் செழிப்பிழந்திருந்தது. சைவாலயங்கள் பொலிவிழந்து காணப்பட்டன. இக்காலத்தில் விண்டு அணையை [9] (விந்தனை) அரசிருக்கையாக்கி மட்டக்களப்பு அரசை இயக்கர் குடியினர், நாகர் குடியினர் பொறுப்பெடுத்து ஆட்சி செய்தனர். கலிங்க குலத்து தமிழர்கள் போற்றி வந்த சிவசமயமான (சிவவழிபாடு) சைவத்தை ஒதுக்கிவிட்டு இவர்கள் சிறுதெய்வ வழிபாட்டை மட்டக்களப்பில் முன்னிலைப்படுத்தியிருந்தனர். இயக்கர் பௌத்த சமயத்தை தழுவியிருந்தவர்களாதலால் மட்டக்களப்பில் சைவ சமயம் பாதிப்புக்களை எதிர்நோக்கியிருந்தது. இதன் பயனாக மட்டக்களப்பில் சிறந்திருந்த சிவாலயங்கள் பல பொலிவிழந்து காணப்பட்டன. [9]

இவ்வேளை அக்கரைப்பற்று பிரதேசத்தில் வரலாற்றுத் தொன்மைமிக்க நகரங்களான சங்குமன் கண்டி, சாகாமம், நந்திகிரி முள்ளிக்குளம், பொத்தானை போன்ற இடங்களில் அமைந்திருந்த சிவாலயங்கள் மற்றும் கிழக்குக் கரையில் புகழ்பூத்த சிவாலயமாக விளங்கியிருந்த சங்குமன் கண்டி முனை இறக்காவில் சிவாலயமும் பொலிவிழந்து காட்சியளித்ததுடன் இதேவேளை பௌத்த சமயம் இப்பிரதேசத்தில் செழிப்புடன் விளங்கியிருந்தது.

9. பண்டைய மட்டக்களப்பும் சங்கமன் கண்டி இறக்காவில் சிவாலயமும் - பக் 64, 65 நா. நவநாயகமூர்த்தி - 2017



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கி.பி.9ம் ஆண்டு சோரநாகன் காலம் தொடக்கம் கி.பி. 325ல் மகாசேனன் ஆட்சிக்கு வந்த காலம் வரை மட்டக்களப்பு தமிழ்ச் சிற்றரசர் ஆட்சியில் அக்கரைப்பற்று

அனுராதபுரியில் சோரநாகன் (கிமு 3 கிபி 9) ஆட்சி செலுத்தி வந்த காலத்தில் கலிங்க குலத்துத் தமிழ்ச்சைவனான இரஞ்சலன் என்பவன் மட்டக்களப்பில் (அம்பாறை உள்ளிட்ட) நலிவுற்ற நிலையிலிருந்த தமிழரது அரசியல் அதிகாரத்தை (ஆட்சி) மீண்டும் நிலை நிறுத்தவும் சைவசமயத்துக்குப் புத்துயிர் அளிக்கவும் வேண்டி முந்நூறு படை வீரர்களுடன் தென்னிந்தியாவிலிருந்து வந்து தென்கிழக்கிலங்கையின் 'சிங்காரத்தோப்பு' அணை துறையில் (அட்டப்பள்ளம்) இறங்கினான்.

இரஞ்சலன் இப்பிரதேசத்தில் வாழ்ந்திருந்த நாகர் குடியினரின் துணையுடன் விண்டு அணை என்ற விந்தனை சென்று இயக்கர் அரசனையும், பிரதானிகளையும் வெற்றி கொண்டு விண்டு அணையில் அமைந்திருந்த இராசமாளிகையையும் நிர்மூலமாக்கி மட்டக்களப்பைத் தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்தான்.

இதனைத் தொடர்ந்து கலிங்க குலத்துத் தமிழனான இரஞ்சலன் தமிழ் மன்னன் கூத்திகனால் (கிமு177-155) நிர்மாணிக்கப்பட்ட மட்டக்களப்பு நகரிலிருந்து (வீரமுனை அருகில்) தென்கிழக்கிழலங்கையை ஆட்சி புரிந்து வரும் வேளை அனுராத புரி மன்னன் சோரநாகன் (கிமு 3-கிபி 9) மட்டக்களப்பு மன்னன் இரஞ்சலனிடம் திறை கேட்டுத் தனது தூதுவர்களை அனுப்பி வைத்தான்.

இவர்கள் இரஞ்சலனுடன் புரிந்துணர்வுடன் கலந்துரையாடியதன் பின்னர் மட்டக்களப்பு மன்னன் அனுராதபுரி நகர் சென்று மன்னன் சோரநாகனைக் கண்டு நட்புடன் உரையாடி அரசியல் ஒப்பந்தம் ஒன்றும் செய்து கொண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் மூலமாக மட்டக்களப்பு அரசைச் சுதந்திர இராச்சியமாக அனுராதபுரி மன்னன் சோரநாகன் ஏற்றுக் கொண்டான். இதனைத் தொடர்ந்து மட்டக்களப்பை வந்தடைந்த இரஞ்சலன் தனது படைத்தலைவனான ஸ்ரீகுலன் என்பவனை மட்டக்களப்பு மன்னனாக்கினான்.

அத்துடன் இப்பிராந்தியத்தில் தமிழரது அரசியல் செல்வாக்கை மேலும் நிலைபெறச் செய்ய வேண்டும் என்ற நோக்கில் தமிழ்க் குடியினரை அழைத்து வரத் தென்னிந்தியா சென்றான்.[1] அனுராதபுரி மன்னன் சோரநாகனது காலத்திலேயே (கிமு3-கிபி9) தென் கிழக்கிலங்கையில் தமிழரது அரசியல் ஆதிக்கம் மீண்டும் தழைத்திருந்ததுடன் சைவ சமயமும் பொலிவுறத் தொடங்கியிருந்தது இவனது ஆட்சியின் இறுதிக் காலத்திலேயே இரஞ்சலன் தனது படைத்தலைவனான ஸ்ரீகுலனை மட்டக்களப்பு மன்னனாக்கினான்.[2] படையாட்சித் தலைவனான ஸ்ரீகுலன் இரஞ்சலனின் படைப்பிரிவுக்குத் தலைமை வகித்த சோழ நாட்டினனாகவோ அல்லது தொண்டை நாட்டினனாகவோ கொள்ள முடியும்.[3] மட்டக்களப்பு நகரிலிருந்து தென்கிழக்கிலங்கையை ஆட்சிபுரிந்த ஸ்ரீகுலனின் அரசியல் செல்வாக்கு தெற்கே மாணிக்க கங்கை வரை பரந்திருந்தது.[4] ஸ்ரீகுலன் கிபி 9ம் ஆண்டு தொடக்கம் கிபி 59ம் ஆண்டு வரை மட்டக்களப்பை ஆட்சி புரிந்தான். ஸ்ரீகுலன் கலியுகம் 3020 தொடக்கம் 3070 வரை மட்டக்களப்பை ஆட்சி புரிந்துள்ளதாக மட்டக்களப்பு பூர்வ சரித்திரம் ஏடு குறிப்பிடும். ஆதலால் ஸ்ரீகுலன் கிபி 9ம் ஆண்டு தொடக்கம் கிபி 59ம் ஆண்டு வரை தென்கிழக்கிலங்கை என்ற மட்டக்களப்பை ஆட்சி புரிந்துள்ளான் என அறிய முடிகின்றது.

இவனுக்குப் பின் இவனது மகனான வாசுரன் (கிபி 59-99) என்பவன் மட்டக்களப்பு மன்னனானான். இவன் நாற்பது ஆண்டுகள் சுதந்திரமுள்ள சிற்றரசனாக தென்கிழக்கிலங்கை என்ற மட்டக்களப்பை ஆட்சி புரிந்துள்ளான். ஸ்ரீகுலன், வாசவரன் ஆகிய மன்னர்களது ஆட்சிக் காலத்தில் (கிபி 9-99)

---

1. மட்டக்களப்பு மான்மியம் - பக் 21, 23 பதிப்பாசிரியர் எப்.எக்ஸி. நடராசா - 1962
2. சோரநாகன் ஆட்சிக்காலத்தில் தான் முன்பு கிளர்ச்சியாளனாகவிருந்த காலத்தில் தனக்குப் புகலிடம் கொடுக்காத பதினெட்டு விகாரைகளை அழித்தான் என அறிய முடிகின்றது. இவனது அரசியான அனுலாதேவி இவனை நஞ்சிட்டு கொன்றாள். (மகாவம்சம் அத் 34 : செய் 14) 3. மட்டக்களப்பு வரலாறு - ஓர் அறிமுகம் - பக் 49,50 வெல்லவூர் கோபால் - 2005 4.மட்டக்களப்பு மான்மியம் பக் 23 பதிப்பாசிரியர் எப்.எக்ஸி நடராசா - 1962



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மன்னர்களது அரசியல் ஆதிக்கம் தெற்கே மாணிக்க கங்கை வரை பரந்திருந்தது. இவர்களால் தெற்கே மாணிக்க கங்கை வரை ஏராளமான வயற் காணிகள் அபிவிருத்தி செய்யப்பட்டு நெற்செய்கை விரிவுபடுத்தப்பட்டது.

மேலும் நீர்ப்பாசனத் திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டன. வாகூரன் காலத்தில் மட்டக்களப்புக்குத் தெற்கே முன்னெடுக்கப்பட்ட ஒரு பிரதேசம் 'வாகூரவட்டை' என அக்காலத்தில் அழைக்கப்பட்டது.[5] இவர்களது ஆட்சிக் காலத்தில் மட்டக்களப்பில் தமிழும், சைவமும் முன்னிலை பெற்றிருந்தன. தமிழர் நாகரீகமும் செழித்திருந்தது. பௌத்தமும் நிலவியிருந்ததுடன் பௌத்தத்தமிழர்களும் வாழ்ந்திருந்தனர். இம்மன்னர்கள் பௌத்த சமயத்துக்கும் ஆதரவளித்து வந்தனர்.

இக்காலத்தில் (கிபி9-99) அக்கரைப்பற்று பிரதேசம் இம்மன்னர்களால் அபிவிருத்தி செய்யப்பட்டதுடன் சங்கமன்கண்டி தொடக்கம் வில்காமம், றூபஸ், கஞ்சிகுடி ஆறு, சாகாமம் பொத்தானை, பட்டிநகர், கண்ணகிபுரம், முள்ளிக்குளமலை, தீகவாவி ஆகிய பகுதிகள் உள்ளிட்ட காளியோடை வரை பரந்திருந்த அக்கரைப்பற்று பிரதேசம் மட்டக்களப்புத் தமிழக வரலாற்றில் முக்கியத்துவம் பெற்றிருந்ததை ஆய்வுகள் உணர்த்துகின்றன.

இம்மன்னர்களது காலத்தில் இப்பிரதேசத்தில் தூர்ந்து போய் காணப்பட்ட சிறிய, பெரிய குளங்கள், வாய்க்கால்கள் புனரமைக்கப்பட்டதுடன் புதிய வாய்க்கால்களும் வெட்டப்பட்டு நீர்ப்பாசனப் பணிகள் விரிவுபடுத்தப்பட்டது. கைவிடப்பட்டிருந்த வயற்காணிகளும் அபிவிருத்தி செய்யப்பட்டு நெற்செய்கை அபிவிருத்தி கண்டது.

இவற்றின் காரணமாக பொருளாதாரத்தில் வளர்ச்சி கண்டு வந்த இப்பிரதேசத்தில் செழிப்பிழந்து காணப்பட்ட சைவாலயங்களும் புனரமைக்கப்பட்டுப் புதுப்பொலிவு பெற்று விளங்கியிருந்தன. மேலும் இப்பிரதேசத்தில் அமைந்திருந்த தீகவாவி உள்ளிட்ட பௌத்த ஆலயங்களும் சிறப்புடன் விளங்கியிருந்தன.

---

5. இன்று இப்பிரதேசம் வாகூரவெட்டை எனப் பெயர் வழங்கி வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாகூரனைத் தொடர்ந்து இவனது மகனான பிரசன்னசித்து (கிபி99-139) என்பவன் மட்டக்களப்பு நகரிலிருந்து (வீரமுனைக்கருகாய் அமைந்திருந்த) மட்டக்களப்புத் தமிழகத்தை ஆட்சி புரிந்து வந்தான். இவன் சங்கமன் கண்டியையும் தனது அரசிருக்கையாகக் கொண்டிருந்தான். இவனது ஆதிக்கம் வடக்கே தட்சணாபதி என்ற கோணேஸ்வரம் வரை பரவியிருந்தது.

இவன் ஆட்சிக்கு வந்த காலத்தில் சோழ நாட்டு மன்னனான திருச்சோழன் என்பவனின் மகளான தம்பதி நல்லாள் தனது கணவனான கலிங்க குலத்து இளவரசன் புவனேய கஜபாகுவுடன் தலயாத்திரையாக ஈழம் வந்திருந்தாள். இவர்கள் இருவரும் கோணேசப் பெருமானைத் தரிசித்து பின்னர் மட்டக்களப்பை வந்தடைந்து மன்னன் பிரசன்னசித்துவைச் சந்தித்து அவனது விருந்தினராகத் தங்கியிருந்தனர்.[6]

இவ்வேளையில் அக்கரைப்பற்று பிரதேசத்தில் அமைந்திருந்த சித்திரவேலாயுதர் ஆலயத்தை (நாகர்முனை சுப்பிரமணியர் ஆலயம்) புனரமைத்துத் தருமாறு புவனேய கஜபாகுவிடம் மட்டக்களப்பு மன்னன் வேண்டுகோள் விடுத்தான்.இதனை ஏற்றுக் கொண்ட புவனேக கஜபாகு தனது மாமனாரான திருச்சோழனின் உதவியைப் பெற்று சித்திரவேலாயுதர் ஆலயத் திருப்பணியைப் பூர்த்தி செய்தான். பின்னர் அந்தணர்களது ஆலோசனைப் படி கும்பாபிஷேகமும் செய்து பிரசன்னசித்துவிடம் கையளித்தான்.

இதன் பின்னர் புவனேயகஜபாகு தம்பதிநல்லாள் ஆகிய இருவரும் மன்னன் பிரசன்னசித்துவின் விருந்தினராக சிலகாலம் மட்டக்களப்பில் தங்கியிருந்தனர். இவ்வேளையில் தம்பதிநல்லாள் கர்ப்பவதியானாள். இதனையறிந்த பிரசன்னசித்து உளம் மகிழ்ந்து தனது நாட்டின் தென்பகுதியை ஒரு அரசியல் பிரிவாக (இராச்சியம்) உருவாக்கி புவனேய கஜபாகுவுக்கு கையளித்தான். 'உன்னரசுகிரி' என்ற இப்புதிய அரசியல் பிரிவு மட்டக்களப்பு தமிழ் அரசுக்கு ஆதரவாகவிருந்து வந்தது.

---

6. தம்பதி நல்லாளின் தந்தையான திருச்சோழன் என்று குறிப்பிடப்படும் (மட்டக்களப்பு மான்மியம் பக் 24) சோழன் காவிரிக் கல்லணை கட்டிய கரிகாற்சோழன் என்று சில வரலாற்றாய்வாளர்கள் கருதுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாட்சிப்பிரிவானது உகந்தைக்கும் பாணமைக்கும் இடையிலுள்ள சன்னியாசி மலை என பண்டிதர் வி.சி. கந்தையா அவர்கள் கருதுகின்றார். இவ்வாட்சிப்பிரிவானது பாணமை தொடக்கம் கூமுனை வரை பரந்திருந்தது எனலாம். இதன் இராஜதானியாக குடும்பி மலை பகுதி விளங்கியிருந்தது என்பதே ஆய்வுகள் கண்ட உண்மையாகும்.[7] இதனைத் தொடர்ந்து புவனேய கஜபாகுவால் சோழ நாட்டிலிருந்து குடிமக்கள் வரவழைக்கப்பட்டு உன்னரசுகிரி பிரதேசத்தில் குடியேற்றப்பட்டனர்.

பிரசன்ன சித்து, புவனேய கஜபாகு என்போர் தென்கிழக்கிலங்கை என்ற மட்டக்களப்பை ஆட்சி புரிந்த காலத்தில் வட இலங்கை இலம்பகர்ணமன்னன் வசபன் (கிபி124-168) அனுராதபுரியிலிருந்து ஆட்சி செலுத்தி வந்தான். இவனது அரசியல் செல்வாக்கு வட இலங்கையில் நிலவியிருந்தது. இவனது மேலாதிக்கத்தை ஏற்று இசிகிரியன் என்ற தமிழ் அரசன் நாகதீபம் என்ற வட இலங்கையை ஆட்சி புரிந்து வந்தான்.[8]

வசபனது ஆட்சிக்காலத்தில் மட்டக்களப்பு உள்ளிட்ட உறுகுணையில் அதிகாரம் பெற்றிருந்த சிற்றரசர்கள் இவனது அரசியல் அதிகாரத்தைப் பெயரளவில் ஏற்றிருந்த போதும் சுதந்திர மன்னர்களாகவே செயற்பட்டு வந்தனர். வசபனது நீண்ட கால ஆட்சி (கிபி124-168) அமைதியாக நடந்தது. மேலும் இவனது ஆட்சி உறுகுணையில் நிலவியிருந்ததென்பதற்கு உறுகுணையில் கண்டெடுக்கப்பட்ட இவனது கல்வெட்டுக்கள் சான்றுகளாகும்.[9] நல்ல காரியங்களைச் செய்வதில் நிரந்தரமாக மகிழ்ச்சியடைந்தவனாக இவன் நாற்பத்தி நான்கு வருடங்கள் ஆட்சி செய்தான் என மகாவம்சம் (MV:35:100) கூறும்.

---

7. தம்பிலுவில் கண்ணகி வழிபாடு பக் 59,60 நா. நவநாயகமூர்த்தி 1999

8.இலம்பகர்ணர் என்போர் பாண்டிய நாட்டினர் எனத் தெரிகின்றது. இலம்பகர்ணர் பாண்டிய நாட்டுத் தமிழ் இனத்தவர் என்றும் பாண்டிய நாட்டிலிருந்து குடியேறி அரச ஊழியம் செய்தவர் என்றும் வரலாற்றுக் குறிப்புண்டு.

9. பண்டைய ஈழம் பாகம் 1 பக் 103 வே. க. நடராசா - 1970



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரசன்னசித்துவின் மறைவினையடுத்து இவனது மகனான தாசகன் (கலி.3150) என்பவன் மட்டக்களப்பு நகரையும், சங்கமன் கண்டியையும் அரசிருக்கைகளாகக் கொண்டு தென்கிழக் கிலங்கையின் வடபகுதியை ஆட்சி புரிந்து வந்தான். இவனைத் தாசுதன் என்று சில ஏட்டுப் பிரதிகள் குறிப்பிடுகின்றன. இவ்வேளை தென்கிழக்கிலங்கையின் தென்பகுதியை 'உன்னரசுகிரி' யிலிருந்து (குடும்பிகல்) புவனேய கஜபாகுவின் மகனான மேகவர்ணன் என்ற மனுநேயகஜபாகு ஆட்சி புரிந்து வந்தான்.

இம்மன்னர்களது ஆட்சிக்காலத்தில் அக்கரைப்பற்று பிரதேசத்தில் குறிப்பாகத் தென் பிரதேசத்தில் இவர்களிருவரும் இணைந்து மேற்கொண்ட சமூக, சமய, விவசாய, நீர்ப்பாசன அபிவிருத்திப் பணிகள் பற்றி மட்டக்களப்பு மான்மியம் விபரிக்கும். சங்கமன் கண்டி தொடக்கம் சாகாமம் வடக்குப் புறநகர் மொட்டையாகல்லு (தாடகிரி) பட்டிநகர்வரை இவர்கள் மேற்கொண்ட நீர்ப்பாசனத் திட்டங்கள் பற்றி மேலும் இந்நூல் விபரமாகக் குறிப்பிடுகின்றது.[10]

இக்காலத்தில் மட்டக்களப்பு மன்னன் தாசகனின் சம்மதத்துடன் மட்டக்களப்பு தேசம் (அம்பாரை உள்ளிட்ட) முழுவதிலும் பிரபல்யம் பெற்றிருந்த திருக்கோவில் சித்திரவேலாயுதர் (சுப்பிரமணியர்) ஆலயம் உன்னரசுகிரி மன்னன் மேகவர்ணனால் திருப்பணி செய்யப்பட்டு கும்பாபிஷேகமும் நடாத்தி வைக்கப்பட்டது. மேலும் இவ்வாலயக் குடமுழுக்கானது அனுராதபுரம், யாழ்ப்பாண அரசர்களுக்கும் தென்னிந்திய அரசர்களுக்கும் அழைப்புக்கள் அனுப்பப்பட்டு மிகவும் சிறப்பாக நடாத்தப்பட்டதாக மட்டக்களப்பு பூர்வ சரித்திரம் தொடர்பான ஏட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (வெல்லவூர் கோபால் - 2005)

இதேவேளை இவ்வாலய வளாகத்தில் (சித்திரவேலாயுதர் ஆலயம்) சிவாலயம் ஒன்றும் நிலவி வந்தது. இதனை இலக்கிய தொல்லியல் சான்றுகள் மூலமாக உறுதி செய்ய முடிகின்றது. இவ்வாலயத்தில் பணிபுரிய வேண்டி சோழ நாட்டிலிருந்து

---

10. மட்டக்களப்பு மான்மியம் - பக் 27, 28, பதிப்பாசிரியர் எப். எக்ஸி நடராசா 1962



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல குடிகள் இங்கு வரவழைக்கப்பட்டு ஆலய வளாகத்தை அண்மித்த பகுதியில் குடியேற்றப்பட்டனர்.

இவ்வேளை இவ்வாலயத்தில் அர்ச்சகர்களாகக் கடமை புரிவதற்காக வேண்டி மல்லிகார்ச்சுனம் (ஸ்ரீசைலம்) என்னுமிடத்திலிருந்து வீரசைவக்குருமார் வரவழைக்கப்பட்டனர். சைவ அந்தணர்களான (சிவப்பிராமணர்) வீரசைவக்குருமார் என்ற சங்கமர்களைக் குடியேற்றிய ஊருக்கு 'தம்பட்டார்' ஊரெனப் பெயரும் இடப்பட்டது.[11] மேலும் இவர்களது வழிபாட்டுக்காக மல்லிகார்ச்சுனபுரத்திலிருந்து கணேச விக்கிரகம் ஒன்றும் பெறப்பட்டு இவ்வூரில் பிரதிஸ்டை செய்யப்பட்டது.

இவ்வூர் இன்று தம்பட்டை என்ற பெயருடன் விளங்குகின்றது. இங்கு வாழ்ந்து வந்த வீரசைவக்குருமார் சங்கமர்கள் என அழைக்கப்பட்டு வந்தனர்.[12] மேகவர்ணனால் தனது தாயாராகிய தம்பதிநல்லாள் பெயரில் வாவி ஒன்றையும் வெட்டுவித்து அவ்வாவிக்கு 'தம்பதிவில்' என்ற பெயரையும் இட்டான்.[13] வரலாற்று சிறப்பினைக் கொண்ட இவ்வாவியின் பரந்த கரையோரப்பகுதிகள் பிற்காலத்தில் (கிபி - 20நூற்) ஒரு சிலரால் ஆக்கிரமிக்கப்பட்டு தற்காலம் 'ராமன்குளம்' என்ற பெயருடன் சிறியதொரு குளமாக நிலவி வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பு முழுவதிலும் பௌத்த ஆலயங்களும் சைவாலயங்களும் (சிவாலயம்) அருகருகாய் நிலவியிருந்த இக்காலத்தில் சங்கமன் கண்டி தொடக்கம் சாகாமம், முள்ளிக்குளம் தீகவாவி உள்ளிட்ட காளியோடை வரை பரந்திருந்த அக்கரைப்பற்று பிரதேசத்தில் வாழ்ந்திருந்த பௌத்த, இந்து மக்களிடையே செல்வாக்குப் பெற்றிருந்த முருகவழிபாட்டுத் தலமாக நாகர்முனை

---

11. இவர்களின் சந்ததியினரில் சிலர் கி.பி. பதிமூன்றாம் நூற்றாண்டுக்குப் பிற்பட்ட காலத்தில் கருங்கொடித்தீவு, பனங்காடு, தம்பிலுவில் கிராமங்களில் குடியேறியதை அறிய முடிகின்றது.

12. தொல்லியல் சிந்தனைகள் - பக் 26,27 நா நவநாயகமூர்த்தி -1995

13. கிழக்கிலங்கைத் தமிழரின் பேச்சு வழக்கில் 'வில்' என்பது பெரிய குளத்தையோ அல்லது நீர்த்தேக்கத்தையோ குறிக்கும் சொல்லாகும். (இலங்கை இடப்பெயர் ஆய்வு - 2, பக் 51, கலாநிதி இ. பாலசுந்தரம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுப்பிரமணியர் ஆலயம் என்ற திருக்கோவில் சித்திரவேலாயுதர் ஆலயம் விளங்கியிருந்தது. (இது மறைக்கப்பட்ட மறந்து போன வரலாற்றுண்மையாகும்)

## கண்ணகி வழிபாடு

கிபி இரண்டாம் நூற்றாண்டின் இறுதிக்காலத்தில் மட்டக்களப்பு மன்னன் தாசகனுக்குப் பின் தமணன் என்பவன் தென்கிழக்கிலங்கையின் வடபகுதியை மட்டக்களப்பு நகரிலிருந்து (சம்மாந்துறை) ஆட்சி புரிந்து வந்தான். இவ்வேளை உன்னரசுகிரி மன்னனின் வளர்ப்பு மகளான ஆடகசௌந்தரி என்ற பெண்ணரசி தென்கிழக்கிலங்கையின் தென்பிரதேச உன்னரசுகிரி இராச்சியத்தின் அரசியாக முடி சூடிக் கொண்டாள்.

இக்காலத்தில் குறிப்பாக அனுராதபுரியில் கஜபாகுவுக்கு பின் மன்னனாக முடிசூடிக்கொண்ட அவனது மாமனான மகலக்கநாகன் (கிபி193 - 199) என்பவனது ஆட்சிக் காலத்தில் சிலம்பு கூறும் பத்தினி என்ற கண்ணகி வழிபாடு அக்கரைப்பற்று பிரதேசத்தில் அறிமுகமானது என்பதை அறிய முடிகின்றது. தமிழகத்தின் பாண்டிய நாட்டிலிருந்து எடுத்து வரப்பட்ட 'செண்பகச் செல்வி' என்ற கண்ணகி விக்கிரகம் பண்டைய நகரான சாகாமம் 'ஊரக்கை' என்னுமிடத்தில் ஆலயம் அமைந்துப் பிரதிஸ்டை செய்யப்பட்டது.[14]

கிபி இரண்டாம் நூற்றாண்டில் தென்கிழக்கிலங்கையில் (அம்பாரை உள்ளிட்ட மட்டக்களப்பு) ஆட்சி செலுத்தி வந்த பிரசன்னசித்து, புவனேயகஜபாகு, தாசகன், மனுநேயகஜபாகு தமணன், ஆடகசௌந்தரி என்போரது அரசியல் செல்வாக்கு கிழக்கிலங்கையின் வடக்கே தெட்சணாபதி என்ற திருகோணமலை வரை நிலைத்திருந்தது. இக்காலத்தில் கிழக்கிலங்கைக்கும், தமிழகத்துக்குமிடையில் நெருக்கமான சமூக, சமய, கலாசார உறவுகளும் நிலைத்திருந்தன.

---

14. இதனைத் தொடர்ந்து அக்காலத்தில் மட்டக்களப்பின் தென்பிரதேசத்தில் பௌத்த தமிழர்கள் பெருமளவில் வாழ்ந்திருந்த லகுகலை, நாவுல்ல (நாவலாறு) மீகாங்கொட, கூமுனை ஹபிலவஸ்தை ஆகிய பண்டைய நகரங்களிலும் சிலம்பு கூறும் பத்தினி வழிபாடு அறிமுகமாகிப் பரவியிருந்தது. ( நா. நவநாயகமூர்த்தி - 2017)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு கிழக்கிலங்கையில் தமிழ்ச் சிற்றரசர்களது ஆட்சியும், சங்ககாலப் பண்பாடும், தமிழகத்துடனான நெருக்கமான சமூக, சமய, கலாசார உறவுகளும் வாணிபத் தொடர்புகளும் நிலவியிருந்த இக்காலத்திலேயே பாண்டிய நாட்டில் சிறப்புடன் விளங்கியிருந்த சிலம்பு கூறும் பத்தினி என்ற கண்ணகி வழிபாடு கிழக்கிலங்கையில் அறிமுகமானது.

இவ்வேளையிலேயே கிழக்கில் 'துங்ககோள' என்ற பண்டைய திருக்கோவில் துறையூடாக அக்கரைப்பற்று பிரதேசத்தில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த தமிழ்ப் பௌத்தர்களான செட்டிகளால் பத்தினி என்ற கண்ணகி வழிபாடு அறிமுகம் செய்யப்பட்டு மட்டக்களப்பின் தென்பிரதேசத்தில் பரவியிருந்தது.

சிலம்பு கூறும் பத்தினி என்ற கண்ணகி வழிபாடு அக்கரைப்பற்று பிரதேசத்தில் ஆரம்பமானது பற்றி வரலாற்று செய்தியொன்று இவ்வாறு குறிப்பிடுகின்றது. கிழக்கிலங்கையில் தமிழ் மன்னர்கள் ஆட்சி புரிந்த காலத்தில் அக்காலத்தில் இலங்கையில் பிரபல்யம் பெற்றிருந்த 'இலங்கைத்துறை' என்னும் துறைமுகத்தினூடாக பாண்டிய நாட்டின் மதுரையிலிருந்து மூன்று அம்மன் சிலைகள் கொண்டு வரப்பட்டன. இவற்றில் ஒன்று இலங்கைத்துறையிலும், மற்றது சம்பூரிலும் ஆலயங்கள் அமைத்துப் பிரதிஸ்டை செய்யப்பட்டன. மற்ற அம்மன் சிலை மட்டக்களப்பிலுள்ள தம்பிலுவில் கிராமத்தில் கோயில் கொண்டிருப்பதாக அறிய முடிகின்றது.[15]

இவ்வரலாற்றுச் செய்தியானது தமிழகத்திலிருந்து நேரடியாக பத்தினி வழிபாடு இலங்கையின் பண்டைய அக்கரைப்பற்று பிரதேசத்தை அடைந்ததென்பதற்கு சான்றாக அமைகின்றது.

---

15. திருகோணமலை மாவட்டத்திருத்தலங்கள் - பக் 131 சைவப்புலவர், பண்டிதர் இ. வடிவேல் - 1982



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் அக்காலத்தில் இப்பிரதேசம் தமிழகத்துடன் கொண்டிருந்த வர்த்தகத் தொடர்பால் பத்தினி வழிபாடு (கண்ணகி சிலை) இப்பிரதேசத்துக்கு கொண்டு வந்திருக்கலாம் என்று உறுதி செய்ய முடிகின்றது.[16] இக்காலத்தில் அக்கரைப்பற்று பிரதேசத்துக்கும் தமிழகத்துக்குமிடையில் சமூக, சமய, கலாசார உறவுகள் நிலவியிருந்தன. வாணிபம் போக்குவரத்து ஆகியன இடம்பெற்று வந்துள்ளன. ஒலுவில், சின்னமுகத்துவாரம், நாகர்முனைத்துறை (திருக்கோவில்) உமிரி ஆகிய துறைகள் பிரபல்யம் பெற்றிருந்தன.

இக்காலம் தொடக்கம் தெற்கே சங்கமன்கண்டி தொடக்கம் வில்காமம், றூபஸ், சாகாமம், முள்ளிக்குளமலை, இன்றைய கண்ணகிபுரம், தீகவாபி உள்ளிட்ட பண்டைய அக்கரைப்பற்று பிரதேசத்தில் வாழ்ந்திருந்த பெருமளவிலான பௌத்த தமிழர், தமிழ்ச் சைவர், பௌத்த சிங்களவர் என்போரின் சிலம்பு கூறும் பத்தினித் தெய்வத்தின் ஆலயமாக சாகாமம் ஊரக்கை பத்தினி ஆலயம் விளங்கி வந்தது. இதனை வரலாற்றாய்வுகள் உணர்த்துகின்றன. கி.பி 1210ம் ஆண்டு வரை இந்நிலை நீடித்திருந்ததென்பதை அறிய முடிகின்றது.

கிபி இரண்டாம் நூற்றாண்டில் தென்கிழக்கிலங்கையில் வாழ்ந்திருந்த மக்களிடையே பௌத்தம், சைவம் ஆகியன நிலவி வந்த போதும் சைவசமயமே முன்னிலை பெற்றிருந்தது. இங்கு வாழ்ந்திருந்த பௌத்த தமிழர், பௌத்த சிங்களவர் என்போர் பௌத்தர்களாக வாழ்ந்திருந்த போதும் தங்கள் முன்னோர்கள் கடைப்பிடித்து வந்த இந்து சமய நம்பிக்கைகளையும் தொடர்ந்து இவர்கள் பேணிக்காத்து வந்தனர். ஆதலால் சைவமும், பௌத்தமும் அருகருகாய் நிலவி வந்தன.

---

16. கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் கஜபாகு காலத்தில் தமிழகத்தின் செல்வாக்கு ஈழத்தின் வடக்கு கிழக்கு பகுதிகளில் பரவியிருந்தமைக்கான இலக்கியத் தொல்லியல் சான்றுகள் உள்ளன. (ஈழத்து இந்து சமய வரலாறு பாகம் 1, பக்கம் 264, 265 பேராசிரியர் சி.த.சிற்றம்பலம் - 1996)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயினும் கரையோரப் பகுதியில் சைவ சமயமும் முன்னிலை பெற்றிருந்ததுடன் சிவாலயங்களும் சிறப்புடன் விளங்கி வந்தன. இதே வேளை தென்கிழக்கிலங்கையின் உட் பிரதேசங்களில் சைவ சமயமும், பௌத்த சமயமும் மக்களிடையே நிலவி வந்ததுடன் சைவாலயமும், பௌத்த ஆலயமும் அருகருகாய் நிலவி வந்தன. (நா.நவநாயகமூர்த்தி -2017)

இவ்வேளை அக்கரைப்பற்று பிரதேசத்தில் 'நாகர்முனை சிவாலயம்' (சித்திரவேலாயுதர் ஆலய வளாகம்) இறக்காவில் சிவாலயம், முள்ளிக்குளமலை சிவாலயம் (நந்திகிரி) சங்கமன் கண்டிமலை சிவாலயம், துவட்டாமுனிவர் குகைக் கோயில் (சிவாலயம்) ஆகியன புகழ் பெற்றிருந்த சிவாலயங்களாம். இக்காலத்தில் கிழக்குக் கரையில் கோகர்ணம் என்ற கோணேஸ்வரம் போன்று சங்கமன் கண்டி முனை இறக்காவில் சிவாலயமும் பிரபல்யம் பெற்று விளங்கியிருந்தது.

## கிபி மூன்றாம் நூற்றாண்டுகளில் (கிபி 325 வரை)

கிபி மூன்றாம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் தென்கிழக்கிலங்கையின் வட பகுதியை பண்டைய மட்டக்களப்பு நகரிலிருந்து தமணன் என்ற கலிங்க குலத்துச் சிற்றரசனும், தென் பகுதியை உன்னரசுகிரி நகரிலிருந்து ஆடக சௌந்தரியும் ஆட்சி புரிந்து வந்த காலத்தில் ஆடக சௌந்தரியின் அரசியல் செல்வாக்கு கிழக்கிலங்கையின் வடக்கே தெட்சணாபதி என்ற திருகோணமலை வரை நிலைத்திருந்தது.

இவள் மட்டக்களப்பு நகரலிருந்து (சம்மாந்துறை) ஆட்சி செலுத்தி வந்த தமணனுக்கு ஆதரவாகச் செயற்பட்டு வந்தாள். அத்துடன் நகர அபிவிருத்தி மற்றும் சமூக, சமய மேம்பாடு ஆகியனவற்றிற்கும் ஆதரவளித்து வந்தாள்.[17] நீண்ட காலம் வாழ்ந்திருந்த இப்பெண்ணரசிக்கு தமணனுக்குப் பின் தென்கிழக்கிலங்கையின் வடபகுதியை ஆட்சி புரிந்து வந்த தனசேனனும் இவனது சந்ததியினரும் தங்கள் முழு ஆதரவை நல்கி வந்தனர்.

17. மட்டக்களப்பு மான்மியம் - பக் 30 பதிப்பாசிரியர் எப்.எக்ஸி நடராசா - 1962



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிக நீண்ட காலம் வாழ்ந்திருந்த ஆடகசௌந்தரியின் வரலாறு பற்றி முழுமையாகக் கண்டறிய முடியாதிருந்த போதும் காணக் கிடைக்கின்ற மட்டக்களப்பு மான்மியம் நூல் மற்றும் மரபுரைகள் வரலாற்றுச் செய்திகள் என்பனவற்றின் வாயிலாக இவ்வரசியின் சமூக, சமய, செயற்பாடுகள் பற்றி அறியமுடிகின்றது. இதே வேளை மரபுரைகள், வரலாற்றுச் செய்திகள் ஆகியனவற்றின் வாயிலாக அறியக் கிடைக்கும் இவ்வரசியின் ஆட்சிக்காலமும் மட்டக்களப்பு மான்மியம் குறிப்பிடும் ஆட்சிக்காலமும் (பக்.34,35) காலக் கணிப்பில் முரணாகவுள்ளது. ஆதலால் அறிவியல் ரீதியில் வரலாற்று பதிவை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகின்றது.

மட்டக்களப்பின் மாமாங்கம், தாந்தாமலை, திருக்கோவில் போன்ற தலங்களோடு திருக்கோணேஸ்வரமும் இவ்வரசியின் வரலாற்றோடு இணைக்கப்படுவதை மரபுரைகள் உணர்த்துகின்றன. இவ்வரசியின் ஓய்வுகால வாசஸ்தலங்கள் சாகாமம், சங்கமன்கண்டி தாந்தாமலை ஆகிய இடங்களில் அமைந்திருந்தன. இங்கெல்லாம் இவ்வரசி வந்து தங்கிச் செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தாள் என்பதை அறிய முடிகின்றது.

உன்னரசுகிரி அரசியான ஆடகசௌந்தரியின் காலத்திலேயே மாமாங்க தீர்த்தக் குளத்திலிருந்து தீர்த்தம் எடுத்து வந்து திருக்கோயில் சமுத்திரத்திலிட்டு ஆடி அமாவாசைத் தினத்தன்று தீர்த்தம் ஆடும் வழக்கமும் ஆரம்பமானது. அக்காலத்தில் திருக்கோயில் திருத்தலத்தில் முருகன், சிவன் ஆலயங்கள் அமைந்திருந்தன. பண்டைய அக்கரைப்பற்று பிரதேசம் சங்கமன் கண்டி, சாகாமம் நகரங்களுடன் ஆடக சௌந்தரி கொண்டிருந்த தொடர்புகள் பற்றி வரலாற்றுச் செய்திகள் மரபுரைகள் வாயிலாக அறிய முடிகின்றது.

சங்கமன்கண்டி காட்டுப் பகுதி காணப்படும் அழிவுற்ற பண்டைக்கால ஆடம்பர அரண்மனையுடன் இவ்வரசி தொடர்புபடுத்தப்படுகின்றாள். மேலும் சாகாமம் மேற்கு புறநகர் பகுதியான பொத்தானை கீத்துப் பத்து கிழவியூர் மலைச்சாரலில் ஆடக சௌந்தரியின் ஓய்வு கால வாசஸ்தலமொன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்திருந்ததாகவும் இவ்வரசி இங்கு வந்து தங்கிச் செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்ததாகவும் இதன் காரணமாகவே இந்த இடம் பிற்காலத்தில் கிழவியூர் மலை எனப் பெயர் வழங்கி வந்ததாகவும் கூறப்படுகின்றது. இன்றும் இந்த இடம் 'கிழவியூர் மலை' எனப் பெயர் வழங்கி வருவதும் குறிப்பிடத்தக்கது.

கடந்த நூற்றாண்டின் பிற்பகுதியில் அக்கரைப்பற்று பகுதியில் வாழ்ந்திருந்த முதியோர்கள் சிலர் கூற இதனை நான் கேட்டுள்ளேன். மேலும் ஆடக சௌந்தரியின் நீண்ட ஆயுள் வாழ்க்கை, அவள் மேற்கொண்ட சமயப் பணி ஆகியனவற்றில் அசைக்க முடியாத நம்பிக்கை இவர்களது உள்ளங்களில் ஆழப்பதிந்திருந்ததையும் அக்காலத்தில் என்னால் உணர முடிந்தது. (நா.நவநாயகமூர்த்தி- 2017) பௌத்த சமய வளர்ச்சியிலும் அதீத அக்கறை கொண்டிருந்த ஆடக சௌந்தரி ஒவ்வொரு பௌத்த விகாரைகளிலும் ஒவ்வொரு கதிரேசன் ஆலயத்தை நிறுவியுள்ளாள்.

லகுகலை காட்டுப்பகுதியில் ஆய்வுகள் மேற்கொண்ட வேளை கதிரேசன் ஆலயமும் விகாரையும் அருகருகாய் அமைந்திருந்த இடிபாடுகளைத்தாம் கண்டதாக பண்டிதர் வீ.சீ.கந்தையா அவர்கள் (மட்டக்களப்பு தமிழகம் பக்.417) குறிப்பிடுகின்றார். மேலும் வடமொழிக்கல்வெட்டுக்கள், சிதைந்த நிலையில் தமிழ் எழுத்துக் கல்வெட்டுக்கள் ஆகியனவும் காணப்பட்டதாக அவர் மேலும் கூறுகின்றார்.

ஆடகசௌந்தரிக்குப் பின்னர் உன்னரசு கிரிநகரிலிருந்து இவளது மகனான சிங்க குமாரன் (கலி 3370) என்பவனும் மட்டக்களப்பு நகரிலிருந்து பிரசேது என்பவனும் தென் கிழக்கிலங்கையை ஆட்சி புரிந்து வந்தனர். இவர்களிருவரும் ஒன்றிணைந்து இப்பிராந்தியத்தில் கூட்டாட்சி புரிந்து வந்தனர். இதனை மட்டக்களப்பு பூர்வ சரித்திரம் என்ற மட்டக்களப்பு மான்மியம் உணர்த்தும்.

மேலும் உன்னரசு நகரிலிருந்து (இராஜதானி) ஆட்சி செலுத்தி வந்த சிங்ககுமாரனின் அரசியல் ஆதிக்கம் தெட்சணாபதி என்ற திருக்கோணேஸ்வரம் வரை நிலைத்திருந்ததென்பதையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூல் குறிப்பிடுகின்றது. இவன் 'கனக சுந்தரன்' என்பவனை திருகோணமலைக்கு அதிபதியாக்கி இப்பிரதேசத்தையும் தனக்குக் கீழ் வைத்திருந்தான். (மட்டக்களப்பு மான்மியம் பக்.36) என்பதையும் அறிய முடிகின்றது.

சிங்ககுமாரன், பிரசேது ஆகிய சிற்றரசர்களது ஆட்சிக் காலத்தில் கிழக்கிலங்கை தமிழகத்துடன் மிக நெருங்கிய சமூக சமய, கலாசார உறவினைக் கொண்டிருந்ததுடன் இவ்விரு பிராந்தியங்களுக்குமிடையில் வாணிபம், போக்குவரத்து என்பனவும் சிறந்திருந்தன. கலிங்க குலத்துத் தமிழ்ச் சிற்றரசர்களான இவர்கள் சைவாலயங்களைப் பேணி வந்தனர். கிழக்கிலங்கைக் கரையில் அமைந்திருந்த கோணேஸ்வரம், அக்கரைப்பற்று, சங்கமன்கண்டி இறக்காவில் சிவாலயம் (ஏரகாவில்) கலந்தன் ஊர் சிவாலயம் என்பன தமிழகம் வரை பிரபல்யம் பெற்றிருந்தன.

கிழக்கிலங்கையில் சிறப்புடன் விளங்கியிருந்த இவ்வாலயங்களைச் சூழவுள்ள இடங்களில் தமிழ்ச் சைவர்களே பெருமளவில் வாழ்ந்திருந்தனர். இவ்வேளை பிராமணர்களுக்கு உரித்தானதாக 'கலந்தன் ஊர்' (கலந்தகம்) சிவாலயம் விளங்கி வந்ததுடன் சிவப்பிராமணர்களும் இங்கு நிறைந்திருந்தனர். இவர்களுக்கு சிங்ககுமாரன் ஆதரவு நல்கி வந்தான்.[18]

இவ்வாறு தமிழ் சிற்றரசர்கள் ஆட்சியில் கிழக்கிலங்கையில் சைவம் முன்னிலை பெற்றிருந்த காலத்தில் உன்னரசுகிரி மன்னன் சிங்ககுமாரன் தென் கிழக்கிலங்கையின் தென்பகுதியில் அமைந்திருந்த உகந்தை மலையில் சிவாலயம் ஒன்றை நிர்மாணித்ததுடன் விஷ்ணு ஆலயம், பிரமா ஆலயம் என்பனவற்றை வடநாட்டு சிற்பிகளை வரவழைத்து அமைத்தான். மேலும் மலையடி வாரத்து எட்டுத்திக்கிலும் இந்திரன், அக்கினி, இயமன், கிருதி வருணன், வாயு, குபேரன், ஈசானியன் ஆகிய எட்டு ஆலயங்களை நிர்மாணித்தான்.

---

18. அக்காலத்தில் சங்கமன் கண்டிமுனை இறக்காவில் சிவாலயம், கலந்தன் ஊர் சிவாலயம் ஆகிய தலங்களை இந்திய யாத்திரிகள் வந்து தரிசித்து செல்லும் வழக்கத்தினையும் கொண்டிருந்தனர். (நா. நவநாயகமூர்த்தி - 2017)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன் செப்புக் கொடித்தம்பம் ஒவ்வொன்றுக்கும் நிறுத்தி மலையுச்சியில் மூன்று ஆலயத்துக்கும் நடுவிலே ஒரு தங்கக் கொடித்தம்பமும் நிறுத்தி அந்தணர் ஆலோசனைப்படி அபிஷேகமும் செய்து ஆயிரம் அவண நெற்காணிகள் திருத்தி குமுக்கன் வெட்டு வாய்க்காலிருந்து நீர் எடுத்து ஏரியில் தேக்கி வைத்து செந்நெல் செழித்தோங்கும்படி செய்து உகந்தைத் திருப்பணிக்கு ஐந்நூறு அவணத்தையுமீந்து மட்டக்களப்பை அரசுபுரியும் பிரசேதுவிடம் முகமன் கொண்டாடி (நட்புரிமை) ஆடித்திங்கள் அமாவாசை இரு தினமும் இராவணேஸ்வரன் பெயரில் உகந்தைத் திருப்பதியில் பெரிய ஒரு தீபம் ஏற்றும் படியும் திட்டம் செய்தான்.[19]

இவற்றின் வாயிலாக தென்கிழக்கிலங்கை சிற்றரசர்களான சிங்ககுமாரன், பிரசேது ஆகிய இருவரும் சேர்ந்த கூட்டாட்சியே அக்காலத்தில் இப்பிராந்தியத்தில் நிலவியிருந்ததென்பதும் இவர்களது சமூக, சமய செயற்பாடுகள், விவசாய, நீர்ப்பாசன அபிவிருத்தி ஆகியனவும் ஒன்றிணைந்ததாகவே நிலவியிருந்ததும் நன்கு தெளிவாகின்றது. சிங்ககுமாரன் தனக்குப் பின் தன் மகன் ஸ்ரீசிங்கன் என்பவனுக்கு உன்னரசுகிரியை பட்டம் கட்டிய சில நாட்களின் பின்னர் மரணமடைந்தான்.

இதேவேளை கிபி மூன்றாம் நூற்றாண்டின் இறுதிக் காலத்தில் உன்னரசுகிரியிலிருந்து ஆட்சிபுரிந்து வந்த சிறிசிங்கன் மன்னன் மட்டக்களப்பு நகரிலிருந்து ஆட்சி செலுத்தி வந்த பிரசேது மன்னனின் மகளான அரசனாட்சி என்பவளைத் தனது தேவியாகக் கொண்டிருந்தான். இவன் மனுநீதி தவறாது நல்லாட்சி புரிந்து வந்தவேளை இவனுக்கு முதல் மகனாக பானுசிங்கன் என்பவன் பிறந்தான்.

---

19. மட்டக்களப்பு மான்மியம் - பக் 38, 39 பதிப்பாசிரியர் எப் எக்ஸி நடராசா - 1962



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிபி நாலாம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் சிறிசிங்கனுக்கு பின் இவனது மகனான பானுசிங்கன் (கிபி318) உன்னரசுகிரி மன்னனானான். இக்காலத்தில் மட்டக்களப்பு நகரிலிருந்து தென்கிழக்கிலங்கையின் வடபகுதியை ஆட்சி செலுத்தி வந்த பிரசேதுவுக்குப் பின் அவன் மகன் தினகரசேனனுக்கு வாரிசு இல்லாமையால் சிங்ககுமாரனின் பூட்டனாகிய (பேரன்) பானுசிங்கன் உன்னரசுகிரியையும், மட்டக்களப்பையும் இணைத்து (அம்பாரை உள்ளிட்ட மட்டக்களப்பு) ஆட்சி புரிந்து வந்தான்.

கலிங்க குலத்துத் தமிழ்ச்சிற்றரசனான பானுசிங்கன் (கிபி 318-343) தனக்குக் கீழ் அதிகாரிகள் பலரை நியமித்து இப்பிராந்தியத்தைப் பரிபாலித்து வந்தான். இவன் ஆட்சிக்கு வந்த காலத்தில் (கிபி-318ல்) அனுராதபுரியிலிருந்து தெத்தீசன் என்ற மன்னன் ஆட்சி செலுத்தி வந்தான். இவ்வேளை பலமொழி பலசமயம் பண்பாட்டுக் கூறுகளின் மையமாக விளங்கியிருந்த அனுராதபுரியுடன் தென்கிழக்கிலங்கை நெருக்கமான உறவுகளைக் கொண்டிந்தது.

தென்கிழக்கிலங்கை சிற்றரசனான பானுசிங்கன் (கிபி318-343) இப்பிரதேசத்தின் தென்பகுதியிலிருந்த உன்னரசுகிரி (குடும்பிகல்) சம்மாந்துறை பிரதேசத்தில் அமைந்திருந்த மட்டக்களப்பு ஆகிய நகரங்களைத் தனது அரசிருக்கைகளாகக் கொண்டிருந்தான்.[20] மேலும் இவன் சங்கமன்கண்டி, சாகாமம் கிழவியூர் மலை, தாந்தாமலை ஆகிய இடங்களையும் தனது ஓய்வு கால இருப்பிடங்களாகக் கொண்டிருந்தான்.

இந்த இடங்களில் அரசமாளிகைகள் நிலவியிருந்தன. அனுராதபுரி அரசின் மேலாதிக்கத்தைப் பெயரளவில் பானுசிங்கன் ஏற்றிருந்த போதும் சுதந்திரமுள்ளவனாகவே இப்பிரதேசத்தில் செயற்பட்டு வந்தான்.

---

20. கி.பி. மூன்றாம் நாலாம் நூற்றாண்டுகளில் கிழக்கிலங்கையில் இந்து மதம் - கட்டுரை நா. நவநாயகமூர்த்தி, ''இந்துநதி'' கிழக்கு பல்கலைக் கழகம் 2003 / 2004



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்ச் சைவனான பானுசிங்கன் சைவசமய வளர்ச்சியில் பெரிதும் அக்கறை கொண்டவனாக வாழ்ந்திருந்த போதும் பௌத்த சமயத்துக்கும் ஆதரவளித்து வந்தான். இவ்வேளை குடும்பிகல, லகுகல, தீகவாபி போன்ற பௌத்த தலங்கள் சிறப்புடன் விளங்கியிருந்தன. இந்த இடங்களில் வாழ்ந்து வந்த தமிழ்ச் சைவர்கள், தமிழ்ப் பௌத்தர் என்போர் பௌத்த சிங்களவர்களுடன் ஒற்றுமையாக வாழ்ந்து வந்தனர்.

இவ்வேளையிலேயே கிபி325ல் மகாசேனன் என்பவன் அனுரதபுரியில் ஆட்சிக்கு வந்தான். இவனது ஆட்சிக்காலத்தில் (கிபி325-352) நிகழ்ந்த சம்பவமே கிழக்கிலங்கை இந்து சமய வரலாற்றில் மிகமுக்கிய தடயமாக கருதப்படுகின்றது.

அனுரதபுரி மன்னன் சோரநாகன் காலம் தொடக்கம் (கிபி9) மகாசேனன் ஆட்சிக்கு வந்த காலம் வரை (கிபி 325) உள்ள காலத்தில் உரோகணத்தின் வடக்கு கிழக்கு பகுதியான தென் கிழக்கிலங்கையில் தமிழும், சைவமும் செழித்திருந்தன. தமிழரிடையே பௌத்தமும் நிலவியிருந்தது. இக்கால கட்டத்தில் மட்டக்களப்பில் (அம்பாரை உள்ளிட்ட) ஆட்சி புரிந்து வந்த தமிழ்ச் சிற்றரசர்கள் சுதந்திர ஆட்சியாளர்களாகவே செயற்பட்டு வந்தனர்.

இக்கால கட்டத்தில் (கிபி9-325) அனுராதபுரியில் காலத்துக்குக் காலம் இடம்பெற்று வந்த அரசுரிமைப் போட்டிகள், அரசியல் நெருக்கடிகள், குழப்பங்கள் இலங்கை அரசியலில் அவ்வப்போது நிலவி வந்த தமிழர் அரசியல் செல்வாக்கும் இதற்கு சாதகமாக அமைந்தன எனலாம். இவை பற்றி பண்டைய மட்டக்களப்பும் சங்கமன் கண்டி இறக்காவில் சிவாலயமும் நூல் (பக்.69-79) விளக்கமாகக் குறிப்பிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாசேனன் ஆட்சிக்காலத்தில் நிகழ்ந்த மதரீதியான வன்முறைகளும் அக்கரைப்பற்றுப் பிரதேசமும்

தெத்தீசன் (கி.பி. 315 - 325) என்பவனுக்குப் பின்னர் மகாசேனன் என்பவன் கி.பி. 325ம் ஆண்டு அனுராதபுரி மன்னனானான். இவன் கி.பி.352ம் ஆண்டு வரை ஆட்சி புரிந்தான் இதனை மகாவம்சம் குறிப்பிடுகின்றது. மகாவம்சம் கைகர் பதிப்பு கணக்கின்படி இக்கால கட்டத்தில் மட்டக்களப்பில் (அம்பாரை உள்ளிட்ட) ஆட்சி செலுத்திய சிற்றரசன் பானுசிங்கன் கி.பி.318 ஆண்டு தொடக்கம் கி.பி. 343ம் ஆண்டு வரை ஆட்சி புரிந்துள்ளதாக அறிய முடிகின்றது.

மகாசேனன் அனுராதபுரியில் ஆட்சிக்கு வந்ததைத் தொடர்ந்து (கி.பி. 325) தென்கிழக்கிலங்கையில் ஆட்சி புரிந்து வந்த பானுசிங்கன் (கி.பி 318 - 343) மகாசேனனின் மேலாதிக்கத்தை ஏற்றிருந்ததுடன் இலங்கை முழுவதிலும் ஆட்சி புரிந்து வந்த மன்னர்களுடனும் நட்பாகவிருந்தான். மகாசேனனின் ஆட்சிக் காலத்தில் ஆட்சி மையமாக அனுராதபுரி விளங்கியிருந்த போதும் அனுராதபுரி மன்னனின் அதிகார வரைமுறைகளை ஏற்று பல சிற்றரசுகள் இலங்கையின் நாலா பகுதிகளிலும் நிலை பெற்றிருந்தன. (சூளவம்சம் அத் 1) இவற்றில் மட்டக்களப்பு சிற்றரசும் ஒன்றாக நிலை பெற்றிருந்தது.[1]

மகாசேனன் ஆட்சிக்கு வந்த காலத்தில் இலங்கையில் பௌத்த சமயத்தில் பல பிரிவுகள் நிலவியிருந்தன. இவற்றிலொன்று மகாயான பௌத்தமாகும். மகாயான பிரிவைச் சேர்ந்த சங்கமித்த தேரரின் போதனைகளால் கவரப் பெற்ற அனுராதபுரி மன்னன் மகாசேனன் தேரவாதப் பிரிவினரான மகாவிகாரை பிக்குகளை ஆதரிக்காது விட்டதோடு குடிமக்களும் இவர்களை ஆதரிக்கக்கூடாது எனக் கட்டளையிட்டான்.

---

1. பண்டைய மட்டக்களப்பும் சங்கமன் கண்டி இறக்காவில் சிவாலயமும் - பக் 103, 104 நா. நவநாயகமூர்த்தி - 2017



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாவிகாரைப் பிக்குகள் அனுராதபுரத்தை விட்டு மலைநாட்டுக்கும் உறுகுணைக்கும் சென்றனர்.

இதன்பின்னர் 'லோவ மகாபாயா' என்ற கட்டிடமும் மகா விகாரைக்கு சொந்தமான ஏனைய கட்டிடங்களும் தரைமட்டமாக்கப்பட்டன. இக்கட்டிடங்களின் தளபாடங்களைக் கொண்டு மகாசேனன் அபயகிரி விகாரத்தில் சில கட்டிடங்களைக் கட்டுவித்தான்.[2] இவ்வேளையில் சைவ சமயத்தின் மீதும் பகைமை கொண்டு சமய விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டான்.

மகாவிகாரைக்குச் சொந்தமான கட்டிடங்களை தரைமட்டமாக்கியதைப் போன்று கிழக்கிலங்கையில் புகழ் பெற்றிருந்த சிவாலயங்கள் மூன்று இவனால் இடித்தழிக்கப்பட்டன. அனுராதபுரியில் ஆட்சி புரிந்த மகாசேனன் கோகர்ண, ஏரகாவில பிராமணன் கலந்தனின் ஊர் ஆகிய இடங்களில் இருந்த பிராமண தெய்வங்களின் கோயில்களை அழித்து அவ்விடங்களில் மூன்று விகாரைகளைக் கட்டினான். இதனை மகாவம்சம் குறிப்பிடும்.[3] இந்த இடங்கள் யாவும் கிழக்கிலங்கையில் இருந்தன.

மேலும் இவ்வாலயங்கள் யாவும் சிவாலயங்களாகும். இவற்றிலொன்று கோகர்ணமான திருகோணமலை கோணேஸ்வரமாகும் இன்னொரு சிவாலயம் சங்கமன்கண்டி முனை இறக்காவில் சிவாலயம், மற்றொன்று கலந்தன் ஊர் சிவாலயம் (சாஸ்திரவெளி) ஆகும். இம்மூன்று சிவாலயங்கள் பற்றியே மகாவம்சம் (அத்தி 37: வரி 40, 41) குறிப்பிட்ட போதும் இக்காலத்தில் சைவசமயம் செழிப்புற்றிருந்த கிழக்கிலங்கையின் கரையோரப் பகுதிகளில் நிலைத்திருந்த மேலும் பல சிவாலயங்கள் மகாசேனனால் அழிக்கப்பட்டிருக்கலாம் என்று எண்ண இடமுண்டு.

---

2. நம்முன்னோரளித்த அரும் செல்வம் - பக் 51,52 ஜி.சி. மெண்டிஸ் - 1969

3. மகாவம்சம் CWGeiger 1986, அதிகாரம் XXXVII : வரி 40, 41



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதே வேளை மகாவம்சம் கூறும் 'ஏரகாவில' என்ற இறக்காவில் சிவாலயம் என்பது பண்டைய அக்கரைப்பற்று பிரதேசம் சங்கமன் கண்டிமுனையில் அமைந்திருந்த புகழ்பெற்ற சிவாலயமாகும்.இதனையே அழித்து அங்கு விகாரையொன்றை நிர்மாணித்தான் என மகாவம்சம் குறிப்பிடுகின்றது. (மகாவம்சம் அத் 37 :செய் 40, 41) அதாவது மகாசேனன் காலத்தில் உரோகணத்து இறக்காவில் ஊரில் சிறப்புடன் விளங்கியிருந்த சிவாலயம் இடித்தழிக்கப்பட்டு இறக்காவில் விகாரை (றக்காவிகாரை) நிர்மாணிக்கப்பட்டது.

## 'ஏரகாவில என்ற இறக்காவில் சிவாலயம்

கி.மு. நாலாம், மூன்றாம் நூற்றாண்டுகளில் உறுகுணையில் ஆட்சிபுரிந்த பாண்டிய குலத்தினரான கதிர்காமச் சந்தணகாம சத்திரியர்களது ஆட்சிக் காலத்தில் பண்டைய நகர நாகரீகம் நிலவியிருந்த சங்கமன்கண்டியிலும் இதனை அண்மித்த இறக்காவில் குளத்தின் அருகாயிருந்த இடங்களிலும் பாண்டிய நாட்டுத் தமிழ் மக்கள் பெருமளவில் குடியேறி (கி.மு. 4ம் நூற்) பூர்வகுடியினரான நாகர் குலத்தினருடன் ஒன்றாக வாழ்ந்திருந்தனர்.

இதனைத் தொடர்ந்து இறக்காவில் ஊர் பொலிவுடன் விளங்கத் தொடங்கியது. கி.மு. மூன்றாம் நூற்றாண்டு தமிழ்ச் சைவர்கள் (நாகர், பாண்டியர்) நிறைந்திருந்த இறக்காவில் கிராமத்தில் கதிர்காமச் சத்திரியர்களினால் சிவாலயமொன்று தோற்றுவிக்கப்பட்டு இவர்களது ஆதரவுடன் வளர்ச்சியுற்று வந்தது. (நா. நவநாயகமூர்த்தி - 2017)

மேலும் பாண்டிய குலத்துத் தமிழ்ச்சைவர்களான அவர்கள் தங்கள் முருக வழிபாட்டை உறுகுணை நாட்டில் நிறுவினர். முருகன் குறிஞ்சிக் கடவுள் ஆதலால் தமிழரது வழக்கப்படி கதிர்காம மலையில் முருகனுக்கு கோயில் கட்டி வழிபட்டனர்.[4]

---

4. தமிழ் நாட்டு வரலாறு, சங்ககால அரசியல் - பக் 594. 595, தமிழ் நாட்டு அரசு வெளியீடு - 1983

* இதற்கு முந்திய காலத்தில் பூர்வ குடியினரான நாகர், இயக்கர், வேடர் குலங்களினால் அம்மலையில் வேல் வழிபாடு தோற்றுவிக்கப்பட்டு நிலவி வந்தது. இதன் தொடர்ச்சியாகவே முருக வழிபாடு மலர்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வேளை உரோகண நாட்டில் பாண்டிய குலத்தினரால் நிர்மாணிக்கப்பட்டு வளர்ச்சியுற்று வந்த இன்னொரு கோயில் 'ஏரகாவில' என்ற இறக்காவில் ஊரிலிருந்த பிரசித்தி பெற்ற சிவாலயமாகும்.

கி.பி நாலாம் நூற்றாண்டில் மகாசேனன் ஆட்சிக்கு வந்த காலத்தில் 'ஏரகாவில' என்று மகாவம்சம் கூறும் இறக்காவில் ஊரில் வாழ்ந்திருந்த நாகர், இயக்கர், கலிங்கர், பாண்டியர் என்ற திராவிடக் குலங்களிடையே இக்காலத்தில் சைவ சமயமே முன்னிலை பெற்றிருந்ததுடன் சங்கமன்கண்டிமுனை இறக்காவில் சிவாலயமும் புகழ் பெற்றிருந்தது.

இவ்வூரில் வாழ்ந்திருந்த தமிழ்ச் சைவர்களை (திராவிடக் குலங்கள்) பௌத்தர்களாக மாற்றும் நோக்குடனேயே மகாசேனன் தனது அரசியல் மேலாதிக்கத்தைப் பிரயோகித்தான் என்பதை அறியமுடிகின்றது. (நா. நவநாயகமூர்த்தி - 2017. பக் 105) இதேவேளை அக்கரைப்பற்று பிரதேசத்தில் ஏனைய இடங்களில் வாழ்ந்திருந்த தமிழர்களில் ஒருசாரார் பௌத்த தமிழர்களாக வாழ்ந்திருந்தனர் என்பதும் தெளிவு.

மகாசேனன் அக்கரைப்பற்று சங்கமன் கண்டிமுனையில் அமைந்திருந்த இறக்காவில் (ஏரகாவில) சிவாலயத்தை அழித்து இறக்காவில் ஊரில் விகாரையொன்றை (மிககாம விகாரை) நிர்மாணித்தான் என்பதை மகாவம்சம் குறிப்பிடுகின்றது. இதே வேளை அக்கரைப்பற்று பிரதேசத்தில் அமைந்திருந்த ஏனைய சில சிவாலயங்களும் அழிக்கப்பட்டிருக்கலாம் அல்லது சேதமாக்கப்பட்டிருக்கலாம் இதுபற்றி மகாவம்சம் எதுவும் குறிப்பிடவில்லை.

மகாசேனனால் இக்காலத்தில் அழிக்கப்பட்ட கிழக்குக் கரையில் புகழ்பெற்றிருந்த கோகர்ணம் என்ற திருக்கோணேஸ்வரம் இவனுக்குப் பின் அனுராதபுரியில் ஆட்சி புரிந்த மேகவண்ணன் (கி.பி.352 - 389) காலத்தில் மீண்டும் புனரமைக்கப்பட்டு சிறப்புடன் விளங்கியிருந்தது. அத்துடன் தனது செல்வாக்கை மீண்டும் பெற்றுக் கொண்டதுடன் இலங்கை வரலாற்றில் நிலையானதொரு இடத்தைப் பெற்றுக் கொண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதேவேளை சங்கமன்கண்டிமுனை இறக்காவில்(ஏரகாவில) சிவாலயம் மீண்டும் புனரமைக்கப்படவில்லை என்பதை அறியமுடிகின்றது. இவ்வூரில் வாழ்ந்திருந்த தமிழ்ச் சைவர்களில் பெருமளவினர் பௌத்தத்தை தழுவியிருந்ததன் காரணமாக இந்நிலை தோன்றியிருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகின்றது.

இறக்காவில் சிவாலயம் (ஏரகாவில) கலந்தன் ஊர் சிவாலயம் ஆகிய இலிங்கக் கோயில்களை மதவெறி கொண்ட மகாசேனன் இடித்தழித்தவேளை தென்கிழக்கிலங்கைச்சிற்றரசனான கலிங்க குலத்துத் தமிழ்ச் சைவனான பானுசிங்கனால் தடுத்து நிறுத்த முடியாது போயிற்று. இதுவே வரலாற்றுண்மையாகும். வலிமை மிக்க அனுராதபுரி மன்னன் மேலாதிக்கத்தை மட்டக்களப்பு சிற்றரசன் ஏற்றிருந்தமையே இதற்கான காரணமாகும்.

## ஸ்ரீ மேகவண்ணன் ஆட்சிக் காலத்தில்

பானுசிங்கனுக்குப்பின் இவனது மகனான அமரசேனன் (கி.பி. 343 - 377) என்பவன் மட்டக்களப்பு என்ற தென்கிழக்கிலங்கையில் ஆட்சிக்கு வந்தான். கலிங்க குலத்துத் தமிழனான இவனது ஆட்சிக் காலத்தின் முற்பகுதியில் சைவசமயம் மட்டக்களப்பில் நலிவுற்றிருந்ததுடன் சைவாலயங்களும் பொலிவிழந்து காட்சியளித்தன. அனுராதபுரி மன்னன் மகாசேனனின் இறுதிக் காலம் வரை (கி.பி.352) இந்நிலை நீடித்திருந்தது எனலாம்.

மகாசேனன் மேற்கொண்ட சமயவிரோத நடவடிக்கைகளின் விளைவாக பண்டைய அக்கரைப்பற்றுப் பிரதேசம் உள்ளிட்ட தென்கிழக்கிலங்கை என்ற மட்டக்களப்பில் ( அம்பாரை உள்ளிட்ட) பௌத்தம் ஓரளவு செல்வாக்குப் பெற்றிருந்தபோதும் இப்பிராந்தியத்தில் வாழ்ந்திருந்த பௌத்த, சைவ மக்களிடையே இந்து சமய நம்பிக்கைகளும் தொடர்ந்து நிலவியிருந்தன. இங்கு வாழ்ந்திருந்த மக்களில் ஒருசாரார் தொடர்ந்து சைவர்களாக வாழ்ந்திருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாசேனனைத் தொடர்ந்து இவனது மகனான ஸ்ரீ மேகவண்ணன் (கி.பி.352 - 389) அனுராதபுரி மன்னனானான். சமாதானப்பிரியனான இவனது அரசியல் செல்வாக்கு இலங்கையின் வடபகுதி, மேற்குபகுதி, தென்கிழக்குப் பகுதி என்பனவற்றில் நிலவியிருந்தது.[5] ஸ்ரீ மேகவண்ணனது மேலாதிக்கத்தை மட்டக்களப்பு சிற்றரசனான அமரசேனன் (கி.பி.343 - 377) ஏற்றிருந்த போதும் சுதந்திரமுள்ள சிற்றரசனாகவே இப்பிரதேசத்தை பரிபாலனம் செய்து வந்தான்.

ஸ்ரீமேகவண்ணன் ஆட்சிக்கு வந்ததும் முதலில் செய்த காரியம் தன் தந்தை மகாவிகாரைக்கு இழைத்த தீமைகளுக்கு பரிகாரம் காணவேண்டி மகாசேனனால் அழிக்கப்பட்ட லோகமகாபாயா முதலான கட்டிடங்களைத் திரும்பக்கட்டுவித்தான்.[6] தன் தந்தையால் அழிக்கப்பட்டிருந்த பிரிவேனாக்கள் விகாரைகள் என்பவற்றினை முன்னைய பொலிவோடு புனர்நிர்மாணம் செய்வித்தான்.

இதேவேளை , ஸ்ரீமேகவண்ணன் அனுராதபுரியில் முடிசூடிக் கொண்டதைத் தொடர்ந்து பண்டைய அக்கரைப்பற்றுப் பிரதேசம் உள்ளிட்ட தென்கிழக்கிலங்கையில் இந்து சமய வளர்ச்சியில் மறுமலர்ச்சி தோன்றியது. மகாசேனனின் சமய விரோத நடவடிக்கை காரணமாக தென்கிழக்கிலங்கை என்ற மட்டக்களப்பில் செழிப்பிழந்து அருகிய நிலையிலிருந்த சைவம் மீண்டும் புத்துயிர் பெற்று சிறப்புடன் விளங்கத் தொடங்கியது.

---

5. HISTORY OF CEYLON - Page 89 S. PARANAVIDANA - 1969

6. நம்முன்னோரளித்த அருஞ் செல்வம் - பக் 82, ஜி.சி. மென்டிஸ் - 1969



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய சைவாலயங்களும் தோற்றம் பெற்றன. இதே வேளை மகாசேனனால் இடித்தழிக்கப்பட்ட புகழ்பெற்றிருந்த சங்கமன்கண்டி இறக்காவில் (ஏரகாவில) சிவாலயம் மீண்டும் புனரமைக்கப்பட்டு தோற்றுவிக்கப்படவில்லை ஆயினும் மட்டக்களப்பில் வாழ்ந்திருந்த பௌத்த தமிழர்களில் ஒரு பிரிவினர் மீண்டும் சைவர்களாயினர். மட்டக்களப்பில் அதிகாரம் செலுத்தி வந்த தமிழ்ச்சைவனான அமரசேனன் (கி.பி. 343 - 377) சைவசமய வளர்ச்சியில் ஆர்வம் காட்டி வந்த போதும் பௌத்தத்திற்கும் ஆதரவளித்து வந்தான். இக்காலத்தில் தமிழகத்திலிருந்து சைவக்குடியினர் பலர் இப்பிராந்தியத்தில் வந்து குடியேறினர்.[7]

இவனது காலத்தில் தமிழகம் இராமநாதபுரத்திலிருந்து ஏழு பெண்கள் தலைமையில் தமிழ்க் குடிகள் பலர் மட்டக்களப்பை வந்தடைந்து அமரசேனனைக் கண்டு ஆதரவு வேண்டி நின்றதாகவும் தமிழ்ச்சைவர்களான ஏழு பெண்களுக்கும் அவர்களுடன் வந்திருந்த ஏனைய தமிழ் குடியினருக்கும் மட்டக்களப்பு சிற்றரசனான அமரசேனன் ஏழு ஊர்களை வழங்கி அந்த இடங்களில் அவர்களைக் குடியேற்றியதாகவும் மட்டக்களப்பு மான்மியம் நூல் குறிப்பிடுகின்றது.[8]

இக்காலத்தில் சங்கமன்கண்டி தொடக்கம் வில்காமம், றூபஸ் சாகாமம், பொத்தானை, கிழவியூர்மலை, அளிக்கம்பை, பட்டிநகர் கண்ணகிபுரம், முள்ளிக்குளமலை, தீகவாபி ஆகிய இடங்கள் உள்ளிட்ட காளியோடை வரையான பண்டைய அக்கரைப்பற்று பிரதேசத்தில் தமிழும், சைவமும் செழித்திருந்தன. பௌத்தமும் சைவமும் நிலவியிருந்ததுடன் பௌத்த தமிழர்களும் சிங்கள பௌத்தர்களும் வாழ்ந்திருந்தனர்.

---

7. கி.பி. மூன்றாம் நாலாம் நூற்றாண்டுகளில் கிழக்கிலங்கையில் இந்து மதம் கட்டுரை- நா. நவநாயகமூர்த்தி 'இந்து நதி' விசேடமலர், கிழக்கு பல்கலைக்கழகம் - 2003/ 2004

8. மட்டக்களப்பு மான்மியம் - பக் 40,41 பதிப்பாசிரியர் எப்.எக்ஸி - நடராசா - 1962



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டைய சைவாலயங்கள் பொலிவுடன் விளங்கியிருந்தன. அத்துடன் தீகவாபி உள்ளிட்ட (தலம்) பௌத்த ஆலயங்களும் சிறப்புடன் விளங்கியிருந்தன. அமரசேனனால் இப்பிரதேசத்தில் விவசாயம், நீரப்பாசனம் என்பன அபிவிருத்தி செய்யப்பட்டு நெல்விளைச்சல் பெருகியிருந்தது. இதேவேளை சிற்றரசனான அமரசேனன் இதற்கு முந்திய காலத்தில் உன்னரசு சிற்றரசனான மனுநேய கஜபாகுவால் நிர்மாணிக்கப்பட்ட (கி.பி.2ம் நூற்) தம்பதிவில் ஏரியைப் புனரமைத்ததுடன் இதனோடு இணைந்திருந்த நெற்காணிகளையும் (வட்டிவெளி. முனங்குவயல்) அபிவிருத்தி செய்தான் (மட்டக்களப்பு மான்மியம் பக் 41) என்பதை அறியமுடிகின்றது.

அமரசேனனது காலத்தில் கம்பரின் இராமகதை மட்டக்களப்பில் பரப்பப்பட்டதாக மட்டக்களப்பு மான்மியம் (பக் (பக் 41) குறிப்பிடுகின்றது. கம்பர் பிற்பட்ட காலத்தவர் என்பதால் இதை கம்பரின் கதையாக கருதமுடியாது. இக்காலத்தில் இராமன் பற்றிய கதை (தசரத ஜாதக கதை) தமிழ் நாட்டில் நிலவியமை தெரிகின்றது. எனவே தமிழகம் இராமநாதபுரத்திலிருந்து வந்து மட்டக்களப்பில் அக்கால கட்டத்தில் குடியேறியவர்களுடனாகவே இக்கதை மட்டக்களப்பில் பரவியதாகக் கொள்ள முடியும்.[9]

அமரசிங்கனுக்குப்பின் குணசிங்கன் கி.பி.377 - 407) என்பவன் மட்டக்களப்பு மன்னனானான். அனுராதபுரி மன்னன் மேகவண்ணனின் மேலாதிக்கத்தை இவன் ஏற்றிருந்த போதும் சுதந்திரமுள்ள சிற்றரசனாகவே இப்பிரதேசத்தில் நல்லாட்சி புரிந்து வந்தான். அனுராதபுரி மன்னன் மேகவண்ணனும் மட்டக்களப்பு சிற்றரசன் குணசிங்கனும் நெருங்கிய நண்பர்களாகவிருந்து வந்தனர். (மட்டக்களப்பு மான்மியம் பக். 42) இவர்களிருவரது ஆட்சிக் காலத்தில் அனுராதபுரிக்கும் மட்டக்களப்புக்குமிடையில் நெருங்கிய சமூக. சமய கலாசார உறவுகள் நிலவியிருந்தன.

---

9. மட்டக்களப்பு வரலாறு - பக் 53, 54 வெல்லவூர் கோபால் - 2005



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மன்னர்களது காலத்தில் இலங்கைப் பௌத்த சமய வரலாற்றில் ஒரு முக்கிய சம்பவம் நிகழ்ந்துள்ளது. அதாவது புத்தபெருமானின் புனித பற்சின்னம் இக்காலத்திலேயே இலங்கைக்கு எடுத்து வரப்பட்டுள்ளது. மேலும் மட்டக்களப்பு சைவவரலாற்றிலும் ஒரு முக்கிய நிகழ்வும் இடம் பெற்றுள்ளது. இதனை வரலாற்று நூல்கள் குறிப்பிடுகின்றன.

மேகவண்ணன் ஆட்சிக் காலத்தில் புத்தருடைய பல் ஒன்றைத் தன் கேசத்தில் மறைத்துக் கொண்டு தன் சத்துருக்களிடமிருந்து தப்பிய கலிங்க நாட்டு இளவரசி இலங்கையை அடைந்தாள். இந்தப் பல்லை மரியாதையுடன் வரவேற்று இலங்கையின் இராஜதானியாகிய அனுராதபுரத்தில் வைத்து ஆலயம் எழுப்பினார்களாம் என்று நமது பாரதம் என்ற நூல் குறிபிடுகின்றது.[10]

ஸ்ரீமேகவண்ணன் காலத்தில் ஒரு பிராமணப் பெண் துறவி கலிங்க தேசத்திலிருந்து புத்தரின் தாது ஒன்றினை எடுத்து வந்தாள். அதனை வெகு கௌரவத்தோடு மேகவண்ணன் ஏற்றுக் கொண்டான். இவ்வாறு சூளவம்சம் (அத்தி. 1) குறிப்பிடுகின்றது.[11] இதனை பேராசிரியர் பரணவிதான அவர்களும் இலங்கை வரலாறு என்ற நூலில் குறிப்பிடுகின்றார்.[12]

பகை வேந்தன் ஒருவனது கைகளுக்கு அகப்படாமல் இருப்பதற்காகவே கலிங்க மன்னன் தனது மகளும் இளவரசியுமான பெண்ணிடம் புத்ததந்தத்தை கொடுத்து இலங்கைக்கு அனுப்பி வைத்தான் என ஆய்வாளர் நந்ததேவ விஜயசேகர அவர்கள் "முன்னைச் சிங்கள ஓவியம்" (1965) என்ற நூலில் குறிப்பிடுகின்றார். இதனை வரலாற்றாசிரியர் எச். டபிள்யு கொடிறின்றன் அவர்களும் தனது நூலில் குறிப்பிடுகின்றார்.[13]

---

10. நமது பாரதம் - பக் 34,35 த.கி. வெங்கிடராமன் முன்னாள் வரலாற்று பேராசிரியர் - 1965
11. சூளவம்சம் கூறும் இலங்கை வரலாறு - பக் 3,4, கலாநிதி க. குணராசா 2008
12. A CONCISE HISTORY OF CEYLON - Page 89C.W. NICHOLAS AND S. PARANAVITHANA - 1961
13. இலங்கையின் சுருக்க வரலாறு - பக்26. எச் டபிள்யு கொடிறின்றன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ மேகவண்ணன் (கி.பி 352 - 389) குணசிங்கன் (கி.பி.377 - 407) ஆகியோரது ஆட்சிக் காலத்தில் நிகழ்ந்த இந்த முக்கிய வரலாற்று நிகழ்வு பற்றி நோக்குமிடத்து கலிங்க ஒரிசா தேசத்தை அரசு புரியும் குகசேனனுடைய புத்திரி உலகநாச்சி என்பவள் கௌதம புத்தருடைய தசனத்தைத் தனது நெடுங்கூந்தலுக்குள் மறைத்துக் கொண்டு கைலையங்கிரியில் குகவம்சத்தார் முற்காலத்தில் எடுத்து வைத்திருந்த சிவலிங்கத்தையும் எடுத்துக் கொண்டு தனது சகோதரன் உலகநாதனுடன் வர்த்தகரின் கப்பலேறி மணிபுரத்தில் (மன்னார்) இறங்கி அனுராதபுரி வந்து மேகவண்ணனைச் சந்தித்து அவனிடம் புத்தருடைய தசனத்தைக் கையளித்தாள்.

இதனைத் தொடர்ந்து கலிங்க இளவரசியான உலக நாச்சியும் தனது குலம் கோத்திரங்களையெல்லாம் மன்னனிடம் எடுத்துரைத்தாள். மேகவண்ணனும் பௌத்தத்திற்கு இனிப்பாதிப்பில்லையென்று உளம் மகிழ்ச்சியுற்றவனாய் உலக நாச்சியை நோக்கி உனக்கு வேண்டியதைக் கேளும் என்று கூறினான். உலக நாச்சியும் அரசனிடம் இந்த இலங்கையில் காடு செறிந்து குடிவாழ்வில்லாக் கிராமம் ஒன்று தரும்படி வேண்டினாள்.

இதைக் கேட்ட மேகவண்ணன் மட்டக்களப்பை அரசுபுரியும் குணசிங்கன் தனது நண்பனானதால் ஒரு திருமுகம் வரைந்து அதில் உனது உன்னரசுகிரி, மட்டக்களப்பு இவைகளில் காடு செறிந்து குடிவாழ்வில்லாத இடம் ஒன்று இந்த உலகநாச்சிக்குக் கொடுக்கும் படி வேண்டி உலகநாச்சிக்கு கொடுக்கும் உபகாரங்களையும் இரத்தின மாலையையும் அளித்து மட்டக்களப்புக்கு அனுப்பி வைத்தான்.

குணசிங்கனும் திருமுகத்தைப் படித்துச் சந்ததி உரிமை கொண்டாடி மட்டக்களப்புக்கு வடபாகமாகவுள்ள அம்பலான் துறைக்கப்பால் மண்ணேறி முனை வளர்ந்து காடு செறிந்து குடிவாழ்வற்ற பகுதியை நிந்தமாயீந்து ஒரு இடத்தில் குடிகளை அனுப்பி வெட்டித் தூர்த்து மாளிகையொன்று நிர்மாணித்து உலகநாச்சிக்கு அளித்தான். உலகநாச்சியும் குடிவாழ்ந்து சிலகாலம் சென்ற பின் தனது தம்பி சிவநாதனை தந்தையிடத்தில் அனுப்பி குகன்குடும்பம் நூற்றாறும், சிறைக் குடும்பம் (பணியாட்கள்) முப்பதும் எடுப்பித்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரிசாவிலிருந்து வருவித்த குகக்குடும்பங்களைத் தன் அருகாய் குடியமர்த்தி இந்த இடத்தில் ஒரு கோயில் நிர்மாணித்து அதில் தான் கொண்டு வந்த படிகலிங்கத்தை பிரதிஸ்டை செய்தாள். இதனை அனைவரும் வணங்கி வந்தனர். இதன்பின்னர் இன்னும் ஒரிசா நகரத்திலிருந்து அனேக குகக் குடும்பங்களை அழைத்து காப்புமுனைக் காட்டை அழித்து செப்பனிட்டு குடியேற்றி அப்பகுதிக்கு அரசியாகி மண்முனை என நாமம் சூட்டி வாழ்ந்து வந்தாள். இவ்வாறு மட்டக்களப்பு மான்மியம் குறிப்பிடுகின்றது.[14]

---

14. பண்டைய மட்டக்களப்பும் சங்கமன் கண்டி இறக்காவில் சிவாலயமும் - பக் 114 115, நா. நவநாயகமூர்த்தி - 2017



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கி.பின் நாலாம் நூற்றாண்டு தொடக்கம் கிபி 1215ம் ஆண்டு வரையுள்ள காலத்தில்

கிபி நாலாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பண்டைய அக்கரைப்பற்று பிரதேசம் உள்ளிட்ட தென் கிழக்கிலங்கையை மட்டக்களப்பு (வீரமுனைக்கருகில்) உன்னரசுகிரி (குடும்பிகல) ஆகிய நகரங்களை அரசிருக்கைகளாகக் கொண்டு குணசிங்கனும் (கி.பி 377 - 407) மண்முனையை இராஜதானியாகக் கொண்டு உலக நாச்சியும் ஆட்சி புரிந்து வந்தனர்.

மண்முனை அரசியான உலகநாச்சி மட்டக்களப்பு மன்னன் குணசிங்கனின் தம்பியான 'கிரசரன்' என்பவனை மணம் புரிந்து மண்முனையிலிருந்து ஆட்சி புரிந்து வந்த இக் காலத்திலேயே கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயம் தோற்றம் பெற்றது.[1] மட்டக்களப்பை ஆட்சி புரிந்து வந்த (அம்பாரை உள்ளிட்ட) குணசிங்கன், உலகநாச்சி என்போர் அனுராதபுரி மன்னனின் மேலாதிக்கத்தை ஏற்றிருந்த போதும் சுதந்திரமுள்ள சிற்றரசர்களாக இப்பிராந்தியத்தைப் பரிபாலித்து வந்தனர்.

இக்காலகட்டத்தில், தமிழகத்தில் மூவேந்தர் ஆட்சி கவிழ்க்கப்பட்டு களப்பிரர் என்போர் ஆட்சி நிலவியிருந்தது. களப்பிரர்களுக்கு கீழ் மூவேந்தர் சிற்றரசர்களாகவிருந்து வந்தனர். இக்காலத்தில் அங்கு வாழ்ந்திருந்த தமிழர்களிடையே பௌத்தம் செல்வாக்குப் பெற்றிருந்தது. சைவம் நலிவுற்றிருந்தது. இதேவேளை தென்கிழக்கிலங்கை என்று பண்டைய வரலாற்றிலும் பழந்தமிழ் இலக்கியங்களிலும் குறிக்கப்படும் மட்டக்களப்பு தமிழகத்தில் இந்து சமயம் மீண்டும் தனது செல்வாக்கை நிலைபெறச் செய்திருந்ததுடன் சிறப்புடன் விளங்கியிருந்தது.

---

1.மட்டக்களப்பு மான்மியம் - பக்,43 பதிப்பாசிரியர் எப்.எக்.ஸி நடராசா - 1962



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாசேனனால் இடித்தழிக்கப்பட்ட கலந்தன் ஊர் (கலந்தகம) சிவாலயம், அக்கரைப்பற்று பிரதேசம் சங்கமன் கண்டி இறக்காவில் சிவாலயம் என்பனவற்றைத் தவிர ஏனைய சிவாலயங்கள் பொலிவுடன் விளங்கியிருந்தன. இவ்வாறு தென்கிழக்கிலங்கையில் சைவம் செழிப்புடன் விளங்கியிருந்ததுடன் பௌத்த சமயமும் நிலவியிருந்தது, பௌத்த தமிழர்களும் வாழ்ந்திருந்தனர்.

இக்காலம் தொடக்கம் கி.பி பதின்மூன்றாம் நூற்றாண்டு (கி.பி1210) வரையுள்ள காலத்தில் உரோகண மண்டலத்தின் வடக்கு, கிழக்கு பகுதியான மட்டக்களப்பை (அம்பாரை உள்ளிட்ட) ஆட்சி புரிந்து வந்த சிற்றரசர்கள் பண்டைய மட்டக்களப்பு நகரினையும், (சம்மாந்துறை) மண்முனையையும் தங்கள் இராஜதானிகளாகக் கொண்டு ஆட்சி புரிந்து வந்தனர். இதனை மட்டக்களப்பு பூர்வ சரித்திரம் என்ற 'மட்டக்களப்பு மான்மியம்' நூல் குறிப்பிடும்.

இச்சிற்றரசர்கள் சில காலங்களில் சிங்கள மன்னர்களின் மேலாதிக்கத்தை ஏற்றும், சிலகாலங்களில் சுதந்திரமுள்ளவர்களாகவும் இப்பிராந்தியத்தில் ஆட்சி செலுத்தி வந்துள்ளனர். இவர்கள் சைவம், பௌத்தம் ஆகிய இரு சமயங்களையும் ஆதரித்து வந்தனர். இதனை மேற்படி நூல் உறுதி செய்கின்றது. உரோகண மண்டலத்தின் வடக்கு, கிழக்கு பகுதியான மட்டக்களப்பில் ஆட்சி புரிந்து வந்த இச்சிற்றரசர்களைச் 'சூளவம்சம்' போன்ற நூல்கள் 'ஆட்சித் தலைவர்கள்' என்று குறிப்பிடுகின்றன.[2]

---

2.திருக்கோவில் பிரதேச இலக்கிய வரலாறு - பக்.19 நா.நவநாயகமூர்த்தி -2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பண்டைய வரலாற்றில் அக்கரைப்பற்று

கி.பி நாலாம் நூற்றாண்டு தொடக்கம் கி.பி பதின்மூன்றாம் நூற்றாண்டு வரை (கி.பி 1210) இன்றைய திருக்கோவில் ஆலையடிவேம்பு, அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளை உள்ளடக்கியிருந்த பண்டைய அக்கரைப்பற்று பிரதேசம் மட்டக்களப்பு வரலாற்றில் மட்டுமன்றி பண்டைய ஈழ வரலாற்றிலும் முக்கியத்துவம் பெற்றிருந்ததுடன் அக்காலத்தில் நகர நாகரீகம் செழித்திருந்த இடங்களாக வில்காமம், சங்கமன்கண்டி, சாகாமம், பொத்தானை, முள்ளிக் குளமலைப் பிரதேசம், தீகவாபி ஆகியன விளங்கியிருந்தன.

கி.பி ஐந்தாம் நூற்றாண்டிலிருந்து எட்டாம் நூற்றாண்டு வரை இலங்கை உள்நாட்டுக் கலவரங்களினாலும் தென்னிந்திய அரசர்களின் தாக்குதல்களினாலும் அல்லலுற்றிருந்தது.[3] கி.பி ஆறாம், ஏழாம், எட்டாம், ஒன்பதாம் நூற்றாண்டுகளில் அனுராதபுரி ஆட்சியாளர்களுக்கும், உறுகுணை ஆட்சியாளர்களுக்குமிடையில் அரசுரிமைப் போட்டிகள் ஏற்பட்டன. இவற்றின் பயனாக அனுராதபுரி ஆட்சியாளர்கள் உறுகுணை மீது மேற்கொண்ட படையெடுப்புக்கள் என்பனபற்றி 'சூளவம்சம்' குறிப்பிடுகின்றது.

இவற்றில் பெரும்பாலான படையெடுப்புக்கள் பண்டைய அக்கரைப்பற்று மேற்குப் பிரதேசப் பகுதிகளான தீகவாபி, சாகாமம் வில்காமம், சங்கமன்கண்டி ஆகிய நகரப் பகுதிகளினூடாகவே இடம்பெற்றுள்ளன. ஆயினும் இவ்வேளைகளில் இப்பிரதேச மக்களது வாழ்வியல் பெரிதும் பாதிப்புக்குள்ளாகவில்லை. இதனை 'சூளவம்சம்' போன்ற நூல்கள் உணர்த்துகின்றன. மாறாக உறுகுணை, அனுராதபுரி ஆட்சியாளர்கள் இப்பிரதேசத்துக்கு ஆற்றி வந்த சமூக,சமய, விவசாய அபிவிருத்திப் பணிகள் பற்றி வரலாற்று நூல்கள் குறிப்பிடும்.

---

3. நமது பாரதம் - பக்.36,37 த.கி.வெங்கிடராமன், முன்னாள் வரலாற்று பேராசிரியர்- 1965



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி.பி. ஏழாம் நூற்றாண்டில் உறுகுணையிலிருந்து படைதிரட்டி அனுரதபுரியைக் கைப்பற்றி அரசுபுரிந்த 'மொகலானன்' என்பவன் சாகாமம் நகரில் விகாரையொன்றை நிர்மாணித்ததுடன் சங்கமன்கண்டி றக்கா (இறக்காவில்) விகாரைக்கு சேத்திய மனையும் நிர்மாணித்துக் கொடுத்துள்ளான். முதன்முதலாக விசாக தினத்தை பெருவிழாவாக நாடெங்கும் கொண்டாட செய்த மன்னன் இவனேயாவான்.[4]

இரண்டாம் மகிந்தனது காலத்தில் (கி.பி.777-797) உறுகுணையிலிருந்து மகிந்தனின் உறவினனும் இளவரசனுமான தப்புலன் என்பவன் மகிந்தனது உரிமையை மறுத்துப் போர் தொடுத்தவண்ணமாகவிருந்தான். மன்னன் இரண்டாம் மகிந்தன் (கி.பி.777 - 797) தப்புலனைத் தோல்வியுறச்செய்தான். பின்னர் இருவருக்குமேற்பட்ட ஒப்பந்தம் காரணமாக அனுராதபுரியின் எல்லை (இராசரட்டை) கல்லோயா வரை மாற்றப்பட்டது. இவன் தனக்கு முகம்கொடுத்த கலகங்களை அடக்கினான். தமிழர்களுடன் நட்பாகவிருந்தான். அவர்களை திருப்திப்படுத்த வேண்டி பாழடைந்த சைவக்கோயில்களைப் புதுப்பித்தான். பிராமணர்களுக்கும் தமிழர்களுக்கும் வெகுமதிகளை அளித்தான்.[5]

இதனைத் தொடர்ந்து இரண்டு நூற்றாண்டுகள் (சோழர் காலம் வரை) பண்டைய அக்கரைப்பற்று பிரதேசத்தில் அடங்கியிருந்த தீகவாபி நகரானது அனுராதபுரியை ஆட்சி புரிந்த சிங்கள மன்னர்களின் செல்வாக்குக்குட்பட்டிருந்தது. அனுராதபுரி இராசரட்டையின் தலை நகரமானபடியால் இராசரட்டையின் எல்லையும் விரிவடைந்திருந்த அக்காலத்தில் பௌத்த தமிழர் தமிழ்ச்சைவர்கள், பௌத்த சிங்களவர்கள் நிறைந்திருந்த தீகவாபி நகரானது மட்டக்களப்பு சிற்றாட்சிப் பிரிவில் அடங்கியிருந்த போதும் இக்காலத்தில் அனுராதபுரி ஆட்சியின் மேலாதிக்கத்தை ஏற்றிருந்த மட்டக்களப்பு பிராந்தியத்தில் சிங்களமன்னர்களின் அரசியல் மையங்களிலொன்றாக விளங்கி வந்தது.

---

4. இலங்கை சுருக்க வரலாறு பக்.112-கலாநிதி க.குணராசா, கமலா குணராசா - 2008

5. பண்டைய ஈழம் பாகம் I, பக்.166,167. வே.க.நடராசா - 1970



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் பயனாக அனுராதபுரிக்கும் மட்டக்களப்புக்குமிடையில் நெருக்கமான சமூக, சமய, கலாசார உறவுகள் ஏற்பட்டதுடன் அனுராதபுரி மன்னர்களின் செல்வாக்கும் மட்டக்களப்பில் வேரூன்றத் தொடங்கியது. இக்காலத்தில் அம்பாறை, இங்கினியாகலை ஆகிய பகுதிகளில் தமிழ்ச் சைவர்கள் பெருமளவில் வாழ்ந்து வந்ததுடன் பௌத்த ஆலயங்களும், சைவாலயங்களும் அருகருகாய் நிலவியிருந்தன. இதே வேளை தீகவாபி நகர் உள்ளிட்ட அக்கரைப்பற்று பிரதேசம் அனுராதபுரி மன்னர்களின் ஆதரவைப் பெற்று வந்ததுடன் இப்பிரதேச சமூக, சமய, பொருளாதார அபிவிருத்திக்கும் அனுராதபுரி மன்னர் தங்கள் ஆதரவை நல்கி வந்தனர்.

இரண்டாம் மகிந்தன் அம்பாரை, இங்கினியாகலை தீகவாவி உள்ளிட்ட கல்லோயா பகுதியில் வாழ்ந்திருந்த தமிழர்களுக்கு வெகுமதிகளை வழங்கியதுடன் இப்பகுதிகளில் பாழடைந்த நிலையிலிருந்த சைவக்கோயில்களையும் புதுப்பித்துள்ளான். அம்பாரை விகரகொட சிவாலயம், வளத்தாப்பிட்டி சிவாலயம் என்பன இவனால் புதுப்பிக்கப்பட்ட சிவாலயங்களில் சிலவாகும். இப்பகுதியில் (கல்லோயா) வாழ்ந்திருந்த பிராமணர்களுக்கு இரண்டாம் மகிந்தன் வெகுமதிகளை வழங்கியுள்ளான்.

கி.பி ஒன்பதாம் நூற்றாண்டில் நாலாம் தப்புலன் காலத்தில் (கி.பி 814 -830) உறுகுணை மன்னனான மகிந்தனுடன் முரண்பட்ட அவனது இரு புதல்வர்கள் நாட்டைவிட்டு அகன்று அனுராதபுரம் வந்து மன்னனிடம் அடைக்கலம் புகுந்தனர். மன்னன் தப்புலன் பெரும் படையோடு அந்த இருவரையும் உறுகுணைக்கு அனுப்பி வைத்தான். அதனைக் கேள்வியுற்ற உறுகுணைத் தலைவன் மகிந்தன் பெருஞ்சேனையோடு எதிர்கொள்ள, பயந்து போன இரு புதல்வர்களும் ஒரு சேனைத் தலைவனிடம் பொறுப்பினைக் கொடுத்துவிட்டு அனுராதபுரி மீண்டனர்.

உறுகுணை மன்னன் மகிந்தன் வேறொரு மன்னனுடன் போரிட்டவேளை இரு மன்னர்களும் மரணமடைந்தனர். அதன்பின்னர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுராதபுரி மன்னன் தப்புலன் உறுகுணை இளவரசர்களில் மூத்தவனான 'கித்தக்கபோதி' என்பவனுக்கு தன் மகள் தேவியை மணம் முடித்துக் கொடுத்து அடுத்த இளவரசன் தப்புலனை (அதேபெயர்) சேனைத் தலைவனாக்கி திரண்ட செல்வங்களுடன் உறுகுணைக்கு அனுப்பி வைத்தான்.(சூளவம்சம் அத்தியாயம் 4)

உறுகுணை அரசியலில் அடிக்கடி அனுராதபுரி மன்னர்கள் தலையிட்டு வந்த அக்காலத்தில் உறுகுணை இளவரசர்களில் ஒருவனான 'கித்தக்கபோதி' தப்புலன் உதவியுடன் உறுகுணை அரசைப் பெற்றான்.[6] அனுராதபுரி மன்னன் நாலாம் தப்புலனால் அக்கரைப்பற்று சாகாமம் குளம் புனரமைக்கப்பட்டுப் பயன்படுத்தப்பட்டது. இக்குளத்தின் நீர் எவ்வாறு பங்கிடப்பட வேண்டும் என்பதை அக்காலத்தைச் சேர்ந்த சமஸ்கிருத கல்வெட்டொன்று குறிப்பிடுகின்றது. (நா.நவநாயகமூர்த்தி - 2014, பக்.18)

அனுராதபுரியில் ஆட்சிபுரிந்த முதலாம் சேனன் (கி.பி.833-853) இரண்டாம்சேனன் (கி.பி.853-887) ஆகிய மன்னர்கள் அக்கரைப்பற்று பிரதேசத்துடன் நெருக்கமான உறவுகளைக் கொண்டிருந்தனர். சைவசமயச் சார்புடைய இம்மன்னர்கள் இருவரும் அக்கரைப்பற்று பிரதேசம், தீகவாபி நகர் உள்ளிட்ட கல்லோயா பகுதிகளில் நிலைத்திருந்த சைவாலயங்களை ஆதரித்து வந்ததுடன் பிராமணர்களுக்கு வெகுமதிகளையும் வழங்கி வந்தனர். முதலாம் சேனன் சைவனாகவே வாழ்ந்தான். இதனை 'நிகாயசங்கிரகம்' என்ற நூல் குறிப்பிடுகின்றது.[7]

6. பண்டைய ஈழம், பாகம் I பக்.166,167 வே.க.நடராசா 1970

7. தம்பிலுவில் கண்ணகி வழிபாடு - பக்.63, நா.நவநாயகமூர்த்தி - 1999



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி.பி.ஒன்பதாம் நூற்றாண்டில் இரண்டாம் சேனன் காலத்தில் மட்டக்களப்பை தருமசிங்கன் என்பவன் சிற்றரசனாகவிருந்து ஆட்சிபுரிந்து வந்தான். இவன் அனுராதபுரி மன்னனின் மேலாதிக்கத்தை ஏற்றிருந்த போதும் சுதந்திரமுள்ளவனாகவே செயற்பட்டு வந்தான். இக்காலத்தில் பாண்டிய நாட்டில் ஏற்பட்ட அரசுரிமை போட்டி காரணமாக தன் தந்தை மீது கோபம் கொண்ட இரண்டாம் வரகுணன் இலங்கை வந்து இலங்கை மன்னன் இரண்டாம் சேனன் துணையுடன் பாண்டிய வேந்தனாக அரியணை ஏறினான்.[8]

பாண்டிய நாட்டின் மீது இலங்கை மேற்கொண்ட இப்படையெடுப்பானது, இரண்டாம் சேனன் காலத்தில் இடம்பெற்றது. இதனை 'தளவாய்புர' செப்பேடுகளில் கிடைக்கும் செய்திகள் உறுதி செய்கின்றன. இச் சண்டையைத் தொடர்ந்து இரண்டாம் வரகுணனின் தந்தையான ஸ்ரீமாறவல்லபன் கொல்லப்பட்டான். சேனனின் படைத்தலைவன் வரகுணனுக்கு முடிசூட்டி இலங்கை மீண்டான் இவ்வாறு சூளவம்சம் (அத்:5) குறிப்பிடுகின்றது.[9]

பாண்டிய நாட்டின் மீது இரண்டாம் சேனன் படையெடுப்பை மேற்கொண்டவேளை, இலங்காபுரி தண்டநாயக்கனாக சென்றவன் (சேனாதிபதி) இக்காலத்தில் மட்டக்களப்பை ஆட்சி புரிந்து வந்த சிற்றரசன் தருமசிங்கனாவான். இவனையே தனது படைக்குத்தளபதியாக நியமித்து பாண்டியநாட்டுக்கு சேனன் அனுப்பி வைத்தான் என்றும் இவன் பாண்டியகுமாரன் புனந்துருவனை (2ம் வரகுணன்) அரசனாக்கி மீண்டான் என்றும் மட்டக்களப்பு மான்மியம் நூல் (பக்.45.46) குறிப்பிடுகின்றது.

---

8. பாண்டியர் வரலாறு பாகம் I - பக்.346,47. ம.இராஜசேகரதங்கமணி - 1978

9. சூளவம்சம் குறிப்பிடும் 'மாயா' என்ற இளவரசன் இரண்டாம் வரகுணனேயாவான்) (கி.பி 862 - 885) பாண்டியர் வரலாறு - பக்.75,76. டாக்டர் கே.வி.ராமன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி.பி.840ம் ஆண்டு முதலாம் சேனன் காலம் தொடக்கம் சோழர் இலங்கையை கைப்பற்றிய காலம் வரை (கி.பி.993) அனுராதபுரியில் ஆட்சி புரிந்த சிங்கள மன்னர்கள் பாண்டியருடன் நெருக்கமான அரசியல், சமய, கலாசார உறவுகளைக் கொண்டிருந்தனர். இத்தொடர்புகள் அக்கரைப்பற்று பிரதேசம் உள்ளிட்ட மட்டக்களப்பில் வாழ்ந்து வந்த தமிழரது அரசியல், சமய, பண்பாட்டு வளர்ச்சிக்கு பெரிதும் உதவியிருந்தன.

அனுராதபுரியில் தமிழரது செல்வாக்கு நிலவியிருந்த இக்காலத்தில் அக்கரைப்பற்று பிரதேசம் பாண்டிய நாட்டுடன் நெருக்கமான உறவுகளை கொண்டிருந்தது. சின்னமுகத்துவாரம், ஒலுவில், திருக்கோவில், உமிரி ஆகிய துறைகளினூடாக வாணிபம், போக்குவரத்து என்பன இடம்பெற்று வந்தன. அனுராதபுரியில் ஆட்சிபுரிந்து வந்த மன்னர்களது சமூக, சமய, பொருளாதார, அபிவிருத்தி பணிகள் சாகாமம் நகர் வரை பரவியிருந்தன.

இதனை தொடர்ந்து சோழர் இலங்கையை கைப்பற்றி பொலநறுவையை தங்கள் தலைநகராகக் கொண்டு இலங்கையில் ஆட்சிபுரிந்த காலத்தில், குறிப்பாக கி.பி 993 - 1067 வரையுள்ள காலத்தில் கதிர்காமத்தை இராஜதானியாகக் கொண்டு கி.பி.1029ம் ஆண்டு தொடக்கம் உறுகுணையில் ஆட்சி செலுத்தி வந்த மன்னர்களுக்கெதிராக சோழர் மேற்கொண்டு வந்த படையெடுப்புக்கள் மட்டக்களப்பின் பண்டைய அக்கரைப்பற்று பிரதேசத்தினூடாகவே இடம்பெற்று வந்துள்ளது. இதனை வரலாற்று நூல்கள் தெளிவுறுத்துகின்றன. இது பற்றி விரிவாக நோக்குவது பொருத்தமானதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சோழர் ஆட்சிக்காலத்தில்

முதலாம் இராஜராஜன் இலங்கையை கைப்பற்றி பொலநறுவையை தலைநகராகக் கொண்டு இலங்கை முழுவதையும் ஆட்சி புரிந்த காலத்தில் (கி.பி.1017ல்) மட்டக்களப்பின் தெற்கு எல்லையானது மாணிக்ககங்கை வரை பரந்திருந்தது. இவ்வேளையில் மட்டக்களப்பை ஆட்சிபுரிந்து வந்த கதிர்சுதன் சிற்றரசன் சோழப்பிரதிநிதியாக தன்னை ஏற்று இப்பெரும் பிரதேசத்தை பரிபாலித்து வந்தான். இப்பிரதேசத்தை இவன் மூன்று பிரிவுகளாகப் பிரித்து இம்மூன்று பிரிவுகளின் தலைநகரங்களாக முறையே உன்னரசுகிரி (உகந்தை), மட்டக்களப்பு (வீரமுனை அருகாய்) மண்முனை என்பன விளங்கியிருந்தன.

இலங்கை முழுவதிலும் சோழரது ஆட்சிநிலைத்திருந்த இக்காலத்தில் மட்டக்களப்புத் துறைமுகங்கள் பெரிதும் சிறப்புற்றிருந்தன. சோழநாட்டிற்கும் இப்பிரதேசத்திற்குமிடையில் வாணிபம், போக்குவரத்து ஆகியன இடம்பெற்று வந்தன.[10] மேலும் தமிழர் குடியேற்றங்களும் இடம்பெற்று வந்தன.[11] சோழப்பிரதிநிதியாக (அரச) விளங்கிவந்த கதிர்சுதன் தனக்கு உதவியாக ஏழு மந்திரிகளை நியமித்து மதபேதமின்றி ஆட்சிபுரிந்து வந்தான். இவனால் நியமிக்கப்பட்ட மந்திரிகள் குறுநில மன்னர்களுக்குரிய அதிகாரங்களையும் பெற்றிருந்தனர்.

கி.பி 1029ம் ஆண்டுவரை சோழப்பிரதிநிதியாக மட்டக்களப்பை ஆட்சி புரிந்து வந்த கதிர்சுதன் சோழப் பெருமன்னனைப் போன்று குடிகளின் நலன்களைப் பெரிதும் பேணிப் பௌத்தாலயங்களையும், சைவாலயங்களையும் வேறுபாடின்றி செப்பனிட்டதுடன் நீர்ப்பாசனம், விவசாய அபிவிருத்தி என்பவற்றிலும் கவனம் செலுத்தி வந்தான். இச்சிறப்புக்களால் கதிர்சுதனையும் இராசராசன் என்றே புலவர்கள் பாடினர். இதனை இங்குள்ள கல்வெட்டுக்கள் (சுவடிகள்) கூறுகின்றன. (பண்டிதர் வி.சி.கந்தையா-1964)

10. மட்டக்களப்புத் தமிழகம் - பக்.402 பண்டிதர் வி.சி.கந்தையா - 1964

11. ஈழத்தமிழர் வரலாற்றுச் சுவடுகள் - பக்.60. நா.நவநாயகமூர்த்தி -2002



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதிர்சுதனுக்குப் பின் மதிசுதன் என்பவன் சோழ அரசுப்பிரதிநிதியாக மட்டக்களப்பில் ஆட்சிக்கு வந்தான். இவ்வேளை (1029ல்) விக்கிரமபாகு என்ற சிங்கள கிளர்ச்சியாளன் உறுகுணையின் சில பகுதிகளைக் கைப்பற்றி தானே மன்னன் என கதிர்காமத்தில் முடிசூடிக்கொண்டான். இவன் ஐந்தாம் மகிந்தனின் மகனாவான். இதனைத் தொடர்ந்து மட்டக்களப்பின் தெற்கு எல்லை உகந்தை வரை நிலவியிருந்தது. விக்கிரமபாகு 1041ம் ஆண்டு வரையும் சிங்கள மன்னனாக தென்னிலங்கையில் ஆட்சி புரிந்தான்.

இவனுக்குப் பின் முறையே மகாலனகீர்த்தி (கி.பி 1041 - 1044) விக்கிரமபாண்டியன் (கி.பி 1044 - 1047) ஜகதிபாலன் (கி.பி 1047 - 1057) ஆகியோர் உறுகுணையின் தென் பகுதியிலிருந்து ஆட்சிபுரிந்தனர். இக்காலத்தில் சோழப் பேரரசனாகவிருந்த ராஜாதிராஜன் தென்னிலங்கைச் சிங்கள அரசின் மீது படையெடுத்து ஜகதிபாலனைக் கொன்று அவன் மனைவியையும் மகள் லீலாவதியையும் கைது செய்து தஞ்சைக்கு கொண்டு சென்றான்.[12] இதனைத் தொடர்ந்து பராக்கிரமபாண்டியன் என்பவன் ஆட்சி புரிந்து வரும் வேளையில் இவன் சோழரின் வாளுக்கிரையாகி மடிந்தான்.
இவனைத் தொடர்ந்து லோகேஸ்வரன் என்ற படைத்தலைவன் கதிர்காமத்திலிருந்து தென்னிலங்கையை ஆட்சி புரிந்து வந்தான்.[13] இக்காலங்களில் உறுகுணைப் பிரதேசம் அமைதியின்றி இருந்து வந்தது. இதே வேளை உறுகுணையின் வடக்கு, கிழக்குப் பகுதியான மட்டக்களப்பில் சோழரது பிரதிநிதியான மதிசுதனின் நல்லாட்சி நிலவியிருந்தது.[14] லோகேஸ்வரனுக்குப் பின் இரண்டாம் இராஜேந்திரன் ஆட்சிக் காலத்தில் முதலாம் விஜயபாகு கதிர்காமத்தில் முடிசூடிக் கொண்டான்.

---

12. Colas - Page.253 by K.Nelakandasastny

13. பண்டைய ஈழம் பாகம் I - பக்.250, வே.க.நடராசா-1970



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காலத்தில் சங்கமன்கண்டி தொடக்கம், வில்காமம், சாகாமம், முள்ளிக்குள மலைப்பிரதேசம், தீகவாபி உள்ளிட்ட காளியோடை வரை பரந்திருந்த பண்டைய அக்கரைப்பற்று பிரதேசத்தில் சோழரது செல்வாக்கு நிலைத்திருந்ததுடன் சாகாமம் தீகவாபி ஆகிய நகரங்களில் சோழரது பெரிய இராணுவ முகாம்களும், காவல் அரண்களும் அமைந்திருந்தன. இங்கிருந்தே சோழர்கள் கதிர்காமத்தில் அவ்வப்போது அமைந்திருந்த அரசுகள் மீது (தென்னிலங்கை) தாக்குதல்கள் மேற்கொண்டு வந்தனர்.

இக்காலத்தில் பண்டைய சாகாமம் நகரில் அமைந்திருந்த சோழரது இராணுவ முகாம் பல இடங்களில் காவலரண்களைக் கொண்ட பெரிய இராணுவத்தளமாக விளங்கியிருந்தது. (கி.பி.1029-1067) சோழநாட்டிலிருந்து திருக்கோவில் துறையூடாக (துங்ககோள) இத்தளத்திற்கு இராணுவத் தளபாடங்கள், உணவு என்பன வந்து கொண்டிருந்தன.

இவ்வேளையில் கி.பி1055ல் கதிர்காமத்தில் முடிசூடித் தன்னை மன்னன் என்று பிரகடனப்படுத்திய முதலாம் விஜயபாகு சுயராஜ்யம் ஒன்றை அமைக்கும் பொருட்டு முயற்சிகளை மேற்கொண்டான். இதை அறிந்த சோழர் படை கதிர்காமத்தை நோக்கிப் படையெடுப்பொன்றை மேற்கொண்டது. இதனை அறிந்த முதலாம் விஜயபாகு கதிர்காமத்தை விட்டகன்று பின்பு மீண்டும் தனது அதிகாரத்தை நிலைநிறுத்திக் கொண்டான். கி.பி.1058ல் விஜயபாகு தனது இடைவிடாத முயற்சியினால், உறுகுணையின் பெரும் பகுதிகளை தனது அதிகாரத்தின் கீழ் கொண்டு வந்தான்.[15]

---

14. இவனது நல்லாட்சி பற்றியும் சமூக, சமய, அபிவிருத்திப் பணிகள் பற்றியும் மட்டக்களப்பு மான்மியம் விபரமாகக் குறிப்பிடும் (பக்.48,49)

15. சோழர்களின் அரசியல் கலாசார வரலாறு 1 - பக்.548 மா.பாலசுப்பிரமணியன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி.பி.1063ல் சோழப் பேரரசனான வீரராசேந்திரன் முதலாம் விஜயபாகுவுக்கு எதிராக பெரும் போர் ஒன்றைத் தொடுத்தான். விஜயபாகுவின் மனைவி சிறைபிடிக்கப்பட்டாள். இதன் பின்னர் விஜயபாகு லகுகலையிலுள்ள பலட்டுபான (மகுல்மகா விகாரைக்கருகில்) என்ற குன்றுத் தொடரில் காப்பரண் ஒன்றை அமைத்துக்கொண்டான். (நா.நவநாயகமூர்த்தி - 2002, பக்.62) இதனைத் தொடர்ந்து முதலாம் விஜயபாகுவின் சோழருக்கெதிரான இறுதிப்படையெடுப்பு ஒரு திட்ட அமைப்பைக்கொண்டு நடத்தப்பெற்றதாக சூளவம்ச விபரங்கள் (அத்.7) உணர்த்துகின்றன.

கி.பி1067ல் முதலாம் விஜயபாகு தனது படைபலத்தைப் பெருக்கிச் சோழருக்கெதிரான இறுதிப்படையெடுப்பை நடாத்தினான். இப்படையெடுப்பு மாகமையிலிருந்து ஆரம்பித்து இருவழிகளினூடாக நடைபெற்றது. ஒரு படைப்பிரிவு கிழக்கு மாநிலத்தினூடாகச் சென்று சாகாமத்திலிருந்த படைமுகாமைத் தாக்கி மகாவலிகங்கைக் கரையைச் சென்றடைந்தது.[16] இவ்வேளை தீகவாபியில் அமைந்திருந்த சோழர் படைமுகாமும் அக்கரைப்பற்று பிரதேசத்தில் அமைந்திருந்த சோழரது வேறு காவல் அரணகளும் நிர்மூலமாக்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து இப்பிரதேசத்தில் நிலவியிருந்த சோழரது அரசியல் செல்வாக்கு இல்லாது போயிற்று.

முதலாம் விஜயபாகு பொலநறுவையைக் கைப்பற்றி ஆட்சிபுரியத்தொடங்கியதைத் தொடர்ந்து தீகவாபி நகரானது மீண்டும் சிங்கள மன்னரின் செல்வாக்குக்குட்பட்டது. அக்கரைப்பற்று பிரதேச சமூக, சமய, வளர்ச்சிக்கு முதலாம் விஜயபாகு ஆதரவளித்து வந்தான். இவனது ஆட்சிக்காலத்தில் (கி.பி1070-1110) இப்பிரதேசம் செழிப்புடன் விளங்கியிருந்தது. சைவாலயங்களை இவன் ஆதரித்து வந்ததுடன் சாகாமம் நகரில் அமைந்திருந்த பத்தினி ஆலயத்துக்குத் தானங்களும் இவனால் வழங்கப்பட்டுள்ளன.[17]

---

16. A Concise History of Ceylon - Page 191 C.W.Nicholas, S.Paranavidana
* பண்டைய ஈழம் - பாகம் II - பக்.253, 254 வே.க.நடராசா
17. மட்டக்களப்பு மான்மியம் - ஓர் ஆராய்ச்சி - பக்.104 திருமதி.ஜி.தனபாக்கியம் எம்.ஏ. (தொல்லியல்)
* A Center of folk Religion for sinhalese and Tamils - கட்டுரை Mr.K.Tharmalingam, The Island 08.06.85



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூளவம்சம், கந்த உபாத போன்ற நூல்கள், திருக்கோவில் தமிழ்க் கல்வெட்டுக்கள், கிராமிய இலக்கியங்கள் இதனை உணர்த்துகின்றன. முதலாம் விஜயபாகு தனது ஆட்சிக்காலத்தில் சிங்கள மொழியுடன் தமிழையும் ஆதரித்து வந்தான். இலங்கையில் சோழரது ஆட்சி நிலைத்திருந்த காலத்தில் சோழருக்கெதிரான கிளர்ச்சியில் ஈடுபட்டிருந்தபோதும் தமிழர்கள் மீது வெறுப்புக்காட்டவில்லை. சோழப்படைகளை இலங்கையிலிருந்து அகற்றிப் பொலநறுவையில் சிங்களவம்சத்தின் ஆட்சியை ஆரம்பித்து வைத்த முதலாம் விஜயபாகு சோழருடைய பகைவனேயொழிய தமிழரையோ இந்து மதத்தையோ எதிர்த்தவன் அல்ல இவ்வாறு கா.இந்திரபாலா (இலங்கையில் திராவிடக் கட்டிடக்கலை, பக்.25,26 - 1970) குறிப்பிடுகின்றார்.[18]

விஜயபாகு தனது ஆட்சிக்காலத்தில் தமிழகத்துடன நெருங்கிய உறவினைக் கொண்டிருக்க விரும்பினான். இதனைக் கருத்தில் கொண்டு தனது உடன்பிறந்த தங்கையான மித்தா என்பவளை பாண்டிய இளவரசன் ஒருவனுக்கு மணம்முடித்துக் கொடுத்தான் (நா.நவநாயகமூர்த்தி - 2002,பக்,67) இவ்வேளை பாண்டியநாட்டிலிருந்து அழைத்துவரப்பட்ட தமிழ்க்குடியினர் சாகாமம், வடபுறநகர் பகுதியில் குடியேற்றப்பட்டனர்.[19] சில குடும்பங்கள் 'வேல்காமம்' என்ற இடம் அருகில் குடியேற்றப்பட்டனர்.

---

18. தமிழ்ப் படைகளையும் தனது சேனையில் வைத்திருந்த முதலாம் விஜயபாகு தமிழ் எழுதுநர்களையும் நிர்வாகசேவையில் அமர்த்தியிருந்தான். (தமிழர் வரலாறும் இலங்கை இடப்பெயர் ஆய்வும். பக்.77,78 கதிர் தணிகாசலம் - 1992) பொலநறுவையிலுள்ள வேளைக்கார சாசனம், பழமோட்டை தமிழ்ச் சாசனம் என்பவற்றின் வாயிலாக இவற்றை அறிய முடிகின்றது.

19. பட்டிநகர் கண்ணகி ஆலய வரலாறு - பக்.15.நா.நவநாயகமூர்த்தி -2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாம் விஜயபாகு தனது இறுதிக்காலத்தில் சோழ மன்னன் குலோத்துங்கனுடன் நட்பாகவிருந்ததுடன் தனது மருமகனான மானாபரணணை (மித்தாவின் குமாரன்) குலோத்துங்கனது மகளான 'சுத்த மல்லி' யாருக்கு மணம் முடித்துக் கொடுத்தான்.[20] அக்கரைப்பற்று பிரதேசத்தில் விஜயபாகு மேற்கொண்டு வந்த சமூக, சைவ அபிவிருத்திப் பணிகளை நிறைவேற்றி வந்தவர் இம்மன்னனின் மனைவியரில் ஒருவரான திரிலோக சுந்தரி என்பவர் ஆவார்.

கலிங்ககுலத்து அரசியான(தமிழ்ச்சைவர்) இவர் சங்குமன் கண்டியில் அமைந்திருந்த அரச மாளிகையை புனரமைத்து அங்கு தங்கியிருந்து அரசாட்சி மேற்கொண்டு வந்தார். இவர் ஆற்றி வந்த சைவப்பணிகளைத் தனது கணவனான மன்னன் முதலாம் விஜயபாகுவின் பெயரில் தமிழ்க் கல்வெட்டுக்களாகப் பொறித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இக்காலத்தில் இன்றைய மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களை (ஒரு சில பகுதிகள் தவிர்த்து) உள்ளடக்கிய தென்கிழக்கிலங்கையை மட்டக்களப்பு நகரிலிருந்து (சம்மாந்துறை) சிற்றரசன் ஆட்சி புரிந்து வந்தான். விஜயபாகுவின் மேலாதிக்கத்தை இவன் ஏற்றிருந்தான். (நா.நவநாயகமூர்த்தி - 1999, பக்.64,65)

இவ்வாறு முதலாம் விஜயபாகுவின் காலம் தொடக்கம் முதலாம் பராக்கிரமபாகு மன்னன் வரையுள்ள காலத்தில் (கி.பி.1153 - 1186) பொலநறுவையிலிருந்து ஆட்சிபுரிந்து வந்த மன்னர்கள் அக்கரைப்பற்று தீகவாபி நகரினைத் தங்கள் அரசியல் மையங்களிலொன்றாகக் கொண்டு கல்லோயா என்ற பட்டிப்பளை பிரதேசத்தில் தங்கள் அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டு வந்தனர். இக்கால கட்டத்தில் இவர்களது சமூக சமய விவசாய மற்றும் நீர்ப்பாசனம் பணிகள் பண்டைய அக்கரைப்பற்று பிரதேசம் சாகாமம் வரை நிலவியிருந்தன.

---

20. சோழர் வரலாறு - பக்.318,319 டாக்டர் கே.கே.பிள்ளை - 1977



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காலத்தில் தென்கிழக்கிலங்கையை பண்டைய மட்டக்களப்பு நகரையும் (சம்மாந்துறை) மண்முனையையும் தங்கள் அரசிருக்கைகளாகக் கொண்டு சிற்றரசர்கள் ஆட்சி புரிந்து வந்தனர். இவர்கள் பொலநறுவை மன்னர்களுடன் நல்லுறவுகள் கொண்டிருந்தனர் மேலும் இவர்கள் பெயரளவில் பொலநறுவை மன்னர்களது மேலாதிக்கத்தை ஏற்றிருந்த போதும் ஓரளவு சுதந்திரமுள்ள ஆட்சியாளர்களாகவே இப்பிரதேசத்தை பரிபாலித்து வந்தனர். பொலநறுவை அரசியலில் அவ்வப்போது இடம்பெற்று வந்த அரசுரிமை போட்டிகள் இதற்கு காரணிகளாயின. இதனை 'சூளவம்சம்' உணர்த்தும்.

முதலாம் விஜயபாகுவுக்குப் பின் ஆட்சி புரிந்த விஜயபாகு மன்னனின் மகனான இரண்டாம் விக்ரமபாகுவும் (கி.பி 1111 - 1132) இரண்டாம் கஜபாகுவும் (கி.பி 1132 - 1153) தமிழை மட்டுமே அரச கரும மொழியாக கொண்டிருந்தனர். அவர்களது பதிவேடுகளில் பெரும்பாலானவை தமிழ் மொழியிலேயே பேணப்பட்டுள்ளன.[21] தாய் வழியில் கலிங்க குலத்தவர்களான விக்கிரமபாகுவும் இவனது மகனான இரண்டாம் கஜபாகுவும் சைவ சமயத்தவர்களாக வாழ்ந்து வந்தனர். இருவரும் சைவர்களாதலால் சிங்கள அரசர்களுக்கு நடைபெறும் பட்டாபிஷேக விழா கூட நடாத்தப்படவில்லை.

பண்டைய ஈழ வரலாற்றில் 'கலிங்கர்' என்று குறிப்பிடுமிடத்து அது தமிழ்ச்சைவரையே குறிப்பதாகும். இரண்டாம் விக்ரமபாகு இரண்டாவது கஜபாகு ஆகிய மன்னர்கள் காலத்தில் சைவ சமய வளர்ச்சியில் முக்கிய காலமாகத் திகழ்ந்தது. விக்ரமபாகுவின் சைவசமயபற்றினை 'காகம் பிலியாவைக்' கல்வெட்டு (E.Z VIII 404:408) மிகச் சிறப்பான முறையில் காட்டுகின்றது. அதாவது குறிப்பிடுகின்றது.

---

21. இலங்கை தமிழர் வரலாறும் இடப்பெயர் ஆய்வும் - பக்.79 கதிர் தணிகாசலம்1977
22. 'சிந்தனை' தொகுதி II இதழ் II - 'கட்டுரை' சி.க.சிற்றம்பலம் கலாநிதி, வரலாற்றுத்துறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் இவன் சைவ சமயத்திற்கு அளித்த ஆதரவை குருநாகல் மாவட்டத்திலுள்ள 'மாகல' என்ற இடத்தில் கிடைத்த கல்வெட்டுகள் எடுத்துக் காட்டுகின்றன.[22] இரண்டாவது கஜபாகு (கி.பி 1132 - 1153) கோகர்ணத்திலுள்ள சிவாலயத்திற்கு செய்த திருப்பணிகள் பற்றி தெட்சண கயிலாய திருநகர் சுருக்கம் சிறப்பித்துக் கூறுகின்றது. கோணேசர் கல்வெட்டும் இவனைப் புகழ்ந்துரைக்கும்.[23]

இரண்டாம் கஜபாகுவுக்குப் பின்னர் ஆட்சிபுரிந்த முதலாவது பராக்கிரமபாகு (கி.பி 1153-1156) தமிழ் மொழிக்கும் தக்க அந்தஸ்தினை வழங்கியிருந்தான். இதனை இவனது தமிழ்ச் சாசனங்கள் உறுதிசெய்கின்றன. தமிழர்களுடன் நெருக்கமான உறவுகள் கொண்டிருந்த இவன் தமிழர்கள் மீது பெரு நம்பிக்கையும் வைத்திருந்தான். முதலாம் விஜயபாகுவின் தங்கையான மித்தாவுக்கும் பாண்டிய இளவரசனான வி.பாண்டுராஜாவுக்கும் பிறந்த மானாபரணன் என்பவனின் மகனே முதலாம் பராக்கிரமபாகு ஆவான்.

ஆதலால் தந்தை வழியில் இவன் தமிழனாவான். தமிழ் அரசன் மானாபரணனின் மகனான முதலாம் பராக்கிரமபாகு சைவ சம்பிரதாய நேர்த்திக்கடன்களின் விளைவாகப் பிறந்தவன் என்பதை சூளவம்சம் குறிப்பிடுகின்றது. (அத்தி:8) முதலாவது பராக்கிரமபாகு பிராமணருக்கு தானம் கொடுத்ததோடு பிராமணர் பிராயச்சித்த சடங்குகளை மேற்கொள்வதற்கும், மந்திரங்களை ஓதுவதற்கும் முறையே கேம மண்டபத்தையும் 'அழகிய தரணிகாரா' வையும் நிர்மாணித்தான். பதின்மூன்று இந்துக்கோயில்களைப் புனருத்தாரணம் செய்தான். மேலும் உறுகுணையில் இருபத்து நான்கு கோயில்களைப் புனரமைத்தான். இவ்வாறு சூளவம்சம் குறிப்பிடுகின்றது.[24]

---

23. இலங்கைத் தமிழ்ச்சாசனங்கள் - பக்,139 பேராசிரியர் சி.பத்மநாதன் -2006

24. 'சிந்தனை' தொகுதி II இதழ் II - 'கட்டுரை' சி.க.சிற்றம்பலம் - 1984



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொலநறுவை அரசின் அரசியல் பாதுகாப்பு மையங்களிலொன்றாக விளங்கி வந்த பண்டைய அக்கரைப்பற்று பிரதேசம் தீகவாபி நகரானது முதலாம் பராக்கிரமபாகுவின் ஆட்சிக்காலத்தில் பலதடவை தாக்குதலுக்குள்ளானதை சூளவம்சம் (அத்தியாயம் 11) குறிப்பிடுகின்றது.

இம்மன்னனது காலத்தில் உருகுணையில் மானாபரணனின் தாயார் சுகலாவின் பாதுகாப்பிலிருந்த புனித தந்த தாதுவையும், ஐயக் கலத்தையும் கைப்பற்றி பொலநறுவைக்குக் கொண்டு வருவதற்காக ரக்கசேனாதிபதியின் தலைமையில் பராக்கிரமபாகு உறுகுணைக்குப் படையொன்றை அனுப்பி வைத்தான்.

இவ்வேளை தீகவாபி நகரில் தங்கியிருந்த பராக்கிரமபாகுவின் தளபதிகளான கீர்த்தி, கீர்த்தி ஜீவித பொத்தகி என்போரின் தலைமையிலிருந்த பெரும்படை அவ்விடத்திலிருந்த எதிரிகளின் படைகளை துவம்சம் செய்தனர். பராக்கிரமபாகு சுகலா ராணியின் வீரர்களுடன் நடத்திய போர்களில் பெரும்பாலானவை உறுகுணையின் கிழக்குப் பகுதிகளிலேயே நிகழ்ந்தன.

உருகுணைப் பகுதியில் இரு சாராருக்கும் இடையில் நடந்த போர்களில் பராக்கிரமபாகுவின் படைகள் வெற்றி பெற்றன. இறுதியில் 'அத்தசகாஸ்சகர்' என்னும் மறைவிடத்தில் ஒளிந்திருந்த ராணி சுகலா கைது செய்யப்பட்டாள். இக்காலத்தில் பல தடவைகள் தீகவாபிநகர் தாக்குதலுக்குள்ளானது. பராக்கிரமபாகு தனது ஆட்சிக்காலத்தில் உறுகுணையில் பல தூபிகளையும் நீர்ப்பாசனக்குளங்களையும நிர்மாணித்துள்ளான்.[25]

முதலாம் விஜயபாகுவின் ஆட்சிக்காலம் தொடக்கம் (கி.பி1070) முதலாம் பராக்கிரமபாகுவின் ஆட்சிக்காலம் வரையுள்ள காலத்தில் (கி.பி1186) பண்டைய அக்கரைப்பற்று பிரதேசம் உள்ளிட்ட மட்டக்களப்பில் (அம்பாரையை உள்ளடக்கிய) தமிழும், சைவமும் செழிப்புடன் விளங்கியிருந்தன.

---

25. சூளவம்சம் கூறும் இலங்கை வரலாறு - பக்.131-134 கலாநிதி க.குணராசா -2008



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பௌத்த தமிழர், பௌத்த சிங்களவர், தமிழ்ச்சைவர் என்போர் ஒற்றுமையுடன் வாழ்ந்து வந்ததுடன் இப்பிரதேசத்தில் பௌத்த ஆலயங்களும், சிவாலயங்களும் அருகருகாய் நிலவியிருந்தன. சிங்கள மன்னர்களிடையே இக்காலத்தில் இடம்பெற்று வந்த அரசுரிமைப் போட்டிகள், இதன் விளைவாக அவ்வப்போது நிகழ்ந்து வந்த படையெடுப்புக்கள் ஆகியன இப்பிராந்தியத்தில் வாழ்ந்திருந்த மக்களின் இயல்பு வாழ்க்கையைப் பெரிதும் பாதிக்கவில்லை எனலாம். இதனை வரலாற்றாய்வுகள் உணர்த்தும்.

## முதலாம் பராக்கிரமபாகுவுக்குப் பின் கி.பி 1215ம் ஆண்டுவரையுள்ள காலத்தில்

முதலாம் பராக்கிரமபாகுவுக்குப் பின் பொலநறுவையிலிருந்து ஆட்சி புரிந்த நிஸங்க மல்லன் (கி.பி 1187- 1196) கலிங்ககுலத்தவன் ஆவான். இவன் தமிழையும், தமிழர்களையும் ஆதரித்து வந்தான். பொலநறுவை, கந்தளாய், பண்டுவஸ்நுவர ஆகிய இடங்களில் கண்டெடுக்கப்பட்டுள்ள இவனது கல்வெட்டுக்கள் இதனை உறுதி செய்கின்றன. கலிங்க மன்னனான நிஸங்க மல்லன் இந்துசமயத்தவனாவான். ஆதலால் இந்து மதத்திற்கும் ஆதரவளித்து வந்தான். நவக்கிரக சாந்தி போன்ற இந்து மதக் கிரியைகளிலும் கலந்து கொண்டான்.[26]

நிஸங்கமல்லனுக்குப் பின் ஆட்சிபுரிந்த மன்னர்கள் காலத்தில் பொலநறுவை அரசில் குழப்பங்களும், அரசியல் போட்டிகளும் மலிந்திருந்தன.கி.பி 1215ம் ஆண்டு வரை இந்நிலை நீடித்திருந்தது. தமிழர்களான கலிங்கர், பாண்டியர், சோழர் ஆகியோரது செல்வாக்கே பொலநறுவை அரசில் இக்காலத்தில் நிலவியிருந்தது. இக்காலத்தில் (கி.பி1197-1215) பண்டைய அக்கரைப்பற்று பிரதேசம் உள்ளிட்ட தென்கிழக்கிலங்கையை (அம்பாரை உள்ளடக்கிய மட்டக்களப்பு) ஆட்சி புரிந்து வந்த சிற்றரசர்கள் பொலநறுவை மன்னர்களின் மேலாதிக்கத்தைப் பெயரளவில் ஏற்றிருந்த போதும் சுதந்திரமுள்ள ஆட்சியாளர் களாகவே இப்பிரதேசத்தில் செயற்பட்டு வந்தனர்.

26. பண்டைய ஈழம் பாகம் II - பக்.319 -321 வே.க.நடராசா - தை - 1970



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி.பி.1200ம் ஆண்டளவில் பொலநறுவை அரசியலில் போட்டிகளும், சச்சரவுகளும் மலிந்திருந்தன. கிபி1210ம் ஆண்டளவில் முதலாவது பராக்கிரமபாகுவின் மனைவியான லீலாவதி என்பவள் ஆட்சி புரிந்து வந்த வேளையில் கலிங்க குலத்தவனான உலோகீஸ்வரன் என்பவன் தமிழ்ப்படையின் துணையுடன் லீலாவதியிடமிருந்து ஆட்சியை கைப்பற்றி பொலநறுவையிலிருந்து ஆட்சிபுரிந்து வந்தான்.[27] தென்னிந்தியாவிலிருந்து தமிழர் படையுடன் வந்து உலோகீஸ்வரன் இலங்கையைக் கைப்பற்றி ஒன்பது மாதங்கள் ஆட்சி புரிந்தான் என சூளவம்சம் (அத்தியாயம் 13) கூறும்.

உலோகீஸ்வரனது ஆட்சிக் காலத்தில் (கி.பி.1210 - 1211) இலங்கையில் சோழரது படையெடுப்பொன்று நிகழ்ந்துள்ளது என சூளவம்சம் மேலும் குறிப்பிடுகின்றது. இப்படையெடுப்பை மேற்கொண்ட சோழன் மூன்றாம் குலோத்துங்கன் ஆவான். தனது மேலாதிக்கத்தை இலங்கையும் ஏற்க வேண்டும் என்பது சோழனின் நோக்கமாகும். இவன் இலங்கை மீது படையெடுத்து வந்து வெற்றியீட்டிய செய்தி இவனது மெய்க்கீர்த்தியில் 'சிங்களவன் தலைமலையாற தென்னீழங்கொள்கவென திரைகடலை அடைக்கவென்ன' என்று கூறுவதிலிருந்த அறியலாம்.[28]

இரண்டாம் உலோகீஸ்ரன் (கி.பி1210-1211) பொல நறுவையிலிருந்து ஆட்சிபுரிந்த காலத்தில் 'நாதன்' என்ற சிற்றரசன் மட்டக்களப்பை ஆட்சி புரிந்து வந்தான். இக்காலத்தில் சோழர்படையெடுப்பொன்று ஈழத்தில் இடம்பெற்றதை மட்டக்களப்பு பூர்வசரித்திரம் என்ற மட்டக்களப்பு மான்மியம் என்ற நூல் (பக்.50) விபரிக்கின்றது.

---

27. இலங்கையின் சுருக்க வரலாறு - பக்.62 எச்.டபிள்யு.கொடிறின்றன் -1960
    பண்டைய ஈழம் பாகம் II. பக்.324.வே.க.நடராசா - 1970
28. மட்டக்களப்பு மான்மியம் ஓர் ஆராய்ச்சி - பக்.76 திருமதி.ஜி.தனபாக்கியம்- பீ.ஏ. சிறப்பு (வடமொழி), எம்.ஏ. (தொல்லியல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோழநாட்டிலிருந்து மாந்தைத் துறையூடாக படையெடுத்துவந்த சோழ மன்னன் மண்ணாறு (மன்னார்), முள்ளுத்தீவு (முல்லைத்தீவு), கொட்டியனூர் (திருகோணமலை) ஆகிய பிரதேசங்களில் அதிகாரம் செலுத்தி வந்த தமிழ்ச்சிற்றரசர்களைச் சந்தித்து தனது மேலாதிக் கத்தை ஏற்குமாறு அவர்களிடம் கூறினான். இச்சிற்றரசர்களும் சோழமன்னனது கோரிக்கையை ஏற்றுக் கொண்டனர்.

இதனைத்தொடர்ந்து மட்டக்களப்பு நகரை (வீரமுனைக்கருகாய்) வந்தடைந்த மூன்றாம் குலோத்துங்கன் மட்டக்களப்புச் சிற்றரசனான நாதனைச் சந்தித்து தனது எண்ணத்தை அவனிடம் கூறினான். நாதனும் சோழமன்னனின் மேலாதிக்கத்தை ஏற்றுக்கொள்வதாக அவனிடம் உறுதியளித்தான்.

இவ்வேளையில் இலங்கை மன்னன் உலோகீஸ்வரன் தென்னிலங்கையின் திஸ்ஸமாரகம (மாகம) நகரில் தங்கியிருந்தான். இதனை அறிந்த சோழ மன்னன் தனது படைகளுடன் அந்நகர் சென்று உலோகீஸ்வரனை சந்தித்தான். ஈழமன்னனும் சோழமன்னனை அன்புடன் வரவேற்று உபசரித்தான். இவ்வாறு மட்டக்களப்பு மான்மியம் கூறுகின்றது.[29]

உலோகீஸ்வரனுக்கு பின் லீலாவதி (கி.பி.1211 - 1212) என்பவளும் இவளுக்குப் பின் பராக்கிரமபாண்டியன் (கி.பி1212-1215) ஆகியோரும் அனுராதபுரியிலிருந்து ஆட்சி புரிந்து வந்தனர். இவனுடைய காலத்திலேயே கலிங்ககுலத்துத் தமிழ் மன்னனான மாகன் என்பவன் இலங்கை மீது படையெடுத்து வந்தான்.

---

29. ஈழத்தமிழர் வரலாற்றுச்சுவடுகள் - பக்.75,76 நா.நவநாயகமூர்த்தி -2002

* சோழமன்னன் மூன்றாம் குலோத்துங்கன் (கி.பி1178-1211) காலத்திலேயே கவிச்சக்கரவர்த்தி கம்பரும் வாழ்ந்திருந்தார். இம்மன்னனது அவைப்புலவராகவிருந்த காலத்திலேயே கம்பர் தனது இராமாயண காவியத்தை பாடினார்.
(தமிழகவரலாறு.பக்.122- டாக்டர் மா.இராசமாணிக்கனார் எம்.ஏ.எல்.டி, எம்.ஓ.எஸ்.பி.எச்.டி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலோகீஸ்வரன் புலத்தி நகரிலிருந்து (பொலநறுவை) ஆட்சிபுரிந்து வரும் காலத்தில் பராக்கிரமன் என்ற சேனைத்தலைவன் மகா பராக்கிரமபாகுவின் மனைவியான லீலாவதியை மீண்டும் அரசகட்டிலேற்றினான். இந்த அரசியின் ஆட்சி நடந்துகொண்டிருக்கும் வேளையில் ஏழாவது மாதம் பராக்கிரமபாண்டியன் தென்னிந்தியாவிலிருந்து பெரும் படையுடன் வந்து லீலாவதியையும் தளபதியையும் கொன்று இலங்கையை கைப்பற்றிக்கொண்டான். அவனது மனுநீதி தவறிய ஆட்சி மூன்றாண்டுகள் புலத்தி நகரில் நிலவியது. இவ்வாறு சூளவம்சம் (அத்.13) கூறும்.

இக்காலத்தில் ஈழவரலாற்றில் முக்கியத்துவம் பெற்றிருந்த சங்கமன்கண்டி, வில்காமம், சாகாமம், தீகவாபி, முள்ளிக்குளமலை பிரதேசம் (நந்திகிரி) ஆகிய நகரப்பகுதிகள் உள்ளிட்ட பண்டைய அக்கரைப்பற்று பிரதேசத்தில் பௌத்த தமிழர், தமிழ்ச்சைவர், பௌத்தசிங்களவர் என்போர் சிறப்புடன் வாழ்ந்திருந்தனர். பௌத்தாலயங்களும், சைவாலயங்களும் அருகருகாய் நிலவியிருந்தன. சாகாமம் நகரில் வரலாற்றுச் சிறப்பினைக் கொண்ட பத்தினி ஆலயம் ஒன்று நிலவிவந்தது. இவ்வாறானதொரு சமூக, சமய செழிப்பான சூழலில் நிகழ்ந்த சமய விரோத செயற்பாடுகள் காரணமாக கலிங்கசூலத்து தமிழ் மன்னனான மாகன் என்பவன் கி.பி1215இல் இலங்கை மீது படையெடுத்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலிங்கமாகன் படையெடுப்பும் இடப்பெயர்வும்

கலிங்ககுலத்துத் தமிழ் மன்னனான மாகன் கி.பி1215ம் ஆண்டு இலங்கைமீது படையெடுத்து வந்து பொலநறுவையைக் கைப்பற்றி ஆட்சி புரிந்தான் என்று வரலாறுகள் குறிப்பிடுகின்றன. தமிழனான மாகன் இருபத்து நான்காயிரம் வீரர்களுடன் படையெடுத்து வந்து பொலநறுவையைக் கைப்பற்றி அப்போது ஆட்சி புரிந்த பராக்கிரம பாண்டியனை நீக்கி அரசனானான் என்று சூளவம்சம் கூறும். ஈழத்தின் மீது மாகன் மேற்கொண்ட மதரீதியான இப்படையெடுப்பே இலங்கையில் சமூக சமய ரீதியில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தக் காரணியாயிற்று.

இவன் விகாரைகளை இடித்து பௌத்தர்களைக் கொடுமைப்படுத்தி துன்புறுத்தியதாக சூளவம்சம் நூல் குறிப்பிடுகின்றது. தமிழனான மாகன் பொலநறுவையிலிருந்து ஆட்சி புரிந்த காலத்தில் (கி.பி1215-1241) புனித பற்சின்னமும், ஐயக்கலமும் கொத்மலைக்கு எடுத்துச்சென்று ஒளித்து வைக்கப்பட்டன. பௌத்த குருமார் வெவ்வேறு திசைகளில் சென்றனர். சிலர் சோழ, பாண்டிய நாடுகளுக்கும் சென்றனர் என்பதையும் அறியமுடிகின்றது. [1]

தவறான சமய நெறிகளை (சைவம்) கொண்டு ஒழுகுகின்ற துட்டன் என்று மாகனைக் குறிப்பிடும் சூளவம்சம் 'தொடர்ந்து தான் பின்பற்றும் தவறான மார்க்கத்தை பின்பற்றுமாறும் மக்களைப் பணித்தான். விகாரைகளுக்கும் சங்கத்திற்கும் ஒதுக்கப்பட்டிருந்த நிலங்களையும் தமிழர்களுக்கு வழங்கினான்' என்றும் சூளவம்சம் (அத்.14) மேலும் கூறும். இக்காலத்தில் இராசரட்டையில் வாழ்ந்து வந்த தமிழ் மக்கள் தமிழ் மன்னனான மாகனுக்கு தங்கள் ஆதரவை நல்கினர்.

---

1. இலங்கையின் சுருக்க வரலாறு - பக்.62 எச்.டபிள்யு. கொடிறின்றன் -1960



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் மன்னனான மாகன் இலங்கை மீது மேற்கொண்ட மதரீதியான படையெடுப்புக்கான காரணம் பற்றி நோக்குமிடத்து அக்காலத்தில் (கி.பி 1214, 1215 கள்) மட்டக்களப்பில் (அம்பாரை உள்ளிட்ட) வாழ்ந்து வந்த சிங்கள மக்களில் சிலர் தமிழர்களுடைய சைவாலயங்களை இடித்தும் தமிழ்ச்சைவர்களின் இருப்பிடங்களைத் தாக்கியும் வந்ததேயாகும். இதனைப் பொறுக்கமாட்டாத தமிழ்ச் சைவனான மாகன் பெரும் படை திரட்டிவந்து சிங்களவர்களுக்கும் பௌத்த மதத்திற்கும் எதிராக செயற்பட்டான்.[2] தமிழ் மன்னனான மாகனின் படையெடுப்பு இலங்கை அரசியலில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது. இப்படையெடுப்பின் பயனாக வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழர் தனிப்பெரும்பான்மையினரானதும் வரலாற்று உண்மையாகும்.[3]

தமிழ் மன்னனான மாகனின் படையெடுப்பானது பண்டைய அக்கரைப்பற்று பிரதேசத்தில் வாழ்ந்திருந்த மக்களது வாழ்வில் பெரும் சமூக, சமய, கலாசார மாற்றங்களை ஏற்படுத்தியது. நெடுங்காலம் தொடக்கம் வாழ்ந்து வந்த இடங்களிலிருந்து மக்கள் இடம் பெயர்ந்து வேறிடங்களுக்குச் செல்ல நேரிட்டது. சங்கமன்கண்டி, வில்காமம், கஞ்சிகுடிஆறு, றூபஸ், சாகாமம், பொத்தானை, முள்ளிக்குளமலை பிரதேசம், தீகவாபி ஆகிய நகரப் பகுதிகளில் வாழ்ந்து வந்த மக்கள் இந்த இடங்களிலிருந்து இடம்பெயர்ந்து வேறிடங்களுக்குச் சென்றனர்.

---

2. குளக்கோட்டன் தரிசனம் - பக் 52 க.தங்கேஸ்வரி, தொல்லியல் பீ.ஏ. - 1993

3. தம்பிலுவில் கண்ணகிவழிபாடு - பக்.66 நா.நவநாயகமூர்த்தி -1999



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனைத் தொடர்ந்து இந்த இடங்கள் பொலிவிழந்து காடாக மாறத்தொடங்கின. இவ்வாறு இடம்பெயர்ந்து சென்றவர்களில் ஒரு பகுதியினர் மேற்கு மற்றும் தென் பகுதிக்கப்பால் உள்ள இடங்களை நோக்கிச் சென்றனர். பௌத்தர்களான இவர்களில் பெருமளவினர் தமிழ்ப் பௌத்தர்களாவர்.[4] இதேவேளை நாகரீகம் நிலவியிருந்த இடங்களில் வாழ்ந்திருந்த மக்களில் ஒரு தொகையினர் இப்பிரதேசத்தின் கிழக்குப் பகுதிகளை நோக்கி இடம்பெயரத் தொடங்கினர். இவர்களில் பெருமளவினர் தமிழ்ச்சைவர்களாவர். ஏனையோரான சிறு தொகையினர் இந்து மதத் தெய்வங்களையும் போற்றி வந்த சிங்கள மக்கள் ஆவர்.[5]

மாகனது படையெடுப்பினைத் தொடர்ந்து நாகரீகம் நிலவியிருந்த சங்கமன் கண்டிதொடக்கம், தீகவாபி உள்ளிட்ட காளியோடை வரையான இடங்களிலிருந்து கிழக்குப் பகுதிகளை நோக்கி மக்கள் இடம்பெயரத்தொடங்கிய காலத்தில் (கி.பி1215) இப்பிரதேசத்தில் நீர் நிலைகள், களப்புக்கள் (சதுப்பேரி) சதுப்பு நிலங்கள், காடுகள் நிறைந்திருந்த கிழக்குக் கரையோரப் பகுதியில் பூர்வீகக் குடியினரான வேடர் குடும்பங்கள் ஆங்காங்கே வாழ்ந்திருந்தனர். குறிப்பாக திராய்க்கேணி, அட்டாளைச்சேனை, கருங்கொடித்தீவு, விநாயகபுரம் தெற்கு, பாலக்குடா, மங்கை மாரியம்மன் தோட்டம், உமிரி முதலான இடங்களில் வாழ்ந்திருந்த தமிழர்களான இவர்கள் வேட்டையாடுதல், மீன்பிடித்தல், தேன் எடுத்தல் ஆகிய தொழில்களைக் கொண்டிருந்தனர்.

---

4. இவர்கள் நாளடைவில் சிங்கள பௌத்தர்களானதும் வரலாற்றுண்மையாகும்

5. இவர்கள் நாளடைவில் தமிழ்ச்சைவர்களாயினர். இவர்களது சந்ததியினர், சிங்களகுடி என்ற பெயருடன் தமிழர்களாக வாழ்ந்து வருகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இடப்பெயர்வும் புதிய வாழ்விடங்கள் தோற்றமும்

பண்டைய அக்கரைப்பற்று தென்பகுதியில் சங்கமன் கண்டி தொடக்கம் சாகாமம் வரையுள்ள பகுதிகளில் வாழ்ந்திருந்த தமிழ்ச்சைவர் மற்றும் சிறு தொகையினரான சிங்களகுடியினர் அப்பகுதிகளிலிருந்து வெளியேறி முதலில் கிழக்கு பகுதிகளான பரசுராமன்குளம், ஆரப்பற்றை குடா (மேட்டுப்பகுதி) கோரைக்களப்பு வடக்கு (சின்னத்தோட்டம் உள்ளிட்ட) தாமரைக்குளம் கிழக்கு, தற்போதைய சங்கமன் கிராமம், திருப்பதி ஆகிய இடங்களில் குடியிருப்புக்கள் அமைத்து வாழ்ந்து வரலாயினர். (நா.நவநாயகமூர்த்தி - 1999.பக்,67)

இதேவேளை (கி.பி1215) சாகாமம் வடக்கு பிரதேசத்தில் தோணிக்கல், பொத்தானை, கிழவியூர்மலை, அளிக்கம்பை, பட்டிநகர், கண்ணகிகிராமம் ஆகிய பண்டைய நாகரீகம் நிலவியிருந்த இடங்களில் வாழ்ந்திருந்த தமிழ்ச்சைவர்கள், சிறு தொகையினரான சிங்கள குடியினர் என்போரில் ஒரு பிரிவினர், புளியம்பற்றை, சிப்பித்திடல் (தெற்கே களப்புவரை) புட்டம்பை கிழக்கு பகுதிகளை நோக்கி இடம்பெயர்ந்து வாழத்தொடங்கினர். அத்துடன் இவர்கள் தங்களுடன் எடுத்து வந்த தங்கள் சிவவழிபாட்டுக் கூறுகளை தாங்கள் குடியிருந்த இடங்களில் வைத்து வழிபட்டு வந்தனர்.[6]

---

6. இவ்வாறு அக்காலத்தில் சிப்பித்திடல் கேணிக்கரை அருகாமையில் கோயில் கொண்டிருந்த சிவலிங்கமே, பனங்காடு கிராமத்தில் இன்று கேணிக்கரை பிள்ளையாராக சிறப்புடன் விளங்கி வருகின்றார். இதே வேளை புளியம்பற்றை வயல் பகுதியில் அண்மைக்காலத்தில் கண்டெடுக்கப்பட்ட பழமை வாய்ந்த சிறிய சிவலிங்கம் ஓர் அன்பர் இல்லத்தில் வழிபடப்பட்டு வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதே வேளை சாகாமம் வடக்குப் பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்த தமிழ்ச்சைவர்களில் ஒரு பிரிவினர் தில்லையாற்றைக்கடந்து அக்காலத்தில் காடாகவிருந்த பகுதியை வெட்டித் துப்பரவு செய்து குடியிருப்புக்களை அமைத்து வாழ்ந்து வந்தனர். இவர்கள் தங்களுடன் எடுத்து வந்த சிவ வழிபாட்டுக்கூறுகளை தாங்கள் குடியிருந்த பகுதியில் ஓரிடத்தில் வைத்து வழிபட்டு வந்தனர்.[7] இவர்கள் குடியேறிய இடம் கோணவில் எனப் பெயர் வழங்கலாயிற்று.

இவ்வாறு கோணவில் பகுதியில் வாழ்ந்திருந்த தமிழ்ச்சைவர்களில் சில குடும்பங்கள் மேலும் வடக்கு நோக்கிச் சென்று அங்கு வாழ்ந்திருந்த வேடக்குடியினரின் உதவியுடன் காடு வெட்டி துப்பரவு செய்து அப்பகுதியில் குடியிருப்புக்களை அமைத்து வாழ்ந்திருந்ததுடன் நாகரீகம் நிலவியிருந்த இடங்களிலிருந்து எடுத்து வந்த சிவவழிபாட்டுச் சின்னங்களை சிறியதொரு வழிபாட்டு இடம் அமைத்து அதில் வைத்து வழிபட்டு வந்தனர்.[8] இவர்கள் குடியேறிய பகுதியில் கருந்தெகிளம் கொடிகள் நிறைந்திருந்ததால் அப்பகுதி 'கருங்கொடித்தீவு' என அழைக்கப்படலாயிற்று.

இதேவேளை, மாகோனின் படையெடுப்பினைத் தொடர்ந்து அக்கரைப்பற்று வடக்கு பிரதேசம், முள்ளிக்குள மலைப்பகுதி, தீகவாவி உள்ளிட்ட காளியோடை வரை வாழ்ந்திருந்த மக்களில் பெருமளவினரான பௌத்த தமிழர், பௌத்த சிங்களவர் என்போர் நகர நாகரீகம் நிலவியிருந்த முள்ளிக்குளமலை (நந்திகிரி) பகுதி, தீகவாபி ஆகிய இடங்களிலிருந்து இடம்பெயர்ந்து தென்னிலங்கையை நோக்கிச் சென்றனர். இதனைத் தொடர்ந்து இப்பகுதிகளில் வாழ்ந்திருந்த தமிழ் சைவர்கள் படிப்படியாக இடம்பெயர்ந்து கிழக்குக்கரையோரப் பகுதிகளான பாலமுனை, அட்டாளைச்சேனை, மீனோடைக்கட்டு ஆகிய இடங்களில் காடு வெட்டிக்குடியேறி வாழ்ந்திருந்தனர்.

---

7. இதன் தொடர்ச்சியே இன்று நிலவி வரும் கோளாவில் பிள்ளையார் ஆலயமாகும்.

8. இவ் வழிபாட்டுத் தலமே பிற்காலத்தில் பிள்ளையார் வழிபாடாக மலர்ந்து இன்று பிரபல்யம் பெற்று விளங்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொலநறுவையிலிருந்து மாகன் ஆட்சி புரிந்த காலத்தில்

பொலநறுவையில் மாகன் ஆட்சிபுரிந்த காலத்தில் (கி.பி1215-1241) சிங்கள தலைவர்களில் சிலர் இலங்கையின் சில அரண்கள் போன்ற அதாவது பாதுகாப்பான அரண்கள் போன்ற மலைப்பிரதேசங்களில் சிற்றரசுகளை நிறுவிக்கொண்டிருந்தனர். அங்கிருந்து நாட்டு மக்களின் நலன்களையும் மதத்தையும் காப்பாற்றி வந்தனர் என சூளவம்சம் நூல் (அத்.14) குறிப்பிடும்.

மாகன் ராசரட்டையை ஆட்சிபுரிந்த அக்காலத்தில் தம்பதெனியா, யாப்பகூவை, உறுகுணை, மலையரட்டை முதலிய பிரதேசங்களை பிராந்திய ஆட்சியாளர்கள் ஆண்டனர். தம்பதெனியாவில் விஜயபாகு, யாப்பகூவையில் சுப, உறுகுணையில் புவனேகபாகு, மினிப்பேயில் சங்க என்போர். இவர்கள் இராசரட்டையை ஆட்சிபுரிந்து வந்த மாகனுக்கெதிராகப் படைதிரட்டினர். ராஜரட்டையைக் கைப்பற்ற இவர்களால் முடியவில்லை.[9]

அக்காலத்தில் (1215 - 1241) மாகனது இராணுவ அரண்கள் இராசரட்டையில் முக்கியத்துவம் வாய்ந்த மையங்களில் நிறுவப்பட்டிருந்தன. கதிர்காமம் உள்ளிட்ட ரோகணப் பகுதியும் மாகனது இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டிருந்தது.[10] மாகனும் அவனது உப ராஜனான ஜயபாகு என்போரது தலைமையில் நாற்பதாயிரம் தமிழ் வீரர்களும், கேரள வீரர்களும் இருந்தனர்.

---

9. இலங்கை சுருக்க வரலாறு - பக்.212 கலாநிதி க.குணராசா, கமலா குணராசா - 2008

10. இலங்கை வரலாறு பாகம் I -பக்.216 செ.கிருஷ்ணராஜா M.A.இணைப்பேராசிரியர், வரலாற்றுத்துறை -2005



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகன் தன் பாதுகாப்பு கோட்டைகளையும், அரண்களையும் நாட்டின் பல பகுதிகளிலும் அமைத்திருந்தான். புலத்தி நகரம் (பொலநறுவை) கொட்டகரா, கங்கதத்தக்கா, கொக்கலை, பாடி, குருந்தி மானாமத்தை, மகாதீர்த்தம் (மாதோட்டம்) மன்னார் பட்டினம் புலைச்சேரித்துறை, வலிகாமம், கோனா, சோணுக மடுப்பட்டப்பாதுறை, சுக்காரா ஆகிய பதினைந்து பிரதேசங்களில் அமைத்திருந்தான் என சூளவம்சம் (அத்தி:14) குறிப்பிடுகின்றது.

பொலநறுவையிலிருந்து மாகன் இலங்கையை ஆட்சிபுரிந்து வந்த காலத்தில் மட்டக்களப்பை (அம்பாரை உள்ளிட்ட) சுகதிரன் என்ற சிற்றரசன் ஆட்சிபுரிந்து வந்தான். மட்டக்களப்பு மன்னனாக இவனை மாகனே நியமித்தான். மண்முனையின் வடபகுதியில் சிறியதொரு கோட்டையை செங்கல்கொண்டு மாகன் நிர்மாணித்து சுகதிரனுக்கு கொடுத்தான்.

மண்முனை வடபகுதியை இராஜதானியாகக் (பழுகாமம்) கொண்டு சுகதிரன் மட்டக்களப்பை ஆட்சிபுரிந்து வந்த காலத்தில் மன்னன் மாகோன் பொலநறுவையிலிருந்து தனது மாளிகைக்கு வந்து செல்வதற்காக வீதியொன்றை சுகதிரன் நிர்மாணித்தான்.

ஒரு சமயம், மாகோனும் மட்டக்களப்பு சிற்றரசன் சுகதிரனின் அழைப்பின்பேரில் பொலநறுவையிலிருந்து (தோப்பாவை) யானை மீதமர்ந்து மட்டக்களப்புக்கு வந்து சுகதிரனின் மாளிகையில் ஏழு தினங்கள் தங்கியிருந்து விருந்துண்டு மட்டக்களப்பு நாட்டின் சமூக, சமய, கலாசார விடயங்கள் பற்றிக் கலந்துரையாடிச் சென்றுள்ளான்.[11] இக்காலத்தில் மாகோனின் உபராஜனான ஜயபாகு என்ற குளக்கோட்டன் திருகோணமலையிலிருந்து கிழக்கிலங்கையை பரிபாலித்து வந்தான். இவனது சைவசமயச் செயற்பாடுகள் தெற்கே கதிர்காமம் வரை பரந்திருந்தது.

---

11. மட்டக்களப்பு மான்மியம் - பக்,54,55 பதிப்பாசிரியர் எப்.எக்ஸி.நடராஜா-1962



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் மன்னனான மாகனும், இவனது உபராஜனான குளக்கோட்டனும் இலங்கையில் ஆட்சி செலுத்தி வந்த அக்காலத்தில் (கி.பி1215-1241) தமிழ்ச் சைவர்கள் நிறைந்திருந்த அக்கரைப்பற்று பிரதேசத்தின் சமூக, சமய வளர்ச்சிக்கு அருந்தொண்டுகள் புரிந்துள்ளனர். மாகனால் திருக்கோவில் சித்திர வேலாயுதர் ஆலயம் புதிதாக நிர்மாணிக்கப்பட்டது. சோழர் கட்டிடக் கலையைப் பின்பற்றி மாகனால் எடுப்பிக்கப்பட்ட கற்கோயிலான இவ்வாலயம் பிற்காலச் சோழர் கட்டிடக் கலைக்கு எடுத்துக் காட்டாக விளங்குகின்றது.[12] இப்பணியை முன்னின்று நடத்தியவன் உபராஜனான ஜயபாகு என்ற குளக்கோட்டனாவான்.

மாகனது ஆட்சிக்காலத்தில் இவனது உபராஜனாக விளங்கிய குளக்கோட்டன் என்ற ஜயபாகுவால் ஏழு சைவாலயங்கள் திருப்பணி செய்யப்பட்டதாக ஏட்டுச்சுவடியில் காணக்கிடைக்கும் (கல்வெட்டு) பாடல் ஒன்று கூறும். ''சீர்பெறு மிலங்கை நகர் வாழ்வுபெறு'' என்று தொடங்கும் இக்கல்வெட்டுப் பாடலில் குறிப்பிடப்படும் ''தென்திருக்கோவில் சிவாலயம்'' என்பது அக்காலத்தில் பேர் பெற்றிருந்த 'சங்குமன் கண்டிமலை' சிவாலயமாகும். இப்பாடலில் ''வெள்ளை நாவல் பதியவேல்'' என்று குறிப்பிடப்படுவது திருக்கோவில் சித்திரவேலாயுதர் கோயிலாகும்.[13]

கலிங்க குலத்து மாகன் மட்டக்களப்புக்கு வந்திருந்த வேளை அக்கரைப்பற்று பிரதேசத்துக்கும் விஜயம் செய்துள்ளான். அக்காலத்தில் இப்பிரதேசத்தில் மக்கள் நிறைந்திருந்த குடியிருப்புக்களிலொன்றாக விளங்கியிருந்த ''கோரைக்களப்பு'' ஊரில் வாழ்ந்திருந்த கலிங்கவேளாளர் என்ற 'காராளர்' வம்சத்தினரை ஏழு குடிகளாக வகுத்து மட்டக்களப்பிலுள்ள திருப்படைக் கோயில்களின் நிர்வாகப் பொறுப்புக்கு நியமித்தான்.

---

12. இலங்கையில் தொல்லியலாய்வுகளும் திராவிடக் கலாசாரமும் - பக்.133, 134 திருமதி.ஜி.தனபாக்கியம்

13. சங்குமன் கண்டி மலைப்பிள்ளையார் ஆலயம் தோற்றம், வளர்ச்சி, வழிபாடு - ஆய்வுக்கட்டுரை நா.நவநாயகமூர்த்தி அருள்மிகு ஸ்ரீ சங்கமன் கண்டி காட்டுப்பிள்ளையார் ஆலய மஹாகும்பாபிஷேக விழா மலர் - 2009



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு நியமிக்கப்பட்டவர்களில் முதல் குடிகளான கண்டன்குடி, சருவிலிகுடி, கட்டப்பத்தான் குடி ஆகிய மூன்று குடிகளும் சித்திர வேலாயுதர் ஆலய நிர்வாகத்திற்காக (ஆலயப்பணி) இப்பிரதேசத்தில் தங்கியிருந்தனர்.[14]

ஏனைய குடிகளான கவுத்தன்குடி, அத்தியாகுடி, பொன்னாச்சிகுடி, வயித்திகுடி ஆகிய நாலு குடிகளும் கோயில் போரைதீவு சித்திரவேலாயுதர் ஆலயம், மண்டூர் முருகன் ஆலயம், கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயம் ஆகியவற்றில் நிர்வாகப் பணிக்காக பழுகாமம், களுவாஞ்சிகுடி ஆகிய இடங்களுக்கு அழைத்துச் சென்று குடியேற்றப்பட்டனர். (பண்டிதர் வி.சி.கந்தையா - 1983)

மேலும் இக்காலத்தில் அக்கரைப்பற்று பிரதேசத்தின் வடபகுதியில் தமிழ்ச்சைவர்கள் குடியேறி வாழ்ந்திருந்த ஊர்களிலொன்றான பாலமுனையில் தமிழ் மன்னன் மாகனால் தமிழ்க்குடியினரான நாவிதர் என்போர் குடியேற்றப்பட்டதை கல்வெட்டு (ஏட்டுப்பிரதி) ஒன்று குறிப்பிடுகின்றது. இவ்வேளை, அக்கரைப்பற்று மத்திய பகுதியில் கருங்கொடித்தீவு, கோளாவில் ஊர்கள் வளர்ச்சியுற்று வந்ததுடன் சிவசமயமும் சிறப்புடன் நிலவி வந்தது.

---

14. மட்டக்களப்பு சைவக்கோவில்கள் ஐ - பக்.50 வித்துவான் வி.சி.கந்தையா -1998

* மட்டக்களப்பு மான்மியம் - ஆராய்ச்சி - பக்.145 திருமதி.ஜி.தனபாக்கியம். தொல்லியல் எம்.ஏ, பீ.ஏ சிறப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மட்டக்களப்பில் வன்னிச் சிற்றரசுகள் தோற்றமும் அக்கரைப்பற்று பிரதேசமும்

கி.பி1215ம் ஆண்டு தொடக்கம் கி.பி1241ம் ஆண்டு வரை தமிழ் மன்னனான மாகன் இலங்கை முழுவதையும் ஆட்சிபுரிந்தான். இவனது பொலநறுவை ஆட்சிநிலை குலைந்ததும், கி.பி1242ல் பொலநறுவையை விட்டு நீங்கிய போதும் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தொடர்ந்து மாகமன்னன் ஆட்சியின்கீழ் இருந்து வந்தன. வட இலங்கையில் தமிழ் இராச்சியம் ஒன்றை நிறுவி கி.பி1256ம் ஆண்டு வரை ஆட்சி புரிந்தான்.

கி.பி.1236ல் தம்பதெனியாவில் மன்னனாக முடிசூடிக்கொண்ட பண்டித பராக்கிரமபாகு என்ற இரண்டாம் பராக்கிரமபாகு காலத்தில் பொலநறுவையில் மாகன் ஆட்சி புரிந்துள்ளான்.

இவன் பொலநறுவையைத் தமிழரிடமிருந்து மீட்பதைக் கருத்திற்கொண்டு கி.பி1244ல் அப்பணியை நிறைவேற்றினான். இவனுக்கு எதிராக இரு அரசர்கள் இணைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் மாகனும், சயபாகு (ஜயபாகு) ஆவார். நாற்பது ஆண்டுகள் (கி.பி.1215 - 1255) இவர்கள் அதிகாரம் கொண்டிருந்தனர். இவ்விரு மன்னர்களும் நாட்டின் வெவ்வேறு பாகங்களை ஆண்டிருக்கலாம். இவ்வாறு வரலாற்றாசிரியர் எச்.டபிள்யு.கொடிறின்றன் குறிப்பிடுகின்றார்.[15]

ஆதலால் கி.பி1244ம் ஆண்டிலேயே மாகமன்னன் பொலநறுவையை விட்டு முற்றாக நீங்கியுள்ளான் எனலாம். கி.பி1236ம் ஆண்டில் இரண்டாம் பராக்கிரமபாகு தம்பதெனியாவில் மன்னனாக முடிசூடிக்கொண்ட போதும் பொலநறுவையைக் கைப்பற்ற அவனால் முடியவில்லை. கி.பி1244 வரை மாகனது பிடியில் பொலநறுவை இருந்துள்ளது.

---

15. இலங்கையின் சுருக்க வரலாறு - பக்.71,72 எச்.டபிள்யூ.கொடிறின்றன்- தமிழாக்கம் இ.இரத்தினம் -1960



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்காலத்தில், கிழக்கிலங்கையை திருகோணமலையிலிருந்து இவனது உபராஜனான 'ஜயபாகு' என்ற குளக்கோட்டன் ஆட்சி புரிந்து வந்தான். கி.பி1241ம் ஆண்டு தொடக்கம் கி.பி1244 ஆண்டு வரையான காலத்தில் வட இலங்கையில் தமிழ் அரசொன்றை நிறுவுவதற்கான ஏற்பாடுகளை மாகனும் அவனது சகாக்களும் செய்து வந்துள்ளனர். ஆதலால் கலிங்கமாகனும் அவனது உரிமையோரும் யாழ்குடா நாட்டின் ஆட்சியை ஒருபோதும் இழக்கவில்லை.(இலங்கையின் சுருக்க வரலாறு பக்.85 -1960) கி.பி1256வரை மாகனது ஆட்சி வட இலங்கையில் நிலவியிருந்தது.

கி.பி பதின்மூன்றாம் நூற்றாண்டில் தோற்றம் பெற்ற யாழ்ப்பாண இராச்சியத்தின் அரச பரம்பரையில் முதல் மன்னன் விஜய காலிங்க சக்கரவர்த்தி என்னும் பெயர்கொண்ட மாகனே ஆவான். இதனை சுவாமி ஞானப்பிரகாசர், கலாநிதி கா.இந்திரபாலா கலாநிதி.சி.க. சிற்றம்பலம் போன்ற வரலாற்றாய்வாளர்கள் உறுதி செய்துள்ளனர்.[16] கலிங்க வம்சத்தவனான மாகன் பொலநறுவையில் ஆட்சி செய்த காலத்தில் விஜயபாகு என்ற பெயருடன் ஆட்சி புரிந்தான். இவனது பெயரை காலிங்க விஜயபாகு எனப் பாளி வரலாற்று நூல்கள் குறிப்பிடுகின்றன. இதே பெயர் யாழப்பாணசரித்திரத்தில் காலிங்க விஜயபாகு, கலிங்க மாகன், விஜயகாலிங்க சக்கரவர்த்தி என இடம்பெறுகின்றது.[17]

---

16. யாழ்ப்பாண வைபவ விமர்சனம் - பக்.64-69 - சுவாமி ஞானப்பிரகாசர்

* The Origin of the Vanni - Dr.K.Indrapala - Page:50

* ஈழமும் இந்து மதமும் - பொலநறுவைக்காலம் - கட்டுரை சி.க சிற்றம்பலம் சிந்தனை சஞ்சிகை, பேராதனை வளாகம் - 1984

17. மாகோன் வரலாறு - பக்.132 க.தங்கேஸ்வரி தொல்லியல் பீ.ஏ.1995



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொலநறுவை அரசின் வீழ்ச்சிக்குப் பின் தமிழ் மன்னனான மாகன் வட இலங்கையில் தமிழ் இராச்சியம் ஒன்றை நிறுவி வடக்கு கிழக்கு மாகாணங்களை ஆட்சிபுரிந்து வந்த காலத்தில் மாக மன்னனும் அவனது சகாக்களும் கிழக்கிலங்கையின் பல பாகங்களிலும் தமிழ் மக்களை குடியேற்றி சிற்றரசுகளைத் தோற்றுவித்தனர். வன்னிச் சிற்றரசுகள் என்று தோற்றுவிக்கப்பட்ட இச்சிற்றரசுகள் தென்னிந்தியப் பண்பாடு மட்டக்களப்பில் (அம்பாரை உள்ளிட்ட) பரவுவதற்கு உதவின. இதற்கு முதலில் பாண்டியச் செல்வாக்கும் (கி.பி.1256 -1310) பின்னர் தென்னிந்திய இராச்சியங்களினதும் செல்வாக்கும் நன்கு உதவின.[18]

கிழக்கங்கிலங்கையின் மட்டக்களப்பில் மாகன் தனது தளபதிகளுக்கு நிலங்களை வழங்கி அவர்களுக்கு வன்னியர் என்ற பட்டமும் (வன்னியை) கொடுத்து தோற்றுவிக்கப்பட்ட வன்னிச் சிற்றரசுகள் இக்காலத்தில் பழுகாமம், சம்பாந்துறை, பாணகை ஆகிய இடங்களில் அமைந்திருந்தன. மாகன் பொலநறுவையைக் கைப்பற்றி ஆட்சி புரிந்த காலத்தில் தனது படைவீரர்களுக்கு மட்டக்களப்பில் நிலம் வழங்கி குடியேற்றினான் என்ற செய்தி சூளவம்சத்தில் உண்டு. மேலும் விபரங்கள் ''மட்டக்களப்பு மான்மியம்'' கூறும்.[19]

இவ்வாறு மாகமன்னனால் மட்டக்களப்பில் வன்னிச் சிற்றரசுகள் தோற்றுவிக்கப்பட்ட காலம் கிபி 1244ற்கும் கி.பி.1246க்கும் இடைப்பட்ட காலமாகும். பொலநறுவையிலிருந்து முற்றாக நீங்கிய மாகன் (1244ல்) வட இலங்கையில் தனது ஆட்சியைப் பலப்படுத்தி யாழ்ப்பாண இராச்சியத்தை தோற்றுவித்த வேளையிலேயே கிழக்கிலங்கையின் பல பாகங்களிலும் தமிழ் அரசுக்கு பக்கபலமாக வன்னிச் சிற்றரசுகளைத் தோற்றுவித்தான். மாக மன்னனுக்கு பிற்பட்ட காலத்தில் மட்டக்களப்பில் பழுகாமம், ஏறாவூர் சம்மாந்துறை, சிங்காரபுரி ஆகிய வன்னிச் சிற்றரசுகள் நிலவியிருந்தன.

---

18. இலங்கையில் திராவிடக்கட்டிடக்கலை - பக்.38- கலாநிதி கா.இந்திரபாலா - 1970

19. மாகோனால் முக்குவ வன்னிமை மட்டக்களப்பில் நியமிக்கப்பட்டனர். இவர்கள் மாகனின் படைப்பிரிவிலிருந்த கேரளவீரர்களாவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகன் இலங்கையில் ஆட்சி புரிந்த காலத்தில் (கி.பி.1215 -1256) இலங்கை மீது பாண்டியர் நாலு படையெடுப்புக்கள் (கி.பி1223,1251,1252,1256) மேற்கொண்டுள்ளனர். சாவக மன்னன் சந்திரபானு இரு தடவைகள் (கி.பி1247 -1256) இலங்கை மீது படையெடுத்துள்ளான். ஆயினும் கி.பி.1256ம் ஆண்டு வரை வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ் மன்னனான மாகனது ஆட்சி நிலவியிருந்தது. கி.பி 1251ம் ஆண்டில் மாகன் நிலை தளர்ந்தது. வரலாற்றாய்வுகள் இதனை உணர்த்தும்.

## "பாண்டியர் படையெடுப்பும் அக்கரைப்பற்றும் (1256 -1284)"

கி.பி1256ம் ஆண்டு பாண்டியர் இலங்கைமீது மேற்கொண்ட படையெடுப்பும் இதனைத் தொடர்ந்து கி.பி1262ம் ஆண்டில் பாண்டியர் ஈழம் மீது மேற்கொண்ட படையெடுப்பும் இலங்கை அரசியலில் மாற்றங்களை ஏற்படுத்தின. இவ்விரு படையெடுப்புக்களும் முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன் ஆட்சிக்காலத்தில் (கி.பி1251 - 1284) இடம்பெற்றுள்ளது. [20]

கி.பி1251ல் முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில் இவனது ஆட்சியின் ஆரம்ப காலத்தில் பல போர்கள் நடைபெற்றன. இதன் விளைவாக இவனது ஆதிக்கம் இலங்கையிலும் பரவிற்று. இலங்கையும், கேரளமும் சில காலம் பாண்டியனின் பாலனத்தின்கீழ் இருந்தன. இவனுடைய அரச குடும்பத்தைச் சேர்ந்த சடையவர்மன் வீரபாண்டியன் (கி.பி1254-1265) இவனுக்கு உதவி வந்தான். சுந்தர பாண்டியன் இலங்கை மீது படையெடுத்து கப்பமாகப் பெருந்தொகை முத்துக்களையும், யானைகளையும் பெற்றான்.

---

20. தமிழக வரலாறு - பக்.131 டாக்டர்.மா.இராசமாணிக்கனார்-1958



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சடையவர்மன் சுந்தர பாண்டியன் கி.பி1262க்கும் 1264க்குமிடையில் இலங்கையில் ஆட்சி புரிந்த ஒரு அமைச்சனின் அழைப்பிற்கிணங்க இலங்கை மீது படையெடுத்து இளவரசன் ஒருவனைப் போரில் தோற்கடித்துச் சென்றான். வேறுமோர் சிற்றரசன் பாண்டியரின் மேலாதிக்கத்தை ஏற்றான்.

இவ்வேளை சந்திரபானுவின் மகன் ஒருவன் வட இலங்கையை ஆண்டு கொண்டிருந்தான். அவனும் பாண்டிய அரசனை பேரரசனாக ஏற்றுக்கொண்டான். இலங்கைத் தீவின் மீது பாண்டிய அரசன் சடையவர்மன் சுந்தர பாண்டியன் நடாத்திய இவ்விரு தாக்குதல்களும் (கி.பி1256, 1262) இரண்டாம் பராக்கிரமபாகுவின் காலத்திலேயே இடம்பெற்றன. இக்காலத்தில் வட இலங்கையைத் தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வரமுடியாத நிலையில் இரண்டாம் பராக்கிரமபாகு இருந்தான்.[21]

கி.பி1256,1262 ஆகிய ஆண்டுகளில் பாண்டியமன்னன் முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன் (கி.பி1251 -1284) இலங்கை மீது மேற்கொண்ட படையெடுப்புக்கள் இதற்கு முந்திய காலத்தில் கி.பி1215ல் மாகன் இலங்கை மீது மேற்கொண்ட மதரீதியான படையெடுப்பின் காரணமாக அக்கரைப்பற்று பிரதேசத்தின் கிழக்குப் பகுதிகளில் இடம் பெயர்ந்து வாழ்ந்திருந்த மக்களை அந்த இடங்களிலிருந்து படிப்படியாக கிழக்குக்கரையோரப் பகுதிகளை நோக்கி மேலும் இடம் பெயரச்செய்தன.

கி.பி1215ல் தமிழ் மன்னன் மேற்கொண்ட படையெடுப்பின் காரணமாக அக்கரைப்பற்று தென்பிரதேசத்தில் பரசுராமன்குளம், ஆரைப்பற்றைக்குடா மேட்டுப்பகுதி, கோரைக்களப்பு வடக்கு, தாமரைக்குளம் கிழக்கு, சங்கமன் கிராமம் கிழக்கு ஆகிய இடங்களில் வாழ்ந்திருந்த மக்களில் பெருமளவினர் இக்காலத்தில் (கி.பி1256,1262) மேலும் கிழக்குப் பகுதிகளை நோக்கி இடம்பெயர்ந்தனர். ஏனையோரான சிறுதொகையினர் தொடர்ந்து இந்த இடங்களிலேயே வாழ்ந்திருந்தனர்.

---

21. தென்னிந்திய வரலாறு - பக்.238-240 நீலகண்ட சாஸ்திரி MA - அரசாங்க பாஷைப் பகுதி வெளியீடு -1966



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு, கிழக்குப் பகுதியை நோக்கி இடம்பெயர்ந்தவர்களில் பெருமளவினர் 'தம்பதிவில்' ஏரியைச்சூழவுள்ள பகுதிகளில் குறிப்பாக ஏரியின் தென்கிழக்கு, தெற்கு பெரிய களப்பின் கரையோரப் பகுதி போன்ற இடங்களில் குடியேறி வாழ்ந்து வந்தனர். இதனைத் தொடர்ந்து 'தம்பதிவில்' ஏரியும் சூழவுள்ள பகுதிகளும் உள்ளிட்ட பிரதேசம் 'தம்பவில்' என்ற பெயரினைப் பெற்றது. நாளடைவில் 'தம்புவில்' என்ற பெயரும், பிற்காலத்தில் 'தம்பலவில்' என்ற பெயரும் வழங்கி பின்னர் இந்த ஊர் 'தம்பிலுவில்' என்றாயிற்று.

இதே வேளை, அக்கரைப்பற்று மத்திய பகுதியில் சிப்பித்திடல் தொடக்கம் இன்றைய மகாசக்திகிராமம் உள்ளிட்ட பெரியகளப்பு வரையான மேட்டுப்பகுதி, புளியம்பற்றை, புட்டம்பை ஆகிய இடங்களில் வாழ்ந்திருந்த மக்களில் ஒரு பகுதியினர் இந்த இடங்களிலிருந்து வெளியேறித் தில்லை ஆற்றைக் கடந்து சென்று கோணவில், கருங்கொடித்தீவு ஆகிய கிராமங்களில் குடியேறினர். இன்னொரு பகுதியினரான சில குடும்பங்கள் கிழக்குநோக்கிச் சென்று காடுவெட்டி துப்பரவு செய்து குடியேறினர்.

இந்த இடம் பனங்காமணச்சோலை எனப் பெயர்வழங்கி பிற்காலத்தில் பனங்காடு என வழங்கி வந்தது. இதே வேளை அக்கரைப்பற்று வடக்கு பிரதேசத்தில் அட்டாளைச்சேனை, மீனோடைக்கட்டு (பனையடிப்பிட்டி) பாலமுனை ஆகிய கிராமங்கள் நிலவியிருந்தன. இக்கிராமங்களில் வாழ்ந்திருந்த மக்கள் விடாமுயற்சியும் சுறுசுறுப்பு மிக்கவர்களாகவிருந்தனர். ஆதலால் தாங்கள் வாழ்ந்திருந்த இடங்களுக்கருகாமையில் உள்ள இடங்களில் காடு வெட்டித் துப்பரவு செய்து விவசாயம் செய்து வந்தனர்.

இந்நிலையில் கி.பி1284ல் பாண்டியன் முதலாம் மாறவர்மன் குலசேகரன் (கி.பி1268-1311) என்பவன் இலங்கைமீது படையெடுப்பொன்றை மேற்கொண்டான். இப்படையெடுப்பைத் தொடர்ந்து அக்கரைப்பற்று பிரதேசத்தின் கிழக்குப் பகுதிகளான பரசுராமன்குளம், ஆரைப்பற்றைக்குடா, கோரைக்களப்பு, தாமரைக்குளம் கிழக்கு, சிப்பித்திடல், புளியம்பற்றை, புட்டம்பை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற இடங்களில் வாழ்ந்திருந்த எஞ்சிய மக்களும் இந்த இடங்களிலிருந்து முற்றாக வெளியேறி கிழக்கு கரையோரப் பகுதிகளில் அமைந்திருந்த கிராமங்களில் குடியேறினர். இதனைத்தொடர்ந்து இந்த இடங்கள் பொலிவிழந்து காடாக மாறத்தொடங்கின.[22]

இலங்கையில் பாண்டியர் செல்வாக்கு நிலைத்திருந்த அக்காலத்தில், அதாவது கி.பி1256ம் ஆண்டு தொடக்கம் கிபி1284ம் ஆண்டு வரையுள்ள காலத்தில் கிழக்கிலங்கைக்கும் பாண்டிய நாட்டிற்குமிடையில் நெருக்கமான சமூக, சமய, கலாசார உறவுகள் நிலவியிருந்ததுடன் வாணிபத் தொடர்பும் இருந்து வந்தது. தமிழர்கள் தனிப்பெரும்பான்மையினராக கிழக்கிலங்கையில் வாழ்ந்திருந்த அக்காலத்தில் தமிழரது அரசியல் செல்வாக்கே (ஆட்சி) நிலைத்திருந்தது.

இவ்வேளை, மட்டக்களப்பில் (அம்பாரை உள்ளிட்ட) அமைந்திருந்த வன்னிச் சிற்றரசுகள் எழுச்சி பெற்றிருந்தன. பழுகாமம், ஏறாவூர், சம்மாந்துறை, பாணகை, சிங்காரபுரி (அட்டப்பள்ளம்) ஆகிய இடங்களிலிருந்து ஆட்சி செலுத்தி வந்த வன்னிச் சிற்றரசர்கள் (வன்னியர்) சுதந்திரமுள்ளவர்களாகச் செயற்பட்டு வந்தனர்.

இக்காலத்தில் சங்கமன் கண்டி தொடக்கம் காளியோடை வரை பரந்திருந்த பண்டைய அக்கரைப்பற்று பிரதேசத்தில் தமிழும், சைவமும் செழித்திருந்தன. சைவாலயங்களும் சிறந்திருந்தன. திருக்கோவில், தம்பிலுவில், கோரைக்களப்பு, தம்பட்டை, கருங்கொடித்தீவு, கோளாவில், பாலமுனை, மீனோடைக்கட்டு, அட்டாளைச்சேனை (வடபகுதி) ஆகிய கிராமங்கள் நிலவியிருந்தன.

---

22. இதே வேளை கி.பி 1284,85களில் சாகாமம் வட பிரதேசத்தின் சில பகுதிகளிலிருந்து மக்கள் வெளியேறிய காலத்தில், கவடா, பட்டிமேடு ஆகிய இடங்களில் வாழ்ந்திருந்த மக்கள் தொடர்ந்தும் இந்த இடங்களிலேயே வாழ்ந்திருந்தனர் (பட்டிநகர் கண்ணகி ஆலய வரலாறு, பக்.26 நா.நவநாயகமூர்த்தி -2020)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வேளை சிங்காரபுரி வன்னியனின் பரிபாலத்தின் கீழ் இருந்து வந்த அக்கரைப்பற்று பிரதேசத்தில் பாணகை சம்மாந்துறை வன்னியர்களின் செல்வாக்கும் (சமூக, சமய கலாசார) நிலவியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இக்காலத்தில் (கிபி1262-1284) மாகோனது படையெடுப்பின் போது தங்களுடன் எடுத்து வந்த சாகாமம் பத்தினி வழிபாட்டுக் கூறுகளை 'தம்பதிவில்' என்று பெயர் வழங்கியிருந்த இன்றைய தம்பிலுவில் கிராமத்தில் (கி.பி1284ல்) சிறியதொரு ஆலயம் நிர்மாணித்து (ஓலைக்குடிசை) கண்ணகியைப் பிரதிஷ்டை செய்ததுடன் ஏனைய பொருட்களும் இவ்வாலயத்தில் சேர்க்கப்பட்டன.

சாகாமம் கண்ணகி (பத்தினி) ஆலயத்திலிருந்த கண்ணகி வழிபாட்டுக்கூறுகளை மாகோனின் படையெடுப்பைத் தொடர்ந்து அங்கிருந்து எடுத்து வரப்பட்டு சிலகாலம் கோரைக்களப்பு கிராமத்தில் வைக்கப்பட்டிருந்ததாகவும் பின்னர் இவை அனைத்தும் தம்பிலுவில் பகுதிக்கு எடுத்துவரப்பட்டு ஆலயம் நிர்மாணித்து அம்மன் விக்கிரகம் பிரதிஷ்டை செய்யப்பட்டதுடன் ஏனைய பொருட்களும் ஆலயத்தில் சேர்க்கப்பட்டன என்றும் மரபுரையொன்று குறிப்பிடுகின்றது.

இவ்வேளையிலே (கி.பி1284ல்) சாகாமம் வடக்கு கவடாப்பிட்டி, பட்டிமேடு ஆகிய இடங்களில் வாழ்ந்திருந்த மக்களிடையே நிலவியிருந்த நாகவழிபாட்டின் தொடர்ச்சியாக கண்ணகி வழிபாடு (ஆலயம்) தோற்றம் பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாண்டியர் ஆட்சிக்காலத்தில் (கி.பி1284 - 1310)

தம்பதெனியாவை இராஜதானியாகக் கொண்டு முதலாம் புவனேகபாகு (கி.பி1273 - 1284) என்பவன் ஆட்சிசெலுத்தி வந்த காலத்தில் இவனது ஆட்சிக்காலத்தின் முடிவில் கி.பி1284ல் பாண்டியர் இலங்கை மீது படையெடுத்து வந்தனர். இதனைத் தொடர்ந்து இலங்கை பாண்டியரது நேரடி ஆட்சியின் கீழ் சுமார் இருபது ஆண்டுகள் இருந்து வந்தது.

இதுபற்றி அறியுமிடத்து முதலாம் மாறவர்மன் குலசேகரன் (கி.பி1268-1311) இலங்கை மீது படையெடுத்தான். மகாவம்சமும் இதனை விபரிக்கின்றது. அதன் கூற்றுப்படி இவனும் இவனது தம்பிமார்களும் தங்களது சிறந்த படைத்தலைவனான ஆரியச்சக்கரவர்த்தியின் தலைமையில் ஒரு பெரும் படையை அனுப்பினர்.

அப்படைத்தலைவன் பல பகுதிகளைக் கொள்ளையிட்டு அழித்துச் சுபகிரி என்னும் நகரிலிருந்த கோட்டையையும் கைப்பற்றினான். இறுதியில் அங்கிருந்த புனிதச் சின்னமாகப் போற்றப்பட்டு வந்த பல்லையும் அபகரித்துக்கொண்டு பாண்டிய நாட்டுக்குத் திரும்பினான்.[23] இதனைத் தொடர்ந்து ஏறக்குறைய இருபது வருடங்கள் பாண்டியர் இலங்கையில் ஆட்சிபுரிந்தனர். இப்பாண்டியர் ஆட்சியில் இந்து சமயம் பரவியது.[24]

இலங்கை பாண்டியர் ஆட்சியின் கீழிருந்த இக்காலத்தில் 'மார்க்கபோலோ' என்னும் யாத்திரீகர் இலங்கை வழியாகச் சென்றார் (கி.பி1292 - 1294) இதனை இலங்கை வரலாற்று நூல்கள் குறிப்பிடுகின்றன. அவர் இந்நாட்டு மன்னனை செந்தமேன் என்று குறிப்பிடுகின்றார். (எச்.டபிள்யு.கொடிறின்றன் -1960) மார்க்கபோலோ சீனாவிலிருந்து பாரசீகம் போகும் வழியில் (கி.பி1293-1294) தென்னிந்தியாவுக்கும் வருகை தந்தார்.

---

23. பாண்டியர் வரலாறு - பக்.120, டாக்டர் கே.வி.ராமன் பேராசிரியர் - தொல்லியல்துறை -1977

24. நம்முன்னோரளித்த அருஞ்செல்வம் - பக்.149 -151 ஜி.சி.மெண்டிஸ் -1954



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வேளையில் பாண்டிய நாடு ஐந்து சகோதரர்களால் ஆளப்பட்டதாகவும் (கூட்டாட்சி) முதலாம் மாறவர்மன் குலசேகரனைத் தவிர ஏனையவர்கள் இளைய அரசர்கள் என்று அழைக்கப்பட்டதாகவும் அவர்களுள் சடையவர்மன் சுந்தரபாண்டியன், மாறவர்மன் விக்கிரமபாண்டியன், மாறவர்மன் வீரபாண்டியன் என்போர் குறிப்பிடத்தக்கவர்கள் என்றும் மார்க்கபோலோ குறிப்பிடுகின்றார். இவர்களுள் சடையவர்மன் சுந்தரபாண்டியன் குலசேகரனின் இளையசகோதரர்களுள் ஒருவனாவான்.

இவனையே மார்க்கபோலோ 'சொந்தர் பாண்டித் தேவர்' என்று குறிப்பிடுகின்றார். இவனது கல்வெட்டுக்கள் தஞ்சை, சேலம், தென்னாற்காடு, செங்கற்பட்டு ஆகிய இடங்களில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இலங்கை பாண்டியப் பேரரசின் நேரடி ஆட்சியின் கீழிருந்த காலத்தில் இவனே இலங்கைக்குப் பொறுப்பாக இருந்தான். இவனையே 'மார்க்கபோலோ' இலங்கை பற்றிய தனது குறிப்பில் 'செந்தமேன்' என்று குறிப்பிடுகின்றார்.[25]

முதலாம் புவனேகபாகுவை (கி.பி1278-1284)யடுத்து இலங்கையில் ஆட்சிபுரிந்த மூன்றாவது பராக்கிரமபாகு (கி.பி1302 -1310) பாண்டியரின் கீழ் ஆட்சி புரிந்தான். பாண்டியர் துணையுடன் பொலநறுவையைத் தலைநகராக்கி குலசேகரனுடன் நட்புரிமை பாராட்டிப் புத்ததந்தத் தாதுவையும் பெற்றுக்கொண்டான்.[25A] இலங்கை பாண்டிய பேரரசின் கீழிருந்த காலத்தில், வடஇலங்கையில் நிலைபெற்றிருந்த தமிழரசு மேலும் வளர்ச்சியுறத் தொடங்கியது.

இதன் பயனாக தனிப்பட்ட இராச்சியமாக அது மலர்ந்தது. இக்காலத்தில் கோணேஸ்வரம் பாண்டியரால் ஆதரிக்கப்பட்டு மானியங்கள் பெற்றது. மேலும் பாண்டியர் ஆட்சிக்காலத்தில்

---

25. பண்டைய ஈழத்தமிழர் - பக்.66 நா.நவநாயகமூர்த்தி - 1998

25A.கி.பி1302ல் இலங்கை அரசன் வேண்டுகோள் மீது பாண்டியன் பல்பேழையைப் பெருந்தன்மையுடன் திருப்பிக்கொடுத்தான்.(லெமூரியா அல்லது குமரிக்கண்டம் - பக்.137 பன்மொழிப்புலவர் கா.அப்பாத்துரையார் - 2004)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருகோணமலை மாவட்டத்தில் கந்தளாய், திருக்கரசை, தம்பலகாமம், பெரியகுளம், தென்னை மரவாடி போன்ற இடங்களில் சிவாலயங்கள் சிறப்புற்றிருந்தன. இக்காலத்தில் வட இலங்கையில் வன்னிச் சிற்றரசுகள் உருவாகி நிலைபெறத் தொடங்கின. (நா.நவநாயகமூர்த்தி -1998)

இலங்கை பாண்டியர் ஆட்சியின் கீழிருந்த இக்காலத்தில் (கி.பி1284 - 1310) மட்டக்களப்பில் அதிகாரம் செலுத்தி வந்த வன்னிச் சிற்றரசர்கள் பாண்டியரின் மேலாதிக்கத்தை ஏற்றிருந்தனர். இப்பிராந்தியத்திற்கும் பாண்டியநாட்டுக்குமிடையில் மிக நெருங்கிய சமூக, சமய, பண்பாட்டு உறவுகள் நிலவியிருந்தன. பாண்டியர் ஆட்சியில் தமிழும், சைவமும் மட்டக்களப்பில் செழித்திருந்தன. இக்காலத்தில் சிங்காரபுரி வன்னிச்சிற்றரசனின் ஆட்சியின் கீழ் இருந்து வந்த அக்கரைப்பற்று பிரதேசம் பல் துறைகளிலும் அபிவிருத்தி கண்டு வந்தது.

சைவமும், தமிழும் சிறப்புடன் விளங்கி வந்த அக்கரைப்பற்று பிரதேசத்தில் சைவாலயங்கள் செழிப்புடன் விளங்கியிருந்தன. இப்பிரதேசத்தில் பிரசித்து பெற்று விளங்கியிருந்த திருக்கோவில் முருகன்கோவில் பாண்டியரால் திருப்பணி செய்யப்பட்டது. இன்று நாம் காணும் கற்கோயிலான கருவறையில் பொருத்தப்பட்டுள்ள கற்பலகைகளில் காணப்படும் யாழிவரிசை சிற்பங்கள் பிற்கால பாண்டியர் காலத்தைச் சேர்ந்தவைகளாகும்.[26] இக்காலத்தில் நிலவி வந்த தம்பிலுவில் கண்ணகி அம்மன் கோவிலுடனும் பாண்டியர் அதிக தொடர்பினைக் கொண்டிருந்தனர்.

இக்காலத்தில் பாண்டியநாட்டுக்கும் அக்கரைப்பற்றுப் பிரதேசத்திற்குமிடையில் நேரடித்தொடர்புகள் இருந்து வந்துள்ளன. ஒலுவில் (பாலமுனை) சின்னமுகத்துவாரம், திருக்கோவில், உமிரி ஆகிய துறைகள் பிரபல்யம் பெற்றிருந்தன. பாலமுனை மீனோடைக்கட்டு, அட்டாளைச்சேனை (வடபகுதி), கருங்கொடித்தீவு கோளாவில், பனங்காடு, தம்பட்டை, தம்பிலுவில், திருக்கோவில் கோரைக்களப்பு முதலான கிராமங்கள் நிலவியிருந்தன.

---

26. திராவிடக் கட்டிடக் கலை - கலாநிதி கா.இந்திரபாலா -1970



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்மாந்துறை வன்னிச் சிற்றரசனது செல்வாக்கும் அக்கரைப்பற்று பிரதேசத்தில் நிலைத்திருந்த இக்காலத்தில் பனங்காடு பட்டிமேடு என்ற இடத்தில் நிலவியிருந்த கண்ணகி வழிபாடானது, கி.பி1287, 1288களில் இங்கிருந்து இறக்காமம், கிரிந்திகாமம் ஊடாக சம்மாந்துறை வன்னிப் பிரதேசத்தை (வீரமுனை) சென்றடைந்து பின்னர் அங்கிருந்து சிங்காரபுரி பிரதேசத்தையும் (காரைதீவு) சென்றடைந்தது.

இக்காலத்தில் அக்கரைப்பற்று பிரதேசத்திற்கும் சம்மாந்துறை, சிங்காரபுரி ஆகிய வன்னிப்பிரதேச மக்களுக்குமிடையில் நிலவி வந்த சமூக, சமய, பண்பாட்டு உறவுகள், வாணிபத்தொடர்புகள் மற்றும் அக்கரைப்பற்று பிரதேசத்தில் நிலைத்திருந்த சிங்காரபுரி, சம்மாந்துறை வன்னி ராசாக்களின் அரசியல் செல்வாக்கு ஆகியன இதற்கு காரணிகளாயின. இவை மறைந்துபோன, மறக்கப்பட்ட வரலாற்றுண்மைகளாகும்.

இக்காலத்தில் (கி.பி.1284 -1310) 'சிங்காரபுரி' என்ற அட்டப்பள்ளத்தை இராஜதானியாகக் கொண்டு ஆட்சி செலுத்தி வந்த வன்னிச் சிற்றரசின் அதிகாரம் தெற்கே அக்கரைப்பற்று பிரதேசம் வரை நிலைத்திருந்தது. வடக்கே குறிப்பாக கரவாகு வரையும் இவனது செல்வாக்கு நிலவியிருந்தது. அக்காலத்தில் தமிழும் சைவமும் செழிப்புடன் விளங்கியிருந்த பிரதேசமாக சிங்காரபுரி வன்னிப்பிரதேசம் விளங்கியிருந்தது. இப்பிரதேசத்தை பரிபாலித்து வந்த வன்னியர்கள் தென்னிந்தியாவுடன் வாணிபத்தொடர்புகளையும் கொண்டிருந்தனர். மேலும் இப்பிரதேசத்துக்கும் தென்னிந்தியாவுக்குமிடையில் சமூக, சமய கலாசார உறவுகளும் நிலிவியிருந்தன.

இவ்வாறானதொரு செழுமைமிக்க சமூக,சமய, அரசியல் பண்பாட்டுச்சூழலில் இலங்கையில் பாண்டியர் ஆட்சி நிலைத்திருந்த இக்காலத்திலேயே (கி.பி.1284-1310) தமிழகத்திலிருந்து நேரடியாக சிங்கார தோப்பு அணைதுறையூடாக மீனாட்சி வழிபாடு வந்து இப்பிரதேசத்தில் அறிமுகமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனைத் தொடர்ந்து இவ்வழிபாட்டுத் தலமானது அக்கரைப்பற்று பிரதேசமக்களிடையேயும் பிரபல்யமாகி நிலவிவந்தது. மீனாட்சி வழிபாடு இடம் (ஆலயம்) அமைந்திருந்த பகுதியானது இதற்கு முந்தியகாலத்தில் நாகவழிபாடு நிலவி வந்த நாகவழிபாட்டுத்தலமாகும்.

பாண்டிய நாட்டின் மதுரையிலிருந்து எடுத்துவரப்பட்ட மீனாட்சி அம்மன் விக்கிரகம் இந்த இடத்தில் மண்ணாலும் மரத்தாலும் கொண்டு சிறியதொரு ஆலயம் நிர்மாணிக்கப்பட்டு பிரதிஸ்டை செய்யப்பட்டது. இதனைத் தொடர்ந்து இந்த இடம் நாகவழிபாடும், மீனாட்சி அம்மன் வழிபாடும் இணைந்த வழிபாட்டுத்தலமாக விளங்கத் தொடங்கியிருந்தது.[27] இன்றுவரை இந்நிலை தொடர்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

பாண்டியர் ஆட்சியின் இறுதிக்காலத்தில் கி.பி1300ம் ஆண்டளவில் 'சம்மாந்துறை' வன்னிப்பிரதேசத்தில் கண்ணகி வழிபாடு (ஆலயம்), காளி வழிபாடு (ஆலயம்) என்பன செழித்திருந்தன. இவற்றின் தொடர்ச்சியே இன்று காணும் வீரமுனை கண்ணகி ஆலயம், சம்மாந்துறை காளியம்மன் ஆலயம் என்பனவாகும். இதேவேளை, சிங்காரபுரி வன்னியில் காளியோடைக்கருகில் காளிஓடை கிராமத்தில் காளியம்மன் ஆலயமும் மடத்தடி மீனாட்சி அம்மன் ஆலயமும் சிறப்புடன் விளங்கியிருந்தன.

---

27. இதுபற்றி வெளிவரவுள்ள ''சிங்காரபுரி வன்னிச் சிற்றரசர் ஆட்சியில் சிறப்புடன் விளங்கி வந்த மீனாட்சி அம்மன் திருத்தலம்'' என்ற எனது நூல் (கையெழுத்துப் பிரதி) விபரமாகக் குறிப்பிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கி.பி 1310-1450 வரையுள்ள யாழ்ப்பாண மன்னர் காலத்தில் வன்னியர் ஆட்சியில் அக்கரைப்பற்று

கி.பி பதின்மூன்றாம் நூற்றாண்டில் இலங்கை பாண்டியப் பேரரசின் கீழிருந்த காலத்தில் வட இலங்கையில் நிலைத்திருந்த தமிழ் அரசு வளர்ச்சியுற்று வந்தது. பாண்டியர் ஆட்சியைத்தொடர்ந்து இத் தமிழ் அரசு மேலும் வளர்ச்சியுற்று அதாவது யாழ்ப்பாண இராச்சியமாக மலர்ந்தது. கி.பி பதினான்காம் நூற்றாண்டில் இலங்கையில் நிலைத்திருந்த அரசுகளில் வலிமை பெற்றதாக யாழ்ப்பாண அரசு விளங்கியிருந்தது.

இதன் விளைவாக சிங்கள அரசின் மீதும் யாழ்ப்பாண அரசர்களின் ஆதிக்கம் பரந்திருந்தது. இதனை கொட்டகம, மடவாக்க கல்வெட்டுக்கள் மட்டுமன்றி இராஜாவலிய நிக்காய சங்கராவ போன்ற இலக்கியங்களும் உறுதி செய்கின்றன.[1] கி.பி1349ம் ஆண்டு கம்பளையிலிருந்து ஆட்சி செலுத்தி வந்த நாலாம் புவனேகபாகுவும் அவனுக்குப் பின்வந்தோரும் ஆட்சி நடாத்திய காலத்தில் யாழ்ப்பாணத் தமிழ் அரசருக்குத் திறைசெலுத்தி வந்தனர்.[2]

கி.பி1344ல் இலங்கையைச் சுற்றிப்பார்க்க வந்த 'மொரக்கோ' நாட்டைச்சேர்ந்த இஸ்லாமிய யாத்திரீகரான 'இபின்பதூதா' என்பவர் புத்தளத்தை வந்தடைந்து இங்கு தங்கியிருந்த யாழ்ப்பாண ஆரியச் சக்கரவர்த்தியை சந்தித்து அவனது விருந்தினராகத் தங்கியிருந்தார். அக்காலத்தில் புத்தளம் உள்ளிட்ட வடமேற்குப் பிராந்தியம் யாழ்ப்பாண இராச்சி யத்துக்குட்பட்டிருந்தது.

---

1. ஈழமும் இந்து மதமும் பொலநறுவை அரசுக்கு பிற்பட்ட போர்த்துக்கேயர் வருகைக்கு முற்பட்ட காலம் (கி.பி 1250 -1505) - 'கட்டுரை' கலாநிதி சி.க.சிற்றம்பலம் 'சிந்தனை' இதழ், கார்த்திகை -1984
2. தம்பிலுவில் கண்ணகி வழிபாடு - பக்.70 நா.நவநாயகமூர்த்தி -1999



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரியச் சக்கரவர்த்தி இலங்கையைச் சுற்றிப்பார்க்க ஒரு பல்லக்கையும், பல்லக்கு காவுவோர் நால்வரையும் அத்துடன் மூன்று பிராமணர்களையும், பத்து பிரமுகர்களையும் வழித்துணைக்கு பதினைந்து பேர்களையும் 'இபின் பதூதா'வுடன் அனுப்பி வைத்தான். இவர் தனது இலங்கைச் சுற்றுலாவை முடித்தபின் தெவிநுவர, காலி, கொழும்பு ஆகிய இடங்களுக்கும் சென்று மீண்டும் புத்தளம் வந்தடைந்து ஆரியச் சக்கரவர்த்தியிடம் விடைபெற்றுக்கொண்டார்.

இபின் பதூதா ஆரியச்சக்கரவர்த்தி பற்றியும் அவனிடம் திரண்டிருந்த செல்வங்கள் பற்றியும் தனது பிரயாணக் குறிப்பில் எழுதியுள்ளார். ஆரியச் சக்கரவர்த்தியை உருவ வழிபாட்டுக்காரன் என்று தனது குறிப்பில் குறிப்பிட்டுள்ள இவர் இக்காலத்தில் சிங்கள மன்னன் நாலாம் புவனேகபாகுவின் இராஜதானி இருந்ததையும் குறிப்பிடுகின்றார்.[3]

பதினான்காம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து விஜயநகர அரசின் ஆதிக்கம் இலங்கையில் காணப்பட்டது. இவ்வம்ச மன்னர்களில் இரண்டாவது ஹரிகரன் (கி.பி1383 -1384) முதலாவது தேவராஜன் ஆகியோர் காலத்தில் ஏற்பட்ட படையெடுப்புக்கள் முக்கியமானவை எனினும் யாழ்ப்பாண அரசுதான் விஜயநகர அரசின் பிரதிநிதிகளாக மதுரை, தஞ்சாவூர் ஆகிய பகுதிகளில் ஆட்சிசெலுத்தி வந்த நாயக்கருடன் தொடர்பினைக் கொண்டிருந்தது.

இக்காலத்தில் வர்த்தகம் (கரையோரம்) தென்னிந்திய முஸ்லீம்கள் இந்துக்களான செட்டிகள் வசம் இருந்து வந்தபோதும் பாக்கு நீரிணையில் முத்துக்குளிப்பு வர்த்தகம் வடக்கேயிருந்த ஆரியச் சக்கரவர்த்தியின் வசம் இருந்து வந்தது. யாழ்ப்பாண மன்னன் ஜெகவீரசிங்கையாரின் காலத்தில் (கி.பி1380 - 1410) முத்துக்குளித்தல் சம்பந்தமாக எழுந்த பிரச்சினையில்

---

3. யாழ்ப்பாண அரசனைச் சந்தித்த இஸ்லாமிய யாத்திரீகன் - 'கட்டுரை' ம.க.அ. அந்தனிசில் 'சொல்லேருழவன்' தினகரன் வாரமலர்.28.4.1996



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்னிலங்கை மன்னர்களிலொருவனான புவனேகபாகு என்பவனை போரில் வென்று திறைபெற்று மீண்டான். பன்னிரண்டு வருடங்கள் தென்னிலங்கை மன்னர்கள் யாழ்ப்பாண அரசுக்குத் திறை செலுத்தினர்.[4]

எனினும் கோட்டையில் அரசனாகவிருந்த அழகக்கோனார் என்பான் திறை செலுத்த மறுத்ததோடு சிங்கை நகர் அரசனால் திறைவாங்கும்படி அனுப்பப்பட்ட ஏவலாளர்களைத் தூக்கிலிட்டுக் கொன்றான். இதனால் ஜெயவீரசிங்கையாரியனின் பெரும்படை தரைமார்க்கமாக, கம்பளைக்கும், கடல் மார்க்கமாக கோட்டைக்கும் அனுப்பப்பட்டது. கம்பளை அரசனான புவனேகபாகு அப்படைக்கு எதிர் நிற்க அஞ்சி ஓடி ஒளித்தான்.[5] கடற்படை தோல்வி கண்டு திரும்ப நேர்ந்தது.

கி.பி.1410ம் ஆண்டளவில் ஜெயவீரசிங்கன் இறக்க குணவீர சிங்கையாரியன் (5ம் பரராசசேகரன்) ஆட்சிக்கு வந்தான். இவனது காலத்தில் பராக்கிரமபாகு என்ற சிங்கள மன்னன் திறை செலுத்த மறுத்தான். அதனால் தென்னிலங்கைக்கு படையெடுத்துச் சென்று சிங்களவரசைத் தோல்வி காணவைத்து திறைபெற்று மீண்டான். (கா.இந்திரபாலா -1969/70) இப்படையெடுப்புக்கு விஜயநகர மன்னன் படைகொடுத்து உதவினான் என அறியமுடிகின்றது. குணவீரசிங்கையாரியன் கி.பி1440ம் ஆண்டுவரை ஆட்சி புரிந்தான்.

இக்காலத்தில் கி.பி பதினான்காம், பதினைந்தாம் நூற்றாண்டுகளில் யாழ்ப்பாண இராச்சியம் தனது ஆள்புலத்தினை நன்கு விஸ்தரித்திருந்தது என்பதனையும் இலங்கையின் வடமேற்கு பிராந்தியங்களில் யாழ்ப்பாண ஆரியச்சக்கரவர்த்திகளின் வணிகக் கப்பல்கள் காலிவரை சென்று வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தன என்பதையும் போர்த்துக்கேய ஆவணங்களிலிருந்து உறுதிப்படுத்திக்கொள்ள முடிகின்றது.[6] மேலும் 'இபின் பதூதா' என்ற அராபிய யாத்திரீகனது குறிப்புகளும் இதனை உணர்த்தும்.

---

4. ஈழத்தவர் வரலாறு - பக்.80, கலாநிதி.க.குணராசா -1996
5. யாழ்ப்பாண இராச்சியம் தோன்றிய காலமும் சூழ்நிலையும் - கட்டுரை கா.இந்திரபாலா 'இளங்கதிர்' பேராதனை 1969 /70 பக்.18
6. இலங்கை வரலாறு பாகம் 1 - பக் 228 செ.கிருஷ்ணராசா எம்.ஏ.இணைப்பேராசிரியர் வரலாற்றுத்துறை -2005



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரியச் சக்கரவர்த்தியின் கப்பல்கள் பல தென்னிந்தியாவில் பாண்டிய நாட்டுக் கடற்கரையோரமாகச் சென்று கொண்டிருந்ததை இபின் பதூதா குறிப்பிட்டுள்ளார். இக்காலத்தில் யாழ்ப்பாண இராச்சியம் கொடியும், முடியும், செங்கோலும் கொண்டு திகழ்ந்த ஒரு சுயமான இராச்சியம். விடையும், பிறையும் பொறித்த காசுகள் யாழ்ப்பாண இராச்சியத்தின் நாணயங்கள் சேது என்ற சொல் பொறிக்கப்பட்ட அக்காசுகள் யாழ்ப்பாண அரசரின் நாணயங்கள் என்பதை வண.ஞானப்பிரகாசர் O.M.I. குறிப்பிடுவர்.[7]

குணவீரசிங்கையாரியனுக்குப் பின் அவனது மகனான கனகசூரிய சிங்கையாரியன் கி.பி1440ல் அரசனானான். யாழ்ப்பாண இராச்சிய வரலாற்றில் இவனது காலம் குறிப்பிடத்தக்கது. ஏனெனில் கி.பி 1215ஆம் ஆண்டிலிருந்து கி.பி.1440ம் ஆண்டுவரை ஆரியச் சக்கரவர்த்திகள் கட்டிக்காத்த வடவிலங்கையின் விலை மதிப்பில்லாத சுதந்திரத்தை தென்னிலங்கை மன்னனிடம் பறிகொடுத்ததாகும். (கலாநிதி.க.குணராசா -1996) கோட்டை மன்னன் ஆறாம் பராக்கிரமபாகு கி.பி1450ம் ஆண்டு தனது வளர்ப்பு மகனும் சேனாபதியுமான சபுமல் குமரய்யா (செண்பகப் பெருமாள்) என்பவனின் தலைமையில் படையொன்றை அனுப்பி யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி கி.பி1467 வரை ஆட்சி புரிந்தான்.

---

7. யாழ்ப்பாண அரசனைச் சந்தித்த இஸ்லாமிய யாத்திரீகன் - கட்டுரை
ம.க.அந்தனிசில், தினகரன் வாரமலர் 28.04.1996



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாண மன்னர் காலத்தில் அக்கரைப்பற்று (கி.பி1300 -1450 வரை)

இக்காலத்தில் (கி.பி1300-1450) ஆரியச்சக்ரவர்த்திகளும், வன்னிச் சிற்றரசர்களும் வடக்கே ஆட்சி செய்ய கிழக்கே வன்னிச் சிற்றரசுகள் எழுச்சி பெற்றிருந்தன. வடக்கு, கிழக்கு பகுதிகள் தனித்தமிழ்க் கலாசாரப் பிராந்தியங்களாக விளங்கின. இக்காலத்தில் சிங்கள அரசு தென்மேற்கு நோக்கிப் புலம்பெயர தமிழ், சிங்கள அரசுகளைப் பிரித்து வைக்கும் பகுதியாக வடமத்திய மாகாணம் காடடர்ந்த பகுதியாகியது. (கலாநிதி.க.சிற்றம்பலம் -1984)

இக்காலத்தில் அதாவது பதினான்காம், பதினைந்தாம் நூற்றாண்டுகளில் மட்டக்களப்பில் (அம்பாரை உள்ளிட்ட) ஆட்சி செலுத்தி வந்த வன்னியர் என்ற சிற்றரசர்கள் யாழ்ப்பாண மன்னரின் மேலாதிக்கத்தை ஏற்றிருந்தனர்.[8] ஆயினும் சுதந்திரமுள்ள சிற்றரசர்களாகவே இப்பிராந்தியத்தில் ஆட்சி புரிந்து வந்தனர் எனலாம். யாழ்ப்பாண இராச்சியம் வலிமையுள்ள இராச்சியமாகவிருந்த இக்காலத்தில் இலங்கையின் வடக்கு, கிழக்கு, மேற்கு பிரதேசங்களிலுள்ள சிற்றரசுகள் அனைத்தும் யாழ்ப்பாண ராச்சியத்தின் சாமந்த அரசுகளாகவும், யாழ்ப்பாண இராச்சியத்தின் எழுச்சிக்குப் பக்கபலமாக இருந்திருப்பதையும் குவரெஸ் வான்கோயின்ஸ் போன்ற போர்த்துக்கீச, ஒல்லாந்த பாதிரியார் அறிஞர்களின் ஆவணங்கள் எடுத்துக்காட்டியுள்ளன.[9]

இக்காலத்தில் (கி.பி.1310-1450) ஏறாவூர், பழுகாமம், சம்மாந்துறை, சிங்காரபுரி (அட்டப்பள்ளம்), பாணகை ஆகிய இடங்களிலிருந்து பண்டைய மட்டக்களப்பை ஆட்சிபுரிந்து வந்த வன்னிச் சிற்றரசர்கள் யாழ்ப்பாண மன்னர்களுடன் நல்லுறவு கொண்டிருந்தனர். மட்டக்களப்பு வன்னிச் சிற்றரசுகளுக்கும் யாழ்ப்பாண இராச்சியத்துக்குமிடையில் கடல் வழியாகவும், தரை வழியாகவும் நெருக்கமான சமூக, சமய, கலாசார வாணிபத் தொடர்புகள் நிலவியிருந்தன.

---

8. யாழ்ப்பாண சரித்திரம் - பக்.87 முதலியார். செ.இராசநாயகம் -1933

9. இலங்கையில் தமிழர் -பக்.148 கலாநிதி முருகர் குணசிங்கம் -2008



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதே வேளை மேற்குறிப்பிட்ட அமைப்புக்கள் அரசியலின் காரணமாக தனித்தும் வேறுபட்டும் காணப்பட்ட போதும் தமிழ்மொழி வழக்காலும், இதன் இலக்கிய பாரம்பரியத்தினாலும், சைவசமய மரபுகளின் பயனாகவும், கண்ணகி வழிபாட்டின் மூலமாகவும் பொதுவான சமய, கலாசார பாரம்பரியத்தையும் ஒருமைப்பாட்டையும் பெற்றிருந்தன. (கலாநிதி.சி.பத்மநாதன் -1985) இக்காலத்தில் (1325-1450) வட இலங்கையில் இலக்கியங்கள் பல உருவாகி வந்துள்ளன.[10]

இக்காலத்தில், சிங்காரபுரி வன்னிச் சிற்றரசர்களது ஆட்சியும் சம்மாந்துறை வன்னியர்களின் செல்வாக்கும் ஆதரவும் (சமய, சமூக ரீதியில்) நிலவி வந்த அக்கரைப்பற்று பிரதேசம் பல்துறைகளிலும் செழிப்புடன் விளங்கி வந்தது. வடவிலங்கையுடன் சின்னமுகத்துவாரம், திருக்கோவில், உமிரித்துறைகளினூடாக மிக நெருக்கமான உறவுகளைக் கொண்டிருந்த அக்கரைப்பற்று பிரதேசம் சமூக, சமய, கலாசாரம், கலை ஆகியனவற்றில் வளர்ச்சியுற்று வந்ததுடன் இலக்கியமும் செழித்திருந்தது. இதனை ஆய்வுகள் தெளிவுறுத்தும்.

பண்டைய நாகரீகம் நிலவியிருந்த இடங்களான சங்கமன் கண்டி, வில்காமம், கஞ்சிகுடி ஆறு, றூபஸ், சாகாமம், முள்ளிக்குள பகுதி, தீகவாபி உள்ளிட்ட அக்கரைப்பற்று மேற்கு பிரதேசம் இக்காலத்தில் அடர்ந்த காடாக மாறியிருந்தது. இப்பகுதிகளில் பண்டைய நகர நாகரீகச் சின்னங்களான கட்டிட இடிபாடுகள் தொல்லியல் எச்சங்கள் காடுகள் மண்டிக்கிடந்தன. அத்துடன் அக்காலத்தில் இப்பகுதிகளில் நிலவி வந்த சிறிய பெரிய நீர்ப்பாய்ச்சல் குளங்கள் பொலிவிழந்து காணப்பட்டன.

இவ்வேளை இப்பிரதேசத்தின் கிழக்குக் கரையோரப் பகுதிகளில் மக்கள் வாழ்ந்திருந்தனர். மக்கள் குடியிருப்புக்கள் ஆங்காங்கே அமைந்திருந்தன. கருங்கொடித்தீவு, தம்பிலுவில் ஆகிய கிராமங்களில் மக்கள் அதிகளவில் வாழ்ந்திருந்தனர். அத்துடன் இந்த இடங்கள் இப்பிரதேச வணிகமையங்களாகவும் அக்காலத்தில் விளங்கியிருந்தன. பண்டைய கோரைக்களப்பு கிராமமும் நிலவி வந்தது.

10. திருக்கோவில் பிரதேச இலக்கிய வரலாறு - பக்.25-28 நா.நவநாயகமூர்த்தி -2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காலத்தில் கோளாவில் (கோணவில்), பனங்காடு (பனங்காமணசோலை) ஆகியன இயற்கை எழில் சூழ்ந்த கிராமங்களாக விளங்கியிருந்தன.

இதேபோன்று, மீனோடைக்கட்டு, பாலமுனை அட்டாளைச்சேனை வடக்கு ஆகிய கிராமங்களும் செழிப்பான இயற்கை எழில்மிக்க ஆறுகள், ஓடைகள், சதுப்பு நிலங்கள் சூழ்ந்த கிராமங்களாக மிளிர்ந்து வந்தன. இக்காலத்தில் கிழக்கு கரையோரமாக தனித்து நிலவி வந்த தம்பட்டைக் கிராமத்தில் சிவப்பிராமணர்களான சங்கமர் என்ற வீர சைவக்குருமார் குடும்பங்கள் வாழ்ந்து வந்தன.[11] இவர்கள் அக்கரைப்பற்று பிரதேசத்தில் மட்டுமன்றி மட்டக்களப்பு முழுவதிலும் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரம் வரையுள்ள சிவாலயங்களில் அர்ச்சகர்களாகப் பணிபுரிந்து வந்தனர்.

பண்டைய நாகரீகம் நிலவியிருந்த இடங்கள் அடர்ந்த காடாக மாறியிருந்த இக்காலத்தில் கிழக்குக் கரையோரப் பகுதிகளில் வாழ்ந்திருந்த மக்கள் தங்கள் தங்கள் கிராமங்களைச் சூழவுள்ள பகுதிகளில் அமைந்திருந்த செழிப்பான இடங்களில் காடுகள் வெட்டித் துப்பரவு செய்து நெற்கழனிகளை உருவாக்கியிருந்தனர். அத்துடன் நீர்ப்பாய்ச்சலுக்காக சிறிய, பெரிய குளங்களையும் நிர்மாணித்து நெற்செய்கையில் ஈடுபட்டு வந்தனர்.

மேலும், இப்பிரதேசத்தை ஊடறுத்து சென்ற ஆறுகளில் அணைகள் கட்டி, ஆற்றோரங்களில் அமைந்திருந்த செழிப்பான சதுப்பு நிலங்களில் வரப்புக்கட்டியும் (வரப்புக்கள்) கரையோரப் பகுதியில் அமைந்திருந்த களப்புக்கள், சிறிய சதுப்பேரிகள் என்பனவற்றின் கரையோரப்பகுதிகளில் வரப்புக்கள் அமைத்துப் பண்படுத்தியும் நெற்செய்கை பண்ணி வந்தனர். அத்துடன் ஆங்காங்கே காடு மண்டிக் கிடந்த மேட்டுப் பகுதிகளைக் காடழித்து துப்பரவு செய்து சேனைப் பயிர்ச்செய்கையிலும் ஈடுபட்டு வந்தனர்.

---

11. ஆதலால், இவ்வூர் 'குருநாதபுரம்' என்ற பெயரினையும் பெற்று விளங்கி வந்துள்ளதையும் அறியமுடிகின்றது.

* இக்காலத்தில் சங்கமன்கண்டி கிழக்கில் (திருப்பதி) சில குடும்பங்கள் வாழ்ந்திருந்ததுடன், சங்கமன் கண்டி மலை சிவாலயமும் நிலவியிருந்தது. கி.பி1623 வரை இந்நிலை நீடித்திருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களின் தேவைகளான பால், தயிர், நெய் என்பனவற்றிற்காக மாடுவளர்த்தல் மேற்கொள்ளப்பட்டு வந்தது. உழவுத்தொழிலுக்கும் மாடுகள் உறுதுணையாக (உழவு, சூடுமிதிப்பு) இருந்து வந்தன. ஆதலால் மாடு வளர்த்தல் முக்கிய தொழிலாகவிருந்து வந்தது. மக்கள் தங்கள் உணவுத் தேவைகளுக்காக ஆறுகள், குளங்கள் சதுப்பேரிகள், நீரோடைகளில் மீன் பிடித்தலிலும், கிராமங்களை அண்மித்திருந்த காடுகளில் பாரம்பரிய முறையில் மான், முயல் மரை போன்ற மிருகங்களை வேட்டையாடியும் பெற்றுக்கொண்டனர்.

அத்துடன் காலத்துக்குக் காலம் பாலைப்பழம் வீரைப்பழம், விளாம்பழம், நுரைப்பழம், கடுபுளியம்பழம், காரைப்பழம் போன்றனவும் இப்பிரதேசத்தில் நிலவியிருந்த காடுகளில் நிரம்பியிருந்தன. அன்பு, கருணை, இரக்கம், சமத்துவம் சகோதரத்துவம் ஆகிய நற்பண்புகள் கொண்ட மக்கள் வாழ்ந்திருந்த இப்பிரதேசத்தில் ஆலயங்களை மையமாகக் கொண்ட சமூகக்கட்டமைப்பு (நிர்வாகம்) நிலவி வந்தது. இதில் அந்தந்தக் கிராமங்களைச் சேர்ந்த சமூகப் பற்றாளர்களான பெரியோர்கள் தன்னலங்கருதாச்சான்றோர், புலவர், கலைஞர், வைத்தியர் ஆலயக்குருமார் என்போர் அங்கம் வகித்து வந்தனர்.

இக்கிராம அமைப்புக்கள் கிராமங்களில் மக்களிடையே ஏற்படும் பிரச்சினைகளை இனம் கண்டு விசாரித்துத் தீர்வுகளையும் வழங்கி வந்தன. மேலும் தங்கள் கிராமங்களுக்குத் தேவையான சமூகம், சமயம், கலாசாரம், விவசாயம் போன்ற விடயங்களை வன்னியர்களுக்குத் தெரியப்படுத்தி அவற்றை நிறைவேற்றி வந்தன. இதே வேளை அக்கரைப்பற்று பிரதேசத்தை பரிபாலித்து வந்த வன்னிராசா மட்டுமன்றி இப்பிரதேச சமூகம் சார்ந்த (சமயம்) விடயங்களில் ஆர்வம் கொண்டிருந்த சம்மாந்துறை வன்னிராசாக்களும் இப்பிரதேசத்திற்கு அடிக்கடி விஜயம் மேற்கொண்டு மக்களின் குறைகளைக் கேட்டறிந்து பிரசித்தி பெற்ற ஆலயங்களுக்கும் சென்றுள்ளதை ஆய்வுகள் வாயிலாக அறியமுடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலக்கியம்

இக்காலகட்ட இப்பிரதேச இலக்கியம் பற்றி குறிப்பிடுமிடத்து வட இலங்கைக்கும் அக்கரைப்பற்று பிரதேசத்துக்குமிடையில் சிங்காரபுரி வன்னியூடாகத் தரைவழிப் போக்குவரத்தும், அக்கரைப்பற்று துறைகளினுடாகக் கடல்வழிப்போக்குவரத்தும் நிலவி வந்த இக்காலத்தில் இப்பிரதேசத்தில் இலக்கியம் செழித்திருந்ததுடன் இலக்கியங்கள் பல உருவாகி வந்துள்ளன. இதனை இக்காலத்தைச் சேர்ந்த இன்று காணக்கிடைக்கும் 'கண்ணகி வழக்குரை' என்ற இலக்கியம் உறுதி செய்கின்றது.

யாழ்ப்பாண இராச்சியம் உன்னத நிலையிலிருந்த இக்கால கட்டத்தில் (கி.பி.1300 -1450) ஆரியச் சக்கரவர்த்திகளின் ஆதரவுடன் வட இலங்கையில் மருத்துவம், சோதிடம், இலக்கியம் சமயம் சார்ந்த துறைகளில் இலக்கியங்கள் உருவாகி நிலவி வந்தன. கடல் வழியாகவும், தரைவழியாகவும் வட இலங்கையுடன் மிக நெருக்கமான சமூக, சமய, கலாசார, வாணிபத் தொடர்புகளைக் கொண்டிருந்த கிழக்கிலங்கை அக்காலத்தில் இலக்கிய உறவினையும் கொண்டிருந்தது.

திருகோணமலையிலும், மட்டக்களப்பிலும் இலக்கியங்கள் உருவாகி வந்தன. இலக்கியச் சான்றுகள் இதனை உணர்த்தும். இக்காலத்தில், கிழக்கில் திருகோணமலைப் பிராந்தியம் சைவம் தமிழ் வளர்க்கும் பிராந்தியமாக மேன்மை பெற்றிருந்தது. இப்பிரதேசத்தில் அமைந்திருந்த கோணேசர் ஆலயத்தின் தல புராணங்களான கோணேசர் கல்வெட்டு, திருக்கோணாசலப் புராணம், ஸ்ரீதெட்சண கயிலாய புராணம் ஆகியனவும் திருக்கரசையின் தலபுராணமுமாகிய திருக்கரசைப் புராணமும் இக்காலத்தில்தான் இயற்றப்பட்டன. (கலாநிதி.சி.க.சிற்றம்பலம் - 1984)

இக்காலத்தில் யாழ்ப்பாணத்தை ஆட்சிபுரிந்து வந்த மன்னர்களிலொருவனான வலிமை மிக்கவனும், தமிழ்ப்புலமை மிக்கவனுமான ஜெகவீரன் என்ற ஜெகவீரசிங்கையாரியன் காலத்தில் (கி.பி1380-1410) இம்மன்னனால் கோவலனார் கதை என்ற இலக்கியம் இயற்றப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட இலங்கையில் கண்ணகையம்மன் வழிபாடு உன்னத நிலையிலிருந்த அக்காலத்தில் இயற்றப்பட்டு நிலவி வந்த இவ்விலக்கியம் கண்ணகிவழிபாடு செழிப்புடன் விளங்கி வந்த மட்டக்களப்பின் தென்பிரதேசம் அக்கரைப்பற்று பகுதிகளிலும் அறிமுகமாகி நிலவியிருந்தது.[12]

இக்காலத்தில், மட்டக்களப்பின் தென் பிரதேசம், சிங்காரபுரி வன்னியிலும், சிங்காரபுரி வன்னியர்களின் ஆட்சி நிலவி வந்த அக்கரைப்பற்று பிரதேசத்திலும் புலவர்கள், கவிஞர்கள் என்போர் வாழ்ந்திருந்தனர். இப்பிரதேசங்களில் இலக்கியங்களும் உருவாகி வந்தன. இக்காலத்தில், கி.பி1410க்கும் 1425க்குமிடைப்பட்ட காலத்தில் அக்கரைப்பற்று பிரதேசம் தம்பிலுவில் கிராமத்தில் வாழ்ந்திருந்த புலவரொருவரால் ''கண்ணகி வழக்குரை'' இலக்கியம் இயற்றப்பட்டது. (நா.நவநாயகமூர்த்தி - 2014 பக்.27,28)

இதனை விளக்கமாகக் குறிப்பிடுமிடத்து, அக்காலத்தில் வட இலங்கையில் உருவாகி நிலவியிருந்த ''கோவலனார் கதை'' இலக்கியம் கடல் வழியாகத் திருக்கோவில் துறையை வந்தடைந்து கண்ணகி வழிபாடு (கண்ணகையம்மன்) செழித்திருந்த தம்பிலுவில் பகுதியில் அறிமுகமானது.

இதனைத் தொடர்ந்து 'கோவலனார் கதை' இலக்கியத்தைத் தழுவியதாக இவ்வூரைச் சேர்ந்த புலவரொருவரால் 'கண்ணகி வழக்குரை' இலக்கியம் உருவாக்கப்பட்டது. இதனை இலக்கியச் சான்றுகள் உணர்த்தும். அக்காலத்தில் அக்கரைப்பற்று பிரதேசத்தில் உருவான இலக்கியங்களில் கண்ணகி வழக்குரை இலக்கியமும் சில பத்ததிகளுமே இன்று காணக்கிடைக்கின்றன. ஏனைய இலக்கியங்கள் காணக்கிடைத்தில என்பது குறிப்பிடத்தக்கது.

---

12. இது பற்றி ''திருக்கோவில் பிரதேச இலக்கிய வரலாறு'' (பக்,26-29) பட்டிநகர் கண்ணகி ஆலயவரலாறு (பக்.35-38) ஆகிய வரலாற்று நூல்கள் விபரமாகக்குறிப்பிடுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதே வேளை, இக்கால கட்டத்திலும் (கி.பி1300-1450) இதற்குப் பிற்பட்டகாலத்திலும் (கி.பி1450-1600) அக்கரைப்பற்று பிரதேசத்தில் உருவாகி ஆலயங்களில் சேமிக்கப்பட்டு வந்த இலக்கியங்களும், மற்றும் செல்வந்தர், புலவர், வைத்தியர் என்போரிடையே தனியார் உடமைகளாகவிருந்து வந்த இலக்கியங்கள் என்பன பிற்காலத்தில் படையெடுப்பாளர்களான அந்நியர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆலய அழிப்புக்கள், வன்முறைகள், இடப்பெயர்வுகள் (போர்த்துக்கேயர் காலம், கி.பி1609,1623,24கள்) காரணமாக அழிந்தொழிந்து போயின.[13]

13. கி.மு.நாலாம் நூற்றாண்டில் பெருங்கற்கால முதிர்ச்சி நிலையில் இப்பிரதேசத்தில் பழந்தமிழ் எழுத்தான 'தமிழி' எழுத்துக்கள் வழக்கில் இருந்துள்ளன. மேலும் சங்ககாலத்துக்குச் சமமான காலத்தில், சங்ககாலப் பண்பாடும், தமிழ் மொழிப் பயன்பாட்டுக்கெனத் தோற்றம் பெற்ற தமிழி எழுத்துக்கள் இருந்து வந்ததையும், எழுதும் வழக்கு நிலவியிருந்ததும் குறிப்பிடத்தக்கது. (நா.நவநாயகமூர்த்தி - 2014 பக், 9-12)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலைகள்

கி.பி.பதின்மூன்றாம் நூற்றாண்டில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஏற்பட்ட தென்னிந்தியச் செல்வாக்கு, இதனைத் தொடர்ந்து இப்பிராந்தியங்களில் பரந்திருந்த தென்னிந்தியப் பண்பாடு தென்னிந்தியாவுக்கும் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்குமிடையில் நிலை பெற்ற சமூக, சமய, கலாசார உறவுகள் என்பனவற்றின் பின்னணியில் கி.பி.பதினான்காம், பதினைந்தாம் நூற்றாண்டுகளில் தென்னிந்தியாவில் நிலவியிருந்த ஆடல் வகைகள் ஈழத் தமிழரிடையேயும் அறிமுகமாகி பரவியிருந்தன.

விஜய நகர (துங்கபத்திரா நதிக்கரை) ஆட்சியில் தமிழகத்தின் தஞ்சை, மதுரை ஆகிய இடங்களில் நாயக்கர் ஆட்சி நடந்து வந்த இக்காலத்தில் தமிழகத்தில் நிலவி வந்த ஆடல்வகைகள், தென்னிந்தியப் பண்பாடும் வன்னியர் என்ற சிற்றரசர் ஆட்சியும் நிலைத்திருந்த மட்டக்களப்பிலும் இப்பிரதேசத் துறைகளினூடாக வந்து அறிமுகமாகி நிலவி வந்தன.

இவ்வேளை அக்கரைப்பற்று பிரதேசம் உள்ளிட்ட சிங்காரபுரி வன்னியிலும் இப்பிரதேசத் துறைகளினூடாக வந்து ஆடற்கலை வடிவங்கள் அறிமுகமாகி நிலவி வந்தன. இவற்றுடன் நாட்டார் இசைச் சுரங்களான குரவை, தாலாட்டு, தெம்மாங்கு ஒப்பாரி ஆகியனவும், பண்ணிசையும் (தேவாரம்) இப்பிரதேசத்தில் நிலவியிருந்தன.

## மாரியம்மன் வழிபாடு

தமிழகத்துக்கும், அக்கரைப்பற்று உள்ளிட்ட சிங்காரபுரி வன்னிப் பிரதேசத்துக்குமிடையில் சிங்காரத்தோப்பு அணைத்துறை, ஒலுவில், சின்னமுகத்துவாரம், திருக்கோவில், உமிரி ஆகிய துறைகளினூடாக நெருக்கமான உறவுகள் நிலவி வந்த இக்காலத்தில் கி.பி.பதினான்காம் நூற்றாண்டின் பகுதியில் ஆந்திரா, கன்னட நாடுகளிலிருந்து மாரியம்மன், ஐக்கம்மா, எல்லையம்மன் ரேணுகாதேவி, திரௌபதி போன்ற அம்மன் வழிபாடுகள் தமிழகத்தில் அறிமுகமாகி கி.பி.பதினைந்தாம் நூற்றாண்டில் சிறப்புடன் விளங்கி வந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதேவேளை மாரியம்மன் வழிபாடு ஆரம்பகாலத்தில் தெலுங்கு மற்றும் கன்னட நாடுகளிலேயே சிறப்புடன் விளங்கியிருந்தமைக்கு சான்றுகள் உண்டு.[14]

இக்காலத்தில் விஜயநகர மன்னர்களின் கீழ் தஞ்சை மதுரை ஆகிய இடங்களிலிருந்து ஆட்சி புரிந்து வந்த நாயக்கர்கள் அம்மன் வழிபாட்டுக்கு ஆதரவளித்து வந்தனர். இக்காலத்தில் (கி.பி15ம் நூற்றாண்டு) சிங்காரபுரி வன்னியர்களின் ஆட்சியில் சிங்காரபுரி வன்னிப் பிரதேசம் உன்னத நிலையை எய்தியிருந்தது. அட்டப்பள்ளம் தொடக்கம் காளியோடைவரை மாட்டுப்பளை செங்கற்படை ஆகிய பகுதிகள் உள்ளிட்ட தென்பிரதேசம் 'சிங்காரபுரி' இராஜதானியின் அரசியல் மையமாக விளங்கி வந்தது.

இக் காலத்தில் கி.பி பதினைந்தாம் நூற்றாண்டின் முற்பகுதியில் அதாவது தொடக்க காலத்தில் சிங்காரபுரி வன்னியிலும் மாரியம்மன் வழிபாடு தமிழகத்திலிருந்து சிங்காரத்தோப்பு அணைதுறையூடாக வந்து அறிமுகமாகி செல்வாக்குப் பெற்றிருந்தது. சிங்காரபுரி நகரப்பகுதியில் (அட்டப்பள்ளம்) மாரியம்மன் ஆலயமொன்று தோற்றுவிக்கப்பட்டு நிலவி வந்தது. இதனைத்தொடர்ந்து அக்கரைப்பற்று பிரதேச மக்களிடையேயும் சிறு தெய்வ வழிபாடுகளிலொன்றாக மாரியம்மன் வழிபாடு நிலவி வந்தது.

---

14. விஜயநகரநாயக்கர் காலத்து அம்மன் வழிபாடு - 'கட்டுரை' முனைவர் கு.சேதுராமன் காமராசர் பல்கலைக்கழகம் மதுரை ''விஜயநகரப் பேரரசும் கலாசார மறுமலர்ச்சியும்'' 2010



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்தி என்ற நம்பிக்கையின் பேரில் மழைதரும் தெய்வமாகவும், அம்மை நோய் தீர்க்கும் தெய்வமாகவும் பலர் வணங்கும் தெய்வமாகவும் மாரியம்மன் அக்காலத்தில் (கி.பி1410-1450) அக்கரைப்பற்று பிரதேச மக்களிடையே பொங்கல், மடை, பூசைகளுடன் வழிபடப்பட்டு வந்ததுடன் இம்மக்களது ஆலய வழிபாட்டு இடமாக சிங்காரபுரி மாரியம்மன் ஆலயம் விளங்கி வந்தது. இக்காலகட்டத்தில் (கி.பி14ம், 15ம் நூற்றாண்டு) விஜயநகர ஆட்சியின் கீழ் தமிழகம் இருந்து வந்ததுடன் அதன் அரசியல், பொருளாதார, பண்பாட்டு மேலாதிக்கத்துக்கு இலங்கை உட்பட்டிருந்தது. இதற்கான நேரடி மறைமுக சான்றுகள் காணப்படுகின்றன.[15]

இதேவேளை சிங்காரபுரி வன்னியரின் ஆதரவுடன் சிறப்புடன் விளங்கிவந்த மீனாட்சியம்மன் ஆலயம் அக்கரைப்பற்று பிரதேச மக்களிடையேயும் பிரபல்யம் பெற்றிருந்தது. இம்மக்களிடையே நம்பிக்கைக்குரிய தெய்வமாக அன்னை மீனாட்சி மிளிர்ந்து வந்தாள்.

பாண்டியநாட்டின் வைகைக் கரையில் கோயில்கொண்டு அருளாட்சி புரிந்து வரும் அன்னை மதுரை மீனாட்சியை இதற்கு முந்திய காலத்தில் பாண்டியர்கள் பாண்டிய அரசைத் தோற்றுவித்த தலைவி என்று வழிபட்டு வந்ததைப்போன்று சிங்காரபுரி வன்னியர்கள் மீனாட்சியை தங்கள் குலதெய்வமாகக் கருதி வழிபட்டு வந்தனர். இதனை இலக்கியச் சான்றுகள் வாயிலாக அறியமுடிகின்றது.

---

15. விஜய நகர நாயக்கர் காலத்தில் இலங்கை தென்னிந்திய வணிக உறவு - கட்டுரை பேராசிரியர் ப.புஸ்பரட்ணம் - விஜயநகர பேரரசும் கலாசார மறுமலர்ச்சியும் - 2010



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாணிபம்

இக்காலத்தில் (கி.பி.1300-1450) வட இலங்கை தரைவழியாகவும் மட்டக்களப்பு துறைகளினூடாகவும் வாணிபத் தொடர்பினைக் கொண்டிருந்த போதும் தமிழகத்துச் செட்டிகளும் இப்பிரதேசத்தில் வர்த்தகம் புரிந்து வந்தனர். மட்டக்களப்பு துறைகளினூடாக இவர்கள் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்ததுடன் வாவியூடாகப் போக்குவரத்து இடம்பெற்று வந்த இக்காலத்தில் மண்முனை, அம்பிளாந்துறை, கிட்டங்கி, சம்மாந்துறை ஆகிய துறைகளினூடாக மட்டக்களப்பின் உட்பிரதேசங்களிலும் செட்டிகள் வாணிபம் மேற்கொண்டு வந்தனர்.[16]

இவ்வேளை வாவியின் தென்பகுதியில் கிட்டங்கி, சம்மாந்துறை ஆகிய துறைகள் பிரபல்யம் பெற்றிருந்ததுடன் தமிழகத்து செட்டிகளின் வர்த்தக மையங்களாகவும் விளங்கியிருந்தன. இந்த இடங்களிலிருந்து தமிழகத்துச் செட்டிகள் தங்கள் வர்த்தகப் பொருட்களை எடுத்து வந்து சிங்காரபுரி வன்னியூடாக காளியோடையைக் கடந்து அக்கரைப்பற்று பிரதேசம் திருக்கோவில் வரை சென்று விற்பனை செய்து வந்தனர்.

அக்காலத்தில் கருங்கொடித்தீவு, பனங்காடு ஆகிய கிராமங்கள் செட்டிகளின் தங்குமிடங்களாக இருந்ததுடன் அக்கரைப்பற்று பிரதேசத்தில் கருங்கொடித்தீவு, தம்பிலுவில் ஆகியன வணிக மையங்களாகவும் விளங்கியிருந்தன. இப்பிரதேசத்தில் வட இலங்கையைச் சேர்ந்தவர்களும் வாணிபத்தில் ஈடுபட்டு வந்தனர்.

16. கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலம் தொடக்கம் கிழக்குத்துறைகளினூடாக தமிழகத்து செட்டிகள் கிழக்கிலங்கையில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நடுகல் வழிபாடு

பண்டைத் தமிழகத்தில் செழிப்புடன் நிலவியிருந்த வீரவழிபாடு என்ற நடுகல் வழிபாடு இக்காலத்தில் அக்கரைப்பற்று பிரதேசத்தில் இடம்பெற்று வந்தது. இவ்வேளை பனங்காடு (பனங்காமணச்சோலை) கிராமத்தில் திறந்தவெளிக் கோயிலாக விளங்கி வந்த இவ்வழிபாட்டிடம் பற்றி நோக்குமிடத்து சோழரது ஆட்சிக்காலத்தில் தென்னிலங்கையை நோக்கி சோழர்கள் மேற்கொண்ட ஆரம்பகால படையெடுப்புக்களின்போது வீரமரணமெய்திய போர்வீரர்களின் நினைவாக நடப்பட்ட நடுகற்கள் அமைந்திருந்த இடங்களில் இந்த இடமும் ஒன்றாகும் என்பதை அறியமுடிகின்றது.

தென்னிலங்கை மீது (கதிர்காமம்) சோழர்கள் மேற்கொண்ட ஆரம்பகால படையெடுப்புக்களின் போது வீரமரணமெய்திய சில மறவர்களின் உடல்களைச் சோழர் எடுத்து வந்து சோழர் முகாம்கள் அமைந்திருந்த சாகாமம் நகரினை அண்டிய இன்றைய பனங்காடு பகுதியில் அடக்கம் செய்து அவர்கள் நினைவாக நடுகற்களும் நட்டனர். சோழரது ஆட்சிக்காலத்தில் வீரவழிபாடு நிலவிவந்த இந்த இடம் சோழரது ஆட்சி முடிவுற்றதைத் தொடர்ந்து படிப்படியாக பொலிவிழந்து போயிற்று. (பழந்தமிழர் நடுகற் பண்பாடு - பக்.108-112, நா.நவநாயகமூர்த்தி -2011)

இதற்கு பிற்பட்ட காலத்தில் இவ்வூரின் தோற்றம் இதனைத் தொடர்ந்து இங்கு நடுகற்களை ஒன்று சேர்த்து நிலவிவந்த நடுகல்வழிபாடு என்பன பற்றி பனங்காடும் பழைய ஐயனார் வழிபாடும் என்ற கட்டுரை ('ஏர்முனை' கலாசார விழாமலர் ஆலையடிவேம்பு, நா.நவநாயகமூர்த்தி 1999/2000) விபரமாகக் குறிப்பிடுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கி.பி 1450ம் ஆண்டு தொடக்கம் 1500 வரையுள்ள காலத்தில் அக்கரைப்பற்று

கி.பி1415ல் கோட்டை மன்னனாக ஆறாம் பாராக்கிரமபாகு அரசனாகிய காலத்தில் பல நூற்றாண்டுகளாக பலவீனமுற்றிருந்த சிங்கள இராச்சியம் மீண்டும் வலுப்பெற்றது. பராக்கிரமபாகு விவேகமும் ஆற்றலும் சாதுரியமும் கொண்ட அரசனாக விளங்கினான். இலங்கை முழுவதும் தன்மேலாதிக்கத்தை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டான். கண்டி இராச்சியம், வன்னிச் சிற்றரசுகள், யாழ்ப்பாண இராச்சியம் என்பவற்றைக் கைப்பற்றியமை இவனுடைய சிறப்புமிக்க சாதனைகளாகும்.[1]

கி.பி1450ல் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி ஸ்ரீ சங்கபோதி புவனேகபாகு என்ற சிம்மாசனப் பெயரோடு ஆட்சி புரிந்த சபுமல் குமாரய்யா (செண்பகப் பெருமாள்) கி.பி1467ல் தென்னிலங்கைக்கு திரும்பிச்செல்ல நேர்ந்தது. அவனுடைய வளர்ப்புத் தந்தையான ஆறாம் பராக்கிரமபாகு இறந்துபோக அவனது பேரன் ஜெயவீரன் கோட்டைக்கு மன்னனானான். இதனை விரும்பாத ஸ்ரீ சங்கபோதி புவனேகபாகு விஜயபாகு என்பவனை யாழ்ப்பாணத்தின் அரசனாக்கி விட்டு கோட்டைக்கு மீண்டு ஜெயவீரனைக் கொன்றுவிட்டு அரசகட்டிலேறினான்.

இத்தருணத்தை எதிர்பார்த்து தமிழகம் திருக்கோவில் ஊரில் கரந்துறைந்திருந்த கனகசூரிய சிங்கையாரியனும் அவனது இரு புதல்வர்களும் சேனைகளுடன் வந்து விஜயபாகுவைக் கொன்று இழந்த இராச்சியத்தை மீட்டுக்கொண்டனர். கனகசூரியசிங்கையாரியன் மீண்டும் இழந்த மணிமுடியை தரித்துக்கொண்டான்.[2] கோட்டை இராச்சியம் எழுச்சி பெற்றிருந்த அக்காலத்தில் (கி.பி1440-1467) மட்டக்களப்பு அரசர்கள் கோட்டை இராச்சியத்திற்கு ஆதரவளித்தவர்களாக இருந்தனர்.[3]

---

1. யாழ்ப்பாண இராச்சியம் - ஆரியச்சக்கரவர்த்திகள் காலம் - பக்.55 கலாநிதி.பத்மநாதன் யாழ்.பல்கலைக்கழகம் -1992
2. ஈழத்தவர் வரலாறு - பக்.86 கலாநிதி க.குணராசா -1996
3. இலங்கையில் தமிழர் - பக்.148 கலாநிதி முருகர் குணசிங்கம் - 2008



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு இவர்கள் அக்காலத்தில் கோட்டை இராச்சியத்திற்கு ஆதரவுள்ளவர்களாகவிருந்து வந்தபோதும் இவ்வரசர்கள் சுதந்திரமுள்ள ஆட்சியாளர்களாகவே இப்பிரதேசத்தை (அம்பாரை உள்ளிட்ட மட்டக்களப்பு) ஆட்சிபுரிந்து வந்தனர். கி.பி 15ம் நூற்றாண்டில் யாழ்ப்பாண இராச்சியம் வலுவுள்ள இராச்சியமாக எழுச்சிபெற்ற போது (கி.பி1467,68கள்) மட்டக்களப்பு வன்னியராசாக்கள் யாழ்ப்பாண இராச்சியத்தோடு இணைந்து செயற்பட்டு வந்தனர். இக்காலத்தில் (கி.பி1468 -1500) இவர்கள் சுதந்திரமுள்ள சிற்றரசர்களாகவே செயற்பட்டு வந்தனர்.

கனகசூரியசிங்கையாரியனுக்குப் பின் அவனது மூத்த மகனான பரராசசேகரன் கி.பி1478ம் ஆண்டு சிங்கைப் பரராசசேகரன் என்ற சிம்மாசனப்பெயரோடு மன்னனானான். நல்லூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்த இவன் நல்லூரை மேலும் சிறப்புமிக்க நகராக்கினான். இவன் தமிழ்ச்சங்கம் ஒன்றை நல்லூரில் நிறுவினான். பரராசசேகரனின் சகோதரன் செகராசசேகரன் சிறந்த தமிழறிஞனாவான். பரராசசேகரம் என்ற வைத்தியநூல், செகராசசேகரம் என்ற சோதிட நூல் என்பன இக்காலத்தில் இயற்றப்பட்டது.[4]

இக்காலகட்டத்தில் (கி.பி1468-1500) வட இலங்கைக்கும் மட்டக்களப்புக்குமிடையில் இருந்து வந்த உறவுகள் பற்றிக்குறிப்பிடுமிடத்து அரசியல்ரீதியில் என்ற நிலைக்கப்பால் மிகநெருங்கிய சமூக சமய கலாசார உறவுகளுடன் இலக்கியத் தொடர்பும் நிலவியிருந்தது. மேலும் இவை தமிழும் சைவமும் என்ற வரன்முறையில் பின்னிப்பிணைந்திருந்ததையும் அறியமுடிகின்றது.

---

4. கலாநிதி க.குணராசா - மு.கு.நூல் - பக்.86,87



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதே வேளை ஆறாம் பராக்கிரமபாகுவின் ஆட்சியின் கீழிருந்த (கி.பி1415-1467) 'கந்த உடரட்டை' சபுமல் குமாரய்யா ஆறாம் புவனேகபாகு என்ற பெயரில் கோட்டை மன்னனானபோது கோட்டை இராச்சியத்திலிருந்து விலகி விக்கிரமபாகு என்பவனின் தனியரசானது. கண்டி நகரம் இவ்விராச்சியத்தின் தலைநகரானது. ஒரு சிறிய பிரதேசத்துடன் ஆரம்பிக்கப்பட்ட கண்டி இராச்சியம் மாத்தளைப் பகுதியையும் வளவைப் பகுதிக்கும் திருகோணமலைக்கும் இடையில் உள்ள பிரதேசத்தையும் சுவீகரித்துக் கொண்டது.[5]

இதுபற்றி விளங்கக்குறிப்பிடுமிடத்து ஆறாம் பராக்கிரமபாகு காலத்தில் (கி.பி1415 - 1467) கோட்டை இராச்சியத்திற்குரியதாய் கண்டிப் பிரதேசம் (கந்த உடரட்டை) இருந்ததால் அதன் பிரதிநிதியாக ஜோதிய என்பவன் விளங்கினான். பராக்கிரமபாகுவிற்கு எதிராகப் புரட்சி ஒன்று நடந்தபோது அதனை அடக்கிய ஆறாம் பராக்கிரமபாகு கம்பளை அரசபரம்பரையைச் சேர்ந்த 'சேனாசம்மத' என்பவனை நியமித்தான்.

கோட்டை நிர்வாகம் சீர்குலைந்தபோது சேனாசம்மதன் என்ற பெயரை விக்கிரமபாகு என மாற்றிக்கொண்டு சுதந்திர அரசாக கண்டியைப் பிரகடனப்படுத்திக் கண்டி மன்னனானான். இவன் (கி.பி1469-1511) வரை கண்டியைத் தலைநகராகக் கொண்டு ஹரிஸ்பத்துவ, உடுநுவர, யட்டிநுவர ஹேவாஹெட்ட, தும்பறை ஆகிய ஐந்து பிரதேசங்களையும் மேலதிகமாக பாணமை, ஊவா (பதுளை), வெல்லச, தமன்கடுவை பின்னதென்ன ஆகிய சிற்றரசுகளையும் மலைநாட்டுடன் சேர்த்துக்கொண்டான்.[6] இவனுக்குப்பின் பாணகை சிற்றரசு மீண்டும் (கி.பி1500) சுயாட்சி பெற்று மட்டக்களப்பு சிற்றரசுகளில் ஒன்றாக நிலைபெற்றது.

---

5. இலங்கை சரித்திரம் (பாகம் 1) - பக்.23 எஸ்.எவ்.டி. சில்வா -1952

6. இலங்கை சுருக்க வரலாறு - பக்.246 கலாநிதி க.குணராசா, கமலா குணராசா - 2008



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதே வேளை விக்கிரமபாகு காலத்தில் (கி.பி1469-1511) கண்டி அரசானது தனியரசாகத் தோன்றி நிலைத்திருந்த காலத்தில் மட்டக்களப்பு பிராந்தியமானது பாணகை சிற்றாட்சிப் பிரிவு தவிர்ந்த ஏனைய வன்னிச் சிற்றரசுகள் உள்ளடக்கிய சுதந்திர ஆட்சிப்பிரதேசமாக விளங்கியிருந்தது. போர்த்துக்கேயர் இலங்கையில் காலடி எடுத்து வைத்த காலத்தில் (கி.பி1505ல்) பாணகை வன்னிச் சிற்றரசு சுயாட்சிப்பிரதேசமாக மட்டக்களப்புச் சிற்றாட்சிகளில் ஒன்றாக விளங்கியிருந்தது.

இக்காலகட்டத்தில் (கி.பி1450-1500) தென்னிந்தியாவுடன் நெருங்கிய சமூக சமய கலாசாரத் தொடர்புகளைக் கொண்டிருந்த மட்டக்களப்பில் தென்னிந்தியப் பண்பாடு நிலைத்திருந்தது. இதற்கு முந்திய காலத்தில் தென்னிந்தியாவிலிருந்து இங்கு வந்து அறிமுகமாகி நிலவி வந்த ஆடல் வகைகள் வளர்ச்சியுற்று வந்ததுடன் தாய்த் தெய்வவழிபாட்டு அம்சங்களான மாரி, காளி, பேச்சி, கடனாச்சி, மீனாட்சி ஆகிய அம்மன் வழிபாடுகளும் சிறந்திருந்தன.

இதேவேளை, மட்டக்களப்பின் தென் பகுதியில் குமுக்கன் ஓயாவரை கண்ணகி அம்மன் வழிபாடு நிலவியிருந்ததுடன் பாணகை (மீகாங்கொட) லகுகலை, தம்பிலுவில் பனங்காடு (பட்டிநகர்) வீரமுனை, காரைதீவு (காரேறுமூதூர்) ஆகிய இடங்களில் கண்ணகி ஆலயங்கள் நிலவியிருந்தன. தென்னிந்தியாவுக்கும் அக்கரைப்பற்று பிரதேசம் உள்ளிட்ட மட்டக்களப்புக்குமிடையில் வாணிபத் தொடர்புகளும் சிறந்திருந்தன.

இக்காலத்தில் கிழக்கிலங்கைத்துறைகளினூடாக இடம்பெற்று வந்த வர்த்தக வாணிபம் தென்னிந்தியச் செட்டிகள் தமிழகத்து முஸ்லீம் வணிகர் என்போர் வசம் இருந்து வந்த போதும் மட்டக்களப்பின் உட்பிரதேசங்களில் தமிழகத்துச் செட்டிகளே வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தனர். வாவியின் தென்பகுதியில் சம்மாந்துறை, கிட்டங்கி துறை ஆகிய துறைகள் வர்த்தக மையங்களாவிருந்து வந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பில் தமிழகத்து செட்டிகளின் வாணிப நடவடிக்கைகள் துறைகள் மூலமாகவும் (கடல்துறைமுகங்கள்) வாவியூடாகவும் நிலவியிருந்த அக்காலத்தில் இவர்களால் மட்டக்களப்பில் ஐயனார் வழிபாடு அறிமுகமாயிருந்தது. மட்டக்களப்பின் தென்பகுதியில் கண்டுமுனையில் (கல்முனை) அமைந்திருந்த குளத்தருகே செட்டிகளால் ஆலயமொன்று நிர்மாணிக்கப்பட்டு ஐயனார் சிலையொன்று பிரதிஸ்டை செய்யப்பட்டது.

இக்குளம் சாத்தன் என்ற பெயருடன் சாத்தன் குளம் என நிலவிவந்தது. ஐயனாருக்கு சாத்தன் என்ற பெயரும் உண்டு. பிற்காலத்தில் இக்குளம் சாத்தன்கேணி என விளங்கி வந்தது.[7]

அக்காலத்தில் கிட்டங்கித்துறை, சம்மாந்துறை ஆகியனவற்றினூடாக மட்டக்களப்பின் தென்பிரதேசத்தில் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்த தமிழகத்துச் செட்டிகள் தங்கள் விற்பனைப் பொருட்களை தெற்கே தம்பிலுவில் திருக்கோவில் வரை எடுத்துச் சென்று விற்பனை செய்து வந்தனர். இவ்வேளை (கி.பி1470,71 களில்) தம்பிலுவில், திருக்கோவில் வர்த்தக நடவடிக்கைகளுக்காக வந்து பனங்காமணச்சோலை என்ற பனங்காடு கிராமத்தில் தங்கியிருந்த செட்டிகளால் இங்கு ஐயனார் வழிபாடு தோற்றுவிக்கப்பட்டது.

இதுபற்றி நோக்குமிடத்து, அக்காலத்தில் இவ்வூரில் வாழ்ந்து வந்த மக்களில் வேடக்குடியைச் சேர்ந்த இரு இளங்கன்னியரை இந்தியாவிலிருந்து வந்து வர்த்தகம் புரிந்து வந்த இரு செட்டிகள் திருமணம் புரிந்து வாழ்ந்து வந்தனர். இவ்வேளை ஐயனார் அமைந்திருந்த ஊருக்கு அண்மித்திருந்த பகுதியானது காடாகவிருந்தது. இப்பகுதியின் நடுவில் நடுகற்கள் பல காணப்பட்டன.

7. பிற்காலத்தில் சாந்தன்கேணி என விளங்கி வந்த இக்குளம் இக்காலத்தில் சாந்தாங்கேணி எனத் திரிபுபட்டு விளங்கிவருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கற்களைக் கண்ணுற்ற செட்டிமார் இவற்றையெல்லாம் ஒன்று சேர்த்து மேடையாக்கி அதன்மீது சுட்டமண்ணாலான ஐயனார் சிலையொன்றை வைத்து வழிபாட்டுக்கு வித்திட்டனர். இதனைத்தொடர்ந்து இவ்வூரில் ஐயனார் வழிபாடு சிறப்புடன் விளங்கியிருந்தது. அக்காலத்தில் திறந்தவெளி கோயிலாக நிலவி வந்த இவ்வாலயம் பிற்காலத்தில் பாடல் பெற்ற தலமாகவும், மட்டக்களப்பு முழுவதிலும் பிரபல்யம் பெற்றிருந்தது.[8]

சங்கமன் கண்டி தொடக்கம் வில்காமம் கஞ்சிகுடி ஆறு, றூபஸ், சாகாமம், பொத்தானை (கிழவியூர் மலை) அளிக்கம்பை, பட்டிநகர் மற்றும் அட்டாளைச்சேனை மேற்கு முள்ளிக்குளமலை பிரதேசம், தீகவாபி உள்ளிட்ட காளியோடை வரை பரந்திருந்த பண்டைய அக்கரைப்பற்று பிரதேச சமூக,சமய, பொருளாதார வளர்ச்சியில் சிங்காரபுரி வன்னியர் அதிக கவனம் செலுத்தி வந்துள்ளனர் என்பதை ஆய்வுகள் உணர்த்தும். மரபுக் கதைகளும் இதனை உறுதிசெய்கின்றன. சிங்காரபுரி வன்னி இராசாக்களின் செல்வாக்கு இக்காலத்தில் வடக்கே காரேறு மூதூர் வரை நிலவியிருந்தது.

கி.பி.பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதிக்காலப் பகுதியான இக்காலத்தில் சிங்காரபுரி வன்னியை வன்னிய இராசசிங்கன் (கி.பி1460 -1495) என்ற தமிழ் சிற்றரசன் பரிபாலித்து வந்தான். நீதி நெறி முறைகள் தவறாது நல்லாட்சி செலுத்தி வந்த இவன் இறைபக்தி மிக்கவனுமாவான்.

'பால்போல் மனதுடைய சோழ இராசவன்னிமை' என்று குறிப்பிடப்படும் இவன் காலத்திற்கேற்றவாறு மீனாட்சிஅம்மன் ஆலயத்தை விரிவானமுறையில் நிர்மாணித்தான். இதனை இன்று காணக்கிடைக்கும் ஏட்டுச் சுவடிப் பாடல் வரிகள் குறிப்பிடுகின்றன.

''பால்போல் மனதுடைய சோழராச வன்னிமை
இப்பகுதி முழுவதும் ஆண்டு வரும் நேரம்
காலத்திற் கேற்றாற் போல் மீனாட்சி அம்மனை
கனவு கண்டது போல் கட்டினான் கோயில்''

8. கி.பி18ம், 19ம் நூற்றாண்டுகளில் இவ்வூரில் உருவாகி நிலவி வந்த இன்று காணக்கிடைக்கும் ஐயனார் இலக்கியங்கள் இதனை நன்கு தெளிவுறுத்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்காலத்தில் பரந்திருந்த சிங்காரபுரி வன்னிப் பிரதேசத்தை சிறந்த முறையில் பரிபாலனம் செய்து வந்த சோழ இராச வன்னிமை மீனாட்சி அம்மன் மீது அளவற்ற பக்தி கொண்டவனாவான்.

இவன் செங்கல், சுண்ணாம்பு, மரம் கொண்டு மீனாட்சி அம்மன் ஆலயத்தைப் புனர்நிர்மாணம் செய்ததுடன் சிவன், பிள்ளையார், நாகம், வயிரவர் ஆகிய தெய்வங்களுக்கும் (பரிவாரத் தெய்வங்கள்) ஆலயங்கள் கட்டினான். அத்துடன் ஆலயப் பகுதியில் கிணறுகளையும் மடங்களையும் உருவாக்கினான். ஆலயத்துக்கருகாய் மேற்குப் பகுதியில் தனது வாசஸ்தலம் ஒன்றை நிர்மாணித்த இம்மன்னன் தனது ஓய்வுகால இருப்பிடமாக இதனைக் கொண்டிருந்தான்.

அங்கயற்கண்ணியாம் அன்னை மீனாட்சி அம்மன் ஆலயப் பராமரிப்புக்கென வேண்டி வயற்காணிகளை அன்பளிப்பாக வழங்கிய இவன் நீர்ப்பாசனத்திற்காக பல குளங்களையும் வாய்க்கால்களையும் வெட்டி நெற்காணிகளை அபிவிருத்தி செய்தான்.

சோழ இராசவன்னிமை என்ற இராசசிங்க வன்னியனின் நீண்ட கால ஆட்சிக்காலத்தில் சிங்காரபுரி வன்னிப் பிராந்தியத்தில் சைவமும் தமிழும் செழித்திருந்ததுடன் சைவாலயங்களும் சிறப்புடன் விளங்கிருந்தன. காரைதீவு கண்ணகையம்மன் ஆலயம், நிந்தவூர் சிவாலயம், சிங்காரபுரி மாரியம்மன் ஆலயம், காளியோடை காளியம்மன் ஆலயம் என்பன இம்மன்னனால் ஆதரிக்கப்பட்டு சிறப்புடன் மிளிர்ந்து வந்தன.

இராசசிங்க வன்னியன் காரைதீவு கண்ணகையம்மன் ஆலயத்துக்கு நெற்காணியொன்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளான். இது பற்றி மரபுக்கதையொன்று பின்வருமாறு குறிப்பிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்காரபுரி வன்னிராசா தனது துணையியாருடன் யானையில் பவனி வருங்கால் ஒரு சமயம், கண்ணகையம்மன் கோயிலுக்கு அருகாமையில் யானை விழுந்து படுத்ததாகவும் இறங்கிச் சென்ற மன்னன் மனைவி 'கோதை' என்பவர் கண்ணகையம்மனை உற்று நோக்கியவேளை கண்தெரியாமல் தடுமாறியதாகவும் பின்னர் தேவியினைத் தரிசித்து கண்பார்வை பெற்றதாகவும் ஆதலால் அகமகிழ்ந்த மன்னன் நூற்றி முப்பத்தைந்து ஏக்கர் பரப்பளவுடைய நிலப்பரப்பினை அம்மனுக்கு அன்பளிப்பாக வழங்கியதாகவும் மரபுக்கதை கூறும்.[9]

அக்காலத்தில் அன்பளிப்பாக சிங்காரபுரி வன்னிராசாவால் வழங்கப்பட்ட களனிப் பிரதேசம் (இந்தக் களனிப் பிரதேசம் தெய்வம் ஆடிச் சுற்றும் தூரம்) கண்வெளி கணம்வெளி எனப்பட்டு தற்போது கந்தன் வெளி என அழைக்கப்படும் காரைதீவு கண்ணகை அம்மனுக்குச் சொந்தமான நெற்காணியாகும்.[10] அக்காலத்தில் வன்னிய இராசசிங்கனின் மனைவியான 'கோதை' என்பவரின் அரண்மனை இருந்த இடம் 'அழகாபுரி' என அழைக்கப்பட்டது. அழகாபுரியில் கிணறுகள் மடங்கள் சுமைதாங்கிகள் என்பன நிர்மாணிக்கப்பட்டிருந்தன.[11]

இதே வேளை கி.பி1250-1500 வரையுள்ள காலப்பகுதியில் மட்டக்களப்பு வன்னிச் சிற்றரசுகள் பற்றி சுருங்கக் குறிப்பிடுமிடத்து மட்டக்களப்பு, அம்பாரை மாவட்டங்களைச் சேர்ந்த பெரும்பாலான ஊர்களைத் தன்னகத்தே உள்ளடக்கியிருந்தன எனலாம். மத்தியகால வரலாற்று நிகழ்வுகள், புவியியற் பின்னணிகள், சமூக பண்பாட்டு வழமைகள் ஆகியனவற்றின் அடிப்படையில் மட்டக்களப்பு பிரதேசம் ஒரு தனித் தன்மை கொண்ட பிரதேசமாகவும் ஏனைய வடக்கு, கிழக்கு, வடமேற்கு பிரதேசங்களிலிருந்து சற்று மாறுபட்ட தன்மை கொண்ட தமிழர்கள் வாழும் பிரதேசமாகவும் விளங்கி வந்தது.

---

9. சிங்காரபுரி வன்னிச் சிற்றரசர் ஆட்சியில் சிறப்புடன் விளங்கி வந்த மீனாட்சி அம்மன் திருத்தலம் - கையெழுத்து பிரதி நூல் ஆய்வார்வலர் நா.நவநாயகமூர்த்தி -2017

10. தகவல் : திரு.த.வினாயகமூர்த்தி சுவாமியார் திராய்க்கேணி - 1995

11. இன்னும் சுமைதாங்கியடி என்னும் பகுதி உள்ளது. அரசி கோதை உல்லாசமாகப் பவனி வந்த இடம் கோதையன் மேடு என பிற்காலத்தில் வழங்கி வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கால கட்டத்தில் கிழக்கில் திருகோணமலை பிராந்தியத்தில் வன்னியர் வம்சத்தை சேர்ந்தவரின் ஆட்சியில் திருகோணமலை, தம்பலகாமம், கொட்டியாரம் கட்டுக்குளம் ஆகிய வன்னிச் சிற்றரசுகள் நிலவியிருந்தன. இவற்றில் திருகோணமலை வன்னி கூடிய அதிகாரமுடையதாக இருந்தது கோணேசர் ஆலயம் இங்கு இருந்தமையாலாகும். யாழ்ப்பாண இராச்சியத்தின் மேலாதிக்கத்தை திருகோணமலை பிராந்தியம் ஏற்றிருந்த போதும் போர்த்துக்கீசர் ஆட்சி இலங்கையில் ஆரம்பிக்கும் வரை இச்சிற்றரசுகள் சுதந்திரமுள்ளவைகளாக (சிற்றரசர்கள்) இயங்கிவந்துள்ளன என்பதற்கு வரலாற்று ஆவணங்களிலுள்ள குறிப்புகளினூடாக அறியமுடிகின்றது.[12]

இக்காலத்தில் (கி.பி பதினைந்தாம் நூற்றாண்டு) கொட்டியாரத்திலிருந்து ஒரு வன்னிமைப் பிரிவினர் மட்டக்களப்பில் சம்மாந்துறைக்கு சென்று குடியேற முயற்சித்தனர் என்றும் இவர்களை அங்கிருந்த முற்குக வன்னியர்கள் எதிர்த்து நின்று அங்கு குடியேற விடாது வெளியேற்றி விட்டனர் என்றும் ஈ.வி.டென்காம் என்பவர் தனது அறிக்கையில் குறிப்பிடுகின்றார். இவர் 1911ல் மக்கள் தொகை கணக்குக்குப் பொறுப்பாய் இருந்தவர் ஆவார்.

---

12. இலங்கையில் தமிழர் - பக்.146,147 கலாநிதி முருகர் குணசிங்கம் - 2008



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கி.பி பதினாறாம் நூற்றாண்டில் (கி.பி.1500 -1600 வரை)

கி.பி பதினாறாம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் கி.பி 1505ல் போர்த்துக்கேயர் இலங்கையில் காலடி எடுத்து வைத்த வேளையில் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தமிழரது முழுமையான ஆட்சியின் கீழிருந்தன. யாழ்ப்பாண இராச்சியத்தை பரராசசேகரன் என்ற தமிழ் மன்னன் ஆட்சிபுரிந்து வந்தான். மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி மாவட்டங்களை உள்ளடக்கிய வன்னிப் பிரதேசத்தை வன்னியர் என்ற தமிழ்ச் சிற்றரசர்கள் ஆட்சி புரிந்து வந்தனர்.

இதே போன்று புத்தளத்திலும் முற்குக வன்னியர்களின் ஆட்சியே நிலைத்திருந்தது. இக்காலத்தில் (கி.பி1505ல்) எவருக்கும் தலை வணங்காத சுதந்திரமுள்ள அரசுகளாக மட்டக்களப்புச் சிற்றரசுகள் விளங்கியிருந்ததுடன் இப்பிராந்தியத்தில் சைவமும் செழித்திருந்தது.[1] இவ்வேளை பண்டைய மட்டக்களப்பு வரலாற்றில் முக்கியத்துவம் பெற்று விளங்கியிருந்த பிரதேசங்களிலொன்றாகவிருந்து வந்த அக்கரைப்பற்று சிங்காரபுரி வன்னிச் சிற்றரசின் கீழ் செழிப்புடன் விளங்கியிருந்தது.

இவ்வேளையிலேயே அதாவது கி.பி பதினாறாம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் கி.பி 1505ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பதினைந்தாம் தேதியன்று இலங்கையில் 'தொம் உலோரன்சோ த அல்மேடா' என்ற போர்த்துக்கேயன் காலடி எடுத்து வைத்தான். இக்காலத்தில் இலங்கையில் மூன்று பெரிய அரசுகள் நிலவியிருந்தன. இவை முறையே கண்டி, கோட்டை, யாழ்ப்பாணம் என்பனவாகும். இவை மூன்றும் தனியான பிரதேசங்களை ஆட்சிபுரிந்து வந்தன.

---

1. ஈழத்தமிழர் வரலாற்றுச்சுவடுகள் - பக்.96, நா.நவநாயகமூர்த்தி - 2002



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன் ஒன்றை மற்றொன்று அழிக்க முடியாததாகத் தம்மளவில் பலமுள்ள அரசுகளாகவும் விளங்கியிருந்தன. இதன் விளைவாக சமூக அரசியல் பொருளாதார துறைகளில் இவைகள் தனித்துவம் வளர்ச்சி கண்டதோடு பேணியும் பாதுகாக்கப்பட்டது எனலாம்.[2] ஆயினும் கி.பி1500ம் ஆண்டு தொடக்கம்1600ஆம் ஆண்டு வரையான இக்கால கட்டத்தில் மட்டக்களப்பு வன்னிச் சிற்றரசுகள் கோட்டை, கண்டி, யாழ்ப்பாண மன்னர்களின் மேலாதிக்கத்தை ஏற்றுத் திறை செலுத்தாத சுதந்திரமுள்ள அரசுகளாகவே இப்பிராந்தியத்தில் செயற்பட்டு வந்தன. இதனை வரலாற்றாய்வுகள் மூலமாக அறியலாம்.

இக்காலகட்டத்தில் கோட்டை, கண்டி, யாழ்ப்பாண அரசுகளில் இடம் பெற்று வந்த அரசுரிமைப் போட்டிகள் அரசியல் நெருக்கடிகள் பதினாறாம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து இவ்வரசுகளின் அரசியலில் போர்த்துக்கீசர் மேற்கொண்டு வந்த தலையீடு என்பனவற்றுடன் இவ்வேளை மட்டக்களப்பில் தங்கியிருந்த போர்த்துக்கீசருடன் மட்டக்களப்பு வன்னியர்கள் கொண்டிருந்த நல்லுறவு ஆகிய காரணிகள் இதற்குச் சாதகமாக அமைந்தன எனலாம். மேலும் இக்காலத்தில் கோட்டை, கண்டி, யாழ்ப்பாண மன்னர்களுடன் மட்டக்களப்பு சிற்றரசர்கள் நல்லுறவுகளையும் கொண்டிருந்தனர்.

இக்காலத்தில் மட்டக்களப்புக்கும் கோட்டை, கண்டி, யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களுக்குமிடையில் சமூக, சமய, கலாசார உறவுகள் நிலவியிருந்தன. இதற்கு மொழி, பண்பாட்டு அம்சங்கள் மட்டுமன்றி இம் மூன்று ஆட்சிப் பிரதேசங்களில் சிறப்புடன் நிலவியிருந்த பத்தினி என்ற கண்ணகி வழிபாட்டு அம்சங்களும் இவற்றுடன் வாணிப நடவடிக்கைகளும் காரணமாகின எனலாம்.

---

2. யாழ்ப்பாண இராச்சியம் - பக்.132, பதிப்பாசிரியர் கலாநிதி சி.க.சிற்றம்பலம் - 1992



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி.பி பதினாறாம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் நல்லூரைத் தலைநகராக் கொண்டு யாழ்ப்பாணத்தை ஆட்சி புரிந்து வந்த பரராசசேகரனின் (கி.பி1478-1517) ஆட்சியின் இறுதிக்காலப்பகுதியில் யாழ்ப்பாண அரசில் அரசுரிமைப் போட்டிகள் நெருக்கடிகள் நிலவியிருந்தன. இந்நிலையில் இவனது மகன்மாரில் ஒருவனான சங்கிலி என்பவன் செகராச சேகரன் என்ற சிம்மாசனப் பெயரோடு கி.பி1519ல் யாழ்ப்பாண இராச்சியத்தின் மன்னனானான்.[3]

இவன் மன்னனானதைத் தொடர்ந்து போர்த்துக்கேயரின் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பவனாகவும் அவர்களுடன் தொடர்பு கொண்டோரைத் தண்டிப்பவனாகவும் இருந்தான். மேலும் ஒரு ஆளுமைமிக்க மன்னனாகவும், நாட்டுணர்வு மிக்க தலைவனாகவும், தீர்க்க தரிசனமும், கடும்போக்குக் கொண்ட ஓர் ஆட்சியாளனாகவும் நடந்து கொண்டான் எனத் தெரிகின்றது.[4] இவன் எக்கட்டத்திலும் போர்த்துக்கேயரை யாழ்ப்பாண இராச்சியத்தில் நிலை கொள்ளாது தடுப்பதில் முழுக் கவனத்தோடு திட்டவட்டமான கொள்கையோடு இருந்துள்ளான்.

சங்கிலி மன்னன் கி.பி1545ல் சீதவாக்கை, கண்டி அரசர்களுடன் இணைந்து போர்த்துக்கேயருக்கு எதிராக கோட்டைக்கு படையனுப்பி செயற்பட்டான். கி.பி. 1552ல் விதிய பண்டாரன் என்பவன் கோட்டை மன்னனுடனும் போர்த்துக் கேயருடனும் பகைத்துக் கொண்டு யாழ்ப்பாணம் வந்தபோது அவனைச் சங்கிலி தன்னுடன் இணைத்துக் கொண்டான். வீரமாகாளியம்மன் கோயிலில் நிகழ்ந்த ஒரு கலவரத்தில் விதிய பண்டாரன் இறக்க நேர்ந்தது.

---

3. ஈழத்தவர் வரலாறு -பக்.87, கலாநிதி.க.குணராசா-1996
4. யாழ்ப்பாண மன்னர்களும் போர்த்துக்கேயரும் - யாழ்ப்பாண இராச்சியம் பக்.67, திருமதி.சோ.கிருஷ்ணகுமார் (யாழ்ப்பாண பல்கலைக்கழகம் 1992)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி.பி 1560ல் போர்த்துக்கேயர் யாழ்ப்பாணம் மீது மேற்கொண்ட படையெடுப்பினைத் தொடர்ந்து சங்கிலி மன்னன் போர்த்துக்கேயருக்கு திறை செலுத்த ஒப்புக்கொண்டதுடன் மன்னார் தீவை போர்த்துக்கேயருக்கு விட்டுக்கொடுக்கவும் சம்மதித்தான். முதலாம் சங்கிலி 1565ம் ஆண்டு வரை ஆட்சி செய்தான். கி.பி 1564 ஆம் ஆண்டு சீதாவாக்கை மன்னன் மாயாதுன்னைக்கு ஆதரவாகவும் போர்த்துக்கேயருக்கு எதிராகவும் வடக்கர் படையொன்றை சங்கிலி மன்னன் அனுப்பியிருந்தான்.[5]

முதலாம் சங்கிலியன் நாற்பத்திரண்டு வருட ஆட்சியில் கிழக்கில் திருகோணமலைவரை அவனது ஆட்சி பரந்திருந்தது. இப்பகுதி வன்னியர்கள் யாழ்ப்பாண அரசின் கீழிருந்தன. இக்காலத்தில் யாழ்ப்பாண மன்னனும், திருமலை வன்னியனாரும் ஒருவருக்கொருவர் துணையாகவிருந்து போர்த்துக்கேயரை எதிர்த்து வந்தனர்.[6] இக்காலத்தில் கிழக்கில் மட்டக்களப்பு வன்னிச் சிற்றரசர்கள் சுதந்திரமுள்ள அரசர்களாக இப்பிராந்தியத்தை ஆட்சி புரிந்து வந்தனர்.[7]

முதலாம் சங்கிலிக்கு பின் புவிராசபண்டாரம் காசிநயினார் அல்லது குஞ்சிநயினார் (கி.பி1565) பெரிய பிள்ளை செகராசசேகரன் (கி.பி 1570) புவிராச பண்டாரம் பரராசசேகரம் (கி.பி 1582) எதிர்மன்னசிங்க குமாரன் (1591) சங்கிலிகுமாரன் செகராசசேகரன் (கி.பி1616) ஆகிய ஆறு மன்னர்கள் யாழப்பாணத்தின் ஆட்சியாளர்களாக விளங்கினர். இக்காலத்தில் (1565 - 1616) யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த உள்நாட்டுக் குழப்பங்களாலும் போர்த்துக்கேயரின் அரசியல் தலையீட்டினாலும் இந்த மன்னர்கள் நிலையாகத் தொடர்ந்து ஆளமுடியாது போயிற்று. (கலாநிதி க.குணராசா - 1996 பக்.91)

---

5. ஈழத்தவர் வரலாறு -பக்.90,91 கலாநிதி.க.குணராசா -1996
6. வன்னியர் - பக்.42,43 கலாநிதி.சி.பத்மநாதன் -1970
7. இதேவேளை இக்காலத்தில் (1500 - 1565) மட்டக்களப்புக்கும் யாழ்ப்பாணத்துக்குமிடையில் சமய, கலாசார பண்பாட்டு உறவுகள் நிலவியிருந்தன என்பதை மறுதலிக்கமுடியாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கால கட்டக் (கி.பி1500-1600) கோட்டை அரசியல் நிலை பற்றிக் குறிப்பிடுமிடத்து பதினாறாம் நூற்றாண்டின் ஆரம்பகாலத்தில் கோட்டை இராச்சியத்தில் இடம்பெற்று வந்த அரசியல் நெருக்கடிகள், அரசுரிமைப் போட்டிகள் என்பனவற்றின் பயனாக கோட்டை இராச்சியம் சீர்குலைந்திருந்தது(கி.பி 1521) இதனைத் தொடர்ந்து ஏழாம் புவனேகபாகு (கி.பி1521 - 1551) கோட்டை மன்னனாகவிருந்து வந்தான்.

இவனுக்குப் பிற்பட்ட காலத்தில் கோட்டை அரசியலில் போர்த்துக்கீசர் தலையீடு நிலவி வந்தது. கி.பி1580களில் கோட்டை மன்னன் உரிமை கொண்டாடிய அரசுகள் பற்றி தர்மபாலனின் கொடையோடு இணைக்கப்பட்ட பத்திரம் குறிப்பிடுகின்றது. இதில் பாணகை, பழுகாமம், மட்டக்களப்பு சிற்றரசுகளும் அடங்கியுள்ளன.[8] இவ்வாறு அப்பத்திரம் குறிப்பிடுகின்ற போதும் அக்காலத்தில் மட்டக்களப்பு வன்னிச் சிற்றரசுகள் சுதந்திரமுள்ள அரசுகளாகவே நிலவி வந்தன என்பது உண்மையாகும்.

கி.பி1597ல் தர்மபாலன் மரணமானதையடுத்து கி.பி1580ல் போர்த்துக்கீசரிடம் தர்மபாலன் அளித்த நன்கொடைப் பத்திரத்தை பிரதானிகளிடம் காண்பித்து அன்றிலிருந்து போர்த்துக்கீச மன்னரே இந்நாட்டினதும் மன்னராவார் என்று பிரகடனப்படுத்தினர். கி.பி 1597ல் மல்வானையில் வைத்து இவ்விருபகுதியாரும் செய்து கொண்ட இவ்வொப்பந்தம் (மல்வானை ஒப்பந்தம்) அசிவிடோ என்ற போர்த்துக்கீச தளபதியின் தலைமையில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.[9]

---

8. இலங்கையின் சுருக்க வரலாறு - பக்.92, H.W.கொடிறின்றன் -1960

* இதில் மட்டக்களப்பு என்று குறிப்பிடப்படுவது சம்மாந்துறை வன்னியாகும். அக்காலத்தில் வாவியின் தென்பிரதேசமே மட்டக்களப்பு என்ற பெயரைப் பெற்றிருந்தது.

9. இலங்கை வரலாறு - பாகம் II பக்.67 பேராசிரியர்.செ.கிருஷ்ணராஜா-2005



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தர்மபாலன் இறந்ததைத் தொடர்ந்து கரையோரப் பிரதேசங்களை போர்த்துக்கீசர் இப்பிரதேசங்களின் அரசியல் நிர்வாகத்தில் இவர்கள் மாற்றம் செய்யவில்லை. இதே வேளை போர்த்துக்கீசர் மட்டக்களப்பில் தங்கியிருந்தபோதும் மட்டக்களப்பு அரசியலில் அவர்கள் தலையீடு செய்யவில்லை. இப்பிராந்தியத்தில் ஆட்சி செலுத்தி வந்த வன்னியர்கள் சுதந்திரமுள்ள சிற்றரசர்களாகவே செயற்பட்டு வந்தனர். இதற்கு முந்திய காலத்திலிருந்தே (கி.பி1592,93கள்) போர்த்துக்கீசருக்கும் மட்டக்களப்பு சிற்றரசர்களுக்குமிடையே புரிந்துணர்வு ரீதியிலான உறவு இருந்து வந்தது.

கி.பி 1592ல் கண்டி வலுவான அரசாக மாறத்தொடங்கிய வேளையில் மட்டக்களப்புத் தமிழ் அரசர்கள் கண்டியினால் தமக்குப் பாதிப்பு ஏற்பட்டு விடுமோ (மேலாதிக்கம்) என அஞ்சி மட்டக்களப்பிலிருந்த போர்த்துக்கேயருடன் இரகசியத் தொடர்பு வைக்கத் தொடங்கினர். கி.பி1597ல் போர்த்துக்கீசர் கண்டிக்கெதிராக படையெடுத்துச் சென்றபோது மட்டக்களப்பு அரசன் போர்த்துக்கீசருக்கு முந்நூறு அவணம் நெல் கொடுத்து உதவினான் என அறியமுடிகின்றது.[10]

## கண்டி அரசும் மட்டக்களப்பும் (கி.பி1500-1550)

கி.பி பதினைந்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கோட்டையிலிருந்து பிரிந்த விக்கிரமபாகுவால் (கி.பி1469 -1511) கண்டி இராஜதானி நிறுவப்பட்டதைத் தொடர்ந்து கண்டி மன்னர்களுக்கும் மட்டக்களப்பில் நிலைத்திருந்த வன்னிச் சிற்றரசர்களுக்குமிடையில் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டிருந்தது. விக்கிரமபாகுக்குப் பின் இவனது மகனான ஜயவீர பண்டாரன் (கி.பி1511-1551) கண்டி மன்னனானான்.

---

10. மட்டக்களப்பு பிரதேச சாகித்திய விழா மலர் 1993 - திரு.டி.சிவராம்- கட்டுரை 16ம் நூற்றாண்டில் மட்டக்களப்பு - போர்த்துக்கீச ஆவணங்கள், போடிகல்வெட்டு பற்றிய ஒப்பீடு பக்.13



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவனது ஆட்சிக்காலத்தில் மட்டக்களப்புக்கும் கண்டிக்குமிடையில் மிக நெருக்கமான உறவுகள் நிலவியிருந்தன. இதனை போர்த்துக்கீச ஆவணங்களும் குறிப்பிடுகின்றன. இக்காலத்தில் ஏறாவூர், பளுகாமம், சம்மாந்துறை, பாணகை, சிங்காரபுரி (அட்டப்பள்ளம்) ஆகிய இடங்களிலிருந்து மட்டக்களப்பை ஆட்சி புரிந்து வந்த வன்னிய இராசாக்கள் சுதந்திரமுள்ள அரசர்களாக அதிகாரம் செலுத்தி வந்தனர். இதனை போர்த்துக்கீச ஆவணங்களும் நன்கு தெளிவுறுத்துகின்றன.

05.10.1545ல் கண்டியில் தங்கியிருந்த 'அன்ரோனி யோ பெரைரா' என்பவர் கோவாவிற்கு (போர்த்துக்கீசரின் கிழக்காசிய தலைமைப்பீடம் இருந்த இடம்) எழுதிய கடிதத்தில் மட்டக்களப்பு கண்டி மன்னனுக்கு உரியதல்ல எனத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்.[11] கண்டி மன்னன் ஜயவீரபண்டாரன் ஆட்சி புரிந்த காலத்தில் சீதவாக்கை மன்னன் மாயாதுன்னையின் மகனான முதலாம் இராசசிங்கன் மலைநாட்டைக் கைப்பற்றிக் கொள்ளலாம் என்ற பயத்தில் போர்த்துக்கேயரின் உதவியை நாடியிருந்தான்.[12]

இவ்வேளை கண்டி அரசனின் சபைக்குச் சென்றிருந்த கத்தோலிக்க குருவான சைமோவோ டி கொயிம்பரா எனும் பாதிரியார் அவருடன் சென்ற ஆந்திரேடி சுசர் என்னும் போர்த்துக்கீச வீரன் கண்டி மன்னன் சபையில் மட்டக்களப்பு மன்னனின் தூதுவர்களும் இருந்ததாக கோவாவிலிருந்த போர்த்துக்கீச ஆளுநருக்கு 27.05.1546ல் எழுதிய கடிதத்தில் குறிப்பிடுகின்றார்.

மேற்குறிப்பிட்ட பாதிரியார் கோவாவிற்கு திரும்பிய பின் போர்த்துக்கல் நாட்டு மன்னனுக்கு 25.12.1546 இல் எழுதிய கடிதத்தில் தாம் கண்டியிலிருந்து கண்டி மன்னனின் நண்பனான மட்டக்களப்பு மன்னனின் இராச்சியத்துக்கு சென்றதாக தெரிவிக்கின்றார். மட்டக்களப்பு மன்னனின் இராச்சியம் கண்டி மன்னனின் இராச்சியத்துக்கு அருகிலுள்ளதால் மட்டக்களப்பிலிருந்தே தன் பிரயாணத்தைத் தொடங்கியதாகவும் தெரிவிக்கின்றார்.

---

11. மட்டக்களப்பு குகன்குல முற்குகர் வரலாறும் மரபுகளும் - பக்.35 - ஞா.சிவசண்முகம் 2000
12. இலங்கையின் சுருக்க வரலாறு - பக்.246 கலாநிதி.க.குணராசா, கமலா குணராசா - 2008



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் மட்டக்களப்பு மன்னனுக்கு அப்போது வயது எழுபது என்றும் இவருக்கு ஒரு மகன் இருந்ததாகவும் இவ்வேளை மட்டக்களப்பு இராச்சியத்துக்கு தென்பாலுள்ள யால (யாள) இராச்சியம் ஒரு அரசியினால் ஆண்டு வரப்பட்டதென்றும், அவள் தனக்கு சகோதரி முறையானவள் என்றும், அப்போது அங்கு நிலவிய முறைப்படி அவளுக்கு மருமகன் முறையான தனது மகனுக்கு யால இராச்சியம் உரியதென்று மட்டக்களப்பு மன்னன் கூறியதாக 'கொயிம்பரா' பாதிரியார் எழுதுகின்றார்.[13]

கத்தோலிக்க குருவான் கொயிம்பரா பாதிரியார் தனது கடிதத்தில் குறிப்பிடும் மட்டக்களப்பு மன்னன் பற்றி நோக்குமிடத்து அக்காலத்தில் (கி.பி. 1545, 1546கள்) மட்டக்களப்பு பிராந்தியத்தில் ஆட்சி செலுத்தி வன்னியர்களில் முதல்வனாக விளங்கி வந்த பளுகாமம் வன்னியனான எதிர்மன்னசிங்கன் (கி.பி. 1542 - 1586) என்பவனாக இருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகின்றது.

ஆயினும் போர்த்துக்கீச மன்னனுக்கு கொயிம்பரா பாதிரியார் எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ள செய்திகளில் அடங்கியுள்ள சில வாசகங்கள் வாயிலாக இவர் சம்மாந்துறை வன்னிய இராசாவையே மட்டக்களப்பு மன்னன் என்று எழுதியுள்ளார் என்பதை உறுதிசெய்ய முடிகின்றது.

இவர் தனது கடிதத்தில் அவ்வேளை (கி.பி. 1546) மட்டக்களப்பு மன்னனுக்கு வயது எழுபது என்று எழுதியுள்ளார். அக்காலத்தில் கண்டியிலிருந்து ஆட்சி புரிந்து வந்த ஜயவீர பண்டாரனும் (கி.பி 1511 - 1551) எழுபது வயதான சம்மாந்துறை வன்னி இராசாவும் நீண்ட காலமாக ஆட்சி செலுத்தி வந்த நிலையில் நெருங்கிய நண்பர்களாகவும் இருந்து வந்துள்ளனர். சம்மாந்துறை என்ற மட்டக்களப்பு வன்னிப் பிரதேசம் கண்டி மன்னனின் இராச்சியத்துக்கு அருகாமையில் அமைந்துள்ளது.[14]

13. மட்டக்களப்பு பிரதேச சாகித்திய விழாமலர் - 1993 ஆவணி - கட்டுரை 16ம் நூற்றாண்டில் மட்டக்களப்பு - போர்த்துக்கீச ஆவணங்கள், போடி கல்வெட்டு பற்றிய ஒப்பீடு - திரு.டி.சிவராம் அவர்கள்

14. இக்காலத்தில் வாவியின் தென்பிரதேசமே மட்டக்களப்பு எனும் பெயரைப் பெற்றிருந்தது. ஒல்லாந்தர் கோட்டை கட்டுவதற்கு வசதியான ஓரிடத்தைத் தெரிந்து கோட்டை கட்டி கி.பி1682ல் பூர்த்தி செய்தனர். இக்காலம் தொடக்கமே வாவியின் வடபுறம் மட்டக்களப்பு எனும் பெயராயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றையெல்லாம் கொண்டு நோக்குமிடத்து கத்தோலிக்க குருவான கொயிம்பரா பாதிரியார் தனது கடிதத்தில் குறிப்பிடும் மட்டக்களப்பு மன்னன் சம்மாந்துறை வன்னிராசா என்பதும் கண்டியிலிருந்து சம்மாந்துறையை வந்தடைந்த பாதிரியார் வன்னி இராசாவையும் சந்தித்து உரையாடிப் பின்னர் அக்காலத்தில் பிரபல்யம் பெற்றிருந்த மட்டக்களப்பு துறைகளிலொன்றான கல்முனைத்துறை (கண்டுமுனை) யூடாகத் தனது பிரயாணத்தைத் தொடர்ந்துள்ளார் என்பதையும் அறியலாம்.

## கி.பி.1500 - 1550 வரை அக்கரைப்பற்று

பதினாறாம் நூற்றாண்டின் முற்பகுதியான இக்கால கட்டத்தில் (1500 - 1550) கண்டியிலிருந்து ஆட்சி புரிந்து வந்த ஜயவீர பண்டாரனுக்கும் (1511 -1551) சம்மாந்துறை வன்னியனுக்குமிடையில் நெருக்கமான நட்பு நிலவியிருந்த வேளை சிங்காரபுரி வன்னிக்கும் சம்மாந்துறை வன்னிக்குமிடையில் மிக நெருங்கிய சமூக, சமய கலாசார உறவுகள் நிலவி வந்தன. இக்காலத்தில் அக்கரைப்பற்று உள்ளிட்ட சிங்காரபுரி வன்னிப் பிரதேசம் சமூக, சமய, பொருளாதார கலாசார துறைகளில் வளர்ச்சி கண்டு வந்தது.

இக்காலத்தில் சம்மாந்துறை இராஜதானியிலிருந்து ஆட்சி செலுத்தி வந்த வன்னி இராசாவும் காரைதீவு தொடக்கம் தெற்கே சங்கமன்கண்டி வரையுள்ள பிரதேசத்தை ஆட்சி புரிந்து வந்த சிங்காரபுரி வன்னிராசாவும் மிக நெருக்கமான நண்பர்களாகவிருந்து வந்ததுடன் அரசியலிலும் ஒன்றிணைந்து செயற்பட்டு வந்தனர். காரைதீவு, நிந்தவூர், பாலமுனை, மீனோடைக்கட்டு காளியோடைகிராமம், அட்டாளைச்சேனை (வடக்கு), கருங் கொடித்தீவு, கோளாவில், பனங்காடு, தம்பட்டை, தம்பிலுவில் திருக்கோவில் ஆகிய இடங்களில் தமிழர் நாகரீகம் செழித்திருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்காரபுரி வன்னியர்களின் பாசறை மற்றும் படையணிகள், செங்கண்படை என்ற இடத்தில் நிறுவப் பட்டிருந்தன.[15] இதே போன்று வழக்குகளை விசாரணை செய்வதற்கான நீதிமன்றம் ஒன்று சங்கிருத்தார் காடு என்ற இடத்தில் நிலவியிருந்தது. மேலும் காளியோடை கிராமத்தில் காளி கோயிலுக்கருகாய் சென்ற ஓடை காளி ஓடை என அக்காலத்தில் பெயர் பெற்றிருந்தது.[16]

இக்காலத்தில் சிங்காரபுரியிலிருந்து அதிகாரம் செலுத்தி வந்த வன்னியர்கள் சைவாலயங்களின் வளர்ச்சியிலும் கவனம் செலுத்தி வந்தனர். சிங்காரபுரி மீனாட்சியம்மன் ஆலயம், மாரியம்மன் ஆலயம், காளியோடை கிராமம் காளிகோயில் என்பன சிறப்புடன் விளங்கியிருந்ததுடன் வன்னியரின் ஆதரவையும் பெற்றிருந்தன. இவ்வேளை சிங்காரபுரியில் ஆட்சி செலுத்தி வந்த வன்னியன் ஒரு சமயம் பனங்காடு கிராமத்துக்கு வருகை தந்தான்.

இவ்வேளை இதற்கு முந்திய காலத்தில் (கி.பி.1470, 71கள்) கருங்கொடித்தீவு, தம்பிலுவில், திருக்கோவில், கிராமங்களில் வர்த்தக நடவடிக்கைளுக்காக வந்து பனங்காடு கிராமத்தில் தங்கிச் செல்லும் செட்டிகளால் தோற்றுவிக்கப்பட்டு திறந்த வெளிக் கோயிலாக நிலவி வந்த ஐயனார் ஆலயத்தைக் கண்டு உள்ளம் பூரித்தான். இதனைத் தொடர்ந்து இவ்வாலயத்துக்கு மானியமாக நிலங்களை வழங்கினான். இவ்வாறு சிங்காரபுரி வன்னியனால் வழங்கப்பட்ட நிலத்தில் அடங்கியிருந்த நெல்வயல், குளம் என்பன முறையே ஐயனார்வெளி, ஐயனார் குளம் என வழங்கி வந்தன.[17]

---

15. இந்த இடமே மருவி பிற்காலத்தில் செங்கப்படையென அழைக்கப்பட்டு வருகின்றது.
16. தற்போது அது மருவி களியோடை என அழைக்கப்பட்டு வருகின்றது.
17. பனங்காடும் பழைய ஐயனார் வழிபாடும் - 'கட்டுரை' நா.நவநாயகமூர்த்தி ஆலையடிவேம்பு பிரதேச கலாசார விழாமலர் - 1999/2000



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்டி அரசும் மட்டக்களப்பும் (கி.பி.1550 - 1600 வரை)

ஜயவீர பண்டாரனுக்குப் பின் இவனது மகனான கரலியட்ட பண்டாரன் (கி.பி.1551 - 1581) என்பவன் கண்டி மன்னனானான். இவனது காலத்தில் கண்டிக்கும் மட்டக்களப்புக்குமிடையில் நல்லுறவுகள் இருந்து வந்தன. கரலியட்ட பண்டாரன் கண்டியை ஆட்சி புரிந்து வந்த காலத்தில் கி.பி.1582ல் சீதாவாக்கை மன்னன் முதலாம் இராச்சிங்கன் கண்டியை கைப்பற்றித் தன் நாட்டுடன் சேர்த்தான். தனது இராச்சியத்தைப் பாதுகாத்துத் தருமாறு போர்த்துக் கேயரை வேண்டிய கரலியட்ட பண்டாரன் கிறிஸ்தவ மதத்தைத் தழுவிக் கொண்டான்.

அத்துடன் தனது மகள் குசுமாதேவி மருமகன் யமசிங்க பண்டாரன் ஆகியோருடன் போர்த்துகேயரிடம் அடைக்கலம் புகுந்தான். முதலாம் இராசசிங்கனால் மலைநாட்டை நன்கு நிர்வகிக்க முடியவில்லை. மலை நாட்டுத் தலைவர்கள் அவனுக் கெதிராகக் கலகம் செய்தனர். இப்புரட்சிக்குத் தலைமை தாங்கிய வீரசுந்தர பண்டாரன் என்பவனை இராசசிங்கன் கொலை செய்தான். இவனது மகனான கோணப்பு பண்டாரன் இராசசிங்கனைப் பழிவாங்கும் நோக்கோடு போர்த்துக்கேயருடன் சேர்ந்து கொண்டான்.

கி.பி.1591 கோணப்பு பண்டாரனின் தலைமையில் வந்த படை இராசசிங்கனுடன் 'கனேதன்ன' என்ற இடத்தில் மோதி வெற்றி பெற்றது. கண்டி மன்னனாக கி.பி. 1592ல் யமசிங்க பண்டாரன் முடி சூடிக் கொண்டான். இதே ஆண்டில் (கி.பி. 1592ல்) யமசிங்க பண்டாரன் திடீரென மரணமடைந்தான். அதன் பின்னர் கோணப்பு பண்டாரன் என்பவன் 'விமல தர்ம சூரியன்' என்ற பட்டப் பெயருடன் கண்டி மன்னனானான்.[18]

---

18. இலங்கையின் சுருக்க வரலாறு - பக்.247, கலாநிதி.க.குணராசா, கமலா குணராசா - 2008



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விமலதர்ம சூரியன் என்ற பெயரில் கண்டியரசின் ஆட்சியாளனாகிய கோணப்புபண்டாரனை மக்கள் பெருமளவு விரும்பவில்லை. இந்த அதிருப்தியை நன்கு பயன்படுத்திக் கொண்ட போர்த்துகேயர் கரலியட்ட பண்டாரனின் மகளான தொனாகதரினாவை கண்டிக்கு அழைத்துச் சென்று பட்டத்து அரசியாக்கினர். இந்நிகழ்வு கி.பி.1594ல் டீ சூசா என்ற போர்த்துகீச தளபதி தலைமையில் நடந்தது.[19]

இவ்வாறு கண்டி அரசானது கி.பி.1594ல் முதலாம் விமலதர்மசூரியன் (கி.பி 1594 - 1604) காலத்தில் வலுவான இராச்சியமாக மாறி நிலவி வந்த காலத்தில் கி.பி. 1598 ம் ஆண்டுக்குப் பிற்பட்ட காலத்திலேயே மட்டக்களப்பு வன்னியச் சிற்றரசுகள் கண்டி மன்னர்களின் மேலாதிக்கத்தை ஏற்கும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். கி.பி. 1602 - 1603ம் ஆண்டுகளில் விமலதர்மசூரியன் மட்டக்களப்பு பிராந்தியத்துக்கு இரு தடவைகள் விஜயம் செய்துள்ளான்.

## எதிர்மன்ன சிங்கன்

கி.பி. பதினாறாம் நூற்றாண்டின் பிற்பகுதியான இக்கால கட்டத்தில் (கி.பி. 1550 - 1600) மட்டக்களப்பில் ஆட்சி செலுத்தி வந்த வன்னிய இராசாக்களில் எதிர்மன்னசிங்கன் (கி.பி. 1542 - 1586) முதல்வனாகக் கருதப்படுகின்றான். பழுகாமத்திலிருந்து ஆட்சி புரிந்து வந்த இவனது செல்வாக்கு மட்டக்களப்பு முழுவதிலும் பரந்திருந்தது. பாணகை, சம்மாந்துறை, சிங்காரபுரி (அட்டப்பள்ளம்) ஏறாவூர் ஆகிய இடங்களிலிருந்து ஆட்சி புரிந்து வந்த வன்னியர்கள் இவனது சமூக, சமய, கலாசார, அரசியல் வழிகாட்டுதல்களை ஏற்றிருந்தனர்.

---

19. இலங்கை வரலாறு பாகம் II - பக்.109, பேராசிரியர்.செ.கிருஷ்ணராசா-2005



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவனது காலத்தில் மட்டக்களப்பில் பல் முக்கிய சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. எதிர்மன்ன சிங்கனது காலத்திலேயே பாண்டிருப்பு திரௌபதை அம்மன் ஆலயம் தோன்றியது. இவ்வாலயத் தோற்றத்தில் இவன் வகித்த பெரும் பங்கினை 'மட்டக்களப்பு மான்மியம் என்ற நூல் (பக் 57 - 59 ) விபரிக்கின்றது. இக்காலத்தில் (கி.பி. 1550 - 1598) மட்டக்களப்பை ஆட்சி புரிந்து வந்த வன்னிய இராசாக்கள் கோட்டை மன்னருக்கோ அன்றி கண்டி மன்னருக்கோ திறை செலுத்தாத சுதந்திரமுள்ள சிற்றறரசர்களாகவே ஆட்சி புரிந்து வந்தனர்.[20]

எதிர்மன்னசிங்கனது ஆட்சிக்காலத்தில் கி.பி.1545 1546 களில் தென்னிந்தியச் செட்டிகளுடன் தென்னிந்திய முஸ்லீம்களும் இணைந்து மட்டக்களப்பு உட்பிரதேச வர்த்தகத்தில் ஈடுபடத் தொடங்கினர். இதற்கு முந்திய காலத்தில் தென்னிந்திய தமிழ்ச் செட்டிகளே மட்டக்களப்புத் துறைகளுடாகவும், வாவியூடாக உட்பிரதேசங்களிலும் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தனர். போர்த்துக்கீசர் இலங்கைக்கு வந்த காலத்தில் கி.பி. 1505ல் இலங்கையின் கரையோரத் துறைமுகங்களில் தென்னிந்திய முஸ்லீம்கள் வாணிபம் புரிந்து வந்த போதும் மட்டக்களப்பு உட்பிரதேச வாணிபம் தென்னிந்திய தமிழ்ச் செட்டிகள் வசமே இருந்து வந்தது.

கி.பி. 1505ல் போர்த்துகீசர் இலங்கையில் காலடி எடுத்து வைத்த காலத்தில் இலங்கையின் கரையோரத் துறைமுகங்களில் வர்த்தகம் புரிந்து வந்தவர்கள் தென்னிந்திய முஸ்லிம்கள் என்பது குறிப்பிடத்தக்கது. 'பாபோசா' (கி.பி. 1500 - 1516) என்ற போர்த்துக்கீச அராபிய யாத்திரிகன் குறிப்பின் படி இவர்கள் தென்னிந்தியாவில் குடியேறிய அராபியர்களுக்கும் சுதேச மங்கையருக்கும் பிறந்த சந்ததியினர் என அறிய முடிகின்றது.[21]

---

20. ஈழத்தமிழர் வரலாற்று சுவடுகள் - பக்.98 நா.நவநாயகமூர்த்தி -2002



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதே காலகட்டத்தில் (கி.பி. 1516 - 1580) தென்னிந்திய முஸ்லிம்களும் தமிழ் நாட்டுச் செட்டிகளும் சேர்ந்தே தென் கிழக்காசிய வாணிகத்தில் ஈடுபட்டனர் எனவும் மலாக்காவில் தங்கிய பெருவணிகர் கூட்டத்தில் இந்துக்களான செட்டிகளும் முஸ்லிம்களும் இருந்தனர். என பாபோசா குறிப்பிடுகின்றார்.[22]

இதே வேளை இக்காலத்தில் தெற்காசிய நாடுகளின் துறைகளில் அராபியரும், இந்துக்களும், சீனரும் அப்பிரதேசத்துச் சந்தைகளில் வெளிப்படையாகவே போட்டியிடுவதைத் தான் கண்டதாக அப்போன்கோ அல்புகூர்கே குறிப்பிடுகின்றார்.[23]

மட்டக்களப்பு வாவியூடாக போக்குவரத்து வாணிபம் என்பன இடம் பெற்று வந்த இக்காலத்தில் சம்மாந்துறை, கிட்டங்கி ஆகிய இடங்களில் வர்த்தக மையங்கள் நிலவியிருந்தன. இவ்வேளை நற்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்பு, கிட்டங்கி ஆகிய இடங்களை உள்ளடக்கியிருந்த பெரும் பகுதி வர்த்தக மையமாக விளங்கியிருந்தது. இங்கு தென்னிந்திய வர்த்தகர்கள், குறிப்பாக செட்டிகள் என்ற நகரத்தார் சமூகத்தினரே தங்கியிருந்து வர்த்தகம் புரிந்து வந்தனர்.

இந்நிலையிலேயே கி.பி. பதினாறாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் கி.பி.1545, 46 களில் கிட்டங்கி நற்பிட்டிமுனையில் அமைந்திருந்த வர்த்தக மையப்பகுதியில் தென்னிந்திய முஸ்லீம்களும், செட்டிகளுடன் சேர்ந்து வர்த்தக நடவடிக்கையில் ஈடுபடத் தொடங்கினர். இவர்களில் பட்டாணி சிக்கந்தர், சுல்தான் ஆகிய வம்சத்தினர் அடங்குவர். இவர்கள் தாய் வழியில் தமிழர்களாவர். ஆதலால் தமிழ் மொழியை தாய் மொழியாகக் கொண்டிருந்தனர்.

---

21. புதுமுறைச் சரித்திரம் II - பக்.70 ஆ.சபாரெத்தினம் - 1965
22. புதுமுறைச் சரித்திரம் II -பக்.52 ஆ.சபாரெத்தினம் -1968
23. ஆசியாவும் மேனாட்டு ஆதிக்கமும் - பக்.15 K.M.பணிக்கர் -1969



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்குப் பிற்பட்ட காலத்தில் (கி.பி. 1550க்குபின்) ஒரு சமயம் மட்டக்களப்பில் வாழ்ந்திருந்த பூர்வ குடியினரில் ஒரு பிரிவினரான திமிலர் என்போருக்கும் வன்னிச் சிற்றரசர்களுக்குமிடையில் (பழுகாமம், சம்மாந்துறை, சிங்காரபுரி) ஏற்பட்ட பிணக்கின்போது பட்டாணியர் என்ற முஸ்லிம் வம்சத்தினர் உதவி புரிந்தனர். இவர்களின் முன்னோர் போர் வீரர்களாவர். ஆதலால் தங்கள் வாணிப நடவடிக்கைகளின்போது பாதுகாப்புக் கருதி எவ்வேளையும் ஆயுதங்களைக் கைவசம் வைத்திருந்தனர்.

இவர்கள் செய்த உதவிக்குப் பிரதியுபகாரமாக வன்னியர் பட்டாணி முஸ்லீம் வர்த்தகர் சிலருக்குத் தமிழ்ப் பெண்களைத் திருமணம் செய்து கொடுத்ததுடன் இப்பெண்களின் மரபுரிமை காரணமாக சைவாலயப் பூசை வழிபாடுகளிலும் இவர்களுக்கு இடம் அளிக்கப்பட்டது. பட்டாணிமடை, தேர்வடம் பிடித்தல் போன்ற உரிமைகள் இவர்களுக்கு இருந்து வந்தன.

இதனைத் தொடர்ந்து இக்காலத்தில் செட்டிகளுடன் இணைந்து வாணிபம் மேற்கொண்டிருந்த தமிழகத்து வர்த்தகர் சிலரும் (சுல்தான், சிக்கந்தர் ஆகிய வம்சத்தினர்) தமிழ் மங்கையரைத் திருமணம் புரிந்து வாழ்ந்து வரலாயினர். இவர்கள் அரேபிய முஸ்லீம் வணிகருக்கும் தமிழகத்து பெண்களுக்கும் பிறந்தவர்களின் சந்ததியினர் ஆவர்.[24]

பட்டாணியர்

தமிழக ஈழ வரலாற்றில் பட்டாணியர் என்று குறிக்கப்படுவோர் கி.பி பதினாலாம் நூற்றாண்டில் தமிழகம் மீது 'மாலிக்கபூர்' மேற்கொண்ட படையெடுப்பின் போது ( டில்லி அலாவுதீன் கில்ஜி காலம்) வந்த ஆப்கானிஸ்தான். நாட்டுப் போர்வீரர்களாவர். இவர்கள் மதுரையில் முஸ்லீம் அரசு நிலைத்திருந்த காலத்தில் தமிழ்ப் பெண்களைத் திருமணம் செய்தனர்.

---

24. திருக்கோவில் பிரதேச இலக்கிய வரலாறு - பக்.100 நா.நவநாயகமூர்த்தி -2014

* தாய்வழியில் தமிழர்களான பட்டாணி, சிக்கந்தர், சுல்தான் வம்சத்தினரான தென்னிந்திய வர்த்தகர்களுக்கும் முக்குவ தமிழ்ப் பெண்களுக்கும் பிறந்த முஸ்லிம்களின் சந்ததியினர் ஏறாவூர், காத்தான்குடி, மருதமுனை,நற்பிட்டிமுனை, சம்மாந்துறை மற்றும் நிந்தவூர் ஆகிய இடங்களில் வாழ்ந்து வருகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களின் சந்ததியினர் கி.பி. பதினாறாம், பதினேழாம் நூற்றாண்டுகளில் வர்த்தகர்களாகவும், மீன்பிடித்தொழிலாளர்களாகவும் காயல் பட்டினம், மதுரை, இராமேஸ்வரம் போன்ற இடங்களில் பட்டாணியர் என்ற பெயருடன் வாழ்ந்திருந்ததை அறிய முடிகின்றது. [25]

## அக்கரைப்பற்று பிரதேசம்

இக்காலத்தில் (கிபி1550-1600) சிங்காரபுரி வன்னியின் தென்பிரதேசமாகவிருந்து வந்த அக்கரைப்பற்று சமூக, சமய அரசியல் நிலை பற்றிக் குறிப்பிடுமிடத்து தமிழ்ச் சைவர்கள் தனிப் பெரும்பான்மையினராக வாழ்ந்திருந்த அக்கரைப்பற்று பிரதேசம் சிங்காரபுரி வன்னியரின் ஆட்சியின்கீழ் சிறப்புடன் விளங்கியிருந்ததை அறிய முடிகின்றது. சைவமும் தமிழும் இப்பிரதேசத்தில் செழித்திருந்தன.

மட்டக்களப்பில் (அம்பாரை உள்ளிட்ட) தென்னிந்தியப் பண்பாடு நிலைத்திருந்த அக்காலத்தில் அக்கரைப்பற்று உள்ளிட்ட சிங்காரபுரி வன்னிப் பிரதேசத்தில் அம்மன் வழிபாடு மலர்ச்சி பெற்றிருந்தது. காளி, மாரி, மீனாட்சி, கண்ணகி, பேச்சி (சரஸ்வதி) என பல வழிபாட்டு அம்சங்களாக அம்மன் வழிபாடு நிலவியிருந்தது. சைவப்பற்றுக் கொண்டவர்களான வன்னி இராசாக்கள் அம்மன் கோயில்களின் வளர்ச்சியில் ஆர்வம் காட்டி வந்ததுடன் சைவாலயங்களையும் ஆதரித்து வந்தனர்.

சிங்காரபுரி வன்னியர்களின் நேரடிப் பராமரிப்பின் கீழ் மீனாட்சி அம்மன் ஆலயம் சிறப்புடன் விளங்கி வந்ததுடன் சிங்காரபுரி மாரியம்மன் ஆலயம், நிந்தவூர் சிவாலயம் என்பன வன்னியரின் ஆதரவுடன் செழிப்புடன் மிளிர்ந்து வந்தன.

---

25. கி.பி 17ம் நூற்றாண்டில் (கி.பி 1636,37களில்) இராமேஸ்வரம், அக்காமடம், தங்கச்சிமடம் பகுதிகளிலிருந்து தமிழ்க்குடியினர் பலர் இடம்பெயர்ந்தவேளை தமிழ்க்குடியினருடன் பட்டாணி முஸ்லிம் குடும்பங்களும் இடம்பெயர்ந்து மன்னாரை வந்தடைந்து பின்னர் கற்பிட்டி, புத்தளம், முந்தல் ஆகிய இடங்களிலிருந்து உடப்பில் குடியேறினர். இவர்களின் சந்ததியினர் உடப்பில் தமிழ் மக்களுடன் பட்டாணிபுரத்தார் என்ற பெயருடன் சிறுதொகையினராக வாழ்ந்து வருகின்றனர். (நா.நவநாயகமூர்த்தி - 2014 பக்.100)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காளியோடை காளியம்மன் ஆலயம், காரைதீவு கண்ணகை அம்மன் ஆலயம் என்பனவும் பிரபல்யம் பெற்றிருந்தன. இதேவேளை அக்கரைப்பற்று பிரதேசத்தில் அமைந்திருந்த அம்மன் ஆலயங்கள், சிவாலயங்கள் என்பவற்றின் வளர்ச்சியிலும் சிங்காரபுரி வன்னியர்கள் ஆர்வம் கொண்டிருந்தனர்.

இக்காலத்தில் சம்மாந்துறை வன்னிக்கும், தெற்கே சங்கமன் கண்டி தொடக்கம் வடக்கே காளி ஓடை வரை பரந்திருந்த அக்கரைப்பற்று வன்னிப்பிரதேசத்துக்குமிடையில் நெருங்கிய சமூக உறவுகள் இருந்து வந்தன. சம்மாந்துறையிலிருந்து தமிழ்க் குடியினர் இப்பிரதேசத்துக்கு இடம்பெயர்ந்து வந்து குடியேறி வந்தனர். இதேவேளை இதற்கு முந்திய காலங்களிலும் சம்மாந்துறையிலிருந்து அவ்வப்போது சில குடியினர் வந்து இங்கு வாழ்ந்திருந்தனர். குறிப்பாக இவர்கள் கருங்கொடித்தீவு, கோளாவில் ஆகிய இடங்களில் குடியேறி வாழ்ந்திருந்தனர்.

அக்கரைப்பற்று பிரதேசத்தில் சிவ வழிபாடும் தாய்த் தெய்வ வழிபாடான அம்மன் வழிபாடும் சிறப்புடன் விளங்கியிருந்த அக்காலத்தில் ஆலயங்களில் பரிவாரத் தெய்வ வழிபாடுகளில் முதன்மையானதாக கணபதி வழிபாடு என்ற பிள்ளையார் வழிபாடு நிலவி வந்தது.[26] கருங்கொடித்தீவு, கோளாவில், தம்பிலுவில் ஆகிய இடங்களில் நிலவியிருந்த சிவ வழிபாட்டு இடங்கள் (ஆலயங்கள்) சங்கமன் கண்டி மலை சிவாலயம், திருக்கோவில் முருகன் ஆலய வளாக சிவாலயம் என்பன சிறப்புடன் விளங்கியிருந்தன. [27]

---

26. திருச்செங்கோட்டான் குடியினரான பரஞ்சோதியார் முதலாம் நரசிம்மபல்லவரின் (கி.பி 630-668) படைத்தலைவராகச் சென்று 2ம் புலிகேசியை கி.பி 642ல் வெற்றிகொண்டு மீண்டபொழுது விநாயகர் படிமங்களை கொண்டு வந்து தமிழ் நாட்டில் எழுந்தருளச் செய்தார் என்றும் அக்காலம் முதலே விநாயகர் வழிபாடு தமிழ்நாட்டில் வேரூன்றியதென்றும் அறியமுடிகின்றது (இலக்கிய ஆராய்ச்சியும் கல்வெட்டுக்களும் - பக்.91-100 தி.வை.சதாசிவபண்டாரத்தார் -1961)
இதே வேளை மட்டக்களப்பில் கி.பி 9ம் நூற்றாண்டிலேயே பிள்ளையார்வழிபாடு அறிமுகமானது என்றும் (வீரமுனைப் பிள்ளையார்) இதனைத் தொடர்ந்து கி.பி 10ம் 11ம் நூற்றாண்டுகளில் சோழரது காலத்திலும் பிற்பட்ட பொலநறுவை காலத்திலும் ஆலயங்களில் பரிவாரத் தெய்வங்களில் ஒன்றாக பிரபல்யம் பெறத்தொடங்கியது என்பதையும் வரலாற்றாய்வுகள் உணர்த்துகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்தி வழிபாட்டுத் தலங்களாக அக்கரைப்பற்று பிரசேத்தில் பட்டிநகர் கண்ணகி ஆலயம், தம்பிலுவில் கண்ணகி ஆலயம் என்பன நிலவி வந்ததுடன் நம்பிக்கையே பக்தியாகும் என்ற அடிப்படையில் மாரி, காளி, பேச்சி, கடனாட்சி (கருங்கொடித்தீவு கோளாவில்) ஆகிய சக்தி வழிபாட்டு அம்சங்களை பொங்கல் மடை பூசை வழிபாடுகள் மூலமாக வழிபட்டும் வந்தனர். மேலும் அக்காலத்தில் அக்கரைப்பற்று மக்களின் மாரி அம்மன் வழிபாட்டுத் தலமாக சிங்காரபுரி மாரியம்மன் ஆலயமும், காளி அம்மன் வழிபாட்டு இடமாக காளியோடை காளிகோயிலும் இருந்து வந்தன.

அக்காலத்தில் மட்டக்களப்பு முழுவதிலும் பிரபல்யம் பெற்று விளங்கி வந்த சிங்காரபுரி மீனாட்சி அம்மன் மீது அக்கரைப்பற்று பிரதேசத்தில் வாழ்ந்திருந்த மக்கள் அளவற்ற நம்பிக்கையும் பக்தியும் கொண்டிருந்ததுடன் இவ்வாலயத்தில் இடம்பெற்று வந்த பூசை வழிபாடுகளில் கலந்து கொண்டு அம்மனை வழிபட்டு வந்தனர். இதே போன்று இப்பிரதேச மக்களின் பிரபல்யம் பெற்ற முருக வழிபாட்டு மையமாக திருக்கோவில் சித்திரவேலாயுதர் ஆலயம் விளங்கி வந்தது.

---

27. அக்காலத்தில் கருங்கொடித்தீவு, கோளாவில், தம்விலுவில் ஆகிய இடங்களில் நிலவியிருந்த சிவவழிபாட்டின் (ஆலயங்கள்) தொடர்ச்சியே இன்று சிறப்புடன் மிளிர்ந்து வரும் நாம் காணும் கருங்கொடித்தீவு (அக்கரைப்பற்று) பிள்ளையார் ஆலயம், கோளாவில் பிள்ளையார் ஆலயம், தம்பிலுவில் சித்திவிநாயகர் ஆலயம் என்பவனவாகும். பண்டைய சங்கமன்கண்டிமலை சிவாலயத்தின் தொடர்ச்சியே சங்கமன்கண்டி காட்டுப்பிள்ளையார் ஆலயமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாலயத்தின் எதிரே பிரபல்யம் பெற்ற கந்தப் பாணந்துறை என்ற திருக்கோவில் துறைமுகம் அமைந்திருந்தது. இத்துறையூடாக தென்னிந்தியாவுடனும் வட இலங்கையுடனும் போக்குவரத்து வாணிபம் ஆகியன இடம்பெற்று வந்ததுடன் சமய, கலை, கலாசார இலக்கிய உறவுகளும் நிலவி வந்தன. ஒலுவில் சின்னமுகத்துவாரம் உமிரி ஆகிய துறைகளும் அக்காலத்தில் நிலவியிருந்தன. கோளாவில், தம்பிலுவில், பனங்காடு, கருங்கொடித்தீவு, தம்பட்டை ஆகிய கிராமங்களில் புலவர்கள், கவிஞர்கள் என்போர் வாழ்ந்திருந்ததுடன் அக்கரைப்பற்று பிரதேசத்தில் இலக்கிய பாரம்பரியமொன்றும் இக்காலத்தில் நிலைத்திருந்தது.

## வாழ்வியல்

கி.பி பதின்மூன்றாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து மட்டக்களப்பில் நிலவி வந்த அரசியல் சூழல், தென்னிந்திய தொடர்பு ஆகியனவற்றின் பின்னணியில் இப்பிராந்தியத்தில் தென்னிந்தியப் பண்பாடு அறிமுகமாகி நிலவி வந்த இக்காலத்தில் அக்கரைப்பற்று பிரதேசத்தில் வாழ்ந்திருந்த மக்களது வாழ்வியல் பற்றி சுருக்கமாக நோக்குவோம்.

அக்காலத்தில் இப்பிரதேசத்தின் பிரதான தொழிலாக விவசாயம் இருந்து வந்தது. நெல்லோடு சிறு தானியப் பொருட்கள் காய்கறிகள், பழவகைகள் என்பன செய்கை பண்ணப்பட்டு வந்தன. விவசாயத்துக்காகவும் வீட்டுத் தேவைகளுக்கும் (பால்,தயிர்,நெய்) மாடுகள் வளர்க்கப்பட்டன. உழுதல், சேறடித்தல், சூடுமிதித்தல் என்பனவற்றிற்கு எருமைகள், எருதுகள் உதவின.

இறைச்சிக்காக ஆடு, கோழிகள் வளர்க்கப்பட்டன. குளங்கள், ஆறுகள், களப்புக்கள் (சதுப்பேரிகள்) என்பனவற்றில் சிறிய தோணிகள், கட்டு மரங்கள் ஆகியனவற்றைப் பயன்படுத்தி மீன்பிடித்தல் நடைபெற்றது. மக்கள் தங்கள் விவசாயத்திற்கும் வீட்டுப்பாவனைகளுக்கும் தேவையான கருவிகளைச் செய்து கொண்டனர். தச்சுத் தொழில், இரும்புத் தொழில் (கத்தி. கோடரி கலப்பை) களிமண்வேலை (சட்டி, பானை) ஆகியன நிலவியிருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரம், கம்பு என்பன கொண்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த மக்கள் குடியிருப்புக்கள் பெரும்பாலும் மண் (களி) சுவர்களைக் கொண்டிருந்ததுடன் ஓலைக் கிடுகுகளாலும், வைக்கோல்களைக் கொண்டும் வேயப்பட்ட சுவர்களைக் கொண்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் இக்காலத்தில் கோயில் குருக்கள், சமய குருமார் தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்ந்த சான்றோர் என்போருக்கு மக்கள் மிக்க மரியாதை செலுத்தினர். அத்துடன் பிரதான சடங்குகளில் முக்கியத்துவம் வழங்கப்பட்டது. திண்ணைப் பள்ளிக் கூடங்கள் இயங்கின.

சகுனம் பார்த்தல், மாந்திரீகம் என்பன நிலவியிருந்தன. குடும்ப வாழ்க்கை முறை பல்வேறு சடங்குகளையும் கொண்டிருந்தது.[28] இத்தகையதொரு செழுமை மிக்க சமூகச் சூழலில் இதற்கு முந்திய காலத்தில் இங்கு தோற்றம் பெற்று நிலவி வந்த இலக்கியப் பாரம்பரியமானது தொடர்ந்து இக்காலகட்டத்திலும் (கிபி1500-1600) நிலவி வந்தது. கோளாவில் கருங்கொடித்தீவு, பனங்காடு, தம்பட்டை, தம்பிலுவில் ஆகிய கிராமங்களில் புலவர், கவிஞர் என்போர் வாழ்ந்திருந்தனர்.

ஆயினும் அக்கரைப்பற்று பிரதேசத்தில் இன்று காணக் கிடைக்கும் இலக்கியங்களில் காலத்தால் முற்பட்டதாக 'கண்ணகி வழக்குரை' இலக்கியமே விளங்குகின்றது. அத்துடன் 'கண்ணகையம்மன் பத்தாதி' சிற்றிலக்கியமும் உள்ளதாக அறிய முடிகின்றது.

இதேவேளை இதற்கு முந்திய காலத்திலும் (கிபி1300 - 1500) இதற்கு பிற்பட்டதான இக்காலகட்டத்திலும் (கிபி1500 - 1600) உருவான இப்பிரதேச ஏனைய இலக்கியங்கள் எதுவும் காணக்கிடைக்கவில்லை. இதற்குப் பிற்பட்ட காலத்தில் (கிபி 1609, 1622, 23 களில்) போர்த்துக்கேயர் இப்பிரதேசத்தில் மேற்கொண்ட சமய விரோத நடவடிக்கைகள், ஆலய அழிப்புக்கள் என்பன இதற்குக் காரணிகளாயின என்பது வரலாற்று உண்மையாகும்.

28. திருக்கோவில் பிரதேச இலக்கிய வரலாறு - பக்.41 நா.நவநாயகமூர்த்தி - 2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டைய மட்டக்களப்பு வரலாற்றில் அக்கரைப்பற்றும் தமிழரும் (ஆய்வு)

## (கி.பி. 1600 - கி.பி. 1946ம் ஆண்டு வரை)

## பாகம் II



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அக்கரைப்பற்று தோற்றப் பின்னணி

அக்கரைப்பற்று என்ற இடப்பெயர் பற்றி நோக்குமிடத்து இப்பெயரானது நானூறு வருடங்களுக்கு மேல் பழமை வாய்ந்தது என்பதை வரலாற்றாய்வுகள் மூலமாக அறிய முடிகின்றது. அக்கரைப்பற்று என்ற பெயர் தோற்றம் பெற்று சுமார் இருநூறு வருடங்கள் ஒரு சிற்றாட்சி பிரதேசத்தின் பெயராகவும், இதனைத் தொடர்ந்து ஒரு வரையறுக்கக்கப்பட்ட மாகாண நிர்வாகப் பிரதேசத்தின் பெயராகவும் விளங்கி வந்துள்ளது.

இதேவேளை, இக்காலகட்டத்தின் இறுதிக்காலப் பகுதியில் இந்நிர்வாக மையம் அமைந்திருந்த இடத்தின் இடை நுழைவுப் பெயராகவும் விளங்கி வந்து பிற்காலத்தில் அவ்விடத்தின் பூர்வீகப் பெயரைத் தன்னுள் முற்றுமுழுதாய் உள்வாங்கிய நிலையில், இன்றைய காலத்தில் அவ்விடத்தின் (ஊர்) இடப்பெயராக 'அக்கரைப்பற்று' என்ற பெயர் பிரபல்யம் பெற்று விளங்கி வருகின்றது.[1]

அக்கரைப்பற்று என்ற இடப்பெயர் தோற்றம் பற்றிக் கடந்த காலங்களில் பல்வேறு கதைகள் நிலவி வந்துள்ளன. இதனை சில நூல்கள் வாயிலாக அறியமுடிகின்றது. காளியோடை ஆற்றில் தோணிப் போக்குவரத்துச் செய்த காலத்தில் ஆற்றுக்கப்பால் நின்ற ஒருவர் அக்கரையில் எத்தனை ஊர் என்று கேட்டதாகவும், அதற்குப் பதில் சொன்னவர் 'பத்து ஊர்' என்று சொன்னதாகவும் ஒரு கதை உண்டு.

---

1. இதேவேளை, கருங்கொடித்தீவு என்ற என்ற இவ்வூரின் பூர்வீகப் பெயரானது இலக்கியங்களிலும் வாய்மொழி பாரம்பரியமாகவும் மக்கள் மனங்களில் இன்றும் நிலவி வருவதும் மனங்கொள்ளத்தக்கது.

* போர்த்துகேயர் காலத்தில் காளியோடைக்கு அக்கரையில் அமைந்த பற்று என்ற வன்னிப் பிரிவே அக்கரை + பற்று என்று சேர்ந்து அக்கரைப்பற்றாகத் தோற்றம் பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒலுவில், பாலமுனை, மீனோடைக்கட்டு, அட்டாளைச்சேனை கருங்கொடித்தீவு, கோளாவில், பனங்காடு , தம்பட்டை, தம்பிலுவில் மற்றும் திருக்கோவில் ஆகியவையே அப்பத்து ஊர்களுமாகும். அதனால் 'அக்கரைப் பத்தூர்' என்றாயிற்று. இது கால கழிவில் மருவி அக்கரைப்பற்று என்றாயிற்று.[2]

இக்கதையில் ஓர் உண்மை பொதிந்திருப்பதைக் காணமுடியும். ஏனெனில் அக்கரைப்பற்று என்ற இடப்பெயர் தோற்றம் பெற்ற காலத்தில் இப்பத்து ஊர்களும் நிலவியிருந்தன.

மேலும், இந்த இடங்களில் தமிழ்ச் சைவர்களே தனிப்பெரும்பான்மையினராக வாழ்ந்திருந்தனர். இந்நிலையிலேயே அக்கரைப்பற்று தோற்றம் பெற்றது. இதனை வரலாற்றாய்வுகள் தெளிவுறுத்தும். வரலாற்றாய்வுகள் மூலமாக நோக்குமிடத்து அக்கரைப்பற்று என்பது ஓர் ஆட்சிப்பிரதேசத்தின் பெயராகத் தோற்றம் பெற்று நிலவியிருந்தது. அதாவது ஒரு வன்னிச் சிற்றாட்சிப் பிரதேசத்தின் பெயராக நிலவி வந்தது.

கி.பி.1600ம் ஆண்டளவில் கிழக்கிலங்கையில் இவ்வாறு நிலவி வந்த வன்னிச் சிற்றரசுகள் பற்றி போர்த்துக்கீச வரலாற்றாசிரியரான குவைரஸ் பாதிரியார் குறிப்பிட்டுள்ளார். (இலங்கையின் சுருக்க வரலாறு-எச்.டபிள்யு கொடிறின்றன்) மட்டக்களப்பு பிரதேசத்தில் வன்னியரின் ஆட்சியின் கீழ் ஐந்து சிற்றரசுகள் இருந்ததாக கலாநிதி சி.பத்மநாதன் குறிப்பிடுகின்றார்.[3]

கி.பி பதின்மூன்றாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் தமிழ் மன்னனான மாகோன்(1215-1251) தனது தளபதிகளுக்கு வன்னியர் என்ற பட்டம் வழங்கித் தோற்றுவிக்கப்பட்ட வன்னிச் சிற்றரசுகள் கி.பி.1604ம் ஆண்டு வரை சுதந்திரமுள்ள சிற்றரசுகளாக மட்டக்களப்பு பிராந்தியத்தில்(அம்பாரை உள்ளிட்ட) நிலவியிருந்தன. இது பற்றி முந்திய அத்தியாயங்களில் விளக்கமாக குறிப்பிடப்பட்டுள்ளது.

---

2. அக்கரைப்பற்று வரலாறு - பக்.42 ஏயாரெம் சலீம் - 1990

3. இலங்கையில் வன்னியர் - பக்.88 கொழும்பு - 2003



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி.பி1604ம் ஆண்டு கண்டி மன்னன் முதலாம் விமலதர்ம சூரியன் காலம் தொடக்கம் மட்டக்களப்பு வன்னிச் சிற்றரசுகள் கண்டி மன்னரின் மேலாதிக்கத்தைப் பெயரளவில் ஏற்றிருந்தபோதும் சுதந்திரமுள்ளவர்களாகவே செயற்பட்டு வந்தனர். இக்காலத்தில் போர்த்துக்கீசர் மட்டக்களப்பைக் கைப்பற்றித் தங்கள் மேலாதிக்கத்தின் கீழ் கொண்டுவர நடவடிக்கைகள் மேற்கொண்டிருந்தனர்.

விமலதர்ம சூரியனுக்குப் பின் கண்டி மன்னனான செனரதன்(1605-1635) வன்னிச் சிற்றரசருடன் நல்லுறவுகள் கொண்டிருந்தான். மட்டக்களப்பு வன்னிச் சிற்றரசர்கள் தங்கள் ஆதரவை கண்டி மன்னனுக்கே அளித்து வந்தனர். இவர்களில் சம்மாந்துறை, பழுகாமம் ஆகிய பிரதேசங்களில் ஆட்சி செலுத்திவந்த வன்னிச் சிற்றரசர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இக்காலத்தில் மலைநாட்டைக் கைப்பற்ற போர்த்துக்கீச தளபதிகள் மட்டக்களப்பினூடாகவே படை நடத்திச் சென்றனர்.

கி.பி1609ல் அசிவிடோ மட்டக்களப்பு, பாணகை, விந்தனை, வெல்லசை, ஊவா இவற்றினூடாகத் தனது படைகளை அனுப்பி வன்செயல்களில் ஈடுபட்டான்.[4] அப்போதெல்லாம் இங்கு ஆட்சி செலுத்திவந்த வன்னிச் சிற்றரசர்கள் போர்த்துக்கீசரை எதிர்த்துச் சண்டையிட்டனர். கி.பி1615ல் வீரமுனை சிந்தாயாத்திரை பிள்ளையார் ஆலயத்துக்கு செனரதன் அளித்த தானம் பற்றி வீரமுனை செப்பேடு கூறும்.

இக்காலத்தில் கிழக்கு மாநிலம் தவிர்ந்த இலங்கையின் கரையோரப் பகுதிகள் போர்த்துக்கீசர் ஆதிக்கத்தில் இருந்தன. ஆதலால் போர்த்துக்கீசர் தங்கள் ஆதிக்கத்தை நிலை நிறுத்த முயற்சிகள் மேற்கொண்டிருந்தனர். இதனை வன்னிச் சிற்றரசர்கள் ஒன்றிணைந்து எதிர்த்து வந்தனர். அத்துடன் வன்னிச்சிற்றரசர்கள் கண்டி மன்னனுடன் சேர்ந்து போர்த்துக்கேயருக்கெதிராகப் போரிட்டும் வந்தனர்.

---

4. A Histroy of Ceylon for Schools - 11 - Page 85 by Father S.G.Perera



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டி மன்னன் செனரதன் போர்த்துக்கீசருக்கெதிராக கி.பி 1611ம் ஆண்டில் போருக்கான ஆயத்தங்களை மேற்கொண்ட பொழுது அதனையுற்று இராசப் பிரதிநிதிகள் சபையைக் கூட்டினான். இதில் கொட்டியாபுரம் அதிபனான இட்லி பழுகாமத்து செல்ல பண்டாரம் மட்டக்களப்பு (சம்மாந்துறை) குமார பண்டாரம் போரைதீவு சண்முக சங்கரி முதலான வன்னியர்களும் பிரசன்னமாயிருந்தனர். Lieut - Colonel - G.P. Thomas R.A தமிழில் கி.முரளிதரன் பக்-15-2004)

இதேவேளை, மட்டக்களப்பு பிராந்தியத்தில் போர்த்துக்கேயர் மீது விசுவாசமாகச் செயற்பட்டு வந்த வன்னியர்களை மீண்டும் தனது மேலாண்மையை செனரதன் ஏற்கச்செய்தான்.[5] கி.பி.1618ல் போர்த்துக்கீச தளபதியாக வந்த கொன்ஸ்ரைன்டிசா(1818-1830) பல அடக்குமுறைகளைக் கையாண்டதுடன் இலங்கையின் கரையோர மாகாணங்களில் அமைந்திருந்த பிரபல சைவக் கோயில்களையும் இடித்தழித்தான்.[6] இவன் கிபி1622ல் மட்டக்களப்பு துறைமுகத்தைக் கைப்பற்றினான்.

இவ்வாறு போர்த்துக்கீசர் மட்டக்களப்பைக் கைப்பற்றியபோதும், மட்டக்களப்பை அவர்களது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர இயலாதுபோயிற்று. மட்டக்களப்பில் போர்த்துக்கீசர் கண்ணில்பட்ட பல சைவக்கோயில்களை இடித்துத்தள்ளினர். இவ்வாலயங்களில் சேமிக்கப்பட்டிருந்த செல்வங்களையும் சூறையாடினர். சில கிராம மக்களை இடம்பெயரச் செய்தனர்.

எல்லாவற்றிற்கும் மேலாக ஆலயங்களில் அதாவது சிறிய பெரிய ஆலயங்களில் காலங்காலமாக பாதுகாக்கப்பட்டு வந்த ஏட்டுச்சுவடிகளாகவிருந்த இலக்கியங்கள், ஆவணங்கள், கல்வெட்டுக்கள் என்பனவற்றைத் தீயிட்டு அளித்தனர். அக்காலத்தில் மட்டக்களப்பில் புகழ்பெற்று விளங்கியிருந்த கோவில்குளம் சிவாலயம், கோவில் போரதீவு சித்திரவேலாயுதர் ஆலயம், சங்கமன் கண்டி சிவாலயம், வெல்லாவெளி சிவாலயம் ஆகியன இவற்றில் அடங்கும்.[7] மேலும் கருங்கொடித்தீவு சித்திவிநாயகர் ஆலயமும் இவ்வேளை இடித்து அழிக்கப்பட்டதாக அறியமுடிகின்றது.

5.இலங்கை வரலாறு பாகம் 11-பக்.126 பேராசிரியர் செ.கிருஷ்ணராஜா - 2005
1612ல் பாணகை வன்னியனாகவிருந்த சமரவாய் என்பவர் போர்த்துக்கீசருடன் இரகசிய உடன்படிக்கை செய்திருந்ததை கேள்விப்பட்டதைத் தொடர்ந்து கண்டி அரச படைகளால் கைது செய்யப்பட்டதாக அறியமுடிகின்றது. (இலங்கை தேசவழமைகளும், சமூக வழமைகளும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நிலையில் கொன்ஸ்ரைன்டிசா மட்டக்களப்பில் கோட்டையொன்றை நிர்மாணிக்கத் தொடங்கினான். (1623ல்) இவ்வேளை தனது ஆட்சிக்குட்பட்டிருந்த களுத்துறை, பேருவளை அளுத்கம போன்ற இடங்களில் வாழ்ந்து வந்த முஸ்லிம்களை வெளியேற்றினான். இவர்களில் சிலர் சிங்கள இராச்சியங்களில் அடைக்கலம் புகுந்தனர். இவர்களில் நாலாயிரம்பேரை 1626ல் கண்டிமன்னன் செனரதன் மட்டக்களப்புக்கு(சம்மாந்துறை) அனுப்பிவைத்தான்.[8]

இவ்வாறு கண்டியிலிருந்து அகதிகளாக வந்திருந்த முஸ்லீம் மக்களில் பெரும் பகுதியினரை சம்மாந்துறை வன்னியராசா தனது ஆட்சியின் கீழிருந்த இடங்களில் இவர்களுக்கு நிலங்களை வழங்கி குடியேற்றினான் என்பது வரலாற்று உண்மையாகும். தமிழர்கள் பூர்வீகமாக வாழ்ந்து வந்த இடங்களில் முஸ்லீம் மக்களும் குடியேறி ஒற்றுமையாக வாழ்ந்து வந்தனர். செனரதனது காலத்தில் கல்முனை, கல்முனைக்குடி, சாய்ந்தமருது ஆகிய இடங்களில் முஸ்லீம் மக்கள் குடியேற்றப்பட்டவேளையில் (1626ல்) இந்த இடங்களில் தமிழும், சைவமும் செழித்திருந்தன.[9]

மேற்குறிப்பிட்ட வரலாற்றுச் செய்திகள் வாயிலாக இக்காலத்தில் மட்டக்களப்பில் வன்னியர் என்ற சிற்றரசர்களது அரசியல் ஆதிக்கமே நிலைத்திருந்தது என்பது தெளிவு. ஆயினும் இக்காலத்தில் மட்டக்களப்பை முழுமையாகக் கைப்பற்றித் தங்கள் முழுமையான ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவருவதற்கு போர்த்துக்கேயர் முயற்சிகள் மேற்கொண்டிருந்தனர். இவர்களுக்கெதிராக சம்மாந்துறை, பழுகாமம், சிங்காரபுரி ஆகிய இடங்களிலிருந்து ஆட்சி செலுத்தி வந்த வன்னியர்கள் கண்டி மன்னனின் ஆதரவுடன் போராடி வந்தனர்.

---

6. 'மட்டக்களப்புக் குகன் குல முற்குகர் வரலாறும் மரபுகளும்' பக்.34 ஞா.சிவசண்முகம் - 2000

7.திருக்கோவில் பிரதேச இலக்கிய வரலாறு - பக்.43 நா.நவநாயகமூர்த்தி -2014

8. A Histroy of Ceylon for Schools - Page 99 by Father S.G.Perera

9. ஈழத்தமிழர் வரலாற்றுச் சுவடுகள் - பக்.102.நா.நவநாயகமூர்த்தி - 2002



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிபி 1627ல் போர்த்துக்கேயர் மட்டக்களப்பை கைப்பற்றினர். இதனைத் தொடர்ந்து 1628ல் இப்பிராந்தியத்தில் ஆட்சி செலுத்தி வந்த வன்னியர் போர்த்துக்கீசரின் மேலாதிக்கத்தை ஏற்றிருந்தனர். போர்த்துக்கீசர் நீண்டகாலமாக நடைமுறையில் இருந்து வந்த முக்குவச் சட்டத்தையே(முக்குவர் சட்டம்)நடைமுறைப் படுத்தியிருந்தனர்.[10] இவ்வேளை போர்த்துக்கேய பிரதானிகளிடையே கோட்டை கட்டுவதில் கருத்து முரண்பாடுகள் நிலவியிருந்தபோதும் 1828ல் புளியந்தீவில் கோட்டை கட்டி முடிக்கப்பட்டது.

இதே வேளை மட்டக்களப்பில் கொன்ஸ்ரைன் டி சா கோட்டை அமைத்துக் கொண்டிருக்கின்ற முயற்சியை முறியடிப்பதற்காக கண்டி மன்னன் செனரதன் ஊவாச்சிற்றரசனும் தனது மகனுமான குமாரசிங்காவை படைகளுடன் 1629ல் மட்டக்களப்புக்கு அனுப்பி வைத்தான். ஆனால் சப்பிரகமுவ மாத்தறையை நிர்வகித்த திசாவைகளினால் விஜயகோன் பண்டாரவும் குமாரசிங்காவும் தோற்கடிக்கப்பட்டனர். 1629ல் புளியந்தீவில் போர்த்துக்கேயரால் கோட்டை கட்டி முடிக்கப்பட்டிருந்தது.

1629ல் கண்டிமீது டிசா இரு தடவைகள் படையெடுத்துச் சென்று செங்கடகலையைத் தாக்கி கட்டிடங்களை இடித்தழித்தான்.'அம்பாதென்ன' என்ற இடத்தில் இரு சாராருக்குமிடையில் கடும் சண்டை நிகழ்ந்தது. மறு புறத்தில் மட்டக்களப்பு கோட்டையை செனரதன் தாக்கிக் கைப்பற்றிய நிலையில் டிசா மட்டக்களப்பு நோக்கி தனது படைகளை நகர்த்த வேண்டிய சூழ்நிலை உருவாகிற்று.[11] ''டொம் நொறன்கா'' என்ற போர்த்துக்கேய படைத்தலைவன் கண்டி மன்னனின் படைகளை வெற்றிகொண்டான்.

---

10. இலங்கையில் தமிழர் - பக்.181 கலாநிதி முருகர் குணசிங்கம் - 2008

11. இலங்கை வரலாறு - பக்.11, பக்.130 பேராசிரியர் செ.கிருஷ்ணராஜா - 2008



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதேவேளை(1629ல்) யாழ்ப்பாணம் நோக்கியும் செனரதன் தனது படைகளை அனுப்பி அதனையும் தாக்கினான். அத்தப்பத்து என்பவனுடைய தலைமையில் வந்த கண்டிய வீரர்களே யாழ்ப்பாணத்தை தாக்கினர். போர்த்துக்கீசரால் அத்தப்பத்து கைது செய்யப்பட்டு அங்கேயே கொலைசெய்யப்பட்டான்.[12] இக்காலத்தில் (1628,29களில்) மட்டக்களப்பை போர்த்துக்கேயரிடமிருந்து மீட்டெடுப்பதற்காக செனரதன் எடுத்தமுயற்சிகள் கைகூடாமல் போயிற்று. (நா.நவநாயகமூர்த்தி - 2002) இக்காலத்தில், கண்டி மன்னனுக்கு ஆதரவாக சம்மாந்துறை, பழுகாமம் வன்னிய இராசாக்களும் இவர்களுக்கு ஆதரவாக சிங்காரபுரி வன்னியனும் செயற்பட்டு வந்ததை அறியமுடிகின்றது.

கி.பி1630ல் போர்த்துக்கீசர் அதிரடி நடவடிக்கைகள் மூலம் மட்டக்களப்பு முழுவதையும் தங்கள் முழுமையான மேலாதிக்கத்தின் கீழ் கொண்டுவந்தனர். இவ்வேளை, போர்த்துக்கேயர் மேற்கொண்ட வன்முறைகள், கொலைகள் மதவிரோதச் செயல்கள் பற்றி அறியமுடிகின்றது. போர்த்துக்கீச தளபதியான கொன்ஸ்ரைன்டிசா(1618-1630) நீண்ட காலமாக சம்மாந்துறை, பழுகாமம் ஆகிய இடங்களிலிருந்து ஆட்சி செலுத்தி வந்த வன்னிய இராசாக்களை கொலை செய்தான். இவர்களது மாளிகைகளும் இவனால் சூறையாடப்பட்டன.[13] கண்டி மன்னனுக்கு ஆதரவாகச் செயற்பட்டு வந்தமையினாலேயே போர்த்துக்கேயரால் இவர்கள் வஞ்சகமாகக் கொல்லப்பட்டனர்.

---

12. யாழ்ப்பாண இராச்சியத்தின் இறுதி மன்னனாகிய சங்கிலிகுமாரனுடைய மகனின் இரு புதல்விகளை கண்டி மன்னன் செனரதனின் இரு புதல்வர்கள் ஏற்கனவே திருமணம் செய்திருந்தனர். இந்த அடிப்படையில் செனரதன் யாழ்ப்பாண இராச்சியத்தின் முடிக்கு அரசுரிமைகோரி 1628லும் செனரதனின் படையொன்று யாழ்ப்பாணம் சென்று யாழ்ப்பாணத் தமிழர்களையும் சேர்த்து போர்த்துகீசருடன் போரில் ஈடுபட்டது. போர்த்துக்கீசரின் திடீர்த்தாக்குதலால் செனரதனின் படைகள் யாழ்ப்பாணத்திலிருந்து விரட்டப்பட்டன(கலாநிதி முருகர் குணசிங்கம் - 2008)

13. போர்த்துக்கேயர் கால இலங்கை - பக்.323 பீ.ஈ.பீரிஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனைச் சில கல்வெட்டுக்களும் (ஏட்டுப்பிரதிகள்) குறிப்பிடுகின்றன. சில வருடங்களின் பின்னர் கண்டியில் தலைமறைவாகவிருந்த சம்மாந்துறை வன்னியனையும் போர்த்துக்கீசர் சிறைப்பிடித்து விசாரணையின் பின்னர், அவனின் சொத்துக்களையும் பறித்து பதவி நீக்கம் செய்ததாக சில ஏட்டுப்பிரதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. கண்டி மன்னனுடன் நட்புக்கொண்டிருந்த அவ்வன்னியன் பற்றிய போதிய விபரங்கள் கிடைக்கவில்லை.

எனினும், இவனே போர்த்துக்கீசரால் வடமேல் பிரதேசத்திலிருந்து வெளியேற்றப்பட்டு கண்டியில் தரித்திருந்த நூற்றுக்கணக்கான முஸ்லீம் குடும்பங்களை கண்டி மன்னன் செனரதனின் வேண்டுகோளின் பேரில் மட்டக்களப்பில் குடியேற்றினான் எனவும், இவனது வதிவிடம் சம்மாந்துறையில் (முற்குகர்வட்டை) அமைந்திருந்ததாகவும் கூறப்படுகின்றது.[14]

1630ல் சம்மாந்துறை, பழுகாமம் ஆகிய வன்னிப் பிரதேசங்கள் போர்த்துகேயரின் நடவடிக்கைகளால் பெரும் பாதிப்புக்களை எதிர்கொண்டிருந்தவேளை சம்மாந்துறையுடன் மிக நெருங்கிய உறவினைக் கொண்டிருந்த சிங்காரபுரி வன்னியும் பாதிப்புக்குள்ளாகியது. பிரசித்தி பெற்றிருந்த நிந்தவூர் சிவாலயம் போர்த்துக்கேயரால் முற்றாக அழிக்கப்பட்டது. இங்கிருந்த பெறுமதிமிக்க பொருட்களும் கொள்ளையிடப்பட்டன.[15] மேலும் சிவாலய வளாகத்தில் சிவாலயத்துக்கருகாயிருந்த பிள்ளையார் ஆலயமும் சேதமாக்கப்பட்டது.

---

14. மட்டக்களப்பு வரலாறு - ஒரு அறிமுகம் - பக்.82 வெல்லவூர்கோபால் - 2005

15. போர்த்துகேயர் காலத்தில் இடித்தழிக்கப்பட்ட கற்கோயிலான சிவாலயத்தின் எச்சங்களை இன்றும் நிந்தவூர் பிள்ளையார் ஆலயத்தில் காணமுடிகின்றது. சோழர்காலத்தை சேர்ந்த கற்கோமுகி, பழமைவாய்ந்த பன்னிரண்டு கற்தூண்கள், புராதன பீடக்கல், வட்டவடிவமான சந்தனக்கல், இரண்டு கற்தூண்கள் என்பன இவற்றில் குறிப்பிடத்தக்கன (பாரம்பரியம்மிக்க கதிர்காம பாதயாத்திரையும் கந்தசுவாமிக் கடவுளின் புனிதபூமியும். பக்.88,89.என்.கே.எஸ்.திருச்செல்வம் - 2013)
* இதே ஆண்டில் (1630ல்) போர்த்துகேயனான கொன்ஸ்ரைன்டிசா கண்டியை நோக்கி படையெடுத்தவேளை அவனது படையெடுப்பு தோல்வியில் முடிந்தது. வெள்ளவாயாவில் செனரதன் டிசாவைத் தாக்கினான். இச்சண்டையில் போர்த்துக்கேயப் படைகள் அனேகர் கொல்லப்பட்டனர். மிகுதியானோர் கைது செய்யப்பட்டனர். கொன்ஸ்ரைன்டிசா தனது படைவீரனொருவனால் தவறுதலாகச் சுடப்பட்டுக் கொல்லப்பட்டான். (நம் முன்னோரளித்த அருஞ்செல்வம். பாகம் 11.பக் 178 பேராசிரியர் - எஸ்.ஓ.டேக்மன், ஜி.சி.மென்டிஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும், மட்டக்களப்பு தேசம் முழுவதிலும் பிரசித்தி பெற்று விளங்கியிருந்த மீனாட்சி அம்மன் ஆலயமும் பெரும்பாதிப்புக்குள்ளாகியது. செங்கல், சுண்ணாம்பு, மரம் கொண்டு நிர்மாணிக்கப்பட்டு அழகுறக் காட்சியளித்த மீனாட்சி அம்மன் ஆலயமும் அருகாயிருந்த மண்டபமும் போர்த்துக்கேயரால் இடித்தழிக்கப்பட்டன.

இதே வேளை ஆலயத்துக்கு மேற்கு பகுதியில் அமைந்திருந்த மாளிகை, மண்டபம், மடம் என்பனவற்றை உள்ளடக்கி எழிலுடன் மிளிர்ந்து வந்த சிங்காரபுரி வன்னியனின் பொழுதுபோக்கு வாசஸ்தலமும் சேதமாக்கப்பட்டது. சிங்காரபுரி மாரியம்மன் ஆலயம், காளியோடை காளிகோயில் என்பனவும் பாதிப்புக்குள்ளாயின. (சிங்காரபுரி வன்னிச் சிற்றரசர் ஆட்சியில் சிறப்புடன் விளங்கிவந்த மீனாட்சி அம்மன் திருத்தலம் - கையெழுத்துப் பிரதி - நா.நவநாயகமூர்த்தி - 2018)

மேற்படி நிகழ்வுகள் 1628ல் போர்த்துக்கீசர் மட்டக்களப்பை தம் வசமாக்கி இப்பிரதேச வன்னிச்சிற்றரசுகளை மேலாதிக்கத்துக்குள் உட்படுத்தியிருந்த காலத்திலேயே (1628 - 1630) நிகழ்ந்தவைகளாகும். இதனைத் தொடர்ந்து வன்னியரின் வாரிசுகள் அதிகாரம்பெற்று பழுகாமம், சம்மாந்துறை வன்னிச்சிற்றரசுகள் மீண்டும் புத்துயிர் பெற்றுத் தம்மளவில் பலம்மிக்கதாய் நிலவத்தொடங்கின.

இக்காலகட்டத்திலேயே (1630) காளியோடை தொடக்கம் தெற்கே சங்குமன் கண்டிவரை எல்லைகளாகக் கொண்ட அக்கரைப்பற்று வன்னிச்சிற்றரசு தோற்றுவிக்கப்பட்டது. மேற்கே நடுக்காடு (நாடுகாடு பற்று) என்ற வனப்பிரதேசத்தை இது எல்லையாகவும் கொண்டிருந்தது. இது பற்றி வரலாற்று ரீதியாக விளக்கமாக நோக்குவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி.பி1630ல் போர்த்துக்கீசர் மட்டக்களப்பைத் தங்கள் முழுமையான மேலாதிக்கத்தின் கீழ் கொண்டு வந்ததைத் தொடர்ந்து இப்பிராந்தியத்தில் மேலும் புதிய வன்னிப் பிரிவுகள் உருவாகி நிலை பெற்றன. அத்துடன் இவற்றின் ஆட்சித் தலைவர்களாக (சிற்றரசர்) வன்னிய மரபினரே நியமிக்கப்பட்டனர். 1627ல் போர்த்துக்கீசர் தம் வசமிருந்த கரைநாடுகளை நான்கு திசாவளிகளாக, திசாவளிகளை கோறளைகளாகவும் கோறளைகளைப் பற்றுக்களாகவும் பிரித்தனர்(புதுமுறை சரித்திரம்) இதே போன்று மட்டக்களப்பில் நிலவி வந்த வன்னிப்பிரதேசங்களும் 'பற்றுக்களாக' நிலவத் தொடங்கின.

இதுவரைகாலமும் மட்டக்களப்பு, சிங்காரபுரி என நிலவி வந்த வன்னிப் பிரதேசங்கள் முறையே சம்மாந்துறை பற்று, நிந்தவூர் பற்று எனப்பெயர்கள் வழங்கி வரலாயின. ஆயினும், பாரம்பரிய பண்டைய வழக்கினை இழக்காது பேச்சு வழக்கிலும் இலக்கியங்களிலும் இவ்விரண்டும் முறையே மட்டக்களப்பு (நகர்) என்றும் சிங்காரபுரி (நகர்) என்றும் நிலவி வந்துள்ளன. இதற்கு இலக்கியச் சான்றுகள் உள்ளன.

இவ்வேளை, மட்டக்களப்பின் தென் பகுதியில் (இன்றைய அம்பாரை மாவட்டம்) கரவாகுப்பற்று, அக்கரைப்பற்று என இரு வன்னிப் பிரதேசங்கள் உருவாகி வன்னிய மரபினரின் (முக்குவ) ஆட்சியின் கீழ் நிலவத்தொடங்கின. இது வரை காலமும் சம்மாந்துறை வன்னியராட்சியின் கீழ் இருந்து வந்த கிழக்குக்கரைப் பகுதியை பிரித்தெடுத்து, கரவாகு ஊரினை ஆட்சி மையமாகக் கொண்டு கரவாகுப்பற்று(கல்முனை) உருவாகியிருந்தது.

இதே போன்று இதுவரை காலமும் சிங்காரபுரி வன்னியரின் ஆளுகைக்குட்பட்டிருந்த சிங்காரபுரி சிற்றாட்சி பிரதேசத்தின் தென்பகுதியை உள்ளடக்கியதாக அக்கரைப்பற்று 'வன்னிப் பிரதேசம்' உருவாக்கப்பட்டது. வடக்கே காளியோடை தொடக்கம், தெற்கே சங்குமன்கண்டி வரை பரந்திருந்த அக்கரைப்பற்று வன்னிப் பிரதேசத்தில் பழந்தமிழ் கிராமங்களான பாலமுனை, மீனோடைக் கட்டு, கருங்கொடித்தீவு, கோளாவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பனங்காடு, தம்பட்டை, தம்பிலுவில், திருக்கோவில் என்பன அடங்கியிருந்தன. இக்காலத்தில் மட்டக்களப்பின் தென்பகுதியில் பின்வரும் வன்னிமை பற்றுக்கள் அமைந்திருந்தன.

நாடுகாடு பற்று(வனப்பகுதி)

சம்மாந்துறை பற்று

கரவாகுப் பற்று

நிந்தவூர் பற்று

பாணகை பற்று

அக்கரைப்பற்று

என்பன இவைகளாகும். இவ்வன்னிச் சிற்றரசுகள் போர்த்துக்கீசரின் மேலாதிக்கத்தின் கீழ் வன்னியர் என்போரின் ஆட்சியின் கீழ் இருந்து வந்தன.

போர்த்துக்கீசர் மட்டக்களப்பு முழுவதையும் கைப்பற்றி இப்பிராந்தியத்தில் ஆட்சி செலுத்தி வந்த முற்குக வன்னியர்கள் மீது மேலாதிக்கம் செலுத்தியிருந்த காலத்தில் (கி.பி1628-1638) இவர்கள் வன்னியர்களது அதிகாரத்தினை முழுவதுமாகப் பறித்து விடவில்லை, வன்னியர்களது வழமைப்படியே ஆட்சி நடத்துவது சரியென்று ஏற்றுக்கொண்டு அவ்வாறே நடந்து கொண்டனர்.

யாழ்ப்பாணத்தில் ஆட்சியாளர்கள் தங்கள் ஆட்சி வசதிக்காக பழமைவாய்ந்த நெறிமுறைகளை எவ்வாறு தேசவழமைச் சட்டமாக்கி செயற்படுத்தினார்களோ, அதே போன்று மட்டக்களப்பில் ஆட்சித்தலைவர்களான வன்னியர்களால் செயற்படுத்தி வந்த நிர்வாக நெறிமுறைகளை முற்குகச் சட்டம் என்ற பெயரில் போர்த்துக்கீசர் தங்கள் ஆட்சியில் சேர்த்துக்கொண்டனர். (வெல்லவூர்கோபால் - 2005)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பில் முற்குகர் (MUKKUWA) சட்டம் நடைமுறையில் இருந்திருக்கின்றது. முற்குகச்சட்டம் மட்டக்களப்பு தேசத்தில் நீண்டகாலமாக இருந்தது. இதனை போர்த்துக்கீசர் நடைமுறைப்படுத்தினர். (கலாநிதி முருகர் குணசிங்கம் - 2008) குறிப்பாக பதின்மூன்றாம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து இந் நிர்வாக நெறிமுறைகள் மட்டக்களப்பில் வன்னியராட்சியில் நிலவி வந்துள்ளன.[16]

இதேவேளை போர்த்துகீசர் மட்டக்களப்பில் மேற்கொண்ட நடவடிக்கைகளில் மிக முக்கியமானவை வரி அறவீட்டு முறையாகும். இதற்கென இவர்கள் தோம்பு எனப்படும் பதிவேட்டு முறைகளை ஆரம்பித்தனர். நிலவரிக்கான காணித்தோம்பில் அப்போதிருந்த நிலச்சுவாந்தர்களாக போடிகளையும், அவர்களது காணி அளவுகளையும் பதிவு செய்து நிலவரி அறவீட்டினைச் செய்தார்கள்.

அத்துடன் தலைவரி, தென்னைவரி, புகையிலைவரி ஆயவரி, மீன்பிடிவரி, சந்தைவரி எனப் பல வழிகளிலும் வரிகளை அறவீடு செய்தனர். இதனைப் பெரிதும் விரும்பாத மட்டக்களப்பின் பெரும்பாலான போடிகள் தொடர்ந்தும் போர்த்துக்கேயருடன் முரண்பட்டு வந்தனர். இதனால் அக்காலத்தில் (1628-1638) போர்த்துக்கீசர் மட்டக்களப்பில் நிலையான ஆட்சியைக் கொண்டிருந்தார்கள் என்று கூறமுடியாது.

---

16. பேராசிரியர் சி.பத்மநாதன் அவர்கள் மட்டக்களப்பில் மற்றசாதி மக்களும் முக்குவசட்டத்தைக் கடைப்பிடித்து வந்ததைப்பற்றி குறிப்பிடுகையில் மட்டக்களப்பு தேசத்தைப் பொறுத்தவரை முக்குவரின் சாதி வழமையே எல்லாத் தமிழருக்கும் பொதுவான சட்டசெறியாகக் கொள்ளப்பட்டது. (மட்டக்களப்பு - அனைத்துலக தமிழாராய்ச்சி மகாநாட்டு மலரில் உள்ள கட்டுரை - 1976 பங்குனி) எனக் குறிப்பிட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டி மன்னன் இரண்டாம் இராசசிங்கன் காலம் (கி.பி.1638 - 1660 வரை)

கி.பி1635ல் செனரதன் மரணமடைந்ததும் இவனது மகனான இரண்டாம் இராசசிங்கன் கண்டி மன்னனானான். கண்டியை இராஜதானியாகக் கொண்டு ஆட்சி புரிந்த மன்னர்களுள் பெரும் கீர்த்தி பெற்றவன் இவனேயாவான். இவனது ஆட்சி அறுபது வருடங்கள் (1628 - 1687) நிலைபெற்றது. இலங்கை வரலாற்றில் அதிக முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சிகள் இவனது காலத்தில் நிகழ்ந்தன. இரண்டாம் இராசசிங்கன் தனக்கு உதவுமாறு ஒல்லாந்தரை கேட்க அவர்கள் போர்த்துக்கேயரிடமிருந்து மட்டக்களப்பை 1638ல் கைப்பற்றி இரண்டாம் இராசசிங்கனிடம் 1640ல் கையளித்தனர்.

கண்டி மன்னன் முதலாம் விமலதர்மசூரியன் காலம் தொட்டு ஒல்லாந்தருக்கும் கண்டி மன்னர்களுக்குமிடையில் பேச்சுக்கள் இருந்து வந்துள்ளன. 1602ல் டச்சுக்காரனான யோரிசு கபில் பேர்கன் என்பவன் மட்டக்களப்பினை அடைந்து (கல்முனை துறை) விமலதர்மனுடன் பேச்சுக்கள் நடாத்தினான். இப்பேச்சுக்களால் ஒன்றும் விளையவில்லை.[1] சம்மாந்துறை வன்னியனின் ஆதரவுடனேயே இது நடைபெற்றது என்பதனை அறியமுடிகின்றது.

கி.பி.1609ல் கண்டியரசன் செனரதனும், ஒல்லாந்த அரசனும் வியாபார ஒப்பந்தம் செய்து கொண்டனர். அதில் ஒரு அம்சம் கண்டியரசு போர்த்துக்கேயரோடு பகைத்து போர்விளைய நேரிட்டால், தான் படையை அனுப்பி உதவி செய்வதாயும் கண்டி மன்னனான செனரதனுடனும், அவன் மனைவியாகிய தோனாகதரினாவுடனும் ஒரு சமாதான ஒப்பந்தத்தை ஒல்லாந்தர் செய்திருந்தனர்.[2]

---

1. இலங்கையின் சுருக்க வரலாறு - பக்.101 எச்.டபிள்யு.கொடிறின்றன் - 1960
2. யாழ்ப்பாண சரித்திரம் - பக்.163 முதலியார் செ.இராசநாயகம் - 1933



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான பின்னணியிலேயே 'வெஸ்ரவோல்ட்' (Wester Wold) என்ற ஒல்லாந்த தளபதி மட்டக்களப்பை தாக்கிக் கைப்பற்றியதன் பின்னர் கண்டியரசனுடன் உடன்படிக்கை செய்துகொண்டனர்.[3]

இதே வேளை, ஒல்லாந்த தளபதி 'வெஸ்ர வோல்ட்டுக்கும்' (வேட) கண்டி மன்னன் இரண்டாம் இராஜசிங்கனுக்குமிடையில் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கை பற்றியும் அதனைத்தொடர்ந்து ஒல்லாந்தர் பெரும்படையுடன் சென்று போர்த்துக்கேயரை எதிர்த்து வெற்றி பெற்று மட்டக்களப்பை இராசசிங்கனிடம் கையளித்தது பற்றியும் மட்டக்களப்பு மான்மியம் நூல் விபரமாகக் குறிப்பிடும்.[4] போர்த்துக்கேயருக்கெதிரான போர்களில் மட்டக்களப்பு வன்னியர்கள் கணிசமான அளவில் பங்கு கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.

1638ல் ஒல்லாந்தரினால் மட்டக்களப்பு கைப்பற்றப்பட்டதைத் தொடர்ந்து கி.பி.1639ல் திருகோணமலை கோட்டையைத் தாக்கிக் கைப்பற்றும் நோக்கத்துடன் ஒல்லாந்த கடற்படையானது 'வெஸ்ரர் வேல்ட்' தலமையில் சென்றது. இவ்வேளை, தரைப்படைக்கு கட்டளைத் தளபதி 'அன்டனி யோகன்' தலைமை தாங்கினான். இப்படையில் கொட்டியாபுரம், சம்மாந்துறை, வன்னிபங்களும் தமது போர் வீரர்களை கொடுத்து உதவினர். இப்போரில் மட்டக்களப்பு வன்னியர்கள் சார்பாக 500 படை வீரர்கள் கலந்து கொண்டனர்.[5] இவர்களில் அக்கரைப்பற்று வன்னி வீரர்களும் அடங்குவர். ஒல்லாந்த ஆவணங்கள் இதனை உறுதி செய்கின்றன.[6]

---

3. இலங்கை வரலாறு, பாகம் 11 - பக்.108 பேராசிரியர் செ.கிருஷ்ணராசா - 2005
* வெஸ்ரர்வோல்ட் என்ற ஒல்லாந்த தளபதி கல்முனை (துறை) யில் இறங்கி மட்டக்களப்பை கைப்பற்றியதாக வரலாற்றுக் குறிப்புக்கள் உள்ளன.(புதுமுறைச் சரித்திரம், பகுதி 1.11 - பக்.107 V.S.S.ராம், T.V.K. மூர்த்தி -1961. இலங்கைச் சரித்திரம், பகுதி I - பக்.59,60 எஸ்.எவ்.டி.சில்வா - 1952)

4. மட்டக்களப்பு மான்மியம் - பக்.63 பதிப்பாசிரியர் எப்.எக்ஸ்.நடராசா - 1963

5. காலனித்துவ திருகோணமலை - பக்.58.கனகசபாபதி சரவணபவன் - 2010

6. ஒல்லாந்தர் போர்த்துக்கீசரிடமிருந்து மட்டக்களப்பை 1638லும், திருகோணமலையை கி.பி1639லும், கொழும்பை 1656லும், மன்னாரை 1658லும் கைப்பற்றினார். அத்தோடு மன்னாரிலிருந்து வன்னி நிலப்பரப்பு வழியாக பூநகரியை அடைந்து ஊர்காவற்றுறை, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களை ஆக்கிரமித்துக் கொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி.பி.1638ல் மட்டக்களப்பு போர்த்துக்கீசரிடமிருந்து ஒல்லாந்தரினால் கைப்பற்றப்பட்டபோது கண்டி மன்னன் இராச சிங்கனுடன் ஒரு வர்த்தக உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர். அதன்படி மட்டக்களப்பு பிரதேசம் கண்டி மன்னனின் மேலாண்மையை ஏற்கவேண்டியதாயிற்று. இவ்வேளை மட்டக்களப்பு பிரதேச தமிழ் மக்களும் சிற்றரசரும் தம்மைக் கண்டி மன்னனின் மேலாதிக்கதிலிருந்து விலக்கி விடும்படி வேண்டுகோள் விடுத்ததைப்பற்றி டச்சு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (Hague Archvoclnv 1280, 71) இக்காலத்தில் திருகோணமலையிலிருந்து மட்டக்களப்புக்கு போக்குவரத்து செய்யக்கூடிய தரைவழிப்பாதையும் இருந்துள்ளது.[7]

இவ்வாறு டச்சு ஆவணம் குறிப்பிடுகின்ற போதும் மட்டக்களப்பு வன்னிச் சிற்றரசர்கள் போர்த்துக்கீசரிடமிருந்து மட்டக்களப்பைக் கைப்பற்றி ஒல்லாந்தர் இராசசிங்கனிடம் கையளித்ததைத் தொடர்ந்து கண்டி மன்னனின் மேலாதிக்கத்தை ஏற்றிருந்ததுடன் கண்டி மன்னனுடன் நெருக்கமான உறவுகளையும் கொண்டிருந்தனர். இக்காலத்தில் (1640ல்) டச்சுக்காரர் கிழக்குத் துறைமுகங்களில் தமது கவனத்தைச் செலுத்தவில்லை. 1659ம் ஆண்டுவரை இந்நிலை நீடித்திருந்தது.

ஒல்லாந்தர் மட்டக்களப்பைக் கைப்பற்றிய காலத்தில் (கி.பி.1638ல்) மட்டக்களப்பில் முற்குக வன்னியர்கள் ஆண்டார்கள் என ஆய்வாளரான ம.க.அந்தனிசில் குறிப்பிடுகின்றார். இக்காலத்தில் போர்த்துக்கீசரால் கொல்லப்படாதிருந்த வன்னிய இராசாக்களும் முன்பு கொல்லப்பட்டவர்களின் (1630ல்) வாரிசுகளான வன்னியர்களும் (சம்மாந்துறை, பழுகாமம்) மட்டக்களப்பில் ஆட்சி செலுத்தி வந்தனர். இவ்வன்னியர்களை மன்னர்கள் என்றே டச்சு ஆசிரியர் 'பிலிப்பஸ்வால்டியஸ்' என்பவர் கூறுகின்றார்.

---

7. இலங்கையில் தமிழர் - கலாநிதி முருகர் குணசிங்கம், பக்.256. தென் ஆசியவியமையம் - 2008



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் மேலும் கூறுகையில் பதினேழாம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் மட்டக்களப்பு மன்னனாக குமார வண்டார் (குமாரசிங்க வன்னியன்) என்பவனும், பளுகாமத்து மன்னனாக செல்லா வண்டார (செல்லையா வன்னியன்) என்பவரும் இருந்ததாகவும் கூறுகின்றார. பாணமையிலும் ஒரு மன்னன் இருந்ததாகவும் இவர் குறிப்பிடுகின்றார். (True Exact Description of Ceylon By Rev.Phillipus Baldaeus) [8]

கி.பி 1638ல் போர்த்துக்கேயரிடமிருந்து மட்டக்களப்பைக் கைப்பற்றி கண்டி மன்னன் இராசசிங்கனிடம் கையளித்ததைத் (1640ல்) தொடர்ந்து கி.பி 1660ம் ஆண்டு வரையுள்ள காலகட்டத்தில் ஒல்லாந்தருக்கும் கண்டி மன்னனுக்குமிடையில் நல்லுறவுகள் நிலவியிருந்தன. இதே வேளை கண்டி மன்னன் இராசசிங்கனுடனான அரசியல் வர்த்தக உறவுகள் பாதிப்படைந்து கொண்டுபோன வேளையில் டச்சுக்காரர் கவனம் கிழக்குத் துறைகளில் குவிந்தது.

இதன் விளைவாக, மட்டக்களப்பு திருகோணமலை ஆகிய துறைமுகங்களில் இராசசிங்கனுடைய வர்த்தக நடவடிக்கைகளுக்கு தடைபோடுவதற்கு ஒல்லாந்தர் திட்டமிட்டனர். இவ்வாறான நடவடிக்கைக்கு பற்றேவியா அரசும், ஒல்லாந்த அரசும் அனுமதி வழங்கின. எதிர்விளைவாக இராச்சியங்களின் எதிர்ப்பும் அதிகரித்தது.

கி.பி 1659களில் தமக்கும் இராசசிங்கனுக்கு மிடையிலான உறவில் அதிகளவு விரிசலும் நெருக்குவாரங்களும் ஏற்பட்ட நிலையில் ஒல்லாந்தர் மேற்படி நடவடிக்கையில் ஈடுபடவில்லை. காரணம் டச்சுக்காரரிடம் போதிய படைபலம் இல்லாமையேயாகும்.

---

8. மட்டக்களப்பு குகன்குலமுற்குகர் வரலாறும், மரபுகளும்- பக். 61. ஞா.சிவசண்முகம் - 2000



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறானதொரு அரசியல் சூழலில் கி.பி.1638ம் ஆண்டு தொடக்கம் 1659ம் ஆண்டு வரையுள்ள காலத்தில் திருகோணமலை மட்டக்களப்பு (அம்பாரை உள்ளிட்ட) பிராந்தியங்களில் கண்டி மன்னன் இராசசிங்கனின் அரசியல் செல்வாக்கே நிலைத்திருந்தது.

இக்காலத்தில் இப்பிராந்தியங்களில் ஆட்சி செலுத்தி வந்த வன்னியர்கள் கண்டி மன்னனுடன் நல்லுறவுகள் கொண்டிருந்ததுடன் மக்கள் நிம்மதியுடனும், அமைதியுடனும் வாழ்ந்திருந்தனர். அத்துடன் தங்கள் சமய கலாசாரம், பண்பாடு என்பனவற்றைச் சுதந்திரமாகக் கைக்கொண்டும் வந்துள்ளனர். இதனை இக்கால கட்டத்தில் உருவான இலக்கியங்கள் தெளிவுறுத்துகின்றன. இக்காலகட்டத்தில் குறிப்பாக 1640ம் ஆண்டு தொடக்கம் கி.பி1660ம் ஆண்டு வரையுள்ள காலத்தில் இரண்டாம் இராசசிங்கன் அக்கரைப்பற்று வன்னி உள்ளிட்ட மட்டக்களப்பு வன்னிபங்களுடன் கொண்டிருந்த நெருக்கமான உறவுகள் பற்றி நோக்கலாம்.

### கண்டி மன்னன் இரண்டாம் இராசசிங்கனும் மட்டக்களப்பு வன்னிபங்களும் (கி.பி.1640 - 1660 வரை)

இரண்டாம் இராஜசிங்கன் மட்டக்களப்பிலிருந்து போர்த்துக்கேயரை வெளியேற்ற உதவியமைக்காக இலங்கையின் ஏனைய கரையோரப் பகுதிகளை ஒல்லாந்தருக்கு பிரதியுபகாரமாக கொடுத்த போதும் மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய பிராந்தியங்களை தொடர்ந்து தனது மேலாதிக்கத்தின் கீழ் வைத்திருந்தான்.[9] அத்துடன் ஒல்லாந்தருடன் செய்துகொண்ட வர்த்தக உடன்படிக்கையையடுத்து தனது ஆட்சியைப் பலப்படுத்துவதிலும் அவன் ஈடுபட்டான்.

---

9. இலங்கை சரித்திரம் பாகம் I - பக்.59,60 எஸ்.எவ்.டி.சில்வா - 1952



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1640ம் ஆண்டில் ஊவா, மாத்தளை ஆகிய சிற்றரசுகளையும், அதாவது இவனது சகோதரர்களின் அரசுகளையும் தன் ஆட்சியின் கீழ் கட்டுப்படுத்தி இரண்டாம் இராசசிங்கன் மலைநாடு முழுவதுக்கும் அரசனானான்.[10] இவனது தந்தையான கண்டி மன்னன் செனரதன் தனது இறுதிக் காலத்தில் (1629ல்) கண்டி இராச்சியத்தின், கண்டி, ஊவா, மாத்தளை என மூன்று இராச்சியப்பிரிவுகளாக பிரித்து, கண்டியை இளையவன் இராஜசிங்கனுக்கும், மூத்தவன் குமாரசிங்கனுக்கு ஊவாவையும், விஜயபாலாவுக்கு மாத்தளையையும் கொடுத்திருந்தான்.[11] இவ்விரு சிற்றரசுகளையும் கண்டி இராச்சியத்துடன் இராசசிங்கன் மீண்டும் சேர்த்துக்கொண்டான்.

இதே வேளை, கண்டி மன்னன் இராசசிங்கனின் மேலாதிக்கத்தை மட்டக்களப்பில் ஆட்சி செலுத்தி வந்த வன்னிய இராசாக்கள் ஏற்றிருந்தபோதும் சுதந்திரமுள்ள சிற்றரசர்களாகவே இப்பிராந்தியத்தில் செயற்பட்டு வந்தனர். இவர்கள் கண்டி மன்னனுடன் நல்லுறவுகள் கொண்டிருந்தனர். இதன் காரணமாக கண்டி மன்னனின் செல்வாக்கு இப்பிராந்தியத்தில் நிலைத்திருந்தது.

இரண்டாம் இராசசிங்கன் இக்காலகட்டத்தில் மட்டக்களப்புக்குப் பல தடவைகள் விஜயம் செய்துள்ளதுடன் சம்மாந்துறைப் பட்டினம் அத்துடன் அக்காலத்தில் சிங்காரகண்டி என்ற சிறப்புப் பெயருடன் விளங்கியிருந்த பழுகாமம் ஆகிய இடங்களுக்கும் விஜயம் செய்துள்ளான். மேலும், நிந்தவூர் பற்று (சிங்காரபுரி வன்னி) அக்கரைப்பற்று ஆகிய வன்னிப்பிரதேசங்களுடன் மிக நெருக்கமான உறவு கொண்டிருந்ததுடன் இப்பிரதேசங்களுக்கும் விஜயங்கள் மேற்கொண்டுள்ளான்.

இராஜசிங்கன் இக்காலத்தில் ஒரு தடவை 'தீகவாபி' க்கு வருகை தந்து அரசியல் நடவடிக்கைகள் மேற்கொண்டான் என்று 'சூளவம்சம்' குறிப்பிடுகின்றது. இலங்கையின் கிழக்கு பிரதேசத்தில் அமைந்துள்ள தீகவாபி பிரதேசத்தில் இரண்டாம் இராசசிங்கன்தங்கியிருந்த போது ஒல்லாந்தருடன் இராசசிங்கன்

10.இலங்கை சுருக்க வரலாறு - பக்.271கலாநிதி க.குணராசா, திருமதி.கமலா குணராசா - 2008

11. A History Of Ceylon For Schools - Page 106 by Father S.G.Perera



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டான் என்று சூளவம்சம் (அத்தியாயம் - ஏழு) கூறும். இக்காலத்தில் தீகவாபி உள்ளிட்ட பகுதிகள் அடர்ந்த காடாக இருந்ததுடன் 'நடுக்காடு பற்று' என்ற பெயருடன் சம்மாந்துறை வன்னியை அண்மித்தும் அக்கரைப்பற்று வன்னிப் பிரதேசத்தின் மேற்குப் பகுதியாகவும் இருந்து வந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆதலால் அக்காலத்தில் பலமுள்ள வன்னிச் சிற்றரசாக விளங்கியிருந்த சம்மாந்துறைப் பற்று வன்னியனின் மாளிகையிலேயே கண்டி மன்னன் இராசசிங்கள் தங்கியிருந்து ஒல்லாந்தருடன் தொடர்பு கொண்டிருந்தான் என்பது தெளிவு.[12] கலியுகம் 4758ம் ஆண்டளவில் (1656ல்) இரண்டாம் இராசசிங்கன் மட்டக்களப்பில் வந்து தங்கி நிலமை அதிகாரரைச் சந்தித்து இராசமலையில் (ரஜகல) தனது குலம், கோத்திரம், நாமம் போர்த்துக்கீசர் ஒல்லாந்தரை வெற்றி கொண்ட யாவற்றையும் பொறித்து (வெட்டி) சகல ஆடம்பரங்களோடு கண்டி சென்றான் என மட்டக்களப்பு மான்மியம் குறிப்பிடுகின்றது.[13]

இந்நூலில் மட்டக்களப்பு என்று குறிப்பிடப்படுவது சம்மாந்துறை பட்டினத்தையேயாகும். இதே வேளை நிலமை அதிகாரர் என்று இந்நூல் குறிப்பிடுவது கண்டி அரசின் பிரதிநிதிகளாகும். தமிழர்களுடன் நெருக்கமான உறவுகள் கொண்டிருந்த இரண்டாம் இராசசிங்கன் தமிழ் அரசியையே தனது தேவியாகக் கொண்டிருந்தான். மதுரையிலிருந்து பெண் கொண்டு வந்து (மதுரை நாயக்கர் பரம்பரை) தனது தேவியாகக் கொண்டிருந்தான். கண்டியில் சிறையிருந்த ''றொபட் நொக்ஸ்'' என்ற ஆங்கிலேயர் இரண்டாம் இராசசிங்கனின் பட்டத்துராணி ஒரு தமிழ் அரசி என்று குறிப்பிடுகின்றார்.[14]

---

12.இக்காலத்தில் சம்மாந்துறை நிந்தவூர் (சிங்காரபுரி) அக்கரைப்பற்று வன்னியர்களின் செல்வாக்கு திகவாபி பிரதேசத்தில் நிலைத்திருந்தது இது குறிப்பாக தொழில்சார் நிலையில் (விவசாயம், நீர்ப்பாசனம்) அமைந்திருந்ததை அறியமுடிகின்றது.

13.மட்டக்களப்பு மான்மியம் - பக்.64 - பதிப்பாசிரியர் எஸ்.எக்ஸ்.சி.நடராசா - 1962 இதற்கு பிற்பட்ட காலத்தில் ஒல்லாந்தர் மட்டக்களப்பைக் கைப்பற்றி புளியந்தீவில் கோட்டையொன்றை நிர்மாணித்ததைத் தொடர்ந்தே வாவியின் வடபகுதி மட்டக்களப்பு என வழங்கத் தொடங்கியது.

14.தமிழர் வரலாறும் இலங்கை இடப்பெயர் ஆய்வும் - பக் 62கதிர் தணிகாசலம் -1992

15. திருக்கோவில் பிரதேச இலக்கிய வரலாறு - பக்,56 நா.நவநாயகமூர்த்தி -2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்தினி தெய்வமான கண்ணகிமீது மிகுந்த பக்தியினைக் கொண்டிருந்த இராசசிங்கன் மட்டக்களப்பு பிராந்தியத்தில் பருவமழை குன்றி கடும் வரட்சி நிலவியிருந்த வேளை மட்டக்களப்பு சிற்றரசர்கள் இதுபற்றிக் கண்டி மன்னனுக்கு அறிவித்தனர். இதனைக் கேள்வியுற்ற இராசசிங்கன் கண்ணகையம்மன் ஆலயங்களில் விசேட பூசைகள் செய்து மழை வேண்டி அம்மனை வழிபாடு செய்யுமாறு ஆலோசனை கூறினான்.

கண்டி மன்னனின் ஆலோசனைப்படி மட்டக்களப்பிலுள்ள எல்லா கண்ணகையம்மன் ஆலயங்களிலும் விசேட பூசைகளும், வழிபாடுகளும் இடம்பெற்றன. ஆயினும் மழை பொழியவில்லை.[15] இவ்வேளை, 'அக்கரைப்பற்று வன்னி' பிரதேசத்தில் அமைந்திருந்த வரலாற்று சிறப்பினைக்கொண்ட அதாவது சாகாமம் ஊரக்கை பத்தினியம்மன் ஆலயத்தின் தொடர்ச்சியான தம்பிலுவில் கண்ணகையம்மன் ஆலயத்திலும் மற்றும் பட்டிநகர் கண்ணகையம்மன் ஆலயத்திலும் ஆலயங்கள் திறக்கப்பட்டு விசேட பூசை வழிபாடுகள் இடம்பெற்றன.

இவ்விரு கண்ணகையம்மன் ஆலயங்களிலும் 'கட்டாடி கண்ணப்பர்' என்பவர் கப்புகனாக கடமைபுரிந்து வந்தார். இவர் பனங்காடு பட்டிநகர் (பட்டிமேடு) கண்ணகையம்மன் ஆலயத்துக்கும் தம்பிலுவில் கண்ணகையம்மன் ஆலயத்துக்கும் இடையில் அமைந்த ஊரக்கை ஆற்றுக்கு அருகாமையில் நின்றிருந்த மருதமரத்து நிழலில் அம்மனைப் பிரதிஷ்டை செய்து வேண்டுதல் செய்தார். ஆயினும் மழை பெய்யவில்லை, கண்ணப்பரும் மனம் வருந்தினார்.

பின்னர் ஊரக்கை வெளியில் (வயல்) குறிப்பிட்டதொரு இடத்திலிருந்து பச்சைக் களிமண்ணை எடுத்து வந்து ஒரு பானை செய்து அதில் பொங்கலிட்டு அம்மனுக்குப் படைத்தார். பின்பு தன் இரு கண்களையும் மூடிக்கொண்டு பாடத்தொடங்கினார். கண்ணப்பர் பதினாலு பாடல்கள் பாடி முடிந்ததும் சற்றும் எதிர்பாராத வகையில் வானம் இருண்டு மழைபொழியத் தொடங்கியது. அன்று கட்டாடி கண்ணப்பரால் பாடப்பட்ட பாடல்களே இன்று 'தம்பிலுவில் மழைக்காவியம்' என்ற இலக்கியமாக மிளிர்கின்றது.[16]

16. தம்பிலுவில் கண்ணகி வழிபாடு - பக்.41, 42 நா.நவநாயகமூர்த்தி - 1999

17. தமிழ் சிங்கள இலக்கிய உறவு - பக்.59, 60 தமிழ் மணிப்புலவர் த.கனகரெத்தினம் - 1996



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விலக்கியத்தில் கண்டி மன்னன் இரண்டாம் இராசசிங்கனையும் இவர் புகழ்ந்துரைக்கத் தவறவில்லை. ``நீதி செறி கண்டி மகா ராசசிங்கனும் வாழி (பாடல் 15:வரி 3) என்று கண்டி மன்னனை இவர் குறிப்பிடுகின்றார். இவ்வேளை திருகோணமலை பிராந்தியமும் (வன்னிபங்கள்) கண்டி மன்னன் இராசசிங்கன் மேலாதிக்கத்தில் இருந்து வந்தது. இதே காலத்தில் திருகோணமலை தம்பலகாமத்தைச் சேர்ந்த திரு.வீரக்கோன் முதலியார் பாடிய ``வெருகல் ஸ்ரீ சித்திரவேலாயுத காதல்'' என்ற காவியமும் இரண்டாம் இராசசிங்கனை புகழ்ந்துரைக்கின்றது.[17] அக்கரைப்பற்று வன்னி தென்பிரதேசம் தம்பிலுவில் கண்ணகையம்மன் ஆலயத்தில் நிலவி வந்த ``கண்ணகி அம்மன் குளிர்த்தி'' இலக்கியமும் இவனது காலத்தில் உருவானதாகும்.

கி.பி.1659,60 களில் அக்கரைப்பற்று வன்னியானது தம்மளவில் பலமுள்ளதொரு சிற்றரசாக எழுச்சி பெற்றிருந்தது. தமிழர்கள் தனிப் பெரும்பான்மையினராக வாழ்ந்திருந்த அக்கரைப்பற்று வன்னியின் இராஜதானியாக விளங்கியிருந்த `கருங்கொடித்தீவு' நகரானது. மட்டக்களப்பில் அக்காலத்தில் நிலவியிருந்த முற்குக மரபினரின் வாழ்விட மையங்களில் ஒன்றாகவிருந்து வந்தது. ஆயினும் இங்கு வாழ்ந்திருந்த ஏனைய தமிழ்க்குடியினர் தங்கள், தங்கள் தனித்துவம் மிக்க வாழ்வியல் விழுமியங்களை பேணி வந்தனர். எவ்வாறாயினும் அக்காலத்தில் கருங்கொடித்தீவு நகரில் வாழ்ந்து வந்த மக்கள் அனைவரும் தமிழ்ச் சைவர்களாகவே வாழ்ந்திருந்தனர்.

இக்காலத்தில் (1660ல்) காளியோடை தொடக்கம் தெற்கே சங்கமன்கண்டி வரை பரந்திருந்த அக்கரைப்பற்று வன்னிப்பிரதேசத்தின் மேற்குப் பகுதிகளான சங்குமன்கண்டி (நகரம்) வில்காமம், கஞ்சிகுடி ஆறு, றூபஸ், சாகாமம், கிழவியூர்மலை கண்ணகிபுரம், முள்ளிக்குளமலை பிரதேசம் (அட்டாளைச்சேனை) இதன் வடக்கு பிரதேசம் (காளியோடை வரை) ஆகியன அடர்ந்த காடாகவிருந்தன. இவை கி.பி.1215 வரை பண்டைய நகர நாகரீகம் நிலவியிருந்த இடங்களாகும். இங்கெல்லாம் கட்டிட இடிபாடுகள் தொல்லியல் சின்னங்கள் (கல்வெட்டுக்கள் உள்ளிட்ட) அழிவுற்ற ஆலயங்கள், விகாரைகள் என்பனவற்றின் எச்சங்கள் காணப்பட்டன. இவை இப்பிரதேசத்தின் வரலாற்று தொன்மையை தெளிவுறுத்தின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதேவேளை, கிழக்கு கரையோரப் பகுதிகளில் மக்கள் குடியிருப்புக்களில் இடைக்கிடையே அடர்ந்த காடுகள் நிலவியிருந்தன. இவ்வாறு அமைந்திருந்த குடியிருப்புக்களாக பாலமுனை, மீனோடைக்கட்டு, அட்டாளைச்சேனை கருங்கொடித்தீவு, கோளாவில், தம்பட்டை, பனங்காடு, தம்பிலுவில் ஆகிய பழந்தமிழ்க் கிராமங்கள் குறிப்பிடத்தக்கன. திருக்கோவில் (கந்தப்பாணந்துறை) கிராமத்தில் பண்டைய கிழக்குத் துறைகளிலொன்றான (துங்ககோஉள) திருக்கோவில் துறையும் இதன் அருகே வரலாற்று சிறப்பினைக் கொண்ட சித்திரவேலாயுதர் ஆலயமும் சிறப்புடன் விளங்கியிருந்தன.[18]

இக்கால கட்டத்தில் ஒல்லாந்தரின் கண்டியுடனான நல்லுறவு அக்கரைப்பற்று, நிந்தவூர்பற்று, சம்மாந்துறைப் பற்று கரவாகுபற்று என்பன உள்ளிட்ட மட்டக்களப்பை சார்ந்ததாக அமைந்திருந்தது. கண்டிக்கு அவர்கள் பயணம் செய்யவும் மட்டக்களப்பைத் தரிப்பிடமாகவும் அவர்களை வைத்துக்கொண்டனர். மட்டக்களப்பூடான கண்டிப்பாதையே அவர்களுக்கு வசதியாக அமைந்தது.

## ஒல்லாந்தரின் மேலாதிக்கமும் கண்டி மன்னனின் செல்வாக்கும் (1660 - 1687 வரை)

கி.பி 1658ல் கண்டி மன்னனுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் படி வாசனை சரக்கு வணிகம் ஒல்லாந்து கிழக்கிந்திய கம்பெனியின் தனியுரிமையானது. அது மட்டுமன்றி இலங்கைத் தீவின் துறைமுகங்கள் அனைத்தும் ஒல்லாந்தரின் கட்டுப்பாட்டிலேயே இருக்கவேண்டுமெனவும், கண்டியரசன் தேவைக்காக மட்டக்களப்பு, திருகோணமலை துறைமுகங்கள் திறந்து விடப்படும் எனவும் முடிவெடுக்கப்பட்டது.

18. கி.பி 1603ல் கண்டி மன்னன் முதலாம் விமலதர்ம சூரியன் திருக்கோவில் சித்திரவேலாயுதர் ஆலயத்துக்கு விஜயம் செய்துள்ளான். இவ்வேளை ஆலய வருடாந்த உற்சவம் இடம்பெற்றுக் கொண்டிருந்து.
(போர்த்துக்கீசர் கால இலங்கை - பக்.323 பீ.ஈ.பீரிஸ்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால், கொட்டியாரக் குடாவின் முக்கியத்துவம் காரணமாக இலங்கைப் பொருட்கள் இக்குடாக் கடல் வழியாகவே பெருமளவு ஏற்றுமதியானதாலும் வணிக நடவடிக்கைகளில் முஸ்லீம்களும் (தென்னிந்திய) தமிழ்ச் செட்டிமார்களும் ஈடுபடுவது ஒல்லாந்தரை மேலும் விரோதம் கொள்ள வைத்தது. இதனிடையே கண்டியரசனுடன் தொடர்புகளை பேணுவதற்காக பிரித்தானியர்களும், பிரான்சியர்களும் அடிக்கடி கொட்டியாரத் துறையூடாக பயணிக்கத் தொடங்கினர்.[19]

அத்துடன் ஆங்கிலேயர் வாசனைச் சரக்கு உடுதுணிகள் வர்த்தகத்துக்காக கொட்டியாரத்தில் ஒரு தொழிற்சாலையை உருவாக்குவதற்கு கண்டியரசனிடம் அனுமதியும் பெற்றிருந்தனர். இது ஒல்லாந்தரை மென்மேலும் ஆத்திரமடையச் செய்தது. ஆங்கிலேய வர்த்தகக் கப்பல்கள் மட்டக்களப்பு திருகோணமலைத் துறைமுகங்களுக்கு வந்து துணிகளை விற்றுவிட்டு இந்திய துறைகளில் விற்பதற்காக பாக்கு ஏற்றிச் செல்ல ஏற்கனவே இராசசிங்கன் அனுமதி அளித்திருந்தான்.

'றொபட்நொக்ஸ்' என்ற ஆங்கிலேய வர்த்தகரின் ஆன் (ANNE) என்னும் கப்பல் துணிகளை விற்பனை செய்யும் பொருட்டு 'கொட்டியாரக்குடா' துறைமுகத்தில் 1659ல் நங்கூரமிட்டிருந்தது. டச்சுக்காரருக்கு மேற்படி கப்பல் நங்கூரமிட்டிருக்கும் செய்தி 1660ன் ஆரம்பப் பகுதியில் தெரியவந்தது. இதனால் ஆங்கிலேயருடன் டச்சுக்காரர் முரண்பட விரும்பவில்லை ஆனால் ஆங்கிலேய வர்த்தகர்களின் வர்த்தக நடவடிக்கைகள் அதிகரிக்கத் தொடங்கின.

டச்சுத் தளபதி 'வான்கோன்ஸ்' மேற்படி நடவடிக்கைகளை உடன் தடுத்து நிறுத்த வேண்டும் என யூலை 1660ல் முடிவு செய்தான். இராசசிங்கனுடன் தொடர்பு கொண்டு இவ்விடயம் பற்றிக் கேட்டபோது சகலவியாபாரிகளும் தமது பொருட்களை கொண்டு வந்து விற்பதற்கு எவ்வித தடையும் கிடையாதென அவன் பதில் அளித்தான். (Vangoens to Governor General on the 31st July 1660) ஆனால் வான்கோயன்ஸ் எவ்வித எதிர்ப்புக்களையும் தொடங்கவில்லை.

19. காலனித்துவ திருகோணமலை - பக்.63 கனகசபாபதி சரவணபவன் - 2010



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நிலையில் மத்தியில் 'ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனி' கறுவா வர்த்தகத்தில் ஈடுபடவும் பாக்கு, துணி வர்த்தகத்தை தென்னிந்தியாவுடன் மேற்கொள்ளவும் கொட்டியாரத்தில் ஒரு வியாபார நிலையத்தை நிறுவிட இராசசிங்கனிடம் அனுமதியைப் பெற்றது. இது விடயமாக பேரம்பேசுவதற்கும் நேரடிப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடவும் இராசசிங்கனுடன் தொடர்புகளை மேற்கொண்டனர்.[20]

ஏற்கனவே திருகோணமலை துறைமுகத்தில் நங்கூரமிட்டிருந்த 'றொபட் நொக்ஸ்' என்ற ஆங்கிலேய வர்த்தகரையும், அவனுடன் சேர்த்து இருபத்தொன்பது ஆங்கிலேயர்களையும் சந்தேகத்தின் பேரில் கைது செய்து கண்டி மன்னன் இராச சிங்கன் சிறையில் அடைத்திருந்தான். அவர்களை விடுவிப்பதற்காக ஆங்கிலேயக் கம்பனியார் இராசசிங்கனுடன் தொடர்ச்சியாக தொடர்புகளை மேற்கொண்ட வண்ணம் இருந்தனர். இது விடயமாக டச்சுக்காரர் இராசசிங்கனுடன் தொடர்பு கொண்ட போது அவன் மேற்படி விடயத்தில் அவர்கள் தலையிடக் கூடாதென பதில் அனுப்பி வைத்தான்.

இவ்வாறான பதில் 1638ல் இராசசிங்கனுக்கும் டச்சுக்காரருக்குமிடையில் ஏற்பட்ட 'ஏகபோக வர்த்தக உரிமை' உடன்பாட்டை மீறுகின்ற செயலாக காணப்பட்டது. இது டச்சுக்காரரின் ஆத்திரத்தை மேலும் கிளறியது. இவ்வாறான தொடர்ச்சியான முரண்பாடுகளுக்கு மத்தியில் இலங்கை நோக்கி வந்திருந்த இரண்டு ஆங்கிலேய வர்த்தக கப்பல்களை டச்சுக்காரர் பறிமுதல் செய்தனர். (S.Arasaratnam - 1958) இக்கால கட்டத்தில் கிழக்கு கரையோரம் தவிர்ந்த ஏனைய கரையோரப் பிரதேசங்கள் யாவும் டச்சுக்காரரின் இறுக்கமான கடற்பாதுகாப்பு வலயங்களாக மாற்றப்பட்டிருந்தன.

---

20. Dutch Power in Ceylon - 1650-1687 - Page 19 New Delhi - 1958 -S.Arasaratnam



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நிலையில் 'வான்கோயன்ஸ்' கி.பி.1664ல் இலங்கையின் தேசாதிபதியாகப் பதவியேற்றான். அவனுடைய முதல் நடவடிக்கையாக மேற்படி இரு துறைமுகங்களையும் கைப்பற்றும் படி இராணுவத் தளபதிக்கு இட்ட கட்டளை அமைந்தது. தளபதி 'டுபொன்' (Dupon) தலைமையின் கீழ் சென்ற டச்சுப் படைகள் திருகோணமலையை 1665களில் கைப்பற்றின. 1668ல் மட்டக்களப்பு துறைமுகம் டச்சுக்காரர் வசமாகியது. மட்டக்களப்பும் திருகோணமலையும் யாழ்ப்பாண தளபதியின் பொறுப்பில் விடப்பட்டன. ஆனால் 1669 களிலிருந்து மேற்படி இரு பிரதேசங்களுக்கும் தனியான தளபதிகள் நியமிக்கப்பட்டனர்.

## ஒல்லாந்தர் மேலாதிக்கத்தில் அக்கரைப்பற்று வன்னி

இதனைத் தொடர்ந்து கி.பி.1670இல் ஏற்படுத்திய டச்சுக்காரருடனான உடன்படிக்கையில் மேற்படி பிரதேசங்களிலுள்ள (கிழக்கிலங்கை) இருபத்தாறு வன்னிச் சிற்றரசர் சார்பாக 'கலாவ' அம்பாந்துறை (சம்மாந்துறை) அக்கரைப்பற்று வன்னிச் சிற்றரசர்கள் கைச்சாத்திட்டனர். அதாவது டச்சுக்காரரின் மேலாண்மையை ஏற்பதாகவும் சகலவிதமான வரிகளையும், திறைகளையும் ஏற்பதாகவும் தங்கள் பிரதேசங்களில் விளையும் நெல்லையும் ஏனைய விளை பொருட்களையும் தீர்மானிக்கப்பட்ட விலைப்படி அவர்களுக்கு விற்பதாகவும் அவ்வுடன்படிக்கை அமைந்தது.

இதற்குச் சன்மானமாக வான்கோயன்ஸ் மேற்படி பிரதேச மக்கள் சுதேச மதத்தை தாராளமாகப் பின்பற்றலாம் என்றும் அவர்களின் கோயில்களைத் தங்களின் சமய நடவடிக்கைகளுக்கு தொடர்ந்து உபயோகிக்கலாம் எனவும் உறுதியளித்தான். இவ்வுறுதி தாங்கிய ஓலைச்சுவடி தமிழில் எழுதப்பட்டிருக்கின்றது. (Hague Arch Voc Lnv 1174 FF - 212 - 213) என்பதும் குறிப்பிடத்தக்கது.[21]

21. இலங்கையில் தமிழர் - பக் 223 கலாநிதி மு.குணசிங்கம் - 2008 டச்சுக்காரர் கோட்டையை முதலில் கட்டாது தடை முகாமை மரத்தினாலே அமைத்திருந்தனர். பின்னர் ஏற்கனவே போர்த்துக்கீசர் கட்டிய கோட்டையின் அருகில் டச்சுக்காரர் தமது கல்லாலான கோட்டையை கட்டினர். 15 வைகாசி 1638ல் முதலில் மட்டக்களப்பு துறைமுகத்தை போர்த்துக்கீசரிடமிருந்து கைப்பற்றி இராச சிங்கனிடம் கையளித்த போது அவன் அங்குள்ள போர்த்துக்கீசரின் கோட்டையை அழித்திருந்தான். வான்கோயன்ஸினால் மட்டக்களப்பு துறைமுகம் கைப்பற்றப்பட்ட பின் மீண்டும் அங்கு டச்சுக்காரரினால் கோட்டை கட்டப்பட்டது. (கலாநிதி முருகர் குணசிங்கம் - 2008)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1670ல் கிழக்கிலங்கை வன்னிச் சிற்றரசர்களுக்கும் ஒல்லாந்த தேசாதிபதி 'வான்கோயன்ஸ்' என்பவனுக்குமிடையில் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கை ஆவணத்தின் மூலமாக அக்காலத்தில் கிழக்கிலங்கையில் அமைந்திருந்த தம்மளவில் பலமுள்ள வன்னிச் சிற்றரசுகளில் அக்கரைப்பற்று வன்னிச் சிற்றரசும் ஒன்றாக விளங்கியிருந்தமை தெளிவு.

1670ல் இரண்டாம் இராசசிங்கன் டச்சுக் காரருக்கெதிராக ஒரு பாரிய தாக்குதலை நடாத்தியுள்ளான். அவன் மேற்கிலும், தென்மேற்கிலும் இதேவேளை கிழக்கிலும் ஒரே நேரத்தில் பல்முனைத் தாக்குதலை நடாத்தினான். றொபட் நொக்ஸ் என்பவர், எனது காலத்தில் இவர்களுக்கிடையில் நடந்த பாரிய யுத்தம் இதுவென தனது நூலில் குறிப்பிட்டுள்ளார். (Knox Robert Opeit P.181) இப்படையெடுப்பின்போது பல அழிவுகளையும், இழப்புக்களையும் டச்சுக்காரர் சந்திக்க வேண்டி நேர்ந்தது.[22]

கி.பி.1672ல் திருகோணமலையில் தமது மேலாதிக்கத்தை நிலைநாட்ட பிரான்ஸ் படைகள் கொட்டியாரத்தில் நிலை கொள்ள முயன்றவேளை ஒல்லாந்தப் படைகளால் வெளியேற்றப்பட்டனர். இவ்வேளை கொட்டியாரம் தமிழ் வன்னியனாரின் ஆட்சியில் இருந்து வந்தது.[23] இக்காலத்தில் 'வான்கோயன்ஸ்' என்பவன் பற்றேவியா அரசின் தேசாதிபதியாகவிருந்தான். 1671ல் வான்கோயன்ஸ் இலங்கையிலிருந்து பற்றேவியா அரசின் தேசாதிபதியாகப் பதவி உயர்வு பெற்றுச்சென்றபோது 'வான்கோயன்ஸ்' என்ற பெயரையே தாங்கிய தன் மகனை இலங்கையின் தேசாதிபதி ஆக்கிவிட்டுச் சென்றான்.

22. இலங்கையில் தமிழர் - பக்.224 கலாநிதி மு.குணசிங்கம் - 2008
23. காலனித்துவ திருகோணமலை - பக்.140-42 கனகசபாபதி சரவணபவன் -2010
* பிரான்சியர் திருகோணமலை துறைமுகத்தை ஆக்கிரமிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த வேளையில் ஒல்லாந்தர் தாம் போர்த்துக்கேயரிடமிருந்து கைப்பற்றியதால் துறைமுகம் தமக்கு சொந்தமென வாதிட்டனர். ஆனால் பிரான்சியரோ தாம் கண்டியரசனுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் படி பிரான்சியர் பயன்படுத்த அனுமதிக்கப்பட்ட செய்தியை கூறினார் ஆனால் ஒல்லாந்தரோ துறைமுகங்களை கொட்டியாரம் தமிழ் வன்னியரின் ஆட்சியில் இருப்பதால் கண்டியரசனின் அதிகாரம் செல்லாது என்ற கருத்தைத் தெரிவித்திருந்தனர். இவ்வாறு இரு தரப்பினரும் நேரடி மோதலில் ஈடுபடாமல் இருந்த சந்தர்ப்பத்தில் பிரான்சியரின் உணவுப் பற்றாக்குறையால் பிரஞ்சுக் கப்பல்கள் சோழமண்டலம் சென்றது. இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பிரான்சியர் மீது ஒல்லாந்தர் போர் நடவடிக்கை யொன்றை மேற்கொண்டு அவர்களை கொட்டியாரத்திலிருந்து வெளியேற்றினர். 1674ல் அவர்கள் இலங்கையை விட்டு வெளியேறினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1674ல் பிரான்சியர் இலங்கையை விட்டு வெளியேறியதைத் தொடர்ந்து டச்சுக்காரர் மீண்டும் இலங்கையின் சகல கரையோரத் துறைமுகங்களையும் பலப்படுத்தினர்.

1675ல் மலைநாட்டில் படையெழுச்சியொன்று ஏற்பட்டது. இதனால் 1665க்கு முன்பு பிடித்த இடங்களையெல்லாம் கண்டியரசனுக்கு திருப்பி அளிக்குமாறு வான்கோயன்சுக்கு பற்றேவியாவிலிருந்து இராசப் பிரதிநிதியால் ஆணை பிறப்பிக்கப்பட்டது. ஆனாலும் வயோதிகனாகவிருந்த இராசசிங்கன் அவற்றைப் பெற்றுக்கொள்ள முயற்சிகள் செய்யவில்லை. மாறாக இடையே ஒல்லாந்தருடன் பகைமை கொண்டு வந்தான்.[24]

கி.பி1677ல் பற்றேவியா கவுன்சில் இராசசிங்கனின் கண்டி பிரதேசத்தில் டச்சுக்காரரினால் கைப்பற்றப்பட்ட பிரதேசங்களை திரும்பவும் அவனிடம் கொடுப்பது என்றும் அவனுடன் சமாதான உடன்படிக்கை செய்வதென்றும் முடிவுசெய்திருந்தது. இதேவேளை இராசசிங்கன் தனது ஐம்பது வருடகால தொடர்ச்சியான ஆட்சியின் இறுதிக்கட்டத்தை நெருங்கியிருந்தான். 1680களிலிருந்து இராசசிங்கனால் டச்சுக்காரரிடமும் எதிர்ப்பைக் காட்ட முயலவில்லை. டச்சுக்காரரும் கண்டி இராச்சியத்திலிருந்து கைப்பற்றிய பிரதேசங்களை இராசசிங்கனிடம் கையளித்தனர்.

இவ்வாறு கண்டி மன்னனுக்கும் ஒல்லாந்தருக்குமிடையில் பகைமை விலகி நல்லுறவுகள் ஏற்பட்டிருந்ததைத் தொடர்ந்து கண்டி மன்னன் மட்டக்களப்புக்கு விஜயம் செய்துள்ளான். கி.பி.1683ல் (ஏப்ரல் 26) ராஜசிங்கன் சம்மாந்துறைக்கு விஜயம் செய்த வேளை சம்மாந்துறையைச் சேர்ந்த இராமநாதர் என்ற பிராமணருக்கு இரண்டாம் இராஜசிங்கனால் அளிக்கப்பட்ட நன்கொடை பற்றி சம்மாந்துறை செப்பேடுகள் குறிப்பிடுகின்றன.[24A]

---

24. நம் முன்னோரளித்த அருஞ்செல்வம், 2ம் பாகம் - பக்.210,211 பேராசிரியர் எஸ்.ஓ.பேக்மன், ஜி.சி.மென்டிஸ் -1966

24A. ஈழநாட்டுத் தமிழ் சாசனங்கள், கிழக்கிலங்கை சாசனங்கள் -3 - கட்டுரை.கா.இந்திரபாலா - 1963 'சிந்தனை' மலர் 2 - இதழ் 2-3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காலத்தில் குறிப்பாக கி.பி.1670 தொடக்கம் 1680 வரையுள்ள காலத்தில் ஒல்லாந்தர் தங்கள் வாணிப நடவடிக்கைகள், பாதுகாப்பு ஆகியன கருதி கோட்டை (புளியந்தீவு) துறைமுகங்களை கைப்பற்றி தங்கள் வசம் வைத்திருந்தபோதும் மட்டக்களப்பை தங்கள் பூரண கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர இயலவில்லை. இப்பிராந்தியத்தில் வன்னியர்களது ஆட்சியே நிலைத்திருந்தது. இவர்கள் தங்கள் பாதுகாப்பின் நிமித்தம் கண்டி மன்னனின் மேலாதிக்கத்தைப் பெயரளவில் ஏற்றிருந்ததுடன், நல்லுறவுகளும் கொண்டிருந்தனர்.[25]

மேலும் இக்காலத்தில் (1670-1680) இராசசிங்கனுடன் ஒல்லாந்தர் அடிக்கடி போர்களில் ஈடுபட்டுக்கொண்டிருந்ததால் மட்டக்களப்பு பிராந்தியத்தில் முழுமையாகத் தமது மேலாதிக்கத்தைச் செலுத்த முடியாது போயிற்று. மட்டக்களப்புத் துறைமுகப் பகுதிகளை மட்டுமே ஒல்லாந்தர் தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்தனர். பரவலாக இவர்களது மேலாதிக்கம் நிலவவில்லை.

இக்காலத்தில், ஒல்லாந்தரோடு இடம்பெற்ற கிளர்ச்சிகளில் ஈடுபட்ட ஏறாவூர் பற்று (கோறளை) வன்னியன் இளஞ்சிங்கன் வன்னியனை ஒல்லாந்தரால் பிடிக்கமுடியாதிருந்தது. இவனை ஒல்லாந்த கமாண்டர் பீற்றர் டி குறவ் தேடித் திரிந்தும் அவன் பிடிபடவில்லை.[26] கி.பி.1675ல் இலங்கையில் அப்போதிருந்த ஒல்லாந்த ஆளுநர் எழுதிய தனது அறிக்கையில் மட்டக்களப்பு முற்குகர் நம்பமுடியாதவர்கள் என்றும் துட்டர்கள் என்றும் அறிக்கையில் கூறுவதுடன் தமது கம்பெனிக்கு மட்டக்களப்பில் ஏற்பட்ட நஷ்டங்களுக்கெல்லாம் முற்குகர்களே காரணம் என்று குற்றம் சாட்டினர்.(வான்கோயன்சின் 12.04.1675ம் ஆண்டு அறிக்கை)[27]

---

25. திருக்கோவில் பிரதேச இலக்கிய வரலாறு - பக்.55 நா.நவநாயகமூர்த்தி - 2014
26. மட்டக்களப்பு வரலாறு – பக் 89-90 வெல்லவூர் கோபால் 2005
27. மட்டக்களப்பு குகன்குல முற்குகர் வரலாறும் மரபுகளும் - பக் 41 ஞா.சிவசண்முகம் ஜே.பி. – 2000



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காலத்தில் (1670 – 1687) காளியோடை தொடக்கம் தெற்கே சங்கமன்கண்டி வரை பரந்திருந்த அக்கரைப்பற்று வன்னியை ஆட்சிபுரிந்து வந்த தமிழ் சிற்றரசன் ஒல்லாந்தருடன் மேற்கொண்ட உடன்படிக்கையின்படி அவர்களது மேலாதிக்கத்தை ஏற்றிருந்தபோதும் சுதந்திரமுள்ள சிற்றரசனாகவே செயற்பட்டு வந்ததுடன் கண்டியைப் பகைக்காத வகையிலும் நடந்து வந்தான்.

மட்டக்களப்பு பிரதேசத்தில் நெல் விளைச்சல் செழிப்புடன் விளங்கி வந்த வன்னிகளில் அக்கரைப்பற்றும் அக்காலத்தில் இடம்பெற்றிருந்தது. டச்சுக்காரர் தமக்குத் தேவையான அரிசியை மட்டக்களப்பிலிருந்து திறையாகப் பெற்றவேளை அக்கரைப்பற்று வன்னிப் பிரதேசத்திலிருந்தும் ஒருபகுதி அரிசியை (1682,83 கள்) ஒல்லாந்தர் திறையாகப் பெற்றுவந்துள்ளதை அறியமுடிகின்றது.[28]

இதேவேளை மழையின்மையால் அடிக்கடி வரட்சிக்குள்ளாவதால் நெல்உற்பத்தி அக்கரைப்பற்று வன்னிப் பிரதேசத்தில் பாதிக்கப்பட்டும் வந்துள்ளதை இப்பிரதேச கிராமிய இலக்கியங்கள் (தம்பிலுவில் மழைக்காவியம், பட்டி நகர் கண்ணகையம்மன் மழைக்காவியம் என்பன) தெளிவுறுத்துகின்றன.

இக்காலத்தில் அக்கரைப்பற்று வன்னிப்பிரதேசத்தில் சைவாலயங்கள் சிறப்புடன் விளங்கியிருந்தன. மாரி, காளி போன்ற ஆலயங்களும் தோற்றம் பெற்றிருந்தன. கண்டியுடன் நெருக்கமான சமூக, சமய, கலாசார, வாணிப உறவுகள் நிலவியிருந்த அக்கரைப்பற்று வன்னிப் பிரதேசத்தில் கண்டி இராச்சியத்தில் செல்வாக்குடன் விளங்கி வந்த கண்ணகி என்ற பத்தினி வழிபாடு இங்கு தனிப் பெரும்பான்மையினராக வாழ்ந்திருந்த தமிழ்ச் சைவரிடையே சிறப்புடன் விளங்கியிருந்தது. தம்பிலுவில் பனங்காடு பட்டிநகர் ஆகிய இடங்களில் கண்ணகை அம்மன் ஆலயங்கள் சிறப்புடன் விளங்கியிருந்தன.

---

28. கண்டி இராச்சியத்தை அண்மித்த தமிழ்ப் பிரதேசமாகவிருந்த மட்டக்களப்பு செழிப்பான நீர் வளம், நிலவளம் என்பவற்றால் அதிகளவு நெல் உற்பத்தியை உண்டுபண்ணும் பிரதேசமாகவும் மக்கள் செறிந்து வாழும் பிரதேசமாகவும் இக்காலத்தில் காணப்பட்டது. (கலாநிதி மு. குணசிங்கம் - 2008 )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காலத்தில் கட்டிடங்கள் கட்டுவதற்கும் கப்பல்கள் கட்டுவதற்கும் தேவையான மரப்பலகைகளை அதிக செலவின்றிப் பெறுவதற்காக 'வான்கோயன்ஸ்' மட்டக்களப்பில் மரம் அரியும் ஆலையொன்றை 1678இல் நிறுவியிருக்கின்றான். இவ்வேளை அக்கரைப்பற்று வன்னியின் மேற்குப்பகுதிகளில் நிலவியிருந்த அடர்ந்த காடுகளிலிருந்தும் வெட்டப்பட்ட நல்ல தரமான கருங்காலி முதிரை மரங்களை பற்றேவியா, நெதர்லாந்து நாடுகளுக்கு டச்சுக்காரர் அனுப்பியுள்ளனர்.

1685ம் ஆண்டளவில் இரண்டாம் இராசசிங்கனின் இறுதிக்காலத்தில் கண்டி மன்னனின் மேலாதிக்கம் மட்டக்களப்பில் நலிவுற்றிருந்தது. இவ்வேளை இப்பிராந்தியத்தில் மழை குறைந்து வரட்சி நிலவியிருந்தது. இங்கு வாழ்ந்திருந்த மக்கள் பஞ்சம் வறுமை நிலை காரணமாக பெரும் அல்லல் உற்றிருந்தனர். உயிரிழப்புக்களும் நிகழ்ந்து வந்தன.

இந்நிலையில் கண்டி மன்னன் மட்டுமன்றி மக்களும் (சுதேசி) வெளிநாடுகளுடன் வாணிபம் செய்வதும் ஒல்லாந்தரால் தடுக்கப்பட்டிருந்தமையும் பெரும் பாதிப்புக்களையும் தோற்றுவித்திருந்தன. இந்நிலையில் (1685,86 கள்) ஒல்லாந்தர் தங்கள் மேலாதிக்க உணர்வுகளைத் தளர்த்தி மக்களுடனும் இப்பிராந்திய ஆட்சியாளர்களான வன்னிச் சிற்றரசர்களுடனும் நெகிழ்வுடனும் நடந்து கொள்ளத் தொடங்கினர். இதன் காரணமாக பெயரளவில் ஒல்லாந்தரின் மேலாதிக்கத்தை வன்னிச் சிற்றரசர்கள் ஏற்றுக் கொண்டனர்.[29]

---

29. திருக்கோவில் பிரதேச இலக்கிய வரலாறு - பக் 63, 64 நா. நவநாயகமூர்த்தி – 2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிபி 1687ல் கண்டி மன்னன் இராசசிங்கன் எதிர்பாராத வகையில் கண்டிச் சிறையில் அடைபட்டிருந்த டச்சுக் கைதிகளை விடுவித்தான். அத்தோடு தனது நல்லெண்ணத்தையும் டச்சுக்காரருக்குத் தெரிவித்தான். 1687ல் தனது வாரிசாகிய இரண்டாம் விமலதர்மசூரியனை கண்டி மன்னனாக்கினான். 1687 க்குப் பின்னர் டச்சுக்காரருக்கும் கண்டி மன்னர்களுக்குமிடையில் உறவுகள் சமாதான அடிப்படையில் அமைந்தன.

இதேவேளை கிபி 1670ல் கிழக்கிலங்கை வன்னிச்சிற்றரசர்கள் ஒல்லாந்தருடன் செய்து கொண்ட டச்சுக்காரர்களின் மேலாண்மையை ஏற்பது: சகல விதமான வரிகளையும் திறைகளையும் ஏற்பது: தங்கள் பிரதேசங்களில் விளையும் நெல்லையும் ஏனைய விளைபொருட்களையும் தீர்மானிக்கப்பட்ட விலைப்படி அவர்களுக்கே விற்பனை செய்தல் என்பனவற்றை உள்ளடக்கிய உடன்படிக்கையினை ஏற்று இதற்குப் பதிலாக சுதேசிகள் தாங்கள் விரும்பிய மதத்தைப் பின்பற்ற இடமளிக்கப்பட்டிருந்ததால் அக்கரைப்பற்று வன்னிப் பிரதேசத்தில் சைவம் செழிப்புடன் விளங்கியிருந்தது.

மேலும் நம்பிக்கையின் அடிப்படையில் சடங்குகள் சார்ந்த இந்து சமய நம்பிக்கைகளையும் மக்கள் சுதந்திரமாகக் கைக்கொண்டு வந்தனர். சிவ வழிபாடும் (இலிங்கம்) இதன் அம்சமான பெரிய தம்பிரான் (சூலம்) வழிபாடும் தாய்த் தெய்வ வழிபாட்டு அம்சங்களும் முருகன், கணபதி, ஐயனார் போன்ற தெய்வ வழிபாடுகளும் நிலவி வந்தன.

இதேவேளை இதற்கு முந்திய காலத்தில் அந்நியரான போர்த்துக்கீசரால் ஏராளமான சமய இலக்கியங்கள் அழிக்கப்பட்டும் தீக்கிரையாக்கப்பட்டும் வந்த நிலையில் இப்பிரதேசத்தில் பாதிப்புற்றிருந்த இலக்கியப் பாரம்பரியம் மீண்டும் செழிப்புற்று நிலைபெறத் தொடங்கியது. புதிய இலக்கியங்கள் உருவாகி வந்ததுடன் இவை சுவடிகளாகவும் நிலவி வந்தன. இதற்கு ஒல்லாந்தர் தங்கள் ஆதரவை நல்கி வந்ததையும் அறிய முடிகின்றது. கருங்கொடித்தீவு, கோளாவில், பனங்காடு, தம்பிலுவில் ஆகிய பழந்தமிழ்க் கிராமங்கள் அக்கரைப்பற்று வன்னியில் இலக்கியமையங்களாக அக்காலத்தில் மிளிர்ந்து வந்துள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒல்லாந்தர் காலத்திலேயே மட்டக்களப்பில் (அம்பாறை உள்ளிட்ட) வழிபாட்டுத் தலங்கள் பற்றிய பெருமளவு ஆவணங்கள் உருவாகியுள்ளன. தாதன் கோயில் கல்வெட்டு போன்றவை இக்காலத்தில் உருவானவைகளாகும். இக்காலம் தொடக்கம் (1670 – 1690) கிபி 1766ம் ஆண்டு வரையான ஒல்லாந்தர் மேலாதிக்கம் நிலவியிருந்த காலத்திலும் இதனைத் தொடர்ந்து கிபி 1795ம் ஆண்டுவரை மட்டக்களப்பில் ஒல்லாந்தர் ஆட்சி நிலைத்திருந்த காலத்திலும் ஏராளமான இலக்கியங்கள் மட்டக்களப்பு வன்னிப் பிரதேசங்களில் உருவாகி வந்துள்ளன.

கல்வெட்டுப் பாடல்கள், அரசியல் ஆவணங்கள், வழிபாட்டுப் பத்ததிகள், காவியங்கள், பள்ளுப் பாடல்கள் என்பன தோற்றம் பெற்று ஏட்டுச் சுவடிகளாக நிலவிவந்ததுடன் வாய்மொழி இலக்கியங்களாக (வயல் பாடல்கள் உள்ளிட்டவை) பாமரக் கவிஞர்களால் பாடப்பட்ட பாடல்களும் நிலவியிருந்தன. எல்லாவற்றிற்கும் மேலாக மட்டக்களப்பு தேசத்தின் பண்டைய வரலாற்றைக் குறிப்பிடும் 'மட்டக்களப்பு மான்மியம்' இலக்கியமும் ஒல்லாந்தர் காலத்திலேயே அவ்வப்போது எழுதப்பட்டு ஆங்கிலேயர் காலத்தில் தொகுக்கப்பட்டு நிறைவெய்தியது என்பதும் குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒல்லாந்தர் மேலாதிக்கத்தின் கீழ் வன்னியர் ஆட்சி (கிபி 1688 - 1765)

இக்கால கட்டத்தில் (கிபி 1688 – 1765) கண்டி மன்னர்களுக்கும் ஒல்லாந்தர்களுக்குமிடையில் புரிந்துணர்வு நட்பு ரீதியில் உறவுகள் நிலவியிருந்தன. இவ்வேளை மட்டக்களப்பில் அதிகாரம் செலுத்தி வந்த ஆட்சித் தலைவர்களான வன்னியர்கள் ஒல்லாந்தரின் மேலாதிக்கத்தை ஏற்றிருந்தபோதும் இப்பிராந்தியத்தில் சுதந்திரமுள்ள சிற்றரசர்களாகவே அதிகாரம் செலுத்தி வந்தனர். இவர்கள் கண்டி மன்னனுடன் நல்லுறவுகளையும் பேணி வந்துள்ளனர்.

இவ்வேளை கண்டிக்கும் அக்கரைப்பற்று வன்னிக்குமிடையில் நெருக்கமான சமூக சமய கலாசார வாணிபத் தொடர்புகளும் நிலவி வந்தன. கண்டிக்கும் அக்கரைப்பற்று வன்னிப் பிரதேசத்துக்குமிடையில் ஒரு நேரடிப் பாதையும் இருந்து வந்தது. கருங்கொடித் தீவிலிருந்து பனங்காடு பொத்தானை ஊடாக பக்மிட்டி சென்று அங்கிருந்து வெல்லவாயா (கொங்கு காசியப்பன் பட்டி) சென்று ஊவாச் சிற்றாட்சியூடாக கண்டிக்கு ஒருபாதை சென்றது. இப்பாதையூடாக அக்கரைப்பற்று வன்னிக்கும் கண்டிக்குமிடையில் நெருங்கிய சமூக சமய கலாசார வாணிபத் தொடர்புகள் நிலவி வந்துள்ளனன.

இதனை அக்கால கட்டத்தில் அக்கரைப்பற்று வன்னிப் பிரதேசத்தில் உருவாகி நிலவி வந்த இன்று காணக்கிடைக்கும் இலக்கியங்கள் தெளிவுறுத்துகின்றன. இவை எல்லாவற்றிற்கும் மேலாக அக்காலத்தில் இப்பிரதேச கண்ணகையம்மன் வழிபாட்டுடன் (ஆலயங்கள்) கண்டி ஊவா அரசுகள் கொண்டிருந்த நெருக்கமான உறவுகள் பற்றி இன்று காணக்கிடைக்கும் தம்பிலுவில், பட்டிமேடு ஆகிய ஆலயங்களில் சேமிக்கப்பட்டுள்ள கண்ணகி வழிபாட்டுப் புனித சின்னங்கள் (அம்மானை காய்கள், காற்சிலம்பு உள்ளிட்ட) உணர்த்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காலத்தில் ஒல்லாந்தர் தோம்பு என்னும் பதிவேட்டு முறையின் மூலம் வரிகள் அறவீடு செய்து வந்ததுடன் தொடர்ந்து முற்குகச் சட்டத்தையே நடைமுறைப்படுத்தி வர வன்னியர்களுக்கு அனுமதியளித்திருந்தனர். இப்பிராந்திய ஆட்சித் தலைவர்களான வன்னியர் முற்குகவராகவிருந்ததும் பெரும்பான்மையினராக முற்குக குலத்துத்துத் தமிழர்களே இருந்து வந்ததும் இதற்கான காரணமாகும். ஒல்லாந்தருக்கு கம்பெனியின் வருமானமும் வாணிபமுமே முக்கியமானவைகளாகவிருந்தன. இவை பாதிக்காத வகையில் அவர்கள் நடந்து வந்தனர்.

இதேவேளை கண்டியுடனான போக்குவரத்து, அரசியல் செயற்பாடுகள் யாவற்றிற்கும் அக்கரைப்பற்று உள்ளிட்ட மட்டக்களப்பே ஒல்லாந்தருக்கு வசதியாகவிருந்தது. ஆதலால் கண்டி மன்னனுடனான உறவும் மட்டக்களப்பு சிற்றரசர்களுடனான உறவும் பாதிக்காத வகையில் அவர்கள் நடந்து வந்தனர். அத்துடன் மட்டக்களப்பு இலக்கிய வளர்ச்சியில் அக்கறை கொண்டவர்களாக இலக்கிய முயற்சிகளுக்கு ஆதரவு நல்கி வந்துள்ளனர்.

இக்கால கட்டத்திலேயே புத்தளத்திலிருந்து அகதிகளாக வந்து நடுக்காடு பிரதேசத்தில் வாழ்ந்திருந்த சிங்கள மக்களுக்கு அருகாய் தங்கியிருந்த மதம் மாறிய முக்குவ முஸ்லிம் குடியினர் சிலர் அவ்வேளை நாடுகாண வந்திருந்த கண்டி மன்னன் கீர்த்தி ஸ்ரீ ராசசிங்கனிடம் தாங்கள் குடியிருக்க நிலம் கேட்டதைத் தொடர்ந்து கண்டி மன்னன் வேண்டுகோளின் பேரில் அக்கரைப்பற்று வன்னி இராசாவால் இவர்கள் 'அணுக்கன்வெளி' என்னும் இடத்தில் குடியேற்றப்பட்டதைத் தொடர்ந்து அட்டாளைச்சேனையிலும் இதனைத் தொடர்ந்து கருங்கொடித்தீவிலும் தமிழ் மக்களுக்கு அருகாய் குடியேறி வாழ்ந்திருந்தனர்.

இவை பற்றியெல்லாம் இனி விளக்கமாக நோக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரண்டாம் விமலதர்மசூரியன் காலம்

கிபி 1687ல் இரண்டாம் இராசசிங்கன் இறக்க இவனது மகனான இரண்டாம் விமலதர்மசூரியன் (1687-1706) என்பவன் கண்டி மன்னனானான். இரண்டாம் இராசசிங்கனின் முதல் மனைவி நாயக்கர் வம்சத்து இளவரசியாவாள். இவளுடைய புதல்வனே இரண்டாம் விமலதர்மசூரியன். ஆதலால் தாய் வழியில் இவன் தமிழனாவான். இவன் சமாதானப் பிரியனாதலால் ஒல்லாந்தருடன் இவன் நட்பாகவிருந்தான் . மேலும் ஒல்லாந்தர் வசமிருந்த பகுதிகள் (நாடுகள்) அவர்களது ஆதிக்கத்தை ஏற்றுக் கொண்டான். இந்த வகையில் மட்டக்களப்பு ஒல்லாந்தர் வசமிருப்பதையும் இவன் ஏற்றுக் கொண்டான்.[1]

ஆயினும் தனது வாணிப நடவடிக்கைகளுக்காக கரையோரப் பிரதேசங்களையும் துறைமுகங்களையும் நம்பியிருந்தான். இவ்வேளை பற்றேவியாவிலிருந்த அதிகாரிகள் ஏற்கனவே அதற்குச் சம்மதித்திருந்தபடியால் 'லோறன்ஸ் பைல்' (1679 – 1698) என்ற ஒல்லாந்த தேசாதிபதி 1688ல் மூன்று கோறளைகளையும் சப்த கோறளையின் ஒரு பகுதியையும் கிழக்குக் கரையிலே மட்டக்களப்புக்குத் தெற்கே பனாமா (பாணகை) என்றழைக்கப்படும் செழிப்பான பாகம் உள்ளடக்கிய ஒரு பகுதியையும் (துறைமுகங்கள் உள்ளிட்ட வன்னிச் சிற்றரசு) திருப்பி அவனுக்கு வாணிபம் செய்ய அளித்தான்.

---

1. திருக்கோவில் பிரதேச இலக்கிய வரலாறு பக் 64 நா.நவநாயகமூர்த்தி – 2014 நாயக்கர் குல இளவரசியைப் பட்டத்து இளவரசியாகக் கொண்டிருந்த இவனது அரசவையில் இளவரசியுடன் வந்திருந்த உறவினர்கள் அரசவையில் இருந்தனர். இவனுக்குப் பிரதானிகள், பிக்குகள் என்போர் ஆதரவும் இருந்தது.கண்டி தலதாமாளிகையையும் இவன் புனரமைத்தான்.( இலங்கை சுருக்க வரலாறு பக் 279 கலாநிதி க. குணராசா கமலா குணராசா -2008)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேவேளை மட்டக்களப்புக் கோட்டை மற்றும் துறைமுகங்களை ஒல்லாந்தர் தம் வசம் வைத்துக் கொண்டனர்.[2] இதனைத் தொடர்ந்து தெற்கே அக்கரைப்பற்று வன்னி தொடக்கம் வடக்கே ஏறாவூர் வன்னி வரையான பிரதேசம் தொடர்ந்து ஒல்லாந்தர் மேலாதிக்கத்தின் கீழ் இருந்து வந்ததுடன் இதற்குட்பட்ட கரையோரத் துறைமுகங்களும் ஒல்லாந்தரின் பிடியின் கீழே இருந்து வந்துள்ளதை உணரமுடிகின்றது. இதேவேளை பாணமை பற்று பிரதேசம் கண்டி மன்னனின் ஆதிக்கத்தின் கீழ் இருந்து வந்துள்ளதுடன் இப்பிரதேச துறைமுகங்கள் விமலதர்மசூரியனின் வர்த்தக நடவடிக்கைகளுக்கும் பயன்பட்டு வந்தன.[3]

லோறன்ஸ் பைலுக்குப்பின் வான்ரீ (1692-1697) என்பவன் ஒல்லாந்த தேசாதிபதி ஆனான். இவன் நட்புறவுடன் விமலதர்மசூரியனுடன் சமாதான ஒப்பந்தம் ஒன்று செய்து கொண்டான். இதன் பிரகாரம் பாணகை உள்ளிட்ட மட்டக்களப்பு பிராந்தியம், கற்பிட்டி, கொட்டியாரம் ஆகிய துறைமுகங்கள் மூலம் கண்டி மன்னனும் மக்களும் வெளிநாட்டவர்களும் வாணிபம் செய்ய அனுமதிக்கப்பட்டனர். (நா. நவநாயகமூர்த்தி – 2014)

---

2. நம்முன்னோரளித்த அருஞ்செல்வம் இரண்டாம் பாகம் - பக் 211 பேராசிரியர் எஸ் ஏ. பேக்மன் ஜி. மெண்டிஸ் 1966

லோறன்ஸ் பைல் (Pyl) என்ற ஒல்லாந்த உயர் தேசாதிபதி கிழக்கில் திருகோணமலை, கொட்டியாரம், மட்டக்களப்பு ஆகிய துறைகளை (துறைமுகங்கள்) கண்டியரசன் இரண்டாம் விமலதர்மசூரியனுடன் நட்புறவு கொள்ளும் முகமாக கண்டியரசனுக்கே வழங்கினான். இதேவேளை இவன் திருமலை மட்டக்களப்பு ஆகிய மையங்களிலிருந்த கோட்டைகளை ஒல்லாந்தர் வசம் வைத்திருந்தனர். இலங்கை வரலாறு பாகம் II – பக் 210 பேராசிரியர் செ.கிருஷ்ணராஜா – 2005

3. இக்காலத்தில் பாணமை வன்னி முற்குக வன்னியனின் ஆட்சியின் கீழ் இருந்து வந்ததடன் இன்றைய லகுகல பொத்துவில் பிரதேச செயலகப் பிரிவுகளை உள்ளடக்கியிருந்தது. இப்பிரதேசத்தில் தமிழ் மக்களே பெருமளவில் வாழ்ந்திருந்தனர். 1818 வெல்லசை கலவரத்தை தொடர்ந்தே பாணமை பற்றில் சிங்கள மக்கள் குடியேறி தமிழ் மக்களுடன் ஓரினத்தவராக (சமயம், பண்பாடு, கலாசாரம்) வாழ்ந்து வந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் அரசனது இராணியை தஞ்சையிலிருந்து (நாடு) அழைத்து வருவதற்கு கிபி.1697ல் ஒல்லாந்த அரசு ஒரு மரக்கலம் கொடுத்து உதவியது. இடையில் சில கசப்புணர்வுகள் ஏற்பட்டபோதும் விமலதர்மசூரியன் சமாதானத்தில் விருப்பம் உள்ளவனாதலால் ஒல்லாந்தருடன் நட்பாகவே இருந்தான். இவன் பிற மதங்களையும் பாதுகாத்தான்.[4] இவனது காலத்தில் ஒல்லாந்தர் கண்டியுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தின்பால் கண்டியரசரைப் பகைக்காத வகையில் தங்கள் ஆட்சியை நடத்தினர் எனலாம்.

இரண்டாம் விமலதர்மசூரியனது காலத்தில் (1687-1706) அக்கரைப்பற்று வன்னி உள்ளிட்ட மட்டக்களப்பு பிராந்தியத்தில் பெரும்பஞ்சம் நிலவியிருந்தது. 1686ல் இரண்டாம் இராசசிங்கன் காலத்தில் ஏற்பட்ட கடும் வரட்சிநிலை இவனது காலத்திலும் தொடர்ந்து நிலவியிருந்தது. இக்காலத்தில் மழை குறைவடைந்து செந்நெல் விளைவு குன்றி பெரும்பஞ்சம் நேரிட்டு நோயினால் துயரமுற்று வெகுகுடிகள் அழிந்தும் போயின. இவ்வேளை கண்டி மன்னனும் மட்டக்களப்பைக் கண்டியால் நெகிழவிட்டான்.

அக்கரைப்பற்று வன்னி உள்ளிட்ட மட்டக்களப்பு மக்கள் பெரும் பஞ்சத்தால் துயரடைந்த நிலையில் ஒல்லாந்தர் தானியங்களை (உணவுப் பொருட்கள்) குறைந்த விலையில் கொடுத்து மக்களை தாபரித்து வந்தனர்.[5] இந்நிலையில் மட்டக்களப்பு ஆட்சித் தலைவர்களான வன்னி இராசாக்களும் கண்டி மன்னனின் பிரதிநிதிகளான நிலமைகளும் ஒல்லாந்தரையே ஆட்சியாளராகக் கருதி ஒருசபை கூட்டி கண்டிக்கும் மட்டக்களப்பு அரச வருமானத்தில் மூன்றில் ஒன்று கொடுக்கும்படி கண்டி அரசனிடம் சம்மதம் பெற்று மட்டக்களப்பை ஒல்லாந்தருக்கு ஒப்புக் கொடுத்தனர்.

---

4. புதுமுறைச் சரித்திரம் பகுதி I, II – பக் 114-116 V.S.S.ராம், T.V.K.மூர்த்தி – 1961

5. மட்டக்களப்பு மான்மியம் - பக் 64 பதிப்பாசிரியர் எப். எக்ஸ் நடராசா கலா நிலையம் - 1962



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனைத் தொடர்ந்து 1700க்குப் பின்னர் ஒல்லாந்தர் அக்கரைப்பற்று வன்னி உள்ளிட்ட மட்டக்களப்பில் ஒரு முறைப்படுத்தப்பட்ட ஆட்சியை ஏற்படுத்தினர். இவர்கள் அரச நிர்வாக பகுதிகளில் நிலச்சுவாந்தார்களான தங்களுக்கு நம்பிக்கைக்குரிய சில போடிகளை நியமித்தனர். போடிமார் நியமிப்பில் கண்டி அரசும் சம்பந்தப்பட்டிருந்ததால் 'நிலமை' என்ற பதமும் சேர்ந்து 'நிலமைப்போடி' என்ற இப்பதவிப் பெயர் வழங்கி வந்தது. இவர்களைக் கொண்டே ஒல்லாந்தர் வரி அறவீடு செய்து வந்ததுடன் வன்னியர்கள் மீதும் மேலாதிக்கம் செலுத்தி வந்தனர். கண்டி அரசும் இந்த வழியில் ஒல்லாந்தருக்குத் துணை நின்றதைக் குறிப்பிடவேண்டும்.

இரண்டாம் விமலதர்மசூரியனது காலத்தில் அக்கரைப்பற்று வன்னிப் பிரதேசத்தில் தொன்றுதொட்டு நிலவிவந்த 'இலக்கியப் பாரம்பரியம்' இக்காலத்தில் நிலவியிருந்த பஞ்சம், பொருளாதார வீழ்ச்சி, இவற்றோடு தொடர்ந்த உயிரிழப்புக்கள் அரசியல்நிலை போன்ற காரணிகளால் செழிப்பிழந்து போயிருந்தது. ஏனெனில் இக்காலத்தில் இப்பிரதேசத்தில் உருவான இலக்கியங்கள் எதுவும் காணக்கிடைக்கவில்லை. இலக்கியம் என்பது காலக்கண்ணாடி எனலாம். இந்தவகையில் இக்காலகட்டத்தைச் சேர்ந்த இப்பிரதேச இலக்கியங்கள் எதுவும் காணக்கிடைக்காமையினால் இப்பிரதேசம் பற்றிய போதிய தகவல்களைப் பெற முடியவில்லை என்பதைக் குறிப்பிட்டுத்தான் ஆகவேண்டும்.

## வீரநரேந்திர சிங்கன் காலம்.

இரண்டாம் விமலதர்மசூரியனுக்குப் பின் இவனது மகனான வீரநரேந்திர சிங்கன் (கிபி. 1706 – 1739) என்பவன் கண்டிக்கு மன்னனானான். கண்டி இராச்சியத்தை ஆட்சி புரிந்த கடைசிச் சிங்கள மன்னனான இவன் தாய்வழியில் தமிழனாவான். இவன் ஆட்சிக்கு வந்த காலத்தில் (1706) அரசியல் நெருக்கடியொன்று ஏற்பட்டது. இதனைப் பயன்படுத்தி ஒல்லாந்தர் கண்டி மக்களின் வியாபாரத்தைத் தடுத்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதுரை நாயக்கர் குலத்தைச் சேர்ந்த தமிழ் அரசியைத் தன் தேவியாகக் கொண்டிருந்த இவன் பௌத்த சமயத்தவனாக இருந்தபோதும் பிற மதங்களுடனும் நியாயமாக நடந்து கொண்டான். இவனுடைய ஆட்சிக்காலத்தில் பிரதானிகள் செல்வாக்கு அதிகரித்திருந்தது. மேலும் மன்னனது மனைவி நாயக்கர் குலத்துத் தமிழ் அரசியாதலால் நாயக்கர் உறவினரின் செல்வாக்கும் அரசவையில் அதிகரித்திருந்தது.[6] இவனுடைய ஆட்சியில் மதுரை தஞ்சை முதலிய இடங்களிலிருந்து தமிழர்கள் கண்டிக்கு வந்து குடியேறியிருந்தனர்.

இவன் தமிழர்களுடன் நல்லுறவு கொண்டிருந்தான். இக்காலத்தில் ஒல்லாந்தர் கத்தோலிக்கரைக் கடுமையாகத் தண்டித்து வந்தனர். ஆதலால் ஜோசப்வாஸ், கான்சல்வாஸ் போன்ற குருமார் கண்டியைச் சென்றடைந்து மன்னன் நரேந்திரசிங்கனின் பாதுகாப்பைப் பெற்றிருந்தனர்.[7] இவனது காலத்தில் தமிழ் சைவர்கள் நிறைந்திருந்த மட்டக்களப்பு பிராந்தியத்துக்கும் கண்டிக்குமிடையில் சமூக சமய கலாசார உறவுகள் மற்றும் வாணிப தொடர்புகளும் இருந்து வந்தன.

இவ்வேளை மட்டக்களப்புக்கும் கண்டிக்குமிடையே போக்குவரத்து இருந்து வந்தது. மண்டூர், பழுகாமம், சம்மாந்துறை (வீரமுனை) வழியாக கண்டி சென்றடைந்த பாதை பிரபல்யம் பெற்றிருந்தது.[8] இக்காலத்தில் நெல், உப்பு, கருவாடு என்பன மட்டக்களப்பு பகுதியிலிருந்து கண்டி இராச்சியத்துக்கு கொண்டுவரப்பட்டன. மேலும் இதேவேளை மட்டக்களப்பிலிருந்து இன்னொரு பாதை அலுத்நுவரையை அடைந்து அது விந்தனையிலுள்ள நில்கலையைக் கடந்து உரெனியாவுக்குப்போய் அப்படியே கண்டியை அடைந்தது. இவ்வேளை மாத்தளை, பதுளை என்பன குறுநில அரசுகளாகும். இந்த இரு நகரங்கள் (ஊவா பதுளை) தலைப்பட்டினங்கள்.[9] என்பதும் குறிப்பிடத்தக்கது.

6. இலங்கை சுருக்க வரலாறு பக் 279 கலாநிதி க.குணராசா கமலாகுணராசா - 2005)
7. புதுமுறைச் சரித்திரம் பகுதி I, II – பக் 114-116 V.S.S.ராம், T.V.K.மூர்த்தி – 1961
8. மட்டக்களப்பு தமிழ்ச் சிங்கள வழக்கு – கட்டுரை தமிழறிஞர் ம.சற்குணம் இளங்கதிர் 1965/66 பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்ச் சங்க வெளியீடு
9. இலங்கைச் சரித்திரம் பாகம் I -பக் 91 - 93 எஸ் எவ்.டி. சில்வா - 1952



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர்களுடன் நல்லுறவுகள் கொண்டிருந்த வீரநரேந்திர சிங்கன் அரசவையில் தமிழ்மொழிக்கும் சிறப்பான ஒரு இடம் இருந்து வந்தது. ஆதலால் மட்டக்களப்பு மக்களிடையே செல்வாக்குப் பெற்றிருந்தான்.பொருளாதார செழிப்பும் அமைதியும் நிம்மதியும் நிலவியிருந்த இவனது காலத்தில் அம்பாரையை உள்ளடக்கியிருந்த மட்டக்களப்பில் ஏராளமான இலக்கியங்கள் உருவாகி ஏட்டுச் சுவடிகளாக நிலவிவந்துள்ளன. இவனத காலத்தில் உருவான இலக்கியங்களிலொன்றான 'செட்டிபாளையம் கண்ணகையம்மன் காவியம்' இவனைப் புகழ்ந்துரைக்கத் தவறவில்லை.[10]

இதேபோன்று இவனது காலத்தில் உருவான 'கல்லாற்று மாரியம்மன்' காவியமும் இவனைக் புகழ்ந்துரைக்கின்றது. அத்துடன் இக்காலத்தில் மட்டக்களப்பில் ஆட்சி செலுத்தி வந்த ஆட்சித் தலைவர்களான வன்னிய ராசாக்களையும் இவ்விலக்கியம் புகழ்ந்துரைக்கின்றது.[11]

வீரநரேந்திர சிங்கனது காலத்தில் காளியோடை தொடக்கம் சங்கமன்கண்டி வரை பரந்திருந்த அக்கரைப்பற்று வன்னிப் பிரதேசத்தில் விவசாயம் செழித்திருந்ததுடன் இப்பிரதேசத்தில் அமைந்திருந்த பழந்தமிழ் கிராமங்களான கருங்கொடித்தீவு தம்பட்டை, தம்பிலுவில், கோளாவில், பனங்காடு ஆகிய கிராமங்களில் இலக்கியம் செழிப்புடன் விளங்கியிருந்தது. புலவர்கள் கவிஞர்கள், பண்டிதர்கள், கலைஞர்கள் என்போர் வாழ்ந்திருந்ததுடன் திண்ணைப் பள்ளிக்கூடங்களும் (குருகுலக்கல்வி) நிலவியிருந்தன. இதனை இப்பிரதேசத்தில் இன்று காணக்கிடைக்கும் அக்காலகட்ட இலக்கியங்கள் உணர்த்துகின்றன.

---

10.'மருவாழி புவியிலுள்ள மானிடர்கள் வாழி! வருராச சிங்க நரேந்திரனும் வாழி!!
(செட்டிபாளையம் கண்ணகையம்மன் காவியம் - பாடல்12 : வரி 5-6)

11. 'வாழ்வு பெறு பண்டார வன்னியர்கள் வாழி!
வரிசை பெறு நரசிங்கனும் வாழி'
(கல்லாற்று மாரியம்மன் காவியம் பாடல் 11 வரி 5.6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காலத்தில் ஆடல்கலைகள் இப்பிரதேசத்தில் நிலவியிருந்ததையும் இவ்விலக்கியங்கள் உணர்த்தும். ஆடற்கலைகளான வசந்தன், கும்மி என்பன நிலைத்திருந்தன. இப்பிரதேசத்தில் நிலைத்திருந்த கண்ணகையம்மன் வழிபாட்டு மையங்களான தம்பிலுவில் கண்ணகை அம்மன் ஆலயம், பட்டிநகர் கண்ணகையம்மன் ஆலயம் என்பன களிமண், கம்பு, மரம் என்பனவற்றால் நிர்மாணிக்கப்பட்டிருந்தபோதும் மட்டக்களப்பு முழுவதும் பிரபல்யம் பெற்றிருந்தன. மேலும் இக்காலத்தில் தம்பிலுவில், கருங்கொடித்தீவு ஆகிய கிராமங்களில் கண்ணகி வழிபாட்டின் ஓர் அம்சமான கொம்பு விளையாட்டும் இடம் பெற்று வந்தது.

இவ்வேளை அக்கரைப்பற்று வன்னிய இராசாவின் அரசிருக்கையான (இராஜதானி) கருங்கொடித்தீவு நகரில் அமைந்திருந்த சித்தி விநாயகர் ஆலயம் வன்னிய ராசாவின் மானியங்களையும் வரிசைகளையும் பெற்றுச் சிறப்புடன் விளங்கி வந்தது.[12]

கோளாவில் பிள்ளையார் ஆலயமும் செழிப்புடன் விளங்கியிருந்ததுடன் அக்கரைப்பற்று பிரதேசத்தில் பழம்பெரும் ஆலயமாக மிளிர்ந்து வந்த திருக்கோயில் சித்திரவேலாயுதர் ஆலயம் கண்டி மன்னனின் ஆதரவையும் பெற்றிருந்தது. மேலும் இப்பிரதேசத்துக்கும் கண்டிக்குமிடையில் நெருங்கிய உறவுகளும் நிலவியிருந்தன.

இத்தகையதொரு செழுமைமிக்கதான சூழலில் இப்பிரதேசத்தில் உருவாகி ஏட்டுச்சுவடிகளாக நிலவிவந்த இன்று காணக்கிடைக்கும் இலக்கியமொன்றின் வாயிலாக அக்காலத்தில் இப்பிரதேசத்துக்கும் கண்டிக்குமிடையில் இருந்து வந்த நெருக்கமான உறவு பற்றி உணரமுடிகின்றது. இதுபற்றி நோக்குமிடத்து வீர நரேந்திரசிங்கன் காலத்தில் அக்கரைப்பற்று வன்னிப் பிரதேசம் தம்பிலுவில் தம்பட்டையைச் சேர்ந்த வீரசைவக்குரு (சிவப்பிராமணர்) ஒருவர் சித்திரவேலாயுதர் ஆலயத்தில் அர்ச்சகராகக் கடமைபுரிந்து வந்தார்.

12. இக்காலத்தில் அக்கரைப்பற்று வன்னி ராசா மரபினருக்கு ஏராளமான நெற்காணிகள் நிலங்கள் உடமைகளாக இருந்து வந்துள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் ஒருசமயம் கண்டி நகர் சென்றிருந்தார். அவ்வேளை மன்னனைக் காணவும் அவனுடன் உரையாடி மகிழ்ந்து பரிசுகள் பெறவும் விரும்பினார். இதனைக் கருத்திற்கொண்டு அவர் அரசவையைச் சென்றடைந்தார். அரசவையில் திசாவைகள் முதலிய பிரதானிகள் சேர்ந்திருக்க கண்டி மன்னனான ஸ்ரீ வீரநரேந்திரசிங்கன் அழகிய ஆசனத்தில் அமர்ந்திருந்தான்.

இவ்வேளையில் அர்ச்சகர் அரசவையைச் சென்றடைந்து மன்னனை வாழ்த்தி ஆசிர்வதித்தார். இதனைக் கண்ட மன்னன் உளம் மகிழ்ந்து அர்ச்சகரது வரலாற்றைக் கேட்டறிந்தான். இவ்வேளை அரசவையிலிருந்த திசாவைகள் அரசரைப் புகழ்ந்து தங்களால் கவியொன்று பாடமுடியுமா என்று அர்ச்சகரைக் கேட்டனர். அரசர் சம்மதித்தால் அவரைப் புகழ்ந்து கவியொன்று பாட முடியும் என்று அர்ச்சகர் பதிலளித்தார். இதனைக் கேட்ட கண்டி மன்னன் உளம் நெகிழ்ந்து தன்மீது கவி பாட அனுமதி அளித்தான்.

இதனைத் தொடர்ந்து அர்ச்சகர் கவி பாடத் தொங்கினார். முதலில் "கன்னமதத் தண்ணல்பதங் காப்பதாமே" என்று விநாயகப் பெருமானைப் போற்றினார். இதன் பின்னர் தனது வழிபாட்டிற்குரியவரான திருக்கோயில் சித்திரவேலாயுதரை மனதில் தியானித்து இவ்வாறு பாடுகின்றார்.

"காம்பழகுந் தாதகியின் பூப்பழகு மாலை மார்பன்

கண்டி வாழ் நரேந்திரசிங்க காவலன் மீது

நாப்பழகுஞ் செந்தமிழ்ச் சொல்வாய்ப் பிழை வராமலென்றும்

நந்து திருக்கோவில் வாழுங் கந்தர் துணையாமே"

(நரேந்திர்சிங்கன் பள்ளு – பாடல் 2: வரி 1-4)

கண்டி மன்னனைப் புகழ்ந்து பாடத் தனக்கு அருள்புரியுமாறு சித்திரவேலாயுதரை இவ்வாறு வேண்டுதல் செய்த அர்ச்சகர் அதனைத் தொடர்ந்து இப்பிரதேசத்தில் கோயில் கொண்டிருக்கும் கண்ணகையம்மனையும் பணிந்து போற்றினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கந்த நறுஞ் சண்பகப் பூமாலை மார்பன் தென்னிலங்கை
காவலன் நீள் மாவலி கங்கைக் குடையோன்
சந்தனப்பு யாசலனைச் செந்தமிழினால் வழுத்தத்
தம்பிலுவிற் கண்ணகைத் தாய் தஞ்ச நமக்கே"

(நரேந்திரசிங்கன் பள்ளு – பாடல் 3 : வரி 1-4)

இதனைத் தொடர்ந்து அர்ச்சகரான புலவர் மன்னனைப் புகழ்ந்து கவியொன்று பாடி முடித்தார். இக்கவியைக் கேட்ட மாத்திரத்தில் கண்டி மன்னன் மிகவும் மகிழ்ச்சியுற்று பரிசுகள் பலவற்றை அர்ச்சகருக்கு வழங்கி அவரைக் கௌரவித்தான்.[13] பதினைந்து பாடல்களைக் கொண்ட இச்சிற்றிலக்கியத்தில் இம்மன்னனது வீரம் எழில், ஆற்றல், புகழ், இனிய குணம் ஆகியன பற்றிப் புலவர் விதந்துரைக்கின்றார்.

"கட்டளைகளிற் பரதன் வெட்டிவிடச் சுக்கிரீவன்
காமர் நிலையில் கிருட்டினன் பூமிக்கதிபன்
சிட்டர் தொழுஞ் சூரிய வம்சன் அட்டாள தேசமாளுந்
தெய்வ தம்பி ரானரேந்திர சிங்க பூபனே!"

என்று ஒரு பாடலில் (5ம் பாடல்) புலவர் கண்டி மன்னனைப் புகழ்ந்துரைக்கின்றார்.

இதேவேளை அக்கரைப்பற்று வன்னிப் பிரதேசத்தில் இவனது காலத்தில் தம்பிலுவில் கிராமத்தில் வாழ்ந்திருந்த புலவரொருவர் தான் இயற்றிய பக்தி இலக்கியமொன்றில் இப்பிரதேசத்தில் பிரபல்யம் பெற்றிருந்தவனும் நெருங்கிய உறவு கொண்டிருந்தவனுமான கண்டி மன்னன் வீரநரேந்திரசிங்கனையும் வாழ்த்திப் பாடியுள்ளார்.

"பார் வாழி தென்திருக் குமரன் வாழி!
கண்டி பார்த்தீபன் நரேந்திரசிங்க மூர்த்தியும் வாழி!!

(தம்பிலுவில் கண்ணகையம்மன் பள்ளு)"

---

13. தம்பிலுவில் கண்ணகி வழிபாடு – பக் 89 – 90 .நவநாயகமூர்த்தி – 1999



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விலக்கியத்தில் அடங்கியுள்ள பாடல்கள் வசந்தன் இசையில் உருவாக்கப்பட்டுள்ளதாக இதனை இயற்றிய புலவர் குறிப்பிடுகின்றார். (''வேண்டிய தமிழால் அன்பு பூண்ட வசந்தன் இசையை'' – பாடல் 3: வரி 1) ஆதலால் அக்காலத்திலேயே அக்கரைப்பற்று வன்னிப் பிரதேசத்தில் மட்டக்களப்பு பாரம்பரிய கலைகளில் ஒன்றான வசந்தன் ஆடல் சிறப்புடன் விளங்கியிருந்தமை தெளிவு.

இச்சான்றுகளின் வாயிலாக கண்டி மன்னன் வீரநரேந்திர சிங்கன் காலத்தில் ஒல்லாந்தரின் மேலாதிக்கம் நிலவியிருந்த போதும் கண்டி மன்னனின் செல்வாக்கும் இருந்து வந்தது எனலாம். இதற்கான காரணம் இப்பிராந்திய ஆட்சித் தலைவர்களான வன்னியர்களுக்கும் கண்டி மன்னனுக்குமிடையில் நிலவி வந்த புரிந்துணர்வாகும். வீரநரேந்திர சிங்கனது காலத்தில் ஒல்லாந்தர் ஒரு முறையான ஆட்சியை ஏற்படுத்தியிருந்தனர்.

ஆயினும் இவர்களது கட்டாய மதமாற்றம் என்பதை மட்டக்களப்புத் தலைவர்களான வன்னிச் சிற்றரசர்கள் எதிர்த்தனர். இதனால் இக் கொள்கையை அவர்கள் கைவிட்டிருந்தனர். கண்டி மன்னன் நரேந்திர சிங்கனது ஆலோசனைகளை ஒல்லாந்தர் ஏற்றுக் கொண்டிருந்தமையே இதற்குக் காரணமாகும்.

சுருக்கமாக குறிப்பிடுமிடத்து ஒல்லாந்தர் தங்கள் வாணிப நடவடிக்கைகளுடன் இப்பிராந்திய நீதி நிர்வாக அரசியல் விடயங்களில் தலையிட்டுச் செயலாற்றி வந்தபோதும் இவர்களால் முழுமையானதொரு ஆட்சியை மட்டக்களப்பில் இக்காலத்தில் நிலைபெறச் செய்ய முடியாதிருந்தது. என்பதே உண்மையாகும்.[14] மாறாக வன்னியர்களது ஆதிக்கமும் கண்டி மன்னனின் செல்வாக்கும் நிலவியிருந்தன.

---

14. திருக்கோவில் பிரதேச இலக்கிய வரலாறு – பக் 69-70 நா.நவநாயகமூர்த்தி – 2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ விஜய ராசசிங்கன் காலம்

வீரநரேந்திரசிங்கனுக்குப் பின் இவனின் மைத்துனனும் இராணியின் சகோதரனுமான ஸ்ரீ விஜய ராசசிங்கன் (கிபி. 1739-1747) என்பவன் கண்டி மன்னனானான். இவனுடன் தொடர்ச்சியாக வந்த சிங்கள அரசவம்சம் மறைந்தது. இவன் மதுரையைச் சேர்ந்த நாயக்கர் குலத்துத் தமிழ் அரசியைத் தன்தேவியாகக் கொண்டான். இவ்வரசியின் தந்தையும் அநேக தமிழ் மக்களும் மதுரையிலிருந்து வந்து கண்டியில் குடியேறி வாழ்ந்திருந்தனர். இதன் பயனாக கண்டியில் தமிழர்களது செல்வாக்கு மிகுந்திருந்தது.

விஜயராசசிங்கன் நாயக்க வம்சத்தவனாதலால் அரசவையில் புதிய வழக்கங்கள் தோன்றியிருந்தன. இவன் சிங்களவரை மகிழ்விக்கத் தன் மனைவியோடு பௌத்தத்தைச் சேர்ந்திருந்தான். பல விகாரைகள் புதுப்பிக்கப்பட்டன. ஆயினும் மொழி புரியாத காரணத்தால் அதிகாரம் படைத்திருந்த நாயக்கர்களும் திசாவைமாரும் உறவாட முடியவில்லை.[15] ஆயினும் விஜய ராசசிங்கன் ஆட்சிக்கு வந்ததும் இலங்கையின் நிலை பெரிதும் மாறுதலடைந்தது. குறிப்பாக கண்டி மன்னன் வர்த்தகம் சிறப்புற்றிருந்தது.

இவன் புத்தளத்திலிருந்த முஸ்லீம்களது துணையுடன் இந்தியக் கரையோர வணிகர்களுடன் வர்த்தகம் நடாத்தினான். (பாக்கு) மேலும் தம்பலகாமம் துறைமுகம் மூலம் நெல் ஏற்றுமதி செய்யப்பட்டது.

15. ஸ்ரீ விஜயராசசிங்கன் மதுரையைச் சேர்ந்த நாயக்கர் குலத்தவன். தமிழ் பேசிய தெலுங்கன் இவனது அரசவையில் பகைமை இருந்தது. குறிப்பாகத் திராவிடன் ஆதலால் (இலங்கையின் சுருக்க வரலாறு பக் 132 எச்.டபிள்யு.கொடிறின்றன் - 1960)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டி மன்னன் விஜய ராசசிங்கனைப் பற்றி 'சூளவம்சம்' பின்வருமாறு புகழ்ந்துரைக்கின்றது. இவன் மதுரையிலிருந்து அரசகுலத்தவள் ஒருத்தியை (தமிழ் அரசி) வரவழைத்து தன் பட்டத்து இராணியாக்கிக் கொண்டான். மன்னனுக்குரிய கடமைகளை நன்கு ஆற்றிக்கொண்டு கண்டி நகரத்தில் வசித்து வரலாயினான். இவன் எட்டாண்டுகள் இந்நாட்டினை செவ்வனே பரிபாலித்தான். பௌத்த மதத்திற்கு பெரும் தொண்டுகளாற்றினான். இவ்வாறு சூளவம்சம் (அத்தியாயம் : 17 ) குறிப்பிடும்.

மேலும் இவனது காலத்தில் பல சமய விழாக்கள் இடம்பெற்று வந்துள்ளன. பல்வேறு சமய விழாக்களைக் கொண்டாடிய இவன் அநுராதபுரத்திலும் மகியங்கனையிலும் சமய விழாக்களை நடாத்தினான் என்றும் இந்நூல் (சூளவம்சம்: அத் 17) குறிப்பிடும்.[16]

இவனது ஆட்சிக் காலத்தில் அக்கரைப்பற்று வன்னி உள்ளிட்ட மட்டக்களப்பு பிராந்தியத்தில் அரசியல் விடயங்களில் ஒல்லாந்தர் தலையிட்டிருந்தபோதும் தமிழ் மன்னனான கண்டி மன்னனின் செல்வாக்கே இப்பிரதேசத்தில் நிலைத்திருந்தது, இப் பிரதேச மக்களது சமூக சமய கலாசார மேம்பாட்டிற்கு கண்டி மன்னன் அளித்து வந்த ஆதரவே இதற்கான காரணமாகும். மட்டக்களப்பில் அமைந்திருந்த சைவாலயங்களின் வளர்ச்சியில் கண்டி மன்னன் பெரிதும் அக்கறை கொண்டிருந்தான். அத்துடன் மானியங்களும் வழங்கி வந்தான்.

16. பட்டிநகர் கண்ணகையம்மன் ஆலய வரலாறு – கையெழுத்துப்பிரதி - 2015 நா.நவநாயகமூர்த்தி – 2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதேவேளை இப்பிரதேச(மட்டக்களப்பு) அரசியல் விடயங்களில் தலையிட்டிருந்த ஒல்லாந்தர் தமது சமயமான கிறிஸ்தவத்தைப் பரப்புவதற்கு மேற்கொண்டிருந்த நடவடிக்கைகள் மக்களிடையே அவர்கள்மீது வெறுப்புணர்வை ஏற்படுத்தியிருந்தன எனலாம். இந்நிலையில் தமது சமயத்தையும் உன்னதமான பாரம்பரியத்தையும் பாதுகாக்க தமிழனான கண்டி மன்னனையே இப்பிரதேச மக்கள் நம்பியிருந்தனர். இதனைக் கருத்திற் கொண்ட மட்டக்களப்பு மக்கள் கண்டி மன்னனான ஸ்ரீ விஜய ராசசிங்கனுக்கு விசுவாசமாக இருந்து வந்தனர்.[17]

விஜய ராசசிங்கனது காலத்தில் மட்டக்களப்பு பிராந்தியத்தில் (அம்பாறை உள்ளிட்ட) கண்டி அரசின் ஆளுநராக அதிகார் அகலப்பொல என்பவன் பதவி வகித்து வந்தான்.இவன் விஜய ராசசிங்கன் காலத்தில் மிகவும் முக்கிய அதிகாரங்களைக் கொண்டவனாக விளங்கியிருந்தவனாவான். மிகவும் செல்வாக்கு மிக்க பிரபுவாக விளங்கிய இவன் மதுரை நாயக்கர் மரபிலிருந்து கண்டியச் சிம்மாசன உரித்தாளர்களுக்கு இளவரசிகளை பட்டத்து இராணிகளாகத் தெரிவு செய்து கொடுக்கின்ற பொறுப்பினையும் இந்த அதிகார் செய்து வந்துள்ளான்.

இக்காலத்தில் மட்டக்களப்பும் தம்பலகாமமும் கண்டி இராச்சியத்தின் இரு பிரதான துறைமுக நகரங்களாக விளங்கியிருந்தன. இத்துறைமுகங்களினூடாக வருகைதந்த முஸ்லீம் வியாபாரிகள் (தென்னிந்திய) கண்டியக் கிராமங்களுக்குள் ஊடுருவி துணி வியாபாரத்தில் ஈடுபட்டு வந்தனர். இவ்வாறு அதிகார் அகலப்பொலவின் நிர்வாகத்தின்கீழ் கண்டியரசனுக்கு ஏராளமான வருமானம் கிடைக்கப்பெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது.[18]

---

17. ஈழத்தமிழர் வரலாற்று சுவடுகள் - பக் 87 நா.நவநாயகமூர்த்தி – 2002

18. இலங்கை வரலாறு பாகம் II பக் 217-218 பேராசிரியர் செ.கிருஷ்ணராஜா – 2005



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டிக்கும் மட்டக்களப்புக்குமிடையில் நெருங்கிய சமய சமூக கலாசார வாணிபத் தொடர்புகள் இருந்து வந்த அக்காலத்தில் கண்டியில் இடம்பெற்று வந்த அரசவிழாக்களைக் காண கண்டிநகர் சென்று அவற்றைக் கண்டு களித்துத் திரும்புவதையும் இப்பிராந்திய மக்கள் வழக்கமாகக் கொண்டிருந்தனர். இவ்வாறு கண்டிநகர் சென்று அங்கு இடம்பெற்ற 'அரச பவனியைக்' கண்டு களித்துத் திரும்பிய மட்டக்களப்பு புலவரொருவர் இயற்றிய சிற்றிலக்கியம் "இராஜசிங்கன் பள்ளு" என்பதாகும்.[19]

இவ்விலக்கியம் பற்றியும் பின்னணி பற்றியும் நோக்குமிடத்து அக்கரைப்பற்று வன்னி பிரதேசத்துக்கும் கண்டிக்குமிடையில் போக்குவரத்து வாணிபம் நிலவியிருந்த அக்காலத்தில் இப்பிரதேசத்தைச் சேர்ந்த புலவரொருவர் கண்டி நகர் சென்று கண்டி மன்னன் ஸ்ரீ விஜய ராசசிங்கன் பல்லக்கிலேறி கண்டி நகர் வீதியூடாக பவனி வரும் சிறப்பினைக் கண்டு களித்துத் திரும்பிய பின்னர் தான் கண்ட காட்சிகளை இலக்கியமாக வடித்துள்ளார். என்பதை அறியமுடிகின்றது.

இன்று காணக்கிடைக்கும் இக்கிராமிய இலக்கியத்தின் வாயிலாக அக்காலத்தில் கண்டி நகரில் இடம்பெற்று வந்த அரசபவனி பற்றி அறியலாம். இக்கவியை இயற்றிய அக்கரைப்பற்று வன்னியைச் சேர்ந்த புலவர் கதிர்காமக் கடவுள் மீது மிகுந்த பக்தி கொண்டவர். ஆதலால் இவர் கண்டி மன்னன் ஸ்ரீ விஜய ராசசிங்கன் நீண்ட காலம் பெரும் புகழுடன் வாழ நல்லருள் புரியவேண்டி 'கதிரை' என்ற கதிர்காமப் பதியில் குடிகொண்ட வேலவரைத் துதிக்கின்றார்.

"ஆதியருள் பெற் றிராச சிங்கன்
ஆம்புவி யோர்கள் மிக வாழ்க
வேதியர் சூழ் தென் கதிரை
வேலவர் நித்தம் துணையாமே"
(இராஜசிங்கன் பள்ளு பாடல் 2 : வரி 1-4)

---

19. ஈழத்தமிழர் வரலாற்று சுவடுகள் - பக் 84-85 நா.நவநாயகமூர்த்தி – 2002



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்காலத்தில் கதிர்காமத்தில் பிராமணர்கள் பெருமளவில் வாழ்ந்து வந்ததை இப்பாடல் வரியொன்று (வரி 2) உணர்த்துகின்றது. இதன் வாயிலாக கண்டி மன்னர் காலத்தில் கதிர்காம முருகன் ஆலயத்தில் விக்கிரக வழிபாடு சிறந்திருந்ததையும் இங்கு வைதீக முறையில் பூசை வழிபாடுகள் இடம்பெற்று வந்துள்ளன என்பதும் தெளிவாகின்றது.

மேலும் மட்டக்களப்புத் தமிழரிடையே முருக வழிபாடும் கந்தபுராணக் கலாசாரமும் உன்னத நிலையிலிருந்த அக்காலத்தில் கதிர்காம முருகன் மீது இப்பிரதேச மக்கள் (அக்கரைப்பற்று) மிகுந்த பக்தியும் நம்பிக்கையும் கொண்டிருந்தனர் என்பதை இப்பாடல் வரிகள் உணர்த்துகின்றன. (நா. நவநாயகமூர்த்தி – 2002)[20] நாயக்க மன்னனான ஸ்ரீ விஜய ராசசிங்கன் காலத்தில் கண்டியில் தமிழ்மொழிக்கும் தக்க அந்தஸ்தினை வழங்கியிருந்தான்.

"இசை வாணர் தமிழ் வாணர் இங்கிதம் பாடிவர" என்ற 'கண்டி ராஜன்பள்ளு' பாடல் வரிகள் அதனை உணர்த்தும். இவனைத் தொடர்ந்து கண்டியில் ஆட்சி புரிந்த நாயக்கர்களான தமிழ் மன்னர்கள் தமிழ்மொழிக்கு முக்கியத்துவம் கொடுத்து வந்துள்ளனர். இதனை பின்னர் பார்ப்போம்.

இதேவேளை கண்டிக்கும் அக்கரைப்பற்று வன்னிப் பிரதேசத்துக்குமிடையில் (காளியோடை தொடக்கம் சங்கமன்கண்டி வரை) வாணிபம் இடம்பெற்று வந்த அக்காலத்தில் இப்பிரதேசத்திலிருந்து உணவுப்பொருட்கள் கொண்டுசென்று விற்பனை செய்யப்பட்டதை அறியமுடிகின்றது. ஆறுகள் சிறிய பெரிய குளங்கள், சிற்றோடைகள் என்பனவும் உவர்நீர் நிறைந்த களப்புக்கள் (சிறிய களப்பு) அமையப்பெற்ற அக்கரைப்பற்று பிரதேசத்திலிருந்து கருவாடு, உப்பு என்பனவும் நெல்வயல்கள் நிரம்பப் பெற்ற இப்பிரதேசத்திலிருந்து நெல்லும் கண்டிக்கு கொண்டு செல்லப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வந்துள்ளன.

20. சுமார் இருபது வருடங்களுக்கு முன்னர் கருங்கொடித்தீவு அன்பர் ஒருவர் கதிர்காம முருகன் ஆலயத்தில் பிராமணர்களுடன் வாழ்ந்திருந்த சந்நியாசி குடியினர் பற்றிய செப்பு பட்டயம் ஒன்றை எடுத்து வந்து காண்பித்தார். மேலும் அவர்களின் சந்ததியினரே தாங்கள் என்றும் அவர் குறிப்பிட்டார். இவ்வேளை இச்சம்பவம் நினைவுக்கு வருகின்றது. இப்பட்டயம் கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டின் நடுப்பகுதியைச் சேர்ந்தது என்பது ஞாபகம். (ஆசிரியர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ விஜயராசசிங்கனது காலத்தில் அக்கரைப்பற்று வன்னிப் பிரதேசம் கருங்கொடித்தீவு பகுதியில் (கோளாவில், பனங்காடு உள்ளிட்ட) ஒரு சமயம் மாரி மழை குன்றி வரட்சி நிலவி செந்நெல்வயல்கள் பாதிப்படைந்தவேளை பனங்காடு கிராமத்தைச் சேர்ந்த புலவரொருவரால் "மழைக்காவியம்" ஒன்று பாடப்பட்டது. இதனைத் தொடர்ந்து மழை பொழிந்ததாகக் கூறப்படுகின்றது. பட்டிநகர் கண்ணகை அம்மனை வேண்டிப் பாடப்பட்ட இக்காவியம் பாடிய புலவர் பெயர் பற்றி அறியமுடியவில்லை. அக்காலத்தில் மழை வேண்டிப் பாடுவது மழைக்காவியம் ஆகும்.

பட்டிநகர் கண்ணகை அம்மன் மழைக்காவியம் என்ற இக்கிராமிய இலக்கியத்தின் ஓர் பாடலில் நாட்டில் மழை குறைவு எப்போது தோன்றும் என்பதை புலவர் குறிப்பிடுகின்றார். கிரகநிலை மாற்றம், மன்னர்களின் நீதி தவறிய ஆட்சி மனிதர்களின் வஞ்சகச் செயல்கள் இவற்றினாலேயே மழைகுறைவு ஏற்படும் என்று புலவர் குறிப்பிடுகின்றார். இலக்கியச் சான்றுகள் மூலமாக நோக்குமிடத்து இவர் ஆலயக் குருக்களாகவும் ஒரு நல்ல சோதிடராகவும் இருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகின்றது.

இக்கிராமிய இலக்கியத்தில் அக்கரைப்பற்று பற்றி புலவர் குறிப்பிடுகின்றார். (மாமேவு மக்கரைப் பற்று நகர் மானிடர்கள் - (பாடல் 5: வரி 1) இவ்விலக்கியத்தில் அக்கரைப்பற்று நகர் என்று புலவர் குறிப்பிடுவது அக்காலத்தில் காளியோடை தொடக்கம் சங்கமன்கண்டி வரை பரந்திருந்த வன்னிப் பிரதேசத்தையேயாகும். இக்காலத்தில் அக்கரைப்பற்று வன்னியின் இராஜதானியாக விளங்கி வந்த கருங்கொடித்தீவு நகரை இது குறிக்கின்றபோதும் வன்னிப் பிரதேசத்தின் பொதுப்பெயரையே இது சுட்டும் எனலாம். ''மட்டக்களப்பு நகர் சிங்காரபுரிதனில் உறையும்" போன்ற அக்கால இலக்கிய வரிகள் இதற்குச் சான்றுகளாகும்.

இதேவேளை அர்ச்சகரும் சோதிடருமான புலவர் தனது காவியத்தில் அக்கரைப்பற்று வன்னி உள்ளிட்ட மட்டக்களப்பு பிராந்தியத்தில் நீதி தவறாது நல்லாட்சி செலுத்தி வந்த வன்னி இராசாக்களையும் குறிப்பிடத் தவறவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீதிசெறி பண்டார வன்னியர்கள் வாழி

நிமலனாரருள்வாழி நீதிமுறை வாழி" (பாடல் 11 வரி 3-4)

இக்காலத்தில் மட்டக்களப்பு பிராந்தியத்தில் ஏழு வன்னிய அரசுகள் (குறுநில) நிலைத்திருந்தன. பாணகை, அக்கரைப்பற்று, நிந்தவூர் (சிங்காரபுரி) சம்மாந்துறை, மண்முனை, (பழுகாமம்) ஏறாவூர் (கோறளை) நாதனை என்பனவாகும். இச்சிற்றரசுகள் கண்டி மன்னனுடன் நெருக்கமான உறவுகள் கொண்டிருந்தன.[21]

## கீர்த்தி ஸ்ரீ இராசசிங்கன் ஆட்சிக் காலத்தில்

## (கிபி 1747 ஆம் ஆண்டு தொடக்கம் 1766 வரையுள்ள காலம்

ஸ்ரீ விஜயராசசிங்கனின் மறைவையடுத்து நாயக்கர் குலத்தவனான கீர்த்தி ஸ்ரீ இராசசிங்கன் (கிபி 1747-1781) என்பவன் கண்டி மன்னனானான். இவன் ஸ்ரீ விஜயராசசிங்கனின் மைத்துனனாவான். இவன் சிம்மாசனம் ஏறியபோது (கிபி1747) இவனுக்கு வயது பதினாறு ஆகும். கிபி 1750 வரை கண்டி மன்னனுக்குரிய உடை வாளை அவன் தரித்திருக்க அனுமதிக்கப்படவில்லை. தொடக்க காலத்தில் ஆட்சிப் பொறுப்பை தும்பறை மாப்பிட்டியா திசாவைகளே ஏற்று நடத்தினர். நான்கு ஆண்டுகளுக்குப் பின் இவனே ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டான்.[22]

---

21. பட்டிநகர் கண்ணகி ஆலய வரலாறு (ஆய்வு) - கையெழுத்துப்பிரதி - 2015 நா.நவநாயகமூர்த்தி – 2015

22. திருக்கோவில் பிரதேச இலக்கிய வரலாறு – பக் 73நா.நவநாயகமூர்த்தி – 2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிபி 1749ல் இவனுக்கெதிராக அரண்மனையில் ஏற்பட்ட கிளர்ச்சியொன்றை மன்னனும் நாளெப்ப நாயக்கர் என்பவரும் மிகவும் சாதுர்யமாகக் கையாண்டு இக்கிளர்ச்சியை அடக்கினர். கீர்த்தி ஸ்ரீ இராசசிங்கனது தொடக்ககால அரசியல் வாழ்வில் நடந்த மிகமுக்கியமான சம்பவம் இதுவாகும்.[23] இவன் தனது இளமைக் கல்வியை ஒரு பௌத்த பிக்குவிடம் கற்கக்கூடிய வாய்ப்பும் சூழலும் ஏற்பட்டது. இதன் பயனாக பௌத்த மரபின் செழிப்பினை இவனுக்கு ஊட்டியது கண்டி நாயக்கர் வம்ச வரலாற்றில் கீர்த்தி ஸ்ரீ இராசசிங்கனுக்குரிய சூழலை அவன் பெற்ற கல்வி மரபே அவனுக்கு வழங்கியது என்றால் மிகையாகாது. (பேராசிரியர் செ.கிருஷ்ணராஜா – 2012)

இவன் பௌத்த சமயத்தில் ஆர்வம் கொண்டவனாக விளங்கினான். கிபி1750ல் தம் முன்னோனின் செயலை தான் ஏற்றுக்கொண்டதைக் குறிப்பதற்காக சீயத்துக்கு ஒரு குறிப்பு அனுப்பினான். 1753ல் பௌத்த குருமார் இலங்கைக்கு வந்து சேர்ந்தனர். கீர்த்தி ஸ்ரீ இராசசிங்கன் பற்சின்னக் கோயிலுக்குள் (தலதாமாளிகை) இப்போதிருக்கும் உட்கோயிலை கட்டுவித்தான். மகாவம்சத்தில் நான்காம் பராக்கிரமபாகு காலத்திலிருந்து தன் ஆட்சிக்காலம் வரை உள்ள வரலாற்றினை எழுதுவித்தான்.[24]

இவன் மதுரையிலிருந்து இரு தமிழ் அரசிகளையும் தஞ்சையிலிருந்து இரு தமிழ் அரசிகளையும் மணம் செய்திருந்தான்.[25] இவனது காலத்தில் நாயக்கர் கூட்டம் கண்டியில் அதிகரித்திருந்தது. விஷ்ணு முதலிய தெய்வ ஆலயங்கள் தோன்றின. இவ்வேளை கீர்த்தி ஸ்ரீ இராசசிங்கனுக்கெதிராக கலகம் ஒன்று ஏற்பட்டது. இதனை கோபால முதலியார் என்பவர் அடக்கி வைத்தார் என்ற வரலாற்று குறிப்பும் உள்ளது. இவர் தளபதியாவார்.

23. இலங்கை வரலாறு பாகம் II – பக் 227-228 பேராசிரியர் செ.கிருஷ்ணராஜா – 2012

24. இலங்கையின் சுருக்க வரலாறு பக் 134 எச்.டபிள்யு.கொடிறின்றன் - 1960

25. தமிழர் வரலாறும் இடப்பெயர் ஆய்வும் பக் 62 கதிர் தணிகாசலம் 1992



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீர்த்தி ஸ்ரீ இராசசிங்கன் ஆட்சிக்கு வந்த காலத்தில் அம்பாறை உள்ளிட்ட மட்டக்களப்பை ஏழு வன்னியர்கள் ஆட்சிபுரிந்து வந்தனர்.இந்த எழுவருக்கும் முதல்வனாக நாதனை (வெல்லாவெளி பிரதேசம்) வன்னியன் இருந்து வந்தான். மட்டக்களப்பு வன்னி இராசாக்கள் கூடும் இடமாக 'சிங்காரவத்தை' விளங்கி வந்தது. தற்போதைதயை அட்டப்பள்ளம் என்ற இடமே அக்காலத்தில் சிங்காரவத்தை, சிங்காரபுரி என மட்டக்களப்பு மரபு இலக்கியங்களிலும் கல்வெட்டு ஏட்டுப் பிரதிகளிலும் குறிப்பிடப்படும் தமிழ் இராஜதானியாகும்.

அக்காலத்தில் சிங்காரபுரி இராஜதானியில் வன்னிய இராசாக்கள் கூடும் இடமாக தற்போதைய மீனாட்சியம்மன் ஆலயத்தை அண்மித்ததாய் மேற்குப் பகுதியில் அமைந்திருந்த சிங்காரபுரி வன்னி ராசாவின் (நிந்தவூர்பற்று வன்னியன்) பொழுதுபோக்கு வாசஸ்தலமே இருந்து வந்துள்ளதுடன் ஆடம்பர மாளிகை, பூந்தோட்டம், மண்டபங்கள், கிணறுகள் என்பனவும் இங்கு அமைந்திருந்தன.[26]

கீர்த்தி ஸ்ரீ இராசசிங்கன் ஆட்சிக்கு வந்த காலத்தில் தனக்கு விசுவாசமாக இருந்து வந்தவர்களுக்கு கைமாறாக நிலங்களும் வெகுமதிகளும் அளித்துள்ளான். நாயக்கர் குலத்தவனும் தமிழனுமான கீர்த்தி ஸ்ரீ இராசசிங்கன் ஆட்சிக்கு வந்ததும் கண்டியில் தமிழரது செல்வாக்கு அதிகரித்திருந்தது. இவன் இந்து ஆலயங்கள் பலவற்றை நிர்மாணித்தான். இவ்வேளையில் கலகம் ஒன்று ஏற்பட்டது. இதனை கோபால முதலியார் என்பவர் அடக்கி வைத்தார். இதற்குக் கைமாறாக கண்டி மன்னன் இவருக்கு நிலங்கள் வழங்கியிருந்தான்.[27]

---

26. சிங்கராபுரி வன்னி ராசாவின் இவ்வாசஸ்தலம் 1803 வரை சிறப்புடன் விளங்கியிருந்தது. 1945ஆம் ஆண்டு வரை இவ்வாசஸ்தலத்தின் கட்டிட எச்சங்கள் இப்பகுதியில் நிலைத்திருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது.

27. புதுமுறைச் சரித்திரம் பகுதி I, II – பக் 129,130 V.S.S.ராம், T.V.K.மூர்த்தி – 1961



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதேபோன்று இவன் ஆட்சிக்கு வந்த காலத்தில் தனக்கு விசுவாசமாக இருந்து வந்தவர்களுக்கு கைமாறாக நிலங்களும் வெகுமதிகளும் கண்டி மன்னன் கீர்த்தி ஸ்ரீ இராசசிங்கன் அளித்துள்ளான். இவர்களில் இராஜபக்ஷ முதலியார் என்பவரும் ஒருவராவார். இவருக்கு மட்டக்களப்புத் தமிழகத்தில் நிலங்கள் வழங்கியதுடன் இங்கு சிங்கள மக்களை அழைத்து வந்து குடியேற்றவும் இவன் ஆதரவளித்தான். இதனைத் தொடர்ந்து தமிழ் மக்களும் இவ்விடங்களில் குடியேறி வாழ்ந்திருந்தனர்.

## அக்கரைப்பற்று வன்னிப் பிரதேசத்தில் முஸ்லீம்கள் குடியேற்றம்

கீர்த்தி ஸ்ரீ இராசசிங்கன் ஆட்சிக்கு வந்த காலத்தில் (கிபி 1747ல்) கண்டி இராச்சியத்துக்கும் மட்டக்களப்புக்கும் (அம்பாறை உள்ளிட்ட) நடுவில் காடாகவிருந்ததும் தெற்கே களிகாமத்து மலை தொடக்கம் வடக்கே வெல்லாவெளி பிரதேசம் வரை பரந்திருந்ததும் அம்பாறை கொன்றைவட்டான், இறக்காமம், பொத்தானை ஆகிய பகுதிகளை உள்ளடக்கியிருந்ததுமான பெரும் பிரதேசத்தையே கண்டி மன்னன் இராஜபக்ஷ முதலியாருக்கு அளித்தான். இதனை பரவணிக் கல்வெட்டு மூலமாக அறிய முடிகிறது.

கி.மு நான்காம் நூற்றாண்டுகளில் பாண்டிய குலத்துத் தமிழ் அரசர்கள் ஆட்சியின்கீழ் (மகாவம்சம் கூறும் சந்தணகாம சத்திரியர்) தமிழும் சைவமும் பௌத்தமும் சிறப்புடன் விளங்கியிருந்த ஆட்சிப் பிரதேசமே இக்காலத்தில் அடர்ந்த காடாக இருந்ததுடன் ‘நடுக்காடு’ என்ற பெயருடன் விளங்கியிருந்தது. இப்பிரதேசத்தில் இராஜபக்ஷ முதலியார் வன்னிச் சிற்றரசர்களது ஆதரவுடன் மேற்கொண்ட சிங்களக் குடியேற்றம் பற்றி பரவணிக் கல்வெட்டு விபரமாகக் குறிப்பிடும்.

அக்காலத்தில் சம்மாந்துறை வன்னிச் சிற்றரசனின் ஆட்சியின்கீழ் நடுக்காடு என்ற பெயருடன் விளங்கிவந்த இப்பிரதேசத்தில் கிபி. 1749,50 களில் உரசவேகாமம் கடவத்தை கொன்றைவட்டான், பள்ளவெளி, திவிளானை, பொத்தானைவெளி வம்மியடி ஆகிய இடங்களில் சிங்களமக்கள் குடியேறி வாழ்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்த வேளையில் இவர்களைத் தொடர்ந்து சில முஸ்லிம் குடும்பங்களும் இந்த இடங்களில் வந்து குடியேறி வாழ்ந்து வந்தனர்.

இவ்வேளையில் கண்டி மன்னன் கீர்த்தி ஸ்ரீ இராசசிங்கன் தனது பரிவாரங்களுடன் மட்டக்களப்புக்கு நாடுகாண வந்திருந்தான். அப்போது சிங்கள மக்களையும் காணவேண்டிக் குடியேற்றப் பகுதிகளுக்கும் அவன் சென்றதாகப் பரவணிக் கல்வெட்டு குறிப்பிடும். (நா.நவநாயகமூர்த்தி – 2002)

இவ்வாறு குடியேற்றப் பகுதிகளுக்கு விஜயம் செய்த வேளையில் சிங்கள மக்கள் குடியிருந்த பகுதியில் (வரிப்பத்தன்சேனை) வாழ்ந்து வந்த முஸ்லீம்களின் தலைவனாகக் கருதப்பட்ட அவுக்கன் என்பவன் தனக்கும் தன்னுடன் வந்து குடியேறி வாழ்ந்து வந்த ஏழு குடிகளைச் சேர்ந்த முஸ்லீம்களுக்கும் குடியிருக்க காணிகளைத் தந்துதவுமாறு பணிவுடன் கண்டி மன்னனைக் கேட்டான்.

இதனைக் கருத்திற்கொண்ட கண்டி மன்னன் கடிதம் ஒன்றை வரைந்து அதனைச் சிங்காரவத்தையிலிருக்கும் வன்னிய இராசாக்களிடம் கொடுக்கும்படி பணித்தான். கடிதத்தைப் பெற்றுக்கொண்ட அவுக்கன் சிங்காரவத்தையில் கூடியிருந்த வன்னிச் சிற்றரசர்களிடம் அதனைச் சமர்ப்பிக்க அவர்கள் 'அணுக்கன்வெளி' என்ற இடத்தில் காணிகளை வழங்கி முஸ்லீம் மக்கள் ஏழு குடியினரையும் குடியேற்றினர். இவ்வாறு பரவணிக் கல்வெட்டு மேலும் குறிப்பிடுகின்றது.[28]

---

28. வன்னியர் – பக் 45 கலாநிதி. சி. பத்மநாதன் - 1970



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த ஏழு குடி மக்களும் அணுக்கன்வெளியையொட்டிய இடத்தில் குடியேறி வாழ்ந்துவந்த காலத்தில் அட்டாளைச்சேனை (மீனோடைக்கட்டு) அக்கரைப்பற்று (கருங்கொடித்தீவு, பாலமுனை) ஆகிய இடங்களில் தமிழ்ச் சைவர்களே தனிப் பெரும் பான்மையினராக வாழ்ந்து வந்தனர். தமிழும் சைவமும் செழித்திருந்ததுடன் வயல் காணிகளும் தோட்டங்களும் தமிழருக்கேயுரியனவாக இருந்தன.

இதற்குப் பிற்பட்ட காலத்திலேயே அணுக்கன்வெளியில் வாழ்ந்து வந்த முஸ்லீம் மக்கள் அங்கிருந்து படிப்படியாக இடம்பெயர்ந்து தமிழர் நாகரீகம் செழித்திருந்த அட்டாளைச் சேனையிலும் அதனைத் தொடர்ந்து பழந்தமிழ் கிராமமும் அக்கரைப்பற்று வன்னி இராசாவின் இராஜதானியுமான கருங்கொடித்தீவு பகுதியில் குடியேறினர். இவ்வாறு அக்கரைப்பற்று வன்னியில் குடியேறிய முஸ்லீம் குடியினர் நம்பிக்கையின் அடிப்படையில் இஸ்லாமியராக வாழ்ந்து வந்தபோதும் பண்பாட்டு அம்சங்களில் தமிழராகவே (இஸ்லாமிய தமிழர்கள்) வாழ்ந்து வந்தனர். குடிவழமை, கலைகள், கலாசார அம்சங்கள் என்பனவற்றில் நெருக்கமான ஒற்றுமைகள் இரு சமூகத்தினரிடையேயும் இருந்து வந்தன.

கிபி 1766ம் ஆண்டு வரை கீர்த்தி ஸ்ரீ இராசசிங்கனது அரசியல் செல்வாக்கு மட்டக்களப்பில் நிலைத்திருந்தது. இக்கால கட்டத்தில் (1747- 1766) இவனது மேலாதிக்கத்தை மட்டக்களப்பு வன்னிச் சிற்றரசர்கள் பெயரளவில் ஏற்றிருந்தபோதும் சுதந்திரமுள்ள சிற்றரசர்களாகவே இவர்கள் இப்பிராந்தியத்தைப் பரிபாலனம் செய்து வந்துள்ளனர் என்பதை அறியமுடிகின்றது. ஆயினும் கண்டி மன்னனுக்கு விசுவாசமாகவே வன்னியர்களும் மட்டக்களப்பு மக்களும் இருந்து வந்தனர். அத்துடன் கண்டி மன்னன் மீது நம்பிக்கையும் கொண்டிருந்தனர்.

இவ்வாறானதொரு செழுமைமிக்க சமூக அரசியல் சூழலில் மட்டக்களப்பு பிராந்தியத்தில் இலக்கியங்கள் பல உருவாகி நிலவியிருந்ததுடன் ஆடல் கலைகளும் செழித்திருந்தன. இக்காலத்தில உருவான மாரியம்மன் காவியம், வீரபத்திர காவியம் என்பன இம்மன்னனையும் புகழ்ந்துரைக்கும் மட்டக்களப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியங்களில் சிலவாம். மாரியம்மன் காவியம் "வீசுபுகழுறு ராசசிங்கனும் வாழி" என்றும் (பாடல்15:வரி3) வீரபத்திரன் காவியம் "பரிவான ராசசிங்க மன்னனும் வாழி" என்றும் (பாடல் 15:வரி 4) இவனைப் புகழ்ந்துரைக்கின்றன.

இக்காலத்தில் கல்மடு என்ற இடத்திலிருந்து நடுக்காடு பிரதேசத்தை நிர்வகித்து வந்த இராஜபக்ஷ முதலியாரால் கோவில்மேடு என்ற இடத்தில் பத்தினியம்மன் ஆலயமொன்று நிர்மாணிக்கப்பட்டது. இவ்வாலயத்தில் பிரதிஸ்டை செய்வதற்காக மதுரையிலிருந்து அம்மன் விக்கிரகமொன்று கொண்டுவரப்பட்டது. இவ்வேளை நடுக்காடு பகுதியில் குடியேறி சிங்கள மக்களுடன் வாழ்ந்திருந்தவர்களிலொருவரான சின்னத்தம்பி போடியார் என்பவரே இவ் அம்மன் விக்கிரகத்தை மதுரையிலிருந்து எடுத்து வந்திருந்தார்.(பரவணிக் கல்வெட்டு) இக்காலத்தில் நடுக்காடு குடியேற்றப் பகுதிகளுக்கும் அக்கரைப்பற்று வன்னிப் பிரதேசத்துக்குமிடையில் நெருங்கிய சமூக சமய கலாசார உறவுகள் நிலவி வந்துள்ளதை ஆய்வுகள் உணர்த்துகின்றன.

கீர்த்தி ஸ்ரீ இராசசிங்கன் ஆட்சிக்காலத்தில் கலை இலக்கியம் என்பன இலங்கையில் பெருவளர்ச்சி கண்டிருந்தன. இதனை வரலாற்று நூல்கள் வாயிலாக அறியமுடிகின்றது. இதேவேளை அக்கரைப்பற்று வன்னிப்பிரதேசத்தில் இவனது காலத்தில் இலக்கியங்கள் பல உருவாகி ஏட்டுச் சுவடிகளாக நிலவி வந்தன. நாட்டுக்கூத்து, வசந்தன், கும்மி போன்ற ஆடற்கலைகளும் செழிப்புடன் நிலவி வந்தன. இக்காலத்திலேயே குறிப்பாக 1750 51 களில் இப்பிரதேசத்தில் நிலவியிருந்த கலை இலக்கியச் சூழலில் 'தென்மோடி' என்ற நாட்டுக்கூத்து வடிவம் தோன்றி மட்டக்களப்பு தமிழகமெங்கும் பிரபல்யம் பெற்றிருந்தது.[29] இக்காலத்தில் அக்கரைப்பற்று வன்னியில் கூத்துக்கலை மையங்களாக கருங்கொடித்தீவு, கோளாவில், தம்பிலுவில் ஆகிய கிராமங்கள் விளங்கியிருந்தன.

---

29. கிழக்கிலங்கை கூத்து மரபு (ஆய்வுக் கட்டுரை) நா.நவநாயகமூர்த்தி "கிழக்கிலங்கை தமிழ் பேசும் மக்களின் நாட்டார் வழக்காறுகள்" – 2009



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கால கட்டத்தில் அக்கரைப்பற்று வன்னிப் பிரதேசத்தில் உருவாகி நிலவிவந்த இலக்கியங்களில் கண்ணகையம்மன் வழிபாட்டை அடிப்படையாகக் கொண்டு உருவான தம்பிலுவில் கண்ணகையம்மன் காவியம், பஞ்சாட்சரப்பதிகம் என்பன இன்று காணக்கிடைக்கின்றன. வீரசைவநெறி செழித்திருந்த அக்காலத்தில் சைவக்குருமார் (சங்கமர்) வாழும் இடமாகத் தம்பட்டை கிராமம் மிளிர்ந்து வந்தது. இங்கு வாழ்ந்திருந்த குருக்களும் புலவருமான ஒருவரால் "பஞ்சாட்சரபதிகம்" என்ற இலக்கியம் உருவாக்கப்பட்டு ஏட்டுச்சுவடியாக நிலவி வந்தது.

கிபி 1766ம் ஆண்டு வரை கண்டி மன்னன் கீர்த்தி ஸ்ரீ இராசசிங்கனது அரசியல் செல்வாக்கு மட்டக்களப்பு பிராந்தியத்தில் (அம்பாரை உள்ளிட்ட மட்டக்களப்பு) நிலைத்திருந்தது. கிபி 1766ம் ஆண்டு கண்டியரசனுக்கும் ஒல்லாந்தருக்குமிடையில் நடந்த ஒப்பந்தம் காரணமாக சகல கரையோரப் பிரதேசங்களையும் கண்டியரசன் ஒல்லாந்தரிடம் கையளித்தான்.[30]

---

30. இலங்கை சரித்திரம் பகுதி I எஸ்.எவ்.டி சில்வா பக்.68 – 1952



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'ஒல்லாந்தரது ஆட்சிக் காலத்தில்' (கிபி 1766 - 1795 வரை)

## கீர்த்தி ஸ்ரீ இராசசிங்கன் காலம் (1766 - 1781 வரை)

கீர்த்தி ஸ்ரீ இராசசிங்கனது ஆட்சிக் காலத்தில் ஒல்லாந்தருக்கும் கண்டி மன்னனுக்கும் ஏற்பட்ட சச்சரவுகள் (1760,61,63,65 களில்) காரணமாக கிபி 1766 இல் ஒல்லாந்தருடன் ஒப்பந்தமொன்று செய்ய நேர்ந்தது. இதன்மூலமாக இலங்கையின் கடற்கரை சார்ந்த பகுதிகள் அனைத்தும் ஒல்லாந்தரின் ஆதிக்கத்தில் உள்ள பகுதிகள் என ஏற்றுக் கொள்ளப்பட்டன. இதுபற்றி வரலாற்று நூல்கள் விபரமாகக் குறிப்பிடுகின்றன.[1] கிபி 1765 இல் மலைநாடு ஒல்லாந்தரால் தாக்கப்பட்டது.

'பன்எக்' என்ற ஒல்லாந்த தேசாதிபதியின் கீழ் படையெடுப்பு நடந்தது. இதற்குத் தாக்குப்பிடிக்காது கீர்த்தி ஸ்ரீ இராசசிங்கன் தலைநகரை விட்டோடினான். இதனைத் தொடர்ந்து 1766ல் ஒல்லாந்தருடன் உடன்படிக்கையொன்றும் செய்து கொள்ள நேர்ந்தது.[2] அதாவது ஒல்லாந்தருடன் ஓர் உடன்படிக்கை செய்யவேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டான் எனலாம்.

இவ்வொப்பந்தத்தின் படி கண்டி மன்னன் கொம்பனியாரின் ஆட்சி அதிகார உருத்துக்களை பின்வரும் திசாவைகளில் ஏற்றிருந்தான். அவையாவன மாத்தறை, காலி, கொழும்பு யாழ்ப்பாணம், கற்பிட்டி, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு என்பனவாகும். இவ்வாறு ஒல்லாந்தர் இலங்கையின் கடற்கரையோர மாவட்டங்களை ஒன்றிணைந்த வகையில் இலங்கை மீதான ஆட்சியுரிமையை அனுபவிக்கத் தக்கவர் என மீண்டும் ஒருமுறை இவ்வொப்பந்தத்தினால் உறுதிப்படுத்தப்பட்டனர். இவற்றிற்கும் மேலாக கண்டி மன்னன் ஒல்லாந்தருக்குரிய கறுவா வியாபாரத்திற்கான கறுவா உரித்தல் தொழிலை மேற் கொள்வதற்கும் அனுமதி அளித்தான்.

1. புதுமுறைச் சரித்திரம் பகுதி I, II – பக் 129-130 V.S.S.ராம், T.V.K.மூர்த்தி – 1961
இலங்கையின் சுருக்க வரலாறு பக் 134 - 136 எச்.டபிள்யு.கொடிறின்றன் - 1960
இலங்கை வரலாறு பாகம் II – பக் 231-235 பேராசிரியர் செ.கிருஷ்ணராஜா – 2012

2. இலங்கை சுருக்க வரலாறு பக் 282 கலாநிதி க. குணராசா
கமலா குணராசா - 2008



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை எல்லாவற்றிற்கும் பிரதியுபகாரமாக கண்டியின் முடியாட்சிமுறையின் இறைமையை ஒல்லாந்தர் ஏற்றுக் கொள்வதோடு கண்டி அரசு உப்பினைப் பெற்றுக்கொள்வதற்குரிய கடற்கரை உப்பள உரிமத்தையும் வழங்கினர். 1766ல் செய்யப்பட்ட இவ்வொப்பந்தமானது 'வான் எக்' என்பவனுக்குப் பின்னர் இலங்கையில் ஒல்லாந்த ஆள்பதியாக கடமையேற்ற 'இமான் விலேம்பால்க்' (1765-1785) என்பவனது ஏற்பாட்டின் கீழே மேற்கொள்ளப்பட்டது.

இவ்வொப்பந்தத்தின்படி பின்வரும் விடயம் ஒல்லாந்தரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அரசனுடைய எல்லைக்குள் அவனது ஆணை நடைபெறலாம். வெளியிலிருந்து அவனைத் தாக்காது பாதுகாத்தல் உப்பளங்களுக்குப் போவதற்கு அனுமதியளித்தல் யுத்தத்திற்கு முன்னர் டச்சுக்காரர் கைப்பற்றியிருந்த பிரதேசங்களிலெல்லாம் அவர்கள் ஆணை செல்லுமென அரசன் உடன்பட்டதோடு தீவின் கரையோரங்களில் நான்கு மைல் அகலத்திற்கு கரை நிலங்களை டச்சுக்காரருக்குக் கொடுத்தான்.[3]

இதன் பிரகாரம் நான்கு மைல் அகலத்திற்கு மட்டக்களப்பு கரை நிலங்களை டச்சுக்காரருக்கு உரித்தானதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. இப்பிராந்தியத்தின் நிர்வாக முகாமைத்துவத்திற்காக ஒல்லாந்தர் புதிய நிர்வாகிகளை நியமித்தனர். ஒல்லாந்தர் மட்டக்களப்பை இரு மாகாணங்களாகப் பிரித்து நிர்வகித்து வந்தனர். கிபி 1798 வரை இவர்களது ஆட்சி நிலவியிருந்தது. இக்காலகட்டத்தில் (1766-1798) ஒல்லாந்தர் அரசின் ஆளுநர்களாக மட்டக்களப்பின் வடபகுதிக்கு திரு. அறுமக்குட்டிப்போடி என்பவரும் தென்பகுதிக்கு திரு. கந்தப்போடி என்பவரும் ஒல்லாந்த அரசால் நியமிக்கப்பட்டிருந்தனர்.[4] இவர்களைத் தவிர டச்சுக் கம்பெனி ஆட்சியில் 'வாரியலுவலர்' என்ற உயர் பதவியும் மட்டக்களப்பில் நிலவியிருந்தது. இப்பதவியை டச்சுக்காரரே வகித்து வந்தனர்.[5]

---

3. இலங்கை வரலாறு பாகம் II – பக் 234-235 பேராசிரியர் செ.கிருஷ்ணராஜா 2005
4. திருக்கோவில் பிரதேச இலக்கிய வரலாறு – பக் 76 நா.நவநாயகமூர்த்தி – 2014
5. இலங்கையின் சுருக்க வரலாறு பக் 141 எச்.டபிள்யு.கொடிறின்றன் - 1960



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14.12.1766ல் கண்டி மன்னனுக்கும் ஒல்லாந்த டச்சுக்கம்பெனிக்குமிடையில் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின்படி மட்டக்களப்பு (கரையோரப் பகுதிகள்) எட்டு வன்னிச் சிற்றாட்சிப் பிரவுகள் ஒல்லாந்தர் ஆட்சியின்கீழ் கொண்டுவரப்பட்டிருந்தன. அவையாவன

1. பாணமைப்பற்று
2. அக்கரைப்பற்று
3. கரவாகுப்பற்று
4. மண்முனைப்பற்று
5. எருவில் பற்று
6. போரதீவுப்பற்று
7. மட்டக்களப்பு
8. கோரளைப்பற்று

என்பனவாகும்.[6] இவை வன்னியர்களது ஆட்சியிலிருந்த போதும் வன்னியர்கள் ஒல்லாந்தர் மேலாதிக்கத்தை ஏற்ற சிற்றரசர்களாக விளங்கியிருந்தனர். ஆயினும் வன்னியர்களது செல்வாக்கே நிலைத்திருந்தது. போடிகளான (ஒல்லாந்த ஆளுநர்கள்) தமிழர்களுடனும் கண்டி மன்னர்களுடனும் வன்னியர்கள் கொண்டிருந்த நெருக்கமும் இதற்குக் காரணிகள் எனலாம். இவ்வேளை சிங்கள மக்களின் எண்ணிக்கை மட்டக்களப்பில் மிகக் குறைவாகவேயிருந்தது. தமிழர்களும் முஸ்லீம்களுமே வாழ்ந்திருந்தனர்.

இக்காலகட்டத்தில் மட்டக்களப்பு தமிழகத்தில் வாழ்ந்திருந்த முஸ்லீம் மக்கள் பற்றி நோக்குமிடத்து கிபி 1545 க்கு பிற்பட்ட காலத்தில் மட்டக்களப்பின் உட்பிரதேசங்களில் செட்டிகளுடன் சேர்ந்து (வாவியூடாக) வாணிபம் செய்யவந்த தென்னிந்திய முஸ்லீம் வர்த்தகர்களுக்கும் மட்டக்களப்பு தமிழ் மங்கையருக்கும் பிறந்த முஸ்லீம்களின் சந்ததியினரும் கிபி 1626ல் செனரதன் காலத்தில் வன்னியர்களது உதவியுடன் குடியேறிய நாலாயிரம் முஸ்லீம்களின் சந்ததியினரும் இக்காலத்தில் மட்டக்களப்பில் வாழ்ந்திருந்த முஸ்லீம் மக்களில் அடங்குவர்.

---

6.அம்பாரை மாவட்ட முஸ்லீம்கள் - பக் 35-36 பதிப்பாசிரியர் எஸ்.எச்.எம்.ஜெமீல் - 1997
இக்காலத்தில் போடிகளான தமிழர்களே மட்டக்களப்பில் நிலச் சொந்தக்காரர்கள். அவர்களுக்கு ஊழியம் செய்பவர்களே விவசாயிகள். கண்டி மன்னனுக்கு போடிகள் செலுத்திய பத்திலொன்று வரியினை இப்போது டச்சுக் கம்பெனிக்கு செலுத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களுடன் கிபி 1751-52 களில் நிந்தவூர்ப்பற்று (சிங்காரபுரி) சம்மாந்துறை வன்னிய இராசாக்கள் ஆதரவுடன அக்கரைப்பற்று வன்னியில் குடியேற்றப்பட்ட முஸ்லீம் குடிகளும் மட்டக்களப்பில் வாழ்ந்திருந்த முஸ்லீம் மக்களில் அடங்குவர்.

இதேவேளை உடன்படிக்கையின்படி கண்டி மன்னனின் சுயாதீனத்தை அங்கீகரிப்பது ஒல்லாந்தருக்கு வரி செலுத்துவது தமக்குத் தேவையான உப்பை கிழக்கு மேற்கு கரையோர உப்பளங்களிலிருந்து கண்டி மன்னன் பெற்றுக் கொள்ளலாம் என்பதையும் ஒல்லாந்தர் ஏற்றிருந்தனர். இதனால் கண்டி மன்னனுக்கும் மட்டக்களப்பிற்குமிடையில் உறவுகள் நிலவியிருந்தன.[7] அத்துடன் கண்டி மன்னன் மீது வன்னிச் சிற்றரசர்களும் மக்களும் தொடர்ந்து நம்பிக்கையும் விசுவாசமும் கொண்டிருந்தனர் என்பதை அறியமுடிகிறது.

இலங்கையின் கரையோர மாகாணங்களை டச்சுக்காரர் கைப்பற்றித் தமது ஆட்சியை அங்கு நிலைநிறுத்திய காலத்தில் தமிழ் மக்களின் பாரம்பரிய வழக்காறுகளை மீறாமல் அவற்றிற்கிணங்க ஆட்சி செய்தனர்.

கிபி 1766ல் கரையோர பிரதேசங்களை அவர்களின் முழுக்கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவந்ததைத் தொடர்ந்து டச்சுக் கவர்னர் இமான் விலேம்பால்க் (I.W.FAULK) அவர்களின் பணிப்பின் கீழ் முற்குகச்சட்டம் தொகுக்கப்பட்டது. ஒல்லாந்தர் மட்டக்களப்பிலும் புத்தளத்திலும் முற்குகச்சட்டத்தை தொகுத்து அதனைத் தமது ஆட்சி அதிகார சபையிலும் கடைப்பிடித்தனர்.

இக்காலத்தில் மட்டக்களப்பின் நிர்வாக அதிகாரியாக இருந்த "யாக்கப் வேர்ணான்ட்" என்பவர் முற்குகச்சட்டத்தைத் தொகுப்பதில் முன்னின்று செயற்பட்டார். இவர் தமிழ்மொழியிலும் நல்ல தேர்ச்சி பெற்றிருந்ததால் மட்டக்களப்பில் வாழ்ந்த முற்குகப் போடிகளோடு மிக நல்லமுறையில் பழகினார் என்று தெரிய வருகின்றது. இதனால் அவருக்கு அச்சட்டத்தை வகுப்பது இலகுவாக இருந்தது.

7. இக்காலத்தில் பாணமைப்பற்று வன்னிப்பிரதேசத்திலிருந்து கண்டிக்கு அதிகளவு உப்பு கொண்டுசெல்லப்பட்டதை அறியமுடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டச்சுக்காரர்கள் மட்டக்களப்பில் "லான்றாட்" (LANDRARRD) என்னும் சிவில் நீதி அமைப்பினை ஏற்படுத்தினர். டச்சு ஆட்சியின் கடைசி மூன்று தசாப்தங்களிலும் (1766-1796) மட்டக்களப்பில் லான்ராட் சிவில் நீதிமன்றம் சிறப்புடன் விளங்கி வந்துள்ளது.[8] இந்த அமைப்பில் நிலங்களுக்குச் சொந்தக் காரர்களாகவிருந்த போடிகளே அங்கத்தவர்களாக இருந்தனர்.

இக்காலத்தில் (1766-1781) மட்டக்களப்பில் நிலவியிருந்த போடிமார் நிர்வாக முறையில் முழுமையான அதிகாரம் மாகாண ஆளுநர்களான திரு.கந்தப்போடி, திரு.அறுமக்குட்டிப்போடி ஆகியோர் கைகளில் இருந்து வந்தது. இவர்களுக்குக்கீழ் ஒவ்வொரு மாகாணத்துக்கும் சம்பளம் பெறும் நிலமைப்போடிகளும் நியமனம் பெற்றிருந்தனர். மேலும் இக்காலத்தில் மட்டக்களப்பின் அதிகமான ஊர்களின் தலைவர்களாக ஊர்ப்போடிமார் செயற்பட்டு வந்தனர். சில ஊர்களில் ஊர்ப்போடிகள் மிக நீண்ட காலத்துக்கு முன்பிருந்தே செயல்பட்டு வந்ததாக அறியமுடிகிறது.

இவ்வாறு ஒல்லாந்தர் ஆட்சியில் போடிமார் நிர்வாகமுறை மட்டக்களப்பில் நிலவிவந்தபோதும் வன்னிச் சிற்றரசர்களது செல்வாக்கே நிலைத்திருந்தது. அத்துடன் நாயக்கர் குலத்துத் தமிழ் மன்னனான கீர்த்தி ஸ்ரீ இராசசிங்கன் மட்டக்களப்பு வன்னியர்களுடனும் வன்னியர் கோத்திரத்து ஆளுநர்களான தலைமைப்போடிகளுடனும் நெருக்கமான உறவுகள் கொண்டிருந் தான்.

நாயக்கர் குலத்துத் தமிழ் மன்னனான கீர்த்தி ஸ்ரீ இராசசிங்கன் தனது ஆட்சியில் தமிழ்மொழிக்கும் முக்கியத்துவம் அளித்து வந்தான். இவன் பலருடன் கொண்ட கடிதத் தொடர்புகள் யாவும் தமிழ் மொழியிலேயே உள்ளன. இக்கடிதங்களின் உண்மைத் தகவல்களை நுவரெலியாவிலுள்ள நூதனசாலையில் காணலாம். பிரெஞ்சு மன்னன் பதினாறாம் லூயிக்கும் கீர்த்தி ஸ்ரீ இராசசிங்கனுக்குமிடையில் 1777ம் ஆண்டில் ஒரு நட்புறவு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.

---

8. 'மட்டக்களப்பு குகன்குல முற்குகர் வரலாறும் மரபுகளும்' - பக்.67,68- ஞா.சிவசண்முகம் - 2000



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த உடன்படிக்கையின் மூலப்பிரதிகள் பாண்டிச்சேரியிலுள்ள தொல்பொருட்சாலையில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.[9] ஆதலால் தமிழ்மொழி மீது பற்றுக் கொண்டிருந்த தமிழனான கண்டி மன்னன் கீர்த்தி ஸ்ரீ இராசசிங்கன் ஒல்லாந்தர் ஆட்சி நிலவியிருந்தபோதும் அக்கரைப்பற்று வன்னிப் பிரதேசம் உள்ளிட்ட மட்டக்களப்பு தமிழகத்துடன் நெருக்கமான உறவினைக் கொண்டிருந்ததில் வியப்பில்லை.

இவ்வாறானதொரு செழுமைமிக்க அரசியல் சூழலில் ஒல்லாந்தர் மட்டக்களப்பு (அம்பாரை உள்ளிட்ட) இலக்கிய வளர்ச்சிக்கும் ஆதரவளித்து வந்தனர். குறிப்பாக மட்டக்களப்புத் தமிழகத்தின் பண்டைய வரலாறு பற்றி இலக்கியங்கள் உருவாக இவர்கள் ஊக்கமளித்து வந்தனர்.

அக்காலத்தில் மட்டக்களப்பில் வாழ்ந்திருந்த புலவா பரம்பரையினர் சந்ததியினரிடமிருந்தும் பண்டைய ஆலயங்களில் சேமிக்கப்பட்டிருந்த பட்டயங்களில் எழுதப்பட்டிருந்த வரலாற்று செய்திகளையும் ஆதாரங்களாகக் கொண்டு "மட்டக்களப்பு பூர்வசரித்திரம்" என்ற நூல் எழுதத் தொடங்கிய இக்காலத்தில் இவற்றில் காணப்பட்ட வரலாற்று சான்றுகளை அடிப்படையாகக் கொண்ட கல்வெட்டுப் பாடல்களும் உருவாகி வந்தன.

ஒல்லாந்தர் ஆட்சி என்பது மட்டக்களப்பில் சிறப்புடன் விளங்கியிருந்த இக்காலத்திலேயே பல்துறை சார்ந்த (ஆடல் நாடகம் உள்ளிட்ட) ஏராளமான இலக்கியங்கள் உருவாகி வந்தன. மாகாண ஆளுநர்களான தலைமைப்போடிகள் நிலச்சுவாந்தர்களான போடிகள், வன்னியர், புலவர்கள், பண்டிதர்கள், கவிஞர்கள் என்போரைக் கௌரவித்து வந்ததுடன் இலக்கிய முயற்சிகளுக்கும் ஆதரவு நல்கிவந்தனர். இன்று காணக்கிடைக்கும் கல்வெட்டுப் பாடல்கள் ஆலய வரலாறு பற்றிய கல்வெட்டுக்கள் (தாதன்கோயில் கல்வெட்டு) ஆகியனவற்றில் பெரும்பாலானவை இக்காலத்தில் உருவானவைகளாகும்.

---

9. வரலாற்றில் தமிழும் தமிழரும் - பக் 13 'திக்கவயல்' தர்மகுலசிங்கம் - 1999



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதேவேளை அக்கரைப்பற்று வன்னிப் பிரதேசத்திலும் இலக்கியங்கள் உருவாகி வந்துள்ளன. இப்பிரதேசத்தில் வாழ்ந்திருந்த புலவர்கள் தென்மோடிக் கூத்துக்களையும் எழுதி வந்தனர். கண்டி மன்னன் கீர்த்தி ஸ்ரீ இராசசிங்கன் ஆட்சிக்கு வந்த காலத்தில் (கிபி 1747ல்) இப்பிரதேசத்தில் நிலவியிருந்த செழிப்பான கலை இலக்கியச் சூழலில் தோற்றம் பெற்ற தென்மோடிக்கூத்து என்ற பழந்தமிழர் நாடகவடிவம் இக்காலத்தில் (1766-1781) அக்கரைப்பற்று வன்னிப் பிரதேசத்தில் செழிப்புடன் விளங்கியிருந்தது.

மட்டக்களப்பின் பாரம்பரிய கலைகளான வசந்தன், கும்மி போன்ற ஆடல் வகைகள் அக்கரைப்பற்று வன்னிப் பிரதேசத்திலும் சிறப்புடன் விளங்கியிருந்த இக்காலத்தில் குறிப்பாக தென்மோடிக் கூத்துக்களை இயற்றவல்ல புலவர்களும் அண்ணாவிமாரும் கூத்தாட்டக் கலைஞர்களும் பெருமளவில் வாழ்ந்திருந்தனர். கருங்கொடித்தீவு, கோளாவில், தம்பிலுவில் ஆகிய பழந்தமிழ்க் கிராமங்கள் இக்காலத்தில் அக்கரைப்பற்று வன்னிப் பிரதேசத்தில் நிலைத்திருந்த தென்மோடிக் கூத்து மையங்களாகும்.[10]

இக்காலத்தில் குறிப்பாக கீர்த்தி ஸ்ரீ இராசசிங்கனின் இறுதிக் காலத்தில் நடுக்காடு பிரதேசக் குடியேற்றப் பகுதிகளான உசரவேகாமம், பள்ளவெளி, கடவத்தை, கொன்றைவட்டான் திவிளானை, பொத்தானைவெளி, வம்மியடி ஆகிய இடங்களில் வாழ்ந்திருந்த சிங்கள மக்கள் இந்த இடங்களிலிருந்து இடம்பெயர்ந்து வேறிடங்களுக்குச் சென்றனர். இதனைத் தொடர்ந்து அக்கரைப்பற்று வன்னிப் பிரதேசத்தின் மேற்குப் பகுதியில் அமைந்திருந்த நடுக்காடு பிரதேசம் மீண்டும் காடாக மாறத் தொடங்கியது.[11]

---

10. இதற்குப் பிற்பட்ட காலத்தில் தம்பட்டை, திருக்கோவில் ஆகிய கிராமங்களிலும் கூத்துக்களை இயற்றவல்ல புலவர்களும் அண்ணாவிமார், கூத்தாட்டக்கலைஞர் என்போர் வாழ்ந்திருந்ததை அறியமுடிகின்றது.

11. கீர்த்தி ஸ்ரீ இராசசிங்கனது காலத்திலேயே குறிப்பாக கிபி 1766ம் 1781ம் ஆண்டுக்குமிடைப்பட்ட காலத்திலேயே இவ்விடப்பெயர்வு நிகழ்ந்ததென்பதை பரவணிக் கல்வெட்டு உணர்த்தும் (ஈழத்தமிழர் வரலாற்று கூவடுகள் - பக் 108-109 நா.நவநாயகமூர்த்தி – 2002)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதேவேளை கிபி 1752ஆம் ஆண்டு தொடக்கம் 1780, 81 கள் வரையுள்ள காலத்தில் இராஜபக்ஷமுதலியார் என்பவரின் நிர்வாகத்தின்கீழ் சிங்கள மக்களுடன் தமிழ் மக்களும் ஒற்றுமையாகச் சிறப்புடன் செயற்பட்டு வந்த நடுக்காடுப் பிரதேசம் பொலிவிழந்ததைத் தொடர்ந்து அங்கு நிலவியிருந்த கோயில்மேடு ஆலயத்திலிருந்த பாண்டிய கலையம்சம் நிறைந்த அம்மன் விக்கிரகம் சிங்கள கட்டாடியாரால் அங்கிருந்து எடுத்து வரப்பட்டு அக்கரைப்பற்று வன்னி பிரதேசம் பனங்காடு பட்டிநகர் அம்மன் ஆலயத்தில் சேர்க்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து சிலவருடங்கள் சிங்கள பத்ததி முறையிலும் இவ்வாலயத்தில் பூசைகள் இடம்பெற்று வந்துள்ளன. இதேவேளை பண்டுதொட்டு இவ்வாலயத்தில் நிலவிவந்த அம்மன் விக்கிரகம் தொடர்ந்து தமிழ்ப் பத்ததி முறையில் சடங்கு பூசைகள் பெற்று செழிப்புடன் மிளிர்ந்து வந்துள்ளதை அறியமுடிகின்றது.

பிற்காலத்தில் இவ்வாலயத்தில் நிலவிவந்த அம்மன் விக்கிரகங்கள் இரண்டும் தமிழ்ப் பத்ததி முறையில் சடங்கு பூசைகள் இடம்பெற்று வந்துள்ளன. இன்றைய காலத்தில் பட்டிநகர் கண்ணகையம்மன் ஆலயத்தில் மூலவராகவுள்ள பாண்டிய கலை மரபினைப் பிரதிபலிக்கும் அம்மன் விக்கிரகம் அக்காலத்தில் 'கோயில்மேடு' அம்மன் ஆலயத்திலிருந்து (1780ல்) எடுத்துவரப்பட்டது என்பது சில ஆய்வாளர்களின் கருத்தாகவுள்ளது.[12] இதனை ஏற்றுக் கொள்ள முடியும். இதேவேளை பண்டுதொட்டு இவ்வாலயத்தில் நிலவிவந்த அம்மன் விக்கிரகம் பற்றி அறியமுடியாதுள்ளது.

12. மட்டக்களப்பு தமிழகத்தில் கண்ணகை வழிபாட்டு மரபுகள் - 'கட்டுரை' வ.சிவசுப்பிரமணியம் - 'சிறப்புமலர்' இரண்டாவது உலக இந்து மாநாடு – 2003



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்காலத்தில் அக்கரைப்பற்று வன்னிப் பிரதேசத்தில் அம்மன் வழிபாடு சிறப்புடன் விளங்கியிருந்தது. தம்பிலுவில் கண்ணகையம்மன் ஆலயம், பனங்காடு பட்டிநகர் கண்ணகையம்மன் ஆலயம் என்பன மட்டக்களப்புத் தேசமெங்கும் புகழ் பெற்றிருந்தன. நிந்தவூர்ப்பற்று வன்னிப் பிரதேசத்துடன் நெருக்கமான சமூக, சமய கலாசார உறவுகள் கொண்டிருந்த இப்பிரதேச மக்கள் நிந்தவூர் அட்டப்பள்ளம் (சிங்காரபுரி) மாரியம்மன் ஆலயம், மடத்தடி மீனாட்சியம்மன் ஆலயம் ஆகியனவற்றுடன் நெருக்கமான உறவுகளைக் கொண்டிருந்தனர். மேலும் கடனாட்சி அம்மன் மாரியம்மன், பத்திரகாளி போன்ற அம்சங்களையும் போற்றி வந்தனர்.

பண்டைக்காலம் தொடக்கம் உழவுத் தொழிலையே பிரதான தொழிலாகக் கொண்டு வாழ்ந்து வந்த இப்பிரதேசத்தில் மக்களிடையே மாடு வளர்க்கும் தொழிலும் முக்கியத்துவம் பெற்றிருந்தது. உழவுத் தொழிலுக்கு மாடுகளே உறு துணையாகவிருந்து வந்தன. (உழவு, சூடுமிதிப்பு) ஆதலால் இப்பிரதேசத்தில் வதனமார் வழிபாடும் நிலவிவந்தது.

'திருமருவயோத்தியம் பதிதனிலிருந்து'' என்று தொடங்கும் வதனமார் ஊர்சுற்றும் காவியம் என்ற இலக்கியத்தில்

'இனிதிருந்தே சிறிது பேரங்கிருக்க

இன்பமுடனே சிறிது பேரெழுந்தருளித்

தனிமை பெறவே திருக்கோயில் நகரெய்தி

தம்பட்டை பட்டிநகர் தளகைக்குடாவும்'

என்ற காவிய வரிகள் மூலமாக(பாடல் 6: வரி 1-4) அக்கரைப்பற்று பிரதேசத்தில் வதனமார் வழிபாடு செழித்திருந்தமை தெளிவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராசாதி இராசசிங்கன் காலம்

கீர்த்தி ஸ்ரீ இராசசிங்கனுக்குப்பின் அவனது சகோதரனான இராசாதி இராசசிங்கன் (கிபி 1781-1798) கண்டி மன்னனானான். இவன் சிங்கள மொழியைப் பயின்று சிங்கள திசாவைமாருடன் உறவாடினான். இதனால் கண்டியிலிருந்த திசாவைமார்களுடன் நல்லுறவுகள் கொண்டிருந்தான். இவனது காலத்தில் ஒல்லாந்தருக்கும் ஆங்கிலேயருக்குமிடையில் போர்மூண்டது.

இதேவேளை இலங்கையிலிருந்த கோட்டைகளை ஆங்கிலேயர் தாக்காதவாறு ஒல்லாந்தர் படைகளைச் சேர்த்தனர். இதுவரை இந்திய விவகாரங்களில் தலையிட்டிருந்த ஆங்கிலேயக் கிழக்கிந்திய சங்கம் ஒல்லாந்தரது குடியேற்றங்களில் தலையிட்டது. இதன்பயனாக 1782இல் எட்வேட்யூசு என்ற ஆங்கிலேய கடற்படை தளபதி திருமலை துறையையும் கோட்டையையும் கைப்பற்றினான்.

இதன் பின்னர் ஆங்கிலேயத் தூதுவர் கண்டிய மன்னனைச் சந்திக்க வரும்போது ஒல்லாந்தருக்கு உதவியாக வந்த பிரெஞ்சுப் படையிடம் சிக்கி மடகாஸ்காருக்கு அனுப்பப்பட்டான். பிரெஞ்சுப்படை மீண்டும் திருமலையை மீட்டு ஒல்லாந்தருக்கு அளித்தது. இந்நிலையில் ஒல்லாந்தர் கண்டியரசனுடன் சமாதானம் செய்ய விரும்பினர். பின்னர் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களின் காரணமாக 1795ல் திருமலை கோட்டையை ஆங்கிலேயரிடம் ஒல்லாந்தர் இழந்தனர். மேஜர் பிரேசர் மட்டக்களப்பைக் கைப்பற்றினான்.[13]

இதுபற்றி ஓரளவு விரிவாக நோக்குவது அவசியமாகின்றது. பதினெட்டாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் தென்னாசியாவில் அதாவது இந்தியாவையும் இலங்கையையும் உள்ளடக்கிய பிராந்தியத்தில் ஒல்லாந்து, பிரித்தானியா, பிரான்ஸ் ஆகிய மூன்று வல்லரசுகளும் ஏறக்குறைய சமமான வலுவுடன் காணப்பட்டன. இலங்கையின் கரையோரப் பிரதேசத்தில் மட்டுமன்றி தமிழ்நாட்டுக் கரையோரத்தில் நாகபட்டினம் போன்ற இடங்களில் டச்சுக்காரர் அதிகாரம் பெற்றிருந்தனர்.

---

13. புதுமுறைச் சரித்திரம் பகுதி I, II – பக் 138 V.S.S.ராம், T.V.K.மூர்த்தி 1961



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கிலேயர் தமிழ் நாட்டின் கரையோரத்தில் சென்னையிலும் (மதராஸ்) மேற்குக் கரையில் பம்பாயிலும் (மும்பாய்) வங்காளக் கரையில் கல்கத்தாவிலும் (கொல்கத்தா) வேறு சில இடங்களிலும் தங்கள் அதிகார நிலையங்களை அமைத்திருந்தனர். பிரெஞ்சுக்காரர் இந்து சமுத்திரத்தில் மொரிசியஸ் தீவுகளிலும் தமிழ்நாட்டுக் கரையில் புதுச்சேரி மற்றும் காரைக்கால் போன்ற இடங்களிலும் தங்கள் ஆதிக்கத்தை நிலை நாட்டியிருந்தனர்.

இக்கால கட்டத்தில் ஐரோப்பாவில் தோன்றிய அரசியல் பிரச்சினைகளால் ஆங்கிலேயரும் பிரெஞ்சுக்காரரும் ஒருவருக்கொருவர் பகைவராகி விட்டனர். இவர்களுக்கிடையில் சிக்கிய டச்சுக்காரர் பல பிரச்சனைகளை எதிர்நோக்கியிருந்தனர். இவற்றின் தாக்கத்தை இலங்கையிலும் இந்தியாவிலும் பார்க்க முடிகின்றது. இந்த மூன்று ஐரோப்பிய நாடுகளுக்கிடையில் நடந்த போராட்டத்தின் விளைவாகவே இலங்கையும் இந்தியாவும் பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் ஆங்கிலேயர் ஆட்சிக்குட்பட்டன.

இப்போராட்டத்தில் திருகோணமலை ஒரு முக்கிய இடத்தைப் பெற்றிருந்தது. இந்தியாவில் ஆதிக்கம் பெற விரும்பிய எந்த வல்லரசிற்கும் திருகோணமலை துறைமுகம் மிகவும் அத்தியவசியமானதாக விளங்கியது. இதனால் டச்சுக்காரரும் பிரித்தானியரும் பிரெஞ்சுக்காரரும் பதினெட்டாம் நூற்றாண்டில் மாறி மாறித் திருகோணமலையைக் கைப்பற்றினர். இதற்காக இலங்கையில் கண்டி மன்னனுடன் நல்லுறவு கொண்டிருப்பதும் இந்த ஐரோப்பிய வல்லரசுகளுக்கு அவசியமானதாகவிருந்தது.

இலங்கையின் கரையோரப் பிரதேசம் டச்சுக்காரருடைய ஆட்சிக்குட்பட்டிருந்தது. ஆனால் இலங்கையின் மத்திய பகுதியில் கண்டி அரசு தமிழ்பேசும் நாயக்க வம்சத்தின் ஆளுகைக்குட்பட்டிருந்தது. கண்டி மன்னனுடன் நல்லுறவு கொண்டிருப்பதற்காக பிரித்தானியர் பலதடவை அவனுக்குத் தூது அனுப்பினர். டச்சுக்காரரும் அவனுடன் உடன்படிக்கை செய்தனர். டச்சுக்காரரை இலங்கையிலிருந்து வெளியேற்ற விரும்பிய கண்டி மன்னன் தன் ஆதரவை பிரித்தானியருக்கு வழங்கினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நிலையில் ஐரோப்பாவில் பிரான்சுக்கெதிரான போராட்டத்தில் பிரித்தானியா வெற்றிபெற இந்தியாவிலும் இலங்கையிலும் பிரித்தானியரின் ஆதிக்கம் மேலோங்கியது. எனவே இலங்கையை தங்களது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவருவதற்கு பிரித்தானியருக்கு எதிர்ப்பே இருக்கவில்லை. ஓரளவு எதிர்ப்பை டச்சுக்காரர்கள் காட்டியபோதும் திருகோணமலை 1795 ஆகஸ்டிலும் மட்டக்களப்பு செப்டெம்பரிலும் யாழ்ப்பாணம் சில நாட்களின் பின்னரும் பிரித்தானியரிடம் வீழ்ச்சியடைந்தன.[14]

இவ்வாறானதொரு அரசியல் சூழலில் கண்டிமன்னன் இராசாதி இராசசிங்கனின் ஆட்சிக்காலத்தில் கிபி 1795ம் ஆண்டு வரையுள்ள காலத்தில் மட்டக்களப்பில் ஒல்லாந்தர் ஆட்சி பெயரளவில் நிலவியிருந்தபோதும் நெடுங்காலம் தொடக்கம் இப்பிரதேசத்தின் ஆட்சித் தலைவர்களாக விளங்கிவந்த வன்னியர்களது செல்வாக்கே நிலைத்திருந்தது.

ஒல்லாந்த அரசுப் பிரதிநிதிகளான (ஆளுநர்கள்) திரு. அறுமைக்குட்டிப்போடி, திரு.கந்தப்போடி ஆகிய தலைமைப் போடிகளுக்கும் வன்னியர்களுக்குமிடையில் இருந்துவந்த இனம் சமயம் சார்ந்த புரிந்துணர்வு, ஒற்றுமை, நம்பிக்கை என்பன இதற்குக் காரணிகளாகவிருந்தன. வன்னிச் சிற்றரசர்களும் ஒல்லாந்த நிலமைப்போடிகளும் தமிழையும் சைவத்தையும் பாரம்பரிய கலைகளையும் பேணிக் காத்து வந்ததுடன் கண்டி மன்னனுடனும் நல்லுறவு கொண்டிருந்தனர்.[15]

கண்டி மன்னன் இராசாதி இராசசிங்கனின் (1781-1798) முடிசூட்டு விழாவில் ஒல்லாந்த ஆளுநர்களான திரு.அறுமைக் குட்டிப்போடியும் திரு.கந்தப்போடியும் வன்னியர்களும் கலந்து கொண்டதுடன் கண்டி மன்னனுக்குப் பரிசுகளும் வழங்கியுள்ளனர்.[16] மட்டக்களப்பில் 1786 இல் ஒல்லாந்தர் அறிமுகப்படுத்திய நெல்வரிமுறை அவர்களுக்கெதிராகப் பெரும் கலகத்தை ஏற்படுத்தியது.

---

14. இலங்கையில் தமிழர் – பக் 280-282 கலாநிதி முருகர்குணசிங்கம் - 2008
15. திருக்கோவில் பிரதேச இலக்கிய வரலாறு – பக் 81 நா.நவநாயகமூர்த்தி – 2014
16. ஈழத்தமிழர் வரலாற்று சுவடுகள் - பக் 103 நா.நவநாயகமூர்த்தி - 2002



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வேளை ஆளுநர்களான நிலமைப்போடிகள் (தலைமைப்போடிகள்) கண்டி மன்னன் இராசாதி இராசசிங்கன் உதவியோடு ஒல்லாந்தருக்கெதிராக போர் தொடுத்தனர். இரண்டுமாத காலம் ஒல்லாந்தரால் நிலமையை எதிர்கொள்ள முடியாது போயிற்று. தலைமைப்போடிகளுடன் ஒல்லாந்தர் சமரசம் செய்தபின்னரே நிலமை சுமூகமாயிற்று. கண்டி மன்னனுடன் கூட்டாகவிருந்தவர்களுடன் மட்டக்களப்பின் அதிகாரத்தை மீண்டும் ஒல்லாந்தர் கையளிக்க வேண்டியதாயிற்று.[17]

இந்நிலையில் இக்காலத்தில் (1781-1795) வன்னிச் சிற்றரசர்கள் மீது தனது முழுமையான அதிகாரத்தைச் செலுத்த முடியாத நிலையிலேயே ஒல்லாந்த அரசு இருந்ததென்பது வரலாற்று உண்மையாகும். மட்டக்களப்பில் 1794ல் ஒல்லாந்தப் பொறுப்பதிகாரியாகவிருந்த 'ஜேக்கப் வேர்னான்ட்' என்பவர் ஆளுநர்களான போடிகளின் ஒத்துழைப்பைப் பெறுவது கடினமாக இருக்கின்றது என்று தனது அறிக்கையில் குறிப்பிடுகின்றார்.[18]

கண்டி மன்னன் இராசாதி இராசசிங்கன் காலத்தில் குறிப்பாக மட்டக்களப்பில் ஒல்லாந்தர் ஆட்சி நிலவியிருந்த கிபி 1795 வரையுள்ள காலத்தில் வடக்கே காளியோடை தொடக்கம் தெற்கே சங்கமன்கண்டி வரை பரந்திருந்த அக்கரைப்பற்று வன்னிப் பிரதேசத்தில் போடிமார் நிர்வாகமுறை பெயரளவில் நிலவியிருந்தபோதும் வன்னியரின் ஆட்சியே நிலைத்திருந்தது. வன்னியர் ஆட்சி மையமாகக் கருஞ்கொடித்தீவு நகர் விளங்கியிருந்தது.

இதேவேளை ஒல்லாந்த அரசின் பணியாளர்களான சம்பளம் பெறும் போடிகள் அக்கரைப்பற்று வன்னிப் பிரதேசக் கிராமங்களில் பணிபுரிந்து வந்தனர்.இவர்களின் நிர்வாகத் தலைமைப்பீடமும் வன்னியரின் இராஜதானியான கருஞ்கொடித்தீவில் அமைந்திருந்ததை அறியமுடிகின்றது.

---

17. மட்டக்களப்பு பிரதேச சாகித்தியவிழா ஆய்வரங்கு – 1993 – ஆய்வாளர் டி.சிவராம் அவர்களின் ஆய்வுக் கட்டுரையிலிருந்து

18. மட்டக்களப்பு குகன்குல முற்குகர் வரலாறும் மரபுகளும் பக் 67-68 ஞா.சிவசண்முகம் - 2000



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டி மன்னன் இராசாதி இராசசிங்கன் தனது ஆட்சிக்காலத்தில் மட்டக்களப்புக்கு விஜயம் செய்தவேளை சம்மாந்துறைக்கு வந்திருந்த இவன் காரைதீவு கண்ணகையம்மன் ஆலயத்துக்கும் சென்றுள்ளான்.[19] இதனைத் தொடர்ந்து சிங்காரபுரி வன்னிக்கும் (நிந்தவூர்ப்பற்று) கண்ணகையம்மன் வழிபாடு செழிப்புடன் மிளிர்ந்து வந்த அக்கரைப்பற்று வன்னிப் பிரதேசத்தின் இராஜதானியான கருஞ்கொடித்தீவு நகருக்கும் வந்து சென்றுள் ளான். இக்காலத்தில் தம்பிலுவில் கண்ணகையம்மன் ஆலயம் பனங்காடு பட்டிநகர் கண்ணகையம்மன் ஆலயம் என்பன சிறப்புடன் விளங்கியிருந்ததுடன் ஊவா வெல்லச சிற்றரசர்களுடன் நெருங்கிய உறவுகளையும் கொண்டிருந்தன. இலக்கியத் தொல்லியல் சான்றுகள் இதனை உணர்த்துகின்றன.

இவனது காலத்தில் அக்கரைப்பற்று வன்னிப் பிரதேசத்தின் கருங்கொடித்தீவு, கோளாவில், பனங்காடு, தம்பிலுவில், தம்பட்டை திருக்கோவில், கோரைக்களப்பு முதலான பழந்தமிழ் கிராமங்களில் தமிழும் (இலக்கியம்) சைவமும் செழித்திருந்தன. இதற்கு இலக்கியச் சான்றுகள் உள்ளன. இன்று காணக்கிடைக்கும் கடனாட்சி அம்மன் காவியம், கடல்நாச்சிமார் பள்ளு என்பன இவனது காலத்தில் அக்கரைப்பற்று வன்னிப் பிரதேசத்தில் உருவான இலக்கியங்களில் அடங்கும்.

அக்காலத்தில் மட்டக்களப்பில் கடல்நாச்சியம்மன் வழிபாடு சிறப்புடன் விளங்கி வந்த இடங்களிலொன்றான கருங்கொடித்தீவு பகுதியைச் சேர்ந்த (கோளாவில் உள்ளிட்ட) புலவர்களால் இவை இயற்றப்பட்டன என்பதை அறியமுடிகின்றது. கடனாட்சி அம்மன் காவியம் இராசாதி இராசசிங்கனை வாழ்த்துகின்றது.

"பார்வழி கண்டிமகா ராசாதிராச

பார்த்தீபன் வாழி செங்கோல் முறைமை வாழி!

(பாடல் 15 : வரி 3-4) என்ற காவிய வரிகள் இதனை உணர்த்தும்.

---

19. மட்டக்களப்பு சைவக் கோயில்கள் - பக்:103 பண்டிதர் வி.சி. கந்தையா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் இவனது காலத்தில் தம்பிலுவில் கிராமத்தில் வாழ்ந்திருந்த புலவரொருவரால் இயற்றப்பட்ட "கண்ணகையம்மன் கும்மிப்பாடல்" என்ற இலக்கியமும் இன்று காணக்கிடைக்கின்றது. (நா.நவநாயகமூர்த்தி 2014) இவற்றின் வாயிலாக அக்காலத்தில் அக்கரைப்பற்று வன்னிப் பிரதேசத்தில் வாழ்ந்திருந்த மக்கள் தங்கள் கலை, கலாசாரம் என்பனவற்றை சிறப்புடன் பேணி வந்துள்ளனர் என்பதை உணரமுடிகின்றது.

இதேவேளை இராசாதி இராசசிங்கன் காலத்தில் அக்கரைப்பற்று வன்னிப் பிரதேசத்தில் ஒரு சமயம் ஒல்லாந்தர் மேற்கொண்ட சமய விரோத நடவடிக்கை பற்றியும் குறிப்பிடுவதும் அவசியமெனலாம். 1785ல் ஒல்லாந்த அறிமுகப்படுத்திய நெல்வரிமுறை தொடர்பாக ஏற்பட்ட கலகமும் கண்டி மன்னன் உதவியோடு மட்டக்களப்பு ஆட்சியாளர்களான ஆளுநர்கள் ஒல்லாந்தருக்கு எதிராகத் தொடுத்தபோர் நடவடிக்கைகளின்போது மட்டக்களப்பில் செல்வம் நிறைந்திருந்த கோயில்களில் ஒல்லாந்தர் கொள்ளையிட்டு வந்தவேளை (1785) முதல் திருப்படைக் கோயிலான திருக்கோயில் சித்திரவேலாயுதர் ஆலயத்திலிருந்த பெறுமதிமிக்க பொக்கிஷங்களைக் கொள்ளையிட்ட இவர்கள் இங்கிருந்த சில இலக்கியச் சுவடிகளையும் சேதமாக்கினார். (நா.நவநாயகமூர்த்தி 2014) இவ்வேளை கருஞ்கொடித்தீவு நகர் சித்தி விநாயகர் ஆலயமும் பாதிக்கப்பட்டது என்பதை அறிய முடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “ஆங்கிலேயர் ஆட்சியில்”

## (கிபி 1796 - 1830 வரை)

பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் பிரித்தானியர் டச்சுக்காரரிடமிருந்து இலங்கையைத் தமது கட்டுப்பாட்டினுள் கொண்டுவந்தனர். ஓரளவு எதிர்ப்பை டச்சுக்காரர் காட்டியபோதும் திருகோணமலை 1795 ஆகஸ்டிலும் மட்டக்களப்பு செப்டெம்பரிலும் யாழ்ப்பாணம் சில நாட்களின் பின்னரும் பிரித்தானியரிடம் வீழ்ச்சியடைந்தன. குறுகிய காலத்தினுள் மன்னாரையும் தன்வசமாக்கிய பிரித்தானியர் கரையோரமாக முன்னேறினர்.

வழியில் நீர்கொழும்பைத் தாக்கித் தமதாக்கி கொழும்புக்கு அண்மையிலுள்ள களனி கங்கையை 1798 பெப்ரவரியில் கடந்தனர். அதே ஆண்டு பெப்ரவரி 15ஆம் திகதியன்று கொழும்பு வீழ்ச்சியடைந்ததோடு இலங்கையில் டச்சுக்காரர் ஆட்சி முடிவுக்கு வந்தது. இதேவேளை வன்னி நிலப்பரப்பு பிரதேசமும் அவ்வேளையில் வன்னி அரசனாகவிருந்த பண்டார வன்னியனும் பிரித்தானியருக்கு பலத்த எதிர்ப்பைக் கொடுத்தனர்.

கி.பி 1802 இல் இலங்கை பிரத்தானியாவின் காலனித்துவ நாடாகப் பிரகடனப்படுத்தப்பட்டதாகக் கருதியபோதும் வன்னியும் கண்டி இராச்சியமும் சுதந்திரப் பிரதேசங்களாக இருந்தன. கிபி1803ல் பண்டார வன்னியனுக்கும் பிரித்தானியத் தளபதி ‘வொன்டிறிபேக்’ க்குமிடையில் (F.W.Vondrieberg) ஏற்பட்ட நேரடி மோதலில் பண்டார வன்னியன் தோற்கடிக்கப்பட்டான்.[1] கிபி 1815ல் கண்டி அரசையும் பிரித்தானியர் கைப்பற்றியதன் விளைவாக முழு இலங்கையும் அவர்களது ஆட்சிக்குட்பட்டது.

---

1. இலங்கையில் தமிழர் – பக் 280-282 கலாநிதி முருகர்குணசிங்கம் - 2008



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "ஆங்கிலேயர்ஆட்சியில்" அக்கரைப்பற்று

கிபி 1795ல் மேஜர் பிரேசர் என்ற ஆங்கிலேயத் தளபதி மட்டக்களப்புக் கோட்டையை ஒல்லாந்தரிடமிருந்து கைப்பற்றியதைத் தொடர்ந்து மட்டக்களப்பு பிரதேசம் ஆங்கிலேயர் வசமானது. ஆயினும் ஆங்கிலேயர் தங்கள் முழுமையான ஆட்சி அதிகாரத்தை இப்பிராந்தியத்தில் நிலைநிறுத்த முற்படவில்லை. மாறாகத் தொடர்ந்தும் ஒல்லாந்தரது ஆட்சி முறையே (நிர்வாகக் கட்டமைப்பு) மட்டக்களப்பில் நடைமுறைப்படுத்தி வந்தனர்.அதாவது போடிமார் நிர்வாக முறையே நிலவிவந்தது.

ஒல்லாந்தர் ஆட்சியில் முழுமையான அதிகாரம் பெற்றிருந்த இரு தலைமைப் போடிகளே ஆங்கிலேயரது ஆட்சியிலும் தொடர்ந்து கடமையாற்றி வந்தனர். கிபி 1803 வரை தலைமைப் போடிகள் நியமனம் இடம்பெறவில்லை. இக்காலத்தில் (1796-1803) வன்னி இராசாக்களின் வழிவந்தவர்களே சம்பளம்பெறும் நிலமைப் போடிகளாக இவர்களுக்குக் கீழ் பணிபுரிந்து வந்தனர். இக்கால கட்டத்தில் பிரதான பதவியாகவிருந்த 'நிலவிதான' என்ற உத்தியோகத்தை திரு.அருமைப்பெருமாள் என்பவர் ஒல்லாந்தர் காலத்திலிருந்தே வகித்துக் கொண்டிருந்தார்.

இக்காலத்தில் ஆளுநர்களாக இருந்துவந்த திரு.கந்தப்போடி திரு.அறுமக்குட்டிப்போடி என்போருக்கும் ஆங்கிலேயருக்குமிடையில் ஏற்பட்ட கருத்து வேற்றுமைகளால் எந்தவித வரியையும் ஆங்கிலேயரால் மட்டக்களப்பில் அறவிடமுடியாமல் போயிற்று.

இந்நிலையில் நிலவிதான திரு.அருமைப்பெருமாளும் ஆளுநர்களான போடிகளும் நிலக்கிழார்களான தமிழர்களும் (சிறுபோடிகள்) சிலமுஸ்லீம் தலைவர்களும் சேர்ந்து ஆங்கிலே யருக்கெதிராக கிளர்ச்சி செய்தனர். இதனால் அருமைப்பெருமாள் சிறைப்பிடிக்கப்பட்டு கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதேவேளை கண்டி இராச்சியத்தின் எல்லைக்குள் மிகப்பெரிய கொள்ளையொன்றும் இடம்பெற்றது.(1802ல்) வர்த்தக ஒப்பந்தத்தை மீறி புத்தளப் பகுதியைச் சேர்ந்த முஸ்லீம் வர்த்தகர்களிடம் கொள்ளையிடப்பட்டது. இச்சம்பவத்தை யுத்தத்திற்கான அறைகூவலாக எண்ணிய ஆங்கிலேயர் கிபி 1803ல் கண்டி இராச்சியம் மீது படையெடுத்தனர்.[2]

பிரித்தானியர் கடற்கரைப் பிரதேசங்களில் ஆட்சி நிறுவிக் கொண்டபோதிலும் அதைக் கண்டி மன்னன் ஏற்றுக்கொள்ளவில்லை. கடற்கரைப் பிரதேசங்களில் ஏற்படும் கலவரங்களுக்கு மறைமுகமாகக் கண்டி மன்னன் ஆதரவளித்து பிரித்தானியரின் ஆட்சிக்கு குந்தகம் விளைவித்தான். இதைத் தடுப்பதற்கு இவ்வேளை ஆளபதியாகவிருந்த பிரடரிக் நோர்த் (1798-1805) பாதுகாப்பு முறைகள் கையாண்டபோதிலும் தடுக்க முடியவில்லை. இதன் காரணமாக நோர்த் தேசாதிபதி தருணம் பார்த்திருந்து கண்டி மீது யுத்தப் பிரகடனம் செய்தான்.[3]

இவ்வேளை மட்டக்களப்பிலும் ஆங்கிலேயருக்கெதிரான கிளர்ச்சிகள் வெடிக்கலாயின. மட்டக்களப்பில் வாழ்ந்து வந்த தமிழர்கள் கண்டியருடன் சேர்ந்து போரிட்டனர். மட்டக்களப்புத் தலைவர்களான வன்னியர் சிலரும் ஆளுநர்களான நிலமைப்போடிகளும் மற்றும் போடிகள் பலரும் சில முஸ்லீம் அதிகாரிகளும் (அபூபக்கர், உதுமாலெவ்வை, ஈசாமுகாந்திரம் அனுஸ்லெவ்வை) மற்றும் அருமைப் பெருமாளின் சகோதரர் திரு. வள்ளியப்பா ஆகியோரும் ஊவாப்பகுதியின் திக்கதிபனது (கண்டி நாட்டுப் பிரதானி) துணையுடன் ஆங்கிலேயரை எதிர்த்துப் போரிட்டு புளியந்தீவு தவிர்த்து மட்டக்களப்பின் ஏனைய பிரதேசங்களைத் தமது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வந்தனர்.

---

2. திருக்கோவில் பிரதேச இலக்கிய வரலாறு – பக் 92 93 நா.நவநாயகமூர்த்தி – 2014

3. இதனால் ஆங்கிலேயர் படுதோல்வியைச் சந்தித்ததுடன் பல துன்பங்களுக்கும் அவர்கள் முகம் கொடுத்தனர்.
(இலங்கை வரலாறு – பிரித்தானியர் காலம் 1796-1948 சி.எஸ்.கதிர்காமநாதன் பீ.ஏ பக்55-57 – 1967)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புளியந்தீவு வாசிகளான தொன்பிலிப்பு இராசகாரிய பஸ்கோல்முதலியாரும் இன்னும் சிலரும் ஆங்கிலேயருக்கு விசுவாசமாக செயற்பட்டமையால் புளியந்தீவை மட்டுமே அவர்களால் காப்பாற்ற முடிந்தது.[4] இதனைத் தொடர்ந்து அக்காலத்தில் மட்டக்களப்பின் வருவாய்த்துறை அதிகாரியாகவிருந்த (Batticaloa Collector) ஜோசப்சிமித் என்பவன் கிளர்ச்சியாளர்களுக்கெதிராக கடும் நடவடிக்கை எடுத்தான். ஆயினும் புளியந்தீவு தவிர்ந்த ஏனைய பகுதிகளை முழுக்கட்டுப்பாட்டிற்குள்ளும் கொண்டுவர முடியாதநிலை அவனுக்கு ஏற்பட்டது.

இதன்பின்னர் லெப்ரினன் கேணல் ஆர்தர் ஜோன்ஸ்ரன் தலைமையில் பிரித்தானியப் படைகள் பெரும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு மட்டக்களப்பு கிளர்ச்சியை அடக்கினர். இதற்கு இரண்டு மாதங்கள் வரை சென்றதாக அறியமுடிகின்றது.[5] இவ்வேளை வன்முறைகள் மூலம் கிளர்ச்சியை அடக்க முற்பட்ட ஆங்கிலேயர் பிரபல்யம் மிக்க ஆலயங்களில் கொள்ளையிட்டனர். அவ்வாலயங்களிலிருந்த பெறுமதிமிக்க பொக்கிஷங்களைக் கைப்பற்றியதுடன் இவ்வாலயங்களில் சேமிக்கப்பட்டிருந்த இலக்கியச் சுவடிகள், கல்வெட்டுக்கள் ஆகியனவற்றைத் தீயிட்டு எரித்தனர்.

கிபி 1804 இல் மட்டக்களப்பில் போடிமார் மேற்கொண்ட கிளர்ச்சியில் நேரடியாக ஈடுபட்ட அக்கரைப்பற்று வன்னிப் பிரதேசம் பிரித்தானியர் மேற்கொண்ட (படையினர்) வன்முறைகள் மூலம் பெரும் பாதிப்புக்குள்ளானது. மேலும் கண்டி இராச்சியத்துடன் குறிப்பாக ஊவாவுடன் நெருக்கமான சமூக சமய கலாசார உறவுகள் கொண்டிருந்த இப்பிரதேசம் இக்கிளர்ச்சியின் பயனாகப் பெரும் அவலங்களையும் எதிர்நோக்கியிருந்தது. தற்காலிக இடம்பெயர்வுகளும் ஏற்பட்டிருந்தன.

---

4. மட்டக்களப்பு குகன்குல முற்குகர் வரலாறும் மரபுகளும் பக் 43 ஞா.சிவசண்முகம் - 2000

5. மட்டக்களப்பு வரலாறு – ஒரு அறிமுகம் - பக் 96 வெல்லவூர் கோபால் - 2000



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பு பிரதேசத்தின் முதல் திருப்படைக்கோயில் சித்திரவேலாயுதர் ஆலயத்தைக் கொள்ளையிட்ட பிரித்தானியர் (படையினர்) இங்கு சேமிக்கப்பட்டிருந்த இலக்கியச் சுவடிகள் சரித்திரக் கல்வெட்டுக்கள் (பட்டயங்கள்) ஆகியனவற்றைத் தீயிட்டு எரித்தனர்.[6] மேலும் அக்கரைப்பற்று வன்னியின் இராஜதானியாக வன்னிச் சிற்றரசர்கள் காலத்தில் விளங்கியிருந்த கருங்கொடித்தீவு நகர் சித்தி விநாயகர் ஆலயமும் சேதமாக்கப்பட்டது. நெடுங்காலம் தொட்டக்கம் வன்னியரின் ஆதரவைப்பெற்றுச் சிறப்புடன் நிலவிவந்த இவ்வாலயமும் கொள்ளையிடப்பட்டது. இங்கு சேமிக்கப்பட்டிருந்த இலக்கியச் சுவடிகளும் எரிக்கப்பட்டன.

இதேவேளை அக்கரைப்பற்று பிரதேசத்தில் நிலவியிருந்த பழமையான அம்மன் கோயில்களான தம்பிலுவில் கண்ணகையம்மன், பனங்காடு பட்டிநகர் கண்ணகையம்மன் ஆகிய ஆலயங்கள் ஆங்கிலேயர் அழிவிலிருந்து தப்பித்துக்கொண்டன. இவ்விரு ஆலயங்களும் அக்காலத்தில் மண்ணாலும் மரத்தாலும் கொண்டு நிர்மாணிக்கப்பட்டு ஓலை கொண்டு (கிடுகு) வேயப்பட்ட சிறிய மடாலயங்களாக இருந்தன. இவ்வாலயங்களில் இலக்கியச் சுவடிகளும் கண்ணகி வழிபாட்டுடன் தொடர்புடைய அம்மானைக் காய், காற்சிலம்புகள் மற்றும் பொற்புறாக்கள், தங்கமாம்பழம் போன்ற பூசைக்குரிய புனிதப் பொருட்களும் சேமிக்கப்பட்டிருந்தன.

ஆயினும் சிறிய மடாலயங்களாக காட்சியளித்த இவ்வாலயங்கள் ஆங்கிலேயர் அழிவிலிருந்து தப்பித்துக் கொண்டமை அம்மன் அருள் என்றே கூறலாம்.

---

6. கிபி 1804ல் இவ்வாலயத்தில் மேற்கொண்ட சமய விரோத நடவடிக்கைகளிலிருந்து தப்பித்துக் கொண்ட சிற்றிலக்கியம் 'திருவேட்டைக்கவி' என்பதாகும். கிபி1803ல் எழுதிய ஓர் ஓலைச்சட்டத்தில் இது காணக்கிடைக்கின்றது. நா.நவநாயகமூர்த்தி – 2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கு முந்திய போர்த்துக்கீசர் காலத்திலும் (கிபி 1623-24 கள்) ஒல்லாந்தர் காலத்திலும் (கிபி 1785) மட்டக்களப்பு தமிழகத்தில் நிகழ்ந்த சமய விரோத வன்முறைகளிலிருந்தும் இவை தப்பித்துக் கொண்டன. இதன் காரணமாகவே இவ்வாலயங்களை மையமாகக் கொண்டு உருவான அக்காலகட்ட கண்ணகி இலக்கியங்கள் இன்று காணக்கிடைக்கின்றன. குறிப்பாக பதினைந்தாம் நூற்றாண்டின் முற்பகுதியில் தம்பிலுவில் புலவரொருவரால் இயற்றப்பட்டுத் தம்பிலுவில் கண்ணகையம்மன் ஆலயத்தில் சேமிக்கப்பட்டிருந்த பெரும் பொக்கிஷமாகக் கருதப்படும் ‘‘கண்ணகி வழக்குரை’’ இலக்கியம் இக்காலகட்ட அழிவிலிருந்து தப்பிக்கொண்ட இலக்கியங்களிலொன்றாகும்.

இதேவேளை அக்கரைப்பற்று வன்னிப் பிரதேசத்தில் பாடல் பெற்ற தலங்களிலொன்றாகவும் திறந்தவெளிக் கோயிலாக மட்டக்களப்பு தேசமெங்கும் பிரபல்யம் பெற்றிருந்த பனங்காடு பழைய ஐயனார் ஆலயமும் ஆங்கிலேயர் அழிவிலிருந்து தப்பித்துக் கொண்டது. இங்கு குடி கொண்டிருந்த ஐயனார் பற்றியும் வழிபாடு பற்றியும் உருவாகி (கிபி 17 18ம் நூற்) நிலவிவந்த இலக்கியங்கள் ஏட்டுச்சுவடிகளாகத் தனியார் உடமைகளாகவிருந்து வந்ததால் இன்றும் காணக்கிடைக்கின்றன.

கிபி 1804ல் பிரித்தானியர் மேற்கொண்ட வன்முறைகள் காரணமாக அக்கரைப்பற்று வன்னிப் பிரதேசத்துடன் போடிமார் கிளர்ச்சியில் ஒன்றிணைந்து செயற்பட்ட நிந்தவூர்ப் பிரதேசமும் பெரிதும் பாதிப்புற்றது. குறிப்பாக இப்பிரதேசத்தில் சிறப்புடன் விளங்கி வந்த மீனாட்சி ஆலயம் முற்றாகவே இடித்தழிக்கப்பட்டது. (பரிவாரத் தெய்வ ஆலயங்கள் உள்ளிட்ட) அத்துடன் ஆலயத்திற்கு மேற்குப் பகுதியில் அமைந்திருந்த கிணறுகள், மண்டபம், மாளிகை உள்ளிட்ட சிங்காரபுரி வன்னியனின் பொழுதுபோக்கு வாசஸ்தலமும் முற்றாகவே இடித்தழிக்கப்பட்டது. இவற்றின் எச்சங்களை இன்றும் காணலாம்.[7]

---

7. அண்மையில் இவ்வாலயம் புனர்நிர்மாணிக்கப்பட்டு கும்பாபிஷேகமும் கண்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி.பி 1804ல் ஆங்கிலேயருக்கெதிராக மட்டக்களப்பு ஆட்சித் தலைவர்கள் மேற்கொண்ட கிளர்ச்சியைத் தொடர்ந்து ஆளுநர்களாக இரண்டு தலைமைப் போடிகளும் கண்டிக்குப் பின் வாங்கிச் சென்றனர். மட்டக்களப்பில் நிலவுடமையாளர்களாக இருந்த வர்களும் வன்னிச் சிற்றரசர்கள் பரம்பரையைச் சேர்ந்தவர்களுமான இவர்களது உடமைகளும் (காணிகள்) சொத்துக்களும் ஆங்கிலேயரால் பறிமுதல் செய்யப்பட்டன.

இதற்குப் பிற்பட்ட காலத்தில் ஆங்கிலேயர் போடிமார் நிர்வாக முறையை நீக்காது சிறிதுகாலம் வைத்திருந்தனர். தங்களுக்கு விசுவாசமாகச் செயற்படாத போடிகளை நீக்கிவிட்டு புதியவர்களை போடிகளாக நியமனம் செய்தனர். கிபி 1805ல் 'தோமஸ் மெயிட்லண்' என்ற ஆங்கிலேயர் ஆள்பதியாகக் கடமை ஏற்றார்.

இவர் மட்டக்களப்புக்கு நேரடியாக விஜயம் மேற்கொண்டு மேற்பார்வை செய்தார். இவர் மதச் சுதந்திரத்திற்கு வழிகோலினார். இதனைத் தொடர்ந்து மட்டக்களப்பு பிராந்தியத்தில் நிலவியிருந்த பதற்றநிலை மறைந்து மக்கள் வாழ்வில் அமைதி நிம்மதி குடிகொண்டன. அக்கரைப்பற்றுப் பிரதேசத்தில் வாழ்ந்திருந்த தமிழ்ச் சைவர்கள், இஸ்லாமியர் என்போர் தங்கள் சமயங்களைச் சுதந்திரமாகக் கடைப்பிடிக்கத் தொடங்கினர். ஆலயங்கள் மீண்டும் புனரமைக்கப்பட்டு (அதாவது சிதைவுற்ற) புதுப்பொலிவு பெற்றன. இலக்கியமும் பாரம்பரியக் கலைகளும் புத்துயிர் பெற்று சிறப்புடன் விளங்கத் தொடங்கின.

இதனைத் தொடர்ந்து மட்டக்களப்பில் போடிமார் நியமனம் இடம் பெற்றவேளை ஆங்கிலேயர் சண்டையிட்ட காலத்தில் (கிபி 1804ல்) அந்நியருக்கு விசுவாசமாகவிருந்த சிலரையும் போரில் ஈடுபடாமல் இருந்த சில சிறு போடிகளை இராணுவச் சட்டத்தின் கீழ் மாகாணத் தலைமைப்போடிகளாக இராணுவத் தலைவன் "கப்டன் ஆர்தர் ஜோன்சன்" நியமித்தான். இதன்பின் கிளர்ச்சியில் ஈடுபடுபவர்கள் என்ற காரணத்தையும் கொண்டு மட்டக்களப்பில் போடிகள் பலர் மாற்றம் செய்யப்பட்டு புதியவர்கள் நியமிக்கப் பட்டனர்.[8]

8. போர்த்துக்கேயர் கால இலங்கை – பக் 323 பீ.ஈ. பீரிஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போடிகளை வைத்தே ஆங்கிலேயர் திறைவரி வாங்கி வந்தனர். வன்னி இராசாக்கள் வழி வந்தவர்களே ஆங்கிலேய ஆட்சியின் தொடக்கக்காலத்தில் மட்டக்களப்பில் அதாவது 1820ஆம் ஆண்டு வரை சம்பளம் பெறும் நிலமைப்போடிகளாகக் கடமை புரிந்து வந்தனர். இவ்வாறு 1766ஆம் ஆண்டு ஒல்லாந்தர் காலம் தொடக்கம் கி.பி 1820ம் ஆண்டு வரையுள்ள காலத்தில் மட்டக்களப்பில் பதவி வகித்த சிலரது பெயர்கள் காணக்கிடைக் கின்றன.

நிலமை வேலாப்போடி - திமிலைதீவு

நிலமை பாலிப்போடி – படையாண்டவெளி

நிலமை கதிராமப்போடி – மகிழடித்தீவு

நிலமை பெரிய கரவாகுபோடி – கரவாகு

நிலமை வைகாளிப்போடி – சம்மாந்துறை

நிலமை வீமாப்போடி - சம்மாந்துறை

நிலமை கதிராமப்போடி – புதுக்குடியிருப்பு

நிலமை சின்னத்தம்பிப்போடி – எருவில்

இக்கால கட்டத்தில் (கிபி 1805-1820) ஆங்கிலேயர் நாட்டின் வேறு பகுதிகளிலிருந்து கொண்டுவரப்பட்ட மதம்மாறிய பல தமிழர்களைக் கொண்டு மட்டக்களப்பு தேசத்தின் நிர்வாகத்தை நடத்த ஒழுங்கு செய்தனர். இவ்வாறு கொண்டு வரப்பட்டவர்களில் 'பஸ்கோல்முதலி' என்பவன் அதிகாரம் கொண்டவனாக விளங்கினான். இவன் கிபி 1807ல் சொறிக்கல்முனையில் அப்போதிருந்த காளிகோயிலை இடித்துக் கத்தோலிக்க ஆலயம் கட்டினான்.[9] பரம்பரை உரிமையை நீக்கி இங்கிருந்த வேறு குலத்தினருக்கும் இக்காலத்தில் ஆங்கிலேயர் பதவிகளை வழங்கி வந்தனர்.

---

9. 'மொனகிராப் ஒவ் பற்றிக்கலோ டிஸ்றிக்' - பக் 40 எஸ்.ஓ. கனகரெட்ணம் - 1921



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெயிற்லண்ட் தேசாதிபதிக்குப்பின்னர் சேர் றொபர்ட் பிரௌன்றிக் (கிபி 1812-1819) ஆள்பதியாகவிருந்த காலத்தில் கண்டி கைப்பற்றப்பட்டு இலங்கை முழுவதும் ஆங்கிலேயர் ஆட்சிக்குட்பட்டிருந்தது. இக்காலத்தில் ஆங்கிலேயர் ஆட்சிக்கெதிராக கிபி 1817ல் மலைநாட்டில் ஏற்பட்ட கலகம் பற்றியும் இதனைத் தொடர்ந்து வெல்லச பகுதியில் வாழ்ந்து வந்த பெருமளவு முஸ்லீம் மக்கள் அங்கிருந்து இடம்பெயர்ந்து வந்து மட்டக்களப்பில் குடியேறியமை பற்றியும் குறிப்பிடுவது பொருத்தமானதாகும்.

கிபி 1815ல் ஆங்கிலேயர் கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றி கட்டுப்பாடும் ஒழுங்குமுள்ள ஆட்சியை நிறுவியிருந்தனர். திசாவைகளைப் பொறுத்தவரை இவ்வாட்சிமுறையானது அவர்களுக்கு இடையூறு விளைவிப்பதாகவே இருந்தது.

இதேவேளை கீழ்ப்பிரதேசங்களையடுத்த எல்லைகளில் குறுநில மன்னர்கள் போல் ஆட்சிபுரிந்து வந்த திசாவைகள் எல்லை வரிகளை இழந்திருந்ததினால் தங்களுக்கு உண்டான நஷ்டத்தை உணரத் தொடங்கினர். ஊவா வெல்லச பகுதிகளில் ஆட்சிசெய்து வந்த திசாவைகள் ஆங்கிலேயரது ஆட்சியை பெரிதும் வெறுத்தனர்.[10] இதேவேளை இப்பகுதிகளில் வாழ்ந்து வந்த பௌத்த மக்கள் அரச வம்சத்தினருக்கே விசுவாசமானவர்களாக இருந்து வந்தனர்.

ஆனால் இவ்விரு பிரதேசங்களிலும் வாழ்ந்திருந்த முஸ்லீம்களோ ஆங்கிலேயர்களுக்கு விசுவாசமுள்ளவர்களாகக் காணப்பட்டனர். இவர்கள் தங்களில் ஒருவனை முகாந்திரமாக நியமிக்கும்படி அரசாங்கத்தைக் கேட்டனர். இதன்படி 'ஹாஜி மரைக்கார்' என்பவன் முகாந்திரமாக நியமிக்கப்பட்டான்.

---

10. இலங்கையில் பிரித்தானிய ஆட்சி – பக் 28 29 ஜி.சி. மெண்டிஸ் 1960



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நியமனம் மரபுமுறைக்கு மாறாக இடம்பெற்றதால் இப்பகுதியில் அதிகாரம் செலுத்திவந்த திசாவைகளுக்கு ஆத்திரம் ஊட்டியது.ஆதலால் அவர்கள் மக்களைத் தூண்டி கலகத்தைக் கிளப்பினர். இதேவேளை துரைசாமி என்பவன் பௌத்த குருமாரின் ஆதரவுடன் கண்டி அரசுக்கு உரிமைகோரி ஊவா வெல்லசப் பகுதிகளுக்கு வந்திருப்பதாகவும் அவனைக் கலகக்காரர் கண்டி மன்னனாகப் பிரகடனப்படுத்திவிட்டனரெனவும் வதந்தி வெளிவந்தது.

இச்செய்தியைக் கேள்வியுற்ற அப்போதைய பதுளை அரசாங்க அதிபராகவிருந்த வில்சன் குழப்பத்தை அடக்கும் பொருட்டு ஹாஜி மரைக்காரை அனுப்பினான். ஆனால் அவன் கலகக்காரர்களால் கொல்லப்பட்டான். இதனைக் கேள்வியுற்று கலகத்தை அடக்கவும் துரைசாமியைக் கைது செய்யவும் படையோடு புறப்பட்டுச் சென்ற வில்சனும் கலகக்காரர்களால் கொல்லப்பட்டான்.

இதேவேளை ஆள்பதி பிரௌன்றிக்கினால் வெல்லசை திசாவையாக நியமிக்கப்பட்டிருந்த கெப்பட்டிப்பொல என்பவன் கலகத்தை அடக்குவதற்கு அனுப்பப்பட்டான். அங்கு சென்ற அவன் கலகக்காரர்களுடன் சேர்ந்து கொண்டதுடன் கலகக்காரர்களின் தலைவனும் ஆனான். கலகம் கண்டி இராச்சியப் பகுதிகளிலும் பரவியது.

ஆள்பதி பிரௌன்றிக் கலகத்தை அடக்க இந்தியாவிலிருந்து படைகளை வருவித்ததுடன் பிரதானிகளைக் கைதுசெய்யுமாறு கட்டளை பிறப்பித்தான். 1818ல் கெப்பிட்டிப்பொல கைதுசெய்யப்பட்டு சிரச்சேதம் செய்யப்பட்டான். பிரதானிகள் அனைவரும் படிப்படியாக சிரச்சேதம் செய்யப்படவே அப்பிரதேச மக்கள் கலகத்தைக் கைவிட்டனர்.[11]

---

11. இலங்கை வரலாறு பிரித்தானியர் காலம் 1796 - 1748 பக் 83, சி.எஸ். கதிர்காமநாதன் 1967



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டிக் கலவரம் உக்கிரமடைந்திருந்த இவ்வேளையில் ஊவா வெல்லச பிரதேசங்களில் வாழ்ந்திருந்த சில சிங்கள குடும்பங்கள் இந்த இடங்களைவிட்டு வெளியேறி அகதிகளாக வந்து பாணகை வன்னிப் பிரதேசத்தில் லகுகல, பொத்துவில், பாணகை ஆகிய இடங்களில் குடியேறி அக்காலத்தில் இந்த இடங்களில் வாழ்ந்திருந்த தமிழ்ச் சைவர்களுடன் ஒன்றாக வாழ்ந்திருந்தனர்.

இதேவேளை 1818ம் ஆண்டு கலவரத்தின்பின்னர் வெல்லசவில் வாழ்ந்திருந்த முஸ்லீம் மக்களில் பெருமளவினர் அங்கிருந்து வெளியேறி ஆங்கிலேயர் ஆட்சி நிலைத்திருந்த மட்டக்களப்பில் வந்து தமிழர் நாகரீகம் செழித்திருந்த சம்மாந்துறை நகரில் குடியேறினர். கண்டிக் கலவரம் உக்கிரமடைந்த வேளையில் வெல்லசைவில் வாழ்ந்திருந்த முஸ்லீம் மக்கள் ஆங்கிலேயப் படையினருக்கு உதவியும் ஒத்தாசையும் (போக்குவரத்து வசதிகள்) வழங்கியதன் காரணமாக அவர்களது நம்பிக்கையைப் பெற்றிருந்தனர். சம்மாந்துறையில் குடியேறி வாழ்ந்த இவர்கள் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தனர்.

வெல்லச குடியேற்றத்தின் பயனாக மட்டக்களப்பில் முஸ்லீம் மக்களின் தொகை அதிகரித்திருந்தது. மேலும் சம்மாந்துறை அரசியலுக்கும் பெருக்கத்திற்கும் வித்திட்டது. வெல்லச முஸ்லீம் மக்களின் குடியேற்றமாகும்.இவ்வாறு எச்.எம் அன்வர்அலி குறிப்பிடுவதையும் நோக்கலாம்.[12] 1820-21 களிலிருந்து சம்மாந்துறையில் முஸ்லீம் மக்களின் பெருக்கம் அதிகரிக்கத் தொடங்கியதெனலாம்.

கிபி 1827ல் மட்டக்களப்பில் சுமார் 32690 பேர் வாழ்ந்திருந்தனர். இவர்களில் தமிழர்கள் 21850 பேர், முஸ்லீம்கள் 8228 பேர், ஐரோப்பியர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் உள்ளிட்டோர் 586 பேர், சிங்களவர் 2026 பேர்கள் என அடங்குகின்றனர். இவ் வேளை பதியத்தலாவை, தெகியத்தக்கண்டி பிரதேசங்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் இணைந்திருந்ததுடன் 'விந்தனைபற்று' என்ற பெயருடன் விளங்கியிருந்தது.

---

12. சம்மாந்துறை அரசியல் வரலாறு – பக் 8 எச்.எம்.அன்வர்அலி -2012



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காலத்தில் நீதிபரிபாலனம் உள்ளிட்ட முறையானதொரு நிர்வாக ஆட்சி மட்டக்களப்பில் நிலவியிருந்தது. மட்டக்களப்பு அரச அதிபராக ஜோசப்பிரைஸ் (1825-1828) என்பவர் கடமை புரிந்து வந்தார்.

இக்காலத்தில் (கிபி1827-28களில்) மட்டக்களப்பு பிராந்தியத்தில் (அம்பாறை உள்ளிட்ட) வாழ்ந்திருந்த முஸ்லீம் மக்கள் பற்றி நோக்குமிடத்து கிபி 1545 - 1546 களில் தமிழகத்துச் செட்டிகளுடன் சேர்ந்து வர்த்தகம் மேற்கொண்டிருந்த தாய்வழியில் தமிழர்களான பட்டாணி, சிக்கந்தர், சுல்தான் வம்சத்தினரான தென்னிந்திய வர்த்தகர்களுக்கும் முற்குகத் தமிழ்ப்பெண்களுக்கும் பிறந்த முஸ்லீம் சந்ததியினரும் (ஏறாவூர், காத்தான்குடி, மருதமுனை நற்பட்டிமுனை, சம்மாந்துறை, நிந்தவூர்) குறிப்பிடத்தக்கவர்களாவர்.

மற்றும் கி.பி 1626ல் கண்டி மன்னன் செனரதன் காலத்தில் சம்மாந்துறை, சிங்காரபுரி (நிந்தவூர் பற்று) வன்னி இராசாக்களால் குடியேற்றப்பட்ட முஸ்லீம்களின் சந்ததியினரும் (கல்முனைக்குடி சாய்ந்தமருது, மாளிகைக்காடு) இங்கு வாழ்ந்திருந்தனர்.

மேலும் இவர்களுடன் கீர்த்தி ஸ்ரீ இராசசிங்கன் காலத்தில் கிபி 1751-52 களில் சம்மாந்துறை, சிங்காரபுரி, அக்கரைப்பற்று வன்னி இராசாக்களது ஆதரவுடன் அணுக்கன்வெளியில் குடியேற்றப்பட்ட 'பரவணிக்கல்வெட்டு' குறிப்பிடும் முஸ்லீம்களின் சந்ததியினரும் (அட்டாளைச்சேனை, பாலமுனை, கருங்கொடித்தீவு) இங்கு குடியிருந்தனர். இவர்களுடன் கிபி 1818ல் வெல்லசை பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து வந்து குடியிருந்த (சம்மாந்துறை) முஸ்லீம் மக்களும் இணைந்து வாழ்ந்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

இக்காலத்தில் மட்டக்களப்பில் வாழ்ந்திருந்த முஸ்லீம் தமிழ் மக்கள் மொழியால் ஒன்றுபட்ட இனமாக வாழ்ந்திருந்தனர். அவரவர் சமயநெறிகளைப் பின்பற்றி வந்த இவர்களது பண்பாடு, கலாசாரம் ஆகியன நெருக்கமான உறவுகளைக் கொண்டிருந்தன. குடிமுறைகள், பண்பாட்டுக் கோலங்கள், கலாசார விழுமியங்கள் ஆகியன தென்னிந்திய தமிழ் முஸ்லீம் மக்களிடையே நிலவி வந்த பாரம்பரிய வழிமுறைகளை ஒத்ததாகக் காணப்பட்டன எனலாம். (நா.நவநாயகமூர்த்தி – 2014)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒற்றையாட்சியின் கீழ் அக்கரைப்பற்று மாகாணம் கி.பி. 1900ம் ஆண்டு வரை

கி.பி. 1830, 31களில் தமிழர் நாகரீகம் செழிப்புடன் விளங்கியிருந்த மட்டக்களப்பு பிராந்தியத்தில் (அம்பாரை உள்ளிட்ட) தென்பகுதியின் சம்மாந்துறை, நிந்தவூர், மீனோடைக் கட்டு, அட்டாளைச்சேனை கரவாகு, கல்முனை, பாலமுனை, கருங்கொடித்தீவு ஆகிய பழந்தமிழ்க் கிராமங்களில் தமிழ்ச் சைவர்கள் பெருமளவில் வாழ்ந்து வந்ததுடன் இந்த இடங்களில் வாழ்ந்திருந்த முஸ்லிம் மக்கள் தமிழர்களுடன் நெருக்கமான உறவுகளைக் கொண்டிருந்தனர்.

இந்த இடங்களில் அமைந்திருந்த புராதன இந்து ஆலயங்களான நிந்தவூர் பிள்ளையார், மாரியம்மன் ஆலயம் அட்டப்பள்ளம் சிங்காரபுரிமாரியம்மன் கோயில், சம்மாந்துறை காளிகோயில், கரவாகு ஐயனார் கோயில் சிங்காரபுரி மீனாட்சியம்மன் ஆலயம் என்பன சிறப்புடன் விளங்கியிருந்தன. கி.பி.1804ல் போடிமார் கிளர்ச்சியின்போது முற்றாக இடித்தழிக்கப்பட்ட மீனாட்சியம்மன் ஆலயம் கி.பி. 1827ல் திறந்த வெளிக் கோயிலாக தோற்றுவிக்கப்பட்டு நிலவத் தொடங்கி இக்காலத்தில் பிரபல்யம் பெற்றிருந்தது.

இலங்கை முழுவதும் ஆங்கிலேயர் ஆட்சி நிலைத்திருந்த இக்காலத்தில் கி.பி. 1833 மார்ச் 10ல் கோல்புறுக் கமரன் சிபார்சுகள் ஏற்கப்பட்டு இலங்கை முழுவதும் ஒற்றை ஆட்சியின் கீழ் கொண்டு வரப்பட்டது. சட்டசபை, அதாவது சட்ட நிர்வாக சபை, சட்ட நிரூபண சபை ஆகியன நிலவத் தொடங்கின. கோல்புறுக் விசாரணைக்குழு சிபார்சின்படி பழைய மூன்று பிரிவுகளான தமிழ் (வடக்கு, கிழக்கு) கண்டி, கீழைச் சிங்களமாகிய இராச்சியங்களை ஒன்றாக்கி இணைக்கும் தனியாரசாங்கமொன்றை ஆங்கிலேயர் ஏற்படுத்தினார்.

மாகாணங்களின் எல்லைகள் மாற்றப்பட்டன. இதன் பயனாக கண்டியைச் சார்ந்த தாழ்ந்த பிரதேசங்கள் கீழைச் சிங்கள நாடுகளுடனும், தமிழ் நாடுகளுடனும் இணைக்கப்பட்டன. இலங்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுவதற்கும் பொதுவான நீதி மன்றங்களை அமைத்தனர். சட்டத்தின் முன் எல்லோரும் சமம் என்ற கொள்கைப் படி எல்லாக் குடிமக்களுக்கும் சட்டம் செல்லுபடியாகும். (கோல்புறுக் விசாரணைக்குழு - 1833ல்) என்று கொள்ளப்பட்டது.[1]

இவ்வேளை மட்டக்களப்பில் பழைய வன்னியர் ஆட்சிப் பிரதேசங்கள் வரையறுக்கப்பட்ட மாகாணப் பிரிவுகளாகக் கொள்ளப்பட்டுப் பிராந்திய நிர்வாகிகளாகச் சம்பளம் பெறும் வன்னிமைகள் நியமிக்கப்பட்டனர். இவர்களுக்கு உதவியாக உடையார்கள் நியமனம் பெற்றனர்.

இவ்வாறு தொடக்க காலத்தில் கி.பி. 1833ல் நியமனம் பெற்ற வன்னிமை (வன்னியன்) என்னும் தலைமைப் பதவிகள் பெரும்பாலும் பழைய வன்னி இராசாக்களின் சந்ததியினருக்கே வழங்கப்பட்டன. கி.பி. 1833ல் மட்டக்களப்பில் அரச அதிபராகவிருந்த ஜே.ஏ. போன் (J.A.BONE) என்பவரது காலத்தில் நிலவியிருந்த வரையறுக்கப்பட்ட மாகாணப்பிரிவுகள் பின்வருமாறு அமைந்திருந்தன.

1. மண்முனைப் பற்று
2. போரதீவுப் பற்று
3. எருவில் பற்று
4. கரவாகுப் பற்று
5. சம்மாந்துறைப் பற்று
6. நடுக்காடு பற்று
7. அக்கரைப்பற்று

---

1. இலங்கையில் பிரித்தானிய ஆட்சி - பக் 8, ஜிசி. மெண்டிஸ் தமிழாக்கம், நவாலியூர் சோ.நடராசன் - 1960



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. பாணகைப் பற்று

9. ஏறாவூர்ப் பற்று

10. கோறளைப்பற்று என்பன அவையாகும்.[2]

இதேவேளை, தெற்கே திருக்கோவில் பிரதேசம் தொடக்கம் வடக்கே காளியோடை வரை பரந்திருந்த வரையறுக்கப்பட்ட அக்கரைப்பற்று மாகாணம் பற்றி 1834ல் திரு சைமன்காசிச் செட்டியவர்கள் எழுதி வெளியிட்ட சிலோன் கெசற்றியர் நூல் விபரமாகச் குறிப்பிடுகின்றது.[3] அக்கரைப்பற்று என்பது கிழக்கிலே கடலாலும், மேற்கே நடுக்காடு என்னும் இடத்தாலும் தெற்கில் பனோவா (பாணகை பற்று) என்னும் இடத்தாலும் வடக்கில் சம்மாந்துறை என்னும் இடத்தாலும் வரையறுக்கப்பட்ட மாகாணமாகும்.

இப்பகுதி சுமார் பதினைந்து மைல் நீளமும், நான்கு அல்லது ஏழு வரை விஸ்தீரணமும் உள்ள பகுதியாகும். இப்பகுதி பதினான்கு கிராமங்களை உள்ளடக்கியது. இப்பகுதியில் குடியிருப்பவர்கள் மலபார் இனத்தை (தமிழினத்தை) சேர்ந்தவர்கள். இவர்கள் விடா முயற்சியும் சமாதான உணர்வும் கொண்டவர்கள் என்று திரு காசிச்செட்டியவர்கள் தனது சிலோன் கெசற்றியர் நூலில் குறிப்பிடுகின்றார். அக்காலத்தில் அக்கரைப்பற்று மாகாணத்தில் வாழ்ந்திருந்த தமிழ் பேசும் மக்களான தமிழ் முஸ்லீம் மக்களை தமிழினத்தைச் சேர்ந்தவர்கள் என்று இவர் குறிப்பிடுகின்றார்.[4]

---

2. THE CEYLON GAZETTEER - Page 19 SIMON CASIE CHETTY MUDALIYAR - 1834 RE PRINTED - 1981

3. சிலோன் கெசற்றியர் - பக் 4 சைமன் காசிச் செட்டி, மறுபதிப்பு - 1989

4. கொழும்பு வர்த்தகரான இவர் 1838 - 1845 வரையில் சட்ட நிருபணசபையில் அங்கம் வகித்தார். அத்துடன் பல இலக்கிய நூல்கள் எழுதிய இலக்கியவாதியுமாவார். ஆயினும் அக்கால கட்ட அரசியலில் அவரால் தமிழரின் வடக்கு, கிழக்கு பிரதேசங்களின் பிரச்சினைகளை முன்னெடுத்துச் செல்ல முடியவில்லை என்பதும் கசப்பான உண்மையாகும். (இலங்கையில் தமிழர்) கலாநிதி முருகர் குணசிங்கம் - 2008)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிபி.1834ல் வெளிவந்த சிலோன் கெசற்றியர் நூலில் அக்காலத்தைய இலங்கைத் தீவின் மாவட்டங்கள், மாகாணங்கள் நகரங்கள், பட்டினங்கள், பிரதான கிராமங்கள், துறைமுகங்கள் ஆறுகள், வாவிகள் முதலியன பற்றிய சரியான தரவுகள் அடங்கியுள்ளன.[5] 1833 கோல்புறுக் விசாரணைக் குழுவின் சிபார்சின்படி ஐந்து மாகாணங்கள் இலங்கையில் அமைந்திருந்தன. அவை வடக்கு, தெற்கு, மேற்கு, கிழக்கு, மத்தி என்பனவாகும். கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு, திருமலை மாவட்டங்கள் அடங்கியிருந்தன.

ஆங்கிலேயர் பரம்பரை வன்னியர் அதாவது வன்னிச் சிற்றரசர் என்ற பதவிக்குப் பதிலாக சம்பளம் பெறும் வன்னியன் அல்லது வன்னிமை என்ற நிர்வாக உத்தியோகத்தர்களை நியமித்து மட்டக்களப்பில் ஆட்சி செய்து வந்தனர். 1941ம் ஆண்டு வரை இந்நிர்வாக ஆட்சிமுறை நிலவியிருந்தது. இக்காலகட்டத்தில் (1833-1941) வன்னிமை என்பது பலம்மிக்க ஒரு தலைமைப் பதவியாக விளங்கியிருந்தது. அக்கால அரசாங்க அதிபருக்கு அடுத்த அதிகாரம் மிக்க பதவியாக இருந்ததெனலாம்.

இதேவேளை ஆங்கிலேயர் ஆட்சியில் நீதிபரிபாலனம் நீர்ப்பாய்ச்சல், ஆலய பரிபாலனம் போன்ற துறைகளின் தலைமைப் பதவிகளும் வன்னியன் என்றே நியமனம் செய்யப்பட்டன. இத்தலைமைப் பதவிகள் ஆங்கிலேயருக்கு ஆதரவாகவும் விசுவாசமாகவும் செயற்பட்டவர்களுக்கே வழங்கப்பட்டன. இவ்வாறு ஆங்கிலேயர் ஆட்சியில் கிபி 1854ம் ஆண்டு வரையுள்ள காலத்தில் மட்டக்களப்பில் வன்னியன் உடையார் உள்ளிட்ட தலைமைப்பதவிகளில் தமிழர்களே நியமனம் பெற்று வந்துள்ளனர். இவர்களில் மதம்மாறிய தமிழர்கள், போடிமார்கள் என்போர் அடங்குவர்.

---

5. காசிச் செட்டி தந்த சிலோன் - கசற்றியர் - கட்டுரை பேராசிரியர் பொ. பூலோகசிங்கம், 'பண்பாடு' பங்குனி 1991, இந்துசமய கலாசார திணைக்கள வெளியீடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிபி1854ம் ஆண்டுக்குப் பிற்பட்ட காலத்தில் வன்னியன் உடையார் போன்ற உயர் பதவிகளுக்கு முஸ்லீம்களும் நியமிக்கப்பட்டனர். ஆங்கிலேயருடன் முஸ்லீம்கள் மிக நெருக்கமான உறவுகள் கொண்டிருந்தனர். ஆங்கிலேயரும் தங்கள் நலன்களுக்காக வேண்டி முஸ்லீம்களையும் உயர் அதிகாரிகளாக நியமித்தனர்.[6] இவ்வாறு நியமனம் பெற்று கிபி 1854ம் ஆண்டு தொடக்கம் 1900ம் ஆண்டு வரையுள்ள காலத்தில் மட்டக்களப்பில் கடமை புரிந்த சில வன்னியர்களது பெயர்கள் பற்றி அறிய முடிகின்றது.

மட்டக்களப்பு அரச அதிபராக ஜே.மோர்பியூ (J.Morphew) என்பவரும், உதவி அரச அதிபராக ஆர்.டி.சோமநாதர் முதலியார் என்பவரும் கடமை புரிந்த காலத்தில் கிபி 1854ல் நியமனம் பெற்ற வன்னிமைகள் பின்வருமாறு.

1. எம்.அகமதுலெவ்வை வன்னியன் - கோறளைப்பற்று, ஏறாவூர்ப்பற்று
2. கதிராமப்போடி றோபட் (குஞ்சிளையாப்போடி) வன்னியன் - மண்முனைப்பற்று
3. சின்னத்தம்பி செட்டி - நிந்தவூர், அக்கரைப்பற்று,
   தம்பையா வன்னியன் - பாணகைப்பற்று
4. டி.கதிராமப்போடி வன்னியன் - சம்மாந்துறை, நடுக்காடுபற்று
5. நிலமை சின்னத்தம்பிப்போடி வன்னியன் - எருவில், போரதீவு, கரவாகுபற்று
6. W.J.சுப்பிரமணியன் வன்னியன் - விந்தனை பற்று

(MONOGRAPH OF THE BATTICALOA DISTRICT. Page.78,79. S.O.CANAGARATNAM - 1921)

---

6. சம்மாந்துறையின் அரசியல் வரலாறு பக் 3, 4 எச்.எம். அன்வர் அலி - 2012



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிபி 1854ல் ஆங்கிலேயரால் மட்டக்களப்பில் நியமிக்கப்பட்ட வன்னிமைகளில் ஏறாவூர் அகம்மது லெவ்வை வன்னியன் தாய்வழிப்பணிக்கர் குலத்தினன் (தாய்வழியில் பணிக்கனாகுடி தமிழன்) என அறியமுடிகின்றது.[7] சம்மாந்துறைப்பற்றில் தமிழ், முஸ்லீம் பிரிவுகள் என இரு உடையார் பிரிவுகள் நிலவத் தொடங்கிய இக்காலத்தில் முஸ்லீம் பிரிவுக்கு அல்லிலெவ்வை உதுமாலெவ்வை என்பவர் உடையாராக நியமிக்கப்பட்டார். இதே போன்று நிந்தவூர்பற்று உடையாராக இ.ஆதம்போடி என்பவரும் ஆங்கிலேயரால் நியமிக்கப்பட்டார். இதற்கு முன்னர் மட்டக்களப்பில் முஸ்லீம்கள் வாழ்ந்து வந்த போதும் உயர் பதவிகளை அவர்கள் பெற்றிருக்கவில்லை.

நிந்தவூர்ப்பற்று, அக்கரைப்பற்று, பாணகைப்பற்று ஆகிய மாகாணங்களுக்கு சின்னத்தம்பி செட்டி தம்பையா வன்னியன் என்பவர் வன்னியனாக கடமை புரிந்து வந்த இக்காலத்தில் காளியோடை தொடக்கம் சங்கமன் கண்டி வரை பரந்திருந்த அக்கரைப்பற்று வன்னிப்பிரிவுக்கு மானாகப்போடி முண்டாப்போடி என்பவர் உடையாராக நியமனம் பெற்று கடமை புரிந்து வந்தார். (நா.நவநாயகமூர்த்தி - 2014)

இதனைத் தொடர்ந்து பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக்காலத்தில் (1870க்குப்பின்) ஆங்கிலேயரால் வன்னிமை பதவிக்கு நியமிக்கப்பட்டு 1900ம் ஆண்டு வரையுள்ள காலத்தில் கடமை புரிந்த சிலரது பெயர்கள்.

1. வில்லியம்ஸ் ஜேம்ஸ் சுப்பிரமணியம் - விந்தனைப்பற்று
2. எதிர்மன்னசிங்க வன்னியன் - சம்மாந்துறை, நடுக்காடுபற்று
3. சத்துருக்கப்போடி வன்னியன் - கரவாகுப்பற்று, பாணகைப்பற்று
4. செல்லையா வன்னியன் - கரவாகுப்பற்று, பாணகைப்பற்று

---

7. மட்டக்களப்பு வரலாறு - பக் 99 வெல்லவூர் கோபால் - 2005



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிபி பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக்காலப்பகுதியில் நிந்தவூர் பிரதேசத்தில் வாழ்ந்திருந்த நிலச்சுவாந்தரான மீராலெவ்வை போடி என்பவர் ஆங்கிலேயரால் நீர்ப்பாய்ச்சல் வன்னியனாக நியமிக்கப்பட்டார். மட்டக்களப்பின் தென்பகுதியில் நியமிக்கப்பட்ட முதல் முஸ்லீம் வன்னியன் இவரேயாவார். செல்வாக்கு மிக்கவராகவும், கொடை வள்ளலாகவும் விளங்கிய இவர் 1892ல் பெரிய முல்லை காரன் என்னும் பூமியை சாய்ந்தமருது பள்ளிவாசலுக்கு நன்கொடையாக வழங்கியுள்ளார். (எஸ்.எச்.எம்.ஜெமீல் அம்பாரை மாவட்ட முஸ்லீம்கள் - 1997)

இதேவேளை நிந்தவூர் மீராலெவ்வைப்போடி வன்னியனின் காலத்தில் சம்மாந்துறையில் வாழ்ந்திருந்த மாணிக்கம்போடி வன்னியன் அதிகாரமும், செல்வாக்கும் மிக்கவராக வாழ்ந்திருந்தார் என்ற பதிவும் உள்ளது. (எச்.எம்.அன்வர்அலி - பக்.10,11 - 2012) இவர் நீர்ப்பாய்ச்சல் வன்னியனா அன்றி சிவில் வன்னியனா அன்றி ஆலய வன்னியனா என்பது பற்றிய தகவல்களை அறியமுடியவில்லை. இக்காலத்தில் நீர்ப்பாய்ச்சல் வன்னிபத்தின் எல்லையானது மட்டக்களப்பு கல்லடி தொடக்கம் பாணமைப்பற்று வரையான கரையோரப்பிரதேசமாகும்.

இக்கால கட்டத்தில் (கிபி 1833 - 1900) யாழ்ப்பாணத்தில் இருந்து கிறிஸ்தவ மிஷனரிகளின் ஊடாக இங்கு வந்து சேர்ந்தவர்களும் ஆங்கிலேய ஆட்சிக்கு அனுசரணையாக செயற்பட்ட சுதேசிகள் சிலரும் (முஸ்லீம்கள், வன்னியர்) ஆதிக்க நிலையில் உயர்ந்ததால் கால ஓட்டத்தில் அன்னிய ஏகாதிபத்தியத்தின் முன்னெடுப்பாளர்களாக மாறிய இவர்கள் மட்டக்களப்பின் வரலாற்றுப் புகழ் பெற்ற ஆதிக்க சமூகத்தினரை (தமிழ் வன்னியர், போடிமார், மக்கள்) சகல நிலையிலும் புறம் தள்ளி கல்வி அரச உத்தியோகம் என சகலதையும் ஆக்கிரமித்ததோடு இவர்களிடமிருந்து பறிக்கப்பட்ட (1804ல்) நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலபுலன்களை கொள்ளை விலைக்கு ஆங்கில அரசிடமிருந்து அபகரித்துக் கொண்டனர். (வெல்லவூர் கோபால் - 2005)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விவசாயக்காணிகள், நிலங்கள்

அம்பாரையை உள்ளடக்கியிருந்த மட்டக்களப்பில் கிபி 1800ம் ஆண்டு வரையுள்ள காலத்தில் விவசாயக்காணிகள் நிலங்கள் என்பன இங்கு பரம்பரையாக வாழ்ந்து வந்த தமிழர்களுக்கே பெரும்பாலும் உரியனவாகவிருந்து வந்தன. வன்னியர், போடிமார் என்போர் ஏராளமான நிலபுலன்களைக் கொண்டிருந்தனர்.

1804ல் ஆங்கிலேயருக்கெதிராக மட்டக்களப்பு தலைமைப்போடிகள், போடிகள் மேற்கொண்ட சண்டையைச் சாட்டாக வைத்து தமிழ்ப் போடிகளின் நிலங்களை ஆங்கிலேய ஆட்சியின் தொடக்ககாலத்தில் (1798 - 1803) வேறு இடங்களிலிருந்து கொண்டு வந்த தமது உத்தியோகத்தர்கள் (மதம்மாறிய தமிழர்கள்) உதவியுடன் கிபி 1805ல் பறித்தெடுத்து பிரித்தானிய அரசர்க்குரிய நிலமாக ஆக்கிக் கொண்டனர்.

இவ்வாறு ஆங்கிலேயர் தமக்கெதிராகச் செயற்பட்டவர்களின் சொத்துக்களைப் பறித்தெடுப்பதில் மட்டக்களப்பு கச்சேரியில் முதலியாராக அப்போதிருந்த பஸ்கோல்முதலி என்பவன் பெரும் பங்கினை வகித்தான். இவன் போடிகளிடமிருந்து பறித்த சொத்துக்களைத்தான் எடுத்துக் கொண்டதோடு தனக்கு வேண்டியவர்களுக்கும் வெள்ளைக்காரர் உதவியுடன் வழங்கினான்.

முன்பு போடிகளுக்கிருந்த பெரிய களத்திலுள்ள பூமிகளையெல்லாம் 'பஸ்கோல்முதலி' தனதாக்கிக் கொண்டதுடன் இதே போல் சத்துருக்கொண்டான் பிரதேசத்திலும் ஏராளமான நிலங்களைத் தனதாக்கிக் கொண்டான்.[8] இவ்வாறு செய்த பல வருடங்களின் பின்னரே மட்டக்களப்பில் வாழ்ந்திருந்த தமிழ்,முஸ்லீம் மக்களுக்கு மட்டுமன்றி யாழ்ப்பாணத்திலிருந்து இங்கு வந்து குடியிருந்தவர்களுக்கும் காணிகள் விற்கப்பட்டிருப்பதை தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம். குறிப்பாக 27.02.1857ஆம் ஆண்டின் நிர்வாகத் தீர்மானம் இதற்கு வழிவகுத்தது.

---

8. மட்டக்களப்புக் குகன் குல முற்குகர் வரலாறும் மரபுகளும் - ஞா சிவசண்முகம் - 2000 பக் 46



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன்மூலம் ஒரு ஏக்கருக்கு ஐம்பது ரூபாய் வீதம் ஒருவர் செலுத்தி எத்தனை ஏக்கரையும் வாங்கலாம் என்றும் இப்பணத்தை உடனடியாகவும் தவணை முறையிலும் கட்டலாம் என்றும் அறிவிக்கப்பட்டது. இதனை மிகத் திறமையாக நடைமுறைப்படுத்திய பெருமை J.W.பேர்ச் (1861) என்ற அரசாங்க அதிபரையே சாரும்.

இவ்வேளை ஒல்லாந்தர் காலத்திலிருந்து வந்த நிலமைப் போடிகளுக்கிருந்த நிலங்களில் பல அவர்களுக்கே கொடுக்கப்பட்டன. மதம் மாறி வன்னியர்களாக கடமைபுரிந்து வந்த போடிமார்களும் ஏராளமான நிலங்களை வாங்கிக் கொண்டனர். டானியேல் கதிராமப்போடி வன்னியன் ஏராளமான நிலங்களை மட்டக்களப்பின் பல பகுதிகளிலும் வாங்கிக் கொண்டான்.

அம்பிளாந்துறையில் மட்டும் சுமார் 1100 ஏக்கர் இவருக்குச் சொந்தமாகவிருந்தது. மட்டக்களப்பு நாட்டின் வட தென் பிரதேசங்களில் வாழ்ந்திருந்த போடிகளிடமிருந்து பறித்தெடுத்த பின்னும் பல பரம்பரைப்போடிகள் மீண்டும் இக்காலத்தில் (1861ல்) ஆங்கிலேயரிடமிருந்து நிலங்களைப் பணம் கொடுத்து வாங்கிக் கொண்டனர்.

இத்திட்டத்தின் மூலமாக மட்டக்களப்பில் வாழ்ந்திருந்த முஸ்லீம்களும் ஏராளமான விவசாயப் பூமிகளை ஆங்கிலேயரிடமிருந்து வாங்கி நிலச் சுவாந்தர்களாக மாறியதுடன் இது கால வரை தமிழ்ப்போடிகளால் கைக்கொள்ளப்பட்டு வந்த வழமைகளையும் கைக்கொண்டு வந்தனர். அத்துடன் நிலங்களுக்குச் சொந்தக்காரரான முஸ்லீம்களும் போடிகள் என்றே அழைக்கப்பட்டனர்.

கிபி 1804 இல் தமிழ்ப் போடிகள் ஆங்கிலேயருக்கு எதிராக மேற்கொண்ட சண்டையைக் காரணியாகக் கொண்டு அவர்களிடமிருந்து கிபி 1805ல் பறித்தெடுத்த விவசாயக்காணி உள்ளிட்ட நிலங்கள் 1856 வரை பிரித்தானிய அரசர்க்குரியதாக இருந்து வந்தது. இவற்றையே 1857 ஆம் ஆண்டின் நிர்வாகத் தீர்மானத்தின் படி ஆங்கிலேயர் 1861இல் குறைந்த விலைக்கு விற்பனை செய்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரித்தானிய ஆட்சியின் மூலம் முஸ்லீம்கள் பெற்ற முக்கிய நன்மைகளிலொன்று விவசாயப் பூமிகளை அவர்கள் இலகுவில் பெற வந்ததேயாகும் இதற்கு 27.02.1857ம் ஆண்டின் நிர்வாகத் தீர்மானம் வழிவகுத்தது. இப்பூமிகளை வாங்கிய முஸ்லீம்கள் முதலில் சேனைப்பயிர் செய்த பின்பு அவற்றை விளை பூமிகளாக ஆக்கினர்.[9] இதனைத் தொடர்ந்து உள்ளூர் மற்றும் சர்வதேச வர்த்தகத்தில் நிலைபெற்றிருந்த மட்டக்களப்பு முஸ்லீம்கள் நிரந்தர விவசாயிகளாக மாறுகின்றனர். இவ்வாறு ஆய்வாளர் எச்.எம்.அன்வர்அலி குறிப்பிடுவதையும் நோக்கலாம்.[10]

இதே வேளை கிளர்ச்சியில் ஈடுபட்ட அக்கரைப்பற்று வன்னிய மரபினரான தமிழ்ப்போடிகள் மற்றும் சிறு போடிகள் என்போரிடமிருந்து 1804ல் பறிக்கப்பட்டுத் தரிசு நிலங்களாக பிரித்தானிய அரசுக்குச் சொந்தமாகவிருந்த வயற்காணிகள், நிலங்கள் என்பனவும் 1857ம் ஆண்டு நிர்வாகத் தீர்மானத்தின் படி 1861ல் விற்பனை செய்யப்பட்டன. இவற்றை வாணிப நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த சில முஸ்லீம் தனவந்தர்களும் ஆங்கிலேயருக்கு விசுவாசமாகச் செயற்பட்டு வந்த சில தமிழ்ப் போடிமாரும் கொள்ளை விலைக்கு வாங்கி விவசாயக் காணிகளாகவும், சிறு தோட்டங்களாகவும் ஆக்கிக் கொண்டனர்.

மேலும் இவர்களுடன் வட இலங்கையிலிருந்தும் வேறு இடங்களிலிருந்தும் வந்து நிர்வாக சேவையில் பணிபுரிந்து ஆங்கிலேயருக்கு விசுவாசமாகச் செயற்பட்டு வந்த சிலரும் இப்பிரதேசத்தில் காணிகள், நிலங்கள் என்பனவற்றை நூற்றுக்கணக்கான ஏக்கரில் விலைக்கு பிரித்தானிய அரசிடமிருந்து வாங்கி நிலச்சுவாந்தார்களாக மாறினர். இவ்வாறு அக்கரைப்பற்று பிரதேசக் கரையோரப்பகுதிகளில் ஆங்கிலேய அரசிடமிருந்து வாங்கிய நிலங்கள், காணிகள் பிற்காலத்தில் தென்னந் தோட்டங்களாகவும், செழிப்பான வயற்காணிகளாகவும் மாற்றமடைந்தன.

---

9. அம்பாறை மாவட்ட முஸ்லீம்கள் - பக் 44 எஸ் எச்.எம் ஜெமீல் - 1997

10. சம்மாந்துறையின் அரசியல் வரலாறு - பக் 11 எச்.எம..அன்வர் அலி - 2012



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்புக்கும் யாழ்ப்பாணத்தும் இடையில் நெருங்கிய சமூக, சமய, கலாசார, வாணிபத் தொடர்புகள் நிலவி வந்த இக்காலத்தில் யாழ்ப்பாண மக்களில் பணம் படைத்த சிலர் (செல்வந்தர்) இங்கு வந்து நெல், தேங்காய், கொப்பறா முதலிய பொருட்களை வாங்கி சிறிய கப்பல்கள் மூலம் யாழ்ப்பாணத்துக்கும் தென்னிந்தியாவுக்கும் கொண்டு சென்று விற்பனை செய்து பெரும் பொருளீட்டி வந்தனர்.

இவர்களில் சிலர் மட்டக்களப்பில் நெல்வயல்களையும் தோட்ட நிலங்களையும் ஆங்கிலேய அரசிடமிருந்து விலைக்கு வாங்கி மட்டக்களப்பு வாசிகளாக மாறினர். அத்துடன் பெரும் செல்வந்தர்களாகவும் திகழ்ந்தனர். இவர்களில் அக்கரைப்பற்று வன்னிப் பிரதேசத்தில் நிலங்களுக்குச் சொந்தக்காரராகத் திகழ்ந்தவர்களில் திரு.கே.வி.மார்க்கண்டன் முதலியார் குறிப்பிடத்தக்கவர்.

பெரும் நிலக்கிழாராகவிருந்த இவர் பிற்காலத்தில் 1912 - 1936 வரையுள்ள காலத்தில் இப்பிரதேசத்தில் ஆற்றி வந்த சமூக, சமய, கலைப்பணிகள் இன்றும் நினைவு கூரத்தக்கன எனலாம்.

இலங்கை முழுவதிலும் ஆங்கிலேயர் ஆட்சி நிலை பெற்று இத்தீவு சமூக பொருளாதார ரீதியில் அபிவிருத்தி கண்டு வந்த இக்காலத்தில் நீதிபரிபாலனம் உள்ளிட்ட முறையானதொரு நிர்வாக ஆட்சி மட்டக்களப்பிலும் நிலவியிருந்தது.

இவ்வேளை ஆங்கிலேயர் அக்கரைப்பற்று வன்னிப் பிரதேசத்திலும் தங்கள் கவனத்தைச் செலுத்தத் தொடங்கினர். குறிப்பாக பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து இப்பிரதேசம் விவசாயம், நீர்ப்பாசனம் போன்ற துறைகளில் அபிவிருத்தி கண்டு வந்ததுடன் கல்வி, போக்குவரத்து நீதிபரிபாலனம், சுகாதாரம் எனப் பல்துறைகளிலும் வளர்ச்சி கண்டு வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் இயற்கையோடு இணைந்த அமைதியானதொரு சூழல் அக்கரைப்பற்று வன்னிமைப் பிரதேசத்தில் நிலவியிருந்த இக்காலத்தில் செழுமை மிக்க சமூக வாழ்வியல் பின்னணியில் இங்கு வாழ்ந்திருந்த தமிழ் பேசும் மக்களான தமிழ், முஸ்லீம் மக்களிடையே கலை, இலக்கிய ஆர்வமும் மிகுந்திருந்தது. இதனை இன்று காணக்கிடைக்கும் இக்கால கட்ட இப்பிரதேச மரபு இலக்கியங்கள் தெளிவுறுத்தும்.

## ஆங்கிலேயர் மேற்கொண்ட அபிவிருத்திப் பணிகள்

## அக்கரைப்பற்று வன்னிமைப் பிரிவு

பத்தொன்பதாம் நூற்றாண்டில் பிரித்தானிய ஆட்சியில் நீர்ப்பாசன வேலைத்திட்டங்கள் குறிப்பாக குளங்கள், கால்வாய்கள் போன்றவற்றைத் திருத்தல், புதிதாக அமைத்தல் போன்ற வேலைத்திட்டங்கள் 1850ஆம் ஆண்டு வரை தமிழ்ப் பிரதேசங்களில் இடம்பெறவில்லை. 1860க்குப் பின்னரே தமிழ்ப் பிரதேசங்களில் நீர்ப்பாசனம் சம்பந்தமான பாரிய புனருத்தாரன வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன என்பதை அறியலாம்.[11] இக்கால கட்ட (1850-1900) ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் கிபி 1856ல் ஒன்பதாம் இலக்க நீர்ப்பாய்ச்சல் சட்டம் கொண்டுவரப்பட்டது.

இவ்வேளை, கிழக்கு மாகாண அரசாங்க அதிபராகவிருந்த ஐ.டபிள்யு பேர்ச் (I.W. Birch) அவர்கள் கவர்னர் ஹென்றிவார்ட் (1855 - 1878) என்பவருக்கு விவசாய அபிவிருத்தி தொடர்பான விரிவான அறிக்கைகளை சமர்ப்பித்திருந்தார். இவர்களது காத்திரமான முயற்சிகளால் மட்டக்களப்பில் பண்டைய குளங்களும் புதியனவும் நிர்மாணிக்கப்பட்டன. இவ்வாறு புனரமைக்கப்பட்ட பண்டைய குளங்களுள் அக்கரைப்பற்று வன்னிப் பிரதேசத்தில் அமைந்திருந்த சாகாமம் குளமும் ஒன்றாகும். இக்குளம் 1856 ஆம் ஆண்டு தொடக்கம் 1860 வரையுள்ள காலப்பகுதியில் கட்டி முடிக்கப்பட்டதாகும் என்பதை அறிய முடிகின்றது.

---

11. இலங்கையில் தமிழர் - பக் 293, 94 கலாநிதி முருகர் குணசிங்கம் - 2008



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனைத் தொடர்ந்து நீர்ப்பாசன அதிகாரியொருவர் இக்குளப்பராமரிப்புக்காக (காடியர்) நியமனம் செய்யப்பட்டு நீர்ப்பாசன முறையின் கீழ் மொட்டையாகல், ஊரக்கை வெளி கண்டங்களில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு வந்தது. சேர்ஹென்றிவார்ட் காலத்தில் (1855 - 1878) நீர்பாசன வேலைத்திட்டம் பாரிய முறைப்படி ஆரம்பிக்கப்பட்டது. பராமரிப்பு வேலைகளுக்கு விசேட உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டனர். மட்டக்களப்பிலிருந்து திருக்கோவில் உள்ளிட்ட அக்கரைப்பற்று வன்னிப் பிரதேசம் வரையுள்ள நிலங்கள் வேளாண்மைக் காணிகளாக மாற்றப்பட்டன.[12]

ஒல்லாந்தரது ஆட்சிக்காலத்தில் (1766 - 1795) குடவில் ஆண்டிக்குளம், அம்பாரைக்குளம், இறக்காமம் குளம் ஆகியவற்றுக்கு ஒல்லாந்தர் அணை கட்டினர். இக்குளங்கள் 1832ம் ஆண்டு வரை ஆங்கிலேயர் ஆட்சியில் பராமரிக்கப்பட்டு வந்தன. 1848ல் இராசகாரிய முறை ஒழிக்கப்பட்டதால் இக்குளங்களைத் தொடர்ந்து பராமரிக்க முடியாது போயிற்று.

இக்குளங்களை அரசாங்க அதிபரான ஐ.டபிள்யு பேர்ச் அவர்கள் பழுது பார்த்துக் கொடுத்ததுடன் இக்குளங்களுடனான நீர்பாசனத்தையும் இவர் பலப்படுத்தினார். 1858ம் ஆண்டு இறக்காமம், சாகாமம், அம்பாறை மற்றும் சடையந்தலாவை ஆகிய இடங்களிலுள்ள குளங்களைப் புனரமைத்த அவர் செங்கற்படை அணைக்கட்டைக் கட்டுவித்தார்.

மட்டக்களப்பு பிராந்தியத்தில் காணி விவசாய நீர்ப்பாசன அபிவிருத்திக்கு அக்காலத்தில் ஐ.டபிள்யூ பேர்ச் மேற்கொண்ட நடவடிக்கைகள் காத்திரமானவை என்று இன்றும் ஒரு சிலர் குறிப்பிடுகின்றனர்.

---

12. A HISTORY OF CEYLON FOR SCHOOLS - 11 Page 140 by Father - S.G. Perera



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி.பி.1900ம் ஆண்டில் கவர்னர் சேர் ஜோசப் வெஸ்ட் றிஜ்வே அவர்கள் இலங்கையை ஒரு செல்வ வளமிக்க நாடாக ஆட்சி செய்த காலத்தில் இவர் ஐந்து மில்லியன் ரூபாய் நீர்ப்பாசனத் திட்டத்திற்கென ஒதுக்கினார். 1901ல் இதற்கான சட்டங்களைக் கொண்டுவந்தார். நாடு முழுவதிலும் பதினைந்து நீர்ப்பாசனத் திட்டங்கள் உருவாகின. கந்தளாய், ரூகம், சாகாமம் போன்ற மூன்று நீர்ப்பாசனத் திட்டங்கள் கிழக்கில் அமைந்திருந்தன.[13] இதன் பயனாக விவசாயத்துறையில் குறிப்பாக நெற்செய்கையில் அக்கரைப்பற்று வன்னிப் பிரதேசம் மேலும் அபிவிருத்தி கண்டு வந்ததுடன் மட்டக்களப்பில் செல்வம் கொழிக்கும் பிரதேசங்களிலொன்றாகவும் மிளிர்ந்து வந்தது.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பப் பகுதியிலேயே தமிழ் பிரதேசங்களில் நீர்ப்பாசனத் திட்ட வேலைகள் பாரிய அளவில் மேற்கொள்ளப்பட்டதைக் காணமுடிகின்றது. இதன் விளைவாக 15 மே 1900ல் 'நீர்ப்பாசனத் திணைக்களம் என்ற தனிப்பிரிவு தொடங்கப்பட்டு நீர்ப்பாசன வேலைகள் யாவும் நீர்ப்பாசன திணைக்களப் பணிப்பாளரின் கீழ் வந்தது. (கலாநிதி முருகர்குணசிங்கம் - 2008) இவ்வேளை தேசாதிபதி ரிட்ஜ்வே அவர்கள் ஹென்றி பார்க்கர் என்பவரை நீர்ப்பாசனத் திணைக்கள பணிப்பாளராக நியமித்திருந்தார்.

13. கவர்னர் ரிட்ஜ்வே நீர்ப்பாசன இலாகாவை சீர்திருத்தினார். ஹென்றி பார்க்கர் என்பவரை நீர்ப்பாசன அதிகாரியாக நியமித்து அந்த இலாகாவை மராமத்து இலாகாவுடன் இணைத்தார். இவ்வேளை சாகாமம் நீர்ப்பாசனத் திட்டமும் ஆரம்பிக்கப்பட்டது. (இலங்கையில் பிரித்தானியஆட்சி - பக் 192 ஜி.சி. மெண்டிஸ் தமிழாக்கம், நவாலியூர் சோ. நடராசன் - 1960)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீதி நிர்வாக பரிபாலனம்

ஆங்கிலேயர் ஆட்சியில் இக்கால கட்டத்தில் நீதிபரிபாலனத்தைப் பொறுத்தவரை ஆரம்ப காலத்தில் புளியந்தீவில் நீதி மன்றம் இயங்கி வந்தது.[14] பின்னர் கிராம நீதி மன்றம் என்ற பெயரில் 1871ல் நற்பிட்டிமுனையிலும் வன்னியனார் தலைமையில் இயங்கத் தொடங்கின. இக்காலத்தே சத்துருக்கப்போடி வன்னியனார் மேற்கொண்ட நீதி விசாரணைகள் குறித்த தகவல்கள் கிடைக்கின்றன.

1870ல் மட்டக்களப்பு மீண்டும் ஏழுபற்றுக்களாக (வரையறுக்கப்பட்ட மாகாண பிரிவு) பிரிக்கப்பட்ட காலத்தில் கரவாகு பற்று வன்னியனாக நியமிக்கப்பட்ட சத்துருக்கப்போடி வன்னியன் நற்பிட்டி முனையிலுள்ள புங்கடி வட்டையில் அமைந்திருந்த நீதி மன்றத்தில் நீதி நிர்வாக வன்னியனாகவும் இருந்து வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பளித்துள்ளார். அந்நீதி மன்ற இடிபாடுகளின் எச்சங்களை இன்றும் காணலாம்.[15] கி.பி. 1884ல் கல்முனை மஜிஸ்ரேட் தொடங்கப்பட்டது.

இலங்கையில் இக்காலகட்ட ஆங்கிலேயர் ஆட்சியில் 1844ல் பொலீஸ் கோடுகள் நிறுவப்பட்டன. சிறிய சிவில் பிணக்குகளைத் தீர்ப்பதற்காக 1848ல் சின்னக்கோடுகள் ஏற்படுத்தப்பட்டன. காணி வழக்குகளை விசாரித்து நியாயம் வழங்குவதற்கும் இக்கோடுகளுக்கு 1852ல் அதிகாரம் கொடுக்கப்பட்டது. சேர்ஹென்றி வார்ட் (1855 - 1878) காலத்தில் ஊர் ஊராகச் சுற்றும் கோடுகள் ஏற்படுத்தப்பட்டன.

---

14. கி.பி. 1799ல் பிரதான பட்டணங்களில் சிவில் கிரிமினல் வழக்குகளை விசாரணை செய்வதற்கென கொழும்பு, காலி, யாழ்ப்பாணம், மாத்தளை, மட்டக்களப்பு , திருமலை, முல்லைத்தீவு, சிலாபம் ஆகிய இடங்களில் நீதி மன்றங்கள் நிறுவப்பட்டன.

15. பத்தும் பதியமும் - பக். திருமதி கமலாம்பிகை லோகிதராஜா - 2012
இதே வேளை மிகச் சிறந்த துறைமுகத்தைக் கொண்டிருந்த திருகோணமலை கிழக்கு மாகாணத்தின் தலைநகராக இருந்து வந்தது. ஆனால் முக்கியத்துவம் குறைந்து வரவே விவசாய பெருக்கமுடையதும் குடிசனத்தொகை அதிக முடையதுமான மட்டக்களப்பு 1870ல் கிழக்கு மாகாணத்துக்கு தலைநகராக் கப்பட்டது. திருகோணமலையில் உதவி அரசாங்க ஏஜண்டின் காரியாலயமொன்று நிறுவப்பட்டது.(இலங்கையில் பிரித்தானியர் ஆட்சி - பக் 126 ஜி.சி. மெண்டிஸ் - 1960)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காலகட்டத்தில் மட்டக்களப்பு தென்பிரதேசத்தில் அரசநீதி நிர்வாக மையம் கல்முனையில் குவிந்திருந்தது. அக்கரைப்பற்று வன்னிமைப் பிரிவில் வாழ்ந்திருந்த மக்கள் தங்கள் நீதி நிர்வாகச் செயற் பாடுகளை இங்கு சென்று முன்னெடுத்து வந்தனர்.

## போக்குவரத்து , வாணிபம்

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் நடுப்பகுதியில் அக்கரைப்பற்று வன்னிமைப் பிரதேசத்துக்கும் வட இலங்கைக்குமிடையில் கருங்கொடித்தீவு, திருக்கோவில் துறைகளினூடாக போக்குவரத்து, வாணிபம் என்பன இடம்பெற்று வந்ததை அறிய முடிகின்றது.

இப்பிரதேசத்திலிருந்து நெல் உள்ளிட்ட உணவுத் தானியங்கள் கொண்டு சென்று யாழ்ப்பாணத்தில் விற்பனை செய்யப்பட்டு வந்தது. 1880க்குப் பிற்பட்ட காலத்தில் கொப்பறாவும் இப்பிரதேசத்திலிருந்து வட இலங்கைக்கு விற்பனைக்காக கொண்டு செல்லப்பட்டது. இங்கிருந்து தென்னிந்தியாவுக்கு இக்கொப்பறா ஏற்றுமதி செய்யப்பட்டது. இக்காலத்தில் அக்கரைப்பற்று வன்னிமைப் பிரதேசம் வட இலங்கையுடன் நெருங்கிய சமூக, சமய, கலை கலாசார உறவுகளையும் கொண்டிருந்தது.

இக்கால கட்டத்தில் குறிப்பாக 1851ம் ஆண்டு தொடக்கம் 1872ம் ஆண்டு வரையுள்ள காலத்தில் ஆங்கிலேயர் கொழும்பிலிருந்து கிழக்கு மாகாணத்திற்கு நீராவிக் கப்பல்களிலேயே பிரயாணம் செய்து வந்தனர். நீராவிக் கப்பல் போக்குவரத்து முதலில் அரசாங்கத்தின் கையிலிருந்தது. பின்னர் ஒரு கம்பெனி நடத்தி வந்தது. இக்காலத்தில் கொழும்பிலிருந்து கிழக்குப் பகுதிகளுக்கு வருவதற்கு இலேசான போக்குவரத்து கிடையாது. (ஜி.சி. மெண்டிஸ் - 1960) ஆங்கிலேயர் மட்டுமன்றி கிழக்கின் மட்டக்களப்புக்கு சுதேசிகளும் வந்து செல்ல இக்காலத்தில் தரைவழிப் போக்குவரத்துப் பாதைகள் அமைக்கப்பட்டிருக்க வில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதே வேளை அக்காலத்தில் அக்கரைப்பற்று வன்னிமைப் பிரதேச மக்கள் கல்முனை, மட்டக்களப்பு போன்ற தூர இடங்களுக்குப் பிரயாணங்கள் மேற்கொள்ள ஒல்லாந்தர் காலத்தில் கரையோரப் பகுதிகளினூடாக நிர்மாணிக்கப்பட்ட மணக்கட்டுப் பாதையையே பிரதான பாதையாகப் பயன்படுத்தி வந்தனர்.[16] இப்பாதையூடாகவே மாட்டு வண்டில்கள் மூலமாகவும், கால்நடையாகவும் இப்பிரதேச மக்கள் போக்குவரத்தை மேற்கொண்டு தங்கள் நிதி, நிர்வாக மற்றும் வைத்தியத் தேவைகளையும் நிறைவேற்றி வந்தனர்.

இப்பாதை தவிர இப்பிரதேசத்தின் மேற்குப் பகுதிகளை ஊடறுத்துச் சென்ற அகலமான நடை பாதையையும் மக்கள் பயன்படுத்தி வந்துள்ளனர்.[17] இப்பாதையானது கருங்கொடித்தீவிலிருந்து கோளாவில், பனங்காடு, பட்டிநகர், மொட்டையாகல் ஊடாகத் தாலிபோட்டாற்றைக் கடந்து ஊரக்கைவெளி ஆத்துக் கண்டம் முனை வழியாக பெரிய களப்பின் தென்கரையோரமாக வந்து வேலகாமம் குளம் வழியாக திருக்கோவில் முருகன் கோயிலை அடைந்தது. குறிப்பாக பதினெட்டாம், பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் இப்பாதை பிரபல்யம் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதே வேளை, பாலமுனை, அட்டாளைச்சேனை, மீனோடைக்கட்டு, கருங்கொடித்தீவு, கோளாவில், பனங்காடு, தம்பிலுவில், திருக்கோவில், கோரக்களப்பு, தாண்டியடி ஆகிய கிராமங்கள் உள்ளிட்ட அக்கரைப்பற்று வன்னிமைப் பிரதேசத்தில் ஆங்கிலேயர் குடியேறி தென்னந்தோட்டங்களை உருவாக்கி வந்த காலத்தில் கி.பி. 1879, 80 களில் ஒல்லாந்தர் வெட்டிய மண்பாதையூடாகவே குதிரை வண்டில்களிலும், உட்பிரதேசப் பாதையில் குதிரைகளிலும் ஆங்கிலேயர் தங்கள் போக்குவரத்துக்களை அக்கரைப்பற்று வன்னிமை பிரதேசத்தில் மேற்கொண்டு வந்ததை அறிய முடிகின்றது.

---

16. இலங்கையின் கரையோரப் பகுதிகளில் ஒல்லாந்தர் ஆட்சி நிலைத்திருந்த காலத்தில் (1766 - 1795) இலங்கையைச் சுற்றி கரையோரமாக மண்பாதையை வெட்டி அமைத்திருந்தனர்.

17. அக்காலத்தில் வரலாற்று முக்கியத்துவம் மிக்க பல நிகழ்வுகளில் இப்பாதை தொடர்புபட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி.பி 1892மட்டக்களப்பின் கரையோரப்பகுதிகளில் தெங்கு பொருட்களின் உற்பத்தி, ஏற்றுமதி என்பன அதிகரித்துக் கொண்டு வந்தது. இதன்பயனாக மட்டக்களப்பிற்கு தெற்கேயும், வடக்கேயும் கரையோரமாக ஆங்கிலேயர் தார் றோட்டுக்களை அமைக்கத் தொடங்கினர்.

இலங்கையைச் செல்வம் செழிக்கும் நாடாக மாற்ற வேண்டுமென்ற தூரநோக்குடன் ஆட்சிபுரிந்தவரும் பல பாரிய நீர்ப்பாசனத் திட்டங்களை உருவாக்கி இலங்கையில் பசுமைப் புரட்சியை தோற்றுவித்தவரும் நீர்ப்பாசன இலாகாவை மராமத்து லாகாவுடன் இணைத்தவருமான ஆள்பதி றிட்ஜ்வே (1895-1903) காலத்திலேயே இப்பிரதேசத்தை ஊடறுத்ததாகக் கற்பாதை (தார்றோட்) நிர்மாணிக்கும் வேலை தொடங்கப் பெற்று தெற்கே நாவலாறு வரை கற்பாதை அமைக்கப்பட்டது.[18] அக்காலத்தில் பெரிய முகத்துவாரம் தாம்போதியில் பதிக்கப்பட்டு இன்று புதிய பாலத்தில் காணப்படும் கல்வெட்டொன்று இத்தாம்போதி ஆள்பதி றிஜ்வே காலத்தில் நிர்மாணிக்கப்பட்டு 1902ல் திறந்து வைக்கப்பட்டதை உறுதி செய்கின்றது.

மேலும் இவர் காலத்திலேயே (1895 - 1903) மட்டக்களப்பு நகரம் கிளிவெட்டியோடும் தார்றோட் நிர்மாணித்து இணைக்கப்பட்டது.

இதேவேளை கற்பாதைகள் போடப்பட்டு இலங்கையின் ஏனைய மாகாணங்களுடன் மட்டக்களப்பு இணைக்கப்பட்டதை நோக்குமிடத்து முதன்முதலாக கொழும்புக்கும் மட்டக்களப்புக் குமிடையிலான கற்பாதை (தார்றோட்) ஆள்பதி றொபின்ஸன் (1865 - 1872) காலத்திலேயே தொடங்கப்பட்டது என அறியமுடிகின்றது.

---

18. றிட்ஜ்வே காலத்தில் (1895 - 1903) மட்டக்களப்பு நகர் தெற்கே நாவலாறுடன் தார்றோட் போடப்பட்டு இணைக்கப்பட்டது. (இலங்கை வரலாறு பிரித்தானியர் காலம் பக் - 140 - 1967)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆள்பதி றொபின்ஸன் காலத்தில் (கி.பி.1865 - 1872 கொழும்பு பதுளை வீதி, மட்டக்களப்பு வரை விஸ்தரிக்கப்பட்டது. இப்புதிய மட்டக்களப்பு பதுளை வீதி முதன்முதலாக மத்திய ஊவா மாகாணங்களோடு கீழ்மாகாணம் நெருங்கிய தொடர்பை வளர்ப்பதற்கு ஏதுவாயிற்று. குறிப்பாக அக்கரைப்பற்று வன்னிப் பிரதேசம் உள்ளிட்ட மட்டக்களப்பு மாவட்டம் பல்துறைகளிலும் வளர்ச்சியுறத் தொடங்கியது.

கொழும்பிலிருந்து மட்டக்களப்புக்கு றோட்டை ஆள்பதி கிரகெறி (1873 - 1890) பூர்த்தி செய்ததுடன் ஏறாவூரிலிருந்து வண்டலூஸ்குடா என்னும் கல்குடா வரை றோட்டை (கற்பாதை) அமைத்தார். இதன்மூலம் கப்பல்கள் மட்டக்களப்பில் வருடம் முழுவதும் வந்திறங்கி ஏற்றுமதி, இறக்குமதி செய்ய வசதி ஏற்பட்டது. ஹோட்டன் காலத்தில் காரைதீவிலிருந்து வீரியடிக்கு ஒரு கற்பாதை போடப்பட்டது.

## கல்வி அபிவிருத்தி

மட்டக்களப்பில் இக்கால கட்ட (கி.பி. 1833 - 1900) ஆங்கிலேயர் ஆட்சியில் அவர்கள் மேற்கொண்டு வந்த கல்வி அபிவிருத்தி பற்றி நோக்குமிடத்து இப்பிராந்தியத்தில் சமயம் பரப்பும் செயற்பாடுகளுடன் கல்வி அபிவிருத்தியிலும் கவனம் செலுத்தி வந்துள்ளனர் என்பதை அறியமுடிகின்றது. ஆங்கிலேய ஆட்சியில் அரசாங்க பாடசாலைகளை விட மிஷனரி பாடசாலைகளே அதிகம் இருந்தன. கி.பி. 1837 லிருந்து மட்டக்களப்பில் வெஸ்லியன் மிஷன் நிலையங்களில் ஆங்கிலேயப் பாடசாலைகள் நிறுவப்பட்டன.[19]

---

19. இதேவேளை ஆங்கிலேய ஆட்சியின் தொடக்க காலத்திலேயே 1814ல் வணக்கத்துக்குரிய வில்லியம் ஓல்ட் என்பவர் ஆங்கிலப் பாடசாலையான புளியந்தீவு மெதடிஸ்த மத்திய கல்லூரியை ஆரம்பித்தார். அதையடுத்து 1820ம் ஆண்டு மட்டக்களப்பிலே வின்சன் மகளிர் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. மெதடிஸ்த திருச்சபையினரே கிழக்கு மாகாணத்தில் முதன்முதல் பாடசாலைகளை அமைத்தவர்கள் ஆவர். ( அம்பாரை மாவட்ட முஸ்லீம்கள் பக் 260,61 பதிப்பாசிரியர் எஸ். எச்.எம்.ஜெமீல் - 1997)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1870 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட உதவி நன்கொடைத் திட்டம், கிறிஸ்தவ மிஷனரிமாரின் கல்விச் செயற்பாடுகளுக்கு குறிப்பாக, கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட கல்விச் செயற்பாடுகளுக்கு வெஸ்லியன் முயற்சிகளில் அதிவிரிவான விரிவாக்கத்திற்கு உந்து சக்தியாகவிருந்தது. 1874ல் மட்டக்களப்பில் வெஸ்லியன் மிஷன் மகளிர் பாடசாலை, கல்வித்துறையில் மகளிர் கல்விக்காக பெரும்பங்களிப்பை செய்து வந்தது.

இதேவேளை, கத்தோலிக்க திருச்சபையினர், மட்டக்களப்பில் தலையாய பாடசாலையாக அர்ச் மைக்கல் கல்லூரியை 1873ம் ஆண்டு நிறுவினர். இதனையடுத்து 1876ம் ஆண்டு அர்ச்சிசிலியா கன்னியர் மடப்பாடசாலையை மட்டக்களப்பில் நிறுவினர்.

இதனைத் தொடர்ந்து மெதடிஸ்த திருச்சபையினர் 1883ல் கல்முனையில் பெண்கள் விடுதிப் பாடசாலையை (ஜி.பி.எஸ்) ஆரம்பித்தனர். (எஸ்.எச்.ஜெமீல் - 1997) 1901ல் கல்முனையில் ஆண்களுக்காக உயர்தர பாடசாலையொன்றை ஆரம்பித்தனர். 1870க்கும் 1885 க்குமிடைப்பட்ட காலத்தில் பல சுயபாஷாப் பாடசாலைகள் திறக்கப்பட்டன. மட்டக்களப்பில் கரையோரப் பகுதிகளில் கிறிஸ்தவ மிஷன் பாடசாலைகளைத் திறந்தது.

இக்கால கட்டத்தில் அக்கரைப்பற்று வன்னிமை பிரதேசத்தில் பல இடங்களிலும் மிஷனரிமார் பாடசாலைகளை ஆரம்பித்தனர். பண்டு தொட்டுத் திண்ணைப் பள்ளிக்கூடக் கல்விமுறை நிலவியிருந்த இப்பிரதேசத்தில் ஆங்கிலேயர் குடியேறித் தென்னந்தோட்டங்களை உருவாக்கி வந்த இக்காலத்தில் கிறிஸ்தவ மிஷனரிமாரால் கல்விக் கூடங்கள் ஆரம்பிக்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1870 ஆம் ஆண்டளவில் கருங்கொடித்தீவு நகரில் முதல் பள்ளிக்கூடமாக மெதடிஸ் மிஷன் பாடசாலை தோற்றுவிக்கப்பட்டது.[20] கி.பி 1877 ஆம் ஆண்டளவில் தம்பிலுவில் கிராமத்தில் ஓர் ஆண் பாடசாலை தொடங்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து 1879ம் ஆண்டு திருக்கோவில் கிராமத்தில் ஓர் ஆண்பாடசாலையும் தம்பிலுவில் கிராமத்தில் ஒரு பெண் பாடசாலையும் தொடங்கப்பட்டது. எழுபத்து மூன்று மாணவர்களைக் கொண்ட இந்தப் பெண் பாடசாலை அக்காலத்தில் மட்டக்களப்பு முழுவதிலும் முதன்மையானதாகக் கருதப்பட்டது. 1900ம் ஆண்டில் கோளாவில் கிராமத்தில் மெதடிஸ்த மிஷன் (M.M) பாடசாலையொன்று ஆரம்பிக்கப்பட்டது. இப்பாடசாலை பெருநாவலர் பாடசாலை என இன்று வழங்குகின்றது.

கிறிஸ்தவ மிஷன்கள் அக்கரைப்பற்று வன்னிமை பிரதேசத்தில் (காளியோடை தொடக்கம் சங்கமன் கண்டிவரை ) முன்னேற்றமடைந்து வந்த இக்காலத்தில் கல்வியின் பயனை உணர்ந்தவர்கள் கிறிஸ்தவ பாடசாலைகள் பரவுவதை வரவேற்றனர். 1900 ஆம் ஆண்டுக்குப் பிற்பட்ட காலத்தில் மட்டக்களப்பில் கல்வி வளர்ச்சி முன்னேற்றம் அடைந்திருந்தது. இவ்வாறு இப்பிரதேசம் கல்வியில் வளர்ச்சியுற்று வந்த அக்காலத்தில் குறிப்பாக 1870ம் ஆண்டு தொடக்கம் 1900 ஆம் ஆண்டு வரையுள்ள காலத்தில் கலை, இலக்கியம் என்பனவும் செழிப்புடன் விளங்கியிருந்ததை இன்று காணக்கிடைக்கும் இக்காலத்தில் உருவான இப்பிரதேச இலக்கியங்கள் உணர்த்தும்.

---

20. இப்பள்ளிக்கூடம் கருங்கொடித்தீவு மெ. மிஷன் கலவன் பாடசாலை என்று 1867ல் பதியப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணகையம்மன் வழிபாடும் இதன் ஓர் அங்கமான கொம்பு விளையாடலும், முருகவழிபாடும், நாட்டுக்கூத்து கும்மி வசந்தன் காவடி ஆட்டம் போன்ற ஆடல் வகைகளும் சிறப்புடன் நிலவியிருந்த அக்கரைப்பற்று வன்னிமை பிரதேசத்தில் இவற்றை அடிப்படையாகக் கொண்ட இலக்கியங்கள் பல இக்காலத்தில் உருவாகி வந்துள்ளன. இவ்வாறு பக்தி, கலைகள் சார்ந்த இலக்கியங்களை உருவாக்கி வந்தவர்கள் கல்வியறிவு பெற்றிருந்த புலவர்கள், பண்டிதர்கள் நாடக ஆசிரியர்கள் என்போராவர்.

மேலும் உணர்ச்சிப் பெருக்கால், பக்திப் பரவச நிலையில் பாமரக் கவிஞர்களால் பாடப்பட்ட பக்தி இலக்கியங்களும் இன்று காணக்கிடைக்கின்றன. இதேவேளை நீர்ப்பாசன வசதியுடன் விவசாயத்தில் பெருவளர்ச்சி கண்டிருந்த இப்பிரதேசத்தில் வாழ்ந்திருந்த பாமரக் கவிஞர்களான விவசாயிகளால் உருவாக்கப்பட்டு வந்த வாய்மொழி இலக்கியங்களும் நிலவி வந்துள்ளன. இவற்றில் பக்தி, அகத்துறை, தொழில்துறை (வயல் இலக்கியம்) சார்ந்த இலக்கிய வடிவங்கள் அடங்கும்.

இக்கால கட்டத்தில் (1870 - 1900) அக்கரைப்பற்று வன்னிமைப் பிரதேசத்தில் நிலவியிருந்த கலை, இலக்கியம் பற்றிய சில குறிப்புக்கள் எனது 'திருக்கோவில் பிரதேச இலக்கிய வரலாறு என்ற நூலில் பதிவு (பக் 107 - 124) செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. மேலும் இக்கால கட்டத்தில் இப்பிரதேசத்தில் புகழ்பெற்றிருந்த புலவர்களில் கோளாவில் கிராமத்தைச் சேர்ந்த மொட்டைவேலாப்போடி என்பவர் குறிப்பிடத்தக்கவர் ஆவார். அக்காலத்தில் மட்டக்களப்பு முழுவதிலும் பிரபல்யம் பெற்ற புலவர்களில் ஒருவராக இவர் விளங்கியிருந்தார்.[21]

---

21. வசைப்பாடல்கள் பாடுவதில் வல்லவராக விளங்கியிருந்த மொட்டைவேலாப்போடியார் ''வசைபாடக் காளமேகம்'' என்ற பட்டப் பெயரையும் பெற்றிருந்தார். தம்பிலுவில் பள்ளு, திருக்கோவில் ஊஞ்சல் பாடல் என்பன இவர் இயற்றிய சிற்றிலக்கியங்களில் சிலவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கிலேயரது முழுமையான ஆட்சி இப்பிரதேசத்தில் நிலைத்திருந்த இக்காலத்தில் இங்கு குடியேறியிருந்த ஆங்கிலேயர் தெங்குப் பயிர்ச் செய்கைக்கு இப்பிரதேசம் ஏற்றதென்பதை அறிந்து தென்னந்தோட்டங்களை அமைக்கத் தொடங்கினர். 1880, 81 களில் ஆங்கிலேயர் தென்னந் தோட்டங்களை அமைக்கத் தொடங்கியிருந்ததுடன் இங்கு வாழ்ந்திருந்த மக்களும் தெங்கு பயிர்ச் செய்கையில் ஈடுபட ஊக்கமளித்தனர்.

இதேவேளை அக்காலத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் சனத்தொகை பின்வருமாறு அமைந்திருந்தது. இதில் முஸ்லிம்களின் சனத்தொகை வீதம் அதிகரித்து வந்ததையும் தமிழரது சனத்தொகை வீதம் குறைவடைந்து வந்ததையும் நோக்கலாம்.

| ஆண்டு | | மொத்த சனத்தொகை | | முஸ்லீம் | | தமிழ் | | சிங்களம் | | ஏனைய |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1881 | - | 105388 | - | 35.99 | - | 57.91 | - | 4.76 | - | 1.94 |
| 1891 | - | 122699 | - | 36.57 | - | 56.71 | - | 5.21 | - | 1.57 |
| 1901 | - | 145161 | - | 37.37 | - | 55.01 | - | 5.21 | - | 2.41 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## " கி.பி. 1900ம் ஆண்டு தொடக்கம் 1925 ஆம் ஆண்டு வரை அக்கரைப்பற்று மாகாணம்"

1907ல் மட்டக்களப்பு மாவட்டம் ஒன்பது பற்றுக்களாக அதாவது நிர்வாக ஆட்சி அலகுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இவற்றில் எட்டுப்பற்றுக்கள் வன்னிமைப் பற்றுக்களாகவிருந்தன. சம்பளம் பெறும் வன்னிமை எட்டுப்பேர் இப்பற்றுக்களின் உயர் அதிகாரிகளாக நியமனம் பெற்றிருந்தனர். ஒரு பற்றுக்கு றட்டமாத்தையா என்ற உத்தியோகத்தர் நியமனம் பெற்றிருந்தார்.

மேலும் ஒவ்வொரு நிர்வாகப் பிரிவின் கீழும் உடையார் பிரிவுகள், பொலீஸ் தலைமைக்காரர் பிரிவுகள் ஆகியன நிலவியிருந்தன. கி.பி. 1907ல் மட்டக்களப்பில் நிலவியிருந்த வன்னிமைப் பற்றுக்கள் பின்வருமாறு.

1. மண்முனை வடக்கு
2. மண்முனை தெற்கு
3. எருவில் போரதீவு
4. கரவாகு நிந்தவூர்ப் பற்று
5. சம்மாந்துறை, நடுக்காடு
6. அக்கரைப்பற்று
7. பாணமைப்பற்று
8. ஏறாவூர் றூகம், கோறளை
9. விந்தனைப் பற்று. [1]

---

1. MONOGRAPH OF BATTICALOA DISTRICT. Page 78- S.O.Canagaretnam - 1921



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காலகட்டத்தில் மட்டக்களப்பு அரச அதிபராகவிருந்த Mr.H.R.பிறிமன் (1907 - 1909) என்பவர் செய்த வன்னிய நியமனங்கள் பற்றி அறிய முடிகின்றது. இவர் ஏறாவூர் வன்னியனாக மீராலெவ்வை, மண்முனை வன்னியனாக ஆரையம்பதி சோமநாதனும் அவர் மரணத்தின் பின்னர் பொன்னுசாமி என்பவரும் பதவி வகித்தவர்களாகின்றனர்.[2] ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் சுயாட்சி அதிகாரம் கொண்ட சிற்றரசர்கள் போல் விளங்கிய இவர்கள் நிர்வாகம், நீதி, வரி அறவீடு, பாதுகாப்பு போன்ற அதிகாரங்கள் பெற்றிருந்தனர்.

இவ்வேளை (1911) அம்பாரை உள்ளிட்ட மட்டக்களப்பு மாவட்டத்தில் சனத் தொகை 153943 ஆகவிருந்தது. இதில் தமிழர்கள் 54.53 வீதமாகவும், முஸ்லீம்கள் 39.23 வீதமாகவும், சிங்களவர்கள் 3.75 வீதமாகவும் ஏனையோர் 2.49 வீதமாகவும் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை 1911ல் மக்கள் தொகைக் கணிப்புக்குப் பொறுப்பாகவிருந்த உத்தியோகத்தர் E.V. டேன்காம் என்பவர் மட்டக்களப்பு நாட்டில் வேடர்கள் வசித்த விந்தனை பகுதியைத் தவிர மற்றப் பகுதிகளிலெல்லாம் தமிழர்களே வாழ்ந்திருந்தனர் என்று குறிப்பிடுகின்றார்.[3] அக்காலத்தில் தென்னிந்திய பண்பாட்டைக் கடைப்பிடித்து மொழிவழியில் தமிழர்களாகவும், நம்பிக்கையின் அடிப்படையில் இஸ்லாமியர்களாகவும் வாழ்ந்திருந்த முஸ்லீம் மக்களை மொழி வழியில் (தாய்மொழி) ஓரினத்தவராகக் கருதியதாலேயே தமிழ்பேசும் மக்களான தமிழ் முஸ்லீம் மக்களை தமிழர்கள் என்று குறிப்பிடுகின்றார்.

---

2. மட்டக்களப்பு வரலாறு - பக்.98 வெல்லவூர்க்கோபால் - 2005
3. மட்டக்களப்பு குகன்குல முற்குகர் வரலாறும் மரபுகளும் - பக்.38.ஞா.சிவசண்முகம் - 2000



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காலகட்டத்தில் (1907 - 1911) இலங்கை சரித்திரத்திலும் ஒரு புதிய அத்தியாயம் ஆரம்பமானது. 1907ம் ஆண்டளவில் பிரித்தானியரது ஆட்சியில் இலங்கையின் சமூக பொருளாதார வளர்ச்சி உன்னத நிலையை எய்தியிருந்தது. இவ்வேளை ஜேம்ஸ் பீரிஸ் என்பவருடன் சேர்ந்து பல பிரமுகர்கள் அரசியல் சீர்திருத்தம் வேண்டிக்குரல் எழுப்பினர்.

எச்.ஜே.சி. பெரேரா. எப்.ஆர் சேனநாயக்கா, சேர்.பொன் அருணாசலம், பரன் ஜெயதிலகா, பொன்.குமாரசாமி, டி.ஆர் விஜயவர்த்தனா, சேர்.பொன் இராமநாதன் போன்றோர் பிரதேச வாரியாகத் தேர்தல் நடாத்தி சட்ட சபைக்கு பிரதிநிதிகளைத் தெரிவு செய்து அனுப்பவேண்டுமெனக் கோரிக்கை விடுத்தனர். 1907ல் நிறுவப்பட்ட இலங்கை வாழ் ஒல்லாந்தர் பறங்கியர் சங்கமும் 1908ல் தொடங்கப்பட்ட தாழ்பூமி விளைபொருள் உற்பத்திச் சங்கமும். இக்கோரிக்கைகளை ஆதரித்தன.

இந்நிலையில் பல பிரமுகர்கள் அடங்கிய இலங்கை சீர்த்திருத்தக் கூட்டவை ஆள்பதி மக்கலம் அவர்களுக்கு ஒரு நினைவேட்டை 1908ம் ஆண்டு அனுப்பி வைத்தது. அதன் பிரதி யொன்று குடியேற்ற நாட்டுச் செயலாளருக்கும் அனுப்பி வைக்கப்பட்டது. இதேவேளை இக்கோரிக்கைகள் யாவும் ஆள்பதி மக்கலம் அவர்களால் நிராகரிக்கப்பட்டன.

இந்நிலையில் இலங்கைச் சீர்திருத்தக் கூட்டவை யாழ்ப்பாணச்சங்கம், சிலாபச் சங்கம், தாழ்பூமி விளைபொருள் சங்கம் என்பவற்றின் கோரிக்கைகளும், ஜேம்ஸ் பீரிஸ் அவர்களின் கல்வி அறிவுள்ள இலங்கையருக்கு வாக்குரிமை வழங்கி அவர்களுக்கு பிரதிநிதித்துவம் அளிக்கப்படல் வேண்டும் என்ற விண்ணப்பமும் இங்கிலாந்து மக்களின் கவனத்தை ஈர்த்தன. பொதுமக்கள் சபை அங்கத்தவர்கள் இலங்கைச் சட்டசபையில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட (தேர்தல்முறையில்) பிரதிநிதிகள் இடம்பெற வேண்டுமெனக் கேட்டுக் கொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு இலங்கையிலும், இங்கிலாந்திலும் இலங்கையரின் விடுதலைப் போராட்டம் வலுவடையவே ஆள்பதி மக்கலம் புதிய அரசியல் சீர்திருத்தங்களை இலங்கையில் கொண்டு வரவேண்டுமென உணர்ந்து 1910ம் ஆண்டு நவம்பர் புதிய ஒரு அரச கட்டளை பிறப்பிக்கப்பட்டு இலங்கைச் சட்ட சபை மாற்றியமைக்கப்பட்டது.[4]

1912ம் ஆண்டு ஜனவரி மாதம் முதன்முதலாக புதிய சட்டசபை கூடியபோது வகுப்பு வாரியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளில் கல்வி அறிவுள்ள இலங்கையர் பிரதிநிதியாக சேர்.பொன். இராமநாதனும் ஆள்பதியால் நியமனம் செய்யப்பட்ட பிரதிநிதிகளாக அம்பலவாணர் கனகசபை J.N. திசவீரசிங்கம் என்போரும் அடங்கியிருந்தனர்.

1912ல் திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களை உள்ளடக்கியிருந்த கிழக்கு மாகாணத்திற்கு ஆள்பதியால் நியமனம் செய்யப்பட்ட திரு.J.N.திசவீரசிங்கம் அவர்கள் யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகக் கொண்டவர் இவர் கிறிஸ்தவ மிஷனரியூடாக மட்டக்களப்புக்கு வந்து மட்டக்களப்பு வாசியாக வாழ்ந்தவர். 1912ல் நிறுவப்பட்ட சட்டசபை 1920ஆம் ஆண்டு வரை நிலைத்திருந்தது.

இதனைத் தொடர்ந்து புதிய சட்டசபை 1921ம் ஆண்டு ஜூன்மாதம் 7ம்திகதி தொடங்கப்பட்ட காலத்தில் பிரதேசவாரியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதி நிதிகளின்படி கிழக்கு மாகாணத் தொகுதிக்கு E.R. தம்பிமுத்து அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார். இதனைத் தொடர்ந்து இலங்கை அரசியலில் 1924ல் அரசியல் நிர்ணய சபை அங்கத்தவராக மட்டக்களப்பு தொகுதிக்கு திரு. E.R. தம்பிமுத்து அவர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தார். திருகோணமலை தொகுதிக்கு M.M. சுப்பிரமணியம் என்பவர் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார்.

---

4. இலங்கை வரலாறு பிரித்தானியர் காலம் - பக்.173-175 சி.எஸ்.கதிர்காமநாதன் - 1967



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதேவேளை வன்னிமை நிர்வாக முறை நிலவியிருந்த மட்டக்களப்பு உள்ளிட்ட கிழக்கு மாகாணத்தில் 1912ல் அரசாங்க அதிபராகவிருந்த J.O.K.Murty (1912 - 1914) என்பவரது காலத்தில் மட்டக்களப்பில் கூடிய சபையில் பின்வரும் வன்னிமைகள் பங்கு பற்றியிருந்தனர்.

1) கொட்டியாரம் பற்று - D. துரையப்பா

2) பாணமைப் பற்று - G.H. கனகசபை

3) ஏறாவூர், கோறளைப்பற்று A.K.காரியப்பர்

4) கரவாகுப்பற்று - S.W. சின்னத்தம்பி

5) சம்மாந்துறைப்பற்று - A.L. காரியப்பர்[5]

இக்கால கட்டத்தில் மட்டக்களப்பின் (மாவட்டம்) வன்னிமைப் பிரபுக்களான மண்முனை வடக்குப் பிரிவுக்கு எஸ்.டபிள்யு. கனகசபை என்பவரும் எருவில் போரதீவு பற்றுக்கு வி.ரி. கதிரேசபிள்ளை என்பவரும் கடமை புரிந்துள்ளனர்.[6] மண்முனை தெற்கு, விந்தனை பற்று ஆகிய பிரிவுகளில் கடமை புரிந்த வன்னிமைகள் பற்றிய தகவல்கள் பெறமுடியாதுள்ளது. இதே வேளை இக்காலத்தில் 1924, 25 களில் அக்கரைப்பற்று வன்னியனாராக திரு.ச. தருமரெட்ணம் அவர்கள் பதவி வகித்து வந்துள்ளதை அறிய முடிகின்றது.

இவ்வேளை (1912ல்) கரவாகுப்பற்று வன்னியனாகப் பதவி வகித்து வந்த சத்துருக்கப்போடி வன்னியனின் மகனான சின்னத்தம்பிப்போடி 1902ல் வன்னியனாகவும், முதலியாராகவும், திடீர் மரண விசாரணை அதிகாரியாகவும் ஆங்கிலேயத் தளபதியால் நியமிக்கப்பட்டவர் ஆவார்.[7]

---

5. Proceeding of Dubar of Tamil Chiefs Batticaloa- 1912 Colombo (ஆவணம் குறிப்பேடு)
6. திரு.வி.ரி. கதிரேசப்பிள்ளை வன்னிமை 1869ம் ஆண்டில் பிறந்தவர் எனத் தெரியவருகின்றது. (தகவல் மாசிலாமணி திருநாவுக்கரசு - குருக்கள்மடம் - 01.12.2019
7. பத்தும் பதியமும்- திருமதி.கமலாம்பிகை லோகிதராஜா - 2012



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியாகிய 1900ம் ஆண்டு தொடக்கம் 1925ஆம் ஆண்டுவரையான இக்காலத்தில் அக்கரைப்பற்று வன்னிமைப் பிரதேசம் கல்வி, பொருளாதாரம் வாணிபம், விவசாயம் எனப் பல்துறைகளிலும் வளர்ச்சி கண்டு வந்ததுடன் இப்பிரதேசத்தில் ஆலையடிவேம்பு, கள்ளியந்தீவு முனையூர் போன்ற புதிய கிராமங்களும் தோற்றம் பெற்று நிலவியிருந்தன.

இவ்வேளை 1907ல் பங்குனியில் கிழக்கிலங்கை என்றுமே கண்டிராத பெரும் புயலொன்று வீசியது. இதனோடு பெருமழை கரைகடந்த வெள்ளம் என்பனவற்றால் அக்கரைப்பற்று மாகாணம் பெரும் பாதிப்புற்றது. மக்கள் அடைந்த துன்பங்களும் எல்லையற்றன. இவற்றையெல்லாம் விவரித்த சொல்லோவியம் நிறைந்த புயற்காவியமொன்று கருங்கொடித்தீவு நகரில் அக்காலத்தில் வாழ்ந்திருந்த புலவரொருவரால் உருவாக்கப்பட்டு நிலவி வந்ததும் குறிப்பிடத்தக்கது எனலாம்.

இக்காலத்தில் (1900 - 1925) தொடர்ந்து வன்னிமை நிர்வாக மையமாக கருங்கொடித்தீவு நகர் விளங்கியிருந்ததுடன் ஒரு வணிக மையமாகவும் இந்நகர் முக்கியத்துவம் பெற்றிருந்தது. இப்பிரதேசத்தில் நிலவியிருந்த பாலமுனை, மீனோடைக்கட்டு அட்டாளைச்சேனை, கோளாவில், பனங்காடு, தம்பட்டை தம்பிலுவில், திருக்கோவில் ஆகிய கிராமங்களில் வாழ்ந்து வந்த மக்கள் தங்கள் தேவைகளை (அத்தியாவசியப் பொருட்கள், நிர்வாக செயற்பாடுகள்) நிறைவேற்றிக் கொள்ள வேண்டி ஒன்று கூடும் இடமாகவும் கருங்கொடித்தீவு நகர் விளங்கியிருந்தது.

அத்துடன் தென்னிலங்கை, வட இலங்கை, மலையகம் உள்ளிட்ட வணிக நகரங்களுடனும், கருங்கொடித்தீவு நகர் வர்த்தக (வாணிபத்) தொடர்புகளையும் கொண்டிருந்தது. இவ்வாறானதொரு பின்புலத்தில் பண்டு தொட்டுப் பாரம்பரிய மரபுகள், வழக்காறுகள் என்பன பேணி நிலவி வந்த கருங்கொடித்தீவு நகரானது ஆரம்ப காலத்தில் ஒரு சிற்றாட்சிப் பிரிவின் பெயராகவும் அதனைத் தொடர்ந்து வரையறுக்கப்பட்டதொரு மாகாணப் பிரிவின் பெயராகவும் நிலவி வந்த அக்கரைப்பற்று என்ற பெயரையும் தன்னுடன் இணைத்துக் கொண்டு நிலவத் தொடங்கியிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி.பி. 1870ல் மிஷனரிமாரால் ஆரம்பிக்கப்பட்ட மெதடிஸ்த மிஷன் பாடசாலை, கருங்கொடிதீவு மெ.மிஷன் பாடசாலை என்று பதியப்பட்டுள்ளது. 1907ல் ஏற்பட்ட புயல்பற்றி உருவான புயல்காவியம் பாடிய புலவரான சேகுமதாறு புலவர் தன்னை ஆதரித்து வந்தவர்களைப் புகழ்ந்து பாடிய பாடலில் 'அன்னம்பயில் வாவி வளம் பல சூழும் அக்கரைப்பற்றெனும் நகரில்' என்று குறிக்கின்றார்.[8] ஆதலால் இதற்குச் சில ஆண்டுகளுக்கு முன்பே கருங்கொடித்தீவு நகருக்கு அக்கரைப்பற்று என்ற இடைநுழைவுப் பெயரும் ஏற்பட்டது எனலாம். ஆங்கில மிஷனரிமார்கள் தங்கள் சமயங்களைப் பரப்புவதில் முனைப்புடன் செயற்பட்டு வந்த இக்காலத்தில் கல்விச் சமூகமொன்று அக்கரைப்பற்று பிரதேசத்தில் உருவாகி வந்ததுடன் ஆங்கில மொழியும் இங்கு செல்வாக்குப் பெற்றிருந்தது.

இதேவேளை 1890,91களில் கிழக்கிலங்கையில், குறிப்பாக திருகோணமலையில் இந்து சமய மறு மலர்ச்சியாளர்களால் 1890ம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்ட சைவப்பிரகாசசமாஜம் என்ற அமைப்பானது 1895ம் ஆண்டளவில் பொதுமக்களின் பேராதரவுடன் ஒரு சைவப் பாடசாலையைத் தோற்றுவித்ததுடன் ஒரு ஸைவ ஆங்கிலப் பாடசாலையையும் உருவாக்கியிருந்தனர். இதன் தாக்கம் 1900ம் ஆண்டளவில் மட்டக்களப்பிலும் பிரதிபலிக்கத் தொடங்கியது.

இதன் பயனாக 1902ஆம் ஆண்டு தொடக்கம் 1923ம் ஆண்டு வரையுள்ள காலத்தில் மட்டக்களப்பு கிராமங்களில் சைவமக்கள் முயற்சிகளினால் சைவப் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. ஆனைப்பந்தி (1902), ஆரப்பற்றை (1912), கல்லடி உப்போடை(1912), காரைதீவு (1912), முறக்கொட்டாஞ்சேனை (1914), மண்டூர் (1918) ஆகியன இவற்றில் அடங்கும்.[9] 1918ம் ஆண்டில் மட்டக்களப்பில் (அம்பாரை உள்ளிட்ட) நூற்றி நாற்பத்தாறு பாடசாலைகள் இயங்கியிருந்தன. இவை பின்வருமாறு.

---

8. மட்டக்களப்பு தமிழகம் - பக்.285 பண்டிதர் வி.சி. கந்தையா - 1964
9. விபுலானந்த தரிசனம் பக்.73 வ.சிவசுப்பிரமணியம் - 1993



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| உவெஸ்லி மிஷன் | - | 82 |
| றோமன் கத்தோலிக்க மிஷன் | - | 38 |
| ஆங்கிலத் திருச்சபை | - | 08 |
| சைவப் பாடசாலை | - | 10 |
| தமிழ்மொழி அரசினர் பாடசாலை | - | 08 |
| மொத்தம் | | 146 |

இவ்வேளை அக்கரைப்பற்று வன்னிப் பிரதேசத்தில் சைவ மறுமலர்ச்சி ஏற்பட்டிருந்தபோதும் மதமாற்றம் என்பது தீவிரம் பெற்றிருக்கவில்லை. இதற்கு பிற்பட்ட காலத்திலேயே (1922க்கு பின்) அக்கரைப்பற்று பிரதேசக் கிராமங்களிலும் தமிழ்ச் சைவர்களால் சைவப் பாடசாலைகள் தோற்றுவிக்கப்பட்டன. 1922ம் ஆண்டு காலப்பகுதியிலேயே இப்பிரதேசத்தில் பல இந்துக் குடும்பங்களுக்கு நற்செய்தி பரவியது என்று திரு. கனகரெத்தினம் (பவுல்) அவர்கள் குறிப்பிடுகின்றார்.

இதேவேளை (1922) அக்கரைப்பற்று வன்னிப்பிரதேசத்தில் பாரம்பரியகலைகளான நாட்டுக்கூத்து, வசந்தன், கும்மி போன்ற ஆடல் கலைகள் சிறப்புடன் விளங்கியிருந்ததுடன் இலக்கியமும் செழித்திருந்தது. இக்காலத்தில் மட்டக்களப்பில் நாடகக் கழகங்கள் தோன்றி சைவசமய சம்பந்தமான நாடகங்களையும் சமூக, வரலாற்று நாடகங்களையும் மேடையேற்றி வந்தன. இக்காலத்தில் மட்டக்களப்பு வித்துவான் சரவணமுத்தன் தமிழ் நாட்டைச் சேர்ந்த வேல் நாயக்கர் நாடகக் கம்பனியினர் தெற்கே தம்பிலுவில் திருக்கோவில் கிராமங்கள் வரை இசைநாடகங்களை மேடையேற்றி வந்ததை அறிய முடிகின்றது.[10]

---

10. இசைநாடகவரலாறு - கட்டுரை காரை சுந்தரம்பிள்ளை, தமிழ் நாட்டார் வழக்காற்றியல் பக்.309-327 பதிப்பாசிரியர். திரு.க.சண்முகலிங்கம் - 1995



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நாடகங்களில் வித்துவான் சரவணமுத்தன் தமிழ் நாட்டைச் சேர்ந்த வேல் நாயக்கர் என்போருடன் இப்பிரதேசக் கலைஞர்களும் சேர்ந்து நடித்தனர். இதற்கு முந்திய காலத்தில் பழந்தமிழ் நாடக வடிவான நாட்டுக்கூத்து மற்றும் வசந்தன், கும்மி போன்ற பாரம்பரிய கலைகள் சிறப்புடன் விளங்கி வந்த அக்கரைப்பற்று வன்னிப் பிரதேசத்தில் 1922, 1923 களில் 'இசை நாடகம்' என்ற கலைவடிவம் அறிமுகமாகியதுடன் பிற்காலத்தில் 'இசைநாடகம்' என்ற கலை வடிவம் செழித்திருந்த பிரதேசங்களிலொன்றாகவும் அக்கரைப்பற்று விளங்கியிருந்தது.

அக்காலத்தில், மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழ்ந்து வந்த மக்களை கல்விக் கூடங்கள் மூலமாக மதமாற்றம் செய்து வந்த பிறமதத்தவருக்கெதிராக மட்டக்களப்புக் கிராமங்களிலெல்லாம் சைவப் பாடசாலைகளை நிறுவிச் சைவம், பண்பாடு, கலாசாரம் அழியாது நிலை பெறவேண்டும் என்ற நோக்கில் 1902ல் 'சைவப்பள்ளிக்கூட இயக்கம்' மட்டக்களப்பில் தோற்றுவிக்கப் பட்டதுடன் ஆனைப்பந்தியில் இவ்வியக்கத்தினரால் சைவப் பாடசாலையொன்றும் ஆரம்பிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து 1910ம் ஆண்டுவரை நலிவுற்றிருந்த 'சைவப்பள்ளிக்கூட இயக்கத்தின்' தலைமைப் பொறுப்பை 'சரவணமுத்து சாமியார்' என்ற வித்துவான் சரவணமுத்தன் ஏற்றிருந்தார். இவர் சைவம் வளர்த்தெடுக்கும் பணியில் அளப்பெரிய வெற்றி கண்டார். தமிழ் வள்ளல்கள் பலருடைய ஒத்துழைப்பும், ஆதரவும் இவருக்குக் கிடைத்தது. இவர்களில் அக்கரைப்பற்று வன்னிமைப் பிரதேசத்தில் ஏராளமான நிலபுலன்களுக்குச் சொந்தக்காரராகவிருந்த கே. வி. மார்க்கண்டு முதலாளி என்பவரும் ஒருவராவார். இக்காலத்தில் இவர் திருக்கோவில் சித்திரவேலாயுதர் ஆலயத்தலைவராக (1912 - 1936) இருந்து வந்தார்.[11]

---

11. சைவசமய வளர்ச்சியில் முன்னேற்றம் அடைந்து வந்த அக்கரைப்பற்று வன்னியில் மட்டக்களப்பின் முதல் திருப்படைக்கோயிலான திருக்கோவில் சித்திரவேலாயுதர் ஆலயத்தில் கந்தசஷ்டியின்போது கந்தப் புராணப்படனம் இடம்பெறத்தொடங்கி யிருந்தது. ஆலயத் தலைவராகவிருந்த திரு.மார்க்கண்டன் முதலாளி அவர்கள் சிறியகப்பல் மூலம் தமிழகத்திலிருந்து மரத்திலான சூரன்சிலை எடுத்து வந்திருந்தார். (திருக்கோவில் பிரதேச இலக்கிய வரலாறு பக்.130.நா.நவநாகமூர்த்தி - 2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்துவான் சரவணமுத்தன் (1890 - 1930)அவர்களது முயற்சியின் பயனாக எங்கும் சைவப் பாடசாலைகள் எழுந்தன. திண்ணைகள் வளர்ந்தன. நாடக அரங்குகளும் எழுந்தன. நாடக ஆசிரியரான அவர் சுகிர்த விலாசசபையின் தலைவராகவும் இருந்து வந்தார். 1922ம் ஆண்டு வரையுள்ள காலத்தில் வித்துவான் சரவணமுத்தன், அருணாசல தேசிகமணி ஆகிய இருவரும் மட்டக்களப்பில் சைவம் வளர்த்தெடுக்கும் பணியில் அளப்பெரும் தொண்டாற்றினர். இக்காலம் தொட்டு (1922) மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ் மரபுகாக்கும் பெரும் பணியானது தொடர்ந்து வருவற்கு வித்துவானே வழிகோலினார். இப்பணியானது பல் வடிவங்களில் அக்கரைப்பற்று பிரதேசத்திலும் பிரதிபலித்தது.[12]

அக்கரைப்பற்று வன்னிமைப்பிரதேசத்தில் 1923ல் தமிழகத்து வேல்நாயக்கர் நாடகக்கம்பெனியை அழைத்து வந்து இப்பிரதேசப் பிரமுகர்களின் ஆதரவுடன் இசைநாடகங்களை மேடையேற்றியதன் மூலமாக இசைநாடக கலை வடிவத்தை இப்பிரதேசத்தில் அறிமுகம் செய்தவர் வித்துவான் சரவணமுத்தனே ஆவார்.

அக்காலத்தில் அக்கரைப்பற்று, வன்னிமைப் பிரதேசம் தம்பிலுவில் கிராமத்தைச் சேர்ந்த பண்டிதர் குஞ்சித் தம்பி அவர்கள் வித்துவான் சரவணமுத்தனுடன் இணைந்து மட்டக்களப்பில் சமூக சமய கலைப்பணிகளில் ஈடுபட்டு வந்துள்ளார். வித்துவான் சரவணமுத்தன் இயற்புலமையுடன் நாடகப் புலமையும் மிக்கவர். இருவரது கூட்டுறவு பல புதுப்புது நாடகங்களை எழுத வழி செய்தது. பண்டிதர் அவர்கள் பல நாடகங்களில் தோன்றி நடித்துள்ளார்.[13]

---

12. வித்துவானின் முயற்சியினால் நிறுவப்பட்ட (1910 - 1922) சைவப்பள்ளிக் கூடங்களையே விபுலானந்தர் பிற்காலத்தில் (1930ல்) இராமகிருஷ்ண சங்கத்தில் இணைத்து வளர்த்தார். 1929ல் சிவாநந்த வித்தியாலத்தை திறந்து வைத்த விபுலானந்தர் 1930ல் இலங்கையிலுள்ள இராமகிருஷ்ண சங்க பாடசாலைகளின் முகாமைக்காரராக இருந்தார்.

13. மட்டக்களப்புத் தமிழகம் - பக்.237 பண்டிதர்.வி.சி.கந்தையா -1964
* 1930ல் வித்துவான் சரவணமுத்தனின் இறப்பின் பின்னர் தனது சொந்தப் பிரதேசத்தில் வந்திருந்து பல இசை நாடகங்களை எழுதிப் பண்டிதர் மேடையேற்றியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1924ம் ஆண்டில் கல்லடிப்பாலம் பூர்த்தி செய்யப்பட்டது. இதனைத் தொடர்ந்து அக்கரைப்பற்று வன்னிப்பிரதேச மக்கள் புளியந்தீவில் அமைந்திருந்த மாவட்ட செயலகம், வைத்தியசாலை, உயர் நீதி மன்றம் ஆகிய அரச மையங்களுக்கு இலகுவாகச் சென்று வர வசதி ஏற்பட்டது. இதற்கு முந்திய காலத்தில் அக்கரைப்பற்று வன்னி உள்ளிட்ட மட்டக்களப்பு தென்பகுதி மக்கள் புளியந்தீவுக்கு தங்கள் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள ஓடத்திலேயே சென்று வந்தனர். இம்மக்கள் ஆரையம்பதி சென்று அங்கிருந்து ஓடத்தில் சென்று புளியந்தீவைச் சென்றடைந்தனர்.

இதேவேளை இக்காலத்தில் குறிப்பாக 1916ம் ஆண்டு தொடக்கம் 1926ஆம் ஆண்டு வரையான காலத்தில் தெங்குப் பொருள் அபிவிருத்தியிலும் நெல்விவசாயத்திலும் இப்பிரதேசம் பெருவளர்ச்சியுற்றிருந்தது.[14] ஆங்கிலேயர் இப்பிரதேசத்தில் வந்து தங்கியிருந்து தென்னந்தோட்டங்களை உருவாக்கியிருந்தனர். (கிறீன்துரை, கரடியம்மா) மேலும் தனவந்தர்களான திரு. ச. தருமரெட்ணம் வன்னியனார், முதலியார். கே.வி. மார்க்கண்டன் போன்றோரும் தென்னந்தோட்டங்களை இப்பிரதேசத்தின் கரையோரப் பகுதிகளில் உருவாக்கியிருந்தனர்.

இவர்களுடன் இப்பிரதேசத்தில் வாழ்ந்திருந்த செல்வந் தர்களும் சிறிய தென்னந்தோட்டங்களை உருவாக்கியிருந்தனர். இப்பிரதேசத் துறைகளினூடாக தெங்குப் பொருட்கள் சிறிய கப்பல்கள் மூலம் தென்னிந்தியாவுக்கு எடுத்துச் செல்லப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வந்தன. இக்காலத்தில் மட்டக்களப்புக்கும் அம்பாந்தோட்டைக்குமிடையில் கப்பல் போக்குவரத்தும் இடம்பெற்று வந்துள்ளது. இதற்கு முந்திய காலத்தில் இப்பிரதேசத்தில் வாழ்ந்திருந்த மக்களின் இல்லங்களில் தங்கள் தேவைக்காக ஒன்றிரண்டு தென்னை மரங்களை பயிரிட்டு வந்துள்ளனர்.

---

14. இலங்கை வரலாறு பிரித்தானியர் காலம் - 1796 - 1948. பக்.146
சி.எஸ்.கதிர்காமநாதன் - 1967



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிபி 1925ம் ஆண்டு தொடக்கம் 1946ம் ஆண்டு வரை அக்கரைப்பற்று

கி.பி. 1925,26 களில் ஆங்கிலேயரின் நல்லாட்சியில் அக்கரைப்பற்று வன்னிமைப் பிரதேசம் உன்னத நிலையை எய்தியிருந்தது. இவ்வேளை அக்கரைப்பற்று வன்னிமைப் பிரிவின் வன்னிமையாக திரு.ச.தருமரெட்ணம் அவர்கள் பதவி வகித்து வந்தார். இக்காலத்தில் காளியோடை தொடக்கம் சங்கமன் கண்டி வரை பரந்திருந்த அக்கரைப்பற்று வன்னிமைப்பிரிவில் மட்டுமன்றி அக்காலத்தில் காரைதீவு வரை பரந்திருந்த நிந்தவூர் பற்று வன்னிப் பிரிவிலும் தமிழர் செல்வாக்கு உன்னத நிலையிலிருந்தது.

அக்காலத்தில் திரு.ச.தருமரெட்ணம் வன்னிமைக்கு கருங்கொடித்தீவு, மீனோடைக்கட்டு, நிந்தவூர், திருக்கோவில் பாலமுனை முதலான இடங்களில் பங்களாக்களும் வயற் காணிகளும்தோட்டங்களும் உடமைகளாகவிருந்தன. கருங்கொடித்தீவு பிள்ளையார் ஆலயம், திருக்கோவில் சித்திரவேலாயுதர் ஆலயம் என்பன இவரது ஆதரவைப் பெற்றிருந்தன. அக்கரைப்பற்று வன்னிப் பிரதேசத்தில் வாழ்ந்திருந்த தமிழ்பேசும் மக்களான தமிழ், முஸ்லிம் மக்களிடையே செல்வாக்குப் பெற்றவர்களிலொருவராக திரு.ச.தருமரெட்ணம் வன்னியனார் விளங்கியிருந்தார்.

இக்காலத்தில் இலங்கை அரசியலிலும் மாற்றங்கள் இடம்பெறத் தொடங்கியிருந்தது. 1931ம் ஆண்டில் டொனமூர் சீர்திருத்தங்களின் பின்னர் முதல் தடவையாக பிரதேசவாரி தேர்தல் வழி பிரதிநிதித்துவ முறை அறிமுகம் செய்யப்பட்டது. அப்போதிருந்த தேர்தல் சட்டங்களின் படி சட்டசபைக்கு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

இதன் பிரகாரம் 1931ல் சட்டசபை உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் நடைபெற்ற வேளை கிழக்கு மாகாணம் மட்டக்களப்பு வடக்கு, மட்டக்களப்பு தெற்கு என இரு தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டுத் தேர்தல் நடத்தப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தேர்தலில் மட்டக்களப்பு வடக்கு தொகுதியிலிருந்து முதலியார் மயில்வாகனம் சுப்பிரமணியம் அவர்களும் தெற்குத் தொகுதியிலிருந்து சர் ஹாஜிமுகம்மது மாக்கான் மார்க்கார் அவர்களும் சட்டசபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.[1]

அக்கரைப்பற்று வன்னிப் பிரதேசம் உள்ளிட்ட மட்டக்களப்பு தெற்கு தொகுதியின் சட்டசபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட எச்.எம்.மாக்கான் மார்க்கார் நான்கு ஆண்டுகள் அமைச்சராகவும் இருந்துள்ளார். 1931ம் ஆண்டு தேர்தலின் போது கிழக்கு மாகாண முன்னாள் சட்டவாக்க சபை உறுப்பினராகவிருந்த ஈ.ஆர்.தம்பிமுத்து அவர்களை 2937 வாக்குகளால் தோற்கடித்தார்.[2]

இதனைத் தொடர்ந்து 1936ம் ஆண்டு நடந்த சட்டசபைத் தேர்தலில் மட்டக்களப்பு வடக்குத் தொகுதியிலிருந்து ஈ.ஆர்.தம்பிமுத்து அவர்களும் தெற்குத் தொகுதியிலிருந்து சின்னக்குட்டி உடையார் கனகரெத்தினம் அவர்களும் சட்டசபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். இவ்வேளை வடக்கே கல்லடிப்பாலத்திலிருந்து ஆரம்பித்து முழு அம்பாரை மாவட்டத்தையும் சேர்த்திருந்த மட்டக்களப்பு தெற்குத் தொகுதியின் உறுப்பினரான சின்னக்குட்டி உடையார் கனகரெத்தினம் அவர்கள் மறைய இத்தொகுதியில் இடைத்தேர்தலொன்று நடைபெற்றது.

இத்தேர்தலில் மட்டக்களப்பு தெற்குத் தொகுதியில் திரு.ச.தருமரெட்ணம் வன்னியனார் அவர்கள் வெற்றி பெற்றுச் சட்டசபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார். இவருக்கு தமிழ், முஸ்லீம், சிங்கள மக்கள் சேர்ந்து வாக்களித்திருந்தனர். 1931,36ம் ஆண்டுகளில் நடைபெற்ற சட்டசபைத் தேர்தல்கள் மூலமாகப் பல உண்மைகள் தெளிவாகின்றன.

---

1. ஈழத்தமிழர் வரலாற்றுச் சுவடுகள் - பக்.112 நா.நவநாயகமூர்த்தி - 2022
2. அம்பாரை மாவட்ட முஸ்லீம்கள் - பக்.208 பதிப்பாசிரியர் எஸ்.எச்.எம்.ஜெமீல் - 1997



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கிலேய ஆட்சியின் இறுதிக்காலத்தில் மட்டக்களப்பில் (அம்பாரையை உள்ளடக்கிய) வாழ்ந்திருந்த தமிழ், முஸ்லீம் மக்களிடையே நெருக்கமான உறவுகள் நிலவியிருந்தன. தமிழ் மொழியைத் தாய் மொழியாகக் கொண்டிருந்த இவர்கள் மொழி வழியில் ஓரினத்தவராகவே வாழ்ந்து வந்தனர் என்பதே மறக்கப்பட்ட அவ்வுண்மைகளில் ஒன்றாகும். (நா.நவநாயகமூர்த்தி - 2002) குடிவழமை, பண்பாட்டுக் கோலங்கள், இலக்கிய மரபு ஆகியனவற்றில் நெருங்கிய உறவினைக் கொண்டிருந்த தாய் மொழியில் தமிழரான முஸ்லீம்களில் பெரும்பாலானோர் தமிழ் மகனான திரு.தருமரெட்ணம் வன்னியனுக்குத் தங்கள் வாக்குகளை அளித்திருந்தனர்.

இதேவேளை சமூக, சமய, பண்பாட்டு விழுமியங்களில் தமிழ் மக்களுடன் மிக நெருங்கிய உறவினைக் கொண்டிருந்த சிங்கள மக்களும் இனபேதமின்றி நல்லிணக்கத்துடன் திரு.ச.தருமரெட்னம் அவர்களை ஆதரித்திருந்தனர். திரு.தருமரெட்னம் அவர்கள் மட்டக்களப்பு தெற்கு தொகுதிக்கு சட்டசபை உறுப்பினராகவிருந்து வந்த காலத்தில் அக்கரைப்பற்று வன்னிமையாக திரு.C.C.கனகரெத்தினம் என்பவர் பதவி வகித்து வந்தார். இவ்வேளை வன்னிமையின் நிர்வாக காரியாலயம் கருங்கொடித்தீவு நகரில் அமைந்திருந்தது.

1939ம் ஆண்டில் கிழக்கு மாகாணத்தில் வன்னிமை பதவியிலிருந்த சிலரது பெயர்கள் காணக்கிடைக்கின்றன.

திருமலை மாவட்டம் 1.திருகோணமலைநகரம் - T.சரவணமுத்து

2.தம்பலகாமம் பற்று - A.கனகசிங்கம்

3.கட்டுக்குளம் பற்று - எம்.இராசையா

4.கொட்டியாரம் பற்று - T.சங்கரப்பிள்ளை

மட்டக்களப்பு 1. மண்முனை தெற்கு எருவில் போரதீவுப் பற்று

வேல்முருகு முதலியார் பொன்னுசாமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. மண்முனை வடக்கு

மட்டக்களப்பு நகரம் - சின்னப்பு நமசிவாயம்

3. கரவாகுப்பற்று - எம்.எஸ்.காரியப்பர்

4. சம்மாந்துறைப்பற்று - மீராலெவ்வை முகம்மது அலி

5. அக்கரைப்பற்று - C.C.கனகரெத்தினம்

6. பாணமைப்பற்று - அகமது லெவ்வை சின்ன லெவ்வை[3]

திரு.C.C.கனகரெத்தினம் அவர்களுக்கு முந்திய காலத்தில் திரு.சிந்தாத்துரை வன்னியன், திரு.சோகவன்னியன் என்போர் அக்கரைப்பற்று பிரதேச வன்னிமையாக பதவி வகித்துள்ளனர் என்பதை அறியமுடிகிறது. (தகவல் - வர்ணகுலசிங்கம் மனோகர ராசா - நேர்காணல் 23.12.2019)

இதேவேளை 1929, 30 களில் சின்னப்பு நமசிவாயம் என்பவரை நிந்தவூர்ப்பற்று, கரவாகுப்பற்று என்பனவற்றிற்கு வன்னியனாகவும் 1931 களில் மண்முனை வடக்கு மட்டக்களப்பு நகரம் ஆகியனவற்றின் வன்னியனாகவும் பிரித்தானிய அரசாங்கம் நியமித்துள்ளதையும் அறியமுடிகின்றது. (கலாநிதி சி.பத்மநாதன் - 2002) 1941ம் ஆண்டு வரை மட்டக்களப்பில் (அம்பாரை உள்ளிட்ட) வன்னிமை நிர்வாகமுறை ஆட்சி நிலவியிருந்தது. இதற்குப் பிற்பட்ட காலத்தில் D.R.O என்ற பிரிவுக்காரியாதிகாரி பிரிவுகள் உருவாகின.

1941ம் ஆண்டு மட்டக்களப்பு மாவட்டத்தில் (அம்பாரை உள்ளிட்ட) வன்னிமை என்னும் பதவி முற்றாக நீக்கப்பட்டு இத்தலைமைப்பதவிக்குப் பதிலாக பிரிவுக்காரியாதிகாரி அல்லது இறைவரி உத்தியோகத்தர் (D.R.O) நிர்வாக முறை நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டு நிலவி வந்த காலத்தில் பண்டைய அக்கரைப்பற்று வன்னிமைப்பிரிவானது 1941 ஆம் ஆண்டிலிருந்து அக்கரைப்பற்று பிரிவுக்காரியதிகாரி பிரிவாக

3. இலங்கை தமிழர் தேச வழமைகளும் சமூக வழமைகளும் - பக்.184 கலாநிதி.சி.பத்மநாதன்- 2002



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலவிவரத் தொடங்கியது.[4] இக்காலத்தில் அக்கரைப்பற்று பிரிவுக்காரியாதிகாரி பிரிவில் அக்கரைப்பற்று மத்தி, அக்கரைப்பற்று வடக்கு, அக்கரைப்பற்று தெற்கு என மூன்று உள்ளூராட்சி அலகுகள் அமைந்திருந்தன.

ஆங்கிலேயர் ஆட்சியின் இறுதிக்காலத்தில் (1946ல்) அக்கரைப்பற்று வடக்கு உள்ளூராட்சி மன்றத் தலைவராக A.M.இஸ்மாயில் அவர்களும், அக்கரைப்பற்று தெற்கு உள்ளூராட்சி மன்றத் தலைவராக D.E.தம்பிமுத்து அவர்களும் பதவி வகித்து வந்தனர். இவ்வேளை அரசாங்க சபை அங்கத்தவர்களாக மட்டக்களப்பு தென்பகுதிக்கு திரு.ச.தருமரெட்ணம் அவர்களும் வடதொகுதிக்கு திரு.வி.நல்லையா அவர்களும் பதவி வகித்து வந்தனர்.

1946ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட குடிசனக் கணக்கெடுப்பின் பிரகாரம் மட்டக்களப்பில் 203,186 பேர் வாழ்ந்திருந்ததுடன் இவர்களில் 50.33 வீதமாக தமிழரும் 42.05 வீதமாக முஸ்லீம்களும் 6.10 வீதத்தினராக சிங்கள மக்களும் ஏனையோர் 1.52 சதவீதத்தினராக வாழ்ந்திருந்தனர் என்பதை அறியமுடிகின்றது. இதேவேளை 1946ல் மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழ்ந்திருந்த சிங்கள, முஸ்லீம் மக்கள் பற்றிச் சுருக்கமாக நோக்குதல் அவசியமாகின்றது.

---

4. பிரிவுக்காரியாதிகாரி நிர்வாக முறையானது (D.R.O) இலங்கையில் 1939ல் அறிமுகம் செய்யப்பட்ட போதும் இந்நியமனம் 1946ல் தான் சகல இடங்களுக்கும் நிறைவானது. இவ்வேளை மட்டக்களப்பில் நிலவியிருந்த பிரிவுக்காரியாதிகாரி பிரிவுகள் பின்வருமாறு.

1. மட்டக்களப்பு நகரம்
2. மண்முனை வடக்கு
3. ஏறாவூர் கோறளைப்பற்று
4. மண்முனை எருவில் போரதீவுப் பற்று
5. கரவாகுப்பற்று
6. சம்மாந்துறைப்பற்று
7. அக்கரைப்பற்று
8. பாணமைப்பற்று
9. வேகம் பற்று
10. விந்தனைப்பற்று என்பனவாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காலத்தில் பொத்துவில், லகுகலை, பாணமை, அக்கரைப்பற்று (கருங்கொடித்தீவு) தமண, அம்பாறை, உகன, கோம்பானை, பக்கியெல்ல (பழைய) மகா ஓயா, மன்னம்பிட்டி, முத்துகல் தம்பன்கடவை, திரிகோணமடு, பக்மிட்டி முதலிய இடங்களில் சிங்கள மக்கள் பரவலாக வாழ்ந்திருந்தனர். இவர்கள் தமிழில் சரளமாகப் பேசும் ஆற்றல் உடையவர்களாகவும் வழிபாட்டு முறைகளில் (சமய) இந்துக்களுடன் ஒத்திருந்தனர். இந்துக்களுடன் சேர்ந்து இந்துக் கோயில்களில் நம்பிக்கையுடன் வழிபாடு செய்து வந்தனர்.

உகந்தை, திருக்கோவில், மண்டூர் முருகன் ஆலயங்களுடன் இவர்கள் கொண்டிருந்த நெருக்கமான உறவுகள் இன்றும் நிலவி வருவதைக்காண முடிகின்றது.

அக்காலத்தில் (1946ல்) உள்ளூராட்சித் தலைவர்களாகவிருந்த மகாஓயா J.S.அப்புகாமி, தமண K.M.கலுபண்டா, பாணமை S.T.புஞ்சிமாத்தையா, உகண B.M.முத்து பண்டா போன்ற சமூகத் தலைவர்கள் சிங்கள தமிழ் உறவுமுறை வாரிசுகளாக விளங்கி வந்துள்ளனர். இக்காலத்தில் சிங்கள மக்கள் வேகம், விந்தனை, பாணகைப் பகுதிகளில் பரவலாக வாழ்ந்திருந்தனர்.[5] இதேவேளை மட்டக்களப்பில் முக்கியம் பெறுகின்ற தமிழ்ச் சமூகங்களில் சிங்களக்குடி என ஒரு மரபினர் இன்றும் நிலை பெறவே செய்கின்றனர்.

இவ்வேளை (1946ல்) மட்டக்களப்பில் வாழ்ந்திருந்த முஸ்லீம்கள் சமயத்தைப் பொறுத்தவரை இஸ்லாமியராகவும் சமூக ரீதியில் தமிழராகவும் அதாவது இஸ்லாமியத் தமிழராகவும் வாழ்ந்திருந்தனர்.

---

5. மட்டக்களப்பு வரலாறு - பக்.194,95 வெல்லவூர் கோபால்-2005. 1900-1930 வரையுள்ள காலப்பகுதியிலேயே பழைய நடுகாடுப்பற்று 'வேகம் பற்று' எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர்களைப் போன்று குடிவழிமரபினைப் பின்பற்றியிருந்த இவர்களிடையே பண்பாடு, கலாசாரம் போன்றவற்றிலும் தமிழர்களைப் போன்று தென்னிந்தியப் பண்பாடே நிலவியிருந்தது. இவர்களுக்கு விருதாக தொப்பி அடையாளப்படுத்தப்பட்டிருந்தது. தமிழர்கள் தங்கள் ஆலய வழிபாடுகளில் 'பட்டாணி' மடை வைப்பதும் பள்ளிவாசல் நிகழ்வுகளில் (புனித) தமிழ்பிரமுகர்கள் கலந்து கௌள்வதும் நடைமுறையில் இருந்து வந்தவைகளெனலாம். இவ்வாறான மரபுகள் அக்கரைப்பற்று, சம்மாந்துறை, கரவாகு, ஏறாவூர் பகுதிகளில் நிலவியிருந்ததை அறிய முடிகின்றது.

1947 இல் தான் கல்முனை தொகுதி உருவாக்கப்பட்டது இது கல்முனை, மருதமுனை, சாய்ந்தமருது, அக்கரைப்பற்று, பொத்துவில், சம்மாந்துறை போன்ற பிரதேசங்களை உள்ளடக்கிய பாரிய தொகுதியாக் காணப்பட்டது.[6] அத்துடன் சிங்கள மக்கள் வாழ்ந்திருந்த இன்றைய அம்பாரைத் தொகுதியையும் லகுகலையும் இது உள்ளடக்கியிருந்தது.

இவ்வேளை (1947ல்) வரையப்பட்ட எல்லைக் கோடுகளின் படி விந்தனையின் பெரும்பகுதி ஊவா மாகாணத்துடன் இணைக்கப்பட்டது. பட்டிப்பளை (கல்லோயா) ஆற்றுச் சமவெளியின் ஒரு பகுதியும் மாத்தளை மாவட்டத்துடன் இணைக்கப்படலாயிற்று. (வெல்லவூர் கோபால் - 2005) சுதந்திர இலங்கையில் திரு.வி.நல்லையா, திரு.எஸ்.எதிர்மன்னசிங்கம், எம்.எஸ்.காரியப்பர் ஆகியோர் மட்டக்களப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களாக இருந்தனர். இவ்வேளை மட்டக்களப்பு, பட்டிருப்பு, கல்முனை என மூன்று தொகுதிகள் மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைந்திருந்தன.

---

6. சம்மாந்துறையின் அரசியல் வரலாறு பக்.21, எச்.எம்.அன்வர்அலி 2012



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1925ஆம் ஆண்டு தொடக்கம் 1946 வரையுள்ள காலத்தில் அக்கரைப்பற்று கண்ட மலர்வுகள்

இலங்கையில் ஆங்கிலேயர் ஆட்சியின் இறுதிக்காலமாகிய இக்கால கட்டத்தில் மட்டக்களப்பில் காணி, விவசாய நீர்ப்பாசனம் கல்வி, போக்குவரத்து எனப் பல்துறைகளிலும் துரித வளர்ச்சியுற்று வந்த பிரதேசங்களிலொன்றாக அக்கரைப்பற்று பிரதேசமும் விளங்கியிருந்தது.

அக்காலத்தில் நெற்செய்கை விவசாயத்தைப் பிரதான தொழிலாகக் கொண்டிருந்த இப்பிரதேசத்தில் விவசாயத்துறையில் அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு நிறைவேற்றியதன் மூலம் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியவர் என்ற வகையில் அக்காலத்தில் சட்டசபை உறுப்பினராகவிருந்த திரு.ச.தருமரெட்ணம் அவர்கள் இன்றும் நினைவு கூரப்படுகின்றார். இதே போன்று கல்வி போக்குவரத்து என்பனவற்றின் வளர்ச்சிக்கும் இவர் அக்காலத்தில் ஆற்றி வந்த பணிகள் இன்றும் மக்கள் மனங்களில் நிலைத்து நிற்கின்றன என்றால் மிகையாகாது.

திரு.ச.தருமரெட்ணம் வன்னியனார் அரச சபை உறுப்பினராகவிருந்த காலத்தில் டீ.எஸ்.சேனநாயக்கா அவர்கள் விவசாய அமைச்சராகவிருந்தார். கல்லோயா திட்டம் ஆரம்பமான காலகட்டம். இவ்வேளை (1936) இப்பிரதேசத்தின் (கல்முனை நீர்ப்பாசன பிரதேசம்) நீர்ப்பாசன அபிவிருத்தி, விவசாயம் தொடர்பான குறைநிறைகள் ஆகியனவற்றை நேரடியாக கண்டறிவதற்காக இலங்கையில் பசுமைப் புரட்சியைத் தோற்றுவித்தவர் எனப் புகழ்ந்துரைக்கப்படும் டீ.எஸ்.சேனநாயக்கா அவர்கள் இப்பிரதேசத்திற்கு வருகை தந்தார்.

இவரது விஜயம் பற்றி அக்காலத்தில் திரு.ச.தருமரெட்ணம் வன்னியனாரிடம் கூலியாளர்களில் ஒருவராகப் பணிபுரிந்து வந்த தம்பிலுவில் பெரியவர் திரு.வி.செல்லையா அவர்கள் என்னிடம் குறிப்பிட்டார். அவரிடமிருந்து கேட்டுத் தெரிந்தவற்றை சுருக்கமாகக் குறிப்பிடுவது பொருத்தமானதாகும் எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்முனை நீர்ப்பாசன பிரதேசத்திற்கு வருகை தந்த அமைச்சர் டீ.எஸ்.சேனநாயக்கா அவர்களை சட்ட சபை உறுப்பினர் என்ற வகையில் திரு.ச.தருமரெட்ணம் வன்னியனார் நிந்தவூரில் வைத்து வரவேற்றார். அல்லிமுல்லைச் சந்தியில் வைத்து அளிக்கப்பட்ட இவ்வரவேற்பு நிகழ்வில் கண்டிய நடனமும் இடம்பெற்றது.

இதனைத் தொடர்ந்து தனது நிந்தவூர் பங்களாவுக்கு அழைத்துச் சென்று உபசரித்தார். இதன்பின்னர் அமைச்சர் டீ.எஸ்.சேனநாயக்கா அவர்களை திரு.தருமரெட்ண வன்னியனார் தனது யானை மீது அமர வைத்து விவசாய நிலப்பகுதிகளான வரிப்பத்தான்சேனை, கணையான் குழியூடாகத் தனது கருங்கொடித்தீவு இல்லத்துக்கு அழைத்துச் சென்றார்.

இவ்வேளை யானை மீது அமர்ந்து பவனி வந்த அமைச்சர் திரு.டீ.எஸ்.சேனநாயக்கா அவர்களின் பின்னால் யானை மீதமர்ந்து சிறிது நேரம் அவர் தோள்களிரண்டையும் பற்றியிருந்த அனுபவம் இன்றும் தன் நெஞ்சில் உள்ளதாகக் கூறும் திரு.வி.செல்லையா அவர்கள் தொடர்ந்து மேலும் குறிப்பிடுகையில் கருங்கொடித் தீவிலிருந்து கோளாவில், பனங்காடு கிராமங்களினூடாக சாகாமத்தைச் சென்றடைந்த அமைச்சர் குழுவினருக்கு சாகாமக்குள சேர்க்யூட் பங்களாவில் திரு.ச.தருமரெட்ணம் வன்னியனார் மதியபோசன விருந்தளித்துக் கௌரவித்தார்.

இவ்வேளை அமைச்சருடன் நீர்ப்பாசன இலாகாவில் பணிபுரிந்த ஜனாப் இப்ராகிம் சுப்பிரின்டனும் வந்திருந்தார். சாகாமத்தில் மதியபோசனத்தை முடித்துக் கொண்ட அமைச்சர் திரு.டீ.எஸ்.சேனநாயக்கா இங்கிருந்து கல்முனை சென்றார். இவ்வாறு இவர் குறிப்பிடுகின்றார்.[7] இன்று இவை வரலாற்றுக் குறிப்புக்களாக மிளிர்கின்றன.

---

7. தகவல் திரு.வி.செல்லையா அவர்கள் (1923) வயது 80 நேர்காணல் 2003.08.29 காலை 10.30-11.20 வரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1936ல் திரு.ச.தருமரெட்ணம் (சட்டசபை உறுப்பினர்) அவர்களின் அழைப்பை ஏற்று வருகை தந்திருந்த விவசாய அமைச்சர் டீ.எஸ்.சேனநாயகா அவர்களுக்கு இங்கு நிலவியிருந்த நீர்ப்பாசனம் விவசாயம் தொடர்பான பிரச்சினைகளை நேரடியாகவே காண்பித்ததுடன் இவற்றிற்கான தீர்வுகளையும் முன்வைத்து அவற்றை நிறைவேற்றுவதற்கான வழிவகைகளையும் பெற்றுக் கொண்டார்.

இதனைத் தொடர்ந்து சாகாமக்குள கல்லணை குளக்கட்டு என்பன உயர்த்தப்பட்டு நீர் கொள்ளும் பரப்பளவும் விசாலமாக்கப்பட்டது. அத்துடன் வாய்க்கால்கள், கால்வாய்கள், மதகுகள் ஆகியனவும் நிர்மாணிக்கப்பட்டன.[8] மேலும் றூபஸ் குளமும் இதனைத் தொடர்ந்து அபிவிருத்தி செய்யப்பட்டது.

இதேவேளை 1936ம் ஆண்டு தொடக்கம் 1941 ஆம் ஆண்டு வரை திரு.தருமரெட்ணம் வன்னியனாரின் தென்னந்தோட்டத்தில் பணிபுரிந்து வந்த பெரியவர் திரு.வி.செல்லையா அவர்கள் மேலும் குறிப்பிடுகையில் அக்காலத்தில் திருக்கோவில் தொடக்கம் கல்முனை வரை நிலவியிருந்த தென்னந்தோட்டங்கள் பெரும்பாலும் தமிழர்களுக்கே உரியனவாயிருந்தன. நிந்தவூர் கிராமத்தின் வடக்குப்பகுதியில் முஸ்லீம் குடும்பங்கள் வாழ்ந்திருந்தனர். தெற்கு மற்றும் பிரதான வீதிக்கு மேற்குப் பகுதிகளில் தமிழர்கள் குடியிருந்தனர். ஏராளமான வயல் நிலங்கள் தமிழர்களுக்கு உரியனவாய் இருந்தன.

---

8) திருக்கோவில் பிரதேச இலக்கியவரலாறு - பக்.131,156 நா.நவநாயகமூர்த்தி 2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிந்தவூர் தமிழ்ப் பகுதியிலிருந்து அட்டப்பள்ளம் வரையும் தமிழர்களே வாழ்ந்திருந்தனர். இப்பகுதியிலிருந்த தோட்டங்கள் காணிகள் தமிழர்களுக்குரியனவாகவிருந்தன.[9] பாலமுனை மீனோடைக் கட்டு ஆகிய கிராமங்களை அண்மித்திருந்த தோட்டங்கள், நெற்காணிகள் என்பன தமிழர்களுக்கே உரித்தான வைகளாக நிலவியிருந்தன. அக்காலத்தில் மீனோடைக்கட்டு கிராமம் பனையடிப் பிட்டி என்ற பெயருடன் சிறப்புடன் விளங்கியிருந்தது.

இதனை அண்மித்திருந்த பரந்த தோட்டம் திரு.தெய்வநாயகம் என்பவருக்கு சொந்தமாகவிருந்து வந்தது. இத்தோட்டத்தை இவர் தனது மருமக்களுக்கு (மகள்மாரின் கணவர்கள்) பங்கிட்டுக் கொடுத்திருந்தார். இவர்கள் முறையே திரு.ச.தருமரெட்ணம் வன்னியனார், பாரிஸ்டர் வேலுப்பிள்ளை, திரு.இரட்னையா ஆகியோர் ஆவர். இவ்வேளையில் (1936-1940) மீனோடைக்கட்டிலிருந்த பங்களாவில் பாரிஸ்டர் வேலுப்பிள்ளை உட்பட அனைவரும் வந்து தங்கியிருந்து செல்வதுண்டு.

சிலகாலம் நான் திரு.ச.தருமரெட்ணம் வன்னியனாரின் யானை வண்டியில் வேலை செய்த வேளையில் மீனோடைக்கட்டு தோட்டத்தில் தங்கியிருந்துள்ளேன். அல்லி முல்லை வயலில் நெல் விதைப்புக்காக யானை வண்டியில் நெல் மூடைகளை ஏற்றி எடுத்துச் சென்றுள்ளேன். கருங்கொடித்தீவில் திரு.தருமரெட்ணம் வன்னியனாருக்கு பெரிய தென்னந்தோட்டங்கள் இருந்தன. தென்னம் தோட்டம் ஒன்றில் பங்களா ஒன்றும் அமைந்திருந்தது. இவ்வாறு திரு.வி.செல்லையா அவர்கள் (நேர்காணல் வி.செல்லையா - 2003) குறிப்பிடுகின்றார்.

---

9. இக்காலத்தில் திரு.தெய்வநாயகம் அவர்களின் மகள்மாரின் கணவர்களான (மருமக்கள்) பாரிஸ்டர் வேலுப்பிள்ளை, திரு.ச.தருமரெட்ணம், திரு.இரட்னையா ஆகியோருக்கும் திரு.கே.வி.மார்க்கண்டன் முதலாளிக்கும் மற்றும் கரடியம்மா கிறீன்துரை என்ற ஆங்கிலேயருக்கும் உரித்தான தென்னந்தோட்டங்கள் இருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு.ச.தருமரெட்ணம் வன்னியனார் மட்டக்களப்பு தெற்கு தொகுதி அரசாங்க சபை உறுப்பினராகவிருந்த காலத்தில் வீதிப் போக்குவரத்துக்கும் (வீதி அபிவிருத்தி) காத்திரமான பணிகள் ஆற்றியுள்ளார். குறிப்பாக மரப்பாலங்களை அமைத்து மக்கள் சிரமங்களின்றிப் போக்குவரத்துக்கள் மேற்கொள்ள வழிவகுத்தார். இவரது முயற்சியால் அக்காலத்தில் ஊறணி, காளியோடை நாவலாறு, பட்டியடிப்பிட்டி, காஞ்சிரங்குடா, அறுகம் குடா ஆகிய மரப்பாலங்கள் நிர்மாணிக்கப்பட்டன.

இதற்கு முந்திய காலத்தில் ஊறணி, பட்டியடிப்பிட்டி அறுகம்குடா ஆகியனவற்றில் தோணி, பாதை என்பனவற்றின் ஊடாகவே மக்கள் பயணம் செய்து வந்தனர். இவரது காலத்தில் பனங்காடு மரப்பாலம் (1944ல்) அமைக்கப்பட்டது. இப்பாலம் அமைக்கப்படுவதற்கு முன் தில்லை ஆற்றில் பாதைப் பயணமே நடைபெற்றது.[10] அக்காலத்தில் சிறந்த கொடை வள்ளலாகவும் வாழ்ந்திருந்த திரு.ச.தருமரெட்ணம் வன்னியனார் அவர்கள் அக்கரைப்பற்று பிரதேசத்தில் மட்டுமன்றி இன்றைய அம்பாரை மாவட்டம் முழுவதிலும் வாழ்ந்திருந்த சிங்களவர், தமிழர் முஸ்லீம்கள் என்ற மூவினத்தவர் மத்தியிலும் செல்வாக்கு மிக்கவராக விளங்கியிருந்தார்.

1935ம் ஆண்டில் கடும் பஞ்சம் ஒன்று இப்பிரதேசத்தில் ஏற்பட்டவேளை திரு.ச.தருமரெட்ணம் வன்னியனார் தனது நெற்களஞ்சிய சாலைகளைத் திறந்து அவற்றில் சேமிக்கப்பட்டிருந்த நெல் மூடைகளை தமிழ், முஸ்லீம் மக்களுக்குச் சமமாக பங்கிட்டுக் கொடுத்து மக்களது பஞ்ச நிலையைப் போக்கியுள்ளார். (தகவல் வர்ணகுலசிங்கம் மனோகரராஜா நேர்காணல் 23.12.2019)

---

10. அக்காலத்தில் (1940,41களில்) கோளாவில் கிராமத்தைச் சேர்ந்தவரான திரு.குழந்தைவேல் வண்ணக்கர் என்பவர் தில்லை ஆற்றுப்பாதை போக்குவரத்துக்குப் பொறுப்பானவராக இருந்ததை அறியமுடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1936ம் ஆண்டு தொடக்கம் ஆங்கிலேயர் ஆட்சியின் இறுதிக்காலம் வரை மட்டக்களப்பு தென்பகுதி அரசாங்க சபை உறுப்பினராக திரு.ச.தருமரெட்ண வன்னியனார் இருந்து வந்த காலத்தில் அக்கரைப்பற்று வண்ணிமைப்பிரிவில் தமிழர் செல்வாக்கு உன்னத நிலையை எய்தியிருந்தது. இக்காலத்தில் மேலும் பல அபிவிருத்தித்திட்டங்கள் இவரால் முன்னெடுக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டு வந்துள்ளன. இவற்றில் கல்வித்துறை அபிவிருத்தியில் இவர் மேற்கொண்ட சாதனையாக நிலைத்து நிற்கும் அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை எனலாம். இது வரலாற்றுப் பதிவாக உள்ளது.

அக்காலத்தில் சட்டசபையில் கல்வி மந்திரியாகவிருந்த திரு.C.W.Wகன்னங்கரா அவர்களின் தூர நோக்குச் சிந்தனைக்கு அமைவாக ஆசிரியர்களைப் பயிற்றுவிக்கும் பல்கலைக்கூடங்களாக நாட்டின் பல பாகங்களிலும் அரசினர் ஆசிரியர் கலாசாலைகள் ஆரம்பிக்கப்படவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது. இவ்வேளை தமிழ் மொழிமூல ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அமைக்கப்படவேண்டுமெனவும் அரசாங்க சபை தீர்மானம் மேற்கொண்டது.

இவ்வேளை மட்டக்களப்புத் தெற்குத் தொகுதி சட்டசபை (அரசாங்க சபை) உறுப்பினராகவிருந்த திரு.எஸ்.தர்மரெட்ணம் அவர்கள் மேற்கொண்ட முயற்சியின் பயனாக 1942 யூலை மாதம் அட்டாளைச்சேனையில் ஆசிரியர் கலாசாலை ஆரம்பிக்கப்பட்டது. இதன் அதிபராக மட்டக்களப்பு சிவானந்தா வித்தியாலய ஆசிரியரும் பின்னாள் அமைச்சருமான கல்விமான் திரு.வ.நல்லையா மாஸ்டர் அவர்கள் நியமனம் பெற்றார்.[11]

---

11. மட்டக்களப்பு அரசினர் ஆசிரிய கலாசாலை அதிபர் அவர்களின் அறிக்கை - முதல்வர் வி.லக்ஷ்மி சுந்தரம் (SLEAS) கலைச் செல்வி வைர விழாச் சிறப்பு மலர்-2006/2007



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வேளை இக்கலாசாலையில் தமிழ் போதிக்கவென்று அக்கரைப்பற்று வன்னிமை பிரதேசத்தை சேர்ந்த தம்பிலுவில் கிராமம் பண்டிதர் திரு.க.குஞ்சித்தம்பி பண்டிதர் அவர்கள் நியமனம் பெற்று சிலகாலம் கடமை புரிந்துள்ளார். இவர் மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதர் ஆவார். அக்காலத்தில் இப்பிரதேசக் கல்வி வளர்ச்சிக்கு உழைத்த பலருள் முதன்மையானவர் ஆவார்.

கொடை வள்ளலான திரு.ச.தருமரெட்ணம் வன்னியனார் நன்கொடையாக வழங்கிய தென்னந்தோட்டக் காணியிலேயே மட்/அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அமைக்கப்பட்டது. இது வரலாற்றுப் பதிவாகும். தமிழ் பேசும் சமூகங்களான தமிழ், முஸ்லீம் ஆசிரியர்கள் இன பேதமின்றி ஆசிரியத் தொழிலை அழகுடன் பயின்று வந்த காலத்தில் 1945ம் ஆண்டு ஏற்பட்ட துரதிஸ்டமான சம்பவத்தின் பிரசவமே மட்டக்களப்பு ஆசிரிய பயிற்சிக் கலாசாலையாகும்.

1946ம் ஆண்டு மே மாதம் முதலாம் திகதி மட்டக்களப்பு ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அமைச்சர் திரு.வ.நல்லையா அவர்கள் சட்ட சபையில் விடுத்த வேண்டுகோளுக்கு அமைய நிறுவப்பட்டது. இக் கலாசாலை தொடங்கியவுடனேயே அட்டாளைச் சேனையிலிருந்து பிரிந்து வந்த இருபத்தொன்பது பயிலுனருடனேயே வகுப்புக்கள் ஆரம்பமாகின. பின்னர் 1946ம் ஆண்டு யூலை மாதம் முதலாம் திகதி மேலும் ஐம்பத்திரெண்டு பேர் ஆசிரிய பயிற்சிக்காகச் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். (திரு.வி.லக்ஷ்மிசுந்தரம் - 2006/2007)

இக்காலத்தில் கருங்கொடித்தீவு, கோளாவில், பனங்காடு, தம்பிலுவில், திருக்கோவில் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த ஆசிரிய மாணவர்கள் பலர் இக்கலாசாலையில் பயிற்சி பெற்று வந்துள்ளதை அறியமுடிகின்றது.

அக்காலத்தில் (1945) மட்/அட்டாளைச்சேனை ஆசிரிய பயிற்சிக் கலாசாலை இயங்கி வந்த போது ஏற்பட்ட துரதிஸ்டவசமான சம்பவம் பற்றி நோக்குமிடத்து தமிழ், முஸ்லீம் மாணவரிடையே ஏற்பட்ட உணவு சம்பந்தமான கருத்து முரண்பாடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமய, கலை, கலாசார நடைமுறைப் பிரச்சினைகளும் பெரும் சவாலாக அமைந்து விட்டது. முறுகல் நிலை ஏற்பட்டு இது முரண்பாடாக மாறி இரவோடு இரவாக தமிழ் மாணவர்கள் தாக்குதலுக்குள்ளாக்கப்பட்டு கலாசாலையை விட்டு வெளியேறவேண்டியேற்பட்டதாக அக்கால மாணவர்களான ஆசிரியப் பெருந்தகைகள் கூறுவதைக் கேட்க முடிகின்றது.

பெட்டிபடுக்கையோடு வேதனையில் நெஞ்சு துடிக்க வெளியேறிய மாணவர்கள் அந்த நாளில் தமிழ்த்துறை விரிவுரையாளராகக் கடமையாற்றிய ஆசான் பண்டிதர் செ.பூபாலபிள்ளையவர்களின் தலைமையின் கீழ் கையில் சுமையுடன் நெஞ்சிலே வேதனையையும் சுமந்து கொண்டு இருபத்தொன்பது மாணவர்களும் நடைபவனியாக மட்டக்களப்பை (கல்லடி) வந்து சேர்ந்ததாகவும் அறியமுடிகின்றது.[12]

இக்காலத்தில் (1945,46கள்) அட்டாளைச்சேனை பிரதேசம் பாலமுனை கிராமத்தில் சுமார் இருபத்தைந்து தமிழ்க்குடும்பங்கள் வாழ்ந்திருந்தனர். பூர்விகக் குடியினரான இவர்களுடன் பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதிக்காலத்தில் குறிப்பாக கிபி1750க்குப் பின் இங்கு வந்து குடியேறியிருந்த முஸ்லீம் மக்களின் சந்ததியினரும் தமிழ் மக்களுடன் இணைந்து ஒற்றுமையாக வாழ்ந்திருந்தனர். பழந்தமிழ்க் கிராமங்களில் ஒன்றான இங்கு பிள்ளையார் ஆலயமொன்றும் அமைந்திருந்தது.

அக்காலத்தில் இவ்வூரில் அமைந்திருந்த மிஷனரி பாடசாலையில் தமிழ், முஸ்லீம் பிள்ளைகள் கல்வி கற்று வந்ததுடன் இப்பாடசாலையில் கருங்கொடித்தீவைச் சேர்ந்த தமிழ் ஆசிரியர்களே கடமைபுரிந்து வந்தனர். திரு.வன்னமணி ஆசிரியர் கடமை புரிந்து வந்தார். இவர் நீண்டகாலம் இப்பாடசாலையில் பணிபுரிந்துள்ளார்.

---

12) வைரவிழாக்காணும் கலாசாலை - கட்டுரை கி.பவளநேசன் 1ம் வருடம் 'கலைச்செல்வி' வைரவிழாச் சிறப்பு மலர் -2006/07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வூரைச் சூழவுள்ள பகுதியில் தென்னந்தோட்டங்கள் நிலவியிருந்தன. திரு.தெய்வநாயகம் முதலாளியின் மருமக்களான பாரிஸ்டர் வேலுப்பிள்ளை, திரு.ச.தருமரெட்ணம் ஐயா என்போரின் உடமைகளாக இத்தோட்டங்கள் இருந்து வந்தன. பாலமுனை பகுதியில் ஏராளமான நெல்வயல்களும் இவர்களுக்கு உடமைகளாகவிருந்து வந்ததுடன் பங்களாவொன்றும் இங்கு அமைந்திருந்தது.

மேலும் இக்கிராமத்தில் திரு.K.V.மார்க்கண்டன் என்ற மார்க்கண்டு முதலாளிக்குச் சொந்தமாக கடற்கரையை அண்டியதாக தென்னம் தோட்டம் இருந்தது. இவ்வேளை இவருக்கு நிந்தவூர் தொடக்கம் பொத்துவில் வரையும் தென்னந்தோட்டங்கள் ஆங்காங்கே அமைந்திருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது. பாலமுனை கிராமத்தில் வாழ்ந்திருந்த தமிழ் மக்களின் நம்பிக்கையுள்ள தெய்வமாக நிந்தவூர் மடத்தடி மீனாட்சியம்மன் விளங்கியிருந்தார்.

பாலமுனையின் தெற்குப் பக்கமாக அமைந்திருந்த 'மீனோடைக்கட்டு' கிராமம் பல் வளங்களும் நிரம்பப் பெற்றதாக விளங்கியிருந்தது. அக்காலத்தில் (1945,46களில்) தமிழ்ச் சைவர்களே தனிப் பெரும்பான்மையினராக இக்கிராமத்தில் வாழ்ந்திருந்தனர். இங்கு கலவன் பாடசாலையொன்றும் நிலவியிருந்தது. பிள்ளையார் ஆலயமொன்றும் செழிப்புடன் (விக்கிரகம், புனிதப் பொருட்கள் உள்ளிட்ட) நிலவி வந்தது. அக்காலத்தில் இக்கிராமம் பனையடிப்பிட்டி என்ற பெயருடனும் விளங்கியிருந்தது.

இதனை அண்மித்த கிராமமான அட்டாளைச்சேனையில் முஸ்லீம் மக்களுடன் தமிழ்க் குடும்பங்களும் வாழ்ந்திருந்தனர். குறிப்பாக இக்குடியிருப்பானது (தமிழ்) மீனோடைக்கட்டு கிராமத்தின் தென்மேற்காக அமைந்திருந்தது. இக்காலத்தில் அட்டாளைச் சேனையிலும் பாலமுனையிலும் வாழ்ந்திருந்த மக்கள் இஸ்லாமியத் தமிழர்களாக தமிழ்ச்சைவர்களாக வாழ்ந்திருந்த போதும் மொழியில் ஓரித்தவனராகவே வாழ்ந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதாவது மொழிவழியில் தமிழ்பேசும் ஓரினத்தவராகவே இவர்கள் வாழ்ந்திருந்தனர்.[13] இதேவேளை தாய்வழியில் தமிழர்களின் சந்ததியினரான இவர்கள் அக்காலத்தில் (1900-45) தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கும் பங்களிப்பை நல்கி வந்துள்ளனர். இதனை இலக்கியச் சான்றுகள் உணர்த்தும்.

இக்காலத்தில் அட்டாளைச்சேனையில் ஒரு ஆசிரிய பயிற்சிக் கலாசாலை நிலவிருந்தது. இதற்கான நிலத்தை திரு.ச.தரும ரெட்ணம் வன்னியனார் நன்கொடையாக வழங்கியிருந்தார் என்பதை முன்னர் குறிப்பிட்டுள்ளேன். இதேவேளை திரு.இரட்னையா செனட்டர் மாணிக்கம் என்போருக்கும் தச்சாவடிக்கு அண்மையில் கடற்கரையை ஓட்டியதாக தென்னந்தோட்டங்கள் இருந்தன.

இன்றைய காலகட்டத்தில் அக்கரைப்பற்று பிராந்தியம் கல்வி சுகாதாரம், போக்குவரத்து, விவசாயம், கைத்தொழில் மற்றும் பொருளாதாரம் ஆகிய துறைகளில் அபிவிருத்தியடைந்து காணப்பட்டாலும் இத்தகைய வளர்ச்சிக்கான வலுவான அடித்தளத்தை உருவாக்கிய பெருமகனாக திரு.ச.தர்மரெட்ணம் வன்னியனார் இருந்துள்ளார். அரசாங்க சபை உறுப்பினர் ஆக (Member of State Council) மட்டக்களப்பு தெற்குப் பிராந்தியத்திற்கு அவராற்றிய சேவை அளப்பரியதாகும். இவர் இப்பிரதேசத்தின் விவசாயம், காணிகள் தொடர்பான நிறைவேற்றுக்குழுவின் முக்கியபிரமுகராக விளங்கி நெற்செய்கை விருத்திக்கு மிகத் தீவிர கவனத்தைச் செலுத்தியமை பற்றிய ஹன்சார்ட் அறிக்கை இங்கு குறிப்பிடப்படல் வேண்டும். 1952ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 17ம் திகதி திரு.ச.தர்மரெட்னம் வன்னியனார் காலமான வேளையில் கௌரவ.சேர்.ஜோன் கொத்தலாவல அவர்கள் இவ்விடயத்தை பிரதி சபாநாயகரூடாக பாராளுமன்றத்தில் இரங்கல் உரையாகச் சமர்ப்பித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேவேளை 25.09.1952ல் சேர்.ஜோன்.கொத்தலாவல அவர்களைத் தொடர்ந்து திரு.S.W.R.D. பண்டாரநாயக்கா அவர்களின் இரங்கலுரையின் போது திரு.ச.தர்மரெட்ணம் அவர்கள் கிழக்கு மாகாணத்தின் பிரச்சினைகள் தொடர்பாக சிறந்த அறிவைக் கொண்டிருந்ததோடு குறிப்பாக விவசாயம் தொடர்பிலான விடயங்களை சபையின் கவனத்திற்கு கொண்டு வந்தார் என்றும் குறிப்பிட்டார். கல்லோயா அபிவிருத்தித் திட்டத்தின் அமைக்கப்பட்ட இக்கினியாகல் திட்டத்தில் அன்றைய பிரதமர்.D.S.சேனநாயக்க அவர்களுடன் திரு.ச.தர்மரெட்ணம் அவர்கள் மிக நெருங்கிச் செயற்பட்டு முன்னோடியாகத் திகழ்ந்தமை பற்றியும் திரு.S.W.R.D. பண்டாரநாயக்கா சபையில் தெரிவித்தார்.

இவ்விடயங்கள் ஊடாக கிழக்குமாகாண அபிவிருத்திப் பணிகளில் திரு.ச.தர்மரெட்ணம் வன்னியனார் அவர்களது முக்கியத்துவம் தெளிவாகப் புலப்படுகின்றது. அவரது நிரந்தர வதிவிடம் அக்கரைப்பற்றாக இருந்ததால் அக்கரைப்பற்று வரலாற்றில் அழியாத இடம்பெற்ற அரசியல் பிரமுகராக மதிக்கப்படுகின்றார்.

---

13. தகவல். 'கர்மயோகி' செல்லத்துரை சோமசுந்தரம் (வயது 88) நற்பிட்டிமுனை சேனைக்குடியிருப்பு. நேர்காணல்.27.01.2019



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அக்கரைப்பற்று வன்னிமைப்பிரதேசம்

### சமூக, சமய, கல்வி, கலை, இலக்கியம் (1925 - 1946 வரை)

1925ம் ஆண்டு தொடக்கம் 1946ம் ஆண்டு வரையுள்ள காலத்தில் அக்கரைப்பற்று வடக்கு, அக்கரைப்பற்று மத்தி அக்கரைப்பற்று தெற்கு உள்ளூராட்சி பிரிவுகளை உள்ளடக்கி யிருந்த பண்டைய அக்கரைப்பற்று வன்னிமைப் பிரதேச சமூக சமய, கல்வி, கலை, இலக்கிய மற்றும் போக்குவரத்து, நீர்ப்பாசன நிலை பற்றி சுருக்கமாகக் குறிப்பிடுவது பொருத்தமானதாகும்.

இக்காலகட்ட அக்கரைப்பற்று பிரதேசக் கல்வி நிலை பற்றி நோக்குமிடத்து 1925,26களில் கிறிஸ்தவம் சார்ந்த மிஷனரிப் பாடசாலைகளே இப்பிரதேசக் கிராமங்களில் நிலவியிருந்தன. இப்பாடசாலைகளில் கல்வியுடன் கிறிஸ்தவ சமயமும் போதிக்கப்பட்டு வந்தது. இக்காலத்தில் கிறிஸ்தவ மாணவர்கள் கல்வியில் பெரும் முன்னேற்றம் கண்டு வந்ததுடன் உயர் கல்வியினையும் பெற்று அரச துறைகளில் வேலை வாய்ப்புக்களையும் சிரமமின்றிப் பெற்று வந்தனர். மதமாற்றமும் இடம்பெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு மிஷனரிமாரின் கிறிஸ்தவ சமயம் சார்ந்த கல்வியே முக்கியத்துவம் பெற்றிருந்த அக்காலத்தில் அக்கரைப்பற்று பிரதேசத்தில் ஒரு முழுமையான இந்து பாடசாலை என்று எதுவும் நிலவியிருக்கவில்லை. இவ்வேளையிலேயே சுவாமி விபுலானந்த அடிகளால் மட்டக்களப்பின் முதலாவது சைவக்கல்லூரியான சிவாநந்தா வித்தியாலயம் நிர்மாணிப்பதற்காக 1925ல் அடிக்கல் நடப்பட்டது.

சைவசமய மாணவர்களின் கல்வி, சமய கலாசாரங்களுக்கெனத் தனியானதொரு கல்லூரி இல்லாதிருந்த பெருங்குறையைப் போக்க எண்ணிய விபுலானந்த அடிகளார் 1929ம் ஆண்டு வைகாசி மாதம் மட்டக்களப்பு கல்லடி சிவாநந்த வித்தியாலயத்தை ஆரம்பித்தவுடன் சிலகாலம் இக்கல்லூரியில் தலைமை ஆசிரியராகவிருந்து சகல துறைகளிலும் இக்கல்லூரியை வளர்ச்சியுற வழிவகுத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமய வாழ்வு கனிந்து, தமிழ் மணம் கமழ்ந்து இவ்வித்தியாலயக் குருகுல மாணவர் வளரலாயினர். தமிழ் ஆங்கிலம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களையெல்லாம் விபுலானந்தரே சிலகாலம் கற்பித்து வந்தார்.[14] இவரைத் தொடர்ந்து இக்கல்லூரியின் தலைமைப் பொறுப்பில் சுவாமி நடராஜாநந்தர் இருந்து வந்தார்.

1929ல் மட்டக்களப்பில் சிவானந்தாகல்லூரி ஆரம்பமானதைத் தொடர்ந்து இக் கல்லூரியில் தமிழ் மாணவர்கள் மட்டுமன்றி கிழக்கு மாகாண முஸ்லீம் மாணவர்களும் கல்வி கற்று வந்தனர். அக்காலத்தில் இக்கல்லூரியில் உயர்கல்வி பயின்ற தமிழ், முஸ்லீம் மாணவர்கள் பிற்காலத்தில் சமயம், இலக்கியம், ஆன்மீகம் மருத்துவம் போன்ற துறைகளில் பெரும் புகழ் பெற்றிருந்ததுடன் மக்கள் மனங்களையும் தங்கள் தன்னலங்கருதாத் தொண்டுகள் மூலம் ஈர்த்திருந்தனர். அரசியலிலும் சிலர் புகழ் பெற்றிருந்தனர்.[15]

மட்டக்களப்பில் 1929ல் சிவானந்தா கல்லூரி ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் அக்கரைப்பற்று வன்னிமைப் பிரதேசத்தில் குறிப்பாக கருங்கொடித்தீவு, தம்பிலுவில், திருக்கோவில் கிராமங்களில் வாழ்ந்திருந்த தமிழ்ச் சைவரிடையே ஏழை, நடுத்தர வர்க்கத்தினர் செல்வந்தர் என்ற பேதங்களின்றிக் கல்வி என்ற போர்வையில் மதமாற்றம் இடம்பெற்று வந்தது. மிஷனரிமாரால் இது இடம்பெற்று வந்தது. 1932ல் கருங்கொடித்தீவு நகரில் றோமன் கத்தோலிக்க பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. இதில் தமிழ், முஸ்லீம் மாணவர்கள் கல்வி கற்று வந்தனர். இதனைத் தொடர்ந்து பனங்காடு கிராமத்தில் 1936ம் ஆண்டில் கலவன் பாடசாலை ஒன்று அரசினரால் ஆரம்பிக்கப்பட்டது. இப்பாடசாலை இன்று பாசுபதேஸ்வரர் வித்தியாலயமாக விளங்கி வருகின்றது.

---

14. மட்டக்களப்பு தமிழகம் - பக்.312 பண்டிதர் வி.சி.கந்தையா - 1964
15. 1929ல் சிவானந்த வித்தியாலயம் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் கிழக்கு மாகாணத்தில் முஸ்லீம் பாடசாலை என்று எதுவும் இருக்கவில்லை. (அம்பாரை மாவட்ட முஸ்லீம்கள்.பக்.26-பதிப்பாசிரியர் எஸ்.எச்.எம்.ஜெமீல்-1997)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காலத்தில் அக்கரைப்பற்று வன்னிமைப் பிரதேசத்தில் வாழ்ந்திருந்த சைவப் பிரமுகர்களின் ஆதரவுடன் தமிழ் மாணவர்கள் மட்டக்களப்பு சிவானந்தா கல்லூரியில் சேர்ந்து உயர் கல்வி பெற்று வரத் தொடங்கினார். இதற்குப் பக்கப் பலமாக சுவாமி விபுலானந்த அடிகளார் இருந்து வந்தார். காரைதீவு சித்தானைக்குட்டி சுவாமி இப்பிரதேசக் கிராமங்களுக்கெல்லாம் கால் நடையாகச் சென்று தனது சித்தாடல்கள் மூலமாக சைவமறுமலர்ச்சியை ஏற்படுத்தி வந்தார். இவ்வாறானதொரு செழுமை மிக்க தமிழ்ச் சூழலில் அக்கரைப்பற்று பிரதேச தமிழ் மாணவர்களின் உயர் கல்விக்கு காத்திரமான பங்களிப்பை மட்டக்களப்பு சிவானந்தா வித்தியாலயம் தொடர்ந்து வழங்கி வந்துள்ளது.[16]

1942ல் கருங்கொடித்தீவு நகரில் வாழ்ந்திருந்த சிங்கள மக்களின் பிள்ளைகளின் கல்வித் தேவை கருதி அரசினர் சிங்கள கலவன் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. 1944ம் ஆண்டு இராமகிருஷ்ணமிஷன் வித்தியாலயம் தொடங்கப்பட்டது. கருங்கொடித்தீவு நகரில் வாழ்ந்திருந்த சைவப் பிரமுகர்களின் அயராத முயற்சியினால் சைவத்தையும், சைவப்பாரம்பரியம், கலாசாரம், கலைகள் ஆகியனவற்றைப் பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கில் இப்பாடசாலை தோற்றுவிக்கப்பட்டது.

இப்பாடசாலையின் முதல் அதிபராகவிருந்த அமரர் திரு.நடராஜா அவர்கள் கருங்கொடித்தீவு, கோளாவில், பனங்காடு ஆலையடிவேம்பு ஆகிய கிராமங்களை உள்ளடக்கிய பிரதேசத்தின் சமய, கல்வி, கலாசார எழுச்சிக்கு வித்திட்ட பிதாமகன் ஆவார். 1946ம் ஆண்டில் அக்கரைப்பற்று கனிஷ்ட பாடசாலை (அரசினர் ஆங்கில) தொடங்கப்பட்டது. இன்றைய அக்கரைப்பற்று தேசிய கல்லூரி இதுவாகும்.

---

16. இக்கல்லூரியில் உயர்கல்வியினைப் பெற்ற இப்பிரதேச மாணவர்களில் சிலர் பிற்காலத்தில் பல்துறைகளில் பதவிகள் வகித்து வந்ததுடன் ஒழுக்க சீலர்களாகவும், சமூக ஆர்வலர்களாகவும், யோகிகளாகவும் விளங்கியிருந்தனர். இதேவேளை ஒரு சிலர் அரசியலிலும் ஈடுபட்டு மக்களுக்கு சேவையாற்றி வந்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதேவேளை அக்கரைப்பற்று பிரதேசம் தம்பிலுவில் இரண்டாம் பிரிவில் 1878ல் தோற்றம் பெற்று நிலவி வந்த மிஷனரிப் பாடசாலை 15.01.1915 லிருந்து அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை என்ற பெயரில் இயங்கத் தொடங்கியிருந்தது. இதே போன்று தம்பிலுவில் முதலாம் பிரிவில் 1880ல் ஆங்கிலேயே மிசனரியால் ஆரம்பிக்கப்பட்ட பெண்களுக்கான பாடசாலை 1925ல் குருகுலக் கல்வி முறையில் தொடரப்பட்டு 1937ல் பெண்குழந்தைகளுக்கான பாடசாலையாக இயங்கி வந்தது. 1946ல் சைவப் பிரமுகர்களின் அயராத முயற்சியால் சைவப் பாடசாலையொன்று தம்பிலுவில் இரண்டாம் பிரிவில் ஆரம்பிக்கப்பட்டது.[17]

அக்காலத்தில் இப்பிரதேச மக்களின் போக்குவரத்து வசதிகள் பற்றி நோக்குமிடத்து 1920ம் ஆண்டிலிருந்து அக்கரைப்பற்றில் பஸ்கள் ஓடத் தொடங்கியிருந்தன. அக்காலத்தில் (1920,21கள்) மட்டக்களப்பிலிருந்து அக்கரைப்பற்று வரை ஒரு நாளில் ஒருமுறையே பிரயாணம் நடந்து வந்தது. அத்துடன் அக்கரைப்பற்றிலிருந்து பொத்துவில் வரை பஸ்கள் ஓடத் தொடங்கியிருந்தன. இதேவேளை வீதிகளில் அமைந்திருந்த ஆறுகள், நீர்நிலைகள் என்பனவற்றைக் கடப்பதற்கு தோணிகள், பாதைகள் பயன்படுத்தப்பட்டு வந்தன.

பாலங்கள் (மரப்பாலம்) அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து கம்மல்துரை, சொலுக்கார், சைமன், அப்புகாமி ஆகியோருக்குச் சொந்தமான பஸ்கள் போக்குவரத்து சேவையில் ஈடுபட்டு வந்தன. இவற்றுடன் சிறிய டிரக்குகளும், சிறிய லொறிகளும் பிரயாணிகளையும், பொருட்களையும் ஏற்றிச் செல்லப் பயன்பட்டு வந்தன.

---

17. இப்பாடசாலையே பின்னாளில் தம்பிலுவில் மேற்கு பாடசாலை எனப் பெயர் மாற்றம் பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவசாயத்தையே பிரதான தொழிலாகக் கொண்டிருந்த அக்காலத்தில் (1925-46) இப்பிரதேசத்தில் வாழ்ந்திருந்த மக்கள் நெற்செய்கையில் பெருமளவில் ஈடுபட்டு வந்தனர். சாகாமம் ஊரக்கை, பட்டிமேடு, காஞ்சிரங்குடா, சேனைக்காடு கோரைக்களப்பு, ஒடியவெளி, கிறவல்குழி மற்றும் தீகவாபி ஆகிய இடங்களில் நெல்வயல்கள் நிலவியிருந்தன. அக்கரைப்பற்று பிரதேச பிரதான நீர்ப்பாசனக் குளங்களாக சாகாமம், இலுக்குச்சேனை றூபஸ், இறக்காமம் ஆகியன விளங்கியிருந்தன.

இக்காலத்தில் பழந்தமிழ்க் கிராமங்களான கருங்கொடித்தீவு, தம்பிலுவில், தம்பட்டை, திருக்கோவில் கோளாவில், பனங்காடு மற்றும் மீனோடைக்கட்டு, பாலமுனை ஆகிய இடங்களில் சைவாலயங்கள் சிறப்புடன் விளங்கியிருந்தன. வரலாற்றுச் சிறப்பினைக் கொண்ட திருக்கோவில் சித்திர வேலாயுதர் ஆலயம், தம்பிலுவில் கண்ணகையம்மன் ஆலயம், கருங்கொடித்தீவு சித்தி விநாயகர் ஆலயம், கோளாவில் பிள்ளையார் ஆலயம் முத்துமாரியம்மன் ஆலயம், பாடல் பெற்ற பட்டிநகர் கண்ணகை யம்மன் ஆலயம் ஆகியன சிறப்புடன் விளங்கியிருந்தன.

மேலும் கருங்கொடிதீவு பத்திரகாளியம்மன் ஆலயம் மருதயடி மாணிக்கப்பிள்ளையார் ஆலயம், மீனோடைக்கட்டு பிள்ளையார் ஆலயம், பாலமுனை பிள்ளையார் ஆலயம் என்பனவும் பிரபல்யம் பெற்றிருந்தன. திறந்த வெளிக்கோயில்களாக பனங்காடு ஐயனார் ஆலயம், சாகாமகுளம் பிள்ளையார் ஆலயம், தம்பிலுவில் களுதாவளைப் பிள்ளையார் ஆலயம், சங்கமன்கண்டி காட்டுப்பிள்ளையார் ஆலயம், கவடாப்பிட்டி பிள்ளையார் ஆலயம் என்பன நிலவியிருந்தன.

இக்காலத்தில் கருங்கொடித்தீவில் அன்னை ஆரோக்கியமாதா ஆலயம், மெதடிஸ்த ஆலயம் என்பன சிறப்புடன் விளங்கியிருந்தன. இவ்வாலயங்கள் கருங்கொடித்தீவில் மட்டுமன்றி அக்காலத்தில் அக்கரைப்பற்று பிரதேசத்தில் வாழ்ந்திருந்த கத்தோலிக்க, கிறிஸ்தவ தமிழர்களின் கல்வித்துறை சார்ந்த செயற்பாடுகளில் முக்கியத்துவம் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. இவைதவிர திருக்கோவில் கிராமத்தில் மெதடிஸ்த மிஷன் ஆலயமொன்றும் கத்தோலிக்க ஆலயமொன்றும் நிலவியிருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருங்கொடித்தீவு நகரில் வாழ்ந்திருந்த சிங்கள மக்களின் வழிபாட்டுத் தலமாக விஜயராம விகாரை நிலவி வந்தது. இப்பிரதேசத்தில் வாழ்ந்திருந்த தமிழ்ச் சைவரிடையேயும் இத்தலம் செல்வாக்குப் பெற்றிருந்ததுடன் இங்கு இடம்பெற்று வந்த வருடாந்த உற்சவங்களில் தமிழ் மக்கள் பக்தியுடன் கலந்து சிறப்பித்தும் வந்தனர். இங்கு முருகன் ஆலயமும் அமைந்திருந்தமை சிறப்பம்சமாகும்.

கருங்கொடித்தீவு, அட்டாளைச்சேனை, பாலமுனை, ஒலுவில் ஆகிய இடங்களில் முஸ்லீம் மக்களின் வழிபாட்டுத் தலங்களான பள்ளிவாசல்கள் அமைந்திருந்தன. இப்பள்ளிவாசல்களில் வருடாந்தம் இடம்பெற்று வந்த கந்தூரி, கொடியேற்றம் ஆகிய சமய நிகழ்வுகளில் தமிழ் மக்களும் கலந்து சிறப்பித்து வந்ததுடன் நேர்த்திக் கடன்களையும் நிறைவேற்றி வந்தனர். இதேபோன்று முஸ்லீம்களும் சைவாலயங்களில் இடம்பெற்று வந்த சமய நிகழ்வுகள் (உற்சவம்) கலை நிகழ்வுகள் என்பனவற்றில் கலந்து கண்டுகளித்து சிறப்பித்து வந்ததுடன் சிலர் அம்மன் ஆலயங்களில் நேர்த்திகளையும் அளித்து வந்தமை நினைவு கூரத்தக்கன.

அக்காலத்தில் அக்கரைப்பற்று வன்னிமைப்பிரிவில் அகக்ரைப்பற்று ஜும் ஆப் பள்ளிவாசல் (கருங்கொடிதீவு பட்டினப் பள்ளிவாசல்) பெரிய பள்ளிவாசல், புதுப்பள்ளிவாசல் (ஜும் ஆப் பள்ளிவாசல்) ஒலுவில் ஜும் ஆப் பள்ளிவாசல், பாலமுனை ஜும் ஆப் பள்ளிவாசல், அட்டாளைச்சேனை ஜும் ஆப் பள்ளிவாசல் என்பன சிறப்புடன் நிலவியிருந்தன. பள்ளிவாசல்களில் கந்தூரி கொடி ஏற்றம், வாணவேடிக்கை என்பன இடம்பெற்று வந்தன. பள்ளிக்குடியிருப்பில் 1939ம் ஆண்டிலிருந்து பள்ளிவாசலொன்று தோற்றம் பெற்று நிலவி வந்தது (பள்ளிக்குடியிருப்பு ஜும் ஆப் பள்ளிவாசல்) 1942ல் பட்டியடிப்பிட்டியில் ஓலைக்கு குடிசையாக பட்டியடிப்பிட்டி ஜும் ஆப் பள்ளிவாசல் நிலவத் தொடங்கியிருந்தது. (அம்பாரை மாவட்ட முஸ்லீம்கள்.பக்.119-123)

இக்காலத்தில் அக்கரைப்பற்று வன்னிமைப்பிரதேசத்தில் செழிப்புடன் நிலவியிருந்த கலை வடிவங்கள் பற்றி குறிப்பிடமிடத்து பாரம்பரியக் கலைகளான நாட்டுக்கூத்து, வசந்தன், காவடி ஆட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும்மி, கரகாட்டம் ஆகியனவற்றுடன் 1924களில் இப்பிரதேசத்தில் அறிமுகமாகி சிறப்புடன் நிலவி வந்த இசை நாடகம் என்ற கலைவடிவமும் நிலவி வந்தது. நாட்டுக கூத்துக்களை இயற்றவல்ல புலவர்களும் பழக்கவல்ல அண்ணாவிமாரும் கூத்தாடவல்ல ஆட்டக் காரர்களும் இப்பிரதேசத்தில் வாழ்ந்திருந்தனர்.

கருங்கொடித்தீவு, கோளாவில், தம்பிலுவில், திருக்கோவில் தம்பட்டை ஆகிய பழந்தமிழ் கிராமங்கள் பாரம்பரியக் கலைகளின் மையங்களாகவிருந்தன. இக்காலத்தில் தமிழ்க் கிராமங்களில் ஆடப்பட்டு வந்த சில கூத்துக்கள், இசை நாடகங்கள் முஸ்லீம் இரசிகர்களின் வேண்டுகோளுக்கு இணங்க அட்டாளைச்சேனை பாலமுனை மற்றும் நிந்தவூரிலும் ஆடப்பட்டு மேடையேற்றப்பட்டும் வந்துள்ளதை அறியமுடிகின்றது.

முஸ்லீம் மக்களிடையே பொல்லடி (கம்பு) என்ற ஆடல் கலை வடிவம் சிறப்புடன் மிளிர்ந்து வந்ததுடன் இதனை அடிப்படையாகக் கொண்ட இலக்கியங்களும் உருவாகி நிலவி வந்தன. 1942ம் ஆண்டு வரை வேடங்கள் புனைந்து நாடகங்களும் இடம்பெற்று வந்ததுடன் வாள் வீச்சுக் கலையும் பிரபல்யம் பெற்றிருந்தது.

அக்காலத்தில் இப்பிரதேச தமிழ் முஸ்லீம் மக்களிடையே உருவாகி நிலவி வந்த இலக்கியங்கள் பற்றி குறிப்பிடுமிடத்து இரு சமூகத்தினர் மத்தியிலும் நாட்டார் இலக்கிய மரபே நிலவி யிருந்தது. இலக்கியங்களில், வாழ்வியல், சமயம், நம்பிக்கை ஆகியன வேறுபட்டிருந்த போதும் மட்டக்களப்பு தமிழ் நாட்டார் இலக்கிய மரபையொட்டியதாக இப்பிரதேச அக்கால இலக்கியங்கள் உருவாகி மிளிர்ந்து வந்ததை இன்று காணக்கிடைக்கும் ஏட்டுச்சுவடுகளிலிருந்து பதிவு பெற்ற இலக்கியங்களும் வாய்மொழி இலக்கியங்களும் உணர்த்தும்.

பண்டுதொட்டு தமிழ் மக்களிடையே நிலவியிருந்த ஊஞ்சல் பாடல், பள்ளுப்பாட்டு, காவியம், கவி, சிந்து போன்ற நாட்டார் இலக்கிய வடிவங்கள் இக்காலத்தில் முஸ்லீம் மக்களிடையேயும் நிலவியிருந்தன. இவற்றில் விருத்தம், தரு போன்ற பாவனைக்குள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொல்லடிப்பாடல்களில் மட்டுமன்றி சிற்றிலக்கியங்களிலும் நிலவியிருந்தன.

அட்டாளைச்சேனை அப்துல்ரஹ்மான் ஆலிம் புலவர் பாடிய 'மணமங்களமாலை' என்ற காவியம் அறுசீர் விருத்தங்களாலும் சிந்துகளாலும் இயற்றப்பட்டுள்ளளது. வாய்மொழியாக நிலவி வந்த வயல் பாடல்கள், கவிகள் மண்வாசனையைப் பிரதிபலித்தன.

அக்காலத்தில் (1900-1946) அக்கரைப்பற்று பிரதேசத்தில் வாழ்ந்திருந்த முஸ்லீம் புலவர்களான ஷேகுமதாறு புலவர் முகமதுறாபிபுலவர், அப்துல் ரஹ்மான் புலவர், ஹாசிம் ஆலிம் புலவர், அப்துல் றஷித் ஆலிம் புலவர், ஹஸன் புலவர் உமறுலெவ்வை ஆலிம் புலவர், யூசுப்லெவ்வை ஆலிம் புலவர் மீராசாகிப்புலவர், அப்துல்ஸமது மௌலானாப் புலவர் என்போரும் மற்றும் ஒலுவில் கிராமத்தைச் சேர்ந்த 'வெள்ளக்காவியம்' 'மழைக்காவியம்' பாடிய முகியித்தின் பிச்சைப் புலவர், அ.ம.ஹக்கீம் யூசுப் புலவர், செய்யது அகமது ஆலிம் புலவர், அட்டாளைச்சேனை செய்யிது இப்ராகிம் மௌலானா என்போரும் அக்காலத்தில் அக்கரைப்பற்று பிரதேசத்தில் தமிழ்மணம் பரப்பிவந்த புலவர்களில் சிலராவர்.[18] இதேவேளை அக்காலத்தில் குறிப்பாக 1925ம் ஆண்டு தொடக்கம் 1946ம் ஆண்டு வரையுள்ள காலத்தில் இப்பிரதேசத்தில் வாழ்ந்திருந்த தமிழ்ப் புலவர்கள் பற்றி அறியமுடிகின்றது.

அக்காலத்தில் இப்பிரதேசத்தில் வாழ்ந்திருந்த பெரும் புலவர்களாக த.உ.வில்லியம்பிள்ளை, சிவத்திரு நல்லதம்பி குருக்கள், பண்டிதர்.க.குஞ்சித்தம்பி, திரு.க.சற்குணம் செட்டியார் திரு.மு.இராசையா, திரு.வ.இராசையா, திரு.பெ.கந்தையா சங்கீத பூஷணம், சி.கணபதிப்பிள்ளை, கந்தையா ஓடாவியார் தாண்டவர் வேலர் 'உதயகவி' கவிஞர் பூபாலபிள்ளை என்போர் விளங்கியிருந்தனர்.[19]

---

18. அம்பாறை மாவட்ட முஸ்லீம்கள் - பக்.287-89 பதிப்பாசிரியர் எஸ்.எச்.எம்.ஜெமீல் - 1997

19. இக்காலகட்டத்தில் அக்கரைப்பற்று தென்பிரதேசம் தம்பட்டை,தம்பிலுவில், திருக்கோவில் கிராமங்களில் வாழ்ந்திருந்த புலவர்கள் பற்றி 'திருக்கோவில் பிரதேச இலக்கிய வரலாறு' நூல் (பக்.134-151) விபரமாக குறிப்பிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களுடன் திரு.அ.கணபதிப்பிள்ளை, க.வை.சரவணமுத்து (கூத்து இலக்கியம்) திரு.வேலுப்பிள்ளை, திரு.க.தம்பியப்பா, (வசந்தன் பாடல்) திரு.குமரப்பெருமாள், திரு.நாகமணி பண்டிதர், புலவர் திரு. ஆறுமுகதேசிகர் போன்றோரும் இப்பிரதேசத்தில் தமிழ்மணம் பரப்பி வந்தவர்களாவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருங்கொடித் தீவு என்ற அக்கரைப்பற்று நகரும் தமிழர் நாகரீகம் செழித்திருந்த அக்கரைப்பற்று பகுதியும் (கி.பி1930-45,46களில்)

அக்கரைப்பற்று என்பது கி.பி பதினேழாம் நூற்றாண்டில் 1630ம் ஆண்டு தொடக்கம் 1833 ஆம் ஆண்டு வரையும் ஒரு சிற்றாட்சிப் பிரதேசத்தின் பெயராக நிலவி வந்தது. இதனைத் தொடர்ந்து காளியோடை தொடக்கம் சங்கமன் கண்டிவரை பரந்திருந்திருந்த இப்பிரதேசம், ஆங்கிலேயரின் ஆட்சியின் இறுதிக் காலம் வரையும் வரையறுக்கப்பட்ட மாகாணப் பிரிவின் பெயராக 'அக்கரைப்பற்று வன்னிமைப் பிரிவு' என்ற பெயரில் இப்பெயர் விளங்கி வந்துள்ளது.

இதனை போர்த்துக்கீச, ஒல்லாந்த, ஆங்கிலேய வரலாற்று ஆவணங்கள், இலக்கியங்கள் என்பன தெளிவுறுத்தும்.

அக்காலத்தில் குறிப்பாக இருபதாம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் (1906, 07கள்) அக்கரைப்பற்று என்ற பெயர் வன்னியர் சிற்றாட்சிக்காலத்திலும் அதனைத்தொடர்ந்து வன்னிமை நிர்வாக காலத்திலும் ஆட்சிமையமாகவும், அரசநிர்வாக மையமாகவும் விளங்கி வந்த கருங்கொடித்தீவு நகரின் இடைநுழைவுப் பெயராக அக்கரைப்பற்று என்ற பெயர் விளங்கி வந்தது. அதாவது 1906ம் ஆண்டு தொடக்கம் பண்டைய கருங்கொடித்தீவு நகரானது கருங்கொடித்தீவு என்றும் அக்கரைப்பற்று நகர் என்றும் இரு பெயர்களால் விளங்கி வந்தது. இதனை இலக்கியச் சான்றுகள் உணர்த்தும்.

1941ம் ஆண்டில் ஆங்கிலேயர் ஆட்சியின் இறுதிக்காலத்தில், வன்னிமை நிர்வாகமுறை முற்றாக ஒழிக்கப்பட்டு இத்தலைமைப் பதவிக்கு பதிலாக பிரிவுக்காரியாதிகாரி அல்லது இறைவரி உத்தியோகத்தர் (D.R.O) நிர்வாக முறை நடைமுறைப் படுத்தப்பட்ட காலத்தில் பண்டைய அக்கரைப்பற்று மாகாணம் (வன்னிமை பிரிவு) அக்கரைப்பற்று பிரிவுக்காரியாதிகாரி பிரிவாக நிலவி வந்தது. இக் காரியாதிகாரி பிரிவில் மூன்று உள்ளூராட்சி அலகுகள் அமைந்திருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றில் கருங்கொடிதீவு நகரினை மையமாகக் கொண்ட அக்கரைப்பற்று மத்தி உள்ளூராட்சி அலகும் ஒன்றாகும். இப்பிரிவில் கருங்கொடித்தீவு, கோளாவில், பனங்காடு, ஆலையடிவேம்பு பட்டியடிப்பிட்டி, பட்டிநகர், குடியிருப்பு ஆகிய இடங்கள் அடங்கியிருந்தன.

இக்காலத்திலேயே (1941,42கள்) பண்டைய கருங்கொடித்தீவு நகரை மையமாகக் கொண்ட அக்கரைப்பற்று மத்திய பிரிவானது தமிழ், சிங்கள மற்றும் முஸ்லிம் மக்கள் வாழ்ந்திருந்த கருங்கொடித்தீவு நகரினையும் மற்றும் தமிழர்களின் மரபுவழி வாழ்விடங்களையும் உள்ளடக்கியதாக ''அக்கரைப்பற்று பகுதி'' என்ற எழுதா வழக்கு உருவாகி 1945ம் ஆண்டளவில் அது அக்கரைப்பற்று பகுதி என்ற சமூகக் கட்டமைப்பாக நிலவியிருந்தது. இவ்வாறு எழுதா வழக்காக நிலவி வந்த அக்கரைப்பற்று பகுதியானது கருங்கொடித்தீவு, பனங்காடு கோளாவில், பட்டிநகர், ஆலையடிவேம்பு ஆகிய கிராமங்களை உள்ளடக்கி இருந்தது.

இதே வேளை அக்கரைப்பற்று பகுதி நிழல்நிர்வாக மையமாக தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் ஒன்றிணைந்து வாழ்ந்திருந்த கருங்கொடித்தீவு மிளிர்ந்து வந்தது. இக்காலத்தில் அக்கரைப்பற்று பகுதிக்கே உரித்தான தனித்துவப் பண்பாடு கலாசாரம், கலைகள் என்பவற்றுடன் ஒல்லாந்தர் காலம் தொட்டு நிலவி வந்த ஊர்ப்போடியார் என்ற கௌரவப்பதவியும் (ஊர்த்தலைவர்) அக்கரைப்பற்று பகுதியில் நிலவியிருந்தது.

மேலும் ஒற்றுமை, நல்லெண்ணம், சமத்துவம் சகோதரத்துவம், புரிந்துணர்வு என்பவற்றுடன் பல்துறைகளிலும் வளர்ச்சியுற்று வந்த அக்கரைப்பற்று பகுதியானது 1946ம் ஆண்டு பல்லினம் சார்ந்த சமூகக் கட்டமைப்புடன் உன்னத நிலையை எய்தியிருந்தது. இக்காலத்தில் பண்டைய கருங்கொடித்தீவு என்ற அக்கரைப்பற்று நகரில் வாழ்ந்திருந்த மக்கள் பற்றியும் பூர்வீகம் பற்றியும் சுருக்கமாக நோக்குவது பொருத்தமானதாகும். கருங்கொடித்தீவு என்ற அக்கரைப்பற்று நகரின் பூர்வகுடியினர் தமிழர்களே என்பது யாவரும் ஏற்றுக்கொண்டுள்ள வரலாற்று உண்மையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கரைப்பற்று பிரிவுக்காரியாதிகாரி பிரிவு தோற்றுவிக்கப்பட்டு இப்பிரிவின் கீழ் அக்கரைப்பற்று மத்தி உள்ளூராட்சி அலகு அமைந்திருந்த காலத்தில் 1945,46 களில் கருங்கொடித்தீவு என்ற அக்கரைப்பற்று நகரில் தமிழ், முஸ்லிம் மக்களுடன் பௌத்த சிங்கள மக்களும் ஒன்றிணைந்து ஒற்றுமையாக வாழ்ந்திருந்தனர். சைவாலயங்கள், பள்ளிவாசல்கள், விகாரை என்பவற்றுடன் கிறிஸ்தவ, கத்தோலிக்க ஆலயங்களும் நிலவியிருந்தன. பல்லின மக்கள் வாழும் அமைதிப்பூங்காவாக கருங்கொடித்தீவு என்ற அக்கரைப்பற்று நகர் விளங்கியிருந்தது.

## கருங்கொடித்தீவு என்ற அக்கரைப்பற்றும் முஸ்லிம்களும்

அக்காலத்தில் கருங்கொடித்தீவு என்ற அக்கரைப்பற்று நகரில் வாழ்ந்திருந்த தமிழ் பேசும் மக்களான தமிழ், முஸ்லிம் மக்களிடையே நெருங்கிய கலாசார, பண்பாட்டு உறவுகள் நிலவியிருந்தன. இலக்கிய உறவுகளும் இருந்து வந்தன. சமயரீதியில் இரு இனத்தவரும் அவரவர் இறை நம்பிக்கைகளுக்கு ஏற்ப சைவர்களாகவும் இஸ்லாமியர்களாகவும் வாழ்ந்திருந்த போதும் மொழி வழியில் ஓரினத்தவராகவே வாழ்ந்து வந்தனர். பொதுவாகக் குறிப்பிடுமிடத்து தமிழர், முஸ்லிம்கள் அனைவரும் தென்னிந்திய பண்பாட்டையே பேணியிருந்தனர் எனலாம்.

கருங்கொடித்தீவு நகரில் வாழ்ந்திருந்த முஸ்லிம் மக்களிடையே சமய பண்பாட்டு விழுமியங்களாக கந்தூரி, நேர்த்தி வைத்தல், அவுலியாக்கள் வழிபாடு என்பன நிலவியிருந்தன.

குடிவழமை இருந்து வந்தது. கலைகள் (களிகம்பு அல்லது பொல்லடி) இலக்கியம் (கவிபாடல், காவியம்) என்பன நிலவியிருந்தன. கலாசார விழுமியங்களிலும் ஒற்றுமை அதாவது தமிழர்களின் பெயர்களைப்போன்று சின்னத்தம்பி, வெள்ளத்தம்பி இளையதம்பி போன்ற பெயர்கள் நிலவியிருந்தன. போடிமார் என்ற மரபும் இருந்து வந்தது. போடிகள் என்பது மட்டக்களப்புத் தமிழர்களிடையே நெடுங்காலம் தொடக்கம் இருந்து வந்த வழக்காகும். வரலாற்று சான்றுகளுடன் ஏற்கனவே முந்திய அத்தியாயங்களில் இது பற்றி விரிவாக குறிப்பிடப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏராளமான நெற்காணிகளுக்கு சொந்தக்காரர்களாக இருந்து வந்த நிலச்சுவாந்தார்களையே போடிகள் என்று அழைத்துவந்தனர். இதேவேளை கருங்கொடித்தீவு என்ற அக்கரைப்பற்றில் வாழ்ந்திருந்த முஸ்லிம்கள் பெரும்பாலும் வர்த்தகத்தையே தங்கள் தொழிலாகக் கொண்டிருந்தனர். 1861ல் மட்டக்களப்பு அரசாங்க அதிபராக இருந்த பேர்ச் என்பவரது காலத்தில் ஒரு ஏக்கர் ஐம்பது ரூபாய் வீதம் அரச காணிகள் விற்பனை செய்யப்பட்ட வேளை வசதிபடைத்த கருங்கொடித்தீவு நகர் முஸ்லிம்களில் சிலர் மலிவு விலையில் காணிகளை வாங்கி நிலச்சுவாந்தர்களாக மாறி இதுகாலவரை தமிழ்ப்போடிகளால் கைக்கொள்ளப்பட்டு வந்த வழமைகளையும் கைக்கொண்டு வந்தனர். அத்துடன் நிலங்களுக்குச் சொந்தக்காரரான முஸ்லிம்களும் போடிகள் என்றழைக்கப்பட்டனர்.[1]

இவ்வாறு சமூக, சமய, கலை, கலாசாரம், பண்பாடு ஆகியவற்றில் அக்காலத்தில் கருங்கொடித்தீவு என்ற அக்கரைப்பற்று நகரில் வாழ்ந்திருந்த தமிழ், முஸ்லிம் மக்களிடையே நெருக்கமான ஒற்றுமை நிலவியிருந்தமைக்கு இம்மக்கள் அனைவரும் ஒரு காலத்தில் ஓரினத்தவர்களாக வாழ்ந்திருந்த மக்களின் சந்ததியினராவர் என்பது மறைந்து போன வரலாற்று உண்மையாகும். இது பற்றி நோக்குவோம்

பரவணிக்கல்வெட்டுச் சான்றுகள் மூலமாக வன்னிச் சிற்றரசர்களால் அணுக்கன்வெளியில் குடியேற்றப்பட்ட முஸ்லிம் மக்கள் முதலில் அட்டாளைச்சேனையிலும் பின்னர் கருங்கொடித்தீவிலும் தமிழ் மக்களுக்கருகாமையில் குடியேறி இருந்தனர். இவ்வேளை சிறைக்குடிகளையும் பெற்று தமிழ், முஸ்லிம் இருதிறத்தாரும் சமய விழாக்களிலும், சடங்குகளிலும் ஒருவருக்கொருவர் உறுதுணையாக இருந்து வந்தனர்.

---

1. திருக்கோவில் பிரதேச இலக்கிய வரலாறு - பக்.106,107 நா.நவநாயகமூர்த்தி - 2004



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன்படி பள்ளிவாசல்களில் நடைபெறும் கந்தூரிகளுக்கு முரசறைய 'ஊர்ப்போடியார்' அனுமதி வழங்குவதும் ஊர்ப்போடியாரும் பிரதிநிதிகளும் பங்குகொண்டு சிறப்பித்து வருவதும் மரபாகவும் வழக்காகவும் இருந்து வந்தது.

இதே போன்று அக்கரைப்பற்று பகுதிக்கோயிலான சித்திவிநாயகர் ஆலய புனரமைப்பு பணிகளின் போது பெரிய பள்ளிவாசல் மரைக்காயர் (நம்பிக்கையாளர்கள்) மார்களும் பிரதிநிதிகளும், பிரமுகர்களும் கலந்து மகிழ்வதும். தொன்றுதொட்டு இப்பகுதியில் நிலவி வந்த விழுமிய வழக்கமாகும். அக்காலத்தில் அக்கரைப்பற்று தமிழ், முஸ்லிம் மக்கள் பிட்டும் தேங்காயும் போல உறவாடி வந்த தோழமைப் பண்பை நாம் வேறெங்கும் காணல் அரிது.[2]

கி.பி1327ல் இபுன்பதூதாவால் புத்தளத்தில் இஸ்லாத்தை தழுவிய முக்குவ குடியினரின் சந்ததியினரில் சிலர் கிழக்கு மாகாணத்தில் குடியேறியுள்ளனர். இவர்களில் ஏழு குடிகள் உள்ளனர். இவர்களில் அநேகர் கல்முனைப் பிரதேசத்தில் வாழ்கின்றனர். இவ்வாறு இன வரலாற்று வல்லுனர் எம்.டி.ராகவன் குறிப்பிடுகின்றார்.[3] இது பற்றி ஆய்வாளர் ஏ.ஆர்.எம்.சலீம் அவர்கள் குறிப்பிடுகையில்

இன வரலாற்று வல்லுனர் M.D.ராகவன் புத்தளத்தில் மதம்மாறிய முக்குவரில் ஒரு பகுதியினர் கல்முனைப் பகுதியிலும் குடியேறினர் என்கிறார். அவர்களில் ஒரு பிரிவினர்தான் பரவணிக் கல்வெட்டில் கூறப்படும் அபூபக்கரும் ஏழு குடியினருமாகவிருக்க வேண்டும். அவர்கள் இறக்காமத்துக்கும் களியோடை ஆற்றுக்கு மிடையில் அணுக்கன் வெளியையொட்டிக் குடியமர்த்தப் பட்டிருக்கின்றனர் என்பதால் அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று பகுதியில் குடியேறியிருக்க வேண்டும்.

---

2. அக்கரைப்பற்று வரலாறு - பக்.29 ஆய்வாளர் ஏயாரெம் சலீம் - 1990
3. த சிலோன் ஒப்சேவர் - கட்டுரை Mr.M.D.ராகவன் 1953 பெப்.15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கரைப்பற்று பெரியபள்ளிவாசல் ஜமாஅத்தில் பணியவீட்டுக்குடியினர் அதிகமாகச் செறிந்திருப்பதும் பொன்னாச்சிக்குடியினர் இங்கு காணப்படுவதும் மனங்கொள்ளத் தக்கது.[4] பரவணிக்கல்வெட்டு கூறும் பொன்னாச்சி குடியைச்சேர்ந்த அபூபக்கர் (அவுக்கன்) என்பவரின் தலைமையில் வந்த ஏழு குடிகள் பின்வருமாறு

பொன்னாச்சிக்குடி

வரிசைநாச்சிக்குடி

முகாந்திரநாச்சிக்குடி

மாலைகட்டிக்குடி

கினிக்கருத்தன்குடி

பணியவீட்டுக்குடி

என்பன இவற்றுள் சிலவாகும்.[5]

1946ம் ஆண்டுக்குப் பிறபட்ட காலத்தில் தொழில் கல்வி, வாணிபம் ஆகியவற்றின் காரணமாக வெளியூர்களில் இருந்துவந்து கருங்கொடித்தீவு நகரில் தங்கியிருந்த முஸ்லிம்களில் சிலர் இங்குநிலவியிருந்த அமைதியான சூழல், இயற்கை வளங்கள் இயற்கையோடு ஒன்றிய வாழ்வியல் வாய்ப்புகள், வசதிகள் என்பவற்றால் கவரப்பட்டு நாளடைவில் இவ்வூரையே தங்கள் நிரந்தர வாழ்விடமாக்கிக் கொண்டனர். இதன் பயனாக கருங்கொடித்தீவு நகரில் முஸ்லிம்மக்கள் தொகை அதிகரித்து வருவது கண்கூடு.

---

4. அக்கரைப்பற்று வரலாறு - பக்.45 ஆய்வாளர் ஏயாரெம் சலீம் -1990

5. அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை ஆகிய பிரதேசங்களில் வாழ்ந்துவரும் இவர்கள் (ஏழு குடியினரின் சந்ததியினர்) தமிழ்மொழி மீது ஆழ்ந்த பற்றுடையோராக வருவதுடன் தமிழ் இலக்கிய வளர்ச்சியிலும் பெரும் பங்கினை வகித்து வருகின்றனர். (ஈழத்தமிழர் வரலாற்றுச் சுவடுகள் - பக்.107 நா.நவநாயகமூர்த்தி -2002)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கருங்கொடித்தீவு என்ற அக்கரைப்பற்றும் சிங்கள குடியினரும்

பண்டைய கருங்கொடித்தீவு என்ற அக்கரைப்பற்று நகரப்பகுதியில் அக்காலத்தில் (1945,46கள்) ஆதிக்குடியினரான தமிழர்களுடன் சிங்களக்குடியினரும் ஒன்றிணைந்து ஒற்றுமையாக வாழ்ந்திருந்தனர். இவர்கள் 19ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இங்கு வந்து குடியேறி வாழ்ந்திருந்த மக்களின் சந்ததியினராவர்.

1827ல் இலங்கையில் முதலாவது குடிசனக்கணக்கெடுப்பு நடந்தவேளையில் தற்போதைய அம்பாரையை உள்ளடக்கியிருந்த மட்டக்களப்பு மாவட்டத்தில் சிங்களவர் எவரும் வாழ்ந்திருக்கவில்லை.[6]

இதற்குப் பிற்பட்ட காலத்தில் (1833ற்குப் பின்) வர்த்தகத்தை நோக்காகக் கொண்டு இங்கு வந்து தங்கியிருந்த இவர்கள் நாளடைவில் கருங்கொடித்தீவு நகர்ப்பகுதியில் வணிக நிலையங்களை அமைத்து வர்த்தகம் மேற்கொண்டு வந்தனர். இதனைத் தொடர்ந்து தங்கள் உழைப்பின் மூலம் பெரும்பொருளீட்டி நிலபுலன்களை வாங்கிச் செல்வந்தர்களாக வாழ்ந்து வந்தனர். நெற்காணிகள், குடியிருப்பு நிலங்கள், சிறுதோட்டங்கள் என்பன இவர்களது உடைமைகளாக அக்கரைப்பற்று பகுதியில் இருந்து வந்தன.

இவ்வாறு கருங்கொடித்தீவு நகரில் தனவந்தர்களாக வாழ்ந்திருந்த இவர்கள் கோளாவில், பனங்காடு, ஆலையடிவேம்பு ஆகிய கிராமங்களில் வாழ்ந்திருந்த தமிழ் மக்களுடன் மிக நெருக்கமான சமய, கலாசார, பண்பாட்டு உறவுகளையும் கொண்டிருந்தனர். சில சிங்களக்குடும்பத்தினர் கருங்கொடித்தீவு கோளாவில் கிராமங்களில் வாழ்ந்து வந்த தமிழ்க் குடும்பத்தினருடைய திருமண உறவுகளையும் கொண்டிருந்தனர். மேலும் இப்பகுதியில் நிலவியிருந்த இந்து ஆலயங்களில் இடம்பெற்று வந்த உற்சவங்களிலும் சடங்குகளிலும் பக்தியுடன் தவறாது கலந்து சிறப்பித்தும் வந்தனர்.

---

6. பட்டிப்பளை என்ற கல்லோயா பிரதேசம் இவ்வேளை அடர்ந்த காடாகவிருந்தது. (ஈழத்தமிழர் வரலாற்றுச் சுவடுகள் - பக்.III.நா.நவநாயகமூர்த்தி - 2002)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1945,46 களில் அக்கரைப்பற்றில் வர்த்தகத்துறையில் செல்வாக்குப் பெற்றிருந்த இவர்களில் சிலர் இப்பிரதேச மக்களிடையே 'முதலாளி' என்ற சிறப்புப் பெயருடன் அப்புகாமி முதலாளி, சாரா முதலாளி எனப் பிரபல்யம் பெற்றிருந்தனர். மேலும் அக்காலத்தில் சிலர் கருங்கொடித்தீவு போக்குவரத்துத் துறையிலும் செல்வாக்குச் செலுத்தி வந்தனர்.

கருங்கொடித்தீவு நகரப்பகுதியில் சிங்களவர்களுக்குச் சொந்தமான கட்டிடங்கள், கடைத்தொகுதிகள் ஆகியவற்றுடன் குடியிருப்பு மனைகளும் நிலவிவந்தன.

இக்காலத்தில் கருங்கொடித்தீவு என்ற அக்கரைப் பற்று நகரப்பகுதியில் சிறப்புடன் விளங்கிவந்த ஸ்ரீதம்மரத்தின பௌத்த ஆலயம் (ஸ்ரீ விஜயராம விகாரை) 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தோற்றுவிக்கப்பட்டது. அக்காலத்தில் தமிழ் மக்களது பூரண ஒத்துழைப்புடன் தகரம், ஓலை கொண்டு உருவான இவ்விகாரை தமிழ் மக்களது ஆதரவும் பௌத்த வர்த்தகர்களது உழைப்பும் இணைந்து வளர்ச்சியுற்றுவந்து இக்காலத்தில் (1946ல்) இப்பௌத்த விகாரை சிறப்புடன் விளங்கியிருந்தது.

அக்காலத்தில் பொசன், வெசாக் நிகழ்வுகள் மற்றும் பௌர்ணமி தினங்களிலும் இவ்விகாரையில் இடம்பெற்றுவந்த சமயவிழாக்கள், வழிபாடுகள் ஆகியனவற்றில் சிங்களமக்களுடன் தமிழ் மக்களும் இணைந்து பங்குபற்றி வந்துள்ளனர். மேலும் இப்பௌத்த தலத்தில் அமைந்திருந்த முருகன் ஆலயத்தில் பொங்கலிட்டு வழிபாடு செய்தும் வந்துள்ளனர். இதே வேளை 1942ஆம் ஆண்டில் கருங்கொடித்தீவு பகுதியில் வாழ்ந்திருந்த சிங்களப்பிள்ளைகளின் கல்வி வசதிக்காக அரசினால் பள்ளிக்கூடம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டு நிலவியிருந்து.

அக்காலத்தில் தொட்டம்ப, மடவலாந்தை, இலுக்குச்சேனை, ஹிங்குராண முதலிய இடங்களில் வாழ்ந்து வந்த சிங்கள மக்களின் பல்தேவைகளைப் பூர்த்தி செய்யும் இடமாகவும் கருங்கொடித்தீவு என்ற அக்கரைப்பற்று நகர் விளங்கியிருந்தது. இவர்களுக்கு தபாலகம் அக்கரைப்பற்றிலேயே அமைந்திருந்தது. மேலும் பண்டமாற்று அடிப்படையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களுக்கிடையில் வியாபாரமும் அக்கரைப்பற்று நகரிலேயே இடம்பெற்று வந்தது.

இதேவேளை பனங்காடு, ஆலையடிவேம்பு, கருங்கொடித்தீவு, கோளாவில் ஆகிய இடங்கள் உள்ளிட்ட அக்கரைப்பற்று பிரதேச வர்த்தகத்தை பொறுத்தவரை 1930,46 களில் தமிழர்களுடன் இணைந்து வாழ்ந்து வந்த சிங்கள இன முதலாளிகளைக் குறிப்பிட்டே ஆகவேண்டும்.

கினி அப்புஹாமி, உபாசகப்பு, பஸ்தியான், சாராமுதலாளி என்போர் முக்கியமானவர்கள். இவர்களோடு யாழ்ப்பாணத் தமிழர்களும் புகையிலை, சுருட்டு, பனங்குட்டான், பனாட்டு உட்பட பலசரக்கு வியாபாரத்தில் ஈடுபட்டு வந்தனர்.[7]

## தமிழர் நாகரீகம் செழித்திருந்த அக்கரைப்பற்றுப் பகுதி

கருங்கொடித்தீவு என்ற அக்கரைப்பற்று நகரின் பெரும்பாலான பகுதிகளையும் கோளாவில், பனங்காடு, ஆலையடிவேம்பு, பட்டிநகர் முதலான இடங்களையும் உள்ளடக்கி எழுதா வழக்காக அக்கரைப்பற்றுப் பகுதியென நிலவி வந்த இப்பிரதேசத்தில் 1940-1946 களில் தமிழர் நாகரீகம் செழித்திருந்தது. பாரம்பரிய கலைகள் பழந்தமிழர் பண்பாடு, கலாசாரம் ஆகியவற்றுடன் மக்களிடையே ஒழுக்க விழுமியங்களும் நற்பண்புகளும் நிலவியிருந்தன. சித்த வைத்தியம் உள்ளிட்ட மருத்துவ முறைகளும் சிற்றிலக்கியங்களும் சிறந்திருந்தன.

சைவப்பண்பாடு ஆன்மீக நெறிமுறைகள் என்பவற்றின் நிலைக்களனாக அக்காலத்தில் விளங்கி வந்த அக்கரைப்பற்றுப் பகுதியானது மண்வளமும், மலைவளமும் நீர்வளமும் கொண்ட இயற்கை எழில்கொஞ்சும் பிரதேசமாக மிளிர்ந்து வந்தது. இத்துணைச் சிறப்புக்களைத் தன்னகத்தே கொண்டு சிறப்புடனும் செழிப்புடனும் விளங்கி வந்த அக்கரைப்பற்று பகுதியின் சமூக மையமாகவும் நிர்வாக மையமாகவும் நகரப்பகுதியாகவும் இருந்து வந்த கருங்கொடித்தீவு என்ற அக்கரைப்பற்று நகர் பற்றி முதலில் நோக்குவோம்.

7) ஆலையடிவேம்பு பிரதேச தொழில்முறைகள் - கட்டுரை க.செல்வரெத்தினம் (B.A) ஏர்முனை கலாசாரவிழா மலர் - 2001



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கருங்கொடித்தீவு நகர்

இக்காலத்தில் கருங்கொடித்தீவைச் சுற்றியுள்ள இடங்களில் கடற்கரை வரை தமிழரான திரு.தருமரெட்ணம் வன்னிமைக்குச் சொந்தமான தென்னந்தோட்டங்கள் அமைந்திருந்தன. இவரது பங்களா அமைந்திருந்த பகுதியின் வடகிழக்கு திசையில் காளிகோயிலொன்று பிரபல்யம்பெற்று விளங்கியிருந்தது.

பெரிய பள்ளிவாசல் ஆஸ்பத்திரிக்கு அருகாமையில் உள்ள பகுதியில் (ஸாஹிரா கல்லூரி உள்ளிட்ட) தமிழ்க்குடியினர் பெருமளவில் வாழ்ந்து வந்திருந்தனர். இக்காலத்தில் (1945,46கள்) கருங்கொடித்தீவு நகரில் வாழ்ந்து வந்த தமிழருக்கே உரித்தான நெற் காணிகளாக ஒடியவெளி, நுரைச்சோலை, கிறவல்குழி ஆகிய இடங்களில் மேட்டுநிலங்கள் உள்ளிட்ட வயல்நிலங்கள் இருந்து வந்தன.

கருங்கொடித்தீவின் பூர்வகுடியினரான தமிழர்களின் வயல்நிலங்களுக்கு நீர்ப்பாய்ச்சல் குளங்களிலொன்றாக இலுக்குச் சேனைக்குளம் இருந்து வந்தது. இவ்வேளை கிறவல்குழியில் சேனைக் குடியிருப்புக்கள் நிலவியிருந்தன. பழந்தரும் மா, பலா தோடை, எலுமிச்சை மரங்களுடன் தென்னைகளும் நட்டு செழிப்புடன் விளங்கியிருந்தன.

வயல் அறுவடைக்காலங்களில் கருங்கொடித்தீவு விவசாயக் குடும்பத்தினர் கிறவல் குழிக்குச் சென்று பொங்கலிட்டு சமையல் செய்து மகிழ்ந்துண்டு வருவதை வழக்கமாகக் கொண்டிருந்தனர்.[8] இதேவேளை அக்காலகட்ட கருங்கொடித்தீவு என்ற அக்கரைப்பற்று நகர் பற்றியும் இங்கு வாழ்ந்திருந்த பழங்குடியினரான தமிழரிடையே நிலவியிருந்த கலை, கலாசாரம் பண்பாடு பற்றியும் அமரர் திரு.க.வடிவேல் புலவர் அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

---

8. தகவல்: கர்மயோகி செல்லத்துரை சோமசுந்தரம் வயது 88, சேனைக்குடியிருப்பு. நேர்காணல் 27.01.2019



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருங்கொடி வெட்டிக் காடழித்து நாடுகண்ட கன்னித் தமிழ்ப்பெருங்குடி மக்கள் வாழும் ஊர். இவர்கள் விவசாயத்தையே பிரதான தொழிலாகக் கொண்டு வாழ்ந்திருந்தனர். தங்கள் முழுத்தேவையிலும் நிறைவு கண்டதும் கலைகளில் நாட்டம் செலுத்தி கிராமியக் கலைகளான நாட்டார்பாடல், கும்மி கோலாட்டம் (வசந்தன்), பொய்க்கால் குதிரையாட்டம் போன்ற கலைகளில் ஈடுபாடு கொண்டு தாமும் மகிழ்ந்து தமிழையும் தமிழ்க்கலைகளையும் வளர்த்து வந்தனர்.

சித்திரைப்பிறப்பு நாட்களில் ஊஞ்சல் அமைத்து இருபக்கமும் இருவர் நின்றுன்ன ஒருவர் மத்தளம் வாசிக்க மற்றவர் ஊஞ்சல் விருத்தம் பாடி முடிக்க ஆடுவர். வருடப்பிறப்புக்களில் பொய்க்கால் குதிரை அலங்கரித்து ஒருவரோ அன்றி இருவரோ பாடியாடி வீட்டுக்கு வருவர். இவர்களை வீட்டார் அன்புடன் உபசரித்து சன்மானமும் அளிப்பர். மறுபக்கம் வாலிபர்கள் சேர்ந்து வசந்தன் பொல்லடி அடித்து ஆடுவர்.

பிள்ளையார் வசந்தன்

அனுமன் வசந்தன்

அருவி வெட்டும் வசந்தன்

கண்ணகி வசந்தன் எனப் பல வசந்தன் பாடல்கள் உள்ளன. இவை அக்காலத்தில் இங்கு நிலவியிருந்த கலை வடிவங்கள். இவற்றில் முதன்மையானது நாட்டுக்கூத்து ஆகும். இவ்வாறு அக்கரைப்பற்றுப் பகுதியின் மையமாக விளங்கிவந்த கருங்கொடித்தீவு பற்றி புலவர் க.வடிவேல் அவர்கள் வர்ணிக்கின்றார்.[9]

---

9. அக்கரைப்பற்று நாட்டுக்கூத்தின் தோற்றமும் வளர்ச்சியும் - கட்டுரை கவிஞர்.க. வடிவேல், ஏர்முனை கலாசாரவிழா மலர், ஆலையடிவேம்பு பிரதேசசெயலகம் - 1997



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அக்கரைப்பற்றுப் பகுதியில் தமிழர் நாகரீகம் (1940,46 கள்)

இக்காலத்தில் பண்டைய கருங்கொடித்தீவு என்ற நகரை மையமாகக் கொண்டு எழுதா வழக்காக 'அக்கரைப்பற்றுப் பகுதி' என வழங்கிவந்த தமிழ் நாகரீகம் செழித்திருந்த இப்பிரதேசத்தில் சமூக சமய, பண்பாடு மற்றும் கலை, இலக்கியம் பற்றி விரிவாக நோக்குவோம். கருங்கொடித்தீவு, கோளாவில், பனங்காடு, பட்டிநகர் ஆகிய இடங்களை உள்ளடக்கிய (சமூகக் கட்டமைப்பு) அக்கரைப்பற்றுப் பகுதியானது இயற்கை வளங்கள் கொண்டதாக விளங்கியிருந்தது.

தனித்துவமான சமூகக் கட்டமைப்பை அடிப்படையாகக் கொண்டு நிலவியிருந்த அக்கரைப்பற்று பகுதி என்ற பிரதேசமானது இதனுள் அக்காலத்தில் அடங்கியிருந்த குளங்களைத் தவிர்த்து ஓரளவு சமமாகவே (சமாந்தரம்) நிலவி வந்தது.

இப்பிரதேச எல்லைக்குள் மன்னன்குளம், பெரியகுளம் சின்னக்குளம், மருதவெட்டுவான் குளம், கருங்கொடித்தீவுக் குளம் தும்பனாவட்டி, அகத்திக்குளம் மற்றும் பாலக்குறிச்சிக்குளம் கோளாவில் வட்டிக்குளம், புதுக்குளம், பனங்காடு ஐயனார் குளம் முள்ளிக்குளம், உடையார்குளம், பட்டிநகர், மழவராயன்குளம் ஆகியவற்றை உள்ளடக்கியிருந்த நீர்வளம் கொழிக்கும் பிரதேசமாக விளங்கியிருந்தது.[10]

---

10. 1937ம் ஆண்டில் கருங்கொடித்தீவையும் ஆலையடிவேம்பையும் இணைத்துக் குளங்களை ஊடறுத்து ஆலையடிவேம்பு வீதி போடப்பட்டது.

* பெரியகுளமும், சின்னக்குளமும் இன்று மக்கள் குடியிருப்புகளாக மாற்றமடைந்துள்ளன. (கருங்கொடித்தீவு மான்மியத்துளிகள் - கட்டுரை. சி.சிவஞானமூர்த்தி, ஏர்முனை கலாசாரவிழா மலர் - 1999,2000



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் இப்பிரதேசமானது சம்புக்களப்பு, பெரியகளப்பு, சிறுகளப்பு உப்புக்கரைச்சி ஆகிய ஏரிகளையும் தில்லையாறு, நீத்தையாறு தாலிபோட்டாறு ஆகிய ஆறுகளையும் கரடிமலை, முருக்கல் மலை (முருங்கை மலை), லாகிட்டமலை (நெடுந்தோட்டம் அருகே) கூப்பிடுகல்மலை, சக்கரம்வெட்டின கல், பொத்தானைமலை கிழவியூர்மலை ஆகிய மலைகளையும் கொண்ட நிலநீர் வளப்பிரதேசமாகவும் விளங்கியிருந்தது.

## நாம் தமிழர்

அக்காலத்தில் மட்டக்களப்பில் சைவப்பண்பாட்டு மையங்களிலொன்றாக விளங்கிவந்த அக்கரைப்பற்று பகுதியில் வாழ்ந்து வந்த தமிழர்களில் சில குடும்பங்கள் இறை நம்பிக்கையின் அடிப்படையில் கிறிஸ்தவ மற்றும் கத்தோலிக்க மதங்களைத் தழுவி கிறிஸ்தவர்களாகவும் கத்தோலிக்கராகவும் வாழ்ந்திருந்த போதும் இவர்களனைவரும் தமிழ்ப் பாரம்பரியங்களைப் பேணி வந்த (கலை, இலக்கியம்) தமிழ்ச் சமூகக்கட்டமைப்பில் உள்வாங்கியவர்களாகவே வாழ்ந்திருந்தனர்.

அதாவது கலாசாரம், பண்பாடு, கலைகள் இலக்கியம் ஆகியனவற்றில் நாம் தமிழர் என்ற ஒரே தனித்துவப் பாரம்பரியம் கொண்டவர்களாகவே வாழ்ந்திருந்தனர். இதே போன்று அக்காலத்தில் இப்பிரதேசத்தில் வாழ்ந்திருந்த தமிழரிடையே தொழிலடிப்டையில் சாதியமைப்பு நிலவி வந்தபோதும் ஏற்றத்தாழ்வுகள் நிலவியிருக்கவில்லை. மாறாக தொழில் பிரிவினர்களாகவே மக்கள் வாழ்ந்திருந்தனர் எனலாம்.

விவசாயம் செய்து வந்தவர்கள் விவசாயிகளாகவும் வர்த்தகம் புரிந்து வந்தவர்கள் வியாபாரிகளாகவும், மீன்பிடித்தற் தொழிலில் ஈடுபட்டவர்கள் மீனவர்களாகவும் காணப்பட்டமை போன்று சிகையலங்காரத் தொழில் மேற்கொண்டு வந்தவர்கள் நாவிதர்கள் என்றும், உடைகளை வெளுத்து வண்ணம் செய்து வந்தவர்கள் வண்ணார் என்றும் கணிக்கப்பட்டனர். இதே வேளை மொழிவழியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரம்பரியம் என்ற வரையறைக்குள் நாம் தமிழர் என்ற சமூகக் கட்டமைப்பில் உள்வாங்கியவர்களாகவே இவர்கள் விளங்கியிருந்தனர்.[11]

## பாரம்பரிய கலைகள்

இக்காலத்தில்(1940,46கள்) இப்பிரதேசத்தில் வாழ்ந்திருந்த மக்களிடையே கலைகள் செழித்திருந்தன. பாரம்பரியக் கலைகளான நாட்டுக்கூத்து, வசந்தன், கும்மி, கரகாட்டம், காவடியாட்டம் என்பன நிலவியிருந்தன. அத்துடன் இக்கலைவடிவங்களை அடிப்படையாகக் கொண்ட சிற்றிலக்கியங்களும் பாடல்களும் நிலவியிருந்தன. அக்காலத்தில் அக்கரைப்பற்றுப் பகுதியில் நிலவியிருந்த பாரம்பரியக் கலைகளில் முதன்மையானது நாட்டுக்கூத்தாகும். தென்மோடி வடமோடி என இருவகைக் கூத்துக்கள் ஆடப்பட்டு வந்தன.

திரு.காடியர் வேலுப்பிள்ளை, திரு.குஞ்சித்தம்பி அண்ணாவியார் (கோளாவில்), திரு.தாமோதரம்பிள்ளை (கோளாவில்), திரு.மானாகப்போடி அண்ணாவியார் திரு.மனுவேலுப்பிள்ளை ஆசிரியர் (கருங்கொடித்தீவு) என்போர் கூத்துக்களைப் பழக்கி அரங்கேற்றம் செய்து வந்த அண்ணாவிமார்களாவார்.

தென்மோடிக்கூத்துக்களான அலங்காரரூபன், அனு உத்திரன் இவை இரண்டும் காடியர் திரு.வேலுப்பிள்ளை அவர்களே அண்ணாவியார். வடமோடி தென்மோடிக்கூத்துக்களை (அரிச்சந்திரன் போன்ற) கோளாவிலைச் சேர்ந்த திரு.தாமோதரம்பிள்ளை அவர்கள் பழக்கி அரங்கேற்றியுள்ளார்.[12] இதே காலத்தில் கோளாவிலைச் சேர்ந்த திரு.குஞ்சித்தம்பி அண்ணாவியார் விராடபர்வம், வள்ளியம்மன் நாடகம், குருக்கேத்திரன் போர் போன்ற கூத்துக்களைப் பழக்கி அரங்கேற்றியுள்ளார்.

---

11. மறைந்துபோன உண்மைகள் வேறாக இருப்பினும் இதனை மாறாகச் சிந்திப்பவர்கள் தாய்மொழி என்ற நமது பிறப்புரிமையை நிந்திப்பவர்களாவர் என்பது எனது கருத்தாகும்.

12. அக்காலத்தில் திரு.தாமோதரம்பிள்ளை அவர்கள் ஆரையம்பதிவரை சென்று தென்மோடிக் கூத்துக்களை பழக்கி வந்ததுடன் பிரபல்யம் மிக்க அண்ணாவியாராகவும் திகழ்ந்துள்ளார். ஆரையம்பதி கலைஞர் திரு.மூனாக்கானா அவர்களது கட்டுரையொன்று இதனைக்குறிப்பிடும் (ஆரையம்பதி கூத்துக்கலை - கட்டுரை)மு.கணபதிப்பிள்ளை ''ஆரையம்பதி ஸ்ரீ கந்தசுவாமி கோயில் மஹாகும்பாபிஷேகமலர் - 1999



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் இக்காலத்தில் கருங்கொடித்தீவைச்சேர்ந்த திரு.மானாகப்போடி அண்ணாவியார் இராமநாடகம் என்ற கூத்தைப்பழக்கி அரங்கேற்றியுள்ளார். இவர்களது காலத்தில் திரு.மனுவேலுப்பிள்ளை ஆசிரியரும் பல நாட்டுக்கூத்துக்களைப் பழக்கி அரங்கேற்றி வந்துள்ளார். வீரகுமாரன், பாரிஜாத பரிணயம் கண்டிநாடகம், சூரசங்காரம், புலந்திரன்களவு, தேசிங்குராஜன் சிவன்ராத்திரி போன்ற கூத்துக்கள் இவரது கைவண்ணத்தில் மலர்ந்தவைகளாகும்.

அக்காலத்தில் அக்கரைப்பற்றுப் பகுதியில் ஆடப்பட்டு வந்த நாட்டுக்கூத்துக்களில் பல மீனோடைக்கட்டு (அட்டாளைச்சேனை) பாலமுனை, ஆகிய கிராமங்களிலும் அரங்கேற்றப்பட்டு வந்துள்ளன. இதனை றோமன் கத்தோலிக்கப்பாடசாலையில் (கருங்கொடித்தீவு) அக்காலத்தில் திரு.மனுவேலுப்பிள்ளை ஆசிரியரிடம் மாணவனாகக் கல்வி பயின்று வந்த திரு.வெள்ளக்குட்டி ஞானமுத்து (1932) அவர்கள் மூலமாக அறியமுடிகின்றது. இவர் மேலும் கூறுகையில் அக்காலத்தில் இப்பாடசாலையில் நடந்த கலைவிழா ஒன்றில் அண்ணாவியாரும் ஆசிரியருமான திரு.மனுவேலுப்பிள்ளை அவர்கள் பழக்கி மேடையேற்றிய 'கண்டிநாடகம்' என்ற விலாசக்கூத்துக்கு தான் மத்தளம் அடித்ததாகவும் திரு.வே.ஞானமுத்து அவர்கள் குறிப்பிடுகின்றார்.[13]

---

13. கருங்கொடித்தீவு றோ.க.பாடசாலையில் மாணவனாகவிருந்த காலத்தில் தனது பத்தாவது வயதில் (1942ல்) திரு.மனுவேலுப்பிள்ளை ஆசிரியரிடம் மத்தளம் அடிக்கக் கற்றுக்கொண்டதாக இவர் மேலும் குறிப்பிட்டார். (தகவல் வெள்ளக்குட்டி ஞானமுத்து வயது 88 பனங்காடு நேர்காணல் 2018



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்வி

அக்கரைப்பற்று பகுதியின் இக்காலகட்டக் (1940,46கள்) கல்வி நிலை பற்றிக் குறிப்பிடுமிடத்து பின்வரும் பாடசாலைகள் இப்பிரதேசத்தில் நிலவி வந்தன.

கருங்கொடித்தீவு மெதடிஸ்த மிஷன்பாடசாலை (1870)

கருங்கொடித்தீவு றோமன் கத்தோலிக்கப் பாடசாலை (1932)

கருங்கொடித்தீவு இராமகிருஷ்ண மிஷன் பாடசாலை (1944)

கோளாவில் எம்.எம்.ரி.எம் பாடசாலை (1900)

கருங்கொடித்தீவு சிங்களப் பாடசாலை (1942)

பனங்காடு கலவன்பாடசாலை (1936) ஆகிய பாடசாலைகள் நிலவியிருந்தன.

இக்காலத்தில் அக்கரைப்பற்றுப் பகுதி என்ற இப் பிரதேசத்தைச் சேர்ந்த பலர் அர்ப்பணிப்புடன் ஆசிரியத் தொழில் புரிந்து வந்துள்ளனர். இவர்களின் கற்பித்தல் செயற்பாடுகள் பிற்காலத்தில் இப்பிரதேசக்கல்வி வளர்ச்சிக்கும் பல்துறை சார்ந்த கல்விமான்கள் உருவாகவும் அரசதுறைகளில் தொழில்கள் பெறவும் காரணிகளாயின எனலாம். திரு.மனுவேலுப்பிள்ளை திரு.க.இராசையா, திரு.செம்பாப்போடி, புசிஅக்கா என்போர் இக்காலத்தில் கருங்கொடித்தீவு றோமன்கத்தோலிக்க பாடசாலையில் ஆசிரியர்களாக கடமையுணர்வுடன் பணிபுரிந்து வந்த ஆசிரியப் பெருந்தகையினர் என்பதை அறியமுடிகின்றது.

மேலும் அக்காலத்தில் ஆசிரியர்களாகப் பணிபுரிந்துவந்த இப்பிரதேசத்தைச் சேர்ந்த திரு.வன்னமணி ஆசிரியர், திரு.க.கதிர்காமத்தம்பி பண்டிதர் என்போருடன் அக்காலத்தில் இப்பிரதேசத்தின் முதல் தலைமையாசிரியரான திரு.க.மு.ஞானப்பிரகாசம் ஆசிரியரும் இப்பிரதேசக் கல்வி வளர்ச்சிக்கு வித்திட்ட ஆசிரியப் பெருந்தகையோர் ஆவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலவர்கள்

பாரம்பரிய கலைகளுடன் இசையுடன் கூடிய இலக்கியமும் செழிப்புடன் விளங்கியிருந்த அக்காலத்தில் அக்கரைப்பற்றுப் பகுதியில் புலவர்கள் பலர் வாழ்ந்திருந்தனர். இவர்களில் கோளாவில் தாண்டவவேலர், திரு.கந்தையா ஓடாவியார், திரு.பூபாலபிள்ளை திரு.காசிப்பிள்ளை, திரு.க.கதிர்காமத்தம்பி பண்டிதர் என்போர் குறிப்பிடத்தக்கவர்களாவர். இவர்களுடன் 1936ம் ஆண்டிலிருந்து கும்மிப்பாடல்களை இயற்றி வந்த நாட்டுக்கூத்துக் கலைஞர் கோளாவில் க.தம்பியப்பா அவர்களும் சிறந்த புலவராவார்.

கோளாவில் கிராமத்தைச் சேர்ந்த தாண்டவவேலர் காவடிச்சிந்துகளைப் பாடியவர். அக்காலத்தில் அக்கரைப்பற்றுப் பகுதியில் சிறந்த புலவர்களில் ஒருவராக விளங்கியிருந்த இவர் மொட்டைவேலாப்போடி புலவரின் பேரர் ஆவார். இவர் எழுபத்து மூன்று சிந்துப்பாடல்கள் நிறைந்த ''பாணகை வழி நடைக்கும்மி'' என்ற நூலையும், ''கதிர்காம விருத்தம்'' என்ற நூலையும் எட்டு வேறு சந்தப்பாடல்களையும் கொண்ட ''பிச்சை வேலைக்கும்மி'' என்ற நூலையும் ஆக்கியுள்ளார்.[14]

கருங்கொடித்தீவைச் சேர்ந்தவரான கந்தையா ஓடாவியார் காளமேகப்புலவரைப் போல் நையாண்டிப் பாட்டுக்களில் வல்லவர். அக்காலத்தில் மழைவேண்டிச் சித்திவிநாயகர் ஆலயத்தில் கொம்புவிளையாடல் வழக்கமாகவிருந்து வந்தது. வடசேரி, தென்சேரி என பிரிந்து கொம்பு விளையாட்டு நடந்து வந்த வேளை தென்சேரியைச் சேர்ந்த புலவரான இவர் வடசேரியான நண்பர்களை ஏளனம் செய்து பாடிய பாடல்களுள் ஒன்று இவ்வாறு அமைந்துள்ளது.

'' மலைப் பாம்புப் புள்ளிபோல
மார்பு நிறைந்த தேமல்காரன்
குரைக்காண்டி வடசேரியான்
குட்டிபோட்ட பெட்டை நாய் போல''

---

14. மட்டக்களப்பு தமிழகம் - பக்.235 பண்டிதர் வி.சி.கந்தையா - 1964



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமியப் பாடல்களாகவே புலவரின் பாடல்கள் அமைந்துள்ளன. அத்துடன் நையாண்டிப்பாடல்களாகவும் ஓசைநயம்மிக்கனவாகவும் அமைந்துள்ளன. நகைபூண்ட நங்கையைப்போல் உவமான உவமேயங்களே கவிதைகளுக்கு அழகுக்கு அழகு செய்வதுபோல் அமைந்துள்ளன. மார்பு நிறைந்த தேமல்காரனுக்கு மலைப்பாம்புப் புள்ளி உவமானம், புலவரின் பாடலைச் சிறக்கவைக்கும் அணிகலனன்றோ.[15]

கவிஞர் பூபாலப்பிள்ளை அவர்கள் மரபுக்கவிதை இயற்றுவதில் சிறந்தவராக விளங்கினார். 1927ம் ஆண்டிற் பிறந்த இவர் இளம்வயதிலேயே புலவராக இனங்காணப்பட்டார். இவரது பாடல்கள் கவிநயமும் கற்பனைச்சுவையும் இலக்கியச் செழுமையும் மிக்கனவாய் அமைந்துள்ளன. இதே காலத்தில் அக்கரைப்பற்று பகுதியில் வாழ்ந்திருந்த பண்டிதர் க.கதிர்காமத்தம்பி (1914), கோளாவில் இளையாப்போடி தம்பியப்பா (1917) என்போரும் புலவர்களாகக் காணப்படுகின்றனர்.

சுவாமி விபுலானந்த அடிகளின் மாணாக்கரில் ஒருவரான பண்டிதர் க.கதிர்காமத்தம்பி (நாகமணிப்பண்டிதர்) அவர்கள் 1936ல் ஆசிரியராக நியமனம் பெற்றவர். 1942ல் பண்டிதப் பரீட்சையில் சித்திபெற்று அக்கரைப்பற்று பகுதியில் ஒரே ஒரு பண்டிதராக வாழ்ந்திருந்த இவர் பல நாட்டுக்கூத்துப் பாடல்களை எழுதிய புலவராகவும் விளங்கியிருந்தார்.[16] அக்காலத்தில் பவளேந்திரன் (1938), குருக்கேத்திரன் (1942), வைகுந்தம் (1946) ஆகிய கூத்துக்களில் ஆடிப்புகழ்பெற்றிருந்த கோளாவில் இளையாப்போடி தம்பியப்பா (1917) அவர்களும் புலவராகக் காணப்பட்டார்.

---

15. எம் பிரதேசத்தின் புகழ்பூத்த புலவர்கள் - கட்டுரை வே.சந்திரசேகரம் ஏர்முனை கலாசார விழா மலர் ஆலையடிவேம்பு பிரதேச செயலகம்

16. 1961, 62 களில் தம்பிலுவில் மகாவித்தியாலயத்தில் பண்டிதர் திரு.கதிர்காமத்தம்பி ஐயா ஆசிரியராக கடமைபுரிந்த காலத்தில் அவரிடம் கல்வி பயின்றுவந்த பசுமையான நினைவுகள் இன்றும் என் நெஞ்சில் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1936ஆம் ஆண்டில் இப்பிரதேசத்தைச் சேர்ந்த வள்ளலான திரு.க.தர்மரெட்னம் (வன்னியனார்) அவர்கள் சட்டசபை உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட காலத்தில் அவருக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு நிகழ்வில் இடம்பெற்ற கும்மி கலையாடல் பாடல்களை (வரவேற்புக் கும்மி) இவர் இயற்றினார்.

இதனைத்தொடர்ந்து இவர் கும்மிப்பாடல்களையும் வசந்தன் பாடல்களையும் இயற்றி வந்துள்ளார். அக்காலத்தில் இவை கலை நிகழ்வுகளில் இடம்பெற்று வந்துள்ளன.[17] அத்துடன் மக்களின் பாராட்டுதல்களையும் பெற்றுக்கொடுத்துள்ளன.

**வைத்தியக்கலை**

இப்பிரதேச மக்களிடையே அக்காலத்தில் சுதேச பாரம்பரிய வைத்தியமுறைகளே நிலவியிருந்தன. நாட்டுவைத்தியம் என்ற இச்சுதேச வைத்தியத்தில் ஆயுள்வேத சித்த வைத்தியம்

முறிவு வைத்தியம்

விஷ வைத்தியம்

மனநோய் வைத்தியம் என நான்கு வைத்திய முறைகள் அடங்கியிருந்தன.

ஆங்கில வைத்தியம் இப்பிரதேச மக்களிடையே பிரபல்யம் பெற்றிருக்காத அக்காலத்தில் பரம்பரை, பரம்பரையாக சித்த ஆயுள்வேத வைத்தியர்கள் சிகிச்சை செய்து வந்தனர். சித்தர்களால் அருளப்பட்ட ஏட்டுச் சுவடிகளிலிருந்து எழுதப்பட்ட வாகடங்களே இவ்வைத்தியத்தின் மூலாதாரமாகும் இவ்வைத்தியர்கள் கைபிடி மூலம் நாடிஓட்டத்தைக் கணிப்பர். இடகலை, பிங்கலை, சுழுத்தி ஆகிய நாடி ஓட்டங்கள் மூலமாக நோயை அறிந்து சிகிச்சை செய்வர்.

---

17. நேர்காணல் : இளையாப்போடி தம்பியப்பா (1917) பனங்காடு 10.09.2000
1936ல் இவர் இயற்றிய வரவேற்பு கும்மிப்பாடல்கள் உள்ளிட்ட கும்மிப்பாடல்கள் வசந்தன் பாடல்கள் அடங்கிய பதிவேட்டை (கொப்பி) என்னிடம் இவர் காண்பித்தவுடன் சில பாடல்களை அவரை சந்தித்து உரையாடும் சமயங்களில் ராகத்துடன் படித்தும் காட்டியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிகிச்சைகள் குளிசை, பஸ்பம், எண்ணெய், குழம்பு (லேகியம்) ஆகிய வடிவங்களில் அளிக்கப்படும் இவ்வைத்தியத்தில் அமரர்களான திரு.சம்புநாதப்போடி அவர் மக்களான தம்பிப்போடி, மாணிக்கப்போடி ஆகியோரும் திரு.வைரமுத்துப் பரிகாரியார், கோளாவில் கந்தன் பரிகாரியார், திரு. ஆறுமுகம் பரிகாரியார் என்போர் புகழ்பெற்ற வைத்தியர்களாக விளங்கியிருந்தனர். இவர்களுடன் கோளாவில் திரு.சரவணமுத்து பரிகாரி என்பவரும் சிறந்த வைத்தியராக விளங்கியிருந்தார்.

இவர்களைப்போன்று அக்காலத்தில் விஷ வைத்தியத்தில் திரு.வேலம் பரிகாரியார், திருமதி.காருண்யம்மா (வே.காரணிப்பிள்ளை) என்போரும் மனநோய் (பைத்தியம்) வைத்தியத்தில் கோளாவில் வெள்ளையன் பரிகாரியின் பரம்பரை கருங்கொடித்தீவு திரு.வேலுப்பிள்ளை வைத்தியர் என்போர் சிறந்து விளங்கியிருந்தனர். முறிவு வைத்தியத்தில் அக்காலத்தில் அமரர் தம்பியப்பா ஊர்ப்போடியார் அவரது மருமகன் தம்பிப்போடி மயில்வாகனம் அவரது மனைவி மனோன்மணி ஆகியோர் பரம்பரை முறிவு வைத்தியர்களாக விளங்கியிருந்தனர்.

## மாந்திரீகம்

அக்கரைப்பற்று கோளாவில் வடக்கு பகுதியானது அக்காலத்தில் மருந்துக்கும், மாந்திரீகத்துக்கும் பெயர் பெற்றதாக விளங்கியிருந்தது. இம்மக்களின் வாழ்வில் இவை முக்கியத்துவம் பெற்றிருந்தன. இம்மந்திரங்கள் சித்தர்களாலும், முனிவர்களாலும் அருளப்பட்டவை. லத்தீன், சமஸ்கிருதம், எபிரேயம் ஆகிய மொழிகளின் மந்திரங்கள் இக்காலத்திலும் ஆற்றல் வாய்ந்தவைகளாகவுள்ளன.

1.மடைபலி, பேய் ஓட்டுதல்

2.சேர்த்தி, மாத்தி

3.சூனியம் செய்தலும், விலக்குதலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4.மந்திரமும், இயந்திரமும், மருந்தும்

ஆகிய நான்கு பிரிவுகளைக் கொண்டது. தண்ணீர் ஓதுதல், திருநீறு ஓதுதல், நூல் கட்டுதல் சாதாரண மந்திரப்பிரயோகங்களாகும்.[18] அக்காலத்தில் நல்லவற்றிற்கும், தீயவற்றிற்கும் மாந்திரீகம் பயன்பட்டு வந்தது. தீயவற்றிற்கு பயன்படுத்தி வந்த மாந்திரீகர்கள் சமூகத்தினரால் புறக்கணிக்கப்பட்டு வந்தனர். அங்கம் விடுதல் சூனியம் செய்தல், தண்ணீர் ஓதுதல் எனப் பல வழிகளிலும் மாந்திரீகம் செய்யப்பட்டது.

## மங்கல அமங்கல சடங்குகள்

இப்பிரதேசத்தில் வாழ்ந்து வந்த தமிழ் மக்களின் மங்கல, அமங்கல சடங்குகள் தனித்துவமானவை. திருமணம் கேட்டுப்போதல் தாலிக்குப் பொன் உருக்குதல், கூறை வாங்குதல், சீதனம் கால்மாறிப்போதல் ஆகிய நிகழ்ச்சிக் கோப்புக்களைக் கொண்டது திருமணச்சடங்குகளாகும். இவை ஒவ்வொன்றும் விரிவஞ்சிக் குறிப்பிட முடியவில்லை.

பூப்பு நீராட்டுதல், குழந்தை பிறந்த முப்பத்தோராம் நாள் காதுகுத்துதல், குழந்தைக்கு தொட்டில் கட்டல், பல் கொழுக்கட்டை சொரிதல் என்பன அக்காலத்தில் இருந்து வந்த மங்கலச் சடங்குகளாகும். மரணக் கிரியைகள், எட்டுக்கொடுத்தல் ஆகியன அமங்கலக் கிரியைகளாகவிருந்து வந்தன. இவைகள் தண்டல்காரர் குருமார், முல்லைக்காரர், குடி வண்ணக்கர் முன்னீடுகளில் நடைபெற்று வந்தன (மு.சிவஞானமூர்த்தி -1997)

---

18) அக்கரைப்பற்று ஆலையடிவேம்பு பிரதேச பண்பாட்டு வரலாறு - கட்டுரை சி.சிவஞானமூர்த்தி ஏர்முனை கலாசாரவிழா மலர் ஆலையடிவேம்பு பிரதேசசெயலகம் - 1997



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுதேச விளையாட்டுக்கள்

சினிமா, வானொலி ஆகியன பிரபல்யம் பெற்றிராத அக்காலத்தில் மக்களின் பொழுது போக்கு அம்சங்களாக பாரம்பரியக் கலைகளுடன் சுதேச விளையாட்டுக்களும் முக்கியத்துவம் பெற்றிருந்தன. இளைஞர்கள் மட்டுமன்றி முதியோர்களும் விளையாட்டுக்களில் ஆர்வம் கொண்டிருந்தனர்.

அக்காலத்தில் வார்தொடுத்தல், கிட்டிப்பொல் மட்டைப்பந்து, பிள்ளையார்கட்டை, நொண்டியடித்தல் தலையணைச் சண்டை ஆகிய விளையாட்டுக்களில் இளைஞர்கள் ஈடுபட்டு வந்தனர். பொழுது போக்காக இப்பாரம்பரிய விளையாட்டுக்களை கண்டு களிக்கப் பெரியவர்களும் ஆர்வம் கொண்டிருந்தனர்.

இவ்விளையாட்டுக்களைச் சிறப்பிக்கும் வகையில் வாய்மொழிப் பாடல்களும் அக்காலத்தில் நிலவியிருந்தன. பண்டிகைக் காலங்களில் இவ்விளையாட்டுக்கள் களை கட்டும். மேலும் அக்காலத்தில் குறிப்பாக கொம்பு விளையாடலும் கருங்கொடித்தீவு சித்திவிநாயகர் ஆலய முன்றலில் இடம்பெற்று வந்தது. கண்ணகி வழிபாட்டு அம்சங்களிலொன்றான இக்கொம்பு விளையாட்டு தொடர்பான வசைப்பாடல்களும் வாய்மொழியாக நிலவி வந்தன.

## சோதிடக்கலை

அக்கரைப்பற்று பகுதி மக்களது வாழ்வியலில் சோதிடம் இரண்டறக் கலந்திருந்தது. அக்காலத்தில் இக்கலையில் சிறந்த விற்பன்னர்கள் இங்கு வாழ்ந்துள்ளனர். குறிப்பாகக் குருவம்சத்தைச் சேர்ந்தவர்களே சோதிடத்தில் ஈடுபட்டு வந்தனர். இவர்களுடன் தெய்வ அனுக்கிரகம் பெற்றவர்களும் சோதிடம் கூறி வந்தனர்.

ஜாதகக் கணிப்பு, பூப்படைந்த கணிப்பு, நினைத்த காரியம் சொல்லுதல், களவு, கைமாறிய பொருட்கள் குறிபார்த்தல் அஞ்சனம், வீட்டுக்கு நிலம் எடுத்தல் ஆகிய சோதிட ஆருடக் கலைகளில் குருமாரை மிஞ்ச அக்காலத்தில் எவரும் இருக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமயம், ஆலயங்கள்

கருங்கொடித்தீவு, கோளாவில், ஆலையடிவேம்பு, பனங்காடு பட்டிநகர் ஆகிய இடங்களை உள்ளடக்கியதாய் எழுதா வழக்காக நிலவி வந்த அக்கரைப்பற்று பகுதி மக்களிடையே சைவம் கிறிஸ்தவம், கத்தோலிக்க சமயங்களுடன் பௌத்தமும் செழித்திருந்தது. இப்பிரதேசத்தில் சைவாலயங்களுடன் கிறிஸ்தவ கத்தோலிக்க ஆலயங்களும் பௌத்த விகாரையும் நிலவியிருந்தது. இப்பிரதேசத்தைச்சேர்ந்த தமிழர்களைப் பொறுத்தவரை கி.பி.இருபதாம் நூற்றாண்டின் தொடக்க காலம் வரை தமிழரிடையே சைவமே நிலைத்திருந்தது.

1940,46 களில் இப்பிரதேசத்தில் கருங்கொடித்தீவு சித்திவிநாயகர் ஆலயம், பட்டிநகர் கண்ணகையம்மன் ஆலயம் கோளாவில் ஸ்ரீ விக்கினேஸ்வரர் ஆலயம் ஆகிய பூர்வீக தலங்களுடன் கருங்கொடித்தீவு ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயம் கோளாவில் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம் என்பனவும் நிலவியிருந்தன.

பனங்காடு கிராமத்தில் திறந்த வெளிக்கோயிலாக நடுகற்களாலான மேடையில் ஐயனார் வழிபாடு பூஜை, வழிபாடு சடங்குகளுடன் நிலவி வந்தது. இதனை அண்மித்ததாக பிள்ளையார் வணக்கமும் இடம்பெற்று வந்தது. அக்காலத்தில் மட்டக்களப்பு தேசமெங்கும் பிரபல்யம் பெற்றிருந்த பனங்காடு ஐயனார் வழிபாட்டை மையமாகக் கொண்டு இதற்கு முந்திய காலத்தில் உருவான இலக்கியங்களும் நிலவியிருந்தன. ஆதலால் பாடல் பெற்ற ஐயனார் ஆலயமாக பனங்காடு ஐயனார் ஆலயம் விளங்கியிருந்தது எனலாம்.[19]

---

19. இலங்கை வரலாற்றில் பனங்காடும் பழைய ஐயனார் வழிபாடும் - கட்டுரை ஆய்வார்வலர் நா.நவநாயகமூர்த்தி - 'ஏர்முனை' கலாசாரவிழா மலர் - 1999/2000



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதேபோன்று கருங்கொடித்தீவு நகரில் வாழ்ந்திருந்த தமிழ்ச் சைவரின் ஒரு பிரிவினரிடையே பெரியதம்பிரான் வழிபாடு சிறப்புடன் நிலவியிருந்தது. பீடமொன்றில் சூலம் நடப்பட்டுத் திறந்த வெளிக்கோயிலாக நிலவி வந்த பெரிய தம்பிரான் வழிபாடானது சிவவழிபாட்டு அம்சங்களிலொன்றாகும். இவ்வேளை நாவற்காடு வம்மியடிச்சந்தியில் பிள்ளையார் வணக்கம் இடம்பெற்று வந்தது. 1946ல் வம்மி மரத்தின் அருகாய் ஒரு பிள்ளையார் வைத்து ஓலைப்பந்தலின் கீழ் பிள்ளையார் வணக்கம் இடம்பெற்று வந்தது. இன்று நாம் காணும் ஸ்ரீ வம்மியடிப் பிள்ளையார் ஆலயம் இதன் தொடர்ச்சியாகும்.

மேலும் இக்காலத்தில் ஆலையடிவேம்பு கிராமத்தில் பீடமொன்றில் பளிங்குக்கல் பிள்ளையாரை வைத்து பிள்ளையார் வழிபாடு இடம்பெற்று வந்ததையும் அறியமுடிகின்றது. திறந்தவெளிக்கோயிலாக நிலவி வந்த பிள்ளையார் ஆலயம் 1934 35 களில் சிவஸ்ரீ.கு.கணபதீஸ்வர குருக்கள் என்பவரால் அவரது காணியில் தோற்றுவிக்கப்பட்டது. 1945,46களில் திறந்த வெளிக்கோயிலாக இவ்வாலயம் பிரபல்யம் பெற்று விளங்கியிருந்தது. இதன் தொடர்ச்சியே இன்று காணும் ஸ்ரீ சிந்தாமணிப்பிள்ளையார் ஆலயமாகும்.[20]

அக்காலத்தில் இப்பிரதேச மக்களிடையே சிறு தெய்வ வழிபாடும் சிறப்புடன் நிலவி வந்தது. குறிப்பாகத் தாய்த் தெய்வ வழிபாட்டு அம்சங்களான மாரியம்மன் வழிபாடு, கடலாட்சி அம்மன் வழிபாடு என்பன செழிப்புடன் விளங்கியிருந்தன. வருடா வருடம் தமிழ்ச்சைவர்கள் தங்கள் இல்லங்களில் 'சர்க்கரை அமுது' (பொங்கல், மடை, வழிபாடு) சடங்கு செய்து வந்தனர்.

---

20. ஆலையடிவேம்பு வணக்கத்தலங்களின் வரலாறு - கட்டுரை க.செல்வரெத்தினம் ஏர்முனை கலாசாரவிழா மலர் - 1999, 2000



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருங்கொடித்தீவு, கோளாவில் கிராமங்களில் கடல் நாச்சியம்மன் வழிபாடு சிறப்புடன் நிலவியிருந்தது. மேலும் அக்கரைப்பற்று பகுதி மக்கள் ஆதிவயிரவர், பேச்சியம்மன், வதனமார், குமாரசுவாமி ஆகிய தெய்வமூர்த்தங்களை நம்பிக்கையுடனும் பக்தியுடனும் வழிபட்டு வந்துள்ளனர். இத்தெய்வங்களை அடிப்படையாகக் கொண்ட இலக்கியங்களும் நிலவி வந்தன.

கருங்கொடித்தீவு நகரில் ஸ்ரீதம்மரத்தின பௌத்ததலம் நிலவியிருந்ததுடன், பௌத்த சிங்களமக்களுடன் தமிழ்ச்சைவர்களும் இணைந்து வழிபட்டு வரும் பௌத்த ஆலயமாகவும் இது விளங்கிவந்தது. 1923ம் ஆண்டு தொடக்கம் கிறிஸ்துவ வணக்கம் இடம்பெற்று வந்த இப்பிரதேசத்தில் கருங்கொடித்தீவு நகரில் இக்காலத்தில் கிறிஸ்தவ தேவாலயமொன்று நிலவியிருந்தது. இதே போன்று 1942ல் அடிக்கல் நடப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட கத்தோலிக்க தேவலாயம் ஒன்றும் நிலவி வந்தது. இதற்கு முந்திய காலத்தில் கத்தோலிக்க பாடசாலையில் திருப்பலிப்பூசைகள் இடம்பெற்று வந்துள்ளன என்பதை அறியமுடிகின்றது.

அக்காலத்தில் இலங்கை முழுவதிலும் சமயம் கல்வி, கலைகள், ஆன்மீகம் எனப் பல்துறைகளில் அரும் தொண்டுகள் புரிந்து வந்த பெரியார்கள் பலர் இப்பிரதேசத்துடனும் நெருக்கமான உறவுகள் கொண்டிருந்தனர். இந்த வகையில் சுவாமி விபுலானந்த அடிகள், சித்தானைக்குட்டி சுவாமி மற்றும் சாண்டோ சங்கரதாஸ் என்போர் குறிப்பிடத்தக்கவர்களாவர். இப்பிரதேச மக்களிடையே இவர்கள் பிரபல்யம் பெற்றிருந்தனர்.

இவர்களில் சுவாமி விபுலானந்த அடிகள் அக்காலத்தில் இப்பிரதேசத்தின் சமூக, சமய, கல்வி, கலாசார பண்பாட்டு வளர்ச்சிக்கு ஆற்றி வந்த பணிகள் காத்திரமானவை. காலத்தால் அழியாதவை என்றால் மிகையாகது. 1940களில் சுவாமி விபுலானந்த அடிகளாரை அக்கரைப்பற்று சந்தைச் சதுக்கத்திலிருந்து யானை மீதேற்றி ஊர்வலமாக அழைத்து வந்து கோளாவில் ஸ்ரீ விக்கினேஸ்வரர் ஆலய புதிய கட்டிடத்திற்கான அடிக்கல் நடப்பட்டது. இது வரலாற்றுப் பதிவாகியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் வாயிலாக அக்கரைப்பற்று பகுதி மக்கள் விபுலானந்த அடிகள் மீது கொண்டிருந்த பக்தி, மதிப்பு, நம்பிக்கை என்பன புலப்படும். 1945, 46 களில் கோளாவில் ஸ்ரீ விக்கினேஸ்வரர் ஆலயம் கற்கோயிலாகச் சிறப்புடன் விளங்கியிருந்தது.[21] சுவாமி விபுலானந்த அடிகளாரின் தீர்க்க தரிசனமான சிந்தனையின் வெளிப்பாடுகளிலொன்றே கருங்கொடித்தீவு நகரில் 1944ம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டு நிலவி வந்த ஸ்ரீராம கிருஷ்ணமிஷன் பாடசாலையாகும்.

அக்கரைப்பற்றுப் பகுதியில் சைவத்தையும் சைவப்பண்பாட்டையும் கலாசாரத்தையும், தமிழ் மொழியையும் நிலைபெறச் செய்யும் நோக்கிலேயே இப்பாடசாலை அக்காலத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இப்பாடசாலை உருவாக்கத்தில் இப்பகுதியில் வாழ்ந்து வந்த தமிழ்ச் சைவச் சான்றோர்களின் பங்களிப்பும் விலைமதிப்பற்றது எனலாம். இதேவேளை அக்கரைப்பற்றுப் பகுதியில் இராமக்கிருஷ்ணமிஷன் கலாசாலையில் விபுலானந்த மணிமண்டபம் என்று தொடங்கிய அடிகளாரின் நாமம் 'விபுலானந்த மன்றம்' 'விபுலானந்த இல்லம்' என விளங்கி வந்தது.

அக்காலத்தில் அக்கரைப்பற்று பகுதிக் கிராமங்களுக்கு கால்நடையாக அடிக்கடிவந்து தனது சித்துக்களால் அற்புதங்கள் பல புரிந்து ஆன்மீக ஒளிபரப்பி வந்தவர் சிந்தானைக்குட்டி என்ற மகான் ஆவார். முப்பெரும் சித்தர்களில் ஒருத்தரான இவர் 1925, 26 களில் கதிர்காமத்திலிருந்து மட்டக்களப்புக்கு வந்திருந்தார்.[22] இதனைத் தொடர்ந்து மட்டக்களப்பு தமிழகத்தின் எல்லா இடங்களுக்கும் கால் நடையாகச் சென்று தனது சித்து விளையாட்டுக்களால் மக்களுக்கு இறை நம்பிக்கையை ஊட்டியதுடன் இந்த இடங்களையும் புனிதப்படுத்தினார்.

---

21. 1940ம் ஆண்டுக்கு முற்பட்ட காலத்தில் இவ்வாலயம் கம்பு, மரம், மண் ஆகியன கொண்டு அமைக்கப்பட்ட ஆலயமாக நிலவி வந்தது.
22. கதிர்காமத்தில் தீர்த்தம் முடிந்ததும் அம்பாந்தோட்டை சென்று கப்பல் ஏறி மட்டக்களப்பை அடைந்தார். மட்டக்களப்பில் திரு.கார்த்திகேசு சுப்பிறீந்தர் வீடு சென்று அமைதியாக சில மாதங்கள் அங்கிருந்தார். (முப்பெரும் சித்தர்கள் - ஆத்மஜோதி நா.முத்தையா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1930ம் ஆண்டு தொடக்கம் 1948ம் ஆண்டுவரை காரைதீவு கிராமத்தை தனது வதிவிடமாகக் கொண்டிருந்த இவரது இறுதிக்காலத்தில் பண்டைய சைவத் தலங்கள் புத்துயிர் பெற்றிருந்தன. தாந்தாமலை, அம்பாரை மாணிக்கப் பிள்ளையார் ஆலயம், நிந்தவூர் மீனாட்சியம்மன், சங்குமன் கண்டி ஆகிய தலங்களுக்கெல்லாம் சென்று அருள் ஒளி ஊட்டினார்.

அக்காலத்தில் (1930 -48) அக்கரைப்பற்றுப் பகுதியில் கருங்கொடித்தீவு நகரிலும், கோளாவில், பனங்காடு கிராமங்களிலும் கால்நடையாக நடமாடி வந்த சித்தானைக்குட்டி சுவாமிகள் தனது சித்துக்களால் அற்புதங்கள் பல புரிந்து வந்தார். இவை இன்றும் கதைகளாக இப்பிரதேசத்தில் நிலவி வருகின்றன. குறிப்பாக சாதி, குலபேதங்கள் மலிந்திருந்த அக்காலத்தில் இப்பிரதேசத்தில் வாழ்ந்திருந்த தமிழ்ச்சைவரிடையே சமத்துவம், சகோதரத்துவம் கருணை, அன்பு ஆகிய நற்பண்புகளைத் தனது செயல்கள் மூலம் நிலைபெறச் செய்தார்.

அக்கரைப்பற்றுப் பகுதியில் சுவாமிகளோடு கோளாவில் கந்தன் பரிகாரி, வெள்ளையன் பரிகாரி, வெள்ளயப் போடியார், திரு.பூபாலப்பிள்ளை, ஆறுவிரல் கந்தையா, மேசன் வேலுப்பிள்ளை, திரு.குழந்தைவேல் வண்ணக்கர் திரு.வெள்ளைமுருகன், திரு.இளையதம்பி சவரத்தொழிலாளி குஞ்சன், பனங்காடு திரு.பெரியதம்பி என்போர் மிகநெருக்கமாகப் பழகி வந்தவர்களாவர்.[23] இவர்களது இல்லங்களுக்கெல்லாம் சுவாமிகள் சென்று தங்கியிருந்து அருள்ஒளி பரப்பி வந்துள்ளார் என்பதையும் அறியமுடிகின்றது.

கோளாவில் வெள்ளையன் பரிகாரியார் இல்லத்தில் சித்தானைக்குட்டி சுவாமி ஏழு நாட்கள் சமாதி நிலையில் (சவம்போல்) கிடந்துள்ளார். ஏழாம்நாள் சுவாமியைக் காண சாண்டோ சங்கரதாஸ் வெள்ளையன் பரிகாரியார் இல்லம் வந்து உரையாடிச் சென்றுள்ளார் (1948ல்) என்பதை அறியமுடிகின்றது.

---

23. தகவல்.திரு.கந்தன் காளிக்குட்டி (வயது 73) கோளாவில் -3, நேர்காணல் 2020, பெப்ரவரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சமயம் சுவாமிகள் பனங்காடு கிராமத்துக்கு வருகை தருவதாக செய்தி அனுப்பியிருந்தார். பனங்காடு திரு.பெரியதம்பி அவர்களது இல்லத்தில் அறுசுவைகளுடன் உணவு சமைக்கப்பட்டது. சுவாமிகள் வருகை தரவில்லை சாப்பாட்டை எவரும் தொடவில்லை. மூன்றாம் நாள் சுவாமிகள் திரு.பெரியதம்பி இல்லத்துக்கு வந்து சாப்பாட்டை எடுத்துப் பரிமாறுங்கள் என்று கூறினார். என்ன ஆச்சரியம் சோறு, கறிகள் உள்ளிட்ட உணவுப் பண்டங்கள் சில நிமிடங்களுக்கு முன்னர் சமைத்தவை போன்று ஆவி பறந்ததாம்.

பனங்காடு பெரியதம்பி தம்பதியினருக்கு குழந்தைகள் கிடையாது. அவர்களுக்கு பெருங்குறையாக இது இருந்தது. இவர்களது மனக்கவலையைத் தனது சித்து மூலமாகப் போக்கி குழந்தைப் பாக்கியம் கிடைக்கச் செய்தார். சிந்தானைக்குட்டி சுவாமியின் அருளினால் இத்தம்பதியினருக்கு அழகானதொரு ஆண்குழந்தை பிறந்தது. இன்று பனங்காடு கிராமத்தில் சிறப்புடன் விளங்கி வரும் பாசுபதேஸ்வரர் ஆலயத் தோற்றத்திற்கு சித்தானைக்குட்டி சுவாமிகளே காரணகர்த்தா ஆவார்.

1942ல் செழிப்பிழந்த நிலையில் மக்கள் நடமாட்டமின்றித் தனித்திருந்த பனங்காடு ஐயனார் தலத்தைப் பார்வையிட்ட சித்தானைக்குட்டி சுவாமிகள் ஊர்ப்பிரமுகர்களிடம் இந்த இடத்தில் சிவாலயமொன்றை நிர்மாணிக்கும்படி கூறினார். அத்துடன் ஆலயம் அமைய வேண்டிய இடத்தையும் அடையாளம் வைத்துக்கொடுத்தார். (நா.நவநாயகமூர்த்தி -1999/2000 கட்டுரை) அக்காலத்தில் பனங்காடு கிராமத்தில் நிலவியிருந்த ஐயனார் வழிபாட்டின் (ஐயனார் ஆலயம்) தோற்றம் பற்றிய வரலாற்றுப் பின்னணி பற்றி பழந்தமிழர் நடுகற்பண்பாடு என்ற நூல் விபரமாகக் குறிப்பிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்காலத்தில் அக்கரைப்பற்று பகுதியில் பிரபல்யம் பெற்றிருந்த வெளியூர்க்காரர்களில் சாகசக்கலையில் வல்லவரான சாண்டோ சங்கரதாஸ் அவர்களும் ஒருவர். இவரது சாதனைகள் ஆன்மீகம் சார்ந்த அறிவுத்தேடல்கள் எனலாம். சிறந்த சிவபக்தரான இவர் சித்தானைக்குட்டி சுவாமிகள் மீது ஆழ்ந்த பக்தியும் நம்பிக்கையும் கொண்டவர். சுவாமிகள் கோளாவில் கிராமத்துக்கு வந்து தங்கியிருந்த வேளைகளில் வெளியூர்ப் பிரமுகர்களான தனது நண்பர்களையும் தன்னுடன் அழைத்து வந்து சுவாமிகளை தரிசித்துச் செல்வதும் உண்டு.

வர்மக்கலையில் தேர்ச்சி பெற்றிருந்த சாண்டோ சங்கரதாஸ் அவர்கள் பாரததேசம் முழுவதும் யாத்திரை செய்து தனது சாகசக்கலை மூலமாக மகாராஜாக்கள், சிற்றரசர், ஜமீன்தார் என்போரின் பாராட்டுதல்கள், பரிசுகள், விருதுகள் ஆகியனவற்றையும் பெற்றிருந்தார். அத்துடன் முனிவர்கள், சித்தர்கள், மகான்கள் என்போரின் ஆசிகளையும் அன்பையும் பெற்றிருந்தார். மேலும் இவர்கள் மூலமாக பல்கலைகளையும் கற்றிருந்தார். தனது சாதனைகள் மூலமாக இப்பிரதேசத்தில் பிரபல்யம் பெற்றிருந்த ஞானியான இவரை பல்துறையினரும் நன்கு பயன்படுத்தி வந்தனர்.[25]

அக்காலத்தில் அக்கரைப்பற்று பகுதியில் பொதுப்பணிகளில் மிக்க ஆர்வத்துடன் ஈடுபட்டுவந்த சமூக ஆர்வலர்கள் பற்றிக்குறிப்பிடுமிடத்து அமரர்.சி.மானாகப்போடி, திரு.க.குருநாத பிள்ளை தோம்புதர் (பனங்காடு) திரு.குழந்தைவேல் வண்ணக்கர் (கோளாவில்) திரு.ஹினிஅப்புகாமி, திரு.சாறா முதலாளி, திரு. உபாசகப்பு போன்றோர் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

---

25. 1967ம் ஆண்டில் எனது உறவினரான திரு.க.சுந்தரமூர்த்தி (கூ.பரிசோதகர்) அவர்களது இல்லத்தில் திரு.சாண்டோ சங்கரதாஸ் அவர்களை முதன்முறையாக சந்தித்து உரையாடும் சந்தர்ப்பம் கிடைத்தது. அவரது இரு காந்தக் கண்களால் என்னை ஈர்த்துக்கொண்டார். மூன்று தினங்கள் மாலை வேளைகளில் அவரை சந்தித்து உரையாடினேன். தனது கடந்த கால அனுபவங்கள் பற்றிய ஏராளமான தகவல்களை அவர் வாயால் கூறக்கேட்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. தனது பட அல்பங்களையும் எனக்குக் காண்பித்து விளக்கினார்.
இறுதி நாள் அவரைச் சந்தித்த வேளை அவரிடம் ஆட்டோகிராபில் (நினைவேடு) அவர் கையால் எழுதி வாங்கிக் கொண்டேன். அதில் நித்தியம் ஓம் நமசிவாய என்று செபித்து வரவும் என்று எழுதித் தனது கையொப்பத்தையும் இட்டுத் தந்தார். இந்நினைவு ஏடு இன்றும் என் வசம் பத்திரமாகவுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களுடன் ஸ்ரீராமகிருஷ்ணமிஷன் வித்தியாலயம் உருவாவதற்கு அத்திவாரமிட்ட கருங்கொடித்தீவு கணேசானந்தா சபையின் ஆயுட்காலத் தந்தையாகவும் இருந்து நற்பணிகள் புரிந்து வந்த சைவப் பெரியார் சிவஸ்ரீ கு. ஆறுமுகதேசிகக்குருக்கள் அவர்கள் இப்பிரதேச கல்வி, சமயப் பணிகளில் காத்திரமான பங்கினை ஆற்றி வந்துள்ளார். இப்பெரியாரை இவ்வேளை நினைவு கூருவதும் பொருத்தமானதாகும்.

"சைவக் கடலமுதே சான்றோர்க் கதிபதியே

தெய்வப் பணிபூண்ட தேசிகனே- மெய்யறிவு

கூறும் குருக்கள் குலக்கொழுந்தே குக்குசேர்

ஆறுமுக! ஆண்டு பல வாழ்"

என்று இவரை உதயகவி பூபாலபிள்ளையவர்கள் புகழ்ந்துரைப்பதையும் நோக்கலாம். (வே.சந்திரசேகரம் -2000) தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்ந்து வந்தவர்களையே சான்றோர் என்று குறிப்பர். இது தமிழ் மரபாகும்.

மேலும் அக்காலத்தில் செழிப்பான சமூகச்சூழலில் இப்பிரதேசத்தில் வாழ்ந்திருந்த புலவர்கள், கவிஞர்கள் அண்ணாவிமார், ஆலயக்குருமார், வைத்தியர்கள் என்போரும் சமூக ஆர்வலராக விளங்கி வந்துள்ளதையும் அறியமுடிகின்றது. இதே வேளை எல்லாவற்றிற்கும் மேலாக இப்பிரதேசத்தில் அக்காலத்தில் ஏராளமான நிலபுலன்களுக்கு சொந்தக்காரராகவும் கொடை வள்ளலாகவும் மட்டக்களப்பு தென் தொகுதி சட்டசபை உறுப்பினராகவும் வாழ்ந்திருந்த திரு.ச.தர்மரெட்ண வன்னியனார் அவர்கள் அக்கரைப்பற்று பகுதியை விவசாயம், காணி, நீர்ப்பாசனம், போக்குவரத்து, கல்வி எனப் பல்துறைகளிலும் அபிவிருத்தி செய்து வந்துள்ளார். இதுபற்றி ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ளது.[26]

---

26. திரு.ச.தர்மரெட்ணம் வன்னியனார் ஆலயங்களுக்கு உதவிகள் புரிந்து வந்ததுடன் பண்டிகை விஷேட நாட்களில் புலவர்கள், கலைஞர் என்போரை தனது பங்களாவுக்கு அழைத்து அவர்கள் வாயால் பாடக்கேட்டும் வந்துள்ளார். இதனை அண்ணாவியார் அமரர் திரு.தம்பியப்பா (பனங்காடு) அவர்கள் என்னிடம் குறிப்பிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊர்ப்போடியார்

ஊர்ப்போடியார் என்பது ஊர்த்தலைவர் என்பதைக்குறிக்கும் மரபுவழிப்பெயராகும். குறிப்பாக ஒல்லாந்தர் காலத்தின் பிற்பகுதியில் மட்டக்களப்பில் அதிகமான ஊர்களில் தலைவராக ஊர்ப்போடிமார் செயற்பட்டு வந்தனர். சில ஊர்களில் ஊர்ப்போடிகள் மிக நீண்ட காலத்திற்கு முன்பிருந்தே செயற்பட்டு வந்ததாக அறியமுடிகின்றது.[1] 1766ம் ஆண்டில் மட்டக்களப்பில் ஒல்லாந்த அரசினால் ஆளுநர்களாக நியமிக்கப்பட்டிருந்த திரு.அறுமக்குட்டிப்போடி திரு.கந்தப்போடி ஆகிய தலைமைப்போடிகள் தங்கள் வசதிக்காக ஊர்ப்போடிகளை நியமித்து நிர்வாகப் பணிகளை (நிதி, நிர்வாகம்) மேற்கொண்டனர்.

அக்காலம் தொடக்கம் கடந்த நூற்றாண்டின் நடுப்பகுதிவரை ஊர்ப்போடிகளின் செயற்பாடுகள் செழிப்புடன் நிலவி வந்துள்ளன. மேலும் அக்காலத்தில் பிரதேச ஊர்ப்போடிகள் தங்களது கடமைகளை இலகுவாக நிறைவேற்றும் பொருட்டு கிராமங்கள் தோறும் போடிகளை நியமித்து செயற்பட்டு வந்துள்ளதையும் அறியமுடிகின்றது. இவர்களும் அவ்வூர்களின் பெயரால் ஊர்ப்போடி என அழைக்கப்பட்டனர்.[2] இவ்வாறு கோயில் போரதீவு, கரவாகுப்பற்று (கல்முனை) மண்முனைப்பற்று, ஏறாவூர்ப் பற்று (கோறளை) அக்கரைப்பற்று போன்ற பிரதேசங்களில் ஊர்ப்போடியார்கள் செயற்பட்டு வந்துள்ளனர்.

ஊர்ப்போடியார் என்போர் ஒழுக்கமும் நற்பண்புகளும், இறைபக்தியும் நிரம்பப்பெற்றவர்களாகவிருந்து வந்தனர். நற்காரியங்களில் பங்கு கொண்டு அதாவது ஆலய விழாக்கள், வழிபாடுகள், திருமணங்கள் ஆகியனவற்றில் தவறாது பங்குகொண்டு செல்வாக்குடன் வாழ்ந்து வந்தனர். ஊர்களில் தர்மகாரியங்களிலும் ஈடுபட்டு வந்தனர்.

---

1. மட்டக்களப்பு குகன்குல முற்குகர் வரலாறும் மரபுகளும் - பக்.49 ஞா.சிவசண்முகம் - 2000
2. மட்டக்களப்பு வரலாறு - பக்.92 வெல்லவூர் கோபால் - 2005



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன் ஒவ்வொரு ஊரிலும் நிலவியிருந்த ஆலயங்களின் பராமரிப்பாளர்களாக அவ்வூரிலிருந்த போடிகளே செயற்பட்டு வந்தனர். வீதியோரங்களில் சுமை தாங்கிகளை அமைத்தல், பொது மக்கள் தங்கியிருந்து களைப்பாறிப்போவதற்கு தங்கு மடங்கள் அமைத்தல் ஆகியவற்றிலும் அவர்கள் ஈடுபட்டனர்.(ஞா.சிவசண்முகம் - 2000) மட்டக்களப்பின் தென்பகுதியில் கரவாகுப்பற்று பிரதேசத்தில் அக்காலத்தில் ஊர்ப்போடிகளாக பணிக்கனார்குடி திரு.ஐயாத்துரை வரை பணிபுரிந்தவர்களில் எட்டுப்பேரின் விபரங்கள் தெரியவருகின்றன.

அக்காலத்தில் கல்முனை, சாய்ந்தமருது, கரவாகு பாண்டிருப்பு, நற்பிட்டிமுனை ஆகிய இடங்களை உள்ளடக்கியிருந்த 'கரவாகு பற்று' பிரதேசத்தில் ஊர்ப்போடிகளாகப் பணிபுரிந்தவர்களின் பெயர்கள் பின்வருமாறு.

1) திரு.பம்மக்குட்டிப் போடி 2) திரு.பரமக்குட்டிப் போடி

3) திரு.கணபதிப் போடி 4) திரு.சின்னத்தம்பிப் போடி

5) திரு.மயில்வாகனப் போடி 6) திரு.சிந்தாத்துரைப் போடி

7) திரு.கேதாரப் போடி 8) திரு.சீனித்தம்பிப் போடி

கரவாகுப் பிரதேச (பிரிவு) ஊர்ப்போடியாரின் வதிவிடம் சாய்ந்தமருதுவில் இருந்தது. இறுதியாக 1966ம் ஆண்டு வரை திரு.ஐயாத்துரை (சீனித்தம்பிப் போடி) அங்கிருந்து கடமையாற்றினார். சாய்ந்தமருது தமிழ்ப்பிரிவு முஸ்லீம்களின் கைகளுக்குள் முழுதாக வந்தபின் அவ்வூர் தமிழ் மக்களும் திரு.ஐயாத்துரை அவர்களும் பாண்டிருப்புக்கு இடம்பெயர்ந்தனர். 1966ம் ஆண்டுக்குப் பின்னர் கரவாகுப் பிரதேசம் ஊர்ப்போடியாரின் செயற்பாட்டினை படிப்படியாக இழந்து தற்போது முற்றாகவே இழந்துவிட்டது. (வெல்லவூர்க் கோபால் - 2005)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அக்கரைப்பற்று பகுதி ஊர்ப் போடியார்

கருங்கொடித்தீவு, கோளாவில், பனங்காடு, பட்டிநகர் ஆகிய பண்டைய இடங்களை உள்ளடக்கிய அக்கரைப்பற்றுப் பகுதியில் மிக நீண்ட காலத்திற்கு முன்பிருந்தே ஊர்ப்போடியார் மரபு நிலவி வந்துள்ளது. இவ்வாறு ஒல்லாந்தர் ஆட்சியில் 1766ம் ஆண்டுக்கு முன்பிருந்தே பாரம்பரிய சமூகக்கட்டமைப்பு நிலைத்திருந்த அக்கரைப்பற்று பிரதேசத்தில் ஊர்ப்போடிமார் செயற்பட்டு வந்துள்ளதை அறிய முடிகின்றது. இதனை பழைய ஆவணங்களும் உறுதி செய்கின்றன.

கி.பி 1670ல் ஒல்லாந்தருக்கும் வன்னிச் சிற்றரசர்களுக்குமிடையில் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையில் கிழக்கிலங்கை வன்னிச் சிற்றரசர்கள் சார்பில் கலாவ, சம்மாந்துறை, அக்கரைப்பற்று வன்னிச் சிற்றரசர்கள் கைச்சாத்திட்டிருந்தனர். இவ்வுடன்படிக்கை தமிழில், ஏட்டுச் சுவடியில் எழுதப்பட்டுள்ளது.[3] அக்காலத்தில் கிழக்கிலங்கையில் தம்மளவில் பலமிக்க சிற்றரசுகளிலொன்றாக அக்கரைப்பற்று சிற்றரசும் விளங்கியிருந்தது. இதற்குச் சிறிது பிற்பட்ட காலத்திலேயே அக்கரைப்பற்று வன்னிப்பிரதேசத்தில் 'ஊர்ப்போடி' மரபு தோற்றம் பெற்று நிலவி வந்தது.

அக்கரைப்பற்று பிரதேசத்தில் (வன்னி) தமிழர்களே தனிப்பெரும்பான்மையினராக வாழ்ந்திருந்த அக்காலத்தில் ஊர்ப்போடியார்கள் கோளாவில் கிராமத்தையே தங்கள் வதிவிடமாகக் கொண்டு செயற்பட்டு வந்தனர். திரு.சத்துருக்கப்போடி என்ற ஊர்ப்போடியார் காலம் வரை இது நீடித்திருந்தது.

---

3. இலங்கையில் தமிழர் - பக்.223 கலாநிதி முருகர் குணசிங்கம் - 2008



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதி காலத்தில் முதன் முதல் கோளாவிலில் குடியேறி அங்கிருந்தே சில குடும்பங்கள் கருங்கொடித்தீவில் குடியேறி வாழ்ந்திருந்தனர். இதன் காரணமாக கோளாவில் வகுத்தாருக்கே ஊர்ப்போடியார் உரிமை இருந்து வந்தது.[4] 1766ம் ஆண்டு ஒல்லாந்தர் ஆட்சியின்போது மட்டக்களப்பை வடக்கு, தெற்கு என இரு பிரிவுகளாக பிரித்தனர். வடக்கு பகுதிக்கு திரு.அறுமக்குட்டிப்போடி என்பவரையும் தென் பகுதிக்கு திரு.கந்தப்போடி என்பவரையும் தலைமைப்போடிகளாக (ஆளுநர்) ஒல்லாந்த சக்கரவர்த்தி கொலன்தோர் நியமனம் செய்தார்.[5]

மட்டக்களப்பு தென்பகுதி ஒல்லாந்த ஆளுநரான திரு.கந்தப்போடி நிலமை1795ம் ஆண்டு வரை ஒல்லாந்தர் காலத்திலும் தொடர்ந்து 1803ம் ஆண்டுவரை ஆங்கிலேயர் ஆட்சியிலும் பதவி வகித்து வந்துள்ளார். இவர் கருங்கொடித்தீவு திரு.சி.மானாகப்போடி அவர்களின் முப்பாட்டரான ஊர்ப்போடியார் முண்டாப்போடி மானாகப்போடி அவர்களின் தாய்மாமனாவார். அக்காலத்தில் நற்பிட்டிமுனையிலிருந்து தலைமைப்போடி கடமைகளை திரு.கந்தப்போடி அவர்கள் செய்து வந்துள்ளார். (சி.சிவஞானமூர்த்தி - 1999/2000)

கி.பி பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதி தொடக்கம் கடந்த நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஊர்ப்போடியார் திரு.சம்புநாதப்போடி காலம் வரையுள்ள காலத்தில் கருங்கொடித்தீவு நகரிலிருந்து செயற்பட்டு வந்த திரு.கண்ணப்பணிக்கப்போடி திரு.சின்னத்தம்பிப்போடி, திரு.தம்பியப்பாப்போடி ஆகிய ஊர்ப்போடிகள் செல்வாக்கு மிக்கவர்களாக விளங்கியிருந்தனர்.

அத்துடன் ஊர்ப்போடியார் என்ற பதவி அக்கரைப்பற்று பிரதேசம் முழுவதுக்கும் உரித்தான மரபுவழி சமூக விழுமியமாகவும் மிளிர்ந்து வந்தது. தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் வாழ்ந்திருந்த கருங்கொடித்தீவு நகரிலும், கோளாவில், பனங்காடு கிராமங்களிலும் அக்கரைப்பற்று பகுதி ஊர்ப்போடியாரின் செயற்பாடுகள் நிலவியிருந்தன.

---

4. கருங்கொடித் தீவு மான்மியத் துளிகள்- கட்டுரை சி.சிவஞானமூர்த்தி 'ஏர்முனை' கலாசாரவிழா மலர் - 1999/2000

5. மட்டக்களப்பு மான்மியம் - 'அனுபந்தம்' பதிப்பாசிரியர் எப்.எக்ஸ்.சி.நடராசா - 1962



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதேவேளை பல இனங்கள், சாதிகள், சமயங்கள் உள்ளிட்ட தனித்துவமானதொரு சமூகக் கட்டமைப்பைக் கொண்டிருந்த கருங்கொடித்தீவு நகரின் ஒரு பரிமாணமாக ஊர்ப்போடியார் என்ற பதவி விளங்கியிருந்ததுடன் இப்பதவியானது வழி, வழி மருமக்கள் தாயதியாகவிருந்து வந்துள்ளது. ஸ்ரீசித்தி விநாயகர் ஆலய முன்றலில் ஊர்ப்போடியாரின் தலைமையில் குடிகளின் தலைவர்கள் கூடி கிராம பரிபாலனம் செய்து வந்தனர்.

அக்காலத்தில் பள்ளி வாசல்களில் நடைபெறும் பெரிய கந்தூரிகளுக்கு முரசறைய ஊர்ப்போடியார் அனுமதி வழங்குவதும் ஊர்ப்போடியாரும் பிரதி நிதிகளும் பிரமுகர்களும் கந்தூரி வைபங்களில் கலந்துகொண்டு சிறப்பிப்பதும் மரபாக இருந்து வந்தது.

இதேபோன்று அக்கரைப்பற்று பகுதிக்கோயிலான ஸ்ரீசித்தி விநாயகர் ஆலயப் புனரமைப்புப் பணிகளின் போதும், விழாக்கள் உற்சவங்களின் போதும் பெரிய பள்ளிவாசல் மரைக்காயர் (நம்பிக்கையாளர்) மார்களும் பிரதிநிதிகளும் பிரமுகர்களும் கலந்து மகிழ்வதும் தொன்றுதொட்டு இப்பகுதியில் காணப்படும் விழுமிய வழக்கங்களாகும். தமிழ், முஸ்லீம் மக்கள் பிட்டும் தேங்காயும் போல் சேர்ந்து உரையாடி உறவாடி வரும் தோழமைப் பண்பை வேறெங்கும் காணல் அரிதெனலாம். இதனை அக்கரைப்பற்று சி.மானாகப்போடி அவர்கள் தனது பதிவேட்டில் குறிப்பட்டுள்ளார்.[6]

ஊர்ப்போடியார் திரு.கண்ணப்பணிக்கப்போடி என்பவருக்கு பின்னர் அக்கரைப்பற்று பகுதி ஊர்ப்போடியாராகப் பதவி வகித்த சின்னத்தம்பி அவர்களது மகனான திரு.சி.மானாகப்போடி அவர்கள் சமூகப் பணிகளில் ஆர்வமுடன் செயற்பட்டு வந்த பெருமகனும் ஆவார். இவர் தனது பதிவேட்டில் குறிப்பிட்டுள்ள தகவல்கள் வாயிலாக பல உண்மைகளைத் தரிசிக்க முடியும்.

---

6. அக்கரைப்பற்று வரலாறு - பக்.29 ஏயாரெம் சலீம் - ஹிரா பப்ளிகேஷன் அக்கரைப்பற்று. 2-31.12.1990



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்காலத்தில், இனங்களுக்கிடையில் ஏற்படும் மன முறிவுகள் கொடுக்கல் வாங்கல், காணிப் பிரச்சினைகள், எல்லைப் பிரச்சினை சண்டைசச்சரவுத் தாக்கங்கள் மற்றும் கடன் கெடுபிடிகள் போன்றவை விசாரிக்கப்பட்டுத் தீர்ப்பளிக்கப்படும்.

சில வேளைகளில் கிராம வழக்கு மன்றுகளிலிருந்து வழக்குகள் இந்த ஆலயத்துக்கு விசாரித்துத் தீர்ப்பளிக்கும்படி அனுப்பப்படலும் உண்டு.

சபையின் நீதிபதியாக ஊர்ப்போடியார் கடமையாற்றுவார். சில சந்தர்ப்பங்களில் உத்தியோகப்பற்றற்ற உறுப்பினரின் ஆலோசனை பெறப்படும். கிராமங்களில் ஏற்படும் திருமணம், மரணம் மற்றும் முக்கிய நிகழ்வுகளில் இம்மன்றத்தினர் பங்கு பற்றிச் சிறப்பிப்பர். தேவையான பணியாளர்களையும் அவற்றிற்குக் கொடுத்துதவுவர்.[7]

அயற்கிராமங்களிலேற்படும் சமய விழாக்கள் மற்றும் இன்ப, துன்ப நிகழ்ச்சிகளுக்குச் சேவை செய்யும் தகைமையாளர்கள் தேவைப்படுமிடத்து உரியவர் வந்து ஊர்ப்போடியாரிடம் விண்ணப்பிப்பார். ஊர்ப்போடியார் உரிய குல முதல்வருக்கு அறிவிப்பார். அத்தலைவர் கொடுக்கும் தகைமையாளர்களை உரியவர் அழைத்துச் செல்வார். அவ்வூழியர் நன்கு மதிக்கப்படல் வேண்டும். அதற்கு மாற்றமாய் செயற்பட்டால் அதைச் சபையின் கவனத்திற்கு ஊர்ப்போடியாரிடம் கொண்டுவரும் உரிமை அவருக்குண்டு (ஏயாரெம்சலீம் -1990)

மிக நீண்ட காலமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த இவ்வழக்கங்கள் ஊர்ப்போடியார் திரு.தம்பியப்பா காலம் வரை அக்கரைப்பற்று பிரதேசம் முழுவதிலும் நிலைத்திருந்தன. இவருக்குப் பின்னர் ஊர்ப்போடியாராக வந்த திரு.சம்புநாதப் போடியார் காலத்தில் ஊர்ப்போடியாரின் அதிகாரங்கள் கருங்கொடித்தீவு எல்லை வரை குறுக்கம் பெற்றது. அதாவது அக்கரைப்பற்று நகரில் தமிழர் பகுதி வரை மட்டுப்படுத்தப்பட்டன.

---

7. அக்கரைப்பற்று வரலாறு - பக்.26 ஏயாரெம் சலீம் - 1990



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊர்ப்போடியார் என்ற வழி,வழி மருமக்கள் தாயதியாக விளங்கி வந்த காத்திரமான பதவியானது அமரர் திரு.தம்பியப்பா ஊர்ப்போடியார் காலம் வரை செழிப்புடன் நிலவி வந்து திரு.சம்புநாதப்போடியார் காலத்தில் வலுவிழந்தது. (திரு.சி.சிவஞானமூர்த்தி - 1999/2000) இதனைத் தொடர்ந்து அக்கரைப்பற்று பிரதேச ஊர்ப்போடியின் கடமையானது இன்று மட்டுப்படுத்தப்பட்டு கோவில் கடமை மற்றும் இங்கு வாழ் தமிழ் மக்களது சமூகக் கடமை என சுருங்கிவிட்டது (வெல்லவூர்க் கோபால் - 2005) என்பதும் குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Copy of Handsard Report Dated 25.09.1952

# VOTE OF CONDOLENCE MR.S.DHARMARETNAM

**The Hon.Sir J.Kotelawala:** May I have your permission, Mr.Deputy Speaker, to refer to the sad death of Mr.S.Dharmaretnam? This information was brought to my notice only yesterday. Mr.Dharmaretnam was a member of our Legislature in the days of the state council and was on the Executive Committee of Agriculture and Lands. He was ailing for some time, I understand, and passed away early this month. while he was with us he made many friends by his unassuming ways. He was one of the most respected members of the Eastern Province and took a very great interest in the question of paddy cultivation in that area.

May I request you, sir, to instruct the clerk of the house to convey our sympathies to the near relatives of the late Mr.Dharmaretnam?

**Mr.S.W.R.D. Bandaranaike** (Attanagalla): I wish to associate my self with the remarks that have been made by the hon.Leader of the House. Mr.Dharmaretnam for some years was a member of this House, and it was always observed that he had a close and intimate knowledge of the problems of the Eastern Province, and his contributions, whenever matters connected with such subjects came up for discussion or Consideration, were always looked upon with respect. As a matter of fact, I believe, Mr.Dharmaretnam was a pioneer in connection with the Gal Oya Scheme. He took a great deal of interest regarding that scheme and was a pioneer in making Suggestions for the launching of that Scheme.

I wish to associate myself with the request that the sympathy of this House be conveyed to his relations on his sad demise.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இவர்களுக்கு இதயம் கனிந்த நன்றி

1. பெருவிருப்புடன் ஆசிச்செய்தி வழங்கி உளம் குளிரச் செய்த வணக்கத்துக்குரிய பேரருட்தந்தை யோசப் பொன்னையா ஆண்டகை அவர்கள்.

2. அன்புடன் வாழ்த்துச் வழங்கிய பல்கலைப்புலவர் வை.இ.எஸ்.காந்தன் குருக்கள் அவர்கள்.

3. சீரிய முறையில் மதிப்புரை வழங்கிய செந்தமிழ்ச் செல்வர் கலாநிதி க.இரகுபரன் (தென்கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை).

4. இந்நூலுக்கு அணிகலனாக அணிந்துரை வழங்கிய அறிஞரும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறைப் பேராசிரியருமான கலாநிதி ப.புஸ்பரெட்ணம் அவர்கள்.

5. இத்தகு நூலொன்றை வெளிக்கொணர வேண்டிய சமகால தேவையை உணர்ந்து நூலாசிரியருக்கு ஊக்கமும் உத்வேகமும் வழங்கிய தமிழார்வலர்கள்.

6. இந்நூல் வெளிவரவேண்டும் என்ற முனைப்புடன் அதிக சிரத்தையுடன் செயற்பட்ட நன்னெஞ்சம் கனடா வாழ் திரு.கோ.செந்தூரன் அவர்கள்.

7. நூல் வடிவமைப்பு, சரவைநோக்கு உள்ளிட்ட பணிகளுடன் பல்வகையிலும் நூல்வெளிவர அர்ப்பணிப்புடன் ஈடுபட்டு உழைத்த இனிய இதயம் திரு.சாமித்தம்பி புண்ணியமூர்த்தி அவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. நூல் வெளியீட்டுப் பணியின் இணைப்பாளராகவும் தொடர்பாளராகவும் காத்திரமான பங்காற்றிய அன்புள்ளம் திரு.சிவலிங்கம் கனகரெத்தினம் (ஆலையடிவேம்பு பிரதேச சபை உறுப்பினர்) அவர்கள்.

9. காலத்தின் கட்டாயம் என்ற தீர்க்க தரிசன சிந்தையுடன் மிகக் காத்திரமான முறையில் எழுத்துப் பணியை மேற்கொண்டு உள விருப்புடன் இந்நூலை வெளியிடும் உரிமையை வழங்கிய ''தமிழார்வலர்'' திரு.நா.நவநாயகமூர்த்தி அவர்கள்.

10. இந்நூலை மிக நேர்த்தியான முறையில் அச்சிட்டுத் தந்த ''துர்க்காஅச்சகம்'' உரிமையாளர்களான திரு.திருமதி.விஜயகுமார் அவர்களும் அச்சகப் பணியாளர்களும்.

11. இந்நூலை விருப்புடன் விலைகொடுத்து வாங்கும் மகத்தான ஆதரவை நல்கும் மதிப்பிற்குரிய அன்பு வாசகர்கள்

இவர்களுடன்

இந்நூலுக்கான நிதிப்பங்களிப்பினை உவந்தளித்த ''ஜீவாதார அறக்கட்டளை'' இயக்குனர் திருமிகு.செல்லத்துரை விக்கினேஸ்வரமூர்த்தி அவர்கள்

வெளியிடுவோர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதுவரை வெளிவந்த ஆசிரியரின் பிறநூல்கள்

- தமிழரும் முருக வழிபாடும் (ஆய்வு)
- தொல்லியல் சிந்தனைகள் (ஆய்வு)
- பண்டைத்தமிழர் பண்பாட்டுக் கோலங்கள் (ஆய்வு)
- பண்டைய ஈழத்தமிழர் (ஆய்வு)
- தம்பிலுவில் கண்ணகி வழிபாடு (ஆய்வு)
- ஈழத்தமிழர் வரலாற்றுச் சுவடுகள் (ஆய்வு)
- பழந்தமிழர் நடுகற்பண்பாடு (ஆய்வு)
- திருக்கோயில் பிரதேச இலக்கிய வரலாறு (ஆய்வு)
- பட்டிநகர் கண்ணகி ஆலய வரலாறு (ஆய்வு)
- பண்டைய மட்டக்களப்பும் சங்குமன்கண்டி இறக்காவில் சிவாலயமும் (ஆய்வு)
- வண்ணச்சாரம் ( வானொலி, ரூபவாகினி மெல்லிசைப் பாடல் தொகுப்பு )
- பனங்காடு பாசுபதேஸ்வரர் அருட்பாமாலை (இசைப்பாடல்)
- கருங்கொடித்தீவு சின்னக்குளம் வீரமாகாளி அம்மன் அருளமுதம் (இசைப்பாடல்)
- தம்பிலுவில் கண்ணகியம்மன் பாமாலை (இசைப்பாடல்)

ISBN: 978-624-6318-00-0

9 786246 318000

தூர்க்கா அச்சகம் - கோக்குவில், மட்டக்களப்பு. 065-2053060

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org